# வெளிப்படுத்துதல் ஆகமம் விளக்கக் குறிப்புகள்

# THE BOOK OF REVELATION EXPLANATORY NOTES

வேத மாணவர், சென்னை

# வெளிப்படுத்துதல் ஆகமம்
# விளக்கக் குறிப்புகள்

# THE BOOK OF REVELATION
# EXPLANATORY NOTES

**வேத மாணவர், சென்னை.**

NOT FOR SALE .
விற்பனைக்கு அல்ல.

பிரதிகள் கிடைக்குமிடம்:

வேத மாணவர்,
92, மூகாம்பிகை நகர்,
2 ம் மெயின் ரோடு,
நூம்பல், திருவேற்காடு போஸ்ட்,
சென்னை - 600 077.

தொடர்பு : 805 6001 888

# வெளிப்படுத்துதல் ஆகமம்
# விளக்கக் குறிப்புகள்

# THE BOOK OF REVELATION
# EXPLANATORY NOTES

**வேத மாணவர், சென்னை.**

NOT FOR SALE .
விற்பனைக்கு அல்ல.

First Printed : JAN 2016
Reprinted : MAR 2016

# வெளிப்படுத்தல் ஆகமம் விளக்கக் குறிப்புகள்

## பொருள் அட்டவணை
TABLE OF CONTENTS


| பொருள் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பொருள் அட்டவணை | |
| 2 | பிரிவு I : விசேஷ யுக முழுமையைப் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை | 1 |
| | பிரிவு II : அறுவடை கால முழுமையைப் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை | 1 |
| | பிரிவு III : ஆயிர வருஷ யுகம் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை | 2 |
| | பிரிவு I & பிரிவு II இடையிலுள்ள இணை அம்சங்கள் | 2 |
| | ஏழு தூதர்கள், ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு உவமைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள் | 3 |
| 3 | வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை (வெளி 1 : 1 - 3) | 5 |
| 4 | ஏழு சபைகள் - முன்னுரை (வெளி 1 : 9 - 20) | 14 |
| 5 | எபேசு சபை (வெளி 2 : 1 - 7) | 21 |
| | எபேசு சபை உவமை விதைப்பவன் (மத் 13 : 3 - 9) | 26 |
| | பவுல் அப்போஸ்தலன் (கி.பி. 64) | 27 |
| | எபேசு சபை : வரலாற்று நிகழ்வுகள் | 28 |
| 6 | சிமிர்னா சபை (வெளி 2 : 8 - 11) | 29 |
| | சிமிர்னா உவமை கோதுமை மணிகளும் களைகளும் (மத் 13 : 30 - 34; 36 - 43) | 33 |
| | யோவான் அப்போஸ்தலன் (இறப்பு : கி.பி. 100) | 34 |
| | சிமிர்னா சபை : வரலாற்று நிகழ்வுகள் | 35 |
| 7 | பெர்கமு சபை காலப் பகுதியைப் பற்றிய முக்கிய முன்னுரை | 36 |
| | பெர்கமு சபை (வெளி 2 : 12 - 17) | 37 |
| | பெர்கமு உவமை 3 ம் உவமை - கடுகு விதை (மத் 13 : 31 - 32) | 42 |
| | ஏரியஸ் (கி.பி. 250 - 336) | 43 |
| | பெர்கமு சபை : வரலாற்று நிகழ்வுகள் | 45 |
| 8 | தியத்தீரா சபை முன்னுரை | 47 |
| | தியத்தீரா சபை (வெளி 2 : 18 - 29) | 48 |
| | தியத்தீரா உவமை நான்காம் உவமை - புளித்த மாவு (மத் 13 : 33) | 57 |
| | பீட்டர் வால்டோ (இறப்பு : கி.பி. 1217) | 58 |
| | தியத்தீரா சபை : வரலாற்று நிகழ்வுகள் | 59 |
| 9 | சர்தை சபை முன்னுரை | 61 |
| | சர்தை சபை (வெளி 3 : 1 - 6) | 62 |
| | சர்தை சபை உவமை ஐந்தாம் உவமை - நிலத்தில் புதைத்திருக்கும் பொக்கிஷம் (மத் 13 : 44) | 68 |
| | ஜான் விக்ளிஃப் (கி.பி. 1320 - 1384) | 69 |
| | சர்தை சபை : வரலாற்று நிகழ்வுகள் | 70 |
| 10 | பிலதெல்பியா சபை : முன்னுரை | 71 |
| | பிலதெல்பியா சபை (வெளி 3 : 7 - 13) | 71 |
| | பிலதெல்பியா உவமை 6 ம் உவமை - விலையுயர்ந்த முத்து (மத் 13 : 45, 46) | 76 |

| | | |
|---|---|---|
| | மார்டின் லூத்தர் (கி.பி. 1483 - 1546) | 77 |
| | பிலதெல்பியா சபை : வரலாற்று நிகழ்வுகள் | 79 |
| 11 | லவோதிக்கேயா சபை : முன்னுரை | 81 |
| | லவோதிக்கேயா சபை | 82 |
| | லவோதிக்கேயா சபை 7ம் உவமை - மீன் வலை (மத் : 13 : 49 - 52) | 89 |
| | சார்லஸ் டி ரசல் (கி.பி. 1852 - 1916) | 90 |
| | லவோதிக்கேயா சபை : வரலாற்று நிகழ்வுகள் | 91 |
| 12 | வெளி 4ம் அதிகாரம் : சிங்காசன காட்சி | 94 |
| 13 | வெளி 5ம் அதிகாரம் : ஏழு முத்திரைகள் பற்றி அறிமுகம் | 103 |
| 14 | வெளி 6ம் அதிகாரம் : 1,2,3,4,5,6ம் முத்திரைகள் உடைப்பு | 112 |
| 15 | வெளி 7ம் அதிகாரம் : திருச்சபையார் மற்றும் திரள் கூட்டத்தார் பற்றி அறிமுகம் | 127 |
| 16 | வெளி 8 : 1 : ஏழாம் முத்திரை உடைப்பு | 136 |
| 17 | வெளி 8 : 2 - 8 : 13 : 7 எக்காளங்கள் அறிமுகம்; 1,2,3,4ம் எக்காளங்கள் ஊதப்படுதல். | 138 |
| 18 | வெளி 9ம் அதிகாரம் : 5,6ம் எக்காளங்கள் ஊதப்படுதல் | 149 |
| 19 | வெளி 10ம் அதிகாரம் : ஏழாம் எக்காளக் காலக் கட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க கட்டளை பிறப்பிக்க ப்படுதல் | 163 |
| 20 | வெளி 11ம் அதிகாரம் : காலக்கணக்கு தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதல் துவக்கம்; ஏழாம் எக்காளம் ஊதப்படுதல். | 168 |
| 21 | வெளி 12ம் அதிகாரம் : ஸ்திரீ, ஆண்பிள்ளை , வலுசர்ப்பம்; சுவிசேஷ யுகத்தில் சிவில் அதிகாரம், மத அதிகாரம் பற்றிய வரலாறு. | 177 |
| 22 | வெளி 13ம் அதிகாரம் : பரிசுத்தவான்கள் மற்றும் போலிச் சபைகளின் வரலாறு | 184 |
| 23 | வெளி 14ம் அதிகாரம் : அறுவடை அறிமுகம்: கிறிஸ்துவும் ஆறு தூதர்களும் | 197 |
| 24 | வெளி 15ம் அதிகாரம் : பாபிலோனுக்கு எதிரான ஏழு வாதைகள் அறிமுகம் | 205 |
| 25 | வெளி 16ம் அதிகாரம் : பாபிலோனுக்கு எதிராக ஏழு வாதைகள் ஊற்றப்படுதல் | 212 |
| 26 | வெளி 17ம் அதிகாரம் : மகா வேசிக்கு தீர்ப்பு ; பாபிலோனுக்கு எதிரான அரசியல் - சமுதாய விளைவுகள். | 231 |
| 27 | வெளி 18ம் அதிகாரம் : பாபிலோனுக்கு எதிரான பொருளாதார விளைவுகள்; களிப்பும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும். | 247 |
| 28 | வெளி 19ம் அதிகாரம் : மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி அழிவு; பரிசுத்தவான்களின் பார்வையில் அறுவடை . | 266 |
| 29 | வெளி 20ம் அதிகாரம் : ஆயிர வருஷங்களும், வலுசர்ப்பமும் | 284 |
| 30 | வெளி 21ம் அதிகாரம் : புதிய ஒழுங்கு முறை அடிப்படையில் அரசாளுகை ; மணவாட்டி - புதிய எருசலேம். | 297 |
| 31 | வெளி 22ம் அதிகாரம் : நித்திய ஜீவனுக்குரிய ஆகாரம், தண்ணீர் மற்றும் ஒளி. | 311 |

## பின் இணைப்புகள் : அட்டவணை


| அநுபந்தம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| I | ஏழு சபைகள் வரலாற்று பின்னனிகள் | 339 |
| II | ஏழு சபைகளின் தூதுகள் யாருக்கு எழுதப்பட்டன ? | 343 |
| III | ஏழு தூதர்களில் ஒருவராயிருப்பதற்கான தகுதிகள் | 345 |
| IV | ஏழு சபைகள், ஏழு முத்திரைகள் மற்றும் ஏழு எக்காளங்கள் தொடர்பான காலக்கணக்கு. | 347 |
| V | ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள். | 352 |
| VI | ஏழு சபைகளும், ஏழு தூதர்களும். | 353 |
| VII | ஏழு தூதர்கள்,ஏழு சபைகள், ஏழு முத்திரைகள்,ஏழு உவமைகள் ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள். | 354 |
| VIII | ஏழு ஆவிகள் | 356 |
| IX | நான்கு ஜீவன்கள் (நான்கு தேவ சுபாவங்கள்) | 358 |
| X | இருபத்து நான்கு மூப்பர்கள் | 360 |
| XI | வானம் | 366 |
| XII | பூமியில் குடியிருக்கிறவர்கள் | 369 |
| XIII | ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள். | 372 |
| XIV | சமுத்திரம் | 374 |
| XV | கண்ணாடிக் கடல் | 379 |
| XVI | மரங்கள் (விருட்சங்கள்) | 381 |
| XVII | வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்" | 386 |
| XVIII | நிக்கொலாய மதஸ்தர் (வெளி 2 : 6, 15) | 388 |
| XIX | அந்திப்பா (வெளி 2 : 13) | 389 |
| XX | மிருகங்கள், தலைகள், கொம்புகள். | 390 |
| XXI | மிருகமும் அதின் சொரூபமும் | 397 |
| XXII | கிரீடங்கள் | 400 |
| XXIII | முடிகள் | 401 |
| XXIV | சிங்காசனங்கள் | 402 |
| XXV | நேரம் | 404 |
| XXVI | வெளிப்படுத்தல் ஆகமத்தின் முக்கியஅடையாள சொற்கள் | 407 |
| XXVII | லிவியாதானும் பிகெமோத்தும் | 413 |
| XXVIII | மூன்று அடையாளங்கள் : அவற்றின் செயல்பாடுகளில் மாறுதல்கள் | 414 |
| XXIX | 12 முதல் 20ம் அதிகாரங்களுக்கு இடையிலுள்ள தொடர்புகள் | 417 |
| XXX | ராஜாக்கள் | 421 |
| XXXI | ஆறாம் சபை நிகழ்வுகளுக்கும் ஏழாம் சபை நிகழ்வுகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு | 423 |
| XXXII | அருஞ்சொல் விளக்க அகராதி | 425 |


@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## வெளிப்படுத்தல் ஆகமம் : முக்கிய பிரிவுகள்

| **பிரிவு : I** | | **சுவிசேஷ யுக முழுமையைப் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை** |
|---|---|---|
| வெளி 1 : 1 - 8 | | வெளிப்படுத்தல் தீர்க்கதரிசன புத்தகத்தின் பொதுவான முன்னுரை |
| உட்பிரிவு எண் | வசனங்கள் | பொருள் |
| 1. | 1 : 9 - 20 | ஏழு சபைகளுக்குரிய அறிமுகம் |
| | 2:1 - 3:22 | ஏழு சபைகளுக்குரிய தூது |
| 2. | 4:1 - 5:14 | ஏழு முத்திரைகளுக்குரிய அறிமுகம் |
| | 5:1 - 8:1 | ஏழு முத்திரைகள் விவரிப்பு |
| 3. | 8:2 - 8:6 | ஏழு எக்காளங்களுக்குரிய அறிமுகம் |
| | 8:7 - 11:14 | ஏழு எக்காளங்கள் ஊதப்படுதல் |
| 4. | 12:1 - 13:1 | ஸ்திரீ, ஆண் பிள்ளை, வலுசர்ப்பம், சுவிசேஷயுக சிவில் அதிகாரங்கள் மற்றும் மத அதிகாரங்கள் பற்றிய வரலாறு. |
| 5. | 13:1 - 14:5 | இரண்டு மிருகங்கள், சொரூபம், ஜெயங்கொள்ளுகிறவர்கள்; போலிச்சபையினர் மற்றும் பரிசுத்தவான்கள் பற்றிய வரலாறு. |
| | | |
| **பிரிவு : II** | | **அறுவடை கால முழுமையைப் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை** |
| உட்பிரிவு எண் | வசனங்கள் | பொருள் |
| 1. | 14:6 - 14:20 | கர்த்தரும் ஆறு தூதர்களும்; அறுவடை பற்றியும், பாபிலோன் புறம்பாக்கப்படுதல் பற்றியும். |
| 2. | 15:1 - 15:8 | ஏழு வாதைகளுக்குரிய அறிமுகம் |
| | 16:1 - 16:21 | பாபிலோனுக்கு எதிரான ஏழு வாதைகளடங்கிய சம்பவங்கள் |
| 3. | 17:1 - 17:18 | மகா வேசிக்கு தீர்ப்பு ; பாபிலோனுக்கு எதிரான அரசியல்-சமுதாய விளைவுகள். |
| 4. | 18:1 - 19:10 | பாபிலோனுக்கு எதிரான பொருளாதார விளைவுகள்; களிப்பும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும். |
| 5. | 19:11 - 19:21 | மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி அழிவு; பரிசுத்தவான்களின் பார்வையில் அறுவடை. |

| பிரிவு : III | | ஆயிர வருஷ யுகம் பற்றி ஐந்து கோணங்களில் பார்வை |
|---|---|---|
| உட்பிரிவு எண் | வசனங்கள் | பொருள் |
| 1. | 20:1 - 20:10 | ஆயிர வருஷங்களும், வலுசர்ப்பமும். |
| 2. | 20:11 - 21:1 | தனிப்பட்டவர்களுக்கான நியாயத்தீர்ப்பின் சிங்காசனம். |
| 3. | 21:2 - 21:8 | புதிய ஒழுங்கு முறை பற்றிய விவரிப்பு. |
| 4. | 21:9 - 21:21 | புதிய ஒழுங்கு முறை அடிப்படையில் அரசாளுகை; மணவாட்டி - புதிய எருசலேம். |
| 5. | 21:22 - 22:5 | நித்திய ஜீவனுக்குரிய ஆகாரம், தண்ணீர் மற்றும் ஒளி. |
| முடிவுரை 22:6 - 22:21 | | தூதன், இயேசு, யோவான் ஆகியோரின் முடிவுரை வசனங்கள். |

## பிரிவு I & பிரிவு II இடையிலுள்ள இணை அம்சங்கள்

| **பிரிவு I:** சுவிசேஷயுகம் (அதிகாரங்கள் 1 - 13) | | **பிரிவு II:** அறுவடை (அதிகாரங்கள் 14 - 19) | |
|---|---|---|---|
| சுவிசேஷயுகம் அறிமுகம் | அதி 1 | அறுவடை அறிமுகம் | அதி 14 |
| 7 சபைகள், 7 முத்திரைகள், 7 எக்காளங்கள் | அதி 2 முதல் 11 வரை | 7 வாதைகள் | அதி 15, 16 |
| ஸ்திரீ (மெய்) | அதி 12 | ஸ்திரீ (வேசி) | அதி 17 |
| பாபிலோனின் உயர்வு | அதி 13 | பாபிலோனின் விழுகை | அதி 18, 19 |

# ஏழு தூதர்கள், ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு உவமைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள்

| எண் | தூதர் | சபை | முத்திரை | உவமை | எக்காளம் | வாதை |
|---|---|---|---|---|---|---|
| 1. | பவுல்<br>கி.பி. 30 - 70<br><br>ஆதிச்சபை | எபேசு<br><br>அப்போஸ்தலர் வாழ்ந்த காலம் | ஜெயங்கொள்ளுதல்<br><br>வெள்ளை குதிரை | விதைப்பவன் | பூமி | பூமி |
| 2. | யோவான்<br>கி.பி. 70 - 313<br><br>ரோம புறமத அடக்குமுறை | சிமிர்னா<br><br>கள்ள யூதர்கள் / துன்புறுத்தல் | பட்டயத்தினால் பூமியிலிருந்து சமாதானம் எடுத்துப் போடுதல்<br>சிவப்பு குதிரை | களைகள் | சமுத்திரம் | சமுத்திரம் |
| 3. | ஏரியஸ்<br>கி.பி. 313 - 1160<br><br>போப்பு மார்க்க கொள்கைகளால் கிளர்ச்சி | பெர்கமு<br><br>விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசித்தல் / மறைவான மன்னாவை புசிக்க கொடுத்தல் | பஞ்சம்<br><br>கறுப்பு குதிரை | விருட்சம் வளருகிறது | ஆறுகளும் ஊற்றுகளும் | ஆறுகளும் ஊற்றுகளும் |
| 4. | வால்டோ<br>கி.பி. 1160 - 1371<br><br>யேசபேல் கட்டில் கிடையாக்கப்படுதல் | தியத்தீரா<br><br>யேசபேல் மயக்குதல் /<br><br>அவள் பிள்ளைகள் கொல்லப்படுதல் | மரணம்<br><br>கொள்ளை நோய்<br><br>மங்கிய நிறமுள்ள குதிரை | புளித்த மாவு | சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் | சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் |
| 5. | விக்ளிப்<br>கி.பி. 1371 - 1521<br><br>மறுமலர்ச்சி / சீர்திருத்தம் | சர்தை<br><br>மனந்திரும்பு /<br>தகுதியுள்ளவன் வெண் வஸ்திரம் தரித்தல் | பலிபீடத்தின் கீழ் ஆத்துமாக்கள்<br><br>வெண் வஸ்திரம் | பொக்கிஷம் | சூரியன் கறுப்பாகுதல்<br><br>வெட்டுக்கிளி<br><br>ஐயோ - 1 | இருள்<br><br>மிருகத்தின் ஆசனம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | லூத்தர்<br>கி.பி. 1521 - 1874<br><br>அங்கீகரிப்ப தற்கான வாக்குத்தத்தம் | பிலதெல் பியா<br><br>கதவு திறத்தல் | பிரெஞ்சு புரட்சி<br><br>சாத்தான் கூட்டம் வலுவிழந்தது | முத்து | ஐபிராத்துநதி<br><br>நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்படுதல் ஐயோ - 2 | ஐபிரா த்து நதி<br><br>வற்றிப் போகுத ல் / தவளை களைப் போன்ற மூன்று ஆவிகள் |
| 7. | ரசல்<br>கி.பி. 1874<br><br>கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் | லவோதிக் கேயா<br><br>கண்களுக்கு கலிக்கம் / கர்த்தருடன் போஜனம் / சிங்காசனம் | நெற்றியில் முத்திரை யிடுதல் முடிவடைதல் | மீன் வலை (அறுவடை) | மணவாட்டி இராஜ்யத் தைப் பெறுதல்/ ஏழாம் வாதை ஐயோ - 3 | அர்மகெ தோன்<br><br>கோபத் தின் உக்கிரம் |

# வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை
## வெளி 1 : 1 - 3.

வெளிப்படுத்தல் ஆகமத்தின் முதல் மூன்று வசனங்களில், இந்த புத்தகத்தின் முக்கியமான விஷயங்கள் அனைத்தும் காணப்படுகின்றன.

**வெளி 1 : 1.**

**சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.**

"இயேசு வெளிப்படுத்தின விசேஷம்" என்று மேற்குறிப்பிட்ட வசனத்தில் தெரிய வருகிறது. அதாவது, 'இயேசுவை வெளிப்படுத்துவதே' இந்த புத்தகத்தின் பிரதான நோக்கமாகும். யாருக்கு வெளிப்படுத்த வேண்டும் ? "இயேசுவை அவருடைய இரண்டாம் வருகையில் வெளிப்படுத்துவதாக" இந்த வசனம் சொல்லவில்லை. முதல் வருகையின் ஆரம்பத்திலிருந்து, தொடர்ந்து சுவிசேஷயுக முழுமைக்குமுள்ள அவருடைய ஊழியக்காரர்களுக்கு இயேசுவை வெளிப்படுத்த வேண்டும் என்பது தான் புத்தகத்தின் நோக்கமாகத் தெரிகிறது. "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை' ஊழியக்காரருக்கு தெரிவிப்பதாக உள்ளது. இது, உடனே துவங்கியுள்ள "யுகத்தை" குறிப்பதாகவே உள்ளது. பூமியின் கோத்திரத்தார் இயேசு வெளிப்படுவதை உணருவதாக வெளி 1 : 7ல் குறிக்கப்படும் 'கடைசி காலத்தை'ப் பற்றி வெளி 1 : 1 ம் வசனத்தில் சொல்லப்படவில்லை.

'காலம்' என்பது கிரேக்க மொழியில் 'குறிப்பிட்ட தன்மைகளடங்கிய ஒரு வரையறுக்கப்பட்ட காலப்பகுதி'யைக் குறிப்பதாக பொருள்படும். அதாவது, இயேசு வெளிப்படுத்தப்படும் காலப்பகுதி, "சுவிசேஷ யுகம்" ஆகும். இந்த யுகம் இப்பொழுது தான் ஆரம்பித்து, இரண்டாயிரம் வருஷங்களுக்கு தொடரும் நிலையிலிருந்தது.

**வெளி 1 : 2.**

**இவன், தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.**

வெளிப்படுத்தின விசேஷம் முதலில் பிதாவினிடத்திலிருந்து வருகிறது. பிதா இயேசுவுக்கு அளிக்கிறார். இயேசுவுக்கு இந்த விஷயங்கள் தெரியவில்லை என்பதில் ஆச்சரியமில்லை. மாற்கு 13 : 32; மற்றும் மத்தேயு 24 : 36 ம் வசனங்களில் இயேசு ஏற்கனவே சொல்லிவிட்டார். பிதாவிடமிருந்து கிடைத்த விஷயங்களை இப்பொழுது இயேசு ஒரு தூதன் மூலமாக அனுப்புகிறார். வெளி 22 : 16; இந்த விஷயங்கள் நேரிடையான பொருளை கொண்டிராதபடி, அடையாள பாஷையில் உள்ள இந்த புத்தகத்தை தூதன் யோவானுக்குக் கொடுத்தார். யோவான் மிக்க ஜாக்கிரதையுணர்வுடன் நமது சார்பில் சாட்சியாக விளங்குகிறார்.

**வெளி 1 : 3.**

**இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.**

இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி, வெளிப்படுத்தின விசேஷம் வெறும் ஆவலைத் தூண்டும் உந்துதலாகவோ, அறிவுச் சார்ந்த விஷயமாகவோ, கவர்ச்சியூட்டும் விஷயமாகவோ, பரபரப்பூட்டுகிற தன்மையுடையதாகவோ, புதுமையானதாகவோ எழுதப்பட்ட புத்தகம் அல்ல ! இது, ஒவ்வொருவரும் ஆவிக்குரிய சுபாவ வளர்ச்சி பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆகமத்தை கேட்கிறவர்களும் (கற்றுக் கொள்கிறவர்களும்), அதற்கு கீழ்படிபவர்களும் பாக்கியமுள்ளவர்கள்.

இந்த புத்தகத்தின் நோக்கமே, இதில் உள்ளவைகளை "அவருடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும் பொருட்டாகவே" என்று சொல்லப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் யோவானுக்கு அருளப்பட்ட சமயத்தில், இந்த ஊழியக்காரர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் பரவியிருந்தனர். இருப்பினும், யோவான் தமக்குக் கிடைத்த செய்தியை "ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு" தெரியப்படுத்துவதாக உள்ளது. ஆசியா மைனர் பகுதியைச் சார்ந்த ஏழு சபைகளுக்கு மட்டும் இச்செய்தியைக் கொடுத்துவிட்டு, மற்றெல்லா ஊழியக்காரரையும் யோவான் ஒதுக்கி விட்டாரா ? இல்லை ! நாம் ஏற்கனவே அறிந்தபடி, இது 'அடையாளங்கள்' சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சார்ந்ததாக உள்ளது.

## சபைக்கு யோவானின் வாழ்த்துக்கள்
## வெளி 1 : 4 - 8.

**வெளி 1 : 4.**

**யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்.**

"ஏழு" என்ற பதம் நேரிடையாகவும், அடையாள பாஷையிலும் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. இது முழுமையான (பூரண) ஆவிக்குரிய எண்ணைக் குறிப்பதாக உள்ளது. இது, இயேசுவின் நாட்களிலிருந்து 'சமாதான ராஜ்ய காலம்' வரைக்குமுள்ள **ஒட்டுமொத்த சபைக்கு** வெளிப்படுத்தப்பட்ட விசேஷமாகும். இந்த 'ஏழு' என்ற எண் நேரிடையான அர்த்தத்திலும் கையாளப்படுத்தப்படுகிறது. ஏனெனில், தேவன் சபையின் பூமிக்குரிய வரலாற்றை ஏழு காலப்பகுதிகளாகப் பிரித்துள்ளார். சபை ஆசியாவில் உள்ளது என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆசியா என்றால் "சேறு" (MUD) என்று பொருள்படும். அதாவது, பூமிக்குரிய நிலையிலுள்ள சபைக்கு இந்த விசேஷம் வெளிப்படுத்தப்படுகிறது. "இடங்கள்" என்பது அடையாள பாஷையில் " நிலைமைகள்" என்று அர்த்தமாகிறது. ஏசாயா 51 : 1; ரோமர் 9 : 21;

சபை மாம்சீக சரீரத்தில் பூமியில் வாழும் நிலையில் உலகப்பிரகாரமான காரியங்களில் (சேற்றில்) கறைபடும் நிலையைக் காட்டுகிறது.

**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும் :**

இது பிதாவைக் **(யாவே)** குறிக்கிறது. பிதாவைப் பற்றிய இந்த விவரணை, வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும் ஒரே விதமாகக் காணப்படுகிறது. இந்த மூன்று வினைச்சொற்களும் காலக் கிரமமாகச் சொல்லப்படவில்லை. இம்மூன்றில் முதல் சொல் : "இருக்கிறவர்". இது, யாத்திராகமம் 3ம் அதிகாரத்தில் சொல்லப்படும் "இருக்கிறேன்" என்பதற்கு சமமான சொல் ஆகும். இந்த செயல் "முதலாவதாக" குறிக்கப்படுவது வெறும் எதேச்சையாக ஏற்பட்டதல்ல ! ஒரு வேளை இந்த வரிசைக்கிரமம் மாற்றி அமைக்கப்பட்டிருந்தால், --அதாவது, "இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமானவராலும்" என்று இருந்திருந்தால், பிதாவின் நித்தியத்துவத்தை சரியாக உணர்ந்து கொள்ள முடியாத நிலை உருவாகும். " இருந்தவர் " என்பது கடந்த காலத்தைக் குறிக்கிறது. ஆனால், அவர் "நித்தியமாக இருக்கிறார்" மற்ற இரண்டு சொற்களும் அவருடைய கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் குறிப்பதாக இல்லாமல், **கடந்த காலத்தில் அவர் செய்த காரியங்களையும், எதிர் காலத்தில் அவர் செய்யப் போகிறவைகளையும்** குறிப்பதாக உள்ளது.

அதாவது, நாம் இப்பொழுது இருப்பதற்கு முன்பே, நமக்காக ஏற்கனவே ஆயத்தப்படுத்தியிருந்த காரியங்களையும், எதிர் காலத்தில் அவர் நமக்கு செய்யப்போகும் காரியங்களையும் உணர்த்தும் நோக்கிலேயே, பிதாவை "இருக்கிறவர்" என்ற சொல் மூலம் அறிகிறோம்.

ஆனால், இயேசுவைப் பற்றிக் குறிக்கும் விவரணையில் (வெளி 1 : 18ல்) பெரும் **வித்தியாசம்** இருப்பதைக் கவனிக்கலாம். சாகாமையைப் பெற்றவுடன், அவர் **இப்பொழுது** "உயிரோடிருக்கிறேன்" என்று தம்மைப் பற்றி இயேசு விவரிக்கிறார். ஆனாலும், அவர் **மரித்தார்.** இருப்பினும், அந்த மரணத்தை என்றென்றைக்கும் ஜெயங்கொண்டு விட்டார். ஆகவே, இயேசு "சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்கிறார்.

சுருக்கமாக சொன்னால், **யாவே** தேவன் "இருக்கிறார்". ஆனாலும், நமக்கு உறுதியான நம்பிக்கை தரும் விதமாக, நாம் இருக்கிறதற்கு முன்பாகவே நமக்குரிய திட்டங்களுக்கு காரண கர்த்தாவாகவும், நாம் நித்திரைக்குட்பட்டு, பிறகு எழும் காலத்திலும் வருங்கால காரியங்கள் அனைத்திலும் நம்மைக் கட்டுப்படுத்துகிறவராகவும் இருக்கிறார்.

**ஏழு ஆவிகள் :** பூரணத்துவமான நிலையிலுள்ள (7 = பூரணம்) பரிசுத்த ஆவியை "ஏழு ஆவிகள்" அடையாளப்படுத்துகிறது. அது, சபையின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் (ஏழு காலப்பகுதிகள்), அந்தந்த காலப்பகுதிக்குத் தேவைப் படுபவற்றை பகிர்ந்தளிக்கும் வண்ணம் உள்ளது. ஏழு சபைகளின் வரலாறுகளிலும் சபையினரின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவி தீவிரமாக செயற்படுத்தும் விதத்தில் இயங்குகிறது. ஒவ்வொரு சபையின் தூதிலும்,"ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவி ஏழு மடங்கு வல்லமையுடன் இருப்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

**அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற :**

ஊழியம் செய்கிற இடத்தை இந்த சொற்றொடர் அடையாளப் படுத்துகிறது. பரிசுத்த ஆவியானது தேவனுடைய சித்தத்தை உடனடியாக பிரதிபலிக்கும் விதத்தில் உள்ளது என்று இங்கு உணரப்படுகிறது.

**வெளி 1 : 5.**

**உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக .**

முதலில் பிதாவைப் பற்றியும், பிறகு அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் பலனாகிய பரிசுத்த ஆவியைப் பற்றியும், **கடைசியாக** இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் விவரிக்கப்படுகிறது. (ஆனால் மத் 28:19ல் இந்த வரிசைக்கிரமம் இல்லை). வெளிப்படுத்தின ஆகமம் "இயேசுவைப் பற்றி வெளிப்படுத்தும் விசேஷம்" ஆகும். இந்த புத்தகம் முழுமையாக இயேசுவைப் பற்றியதாகும். இயேசு ஏழு காலப்பகுதிகளிலுமுள்ள சபைக்குத் தலையாயிருக்கிறார். ஏனெனில், அவர் சதா காலங்களிலும், இந்த யுக முடிவு வரையிலும் கூட நம்முடன் இருக்கிறார்.சுவிசேஷங்கள் நமக்கு இயேசுவின் பூலோக ஊழியத்தை விவரிக்கின்றன. பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் இயேசுவின் ஆயிர வருட அரசாட்சியைப் பற்றி அறிவிக்கின்றன.அவற்றின் தொடர்ச்சியாகவே, வெளிப்படுத்தின சுவிசேஷம் கூடுதலான தகவல்களை அளிக்கின்றது.

சபை இன்னும் மாம்சத்தில் இருக்கும் காலத்தில், திரைக்கு அப்பால் அவர் இருக்கும் பொழுது,, அவருடைய சபையுடன் இயேசு மேற்கொள்ளும் பணியை விவரிப்பதே வெளிப்படுத்தின ஆகமத்தின் முக்கிய "கரு"வாக உள்ளது.

வெளி 1:5ம் வசனத்தில், இயேசுவைப் பற்றிய மூன்று விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

**மூன்று விஷயங்கள் :**

| | | |
|---|---|---|
| **1) உண்மையுள்ள சாட்சி** | : | **பூலோகத்தில் இயேசுவின் ஊழியம்;** |
| **2) மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவர்** | : | **இயேசு உயர்வு பெறுவது;** |
| **3) பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி** | : | **அவருடைய சபை வளர்ச்சியுறும் காலப்பகுதியில் நிலவும் அதிகாரங்களை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது.** |

**"உண்மையுள்ள சாட்சி"** என்பது இயேசுவின் பூலோக வாழ்வைக் குறிப்பது ஆகும். (வெளி 3:14). பிதாவின் சுபாவத்தை (தன்மையை), தூதர்கள் மற்றும் மனுஷர்கள் முன்னிலையில் இயேசு தெளிவாகக் காட்டினார். அவரிலும், அவர் மூலமாகவும் விளங்கிய கிருபையும் சமாதானமும் நமக்குக் கிடைக்க சிபாரிசு செய்யப்படும் விதமாக இது குறிப்பிடப்பட்டு இருக்கிறது..

**மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும் :** முதலாவது உயிர்த்தெழுந்தவர் இயேசு; இந்த ஆசீர்வாதம் பின்னால் மற்றவர்களுக்கு வர இருக்கிறது என்பதற்கு இது முன்னடையாளமாக உள்ளது. அப்போ 26 : 23.

**பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி :** வெளி 19 : 16, 19; இந்த சொற்றொடர் வேத மாணவர்களின் பார்வையில் வித்தியாசமாக உள்ளது. "பூமியின் ராஜாக்கள்" என்று "மகிமையுறும் சபையை" தீர்க்கதரிசனமாகச் சுட்டிக்காட்டுகின்றது என்று கூறுவர்; "பூமியில் வல்லமை படைத்தவர்கள்" என்பது அழிந்து போகக் கூடியதாகையால், இவற்றின் மீது ஆளுகை செய்வது ஒரு பொருட்டான விஷயம் இல்லை என்று அபிப்பிராயப்படுவோர் உண்டு. "பூமியின் ராஜாக்கள்" என்பது வெளிப்படுத்தல் ஆகமத்தில் ஒரே மாதிரி அடையாள பாஷையில் குறிக்கப்படவில்லை. உதாரணமாக, வெளி 19 : 19ல் "பூமியின் ராஜாக்கள்" என்பது "பரிசுத்தவான்களை"க் குறிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. வெளி 1 : 5ல் "பூமியின் ராஜாக்கள்" என்பது பூமியின் வல்லமைகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்த ராஜாக்களுக்கு இயேசு அதிபதியாக உள்ளார் என்பது, இந்த ராஜாக்களின் கைகளில் சபையின் ஏழு காலப்பகுதிகளிலும் பரிசுத்தவான்கள் உபத்திரவம் அடைந்த நிலையில், பூமியின் ராஜாக்களை நீக்கிப் போட்டு, ஜெயங்கொண்டு, இவர்களுக்கு மேலான அதிபதியாக இயேசு இருக்கிறார் என்ற விதத்தில் மிகப் பெரும் உறுதியான நம்பிக்கை நமக்குக் கிடைக்கிறது.

இப்படியாக, மேலே குறிப்பிட்டுள்ளபடி, நமது தலையான கிறிஸ்துவின் மூன்றுவித காலக்கிரமம் அடிப்படையினாலான அனுபவங்களை வெளி 1 : 5ல் கீழ்கண்டவாறு காண்கிறோம் :

1) **கிறிஸ்து பூமியில் ஆற்றிய ஊழியம்**
2) **அவர் மகிமை அடைதல்**
3) **தமக்கு அன்பான சபையின் நலனையும், வளர்ச்சியையும் முன்னிருத்தி, சுவிசேஷ யுகத்தின் உலக சக்திகளை தம் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்.**

**வெளி 1 : 6.**

**நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்.**

வெளி 1 : 5ல் பிதா, கிறிஸ்து ஆகியோரிடமிருந்து வாழ்த்துதல்களை யோவான் நமக்குத் தெரிவித்த பின், இந்த வாழ்த்துதல்களுக்கு மறுமொழியாக யோவான் வெளி 1:6ல் பாராட்டுதல்களை புகழ்ந்துரைக்கிறார்.

**நம்மிடத்தில் அன்பு கூர்ந்து :** இடுக்கமான வழியாக பலியின் ஜீவியத்தில் நடக்கும் பரிசுத்தவான்களுக்கு, இயேசுவைக் குறித்துப் பாராட்டும் யோவானின் வார்த்தைகள் மிக முக்கியமானதாக உள்ளன. இனி வரப்போகும் ஏழு காலப்பகுதிகளிலுமுள்ள சபைகளைப் பற்றியும், முத்திரை மற்றும் எக்காளம் பற்றிய விஷயங்களில் காணும் பயங்கரங்கள் அனைத்தும், இறுதியில் நன்மை பயக்கக் கூடியது என்பதை பகுத்துணர நமக்கு இயேசுவின் அன்பு தேவைப்படுகிறது.

**தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி :** யோவான் கூறும் இந்த வாழ்த்துதல் இயேசுவின் ஈடுபலியையும், நீதியையும் குறிக்கின்றன. இந்த சுவிசேஷ யுகத்தில் பரிசுத்தவான்களின் ஸ்திரத்தன்மை இந்த சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாம் நீதிமானாக்கப்படும் இந்த உறுதியான நம்பிக்கை இல்லாவிட்டால், இந்த யுகத்தின் சோதனையில் நாம் செயற்பட இயலாத நிலை ஏற்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின :** யோவானின் வாழ்த்துதலின் கடைசி பகுதியாக இது உள்ளது. சபையின் பூலோக அனுபவங்கள் உண்மையுடன் நடந்து முடிந்த நிலையில், திருச்சபை பெறக்கூடிய மகத்தான பரிசு, "தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுவது" ஆகும்.

**அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென் :** இந்த ஜெபம், திருச்சபையின் மேல் பிதா செலுத்தும் ஆட்சியுரிமையை உணர்த்துகிறது. ஏனெனில், உலகத்தின் மேல் செலுத்தப்படும் ஆட்சியுரிமை, ஒருவிதத்தில், ஆயிரம் வருடங்களாக வரையறுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். வேறு பார்வையில், உலகத்தின் மீதான ஆட்சியுரிமை என்றென்றைக்கும் உள்ளதாகவும் சொல்லலாம்; அப்படியிருந்தால், அதை யாராலும் ஆட்சேபிக்க முடியாது.

**வெளி 1 : 7.**

**இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்; அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள்; அப்படியே ஆகும், ஆமென்.**

**இதோ :** இந்த வார்த்தை (சங்கீதத்தில் "சேலா" என்ற வார்த்தையைப் போல) மிகவும் முக்கியமான உள்ளார்ந்த அர்த்தத்தைக் கொண்டதாக இருக்கிறது. இதைத் தொடர்ந்து சொல்லப்படும் வசனங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பெரும் உள்ளர்த்தமான விஷயங்கள் கொண்டுள்ளன என்பதற்கான தடயமாக "இதோ" என்ற

வார்த்தை உள்ளது. 7 மற்றும் 8ம் வசனங்கள் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதை நன்கு உணரலாம். "இதோ' என்ற வார்த்தை தானியேல் 7 : 13ல் உள்ள தீர்க்கதரிசனத்தில் காணலாம். இது யோவானின் வாழ்த்துதலில் மூன்றாம் பகுதியின் தொடர்ச்சியாக இருக்கிறது. இது, **ராஜ்யம்** ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றிய விஷயமாகும். வெளிப்படுத்தின விசேஷத்தில் இனி வரப்போகும் விஷயங்களுக்கு திரளான ஒற்றுமைகளை நாம் தானியேல் தீர்க்கதரிசனங்களில் காணலாம். தானியேல் தீர்க்கதரிசனங்கள், நான்கு மிருகங்களின் ஆளுகைக்கு எதிராக உள்ளவையாகக் காணப்படுகின்றன. இராக்கால தரிசனங்களாக தானி 7 : 13ம் வசனம் துவங்குகிறது. அதே போன்று, வெளிப்படுத்தல் ஆகமத்திலும் இராக்கால தரிசனங்களின் விரிவான விஷயங்களை --- சுவிசேஷ யுக நடவடிக்கைகளின் தரிசனங்களைக் காணலாம். சுவிசேஷ யுக இராக்காலத்தின் வாயிலாக (இருண்ட யுகத்தில்) ஏழு சபைகளும் இயங்க வேண்டியுள்ளது; ஆனால், இந்த சபைகள் பிறகு "பகலை" சந்திக்கும்----மனுஷ குமாரனுடைய வருகை ----ஆசீர்வாதங்களின் உச்சக்கட்டத்தை சந்திக்கும். இவ்விதமாக, 6ம் வசனத்தின் மறுமொழியாக 7ம் வசனம் உள்ளது. "பூமியின் குடிகளின்" நீண்ட கால அக்கிரமங்களின் ஆதிக்கத்தையும், துன்புறுத்துதலையும் அறவே நீக்கிப்போடும்.

**மேகங்களுடனே வருகிறார் :** இந்த வசனம், தானியேல் 7 : 13ல் உள்ளதைப் போன்றிருப்பதை நாம் கவனிப்பது தவிர்க்க முடியாததாகும். "வானத்து மேகங்களுடனே" என்று கூடுதலான வார்த்தையை தானியேல் சேர்த்துள்ளார். சுவிசேஷ யுக ஏழு காலப்பகுதிகளிலும் சபையின் இயக்கத்தில் 1) பூமியின் **ராஜாக்கள் 2) வானங்கள்** (வெளி 1 : 7ல் இது குறிப்பிடப்படவில்லை) என்ற இரண்டு பெரும் சக்திகள் சபையைப் பாதித்திருக்கின்றன. இயேசுவைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு சக்திகளையும் கட்டுப்படுத்தும் அதிபதியாக செயல்படுகிறார். பூமியின் ராஜாக்களை வெளி 19ம் அதிகாரத்தில் அழிக்கிறார். அவர் தீங்கு செய்யும் வானங்களையும் உபத்திரவங்களுடன் (மேகங்களுடன்) தம் வருகையில் அழிக்கிறார். இந்த செயல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் வெளிப்படையாகத் தெரியும். இந்த உபத்திரவங்களாகிய **மேகங்களின் மத்தியில்** சபையினர் தங்களுடைய கர்த்தரை சந்திப்பார்கள். (1 தெச 4 : 17). ஆனால், நமக்கோ, இந்த மேகங்கள், ஒரு முன்னறிவிப்பின் சந்தோஷத்திற்கான அறிகுறியாகத் திகழ்கிறது.

**அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்** : இயேசுவின் பிரசன்னத்தைப் பற்றிய உணர்வு, ஞானமுள்ளவர்களுக்கு வந்தடையும். அவருடைய பரிசுத்தவான்கள் முதலில் அவரைக் காண்பார்கள் (உபத்திரவங்களில்). அவரைக் குத்தினவர்களும் கூட திரும்பி வந்து அவரைக் காண்பார்கள்.----அதாவது, அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட இந்த அநியாயம், தங்கள் சொந்த நன்மைக்குத் தான் என்பதை தேவனுடைய ஞானத்தின் கிருபையினால் அறிந்து கொள்ளலாம்.

**பூமியின் கோத்திரத்தார் :** மனுஷ சமுதாயம் முழுமையையும் இது குறிக்கும். "உன் சந்ததிக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிரகாமுக்கு பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் இதுவே !

**அவரைப் பார்த்து புலம்புவார்கள் :** "துக்கப்படுவதாகவோ அல்லது புலம்புவதாகவோ" இதற்கு அர்த்தம் இல்லை. கடந்த காலத்தில் அறியாமையின் காரணமாக இயேசுவைப் பற்றி தவறான அபிப்பிராயம் கொண்டிருந்த நிலைமையினால் இப்பொழுது வருத்தம் அடைந்து, "**மனந்திரும்பி"** செய்த தவறுகளுக்காக உண்மையான துயரம் அடைவதை இந்த வசனம் உணர்த்துகிறது.

சகரியா 12 : 10ல் கூறப்படும் சில கருத்துக்களுக்கு இந்த வசனம் தொடர்புள்ளதாக இருக்கிறது. கிருபையின் ஆவியும், விண்ணப்பங்களின் ஆவியும் இஸ்ரவேலின் மீது ஊற்றப்படுவதால், "துயரம்" (புலம்பல்) தூண்டப்படுகிறது. ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல மனங்கசந்து துக்கிப்பார்கள். இது ஒரு "**நல்ல** துயரம்" அல்லது "புலம்பல்" என்று கூறலாம். பாபிலோனின் மீது வரும் மேகங்களாகிய உபத்திரவங்களின் காரணமாக வரும் பயத்தினால் ஏற்படும் புலம்பல் அல்ல ! அந்த பயம் இந்த சமயத்தில் கடந்து போயிருக்கும்.

இவ்விதமாக, இயேசுவைப் பார்த்து புலம்புவது ஒரு மெய்யான புலம்பல் ஆகும். இந்த புலம்பல் கீழ்காணும் விதத்தில் இருக்கும்: "தேவன் அனுப்பிய தூதர்களையும், தீர்க்கதரிசிகளையும், இரட்சகரையும் அசட்டை செய்து துன்புறுத்தினோம்; தேவனையும், அவருடைய வழிகளையும் தவிர்த்து இரண்டாயிரம் வருடங்களாக வழிவிலகிச் சென்றோம்." என்பார்கள். வெளி 1 : 7 ம் வசனம், உலக ஜனங்களின் மனப்பாண்மையில் ஏற்படும் மாறுதலை உணர்த்துகிறது. இது, வெளி 1 : 6 ம் வசனத்திற்கு மறுமொழியாக உள்ள ஒரு சந்தோஷகரமான வேலை ஆகும். 7ம் வசனத்தின் மையக் கருத்து, இஸ்ரவேலும் உலகத்தாரும் துயரம் அடைந்து, மனஸ்தாபம் அடைவதையே வலியுறுத்துவதாய் உள்ளது.

**அப்படியே ஆகும், ஆமென்** : யோவான் இந்த வார்த்தைகளை ஏன் எழுதினார் ? அவர்களுடைய துன்பங்களினால் யோவான் சந்தோஷப் படவில்லை; புதிய ராஜாவைப் பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்கு ஏற்படுவதைக் குறித்து அவர் களிப்படைகிறார்.

**வெளி 1 : 8.**

**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.**

இந்த வசனம், இதற்கு முன்னுள்ள வசனங்களுக்கும், பின்னால் வரும் வசனங்களுக்கும் தொடர்பு இல்லாமல், தனித்து உள்ளது. 4ம் வசனத்திலிருந்து 7ம் வசனம் வரைக்கும் யோவான் வாழ்த்துதல் சொல்கிறார். பிறகு திடீரென்று புதிதாக ஒரு குரல் பேசுகிறது ! 9ம் வசனத்தில் யோவான் ஏழு சபைகளையும் அறிமுகம் செய்யத் தொடங்குவதற்கு முன், இடைவெளியில் ஒரு குரல் வலுவாக ஒலிக்கிறது. இந்த இடைச்சொருகலான 8ம் வசனம் மிக முக்கியமானதாகவும், ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காகவும் இருப்பதை பின் வருமாறு உணரலாம்:

வெளி 1 : 8ம் வசனத்திலுள்ள வார்த்தைகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

“இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் உரைப்பதின்படி, நான் (கிறிஸ்து) அல்பாவும், ஒமேகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன்”.

இவ்வாறாக இயேசு கூறுகிறார்; வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும் மற்ற இரண்டு வசனங்களில் மட்டும் **(21 : 6; & 22 : 13)** “நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன்” என்ற சொற்றொடர் காணப்படுகிறது. இந்த சொற்றொடர் இயேசுவையே குறிப்பிடுகிறது. பிதாவாகிய தேவன் இவ்விதம் சொல்வதால், இயேசு இந்த பெயருக்கு சொந்தம் கொண்டாடுகிறார்; சற்று முன் 7ம் வசனத்தில் மேற்கோள் காட்டப்பட்ட சகரியா 12ம் அதிகாரத்திலுள்ள தீர்க்கதரிசனங்களின் அடிப்படையிலேயே இயேசு இந்த பெயரை சொந்தமாக்கியிருக்கிறார். இதை விரிவாக பிறகு பார்க்கலாம்.

வெளிப்படுத்தல் ஆகமத்தின் துவக்க வாழ்த்துதலின் உச்சக் கட்டமாக 8ம் வசனம் அமைக்கப்பட்டுள்ளது. தேவன், பரிசுத்த ஆவி, இயேசுவிடமிருந்து கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என்று யோவான் முதலில் (4, 5ம் வசனங்களில்) கூறுகிறார்; பிறகு, இயேசுவைப் புகழ்ந்து, நமக்கு செய்ததும், இனி நமக்கும், உலகத்தாருக்கும் செய்யப்போவதைக் குறித்தும் சுருக்கமாகத் தெரிவிக்கிறார்; இந்த சமயத்தில் தான், இயேசு குறுக்கிட்டு, யோவானின் வாழ்த்துதலை 8ம் வசனத்தில் கீழ்கண்டவாறு நிறைவுபடுத்துகின்றார்.

“இந்த புத்தகத்தில் தொடர இருக்கும் எல்லா வார்த்தைகளுக்கும் நானே அதிகாரம் கொண்டவர்; சபைக்கு தலை நானே; இனி சொல்லப்படும் எல்லாவற்றிற்கும், முதல் வார்த்தையும், கடைசி வார்த்தையுமாக (முழு அதிகாரம் படைத்தவராக) விளங்குகிறேன் பிதா சொல்லும்விதமாக நான் இப்படி இருக்கிறேன்.”

மேற்குறிப்பிட்டவிதமாக வாழ்த்துதல் நிறைவு பெறுவது எவ்வளவு வலிமை உள்ளதாக இருக்கிறது என்பதை நாம் உணர முடிகிறது. இந்த புத்தகம் ‘கிறிஸ்துவின் வெளிப்படுத்தல்’ என்பதை வெளி 1 : 1ல் அறிகிறோம்; (இந்த வெளிப்பாட்டை பிதா தம் குமாரனுக்கு அளித்தார்).

**பொருள் விளக்கம் :**

“நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும், அந்தமுமாயிருக்கிறேன்”

**A.** வெளி 1 : 4ம் வசனத்தில் பிதா, பரிசுத்த ஆவி, இயேசு குறித்த வாழ்த்துதலில் “இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவரும்” என்பது **யேகோவாவை** குறிப்பது தெளிவாக உணரப்படுகிறது. “இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவரும்” என்ற சொற்றொடர் வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும் பிதாவைக் குறித்து விவரிக்கும் வகையில் கையாளப்பட்டுள்ளது.

**B.** பழைய ஏற்பாட்டில் **‘யேகோவா’** என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் **‘கர்த்தர்’ (LORD)** (கிரேக்க வார்த்தை **- KYRIOS)** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. **‘தேவன்’ (GOD)** என்ற சொல்லுக்கு இணையாக கிரேக்க வார்த்தை **‘THEOS’** உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. வெளி 1 : 8ல் கிரேக்க மூலத்தில் தேவனாகிய கர்த்தர் **(THE LORD THE GOD)** என்று தெளிவாக **யேகோவாவை** குறிப்பிட்டுள்ளது. ஆகவே, இங்கு ‘கர்த்தர்’ என்பது இயேசுவைக் குறிக்கிறது என்ற வாதம் சரியல்ல. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய நாமம் **யேகோவா (YHWH)** என்ற நான்கு எழுத்துக்கள் (TETRAGRAMATON) கொண்ட சொல், புதிய ஏற்பாட்டில் உள்ள பழைய ஏற்பாட்டு வசன மேற்கோள்களில் **‘கர்த்தர்’ (LORD)** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**C.** **‘சர்வ வல்லவர்’** (கிரேக்க மூலம் **PANTOKRATOR)** என்ற சொல் புதிய ஏற்பாட்டில் 10 தடவைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த 10 தடவைகளிலும் இந்த சொல் பிதாவாகிய தேவனையே குறிக்கிறது. (வெளி 1 : 8; 4 : 8; 11 : 17; 15 : 3; 16 : 7; 16 : 14; 19 : 6; 19 : 15; 21 : 22; & 2கொரி 6 : 18) இதற்கு இணையான எபிரேயச் சொல் **‘எல் சடாய்’ (EL SHADDAI)** . யாத் 6 : 3; இந்த சொல் எப்பொழுதும் **யேகோவாவை** குறிக்கும்.

**D.** கிரேக்க மொழியில் 'அல்பா' என்பது முதல் எழுத்து; 'ஒமேகா' என்பது கடைசி எழுத்து; வேதாகமத்தில் இந்த சொற்கள் ஏதோ ஒரு விஷயத்தின் முதலும் கடைசியுமாக இருப்பதை அடையாளப்படுத்துகிறது. இந்த சொற்கள், இயேசு மட்டுமே **யேகோவா**வின் முதலும் கடைசியுமான நேரடியான சிருஷ்டி என்று விளக்க முற்படுகிறது என்றாலும், இந்த விளக்கம் வெளி 1 : 8ம் வசனத்துக்கு சரியாக பொருந்தவில்லை. "முந்தினவரும், பிந்தினவரும்" (ஏசாயா 44 : 6) என்ற அதே வார்த்தைகளை தேவன் தம்மைக் குறித்துச் சொல்லி, தமக்கு முன் யாரும் இருந்ததில்லை என்றும், தமக்குப் பின்னும் யாரும் இருப்பதில்லை என்றும் சொல்ல முற்படுவது, வெளி 1 : 8ம் வசனத்திற்குப் பொருந்தவில்லை.

**E.** வெளி 1 : 7ல் விவரிக்கப்பட்டுள்ள விஷயம், சகரியா 12 : 10ல் தீர்க்கதரிசனமாக ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது:

"அவர்கள் தாங்கள் குத்தின **என்னை** நோக்கிப் பார்த்து........"

இந்த வசனத்தில், "என்னை" **'ME'** என்ற சொல் எபிரேய மொழியில் இரண்டு எழுத்துக்களால் ஆன சொல் ஆகும்; அதாவது, ஆலெப் (ALEP), டாவ் (TAV) என்ற இரண்டு எழுத்துக்கள் ஆகும். 'ஆலெப்' என்பது எபிரேய மொழியில் முதல் எழுத்தாகவும், 'டாவ்' என்பது கடைசி எழுத்தாகவும் உள்ளது ! இயேசுவைக் பற்றி உரைக்கப்பட்ட சகரியா 12 : 10ன் தீர்க்கதரிசனம் வெளி 1 : 7ல் குறிக்கப்பட்ட பிறகு, அடுத்த வசனத்தில் (8ம் வசனத்தில்) இயேசு இந்த நாமத்தைப் பெறுகிறார். 7ம் வசனத்தில் யோவான் கூறுவதை இடைமறித்து, இயேசு, சகரியா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட நபர் நான் தான் என்பதை உணர்த்தும் வகையில், 8ம் வசனத்தில் " **நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் (FIRST), அந்தமுமாய் (LAST)** இருக்கிறேன்" என்கிறார்; " இந்த புஸ்தகத்திலுள்ள அனைத்து வார்த்தைகளுக்கும் நானே முதலும் கடைசியுமாய் இருக்கிறேன்; ஏனெனில், தேவன் தாமே இந்த அதிகாரத்தை எனக்குக் கொடுத்திருக்கிறார்" என்று நமக்கு உணர்த்துகிறார். தேவனால் இயேசுவுக்கு கொடுக்கப்படும் அதிகாரத்தை (சகரியா 12 : 10) யோவான் வெளி 1 : 7ல் மேற்கோளாக காட்டுகிறார். இயேசு தம்மை சபைக்கு வெளிப்படுத்துவதின் முதல் படி இதுவே ! (வெளி 1 : 8). சுவிசேஷ யுகத்தில் தமக்கு இருக்கும் அந்தஸ்தையும், அதிகாரத்தையும் இயேசு சபைக்கு வெளிப்படுத்துகிறார்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## ஏழு சபைகள் --- முன்னுரை
## வெளி 1 : 9 - 20

சபையின் ஏழு காலப்பகுதிகளில் பரிசுத்தவான்கள் பெலன் கொள்ளவும், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் தக்கதாக, அதற்குரிய குணலட்சணங்களைத் தரித்துக் கொண்டவராக இயேசு தம்மை வெளிப்படுத்துவதை வெளி 1 : 9 - 20ம் வசனங்களில் பார்க்கிறோம்.

வெளி 1 : 9.
**உங்கள் சகோதரனும் இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய இராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவில் இருந்தேன்.**

**யோவான் :** இந்த பெயர் எபிரேய மொழியில் "**யேகோவா** கிருபை உள்ளவர்" என்று அர்த்தங்கொள்ளும். வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும், சபையின் ஏழு காலப்பகுதிகளிலும் அருகில் நின்று, உற்று நோக்கும் பணியை யோவான் செய்வதாகப் பார்க்கிறோம்; யோவான் என்ன பார்க்கிறாரோ, என்ன கேட்கிறாரோ, நாம் அதைப் பார்க்கிறோம்; கேட்கிறோம். யோவானுக்கு இருந்த ஈடுபாடு, நாம் கொள்ளும் ஈடுபாடாக ஆகிறது. அவர் இந்த தீர்க்கதரிசனங்களின் எழுத்தாக இருந்தார்; ஆனால், அடையாளப்பூர்வமாக நாமும் தீர்க்கதரிசனத்தை பதிவு செய்கிறவர்களாக இருக்கிறோம்.

வெளிப்படுத்தல் ஆகமத்தில், **"எழுது"** (எழுதி பதிவு செய்வது) என்று கட்டளைப் பிறப்பிக்கப்படுவது, கற்றுக் கொள்வதற்கும், அதனால் பயன் பெறுவதற்கே ஆகும். வெளி 10 : 4ல் உள்ளபடி, "எழுத வேண்டாம்" என யோவானுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டால், சபையினர் இதில் ஈடுபட வேண்டாம் என உணர்த்தப்படுகிறது. கி.பி. 1799ம் வருடத்தைத் தொடர்ந்து, "ஏழு இடிகள்" என்று அடையாளப்படுத்தப்படும் "உலகத்தாரின் சர்ச்சைகள்" அனைத்தையும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆகவே, யோவான் பதிவு செய்யும் காரியங்கள் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், பலனுக்கும் ஏற்ற வகையில், சபையாகிய நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டியவைகளாய் உள்ளன.

**உங்கள் சகோதரனும் :** யோவான் சரீரமாகிய சபைக்கு அங்கமாக இருக்கிறார். சரீரத்தின் ஒற்றுமையை சகோதரன் (யோவான்) வலியுறுத்துகிறார். உபத்திரவத்தில் உடன் பங்காளனாகிய யோவான், சபை முழுவதும் உபத்திரவத்திற்கு உள்ளாகும் நிலையை வலியுறுத்துகிறார். இந்த உபத்திரவத்திற்கு கிடைக்கும் பலனை "இராஜ்யம்" அடையாளப்படுத்துகிறது. பொறுமை நம்மை உபத்திரவப்பட ஊக்கமளிக்கிறது; இதன் பலனாக ராஜரீகம் பண்ணும் அந்தஸ்தை அடைகிறவர்களாகிறோம். வெளிப்படுத்தல் ஆகமத்தின் இந்த 'கருத்து திரட்டு' தான், உபத்திரவங்களில் பங்காளிகளாவதற்கும், ஜெயங்கொள்ளுகிறதற்கும் நமக்கு ஊக்கத்தை அளிக்கிறது.

**பத்மு என்னு தீவு :** இது தண்டனை பெற்றவர்களின் குடியிருப்பு பகுதியாகும். வேதாகமத்தில், "இடங்கள்" என்பது "நிலைமைகளை" குறிப்பதாக உள்ளது; இந்த இடத்தை பற்றிய தன்மைகளை நாம் புரிந்து கொள்ள இயேசு விரும்புவதாக இருக்கலாம்; யோவான் **தனிமைப்படுத்தப்பட்ட** (தீவு) நிலையை (அவ்விதமே சபையாரும் இருப்பதை) நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

அவர் நிராகரிக்கப்பட்ட நிலையில் இருந்ததையும் (தண்டனைக் குடியிருப்பு) உணரலாம். இதே மாதிரி தான், "வனாந்திரம்" என்ற நிலையை சபையார் அனைவரும் அனுபவிக்கப் போவதைக் காட்டுகிறது. இந்த தனிமையில் இருந்த யோவான் பெரிதான சத்தத்தைக் கேட்டார். (வெளி 1 : 10). பெரிதான ஆசீர்வாதத்திற்குரிய விஷயங்கள் யோவானுக்கு வெளிப்பட்டன. வனாந்திர தனிமைக்குப் பிறகு, சபையாகிய நமக்கு நிகழ்வதும் அப்படியே ஆகும்.

**தேவ வசனத்தினிமித்தமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் :** (வெளி 6 : 9 ம் வசனத்தை ஒத்துப் பார்க்கவும்):

1) தேவ வசனம்   2) கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி ;  இந்த இரண்டு விஷயங்கள் தாம் போலிச் சபையிலிருந்து உண்மை சபையைப் பிரித்து வெளிக்காட்டுகின்றன.

**வெளி 1 : 10.**
**கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.**

**கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தின் முழுமையிலும் யோவானின் பார்வை, **நம்முடைய காலத்தில் நின்று கொண்டு சம்பவங்களை நோக்குவதாகவே உள்ளது.** இதைத் தான் பவுலும், பேதுருவும் தம் நிரூபங்களில் "கர்த்தருடைய நாள்" என்று வலியுறுத்துகின்றனர். சுவிசேஷ யுக முழுவதுமான வரலாற்றினை, ஒரு சம்பவம் மற்றொரு சம்பவத்தை நோக்கி எப்படிச் செல்கிறது என்பதை, யோவான் தமது கோணத்தில் **பின்னாக திரும்பி பார்த்து** விவரிக்கிறார். நிழலாகிய யோவானால் அடையாளப்படுத்தப்படும் சபையாகிய நாம் **இக்காலத்தில் பின்னாக திரும்பி பார்த்து,** சுவிசேஷ யுக முழுமையையும் அறிந்து கொள்ளக்கூடியவர்களாயிருக்கிறோம். (வெளி 17 : 3ம் வசனத்தை ஒத்துப் பார்க்கவும்). யோவான் நம்முடைய காலத்தில் ஆவியில் (மனதில்) நிற்பதாக (மாம்சத்தில் அல்ல) உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

**அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன் :**

இந்த சத்தம் இயேசுவினுடையது. (வசனம் 12, 13) இது பெரிதான சத்தம். ஏனெனில் இது தெளிவாகவும், அதிகார தொனி கொண்டதுமானது. (மத் 7 : 28, 29). இச்சத்தம் யோவானுக்கு பின்னாக கேட்டது. ஏனெனில், யோவானின் பார்வையில், நிகழ்ந்து முடிந்து விட்ட வரலாற்றை கர்த்தருடைய நாளில் இருந்து கொண்டு எல்லாவற்றையும் அறிவிக்கப்படுகிற விதமாக உள்ளது. உண்மையாகவே பார்த்தால், யோவான் கேட்டது ஏற்கனவே தொடங்கி விட்ட விஷயமாகும். அதாவது, சுவிசேஷ யுகம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

எக்காள சத்தம் **போல** இருந்தது. வெளிபடுத்தல் ஆகமத்தில் ஏழு எக்காளங்கள் உள்ளன. இது இங்கு குறிக்கப்படுவது வேறொரு எக்காளம் அல்ல ! இது எக்காளச் சத்தம் **போல** உள்ளது.  இந்த பெரிதான சத்தம் **தெளிவானதாகவும்** உள்ளது; ஏனெனில், இது ஒரு **செய்தி** ஆகும்; இது ஏழாம் எக்காளத்தைப் **போல** உள்ளது. (தேவ எக்காளம் 1 தெச 4 : 16). ஏனெனில், இந்த எக்காள சத்தம் **கர்த்தருடைய நாளில்** எல்லாவற்றையும் தெளிவாக்குகிறது; இதுவே 'இரகசியம் முடிவு பெறுவதாகும்'. (10 : 6).

இவ்வாறாக, கர்த்தருடைய நாளிலிருந்து வெளிப்படுத்தல் ஆகம செய்திகள் (தரிசன காட்சி விளக்கங்கள்) அறிந்துணரப்படுகின்றன.

**வெளி 1 : 11.**

**அது: நான் அல்பாவும் ஒமேகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்; நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது .**

யுக முடிவிலிருந்து (கர்த்தருடைய நாளிலிருந்து) நோக்கிப் பார்க்கும் வகையில், வரலாற்றை முன்னதாகவே எழுதும்படி இயேசுவினால் யோவானுக்கு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. இங்கு குறிக்கப்பட்டுள்ள ஏழு சபைகளும் ஆசியா மைனர் பகுதியில் உண்மையில் இருந்தவையாகும். ஆனால் அவைகள் இங்கு அடையாள பாஷையில் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. இந்த ஏழு சபைகளும் சுவிசேஷ யுக காலப்பகுதி முழுமையையும் அடையாளப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். ஏனெனில், இந்த பெயர்கள் அனைத்தும், சபை இயங்கும் காலங்களில் நிலவும் ஏழு விதமான நிலைமைகளுக்கு பொருத்தமாக அமைந்துள்ளது. ஏனெனில், வேதாகமத்தில் "இடங்கள்" என்பது "நிலைமைகள்" என்று அடையாள பாஷையில் குறிக்கப்படுகின்றன. இந்த ஏழு சபைகளும் கடிகார முள் செல்லும் திசையில் இடமிருந்து வலம் செல்லும் வண்ணம், ஒரே பாதையில் இருந்தன, இது வரலாற்றில் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைக்கிரம அடிப்படையில் நிகழ்பவைகளுக்கு அடையாளமாக இருப்பதைக் காட்டுகிறது. இந்த பாதையில் நாம் பயணிக்கும் போது, சரியான வரிசைக்கிரமத்தில் ஒவ்வொரு சபையையும் ஒன்றன் பின் ஒன்றாக அடையலாம்.

யோவான் நமக்கு (ஏழு காலப்பகுதிகளைக் கொண்ட சபைக்கு) தான் எழுதிய செய்திகளை அனுப்பியுள்ளார்.

**வெளி 1 : 12 .**

**அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்க திரும்பினேன்: திரும்பின போது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும் .**

**அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்க திரும்பினேன் :**

நம் வாழ்க்கையின் திசையை மாற்றி அமைத்து, இயேசு நம்மிடம் சொல்வதை உற்று நோக்க வேண்டும். (வசனம் 10). அறுவடை கால சபை பின்னால் திரும்பி, கடந்த காலத்தில் நடந்தவற்றைப் பார்த்து, இயேசுவின் தூதை பகுத்துணர வேண்டியுள்ளது.

சொல்லர்த்தமாகப் பார்த்தால், யோவான் (நம் காலத்தில் இருந்து கொண்டு) கடந்த காலத்தின் தரிசனங்களை பின்னால் திரும்பிப் பார்த்து, அதை எழுதியவராக காணப்படுகிறார்.

**திரும்பின போது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும் :**

நாம் பின்னால் திரும்பி (கடந்த காலத்தை) பார்க்கும் பொழுது, ஏழு காலப்பகுதிகளிலும் வரலாற்று அனுபவங்களின் வாயிலாக இயங்கிய சபையைத் தெளிவாகப் பார்க்கிறோம். ஒவ்வொரு காலப்பகுதியிலும் தேவனால் நியமிக்கப்பட்ட ஒளி சபைக்கு அளிக்கப்படுகிறது. இவ்விதம் ஏழு காலப்பகுதிகளிலும் கிடைக்கப் பெற்ற ஒளி சங்கமித்து, ஒட்டு மொத்தமாக சுவிசேஷமாக உருவெடுக்கிறது.

**வெளி 1 : 13.**

**அந்த ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரையும் கண்டேன்.**

**அந்த ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே :**

ஏழு சபைகளையும் (குத்து விளக்குகள்) இயேசு கண்காணிக்கிறார் என்பதை இது உணர்த்துகிறது. ஏழு சபைகளுக்கும் இயேசு தம்மை வெளிப்படுத்துவதின் முக்கியத்துவத்தை பின்வரும் தன்மைகள் சுட்டிக்காட்டுகின்றன.

**மனுஷ குமாரனுக்கு ஒப்பானவரையும் கண்டேன் :**

இயேசு ஒரு மனுஷன் என்பதை வலியுறுத்தும் விதத்தில் இந்த வசனம் தெரிவிக்கிறது. அவருடைய அனுபவங்களும் இரக்கங்களும் நமக்கு நன்மை அளிக்கின்றன. இது இயேசு எப்படி தோற்றமளித்தார் என்பதை குறிக்காமல், சபைகளுக்குரிய செயல்பாடுகளில் எவ்விதம் இருக்கிறார் என்பதை தெரிவிக்கிறது.

**நிலையங்கி தரித்து :**

இது ஆரோனின் உடையைப் பற்றிய விவரிப்பு போல உள்ளது. அதாவது, நமக்கு பிரதான ஆசாரியராக செயல்படுகிறார் என்பதை இது காட்டுகிறது.

**மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த :**

"கச்சை" என்பது ஊழியத்தைக் குறிக்கிறது. "பொற் கச்சை" என்பது தெய்வீக ஊழியத்தை அடையாளப்படுத்துவதாக உள்ளது. மகிமையடைந்த நிலையிலும் இயேசு தம் சொந்த விருப்பத்தின்படி, தம் பிதாவுக்கு ஊழியக்காரராகவே இருக்கிறார் ."கச்சை" என்பது பொதுவாக இடுப்பைச் சுற்றிக் கட்டப்படுவதாக இருக்கும். ஆனால், இது மார்பருகே கட்டியிருப்பதாக காணப்படுவது, **மனதார** (இதய உள்ளுணர்வுடன்) ஊழியம் செய்வதை உணர்த்துகிறது.

**வெளி 1 : 14.**
**அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது: அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலையைப் போலிருந்தது .**

**அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது :**
(தானியேல் 7 : 9 ம் வசனத்தைப் பார்க்கவும்)

"சிரசு" என்பது சிந்தனைகளையும், எண்ண ஓட்டங்களையும், தத்துவங்களையும் அடையாளப்படுத்துகிறது. "வெண்முடி" (நரை மயிர்) ஆழ்ந்த மரியாதையைக் குறிக்கிறது. இயேசுவை நாம் போற்றிப் பாராட்டுவது, அவரிடமிருந்த ஆட்டுக்குட்டிக்கு ஒத்த தாழ்மையினால் நமக்காக தம்மையே பலி கொடுத்த குணாதிசயம் தான் ! இது வெண்மையான உறைந்த மழையாக உருவகப்படுத்தப்படுகிறது.

**அவருடைய கண்கள் அக்கினி ஜூவாலையைப் போலிருந்தது :**

"கண்கள்" ஞானத்தைக் குறிக்கின்றன. "அக்கினி" என்பது நீதியுள்ள நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. இரண்டும் சேர்ந்து, அவருடைய **ஞானமுள்ள நியாயத்தீர்ப்பு** நமக்கு கிடைக்கிறது. இந்த "தெளிந்த புத்தி" (ஆய்வுணர்வு), சுவிசேஷ யுகத்தின் எல்லா இடர்ப்பாடுகளையும், எதிர்பாராத நிகழ்வுகளையும் பகுத்துணர்ந்து, எல்லா கழிவுகளையும் எரித்துப் போட வல்லது ஆகும்.

**வெளி 1 : 15.**

**அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது. அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது .**

**அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது :**

இயேசு பூமியிலிருந்த போது பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். தமது நீதியின் மூலம் அவற்றை சகித்துக் கொண்டு, ஒரு **பூரண மனுஷனாக** (பிரகாசமான வெண்கலம் போன்று) விளங்கினார். எபி 4 : 15.

**அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது :**

இயேசு யுக முழுவதிலும் தம்முடைய சபையினிடத்தில் நேரிடையாக பேசவில்லை. பல தூதர்கள் மூலம் பேசி வந்தார். இயேசு, யாரை போதனையாளர்களாக உபயோகப்படுத்துகிறாரோ, அவர்களால் சபை பயிற்றுவிக்கப்படுகிறது. ரோமர் 10 : 14, 15.

**வெளி 1 : 16.**

**தமது வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.**

**தமது வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்;**

**"வலது கரம்"** என்பது ஆதரவையும் தயவையும் குறிக்கிறது

**"ஏழு நட்சத்திரங்கள்"** என்பது சபையின் ஏழு காலப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் பிரதான தூது கொடுப்பவர்களை அடையாளப்படுத்துகிறது.

**"இயேசு ஏந்திக் கொண்டிருப்பது" :** இந்த தூதர்கள் தம் ஊழியங்களை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து வழி நடத்துவதை அடையாளப்படுத்துகிறது.

**அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது :**

"அவருடைய வாயிலிருந்து" = அவருடைய போதனைகளிலிருந்து.

"இருபுறமும் கருக்குள்ள பட்டயம்" = தேவ வசனம் (வேதாகமம்). எபேசி 6 : 17; எபி 4 : 12.

தேவனுடைய வார்த்தை இருதயத்தின் நினைவுகளைப் பகுத்தறியத் தக்கதாய் இருந்து, பரிசுத்தவான்களைப் பிரித்தெடுக்கும் தன்மை உடையது. சங்கீதம் 149 : 6 - 8.

**அவருடைய முகம் வல்லமையாய் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது :**

சூரியன் : சுவிசேஷம்;
முகம் : ஆதரவு.

இயேசுவின் ஆதரவு தம்முடைய சபையை ஒளி வீசுகிற சூரியனைப் போன்று பிரகாசிக்கச் செய்து (சத்திய அறிவில் தேர்ச்சி பெறச் செய்து) உற்சாகப்படுத்தி வளர்ச்சி அடையும்படி செய்கிறது.

வெளி 1 : 12 - 17ம் வசனங்களிலுள்ள தரிசனக் காட்சி யோவானை பெரிதும் கலக்கமடையச் செய்து, கீழே விழச் செய்தது.

**வெளி 1 : 17.**

**நான் அவரைக் கண்ட போது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்: அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என் மேல் வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன் .**

தரிசனக் காட்சியைக் கண்ட யோவானின் பதிலுணர்வை இது வெளிப்படுத்துகிறது. "யோவான் வகுப்பார்" என அடையாளப்படுத்தப்படுபவர்கள் தம் மாம்சீக வாழ்வில் தம்மை முழுமையான ஜீவ பலியாக (செத்தவனைப் போல) இயேசுவின் பாதத்தில் (பணிந்து வணங்கும்படியாக) ஒப்புக் கொடுக்கிறதை இந்தக் காட்சி உணர்த்துகிறது.

**அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என் மேல் வைத்து :**

**வலது கரம் :** ஆதரவையும் ஒத்தாசையையும் செயற்படுத்தும் நிலை; இந்த கரம் நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருக்கிறது; நம்முடைய அர்ப்பணிப்பும், தியாகங்களும் இயேசுவினுடைய ஆதரவை நம்மிடம் தக்க வைத்துக் கொள்கின்றன.

**பயப்படாதே :** இயேசுவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள உறவு, புற சமயத்தினர் தங்கள் தெய்வங்களின் மேல் கொண்டுள்ள பயம் போன்று அல்ல. (ஏசாயா 29 : 13). ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட தூதுகள் முழுமையையும் பற்றிய தெளிவான அறிவு இல்லாதவர்கள் தாம், பயம் கொள்ள ஏதுவாகும்; ஆகவே, இது போன்ற தவறான மனப்போக்கு கொள்ள வேண்டாம் என எச்சரித்து, இயேசு யோவான் வகுப்பாரைப் பார்த்து, "பயப்படாதே" என்று உரைக்கிறார்.

**நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன் :**

சத்தியத்திற்கும் அதன் நடைமுறைக்கும் முதலும் முடிவுமான அதிகாரம் உடையவர் இயேசு ஒருவரே. ஆகவே, எந்த தேவையைக் குறித்தும் ஐயப்பட வேண்டியதில்லை., யோவான் வகுப்பார் எதற்கும் பயப்படத் தேவை இல்லை.

**வெளி 1 : 18.**

**மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்: நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.**

**மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன் :**

மரணத்திலிருந்து ஜீவன் பெறும் **நம்பிக்கையை மட்டும்** இந்த வசனம் நமக்கு ஊட்டவில்லை. நமக்காக தம்மை பலியிட்டு, மரணமடைய இப்பூவுலகில் இயேசு வந்தார் என்ற உண்மையை தெரிவிக்கும் வகையில் இது உள்ளது.

"இதோ" என்ற சொல், "இயேசு மரித்தார்; இப்பொழுது உயிரோடிருக்கிறார்;" என்பதை மட்டும் சொல்லாமல், அவருடைய தியாக மரணம் மனுஷரை நித்திய ஜீவனுக்கு வழி நடத்துகிறது என்ற உண்மையை மனதில் கொள்ள வேண்டும் என்ற தொனியில் உள்ளது.

**நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் :**

"மரணம்" & "பாதாளம்" என்ற இரண்டு சொற்களும் ஆதி 2 : 17ல் காணப்படும் சாபத்தைக் குறிப்பதாக உள்ளது. "நீ சாகவே (மரணம் - death) சாவாய் (பாதாளம் - hades)" என்று குறிப்பிடப்படுகிறது.

மனுக்குலத்தார் அனைவரும் இருந்த கல்லறையிலிருந்தும், செத்த நிலையிலுள்ள மனுஷர் யாவரையும் விடுதலையாக்கும் திறவுகோல்களை இயேசு வைத்துக் கொண்டிருக்கிறார். அவர் ஜெயம் பெற்றது அவருக்கு, நித்திய ஜீவனை அளித்ததுமன்றி, கல்லறையிலிருந்தும், செத்த நிலையிலுமிருந்தும் மீள, இயேசு கிறிஸ்து திறவுகோல்களை வைத்திருக்கிறார். இது எவ்வளவு ஆசீர்வாதமான காரியம் ! (1 கொரி 15 : 29)

**வெளி 1 : 19.**

**நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது .**

"எழுத வேண்டும்" என்ற கட்டளை யோவானுக்கு பிறப்பிக்கப் படுகிறது; அடையாளமான யோவான் வகுப்பாருக்கும் "கவனமாய் ஆழ்ந்து ஆராய வேண்டும்" என கட்டளையிடப்படுகிறது.

[வெளி 10 : 4ல் இதற்கு மாறாக, "எழுத வேண்டாம்" எனச் சொல்லப்படுகிறது; அதாவது, "கவனத்தில் கொள்ள வேண்டாம்; அதில் உங்களை சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டாம்" என்று அடையாளப்படுத்தப்படுகிறது].

சொல்லர்த்தமாக யோவானுக்கு “எழுது” என்று கட்டளை பிறப்பிக்கப்படுகிறது; அதாவது, அடையாளப்பூர்வ யோவான் வகுப்பாருக்கு “கவனத்தில் கொள்” என்று அறிவுறுத்தப்படுகிறது. ஏனெனில், யோவான் அப்போஸ்தலனைவிட, யோவான் வகுப்பாருக்குத் தான் வெளிப்படுத்தல் செய்திகள் முக்கியமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கின்றன.

தம்மை பலியிட்டு, அதன் மூலமாக அனைவருக்கும் ஜீவனை அளிக்கும் பாதையை திறந்து விட்ட பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்து சர்வ அதிகாரமுள்ளவராய் ஏழு காலப்பகுதிகளிலும் சபையை கண்காணித்து வருகிறார்; இயேசு மனிதனாக இருந்த போதும், வெற்றி சிறந்து, இனி சம்பவிக்கும் காரியங்களை வெளிப்படுத்தும் போதும், தரிசன காட்சிகளை கர்த்தருடைய நாளிலிருந்து பின்னோக்கிப் பார்த்து, கவனமாய் உற்று நோக்கி செயல்பட யோவான் வகுப்பார் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளி 1 : 20.**

**என் வலது கரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் ரகசியத்தையும் , ஏழு பொன் குத்து விளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்து விளக்குகளும் ஏழு சபைகளாம்.**

தேவ வசனங்களைத் தேடுகிறவர்களுக்கு மங்கலான தேவத்திட்டங்களை வெளியரங்கமாக்க இயேசு சித்தமுள்ளவராயிருக்கிறார்; இது, யோவான் எழுதியிருப்பவைகளையும், அவற்றை அடையாளப்பூர்வமான யோவான் வகுப்பார் கருத்திற் கொண்டு, கவனமாய் ஆழ்ந்து ஆராய்வதையும் அடையாளப்படுத்துகிறது. ஒவ்வொரு ரகசியமும் பின் வரும் காலங்களில் நம்பிக்கையும், ரகசியங்களை வெளிப்படுத்தும் எதிர்பார்ப்புகளையும் இயேசு இந்த வசனத்தில் அளிக்கிறார். அந்த அடிப்படையில் தான், இந்த முதல் அதிகாரத்தில், சில அடையாள பாஷையில் குறிக்கப்பட்டவைகளை இயேசு வெளிப்படுத்துகிறார்.

**ஏழு நட்சத்திரங்கள்** : ஏழு தூதர்கள். சபையின் ஏழு காலப்பகுதிகளிலும் ஊழியம் செய்யும் ஏழு தூதர்கள்;

**ஏழு பொன் குத்துவிளக்கு தண்டுகள் :**

இது சபையின் ஏழு காலப்பகுதிகளைக் குறிக்கிறது; சூரியனைப் போல ஒளிக்கிரணங்களுடன் எழும் இயேசு வருகை வரையில், உலகத்தாருக்கு வெளிச்சம் கொடுக்கக் கூடிய வகையில் உள்ளன.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

## எபேசு சபை

## (வெளி 2 : 1 - 7)

**வெளி 2 : 1.**
**எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் :**

புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதியை எழுதிய பவுல் அப்போஸ்தலன் எபேசு சபையின் தூதன் ஆவார். அவருடைய எழுத்துக்கள் பெரும்பாலும் பல்வேறு சபைகளுக்கு நிருபங்களாக எழுதப்பட்டவையாகும். புற ஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் கிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கிறதற்காக இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக பவுல் அப்போஸ்தலன் விளங்கினார். (அப்போ 9 : 15) எல்லா சபைகளைக் குறித்த கவலை தன்னை நாள்தோறும் நெருக்கினதாக 2கொரி 11 : 28ல் கூறினார். பவுல் அப்போஸ்தலன் தான் மேற்கொண்ட இரண்டு மாறுபட்ட ஊழியங்களை 1 கொரி 7 : 6ல் விவரிக்கிறார். தேவ ஆவியினால் நிரம்பிய அப்போஸ்தலன் என்ற முறையிலும், சபைக்கு அறிவுரை வழங்கும் தெளிந்த ஞானம் கொண்ட தூதன் என்ற முறையிலும் செயல்பட்டார்.

“எபேசு“ என்பதற்கு “விரும்பத்தக்க“ , “முதன்மையான“ அல்லது “அனுமதி“ என்று கிரேக்க மொழியில் பல அர்த்தங்கள் உண்டு.

“அனுமதி“ என்ற பொருள் , எபேசு சபையை எவ்விதம் சம்பந்தப்படுத்துகிறது? பவுல் அப்போஸ்தலன் ஆதி சபையில் எவற்றை கடைபிடிக்க வேண்டும் என்று “அனுமதித்ததை” , அதாவது, வரையறைப்படுத்திய காலப் பகுதியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

“முதன்மையான“ என்ற பொருள், வரிசைக்கிரமத்தின்படி ஏழு சபைகளில் எபேசு சபை “முதன்மையாக” இருந்ததைக் குறிப்பதாக இருக்கிறது.

“விரும்பத்தக்க“ என்ற பொருள், அப்போஸ்தலர்கள் அனைவரின் பிரசன்னமும், பரிசுத்த ஆவியின் அபரிமித வரங்களும் இந்த சபையின் அடித்தளமாகவும், ஸ்திரமாகவும் அமைந்த நிலையை கருத்திற் கொண்டு, எபேசு சபையின் காலப் பகுதி “விரும்பத்தக்கதாய்” இருந்ததில் ஐயமில்லை.

வெளி 2 : 1 - 7 ல் எபேசு சபை சம்பந்தப்பட்ட எல்லா செய்திகளும் எபேசு சபையின் தூதனுக்குச் சொல்லப்படுவதாக உள்ளது. அதை தொடர்ந்து மற்ற ஆறு சபைகளுக்கு சொல்லப்படும் செய்திகள் அந்தந்த சபையின் தூதனுக்கு சொல்லப்படும் விதத்திலேயே உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு தூதர்கள் சபையில் செயல்பட வேண்டியதாக உள்ளது.

**ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக் கொண்டு :**

‘ஏழு நட்சத்திரங்கள்’ என்று அடையாள பாஷையில் சொல்லப்படும் ஏழு சபைகளின் தூதர்களை கிறிஸ்து தமது வலது கரத்தில் ஏந்திக் கொண்டிருக்கும் நிலை, கிறிஸ்துவின் வழிநடத்துதலும், பாதுகாப்பும், தயவும் தூதர்கள் பெற்றிருப்பதை உணர்த்துகிறது.

ஆதிச்சபையில் பெரும்பாலோர் யூதர்களாயிருந்தனர். பல நூற்றாண்டுகளாக அவர்களை வழி நடத்த யூதப் பிரமாணத்தை அறிந்த பிரதான ஆசாரியர்கள் இருந்தனர். ஆனால், நியாயப்பிரமாணத்திற்குப் பதிலாக கிறிஸ்துவின் பிரமாணம் உருவான

போது, அவற்றை சரியாக புரிந்து கொள்ள ஆதிச்சபையின் காலப் பகுதியிலும், அதைத் தொடர்ந்த மற்ற காலப் பகுதிகளிலும் சம காலத்திய தூதர்கள் தேவைப்பட்டனர். முதலாம் சபையின் தூதனான பவுல் அப்போஸ்தலன் தேவ ஆவியினால் ஏவப்பட்டு, பல காரியங்களைக் குறித்து முதலாம் சபையினருக்கு போதித்து வழிநடத்தினார். உதாரணமாக, அவர் "விவாகம்" பற்றி குறிப்பிட்டு, அதன் கருப்பொருளை விஸ்தாரமான முறையில் மிகத் தெளிவாக ஆதிச் சபையின் தூதனாக சபை அங்கங்களுக்கு கற்பித்தார். (1 கொரி 7ம் அதிகாரம்).

**ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது :**

யூத முறைமைகளுக்குப் பதிலாக புதிய முறைமை செயல்பட ஆரம்பமானதை இந்தக் காட்சி விளக்குகிறது. அக்காலத்தில் கிருபாசனத்தின் மேல் ஷெகினா ஒளியில் **யாவே** தேவனுடைய பிரசன்னம் வெளிப்பட்டது. இப்பொழுது, ஆசரிப்புக் கூடாரமோ அல்லது தேவாலயமோ இல்லை. ஆனால், குத்து விளக்குகளின் மத்தியில் கிறிஸ்து இப்பொழுது உலவுகிறார். சபையின் எல்லா காலப் பகுதிகளிலும் கிறிஸ்துவின் பிரசன்னம் தொடர்ந்து இருப்பதை குத்து விளக்குக் காட்சி உணர்த்துகிறது. அக்காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்த ஆசாரியர்களுக்கு ஷெகினா ஒளியைப் பார்க்க இயலாதிருந்தும், தேவனுடைய பிரசன்னம் இஸ்ரவேலர்களுக்கு ஜீவாதாரமாக விளங்கினது.

ஒரு தண்டு உள்ள ஏழு விளக்குகளுக்குப் பதில், ஏழு விளக்கு தண்டுகள் இருப்பது தெரிகிறது. சபையின் ஒவ்வொரு காலப் பகுதியும் விளக்கின் அஸ்திபாரமாக இருப்பதை இது உணர்த்துகிறது. ஒவ்வொரு காலப் பகுதியிலும் உள்ள விளக்கு வெளிச்சம், பிரகாசத்திலும், அளவிலும் வித்தியாசப்பட்டிருக்கும். ஆனாலும், சபை தெய்வீக ஒத்தாசையுடன் ஒவ்வொரு காலப் பகுதியிலும் பொன்னாலான (தெய்வீக) விளக்குத் தண்டுடன் இணைந்திருக்கும். (1 தீமோ 3 : 15).

**வெளி 2 : 2.**
**உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும் , அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்.**

**உன் கிரியைகளையும் :** எல்லா சபைகளுக்குரிய செய்திகளும் இவ்வாறு ஆரம்பிக்கின்றன. கிறிஸ்துவின் பிரசன்னம் நம் வாழ்வின் எல்லா தருணங்களிலும் நம்மைக் கண்காணிக்கிறது என்பது இங்கு உணர்த்தப்படுகிறது. (மத் 28 : 20) கிரியைகள் தான் அவசியம் என்பதும், கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என்றும் யாக்கோபு கூறுகிறார். (யாக் 2 : 20).

**உன் பிரயாசத்தையும் :** எபேசு சபை மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிய சபையாகும். நியாயப்பிரமாணத்திற்குப் பதிலாக புது பிரமாணத்திற்குள் நுழைந்திருக்கும் ஆதி சபையாருக்கு புற ஜாதிகளை எவ்விதம் வரவேற்று, அவர்களை எப்படி வழி நடத்த வேண்டும் போன்ற தேவையான அம்சங்களில் பிரயாசப்படவும், போராடவும் வேண்டியிருந்தது. சபை அங்கங்கள் விரைவாக பெருகி வளர்ந்து வரும் இத்தருணத்தில், அதற்கு ஈடு கட்டும் விதமாக அதிகம் பிரயாசப்பட வேண்டியிருந்தது.

**உன் பொறுமையையும் :** ஆதிச்சபையினர் யூதர்களிடமிருந்தும், பிறகு ரோமர்களிட மிருந்தும் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகினர். இருப்பினும், வசனம் 3ல் குறிப்பிட் டுள்ளபடி, சபையினரின் பக்தி வைராக்கியம் தளர்ச்சியடையாமல் இருந்தது.

**நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும் :** ஆதிச்சபையின் காலப் பகுதியில் பொல்லாதவர்கள் முழுமையாக செயல்படாமல் இருந்ததற்கு காரணங்கள் உண்டு. அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலப் பகுதியாதலால், பொல்லாதவர்களை அவர்கள் இனங் கண்டு கொண்டனர். வெளி 21 : 14; 12 : 1.

**அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் :**
ஆவியை பகுத்தறியும் சக்தி, சபை பரிசுத்தவான்களிடம் இருந்ததால், அப்போஸ்தலரல்லாதவர்களை எளிதில் கண்டுணர முடிந்தது; 1கொரி 12 : 10. சபையின் இந்த காலப் பகுதியில் பொய்யான அப்போஸ்தலர்கள் இருந்தனர் என்பதை அப் 20 : 29, 30; 2தெசெ 2 : 7; கலா 1 : 1; 2கொரி 11 : 3ம் வசனங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது; உண்மை அப்போஸ்தலர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்த முடிந்தது. (வெளி 21 : 14; 12 : 1).

**வெளி 2 : 3.**
**நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.**

என் (கிறிஸ்துவின்) நாமத்தினிமித்தம் ஆதிச்சபையினர் பிரயாசப்பட்டதாக இவ்வசனத்தில் குறிக்கப்படுவது, இயேசுவுக்கும், அவர்களுக்கும் உள்ள நெருங்கியத் தொடர்பை உணர்த்துகிறது. கிறிஸ்துவின் சிந்தை மற்றும் அவருடைய திட்டத்தையும் வெளிப்படுத்துவதன் மூலம் முதலாம் சபையில் ஆதி கால அன்பு விளங்குகிறது. 1 கொரி 2 : 2ல் பவுல் அப்போஸ்தலன் இதையே வலியுறுத்துகிறார்.

**வெளி 2 : 4 , 5.**
**ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக ; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்திினின்று நீக்கி விடுவேன்.**

ஆதிச்சபையைப் பற்றிய தற்காலிகமான ஒரு குறைபாடு உண்டு. 1 தீமோ 6 : 20ல் பவுல் அப்போஸ்தலன் கூறுவதிலிருந்து, சீர்கேடான வீண் பேச்சுகளும், ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களும் ஆதிச் சபையில் நிலவியதாகத் தெரிகிறது. கலா 1 : 6 - 9ல் கலகக்காரராகிய சிலர் கிறிஸ்துவின் சுவிஷேசத்தைப் புரட்டி, வேறொரு சுவிஷேசத்தை சபையில் நுழைக்க முயன்றதையும் பார்க்கிறோம்.

ஆதிச்சபையில் சிலர் வீண் பேச்சுகளிலும், தர்க்கங்களிலும், கொள்கை பேதங்களிலும் ஈடுபட்டதைத் தொடர்ந்து, சபையில் பிரிவினைகள் ஏற்பட்டு, ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விலகியதாக இயேசு கூறுகிறார். இந்த நிலையிலிருந்து மாறி மனந்திரும்பாவிட்டால், உன் விளக்குத்தண்டை அதனிடத்திினின்று விலக்கிப் போடுவேன் என்று எச்சரிப்பு விடுக்கிறார். இந்த எச்சரிப்பு சபையிலுள்ள அங்கங்களுக்கு தனித்தனியே கொடுக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டால், மனந்திரும்பாதவர்களிடமிருந்த ஒளி மங்கி விடும் என்று உணர்ந்து கொள்ளலாம். இதைத் தான் பவுல் அப்போஸ்தலன் 1கொரி 10 : 12ல் தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கக் கடவன் என்று சொல்லுகிறார்.

ஆனால், இந்த எச்சரிப்பு சபைக்கு உரியதாக எடுத்துக்கொண்டால், ரோமர்கள் மூலம் அடக்குமுறைகள் கொண்டு வரப்பட்டு, எபேசு சபையின் காலப் பகுதி முடிவடைந்து, அடுத்த சிமிர்னா சபையின் காலப் பகுதி (கசப்பு) துவக்கம் பெறுவது சூசகமாக தெரிவிக்கப்படுகிறது எனலாம்.

**நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய். இது உன்னிடத்திலுண்டு :**

முதலாம் சபை நிக்கொலாயர்களின் கிரியைகளின் மீது வெறுப்பு கொண்டிருப்பதற்காகப் பாராட்டப்படுகிறது. இயேசு கொண்டிருந்த வெறுப்பு மனுஷர்கள் மேல் அல்ல ! அவர்களின் கிரியைகளின் மேல் தான் வெறுப்பு கொண்டார். நாம் கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டுமெனில், நீதியின் மேல் அன்பு கொள்வது போல் அக்கிரமத்தின் மீது வெறுப்பு கொள்ள வேண்டும்.

"நிக்கொலாயர்கள்" என்ற பதம் "மற்றவர்களை அடக்கி ஆளுபவர்கள்" "மயக்கி வசியப்படுத்துபவர்கள்" என்று பொருள்படும். சபையில் அங்கங்களை ஆளும் மனோபாவம் (அக்கிரமத்தின் இரகசியம்), பவுல் அப்போஸ்தலன் காலத்திலேயே தலையெடுக்க ஆரம்பித்தது. இந்த மரபு தான் "குருமார்கள் -- பாமர மக்கள்" என்ற நிலைக்கு உரு பெற்றது. இந்த ஆளுமை மனோபாவம் முதலாம் சபையில் முழுவதுமாகக் களைய முடியவில்லை. (1 பேதுரு 5 : 8). இது இயேசுவின் போதகத்திற்கு முற்றிலும் மாறுபாடான விஷயமாகும். (மத் 23 : 8). இந்த பிரச்சினைக் குறித்து யோவான் தமது மூன்றாம் நிருபத்தில் விவரிக்கிறார்.

**வெளி 2 : 7.**
**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் :**

இந்த சொற்றொடர் ஏழு சபைகளுக்கும் சொல்லப்படுகிறது. வசனத்தைக் கேட்க மனதாயிருப்பவர்களை தேவ ஆவி வழி நடத்தும் என இயேசு கூறுகிறார். (யோவான் 10 : 10 - 13).

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது :**

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு" கிடைக்கப்போகும் பலன்கள் ஏழு சபைகளின் ஒவ்வொரு காலப் பகுதிக்கும் வெவ்வேறாக குறிக்கப்பட்டுள்ளன. எபேசு சபைக்குச் சொல்லப்பட்ட இந்த வாக்குத்தத்தம் உலக ஜனங்களுக்கு உரியதாக இருப்பது போலத் தோற்றமளிக்கிறது. இது ஏதேன் தோட்டத்து ஜீவ விருட்சத்தைக் குறிக்கிறதில்லை. "ஜீவ விருட்சம்" பற்றி வேதாகமத்தில் மூன்று இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது :

1. ஏதேன் தோட்டத்தின் ஜீவவிருட்சம்; ஆதி 3 : 22.
2. எபேசு சபை தூதுவில் சொல்லப்படும் ஜீவவிருட்சம்; வெளி 2 : 7.
3. பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம்; வெளி 22 : 2.

ஏதேன் தோட்டத்து ஜீவவிருட்சம் உண்மையான விருட்சம். அதன் கனியைப் புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடிக்கு மனுஷன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப் பட்டான்.

வெளி 22 : 2ல் உள்ள ஜீவவிருட்சம், உலக ஜனங்கள் அனைவருக்கும் ஜீவனைத் தரும் "திருச்சபையினருக்கு" அடையாளமாகக் குறிக்கப்படுகிறது. திருச்சபை உண்மையில் விருட்சமில்லை. இது எங்கும் நடப்படவில்லை; அடையாள பாஷையில், திருச்சபையாகிய விருட்சம் தேவனுடைய பரதீசாகிய பரலோகத்தில் நடப்படுகிறது. எபேசு சபைக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் (வெளி 2 : 7) இதே பாங்கிலேயே "ஜீவவிருட்சம்" என்ற பதம் உருவகப்படுத்தப்படுகிறது. ஜெயங் கொள்ளுகிறவர்கள் பிதாவின் பிரசன்னத்தினால் நித்திய ஜீவன் அருளப்பட்டு, தேவனுடன் உறவைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். இந்த ஜீவவிருட்சம் உண்மையான விருட்சம் அல்ல ! இது ஆவிக்குரிய அடையாள பாஷையாகும். திரைக்கு அப்பால் இயேசுவுடன் திருச்சபையார் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள்.

ஏதேனில் மனுஷ விழுகையைத் தொடர்ந்து, ஜீவனைத் திரும்ப பெற முற்றிலும் இயலாத நிலை இருந்தது. யூத பிரமாணம் மரணத்தை விடுவிக்கவில்லை. 4000 வருடங்களாக நிலவி வந்த இந்த இயலாமையைத் துடைத்தெறிய, இந்த வாக்குத்தத்தம் சபையில் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அளிக்கப்பட்டது. தேவனுடைய தோட்டத்தில் ஜீவனை அடையும் புதிய ஜீவ வழி ஆயத்தமாகி உள்ளது. ஜெயங்கொள்ளுகிறவர்கள் பரலோகத்தில் அழியாமையைத் தரித்துக் கொள்வார்கள். அதாவது, தேவ சமூகத்தில் இணக்கமாயிருப்பார்கள்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## எபேசு சபை உவமை

### விதைப்பவன் மத் 13 : 3 - 9.

வெளி 2, 3ம் அதிகாரங்களின் முன்னோட்டமாக , மத்தேயு 13ம் அதிகாரத்திலுள்ள ஏழு உவமைகள் உள்ளன. சபைகளின் ஏழு காலப் பகுதிகளைச் சார்ந்த வரலாற்று சம்பவங்களுக்கும், ஏழு சபைகளுக்கும் ஏதோ ஒரு நெருங்கிய சம்பந்தம் உள்ளதாகத் தெரிகிறது. எபேசு சபை காலப் பகுதியின் அனுபவங்களின் சிறப்பு குறிப்புரையாக "விதைப்பவன்" உவமை விளங்குகிறது. 2வது உவமையை (கோதுமையும், களையும்) போல் இல்லாமல், நல்ல விதைகள் (பரலோக இராஜ்ய செய்திகள்) மட்டுமே விதைக்கப்படுகின்றன. ஆனால், பல்வேறு நிலங்கள் விதைகளைப் பெறுகின்றன.

1) மத் 13 : 4ல் விதைகளை பறவைகள் வந்து பட்சித்துப் போட்டன. நிக்கொலாயர்கள் வழியருகே விழுந்த விதைகளாகிய சிலரை மயக்கி, வசீகரித்து வழி விலகச் செய்தனர். பரிசுத்த ஆவி பெறாத சபை அங்கங்கள் இந்த அசுத்தமான பறவைகளுக்கு இரையாக அமைந்தனர்.

2) மற்றுமொரு விதைத் தொகுப்பு, நிலத்தில் வேரூன்றவில்லை. இப்பிரிவினர் சோதனைகளை சந்திக்கும் போது தாங்காமல், தேவ வழியை விட்டு மறைந்து போனார்கள். இவர்கள் ரோமர்களின் அடக்கு முறைக்குப் பயந்து போனவர்கள்.

3) மூன்றாவது பிரிவினர் முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். உலக கவலையும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கி போடுகிறதினால், ஆதிச்சபையில் பலனற்றுப் போனவர்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 5ம் அதிகாரத்தில் காணும் அனனியாவும், சப்பீராளும் இப்பிரிவைச் சேர்ந்தவர்களே.

4) நான்காவது பிரிவைச் சேர்ந்தவர்கள் வசனத்தைப் பின்பற்றி தம் சக்திக்கு ஏற்றவாறு பலனளிப்பவர்கள்.

இந்த உவமையானது ஆதிகால சபையான எபேசு சபையின் காலப் பகுதிக்கு பொருத்தமாயுள்ளது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## பவுல் அப்போஸ்தலன்
## ( கி.பி. 64 )

யூத பரிசேயனாக இருந்த சவுல் மனம் மாறி பவுல் என மறு பெயர் பெற்று புறஜாதிகளுக்கு அப்போஸ்தலர் ஆனார். ஆதிச்சபையின் மிக முக்கியஸ்தராகவும் கிறிஸ்தவ விசுவாசத்தில் அறிவு சார்ந்த பெரும் தர்க்க சாஸ்திரியாக இருந்தார். பிறப்பில் ரோமக் குடிமகனாகவும், கிரேக்க கலாச்சாரத்தில் அறிஞனாகவும், பாரம்பரிய கட்டுப்பாடுள்ள யூத மார்க்கத்தில் பயிற்சி பெற்றவராய் இருந்தமையால் கிறிஸ்துவின் விசேஷித்த ஊழியம் வெற்றி பெற தேவ கிருபையால் இத்தகுதிகள் பவுலுக்கு பெரிதும் உதவின. உயர்ந்த பண்பும், மாசில்லா நேர்மையும், பெரும் அறிவாற்றலும் கொண்டு பிரமாண்டமான தூண்டும் சக்தியாக விளங்கினார்.

ஆரம்ப கால கிறிஸ்தவ விசுவாசிகளை பவுல் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாக்கியவர். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை தமஸ்கு நகருக்கு செல்லும் வழியில் கண்ணுற்ற கண நேரத்தில் பவுல் மனம் மாறினார். (அப் 9 : 3 - 7; 26, 27) புறஜாதிகளுக்கு கிறிஸ்துவின் நாமத்தை அறிவிக்கிறதற்கு பவுல் தெரிந்து கொள்ளப்பட்டார். தனது முதல் சுவிசேஷ ஊழியத்தை பர்னபாவுடன் சீப்ரு தீவில் ஆரம்பித்து, பிறகு மத்திய தரைக்கடல் நாடுகளில் ஊழியத்தை தொடர்ந்தார். அவர் மிகுந்த தைரியத்துடனும், பலத்துடனும் பிரசங்கித்து எதிர்ப்புகளையும், துன்பங்களையும் சகித்தார். 2கொரி 11 : 23 - 28; தன் நாவன்மையாலும், நன்னறிவுடன் கூடிய போதனைகளால் கிறிஸ்துவின் பால் பலரை சத்தியத்திற்குள் கொண்டு வந்தார்.

சபைகளனைத்தையும் அக்கறையுடன் பாவித்து சபைகளின் ஒற்றுமைக்காகவும், நலத்துக்காகவும் பெரும் சுமைகளைத் தாங்கினார். (எபே 4 : 1 - 7; 11 - 15).

தேவனால் பவுலுக்கு விசேஷித்த தரிசனங்கள் அருளப்பட்டன. (2கொரி 12 : 1 - 7)தெய்வீக அதிகாரம் பெற்றவராக புறஜாதிகளுக்கு அப்போஸ்தலர் ஆனார். (கலா 2 : 6 - 9)கிறிஸ்துவ விசுவாசத்தையும், நடைமுறையையும் உள்ளடக்கிய அடிப்படை போதனைகளை புதிய ஏற்பாட்டில் அதிகபட்சமாக எழுதப்பட்டதை அவருடைய புத்தகங்களில் காணலாம். கிறிஸ்துவின் மேல் விசுவாசமும், அவரது பலியின் பரிகாரத்தின் மூலமும் மட்டுமே மனுக்குலத்துக்கு தேவ கிருபையினால் ரட்சிப்பு கிட்டும் என்று பவுல் வலியுறுத்தினார்.(ரோம 1 : 16; 5 : 1, 2) அவருடைய விடா முயற்சிகளால் கிறிஸ்துவம் கிரேக்க மற்றும் ரோம உலகத்தில் வலுவாக வேர் ஊன்றியது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

**எபேசு சபை : வரலாற்று நிகழ்வுகள்**

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 33 | பெந்தகோஸ்தே: பரிசுத்த ஆவி விசுவாசிகளின் மேல் இறங்கியது. |
| கி.பி. 35 | சிசிலியா நாட்டு தலைநகரமான தர்சு பட்டணத்தானாகிய சவுல் தமஸ்கு பட்டணத்துக்கு செல்லும் வழியில் கிறிஸ்துவினால் மதம் மாறினார். |
| கி.பி. 36 | சுவிசேஷம் முதன் முதலாக புறஜாதிகளுக்கு பிரசங்கிக்கப்பட்டது. (இருப்பினும், யூதர்களிடையே தான் பெருமளவில் பரம்பியது). |
| கி.பி. 40 | அந்தியோகியா சபை புறஜாதிகளுக்கும் யூதர்களுக்கும் சுவிசேஷம் பரம்ப முன்னோடியாக இருந்தது. |
| கி.பி. 44 | ஏரோது ராஜாவினால் (அக்ரிப்பா I) யாக்கோபு கொலை செய்யப்பட்டார். |
| கி.பி. 47-49 | பவுல் அப்போஸ்தலனின் முதல் பயணம்: பர்னபாவுடன் அந்தியோகியா விலிருந்து சீப்ரு தீவுக்கும், ஆசியா மைனருக்கும் பயணம் சென்றார். |
| கி.பி. 49 | இயேசுவைப் பற்றிய தர்க்கங்களினால் எழுந்த கிளர்ச்சியை நசுக்குவதற்காக ரோம் நகரத்திலிருந்து யூதர்களை கிலவுதி ராயன் வெளியேற்றினான். கிறிஸ்தவம் ரோம் நகரில் காலடி பதித்தது. |
| கி.பி. 50 | பேதுரு, பவுல், யாக்கோபு,பர்னபா, இவர்களுடன் மற்றவர்களும் எருசலேமில் நடந்த ஆலோசனை சங்கத்தில் பங்கு பெற்றனர். அதில் விருத்தசேதனம், மற்றும் யூத பிரமாணங்களின் மற்ற நிபந்தனைகள் விலக்கப்பட்டன. |
| கி.பி. 51-53 | பவுலின் இரண்டாம் பயணம்: சீலாவுடனும், பிறகு தீமோத்தேயுவுடனும் பயணித்து, பிலிப்பு, தெசலோனிக்கேயா,பெரேயா மற்றும் கொரிந்து போன்ற கிரேக்க நாடுகளில் சபைகளை ஸ்தாபித்தார். |
| கி.பி. 53-56 | பேலிக்ஸ், பெஸ்து, அகிரிப்பா II ஆகியோருக்கு முன்பாக பவுல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். |
| கி.பி. 58-60 | பவுலின் மூன்றாம் பயணம்: ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாவுடன் எபேசுவில் நீண்ட காலம் பிரசங்கித்தார். கிறிஸ்தவ உலகத்தில் எபேசு ஒரு முன்னோடியாக திகழ்ந்தது. |
| கி.பி. 61-63 | பவுல் ரோமாபுரியில் காவலில் அடைக்கப்பட்டார்.வீட்டுக்காவல் அவரை சிறிது சாட்சி பகர வாய்ப்பளித்தது. |
| கி.பி. 64 | ரோம் நகரில் ஏற்பட்ட பெரும் தீ விபத்திற்கு கிறிஸ்தவர்கள் தாம் காரணம் என குற்றஞ்சாட்டி அவர்களை பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார். பவுலும், பேதுருவும் ரத்த சாட்சிகளாக மரித்தனர். |
| கி.பி. 66 | யூதப் புரட்சியின் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து பெல்லாவுக்கு ஓடிப் போயினர். |
| கி.பி. 67 | ஜோஸஃபஸ் யூதப் படைகளை ரோமரிடம் சரணடையச்செய்தார். பின்னாளில் ரோமப் பேரரசனான வெஸ்பாஷியனின் ஆதரவையும் , பாதுகாப்பையும் இவர் பெற்றார். |
| கி.பி. 70 | எருசலேம் ரோமர்களால் அழிக்கப்பட்டது." புலம்பல் சுவரைத் தவிர எருசலேம் தேவாலயம் தரைமட்டமாக்கப்பட்டது. சுவிசேஷ குறிப்புகளும், பவுலின் நிருபங்களும் சிரியா, எகிப்து, ஆசியா மைனர் போன்ற நாடுகளில் பிரஸ்தாபமாகியது. |
| கி.பி. 75 | டோசிதியர், நிகொலேத்தியர், நசரேயர், எபியோனியர் போன்ற பிரிவினர் பெருக ஆரம்பத்தன. |

## சிமிர்னா சபை
## வெளி 2 : 8 - 11.

சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா மற்றும் சர்தை சபைகளையும், முத்திரைகளையும், எக்காளங்களையும் சரிவர புரிந்து கொள்ள வேண்டுமானால், இக்காலப் பகுதிகளைச் சார்ந்த வரலாற்று பின்னனிகளைப் பற்றிய அறிவு நமக்கு மிகவும் தேவைப்படுகிறது. அப்பொழுது தான், வெளிப்படுத்தல் ஆகமத்தில் இச்சபைகளைப் பற்றி விவரிக்க கையாளப்படும் அடையாளங்களைத் தெளிவுற உணர இயலும்.

எருசலேம் விழுகையிலிருந்து (கி.பி. 70) கான்ஸ்டன்டைன் பேரரசனின் ஆட்சி காலம் வரையிலும் சிமிர்னா சபையின் காலப் பகுதி உள்ளது.

அப்போஸ்தலர்களின் நேரடித் தாக்கம் இல்லாத நிலையில், சபையின் ஆளுமை அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளத் துடிக்கும் தலைவர்கள் பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிக அளவில் இருந்தன.

பரிசுத்த ஆவியின் வரங்கள், குறிப்பாக ஆவிகளைப் பகுத்தறியும் வரங்கள் நின்று போன நிலையில், மந்தையின் நடுவில் போலிக் கிறிஸ்தவத்தை (களைகளை) நடுவதற்கு எதிரிக்கு வாய்ப்புக்கள் பெருகின.

ரோமர்களின் அடக்கு முறை சில சமயங்களில் குறைவாகவும், சில சமயங்களில் பெருமளவில் பயங்கரமானதாகவும் இருந்தன. சபையினர் மலைகளிலும் பூமிக்கடியிலும் ஒளிந்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். டயக்ளீஷியன் என்ற ரோம பேரரசன் காலத்தில் (கி.பி. 303 முதல் 313 வரை) அடக்கு முறை உச்சக்கட்டத்தை அடைந்தது. பேரரசனின் தெய்வத்தை வணங்குவதாக ஒப்புக் கொண்டவர்கள் தண்டனைக்குத் தப்பினர். கள்ள போதகர்கள் சாமர்த்தியமாக ரோம அதிகாரங்களோடு சமரச இணக்கம் கொண்டு சத்தியத்தை விட்டு விலகினர். சிமிர்னா சபையின் காலப் பகுதி மிகவும் அநியாயம் இழைக்கப்பட்ட காலமாகும். ரோமர்களின் ஒத்தாசையைப் பெற, கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களையே காட்டிக் கொடுத்து , அடக்குமுறையிலிருந்து தப்பினர்.

ரோம அடக்குமுறைகள் பெருகினாலும், கிறிஸ்தவம் (மெய் சபை மற்றும் போலி சபையும்) அதிசயத்தக்க அளவில் வளர்ந்தது. ரோம புற மதத்தில் இல்லாத சில அம்சங்கள் கிறிஸ்தவத்தில் இருந்தன. சமுதாயத்தில் ஒரு பொருட்டாக எண்ணப்படாத மக்களை, கிறிஸ்தவம் எவ்வித பேதமும் இல்லாமல் முக்கிய அங்கங்களாக மாற்றியது. மேலும், கிறிஸ்தவ சமுதாயம் வியாபார ரீதியான ஒரு வடிகாலாக ரோமர்களுக்கு அமைந்தது. அடக்கு முறையின் மத்தியிலும் கிறிஸ்தவம் வளர ஆரம்பித்தது. இந்நிலையில், கான்ஸ்டன்டைன் பேரரசனின் “மத மாற்றத்தால்“ கிறிஸ்தவம் ஒரு மாபெரும் மதமாக உருவெடுத்து, ரோம புற மதத்தை முற்றிலுமாக அழித்துப் போட்டது.

ரோம புற மதத்தினர் கிறிஸ்தவத்தை தழுவியதைத் தொடர்ந்து, கிறிஸ்தவ சத்தியங்கள் கறைபட ஆரம்பித்தன. இந்த காலப் பகுதியில் நாஸ்டிசிசம் (GNOSTICISM) தலையெடுக்க ஆரம்பித்தது. ரோம புறமத ஆசாரியர்கள் கிறிஸ்தவ ஊழியர்களானார்கள். தனிப்பட்ட மத போதகர்களின் அதிகாரப் போட்டியினால் பிஷப்புக்கள் ஒருவரை ஒருவர் மத பகிஷ்காரம் செய்ய முற்பட்டனர். சிமிர்னா காலப் பகுதியில் பிஷப்புக்கள் எல்லோருக்கும் தலைமை பிஷப் எவரும் இருந்ததில்லை. இந்நிலையில், வளர்ந்து வரும் போலி கிறிஸ்தவ சபையில் உள்ள பிஷப்புகளுக்கு இடையில் அதிகாரப் போராட்டம் மிகுதியாகி, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

சிமிர்னா சபையின் காலத்தில் தான் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் தொகுக்கப் பட்டன. வெளிப்படுத்தல் ஆகமம் பல சந்தர்ப்பங்களில் புதிய ஏற்பாட்டுத் தொகுப்பில் ஏற்றுக்கொள்ளப்படாத நிலை நீடித்தது.

கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியவர்களில் பலர் உண்மையில் ஆவியில் அனல் உள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் நடுவில் களைகள் எளிதாக நடப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ள காலமாக சிமிர்னா சபை இருந்தது. இந்த களைகளினால், உண்மைக் கிறிஸ்தவர்கள் சோதனை பல அனுபவிக்க வேண்டியிருந்தது.

**வெளி 2 : 8.**

**சிமினா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில், முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது :**

**சிமினா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் :**

"சிமிர்னா" என்பது "கசப்பு" என்று பொருள்படும்; துன்புறுத்தல் பெரிதும் வியாபித்திருந்த இந்த காலப் பகுதிக்கு இப்பெயர் பொருத்தமாகவே உள்ளது; சிமிர்னா சபைக்குரிய செய்தியில், சபையின் மீது குறை ஏதும் சொல்லப்படவில்லை; சபையின் நடுவில் களைகள் விதைக்கப்படும் நிலையில், ரோமர்களால் வரும் அடக்குமுறையேயன்றி வேறொரு எந்த பாரமும் இந்த சபையின் மேல் கர்த்தர் போடவில்லை.

**முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது :**

சிமிர்னா சபைக்கு கிறிஸ்து தம்மை இவ்விதம் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். யோவான் தம் சுவிசேஷத்தில் (யோவான் 1 : 1, 3, 10) இயேசுவைப் பற்றி எழுதிய விஷயங்களில் இது பிரதிபலிக்கிறது. இயேசு, **யாவே** தேவனின் முதல் நேரடி சிருஷ்டி என்பதும், இவரே சபையின் விஷயத்தில் முதலும், கடைசியுமான வார்த்தையாகத் திகழ்கிறார் என்பதும் தெரிகிறது. சிமிர்னா சபையின் இந்த நெருக்கடியான காலக் கட்டத்தில், ரோமப் பேரரசனின் தெய்வத்தை ஆராதிக்க மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு ஆளான சபையினருக்கு இயேசுவின் இந்த வார்த்தை மிக முக்கியமானதாகும்.

மேலும், இயேசு தம்மை "மரித்திருந்திருந்தும் பிழைத்தவருமானவர்" என்று விவரிக்கிறார். மரித்ததும், பிழைத்ததுமான இந்த இரண்டு சம்பவங்களையும் நேரில் கண்ட சாட்சியாக யோவான் அப்போஸ்தலன் விளங்குகிறார். (யோவான் 19 : 34, 35). அடக்கு முறைக்கு ஆளாகின சபை பரிசுத்தவான்களுக்கு, இயேசுவின் இந்த அறிமுகம் பெரும் ஆறுதலான விஷயமாகும்.

**வெளி 2 : 9.**

**உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.**

**உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும் :**

சிமிர்னா சபையின் முழு காலப்பகுதியும் உபத்திரங்களை பொதுவாக உள்ளடக்கியதாகும். அதுவும் சபையின் இறுதி காலத்தில் பத்து வருடங்கள் மகா உபத்திரவங்களைச் சந்தித்தது. ரோம பேரரசனின் புற சமய அதிகாரத்திற்கு கிறிஸ்தவம் அடிபணியவில்லை. ரோம ராணுவத்தில் கிறிஸ்தவர்கள் பங்கு கொள்ள மறுத்தனர். ஆகவே கிறிஸ்தவம் மீது ரோம புற மதம் வெறுப்பை வளர்த்தது.

**நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும் :**

தேவனிடத்தில் வைத்திருக்கும் விசுவாசத்தில் ஐசுவரியவானாய் சபை பரிசுத்தவான்கள் இருந்தனர். இருப்பினும், ரோம அடக்குமுறை காரணமாக, ஒளிந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்ட கிறிஸ்தவர்கள் குறைந்தபட்ச உலகப்பிரகாரமான வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க இயலவில்லை. மேலும், உலகத்தாரின் பார்வையில் சபை அங்கங்கள் உண்மையில் தரித்திரர்களாகவே காணப்பட்டனர்.

இருப்பினும், சிமிர்ன சபை காலப் பகுதியில், விசுவாசிகளைக் காட்டிக் கொடுத்து உலக ஆதாயங்களைப் பெற்ற விஷக் கிருமிகளும் சபையில் இருந்தனர். இந்த விசுவாசிகளை இயேசு "ஐசுவரியவான்கள்" என்று அழைக்கிறார்.

**தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன் :**

"தூஷணம்" என்பது "அவதூறு" என்று பொருள்படும். வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்" என்பது "கிறிஸ்தவர்களைக்" குறிக்கும் . இவர்கள் களைகள் ஆவார்கள். சபையானது ரோமர்களின் அடக்குமுறையை தாங்கிக் கொண்டதோடு மட்டுமன்றி, இந்த போலி சகோதரர்களின் அவதூறுகளையும் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. தம் சுய லாபத்திற்காக இந்த களைகள் சபைக்குள் காலடி வைத்தன. இத்தகையோர், மற்றவர்களைத் தாழ்த்திப் பேசி, தங்களை உயர்த்திக் கொண்டனர். ரோமர்களின் பயங்கர அடக்கு முறைகள் பெருகியிருந்த இந்த காலக் கட்டத்திலும், "கிறிஸ்தவர்கள்" என்ற போர்வையில் "போலி கிறிஸ்தவர்கள்" செயல்பட்டனர்.

ரோம புறமதத்தை தள்ளிவிட்டு கிறிஸ்தவம் வளர்ந்ததைத் தொடர்ந்து, சாத்தான் தன் சொந்த கூட்டத்தை (போலி சபையை) கட்ட ஆரம்பித்தான். சாத்தானுக்கு (இராஜ்ஜீய அதிகாரத்திற்கு), சமயம் சார்ந்த கூட்டம் (சபை) உருவாகி உள்ளது. அதாவது, ரோம இராஜ்ஜீயம் சபையைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் ஆர்வம் இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

**வெளி 2 : 10.**

**நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான். பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.**

**நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே :**

பயங்கரமான உடல் உபாதையுடன் கூடிய அடக்குமுறையை எதிர்நோக்கியிருந்த சபையினருக்கு இந்த அறிவுரை அதிகம் தேவைப்பட்டது. சிமிர்னா சபையின் காலப் பகுதியிலிருந்த சகோதரர்கள் கிறிஸ்துவின் இந்த அறிவுரையை பின்பற்றியதாலேயே, ரோம அடக்குமுறையின் போது இவர்கள் காண்பித்த அசாதாரணமான வீரம் , பொறுமை, சகிப்புத் தன்மையை வரலாற்று உண்மைகள் பறைசாற்றுகின்றன.

**இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் :**

வெளிபடுத்தல் ஆகமத்தின் 12, 20ம் அதிகாரங்களில் "பிசாசு" என்று அடையாள பாஷையில் "இராஜ்ஜீய அதிகாரம்" குறிப்பிடப்படுகிறது. சகோதரர்களைக் காவலில் போட்டது, பெரும்பாலும் அவர்களை மரணத்திற்குள்ளாக்கியது. சிமினா சபை காலப் பகுதியிலிருந்த சகோதரர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் வரலாற்றில் பயங்கரமான உபத்திரக் காலப்பகுதி ஆகும்.

**பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு :**

ரோம பேரரசன் டயக்ளீஷியன் ஆட்சி காலத்தில் பத்து வருடங்கள் (கி.பி. 303 முதல் 313 வரை), சகோதரர்கள் மிக மோசமான அடக்குமுறையை சந்தித்தனர். அவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்கள் ஜீவனை தியாக பலியாக மரணத்தில் ஒப்புக்கொடுத்தனர்.

**அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் :**

"கிரீடம்" (STEPHANOS) என்பது ஜீவனை உள்ளடக்கியதாகும். தியாக வாழ்வுக்கு கிடைத்த பரிசு ஆகும். மரணமடைந்து கொண்டிருந்த சகோதரர்களுக்கு (சபைக்கு) கிறிஸ்து அளிக்கும் உறுதி மொழியாகும்.

**வெளி 2 : 11.**
**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங் கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.**

ஜெயங்கொண்ட பிறகு , மறுபடியும் மரணத்தை சந்திக்கும் கட்டாயம் இல்லை. சிமிர்னா சபைக்கு கிறிஸ்து அளிக்கும் பொருத்தமான வாக்குத்தத்தம் இதுவே!

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## சிமிர்னா உவமை

## கோதுமை மணிகளும் களைகளும்

## மத்தேயு 13ம் அதிகாரம்    இரண்டாம் உவமை
## (மத் 13 : 24 - 30; 36 - 43)

சிமிர்னா சபையின் நிகழ்வுகளின் தன்மையை வரலாற்று பின்னணியில் நோக்கும் போது, கோதுமை மற்றும் களைகள் பயிர்களான போது நிகழும் விளைவுகளை இந்த உவமை சிமிர்னா சபை காலப் பகுதியைத் தாண்டியும் சார்ந்ததாக உள்ளது.

சாத்தானுடைய கூட்டத்தார் இங்கு களைகள் என குறிக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலர்கள் நித்திரை அடைந்த பின்பு (25ம் வசனம்), கள்ள போதகம் சபையில் தலை தூக்கியது.

எபேசு சபை உவமையில் (விதைப்பவன் உவமையில்), "நல்ல விதை" என்பது "சுவிசேஷ நற்செய்தியை" குறிக்கிறது. ஆனால், இந்த உவமையில், "நல்ல விதைகள்" & "கெட்ட விதைகள்" என்பது "ஜனங்களை" குறிக்கின்றன. சாத்தானிடம் நற்செய்திகளை விதைக்க ஒன்றுமில்லை. போலி வேஷம் போடுவதில் வன்மை படைத்தவன்; ஆகவே தான், இந்த உவமையின்படி, சாத்தான் யூதரல்லாதவர்களை 'யூதர்கள்' என விதைத்தான் என்று அறிகிறோம். சாத்தானால் சபையில் விதைக்கப்பட்ட இந்த களைகள் தான், சபையில் பகைமைக்கும், கலகத்துக்கும் காரணமாகி, இந்த யுகம் முடியும் வரையில் தொடரும் விதமாக உள்ளது. தானியேல் தீர்க்கதரிசி இதை "**சேனை**" என்றும், "**பரிசுத்த ஸ்தலம்**" என்றும் வர்ணிக்கிறார். இந்த இரண்டு பிரிவினரும் மிதிபட (ஒருவருக்கொருவர் பகைமையுடன் செயல்பட) ஒப்புகொடுக்கப்படுகின்றனர். இரண்டாம் முத்திரையில் (வெளி 6 : 4) பூமியிலுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலைமையை இயேசு வெகு எளிய முறையில், '**களைகள்**' என்றும், '**கோதுமை மணிகள்**' என்றும் குறிப்பிட்டார்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## யோவான் அப்போஸ்தலன்

## (இறப்பு : கி.பி. 100)

இயேசுவுக்கு நெருங்கிய வட்டத்தில் இருப்பவர்களில் யோவானும், அவருடைய சகோதரன் யாக்கோபும், பேதுருவும் அடங்குவர். உணர்ச்சி வசப்படக்கூடிய மனோநிலைப் படைத்த யோவான் "இடி முழக்கத்தின் மகன்" என்று அழைக்கப்பட்டார். அவருடைய அவசரப்புத்தியும் சுயநலத்தன்மையுமான நிலையிலிருந்து, (அவரும் அவருடைய சகோதரரும் ராஜ்யத்தில் விசேஷித்த இடத்தில் இருக்க விரும்பினர்) பின்னர், மென்மையும் இரக்கமுள்ள பேரன்பு கொண்டவராக மாறும் நிலையை அடையப் பெற்றார்.

யோவான் இயேசுவினால் மிகவும் நேசிக்கப்பட்டவராக சுவிசேஷங்களில் குறிக்கப்படுகிறார். பல முக்கியமான தருணங்களில் யோவான் இயேசுவோடு இருந்திருக்கிறார். மலையில் உருமாறிய தோற்ற தரிசனத்திலும் இயேசுவின் இராப்போஜனத்திலும், கெத்சமெனே தோட்டத்திலும் இயேசுவோடு கூட யோவான் இருந்திருக்கிறார். இயேசு கைது செய்யப்பட்ட பிறகு ஓடிப்போனாலும், பிறகு தைரியம் கொண்டு இயேசுவின் விசாரணை மற்றும் சிலுவையிலிருக்கும் போதும் அருகில் இருந்திருக்கிறார். அவரும், பேதுருவும் இயேசுவின் கல்லறையில் சரீரம் இல்லாததைக் கண்டனர். உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசுவின் தரிசனங்களில் யோவான் பிரசன்னமாய் இருந்திருக்கிறார். பிறகு வெகுவான எதிர்ப்புகளின் மத்தியில் விசுவாசத்தை பரப்புவதில் பெரும்பங்கு வகித்தார். (அப் : 4 ம் அதிகாரம்).

ஆதிச்சபையின் தூணாக யோவான் இருந்ததாக பவுல் சொல்கிறார். (கலா 2 : 9) கடைசி அப்போஸ்தலராக, அவர் சாகும் வரையிலும் மிகுந்த துன்பக்களுக்கிடையில் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தார். (வெளி 1 : 2, 9) பத்மூ தீவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் வெளிப்படுத்தல் புத்தக தரிசனத்தைப் பெற்றார். இதையல்லாமல், புதிய ஏற்பாட்டில் மேலும் நான்கு புஸ்தகங்களை எழுதினார்.

யோவான் தன் சுவிசேஷத்தில் பிதாவுக்கும் இயேசுவுக்கும் இடையே உள்ள நெருக்கத்தை 1, 5, 17 ம் அதிகாரங்களில் விரிவாக எடுத்துரைத்துள்ளார். இயேசு ஜீவ ஊற்று என்பதை யோவான் 4 : 14 - 17ல் வெளிப்படுத்துகிறார். தேவனுடைய ஒளியில் நாம் நடக்க வேண்டுமென்றும், நீதி மற்றும் அன்பையும் வலியுறுத்தி யோவான் தம் மூன்று நிருபங்களில் எழுதினார். (1 யோவான் 1 : 5 - 9; 4 : 7 - 12).

ரோம சாம்ராஜ்யத்தில் ஆதிச்சபையினருக்கு இழைக்கப்பட்ட பெரும் துன்பங்களுக்கிடையில் யோவானுடைய வாழ்க்கையும் அவருடைய எழுத்துக்களும் விசுவாசிகளுக்கு பெலமும் உற்சாகமும் அளிக்கக் கூடியவைகளாக இருந்தன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# சிமிர்னா சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 96 | யோவான் வெளிப்படுத்தல் ஆகமத்தை எழுதி முடித்தார். |
| கி.பி. 100 | பன்னிரு அப்போஸ்தலர்களில் கடைசியாக யோவான் மரித்தார். |
| முதலாம் நூற்றாண்டு | சத்தியம் கலப்பில்லாமல் பரிசுத்தமாகவும்,எளிமையாகவும் கைக்கொள்ளப்பட்டது. யூதர்களின் நம்பிக்கைகள், மற்றும் கள்ள போதகர்களினால் முரண்பாடுகள் உண்டாயின. மத்தியதரைக்கடல் பகுதியிலும், ரோம சாம்ராஜ்யத்திலும் சத்தியம் ஆர்வமாக பரவ ஆரம்பித்தது. ரோம பேரரசர்களால் அவ்வப்பொழுது துன்புறுத்தலும் தொடர்ந்தது. |
| கி.பி. 67-110 | அந்தியோகியாவின் பிஷப் இக்னேஷியஸ் விசுவாசத்தைக் குறித்து ஆதிச் சபைகளுக்கு அறிவுரை கூறி நிருபங்கள் எழுதினார். ரோமப் பேரரசன் டிரஜான் அவரை ரோமாபுரியில் கொன்றான். |
| கி.பி. 69-156 | ே யோவானின் சீஷன் “பாலிகார்ப்” என்பவர் சிமிர்னா சபையின் பிஷப் ஆக இருந்தார். ரோமை பிஷப் அனிசேடஃஸ் என்பவரின் இராப்போஜன அனுசரிப்பை நீசான் 14 ம் தேதிக்கு பதில் பொதுவான ஒரு நாளில் அனுசரிக்க முற்பட்டதை முழுமையாக பாலிகார்ப் எதிர்த்தார். தனது 86 ம் வயதில் ரத்த சாட்சியாக மரித்தார். |
| கி.பி. 100-167 | ஜஸ்டின் சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமானவர். ரோம புற மதக்கோட்பாடுகளைத் தீவிரமாக எதிர்த்து, ஆதி கிறிஸ்துவத்தை தற்காத்தவர். ரோம் நகரில் சங்கரிக்கப்பட்டார். |
| கி.பி. 130-200 | இரேனியஸ் பிரான்ஸ் நாட்டு லியோன் நகர பிஷப். ஆதி அப்போஸ்தலர் மரபுகளை காத்தவர். நாஸ்டிக் மற்றும் கிரேக்க மதக்கோட்பாடுகளை பரவவிடாமல் தடுத்தவர். ரோமை பிஷப் விக்டர் 1 என்பவர் அந்தியோகியாவில் ஈஸ்டர் நாளை நடைமுறைப்படுத்த முயன்றதை தடுத்தார். |
| கி.பி. 2 ம் நூற்றாண்டு | யூதரல்லாத பட்டணங்களில் கிறிஸ்தவம் பரவியது. கிறிஸ்தவர்கள் புறமத பண்டிகைகள், வழிபாடுகளை தவிர்த்து, ஒழுக்க நெறிமுறைகளை கடைபிடித்தனர். பொதுமக்களின் பார்வையில் பெரிதும் கவரப்பட்டனர். ரோம பேரரசில் அடக்குமுறை மற்றும் துன்புறுத்துதலுக்கு ஆளானர். இதே காலக்கட்டத்தில் கொள்கை தப்பிதங்கள் சபையில் தலையெடுக்கத் துவங்கின. |
| கி.பி. 166-220 | டெர்டுலியன் வக்கீலாக இருந்து மதம் மாறியவர். சிறந்த வேத விற்பன்னர். தத்துவ ரீதியான தர்க்கங்களை மதக்கொள்கைகளுக்கு புறம்பானவை என தள்ளி ஒதுக்கியவர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை உடனே எதிர்பார்த்தவர். மதக்குருக்கள் பாவ மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை எதிர்த்தார். ஜெபம் மற்றும் விரதத்தை முக்கியப் படுத்தினார். |
| கி.பி. 185-254 | அரிகன் (Origen) ஆதிச் சபையில் சிறந்த கல்விமான். அவர் பெருமளவில் எழுதி, மூன்றில் இரண்டு பங்கு புதிய ஏற்பாட்டு வசனங்களை தம் எழுத்துக்களில் கையாண்டார். இவர் சித்திரவதைக்குட்பட்டு மரித்தார். |
| கி.பி. 250 | ரோம பேரரசன் டெஷியஸ் கிறிஸ்தவர்களை பெரும் துன்பத்திற்குள்ளாக்கினான். பழைய ரோம மதச் சடங்காச்சாரங்களை திரும்ப நிலை நிறுத்த முயற்சி செய்தான் |
| கி.பி. 3ம் நூற்றாண்டு | ரோம ராஜ்யத்திற்கு போட்டியாக கிறிஸ்தவம் பெரு வளர்ச்சி பெற்று வந்தது. ஆனாலும் கோட்பாடுகள் களங்கமடையத் துவங்கின. கிறிஸ்தவ மத போதகர்கள் பதவிகளையும், கௌரவத்தையும் நாடினர். சடங்குகள் பகட்டோடும், ஆடம்பரத்தோடும் அனுசரிக்கப்பட துவங்கின. |
| கி.பி. 303-313 | ரோம பேரரசன் டயக்லிஷியன் தீவிரமாக பத்து வருடங்கள் கிறிஸ்தவர்களை துன்புறுத்தினான். ரோம ராஜ்யத்தை ஸ்திரப்படுத்தவும், ரோம மதத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவர முயற்சித்தான். |

## பெர்கமு சபை

## (வெளி 2 : 12 - 17)

**பெர்கமு சபை காலப் பகுதியைப் பற்றிய முக்கிய முன்னுரை :**

மூன்றாம் சபை, மூன்றாம் முத்திரை, மூன்றாம் எக்காளங்களைப் பற்றிய அடையாள பாஷைகளைப் பற்றி புரிந்து கொள்வதற்கு , பெர்கமு சபையின் மிக நீண்ட கால வரலாற்றை உன்னிப்பாக கவனிப்பது அவசியமாகிறது. "மிலன் சாசனம்" மூலம் மத சுதந்திரம் பிரகடனம் ஆனதைத் தொடர்ந்து, சிமிர்னா சபையின் காலப் பகுதி (கசப்பு) முடிவுக்கு வந்தது. ஆனால், ரோம புற மதத்தைக் காட்டிலும் மோசமான அந்திக் கிறிஸ்து அமைப்பு கட்டுக்கடங்காத தவறுகளை கற்களில் பதித்தாற் போன்று, "நிகேயா விசுவாசஅறிக்கை" நடைமுறைக்கு வந்தது. "திரித்துவம்" என்பது சட்டப்பூர்வ அங்கீகாரம் பெற்றது.மதத்திற்கும், இராஜ்ஜியத்திற்கு முள்ள ஒற்றுமையை நிலைநாட்டும் வெறியுடன், சத்தியங்கள் மாறுபாடு அடைந்து களங்கமுற்றன. பைபிள் தொகுப்பு கான்ஸ்டன்டைன் அரசனுடைய ஆட்சி காலத்தில் முழுமை பெற்று, பிரதிகள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. ஆனால், பைபிளில் உள்ள சத்தியங்கள் அசட்டை பண்ணப்பட்டன.

கான்ஸ்டன்டைன் அரசனுடைய காலத்திய பைபிள் பிரதி ஒன்று, சென்டார்ப் என்ற வேத வல்லுநர் மூலம் சீனாய் வனாந்தரத்தில் ஒரு துறவிகளின் மடத்தில் கண்டெடுக்கப் பட்டது.

பெர்கமு சபையின் காலத்தில் தான், தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்த 1260 நாட்களின் துவக்கம் உள்ளது. இக்காலப்பகுதியில் தான் இஸ்லாம் மதம் வளர்ச்சி பெற்று ஐரோப்பாவில் ஊடுருவியது. இந்த காலப் பகுதியில் தான், படிப்படியாக கொள்கை பேதங்கள் முன்னேறி, உயர்வு பெற்ற நிகழ்வுகள் நடந்தன. போப்புவின் இராஜ்ஜியங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பேரரசர்களை விட போப்புவின் மேன்மையான அந்தஸ்து, சார்ல்மேகனை பேரரசனாக போப்பு கி.பி. 800ல் பட்டம் சூட்டியதில் வெளிப்பட்டது. இவ்விதமாக, புனித ரோம சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு கி.பி. 1806 வரை நீடித்தது.

ரோம சாம்ராஜ்யம் கான்ஸ்டன்டைன் பேரரசனுடைய காலத்தில், மேற்கு, கிழக்கு என்று இரண்டாக பிரிந்து, மேற்கு ராஜ்ஜியத்தில் 'போப்பு' வல்லமை பெற்ற தலைவராக ஆவதற்கு வழி கோலியது. பிறகு, 700 வருடங்கள் கழித்து , கிழக்கு மற்றும் மேற்கு என இரண்டு பிரிவுகளாக சபை பிரிந்தது. இது, போலி சபைக்கு ஏற்பட்ட தாழ்ச்சி என தோற்றமளித்தாலும், உண்மை நிலை அதுவல்ல ! ரோமாபுரியின் பிஷப், மேற்கு ரோம இராஜ்யத்தில் பெரும் வல்லமையும், அதிகாரமும் பெற்றவராக மாறினார். சபையில் இந்த பிரிவினை இல்லாதிருந்தால், ரோமாபுரி பிஷப் உயர்நிலை அடைந்திருக்க இயலாது.

இருண்ட யுகம் பெர்கமு சபையின் காலப் பகுதிக்கு அப்பாலும் நீடித்தாலும், உண்மையாகப் பார்த்தால், இருண்ட யுகத்தின் காரிருளாக பெர்கமு சபை காலம் விளங்கியது. இக்காலத்தில் தான், பல நூற்றாண்டுகளாக இரும்புக்கரம் கொண்டு போப்பு மார்க்கம் ஐரோப்பாவில் ஆட்சி செய்ய மேடை அமைக்கப்பட்டது.

# பெர்கமு சபை

**வெளி 2 : 12.**
**பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில், இரு புறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது .**

**பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் :**

அலெக்ஸாண்டிரியா பட்டணத்திற்கு மத போதகராக ஏரியஸ் இருந்தார். பிஷப் பதவியை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்து விட்டார். ஏனெனில், இக்காலக் கட்டத்தில் "தலைமை" என்பது, சபையில் சகோதரர்களை ஆளுமை ஆதிக்கம் செலுத்தும் பதவியாக மாறியது. இது ஏரியஸ் அவர்களின் கருத்துக்கு ஒவ்வாததாக இருந்தது. அவருடைய களங்கமில்லாத வாழ்க்கை, மற்றும் வேத அறிவு காரணமாக, அவரது எதிரிகளால் கூட ஏரியஸ் வெகுவாக மதிக்கப்பட்டார். அதெனேஷியஸ் பிஷப்பை எதிர்த்து நிகேயா ஆலோசனை சங்கத்தில் ஏரியஸ் வாதிட்டார். ஆனாலும், சத்தியம் களங்கம் அடைந்து, இந்த யுகம் முழுமையையும் பாதித்தது. இந்த நிகேயா அறிக்கை, கி.பி. 325 ல் நடைபெற்ற ஆலோசனை சங்க நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் விதமாக போலிச் சபையில் இன்றும் வழக்கத்தில் உள்ளது. சபையின் 1000 பிஷப்புக்களை கான்ஸ்டன்டைன் பேரரசன் அழைப்பித்ததில், மூன்றில் ஒரு பகுதியினரான 384 பிஷப்புக்கள் மட்டும் நிகேயா ஆலோசனை சங்கத்தில் பங்கேற்றனர். (வெளி 12 : 4) இந்த ஆலோசனைச் சங்கத்தில் ஏரியஸ் மத பகிஷ்காரம் பண்ணப்பட்டார். போலி மதஸ்தரால் எழுதப்பட்ட வரலாறு, ஏரியஸ் அவர்களை இந்த யுகத்தின் மிகப் பெரிய பதிதராக வர்ணிக்கிறது. ஆனால், நமது கர்த்தராகிய கிறிஸ்து அவரை " மூன்றாவது தூதனாக" அழைக்கிறார்.

"பெர்கமு" என்ற பதம் "உயர்வு பெறுதல்" "மேலே எழும்பி வருதல்" என்று பொருள்படும். பெர்கமு சபை காலப் பகுதியில் தான் ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் கிறிஸ்தவம் உயர்வு பெற்று, "கிறிஸ்தவ தலைவர்" ரோம பேரரசனை விட அதிக அதிகாரம் பெற்றவராக திகழ்ந்தார். சிமிர்னா சபை காலத்தில் நடை பெற்ற உபத்திரவங்களிலிருந்து எப்படிப்பட்ட ஒரு மாறுதலுக்கு சபை இப்பொழுது உட்பட்டுள்ளது ! போலி கிறிஸ்தவம் இந்த மாற்றத்தை எவ்விதத்தினாலும் தக்க வைத்துக் கொள்ளத் துடித்தது. முதலாம் போப்பாக லியோ I என்பவர் கி.பி. 440ல் இருந்தார். பிறகு, கி.பி. 534ல் ரோம பேரரசன் ஜஸ்டினியன், ரோமாபுரி பிஷப்பிற்கு "பிரதான மத ஆளுநர்" **(PONTIFEX MAXIMUS)** என்ற பட்டத்தை அளித்தார். கி.பி. 800ல் போப்பு லியோ III என்பவர் ரோம பேரரசன் சார்ல்மேகனுக்கு கிரீடம் சூட்டி ஆட்சியில் அமர்த்தினார்.

மேற்கு ரோம சாம்ராஜ்யம் பல படையெடுப்புகளால் பலவீனம் அடைந்தது. இதை தொடர்ந்து, போப்பு மார்க்கம் செல்வாக்குப் பெற்று, அதன் 1260 வருட இருண்ட கால ஆட்சிக்கு வழி வகுத்தது. "பெர்கமு" என்ற சொல்லுக்கு "திருமணமாகி இருந்தாலும்" என வேறொரு அர்த்தமும் உண்டு. இதன்படி பார்த்தாலும், இக்காலப்பகுதியில் நடந்த சமய-இராஜ்ஜீய திருமண உறவு (வேசித்தனம்) என்று பொருத்தமாக அர்த்தம் கொண்டுள்ளது.

**இரு புறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது :**

பெர்கமு சபை காலப் பகுதியில் தான் முதன்முதலாக, பிரபஞ்சம் முழுமைக்கான விசுவாச அறிக்கை "நிகேயா ஆலோசனை சங்கம்" நடைபெற்றதைத் தொடர்ந்து வெளியானது. இந்த 'நிகேயா அறிக்கை' வேண்டுமா ? அல்லது, 'இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய' பைபிள் வேண்டுமா ? என்பது போல், இயேசு தம்மை விவரிக்கும் விதத்தில் அவரது அறிமுகம் வெளி 2 : 12 ல் காணப்படுகிறது. (எபேசி 6 : 17; எபி 4 : 12).

வெளி 2 : 13.

**சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மை உள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.**

**சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும் :**

"இடம்" என்பது "நிலைமை" என பொருள்படும். இராஜ்யத்துடன் இணைந்து வளர்ச்சி பெற்று வரும் சபையில், குருமார்களின் பதவிப் போராட்டங்கள் மிகுந்திருந்த காலப் பகுதியில் சபையின் உண்மைச் சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். "சாத்தான்" ரோம அரசாங்கத்திற்கு அடையாளம். அதாவது, பிசாசானவன் இந்த நிகழ்ச்சிகளின் பின்னனியில் இருந்து செயல்பட்டு வந்தான். சபையும், அரசாங்கமும் ஒரே சிங்காசனமாக (ஒரே தலைமையின் கீழ்) செயல்பட்ட நிலையில், மதத்திற்கும் இராஜ்யத்திற்கும் இடையிலான வேசித்தனத்தின் மத்தியில் சபையின் சகோதரர்கள் குடியிருந்து வந்தனர். சகோதரர்கள் இந்த நிலையிலிருந்து மாறுபட்டு, வனாந்தரத்திற்கு (உலக மரபுகளிலுமிருந்து தனிமைப் படுத்தப்பட்ட நிலைக்கு) ஓடிப் போக வேண்டியிருந்தது.

வெளி 2 : 9ம் வசனத்திலிருந்து 13 ம் வசனம் வரை கூர்ந்து கவனித்தால், சபை பெற்றிருக்கும் வளர்ச்சி ஆச்சரியமாயிருக்கும் ! சிமிர்னா சபை காலத்தில், போலி சகோதரர்கள் கிறிஸ்தவத்திற்குள்ளே தங்களுக்கென ஒரு கூட்டத்தை (கிறிஸ்தவ அமைப்பை) உருவாக்கினர். அதைத் தொடர்ந்து, இப்பொழுது பெர்கமு சபை காலத்தில் அவர்கள் **மேலோங்கி எழுச்சி** பெற்றனர். இந்தக் கூட்டம் இப்பொழுது சிங்காசனமாக உயர்வு பெற்றது.

**சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மை உள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் :**

அடையாள பாஷையில் 'சாத்தான்' என்பது 'இராஜ்ஜிய அதிகாரம்' என்று அர்த்தம் உடையது. கான்ஸ்டண்டைன் பேரரசனுடைய நேரடி உத்திரவின்படி, ஏரியஸ் மத பகிஷ்காரம் செய்யப்பட்டார் (கொல்லப்பட்டார்).

"அந்திப்பா" என்றால் "அப்பாவுக்கு எதிரி" என்று பொருள்படும். ரோமாபுரி பிஷப் "அப்பா" என்றழைக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டதை ஏரியஸும், அவரைப் பின்பற்றியவர்களும் கடுமையாக எதிர்த்தனர். (இதைத் தொடர்ந்து, பெர்கமு சபையின் பிற்காலப் பகுதியில், குருமார்களுக்கு 'அப்பா' என்ற பட்டம் வழங்கப்பட்டது.) இவைகள் எல்லாம் நிக்கொலாயர்களின் கொள்கை பேதங்கள் ஆகும். இவற்றை இயேசு வெறுத்தார். இயேசுவை பிதாவுக்கு சமமாக மாற்றிய திருத்துவ வேத புரட்டுகளுக்கு எதிராக, ஏரியஸ் போதித்து வந்ததால், அவரை "அந்திப்பா" என்று வசனத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

"எனக்கு உண்மையுள்ள சாட்சி" என்பது இங்கு ஏரியஸைக் குறிக்கிறது. (வெளி 3 : 14ல் "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி" என்பது இயேசுவைக் குறிக்கிறது). 'திருத்துவம்' என்ற கொள்கை பேதத்திற்கு எதிராக போராடிய ஏரியஸ் தமக்கு உண்மையுள்ள சாட்சி என இயேசு தெரிவிக்கிறார்.

ஏரியஸ், இயேசுவின் சுபாவத்தையும், தன்மையையும், தம்முடைய எதிரிகளால் கொலை செய்யப்படும் வரைக்கும் விடாப்பிடியாக பற்றிக் கொண்டிருந்தார். ஏரியஸைப் போலவே, அவரைப் பின்பற்றியவர்களும் இருந்தனர். ஆனால், திருத்துவ கொள்கை யுடையவனால், கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்க முடியாது. ஆலோசனை சங்கங்கள், வேதாகமத்தின் விசுவாச சத்தியங்களை மாற்றியமைத்து, அறிக்கைகள் உருவாகி நடைமுறைப்படுத்திய காலக் கட்டத்தில், சபையின் சகோதரர்கள் முழு மூச்சுடன் வேதாகம போதகங்களை அனுசரித்து வந்தமையால், மத பகிஷ்காரம் பண்ணப்பட்டார்கள்.

**வெளி 2 : 14.**

**ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன் பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமினுடைய போதகத்தைக் கைகொள்ளுகிறவர்கள் உன்னிடத்தி லுண்டு.**

**ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன் பேரில் எனக்குக் குறை உண்டு :**

பெர்கமு சபை காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் வளர்ந்து வரும் கள்ள போதகங்களை தீவிரமாக எதிர்த்து நிற்காமல், தற்காப்பு நோக்கில் செயல்பட்ட மனப்பான்மை இயேசுவுக்குப் பிடிக்கவில்லை.

**விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் :**

இங்கு குறிப்பிடப்படும் 'விக்கிரகங்கள்' எதைக் காட்டுகிறது? இது சபையும் இராஜ்யமும் இணைந்ததைக் காட்டுகிறது. இவற்றுக்கு எவைகள் பலியிடப்பட்டன ? இந்த கிறிஸ்தவ - இராஜ்ய இணைப்பை தடை செய்யும் வேதாகம சத்தியங்கள் தான் பலியிடப்பட்டன. விக்கிரக ஆராதனை முறைமைகளுக்கு அடி பணிந்து மாறுபாடான சத்தியங்களை பின்பற்ற (புசிக்க) சபையின் பரிசுத்தவான்களை பலவந்தப்படுத்தினர்.

**வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை :**

பெர்கமு சபையின் ஆரம்ப காலப் பகுதியிலிருந்தே , மத ஆட்சியாளர்கள் சபையின் சகோதரர்களை சபை- இராஜ்ய இணைப்பில் பங்கேற்க வலியுறுத்தினார்கள்.

**இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமினுடைய போதகத்தைக் கைகொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு :**

இந்த பகுதியைப் புரிந்து கொள்ள, எண்ணாகமம் 22 முதல் 25ம் அதிகாரங்களையும், 31 : 13 - 16ம் வசனங்களையும் படிக்க வேண்டும். மாம்சீக சம்பந்தமான இச்சைகளில் ஈர்க்கப்பட்டு இலாபங்களை (வெகுமதிகளை) அடைய விரும்பும் மனோபாவத்தை "பிலேயாமின் போதகம்" அடையாளப்படுத்துகிறது. மோவாபிய குமாரத்திகளை யூதர்களுக்கு மனைவிகளாக்கும்படி, 'அனுமதிக்கப்படாத' திருமணம் செய்விக்க பாலாக் என்னும் மோவாபிய ராஜாவுக்கு பிலேயாம் கொடுத்த ஆலோசனையினால், இஸ்ரவேலில் வேசித்தனமும், விக்கிரக ஆராதனையும் ஊடுருவியது.

தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள், புறஜாதியான மோவாபிய ராஜாவின் குடிமக்களுடன் சம்பந்தம் கலந்த நிலைமை , ரோம இராஜ்யத்துடன் உறவு கொண்டாடிய போலி கிறிஸ்தவர்களுக்கு நிழலாக உள்ளது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்" என்று அடையாள பாஷையில் குறிக்கப்படும் 'கிறிஸ்தவர்களுக்கு' இஸ்ரவேல் புத்திரர்கள் நிழலாயிருக்கிறார்கள்.

**வெளி 2 : 15.**

**அப்படியே, நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்.**

'பிலேயாமியர்கள்' என்பதற்கு சமமான பதமாக 'நிக்கொலாயர்கள்' என்ற கிரேக்க சொல் உள்ளது. வெளி 2 : 14ல் இஸ்ரவேலுக்கும், பாலாக் ராஜாவுக்கும் இணக்கம் ஏற்படுத்தும் பிலேயாமின் ஆசை, சுய லாபத்தையும், அதிகாரத்தையும் அடைவதற்காக அவன் போராடியதை இயேசு வெளி 2 : 14ம் வசனத்தில் விமர்சிக்கிறார்.

பிலேயாமைப் போலவே, சபையின் தலைவர்கள் தங்கள் சுய நலனுக்காக , சபைக்கும் ராஜ்யத்திற்கும் இணக்கமான ஒத்துழைப்பை நாடினார்கள். "அப்படியே" என்று இயேசு இந்த வசனத்தை ஆரம்பிக்கிறார். நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு என்று குறிப்பிடுகிறார். தானியேல் குறிப்பிடும் "சேனை" மற்றும் "பரிசுத்த ஸ்தலம்" என்ற இரண்டு பிரிவினருக்குமுள்ள வித்தியாசம் இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. வெளி 2 : 9 ம் வசனத்தில் இந்த பிரிவினை முதலில் காணப்பட்டது. இப்பொழுது வெளிப்படையாகத் தெரிகிறது. குருமார்கள் அமைப்பு ஸ்திரமாக வேரூன்றிய நிலையில், அடக்கி ஆளுமை செய்யும் (நிக்கொலாயர்கள்) கொள்கை, கிறிஸ்தவ ஜீவியத்தின் நிலையான அம்சமாக மாறினது.

**வெளி 2 : 16.**
**நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்.**

**நீ மனந்திரும்பு :** சபை - இராஜ்ய இணைப்பினால் வேதப் புரட்டுகள் பெருகிய நிலையில், குருமார்களின் ஆதிக்கத்திற்கு அடி பணியாமல், பரிசுத்தவான்கள் சத்தியத்தில் உறுதியுடன் நிலை நிற்பதையே, கிறிஸ்து சகோதரர்களிடம் எதிர்பார்க்கிறார். இதன் விளைவாக சபை பரிசுத்தவான்கள் மத பகிஷ்காரம் பண்ணப்பட்டு வனாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டாலும், சத்தியத்தில் நிலை நிற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன் :**

'சீக்கிரமாய் வருவேன்' என்பது கிறிஸ்து உடனே வருவார் என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. மாறுபாடான கொள்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன் என்ற கருத்திலேயே இந்த சொற்றொடர் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. "வாய்" என்பது "செய்தி"யைக் குறிக்கும். "பட்டயம்" என்பது வேதாகமச் செய்திகளைக் குறிக்கும். (வெளி 19 : 15).

பெர்கமு பட்டணத்தில் பட்டயங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்தது. இந்த சபையைக் குறித்த செய்தியில், உண்மையான பட்டணம் சம்பந்தமானவற்றையே அடையாளங்களாக கிறிஸ்து கையாண்டுள்ளார். சபையின் சகோதரர்கள் போப்பு மார்க்கத்துக்கும், நிக்கொலாய் முறைமைகளுக்கும் எதிராக பேசி சத்தியத்தை நிலை நிறுத்த முயற்சிக்காவிட்டால், அது தவறு என்பதை கிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார். போப்புவின் தலைமை அதிகாரத்தை ஏற்க மறுத்ததால், ரோமாபுரியிலிருந்து கிழக்கத்திய சபை பிரிந்தது. கிழக்கத்திய சபையும் மேற்கத்திய சபையைப் போல போலிச் சபையாக இருந்தாலும், பட்டயத்தின் வாயிலாக, கிறிஸ்துவின் பிரதிநிதியாக போப்பு அழைக்கப்படுவது முறைகேடானது என்று அறிய முடிந்தது. இதற்கு ஒத்த வகையில், எண் 22 : 23 - 26, 31 ம் வசனங்களில் , தூதன் ஒருவன் பிலேயாமின் பயணத்தை தடுக்க பட்டயத்தை உபயோகித்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிலேயாம் பட்டயத்தைக் காண முடியவில்லை. ஆனால், அவனுடைய கழுதை அதைப் பார்க்க முடிந்தது. கிழக்கத்திய சபைக்கு ஒரு வேளை கழுதை நிழலாக உள்ளதோ ?

**வெளி 2 : 17.**
**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்:**

இந்த செய்தி அக்காலத்திலிருந்த பெர்கமு சபை காலப் பகுதியினருக்கு குறிப்பாக விடுக்கப்பட்டிருந்தாலும் , இது நமக்கும் பொருந்தக் கூடியதாயிருக்கிறது.

**ஜெயங்கொள்கிறவனுக்கு நான் மறைவான மன்னாவை புசிக்கக் கொடுத்து :**

விக்கிரகங்களுக்குக் படைக்கப்பட்ட சீர்கெட்ட உணவு பெர்கமு சபையின் சகோதரர்களுக்கு புசிக்கக் கொடுக்கப்பட்டது. (வசனம்14). ஆனால், ஜெயங் கொண்டவர்களுக்கோ, பசியெடுக்காத, ஜீவனைத் தரும் நித்திய உணவு அளிக்கப்படுகிறது. இந்த பரிசுத்தவான்கள் வனாந்தரத்திற்குப் போக நேர்ந்தாலும், அங்கே காகங்களால் போஷிக்கப்பட்டனர். சீர்கேடு நிறைந்த யுகத்தில் வாழ்ந்த பெர்கமு சபையின் பரிசுத்தவான்களுக்கு அழியாத மன்னா கொடுக்கப்பட்டது. இது மறைவானதும் கூட ! அதாவது, இக்காலப்பகுதயில் போலிச்சபை ஆதிக்கம் செலுத்தி மேலோங்கி இருந்தது. ஆனால், உண்மையான சபை மறைக்கப்பட்டு, வனாந்தரமாகிய தனிமையில் (உலகத்தாரோடு இணையாமல்) போஷிக்கப்பட்டது. படிப்படியாக, இக்கால சபை வெளிப்படையாகத் தெரியாமல் உலகத்தாரின் பார்வைக்கு மங்க ஆரம்பித்தது.

**அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்த கல்லின்மேலே எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது :**

'வெண்மையான குறிக்கல்' என்பது நிரந்தர நட்பையும் சகாயத்தையும் குறிக்கக் கூடிய பாரம்பரிய அடையாளச் சின்னம் ஆகும். இந்த சின்னம் பெர்கமு சபையினருக்கு கொடுக்கப்படுகிறது. பெர்கமு சபை சகோதரர்கள் ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்கும் காலப் பகுதியைச் சார்ந்தவர்களாக இருந்தனர். கொள்கை மாறுபாடு காரணமாக நண்பர்களும், உறவினர்களும் ஒருவரையொருவர் புறக்கணித்தனர். வெண்மையான குறிக்கல் ஜெயங்கொள்ளுகிறவனுக்குக் கொடுக்கப்படும் என்ற வாக்குத்தத்தமானது, காட்டிக் கொடுப்பதற்கு அவசியமே இல்லாமல், நிரந்தர நட்பிற்கும், சகாயத்திற்கும் உத்திரவாதம் அளிப்பதாக உள்ளது.

ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்களுக்கும், தேவனுக்கும் இடையே விளங்கும் உறவினை சாதாரண மனுஷன் உணர இயலாது. வெளி 19 : 12. ஜெயங்கொள்ளுகிற தனி மனுஷனைப் பற்றித் தான் இங்கு முக்கியமாகக் குறிக்கப்படுகிறது. இது 'அமைப்பு' அல்ல ! பூமிக்குரிய வாழ்வில் வனாந்தர நிலையில் நடமாடும் தனிமனிதர்களைத் தான் தேவன் தேடுகிறார். (ஆதி 31 : 46 - 49). ஜெயங்கொள்ளுகிறவன் நித்திய காலமாக தேவனுடைய அன்பை பெறுவான்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

**பெர்கமு உவமை**

**3 ம் உவமை    மத்தேயு 13 : 31 எ 32.**

**கடுகு விதை**

பெர்கமு சபைக் காலப்பகுதியில் ‘கிறிஸ்தவம்’ பெரும் வளர்ச்சி கண்டது. இயேசுவினால் விதைக்கப்பட்ட மூல விசுவாச விதை (மத் 17 : 20) மிகப் பெரிய கட்டமைப்பாக வளர்ச்சி பெற்றது. (வெளி 12 : 5, 6). ஆனால், இந்த மாபெரும் அமைப்பு போலியானதாயிருந்தது. இது சந்தர்ப்பவாதிகள் அனைவரையும் (பறவைகள்), போலி அமைப்பின் விஸ்தாரமான அளவு மற்றும் பாதுகாப்பு (நிழல்) வாயிலாக ஆதாயம் தேடிக்கொள்ள தன் பால் இழுத்தது. (வெளி 18 : 2, 3). பெர்கமு சபை காலப் பகுதியில் ‘பரலோக இராஜ்யத்தின்’ நிலைமை இவ்விதம் இருந்தது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## ஏரியஸ்

## (கி.பி. 250 - 336)

எகிப்திலுள்ள அலெக்ஸாந்திரியா பட்டணத்து சபை மூப்பராக இருந்த ஏரியஸ் தம் அறிவார்ந்த ஆற்றலாலும், சந்நியாச மற்றும் தார்மீக வாழ்வில் மாசற்றவருமாய் பெரும் கீர்த்தி பெற்றிருந்தார். லூஷியன் என்ற வேத வல்லுநரின் கீழ் அந்தியோகியாவில் பேர்பெற்ற இறையியல் பள்ளியில் வேதம் பயின்றார். சபையில் தலைமை குருக்களாக பதவியில் அமர்ந்து, மற்ற அங்கங்களை அடக்கி ஆளுவதை ஏரியஸ் எதிர்த்தார். அலெக்ஸாந்திரியா பட்டண பிஷப் பதவி வேண்டாமென்று ஒதுக்கி விட்டார்.

எல்லா சிருஷ்டிகளையும் படைத்த பரலோக பிதா ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்ற ஆதிச் சபையின் கருத்துக்களைப் பறை சாற்றும் முக்கிய பிரசங்கியாக ஏரியஸ் இருந்தார். அலெக்ஸாண்டர் மற்றும் அதெனேஷியஸ் போன்ற பிஷப்புக்கள் பிதாவுடன் இயேசுவை சமமாகப் பாவித்ததை ஏரியஸ் கடுமையாக எதிர்த்தார். இயேசு எல்லா மனுஷரிலும் தேவதூதர்களிலும் மிக சிரேஷ்டமானவர் என்றும், தேவனுடைய குமாரனாக வணக்கத்துக்குரியவர் என்றும் கூறினார். பிதாவாகிய தேவனிடத்திலிருந்து தனியானவர் என்று பைபிள் சொல்லுகிறது என நம்பினார். குமாரன் பிதாவினுடைய நேரடியான படைப்பு என்றும், தேவனுக்கு சமமானவர் அல்ல என்றும் வாதிட்டார். **பிதா குமாரனை சிருஷ்டிப்பதற்கு முன் குமாரன் இல்லாமல் இருந்த காலம் உண்டு** எனக் கூறினார்.

ஏரியஸ் போதனைகளால் பெருங்கூட்டம் அவரிடம் ஈர்க்கப்பட்டிருந்தது. மதக் குருமார் இவரை பெரிதும் எதிர்த்தனர். இவர் எழுதிய “தாலியா“ (பெரு விருந்து) என்ற புத்தகத்தில் தம் கொள்கைகளை உரை நடை மற்றும் கவிதைகளில் வெளிப்படுத்தியிருந்தார். அவருடைய வார்த்தைகளும், கவிதைகளும் பாமர ஜனங்களிடையே பெரிதும் செல்வாக்கு பெற்றிருந்தன.

அலெக்ஸாந்திரியா பட்டணத்து பிஷப் அலெக்ஸாண்டர் என்பவர், “மதக்குருமார் மாநாடு“ ஒன்று கூட்டி கி.பி. 321ல் ஏரியஸை சபையிலிருந்து தள்ளி வைத்தார். கிழக்கு நாடுகளில் செல்வாக்கு பெற்றிருந்த பிஷப் யூசிபஸ் (நிகோமேதியா நாட்டைச்சார்ந்தவர்) உள்ளிட்ட முக்கிய கிறிஸ்துவர்கள் பலர் ஏரியஸ் கருத்துக்களை ஆதரித்தனர். இந்த சர்ச்சைகள் பெரிதாகி ரோம சாம் ராஜ்யத்தில் பாதகம் விளைவிக்க இருப்பதை உணர்ந்த ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன், இப்பிரச்சனைக்கு தீர்வு காண கி.பி. 325ல் “நிகேயா ஆலோசனை சங்கத்தை“ கூட்டினான்.

பிதா - குமாரன் சமத்துவம் பற்றிய பிரச்னையில் எழுந்த ஆன்மீகக் கருத்துக்களை ரோம பேரரசன் புரிந்து கொள்ளாமல், ஆலோசனை சங்கத்தில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டான். அரசியல் தந்திரியான ரோம பேரரசன், பிஷப் அலெக்ஸாண்டரின் “பிதா - இயேசு சமத்துவக் கொள்கை“ அன்றைய சூழ்நிலைக்கு இசைவும் உசிதமானதுமாய் உள்ளது என முடிவு செய்தான். ஆகவே அதை ஆலோசனை சங்கத்தின் முடிவாக்கிட கட்டாயப்படுத்தினான். அவனது கருத்தை ஏற்றுகொள்ளாதவர்கள் பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என எச்சரித்தான்.

கிறிஸ்து சிருஷ்டிக்கப்படவில்லை என்றும், ஜநிப்பிக்கப்பட்டார் என்றும் நிகேயா ஆலோசனை சங்கம் தீர்ப்பளித்தது. பிதாவின் சுபாவம், பொருள் (substance) அப்படியே கிறிஸ்துவினிடம் இருந்தது என்றும், பிதாவுடன் ஒரே சாரம் (essence) ஆக கிறிஸ்து இருந்தார் என்றும், பிதா இவரை தனியாகப் படைக்கவில்லை என்றும், ஆலோசனை சங்கம் முடிவு எடுத்தது. ஏரியஸ் மற்றும் இரண்டு பிஷப்புக்கள் "மதக் கொள்கை அறிக்கையில்" (Creeds) கையெழுத்திட மறுத்ததைத் தொடர்ந்து மூவரும் நாடு கடத்தப்பட்டனர்.

ஏரியஸ் நிகேயா ஆலோசனை சங்கத்தின் முடிவுக்கு எதிரான "மதக் கொள்கை அறிக்கை" ஒன்றை தயார் செய்தார். ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் பார்வைக்கு இது வந்த பொழுது, ஏரியஸின் அறிக்கையினால் அவன் பெரிதும் ஈர்க்கப்பட்டு, ஏரியஸை திரும்ப அரண்மனைக்கு அழைத்தான். கான்ஸ்டாண்டிநோபிளில் இந்த புதிய அறிக்கை அரங்கேற இருந்த அதே நாளில், சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் திடீரென ஏரியஸ் இறந்தார். அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்று அவருடைய நண்பர்கள் மத்தியில் சந்தேகம் நிலவியது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

பெர்கமு சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 312 | எகிப்து நாட்டில் அலெக்ஸாந்தரியா பட்டண சபை மூப்பரான ஏரியஸ் என்பவர் கிறிஸ்து தேவனால் ஜநிப்பிக்கப்பட்ட குமாரன் என்றும், கிறிஸ்து தேவனுக்கு சமமானவர் இல்லை என்றும், தேவனுக்கு கீழ்ப்பட்டவர் என்றும் வாதிட்டார். |
| கி.பி. 313 | மிலன் சாசனம் : ரோம ராஜ்யத்தில் எல்லோருக்கும் மதச் சுதந்திரம் கொடுக்க தீர்ப்பாணை கொடுக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் கிறிஸ்தவர்களுக்கு திரும்ப கிடைத்தன. |
| கி.பி. 313 | ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் ஞாயிற்று கிழமையை வார ஓய்வு நாளாக அறிமுகப்படுத்தினான். |
| கி.பி. 325 | ஏரியஸின் ஆட்சேபனைகள் ஆதிச் சபையில் பெரும் சர்ச்சையை கிளப்பின. மத உலகில் அமைதியின்மை உருவானதைத் தொடர்ந்து , அதைச் சீராக்க ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் நிகெயா ஆலோசனைச் சங்கத்தை (Council of Nicaea) கூட்டினான். பேரரசனின் பலவந்தத்தின் பேரில் , கிறிஸ்துவும் பிதாவும் சமம் என ஆலோசனைச் சங்கம் முடிவெடுத்தது. ஏரியஸ் குற்றவாளி என தீர்மானித்து, அவரை இல்லிரிகம் நாட்டிற்கு நாடு கடத்தினான். |
| கி.பி. 264-340 | சிசெரியா பட்டணத்து பிஷப் யூசிபியஸ் ஆதிச் சபையின் வரலாற்று தந்தை. பெரும் எழுத்தாளர். புதிய ஏற்பாட்டு புத்தகங்களை பட்டியலிட்டு வகைப்படுத்தினார். நிகெயா ஆலோசனைச் சங்கத்தின் நடவடிக்கைகளில் இவர் நடு நிலை வகித்தார். |
| கி.பி. 342 | துருக்கி நாட்டின் நிக்கமேதியா பிஷப் யூசிபியஸ் ஏரியஸின் வலுவான ஆதரவாளராக இருந்தார். நிகெயா ஆலோசனைச் சங்கத்தில் கலந்து கொள்ள ஏரியஸ் ஆதரவாளர்களாயிருந்த 20 பிஷப்புகளுக்கு யூசிபியஸ் தலைமை தாங்கினார். பிற்காலத்தில் கான்ஸ்டான்டி நோபிளுக்கு தலைமை பிஷப் பதவியில் இருந்தார். |
| கி.பி. 334 | சாம்ராஜ்யத்தின் தலைநகர் ரோமாபுரியிலிருந்து கான்ஸ்டாண்டி நோபிளுக்கு மாற்றப்பட்டது. இந்த தலைநகர் மாற்றத்தால் ரோமாபுரியிலிருந்த பிஷப், ரோம பேரரசருக்குப் பதிலாக குடிமக்களுக்குப் பாதுகாவலாக மேன்மையான அந்தஸ்து பெற்றார். |
| கி.பி. 375 | தேவ தூதர்களையும், மரித்த பரிசுத்தவான்களையும் ஆராதனை செய்ய வழிவகுக்கப்பட்டது. |
| கி.பி. 380 | ரோம பேரரசன் தியோடசியஸ் காலத்தில் கிறிஸ்தவ மதம் கட்டாயமாக்கப்பட்டது. புற மதக் கோயில்கள் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவக் கோயில்கள் மிகச் சிறப்பு வாய்ந்த அளவில் நிர்மாணிக்கப்பட்டன. |
| கி.பி. 394 | தினந்தோறும் அனுசரிக்கும்படி “திருப்பலி” (MASS) அனுசரிக்கப்பட்டது. |
| கி.பி. 340-420 | ஜெரோம் என்ற கத்தோலிக்க கல்விமான் மூல மொழிகளிலிருந்து லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். (வல்கேட் பைபிள்). |
| கி.பி. 354-430 | அகஸ்டின் என்பவர் வடக்கு ஆப்பிரிக்காவின் விசேஷித்த பிஷப்; கிறிஸ்துவத்தின் சபைக்குரிய சட்ட திட்டங்கள், நியமங்களை உருவாக்கிய செல்வாக்கு மிக்க அறிஞன். |
| கி.பி. 431 | எபேசு ஆலோசனைச் சங்கம் நடைபெற்றது; மரியாள் “கடவுளின் தாய்” என அழைக்கப்பட்டார். கான்ஸ்டான்டி நோபிள் பிஷப் நெஸ்டோரியஸ் பதவியிறக்கப்பட்டார். |
| கி.பி. 440-461 | போப் லியோ (Leo the Great) பதவியில் இருந்த காலம்; மத்திய காலத்திய போப்பு மார்க்கத்தை ஒரு மரியாதைக்குரிய சக்தியாக , போலியாக வடிவமாக்கியவர் இவரே! போப்பு மார்க்கத்திற்கு எதிரான கொள்கையுடையோருக்கு “ சமுதாயத்திற்கு விரோதமான குற்றம்” என வரையறுத்து மரண தண்டனை அளித்தார். |
| கி.பி. 415 | ரோம பேரரசன் வாலண்டைன் III மேற்கத்திய சபைகளின் தலைமையாக ரோமை பிஷப்பை அங்கீகரித்தார். |

| | |
|---|---|
| கி.பி. 476 | ரோமாபுரியின் விழுகை மேற்கத்திய ரோம சாம்ராஜ்யத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. (தானியேல் 7 : 8 ல் முதற் கொம்பு). |
| 5ம் நூற்றாண்டு | ரோம பிஷப்பின் கௌரவத்தை அரசியல் நிகழ்ச்சிகள் மேன்மைப்படுத்தின. |
| கி.பி. 500 | கத்தோலிக்க குருமார்கள் விசித்திரமான ஆடைகளை அணிய ஆரம்பித்தனர். |
| கி.பி. 533 | ரோம பேரரசன் ஜஸ்டினியன் , எல்லா சபைகளுக்கும் தலைமையாக ரோமை பிஷப்பை அங்கீகரித்தார். |
| கி.பி. 539 | ஆஸ்ட்ரகோத் (தானியேல் 7 : 8 ன் மூன்றாவது கொம்பு) ஜாதியினர் ரேவன்னா என்ற இடத்தில் ரோமப் படையினரால் தோற்கடிக்கப்பட்டனர். கான்ஸ்டாண்டைன் நோபிளிலிருந்து இத்தாலியை சரி வர ஆட்சி புரியாத நிலையிலிருந்த ரோம பேரரசனுக்குக் கிடைத்த இந்த வெற்றியினால் ஏற்பட்ட அதிகார வெற்றிடத்தை போப்பு மார்க்கம் நிரப்பியது. தானியேல் 7 : 8ன் சின்ன கொம்பு ரோமாபுரியில் வலிமை பெற்றது. தானியேல் 12ம் அதிகாரத்தில் காலக் கணக்குகள் 1260,1290,1335 துவக்கம் பெற்ற காலக்கட்டம் இதுவே! |
| கி.பி. 554 | ஜஸ்டினியனால் போப்புவின் அரசியல் திகாரம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. |
| கி.பி. 590-604 | கிரகொரி I ன் ஆட்சி : மேற்கத்திய சபைகள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, ஐரோப்பாவில் போப்பு மார்க்கத்தின் அதிகாரத்தை கோலேச்சிய உண்மையான முதல் போப்பு இவரே ! பொது வழிபாட்டு முறையை (LITURGY) முறைமைப்படுத்தினார். "உத்தரிக்கும் ஸ்தலம்" என்ற புது மதக் கொள்கையை உருவாக்கினார். |
| 6 ம் நூற்றாண்டு | போப்புவின் மேலோங்கிய அதிகார வளர்ச்சி அரசியல் மற்றும் மதப் பகுதிகளில் காணப்பட்டது. |
| கி.பி. 732 | பிரான்ஸில் டூர்ஸ் (TOURS) என்ற இடத்தில் நடந்த போரில் முஸ்லீம்கள் பெரும் தோல்வியுற்றனர். இதைத் தொடர்ந்து, ஐரோப்பாவில் முகம்மதிய மார்க்கம் தடை பண்ணப்பட்டது. |
| கி.பி. 754 | ஃபிராங் பிரிவினரின் அரசன் பெப்பின் என்பவன் "லம்பார்டுகளை" வெற்றி கொண்டான். இத்தாலி முழுவதிலுமிருந்த லம்பார்டுகளின் நிலங்களை பெப்பின் அரசன் போப்புவிற்குக் கொடுத்து, போப்பு நாடுகளின் பூமிக்குரிய ராஜாவாக போப்புவை உயர்த்தினான். |
| கி.பி. 786 | சுரூபங்களையும், சிலுவையையும் வணங்க அதிகாரம் அளிக்கப்பட்டது. |
| கி.பி. 800 | லியோ III என்ற போப்பு "சார்ல்மேகன்" என்பவரை ரோம பேரரசனாக முடிசூட்டினார். இந்த பேரரசின் வலிமை மிக்க அரசாட்சியும், போப்புமார்க்கத்துடன் இருந்த பரஸ்பர உறவுகளினிமித்தம் போப்பு மார்க்கத்தின் வல்லமை உலக அரங்கில் பெரிதானது. " போப்புவின் ஆயிர வருட அரசாட்சியும்" ஆரம்பமானது. |
| கி.பி. 858 | போப்பு நிக்கொலஸ் I சபைகள், மற்றும் சிவில்அதிகாரங்கள்அனைத்திற்கும் தானே ஆளுநர் என உரிமை கொண்டாடினார். |
| கி.பி. 870-1050 | "இருண்ட யுகத்தின் நடு இரவு" காலம் இதுவே! போப்பு மார்க்கத்தின் இருண்டகாலம், லஞ்சம், ஊழல், கற்பின்மை, கொலைகளுக்கும் வழி வகுத்தன. |
| கி.பி. 1000 | கிறிஸ்தவ நாடுகளில் உலக முடிவு மற்றும் நியாயத்தீர்ப்பு குறித்த பய உணர்வு எங்கும் நிலவியது. |
| கி.பி. 1054 | தலைமை காரணமாக , மேற்கத்திய சபையும், கிழக்கத்திய சபையும் பிரிந்தன. ரோமை பிஷப்பின் அதிகார தலைமையை (போப்புவின் உரிமையை), கான்ஸ்டாண்டி நோபிள் தலைமை பிஷப் எதிர்த்தார். |
| கி.பி. 1073 | போப்பு கிரகொரி VII ஆட்சியில், இவ்வுலகத்தின் அனைத்து பிரிவினரும் போப்புவிற்கு கீழ்படியக்கூடிய முழுமையான அதிகாரம் படைத்தவராக உயர்த்தப்பட்டார். கத்தோலிக்க குருக்களின் பிரமச்சரியத்தை சட்டமாக்கினார். |

# தியத்தீரா சபை

## வெளி 2 : 18 - 29.

## முன்னுரை

தியத்தீரா சபையின் காலப்பகுதியில் பீட்டர் வால்டோ என்பவர் பிரெஞ்சு மொழியில் பைபிளை மொழி பெயர்த்தார். கி.பி. 300ம் ஆண்டுகளில் மொழிபெயர்க்கப்பட்ட லத்தீன் வல்கேட் பைபிளுக்குப் பிறகு வெளிவந்த முதல் மொழிபெயர்ப்பு இந்த பிரெஞ்சு பைபிள் ஆகும். லத்தீன் மொழி பேச்சு வழக்கிலிருந்து மறைந்த பிறகு, லத்தீன் மொழியில் படிக்கத் தெரியாதவர்களுக்கு பைபிள் படிக்க முடியாத நிலை இருந்து வந்தது. இந்த நிலைமையை பீட்டர் வால்டோ மாற்றினார். இந்த மாறுதல் போப்பு மார்க்க அதிகாரத்திற்கு இழைக்கப்பட்ட பெரும் ஆபத்தாக அமைந்தது. வால்டோவும் அவரைப் பின்பற்றியவர்களும் (வால்டனேஷியர்களும்) மறைமுகமாக இயங்க வேண்டியிருந்தது. அவர்கள் பட்டணங்களை விட்டு, மலைகளில் சிறு சிறு குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இந்த மறைவான இடங்களிலிருந்து வியாபாரிகளாக பல இடங்களில் தங்களுடைய வாடிக்கையாளர்களை எளிதில் நெருங்கி, அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகி, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்.

தியத்தீரா சபையின் காலப்பகுதியில் தான், 'போப்பு மார்க்கத்தின் பாபிலோனிய சிறையிருப்பு' நடந்தது. கி.பி 1309ம் ஆண்டிலிருந்து எழுபது ஆண்டுகள், ரோமாபுரி யிலிருந்து எவிகன் என்ற இடத்திற்கு போப்பு மார்க்க தலைமையிடம் மாற்றப்பட்டது. இந்த இடமாற்றம் முக்கிய விஷயமாகத் தோன்றாவிட்டாலும், இதன் அரசியல் மற்றும் ஆவிக்குரிய விளைவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இந்த விளைவுகள் வலுவடைந்து சர்தை சபை காலப் பகுதியில் மூன்று போப்புக்கள் ஒரே சமயத்தில் இயங்கினர்.

இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே ஏற்பட்ட நிலத்தகராறு காரணமாக கி.பி. 1337 ல் 'நூறு வருஷ யுத்தம்' (The Hundred Years War) ஆரம்பித்தது. இந்த போரில் பிரெஞ்சு பொருளாதாரம் அழிந்து, ஏராளமான பிரெஞ்சு மக்கள் இறந்தனர். இத்துடன் கொள்ளைநோயும் பரவி, 'விவசாயிகள் போர்' ஏற்பட்டது. இப்பிரச்சினைகள் ஆட்சியிலிருந்தோருக்கு (சபை மற்றும் அரசாங்கத்திற்கு) ஒரு மாபெரும் சவாலாக அமைந்தன. 'நூறு வருஷ யுத்தம்' நூறு வருஷங்களையும் தாண்டி கி.பி. 1443ல் தான் முடிவடைந்தது.

கி.பி. 1334 - 1354ல் ஏற்பட்ட 'கருப்பு சாவு' (Black Death) என்றழைக்கப்படும் கொள்ளைநோய் மனுக்குலத்துக்கு நேர்ந்த மிகப்பெரும் சீரழிவு ஆகும். ஐரோப்பியக் கண்டத்தின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இறந்தனர் என்று குறைந்த பட்ச மதிப்பீடு கூறுகிறது. மூன்றில் இரண்டு பங்கு ஜனத்தொகை இறந்திருக்கலாம் என்று அதிகபட்ச மதிப்பீடு கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளால் போப்பு மார்க்கம் பலவீனம் அடைந்ததைத் தொடர்ந்து, கடைசி மூன்று எக்காளங்கள் (வெளி 8 : 13) ஊதப்பட ஆயத்தமாயின.

## தியத்தீரா சபை

**வெளி 2 : 18.**

**தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் : அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது .**

நான்காம் சபையின் தூதன் பீட்டர் வால்டோ ஆவார். இவர் லியோன் நகர பணக்கார வியாபாரி. போப்பு மார்க்கத்தின் பயங்கரமான தவறுகளை வேதாகமத்தின் வாயிலாக தெரிந்து கொண்டார். தம் சொத்துக்களை பைபிளை மொழிபெயர்க்கவும், சீஷர்களைப் பயிற்றுவிக்கவும், தம்மால் முடிந்த அளவு சுவிசேஷத்தை பரப்புவதிலும் செலவழித்தார். அவர் தீவிரமாக தூய்மையான வாழ்க்கை நடத்தியவர். அவர் விட்டுச்சென்ற இயக்கம் (பல மாறுதல்களுக்கு உட்பட்டாலும்) இன்றும் இத்தாலியில் செயல்படுகிறது. சபை நடவடிக்கைகளின் தேவைகளுக்கு எந்தவிதத்திலும் குருத்துவத்தை நம்பிச் சார்ந்திருக்கத் தேவையில்லை என்று அவர் பிரசங்கித்தார்.

**தியத்தீரா :** இந்த பெயருக்கு 'பலியின் சுகந்த வாசனை' என்று அர்த்தமாகும். போப்பு மார்க்கத்திற்கு சொந்த பிரச்சினைகள் பல இருந்தாலும். அதற்கு எதிரானவர்களை அடக்குமுறை செய்யும் தீவிரம் சிறிதும் குறையவில்லை. 'மத விசாரணையின் பிதா' என்று அழைக்கப்படும் 'டொமினிக்' வாழ்ந்த காலப்பகுதி இது ! இக்காலக்கட்டத்தில் சபையின் சகோதரர்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகினர். அடக்குமுறைகளுக்குத் தப்பி கூடியவரையில் இரகசியமாக இயங்கி வந்தனர். போப்புமார்க்கத்தின் சட்ட விரோத சிறையிருப்பு போன்ற நிர்ப்பந்தங்களுக்கிடையில், சபையினரின் தியாக பலியை இயேசு பாராட்டுகிறார். சபையின் பெயரும் சொல்லர்த்தமாக இவர்களின் தியாக பலியை உணர்த்துகிறது. (தியத்தீரா = பலியின் சுகந்த வாசனை).

தீர்க்கதரிசன அம்சங்களைக் கொண்ட அடையாள பட்டணமாக தியத்தீரா பட்டணம் உண்மையில் இருந்தது. இந்த பட்டணம், சிவப்பு, இரத்தாம்பரம் போன்ற நிறங்களில் சாயங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடமாகும். வெளி 17 : 4 ஐ ஒத்துப் பார்க்கவும்.

**அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது :**

தேவ குமாரனாகிய இயேசு, தம்மை தேவ குமாரன் என்று சபைக்கு முன்பாக அறிமுகப்படுத்திக் கொள்கிறார். ஏனெனில், போப்புமார்க்கத்தின் ஆதிக்கம் தியத்தீரா சபையின் காலத்தில் தலை தூக்கிய நிலையில், போப்பு தன்னை 'தேவனுடைய குமாரனின் பிரதிநிதி' (Vicarius Son of God) என்று அழைத்துக் கொண்டார். இவ்விதமாக, இயேசு உண்மையையும், பொய்யையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இதைப் போன்றே, தானியேல் 7 : 8ல் போப்பு மார்க்க கண்களின் தனித்தன்மை விவரித்துக் காட்டப்பட்டுள்ளது. அதற்கு ஒப்பிடும்படியாக, இயேசு தம் கண்களின் தனித்தன்மையை அடுத்து வரும் அடையாளத்தில் வெளிப்படுத்துகிறார்.

**அக்கினி ஜுவாலை போன்ற கண்களும் :**

'கண்கள்' என்பது, ஞானத்தையும் , பகுத்தறியும் தன்மையையும், அக்கறை மிகுந்த கவனிப்பையும் குறிப்பனவாக உள்ளன. தியத்தீரா சபையின் முழு காலப்பகுதியிலும் சபை வனாந்தர நிலைமைக்குத் தள்ளப்பட்டதால். கர்த்தராகிய கிறிஸ்துவின் பாதுகாப்பும், ஞானமும் சபைக்குத் தேவைப்பட்டன. வெளி 12 : 14ல் கழுகு (கூரிய பார்வைக்கும், ஞானத்துக்கும் அடையாளம்) வனாந்தரத்திலிருந்த சபையை போஷிப்பித்தது.

'அக்கினி ஜுவாலை' என்பது, கூரிய பார்வையைத் தொடரும் நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாக இருக்கிறது. இயேசு தம் பரிசுத்தவான்களின் தேவைகளையும் அவர்கள் அனுபவிக்கும் உபத்திரவங்களையும் தொடர்ந்து கவனித்து வருகிறார். அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் நியாயத்தீர்ப்பின் பார்வையிலிருந்து தப்பாது என்பதும் அடையாளமாக இங்கு காட்டப்பட்டிருக்கிறது.

**பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள :**

இந்த சொற்றொடர் இருவித நுட்பமானக் கருத்துக்களைக் கொண்டுள்ளன.

1) 'பாதங்கள்' என்பது மாம்சத்தில் இருக்கும் சபையினர் பூமியில் இயேசுவின் பிரதிநிதிகளாக இருப்பதை குறிக்கிறது. இவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதை இயேசு நினைவூட்டுவதாக இந்த வசனத்திலிருந்து உணரலாம்.

2) இயேசுவைக் குறிக்கும் இந்த அடையாளம், அவர் பூமியில் நடமாடும் போது பூரண புருஷனாக வாழ்ந்து காட்டினார் என்பதை சபைக்கு நினைவூட்டும்படியாக உள்ளது. அதைப் போலவே, பெரும் அடக்குமுறை இன்னல்களுக்கு மத்தியிலும் நீதிமானாக்கப்படுவதிலிருந்து வழுவிப் போகாதபடி இயேசு தம் பரிசுத்தவான்களுக்கு துணையாயிருப்பார் என்பதை உணரலாம்.

**வெளி 2 : 19.**
**உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் .**

வால்டோ மேற்குறிப்பிட்ட குணலட்சணங்களை தன்னகத்தே கொண்டு, அவர் காலத்தில் வாழ்ந்த சகோதரர்களுக்கு முன்மாதிரியாக இருந்தார். தனக்கிருந்த எல்லா சொத்துக்களையும் விற்று, தேவ ஊழியத்திற்கு செலவழித்தார். (லூக் 18 : 22).

**உன் கிரியைகளையும் :**
இயேசு தம் சபையினரின் எல்லா நடவடிக்கைகளையும் உற்றுப் பார்க்கிறார் என்பதை சபைக்கு நினைவூட்டுகிறார். யேசபேலிடமிருந்து விலகி சபை ஒளிந்து கொண்டாலும், இயேசுவின் பார்வையிலிருந்து சகோதரர்களின் கிரியைகள் மறைந்திருக்க வில்லை.

**உன் அன்பையும் உன் ஊழியத்தையும் :**
தியத்தீரா சபை சகோதரர்கள் தேவன் பேரிலும், ஏழைகளின் பேரிலும் அன்பு பாராட்டி, சுவிசேஷத்திற்காக துன்பங்கள் அனுபவித்தனர். இவர்கள் அலைந்து திரிகிறவர்கள். ஐரோப்பா கண்டம் முழுமையிலும் சுற்றித் திரிந்து சுவிசேஷம் பரவத்தக்கதாக, முறையாகத் திட்டமிட்டு ஊழியத்தை மேற்கொண்டனர்.

**உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும் :**
யேசபேலிடமிருந்து விலகி, மறைந்து வாழ்ந்து, அவளுடைய தவறுகளுக்கு உடன்படாமல் தம் விசுவாசத்தை சபையார் தக்க வைத்துக் கொண்டார்கள். பெர்கமு சபைக் காலத்தில் பெருமளவில் அடக்குமுறைகள் ஆரம்பமாகி, தியத்தீரா சபை காலப்பகுதியில் வலுவடைந்தன. இந்த சூழ்நிலையில், இவர்கள் மலைகளுக்கு ஒடிப்போனாலும், பொறுமையுடன் ஊழியத்தை செய்து வந்தனர்.

**நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் :**

1. முன்பு செய்த கிரியைகள் 2. பின்பு செய்த கிரியைகள் என்று இங்கு வித்தியாசப்படுத்தப்படுகின்றன.

வெளி 2 : 13ம் வசனத்தையும், வெளி 2 : 19ம் வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டு வசனங்களிலும் கருத்து ஒரே மாதிரி இருக்கிறது. உண்மையில், தியத்தீரா சபை பெர்கமு சபையின் தொடர்ச்சியாகவே உள்ளது. இங்கு புது தூதன் வருகிறார். இரு வசனங்களும் ரோமச் சபையைக் குறித்தே பேசுகிறது. ஆனால், 13ம் வசனத்தில், சபையின் 'விசுவாசம்' மையக் கருத்தாகக் கொண்டு பாராட்டப்படுகிறது. ஆனால், 19ம் வசனத்தில், 'பின்னால் செய்த கிரியைகள்' (ஊழியமும், பொறுமையும்) பாராட்டப்படுகின்றன. பெர்கமு சபையின் துவக்க காலப்பகுதியில் அன்பும், விசுவாசமும் முக்கிய பிரச்சினைகளாக இருந்தன. போப்பு மார்க்கம் ஸ்திரப்படாத காலம் அது. ஆனால், தியத்தீரா சபையின் துவக்கத்தில், அன்பும், விசுவாசமும் பிரச்சினைகளாக இருந்தாலும், அந்த சகோதரர்களின் ஊழியமும், பொறுமையும் மேலோங்கி இருந்தன.

**வெளி 2 : 20.**

**ஆகிலும் உன் பேரில் எனக்கு குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரியானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.**

**ஆகிலும் உன் பேரில் எனக்கு குறை உண்டு :**

இது அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் உள்ளது. இந்த சகோதரர்களின் அன்பு, விசுவாசம், ஊழியம் மற்றும் பொறுமையைக் குறித்து, அவர்கள் பாராட்டப்படுகின்றனர். பிறகு அவர்கள் பேரில் இங்கு என்ன குறை சொல்லப்படுகிறது? சகோதரர்களின் நடத்தையில் ஏதோ ஒரு பலவீனம் தெரிகிறது. வால்டோவைப் பின்பற்றிய வால்டனேஷியர்கள் தங்கள் சாட்சியினை 'மறைமுகமாகவே' செய்தனர். இவர்களின் செயல் போப்பு மார்க்கத்திற்கு எதிராக 'வெளிப்படையான' சவாலாக இருக்கவில்லை. இருப்பினும், இயேசு அவர்கள் பலவீனத்தை திருத்திக் கொள்ளும்படி வற்புறுத்தவில்லை ! வெளி 2 : 4, 5; 2 : 14, 16ம் வசனங்களை ஒத்துப் பார்த்தால், "உன் பேரில் குறை உண்டு" என்று சொல்லிய பிறகு, "மனந்திரும்பு" என்ற வாசகம் தொடரும். ஆனால், தியத்தீரா சபைக்கு அவ்வித அறிவுரை கொடுக்கப்படாமல், "உங்களுக்குள்ளதைப் பற்றிகொள்ளுங்கள்" (வெளி 2 : 25) என்றே இயேசு கூறுகிறார்.

**என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய் :**

ரோமச் சபைக்கும், அவளது சோர நாயகனுக்கும் நிழலாகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த நபர்களை இந்த வசனம் நினைப்பூட்டுகின்றது. பாகாலின் ஆசாரியர்களை காப்பாற்றி ஆதரித்து வந்த யேசபேல், தன் புருஷனான ஆகாப் ராஜாவின் அதிகாரத்தைப் பிரயோகித்து, எலியா தீர்க்கதரிசியை துன்புறுத்தினாள். இதனால் எலியா மூன்று வருடங்களும் ஆறு மாதங்களும் வனாந்தரத்திலே வாழ நேர்ந்தது. அதைப் போன்றே, போலிகிறிஸ்தவ குருமார்களை அரவணைத்துக் காப்பாற்றும் ரோமை சபை, தன் கள்ள புருஷனான இராஜ்ய அதிகாரத்தின் துணையுடன் மெய்ச்சபையை பல இன்னல்களுக்கு உட்படுத்தியது. இதனால், சபையின் பரிசுத்தவான்கள் 1260 'நாட்கள்' (வருஷங்கள்) வரையிலும் வனாந்தர நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.

**யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் :** இராஜ்யங்களுடன் (அரசாங்க அதிகாரங்களுடன்) உறவு கொண்டாடும் போப்பு மார்க்கத்தை அடையாளப்படுத்துகிறது.

**தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற :**

போப்பு மார்க்கம் தன்னை கிறிஸ்துவின் பிரதிநிதியாக மேட்டிமை கொள்வதைக் குறிக்கிறது.

**என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் :**

சபை அங்கங்களை மயக்கி, சபை - இராஜ்ஜீய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வது இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது.

**விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய் :**

சத்தியம் தாறுமாறாக்கப்பட்டு (பலியிடப்பட்டு), சபை - இராஜ்ய அதிகாரத்தினால் விளைந்த கொள்கை பேதங்களை விசுவாசிகள் பின்பற்ற (விழுங்க) செய்தது. கிறிஸ்துவின் இராஜ்யம் இப்பூமியில் இயங்குகிறது என்ற அசத்தியத்தை சபை அங்கங்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது.

**வெளி 2 : 21.**
**அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.**

**அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன் :**

இந்த வசனம் பிற்காலத்தில் நடக்கப்போவதைக் குறித்து சொல்வதாக யூகிக்கின்றனர். ஆனால், இவ்வசனம் கடந்த காலத்தில் நடந்ததையே விவரிப்பதாக உள்ளது. 21ம் வசனம், 20ம் வசனத்துடன் தொடர்புடையதாக தெரிகிறது. அதாவது, 20ம் வசனம் சபை - இராஜ்ய உறவாகிய வேசித்தனத்தை விவரிக்கிறது. இதே விஷயம் தான், 21ம் வசனத்திலும் சொல்லப்படுகிறது.

சபையும் இராஜ்ய உறவுமாகிய ஸ்திரீ-கள்ள புருஷன் வேசித்தனம் எப்பொழுது உலகத்திற்கு வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது? கி.பி. 800ம் வருஷத்தில் சார்ல்மேகனுக்கு போப்பு மகுடம் சூட்டியதிலிருந்து தான் ! கி.பி. 800ம் வருஷத்துடன், தவணையாகிய 360 வருஷங்களைக் (காலம் = Chronas) கூட்டினால், கி.பி. 1160ம் ஆண்டு வருகிறது. இது நான்காம் தூதனுடைய (பீட்டர் வால்டோ) வருகை நடந்த வருஷமாகும். இது வரலாற்றில் எதேச்சையாக நடந்ததாகக் கூற முடியுமா? கி.பி. 800ல் வெளிப்படையாக நடந்த வேசித்தனத்திலிருந்து மனந்திரும்ப தேவன் கொடுத்த 360 வருஷ காலத் தவணை முடிந்தவுடன், யேசபேலின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக நான்காம் தூதனை சபைக்கு அனுப்பினார்.

**தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை :**

இப்பொழுது வசனம் நிகழ்காலத்தில் நடக்கும் தொனியில் கூறப்படுகிறது. (கி.பி. 1160).

**வெளி 2 : 22.**
**இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபச்சாரஞ் செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி :**

இந்த வசனம், யேசபேல் மீதும் அவளுடன் வேசித்தனம் பண்ணியவர்கள் மீதும் மூன்றுவிதமான தாக்குதல்கள் நடைபெறுவதைக் குறிப்பிடுகின்றன.

1) அவள் கட்டில் கிடையாக்கப்படுவாள்;

2) அவர்கள் மிகுந்த உபத்திரவத்திற்கு தள்ளப்படுவார்கள்; (தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பாவிட்டால்);

3) அவளுடைய பிள்ளைகள் கொல்லவே கொல்லப்படுவார்கள்.

**இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி :**

ரோமாபுரியை விட்டு ‘ஏவிகன்’ பட்டணத்தில் போப்பு வாழ்ந்த காலப் பகுதி தான், போப்பு மார்க்கம் கட்டில்கிடையாக இருந்ததாக இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது. ரோமன் கத்தோலிக்க வரலாற்று ஆசிரியர்கள் இந்த காலத்தை ‘பாபிலோன் சிறையிருப்பு’ என்று இப்பொழுது அழைக்கிறார்கள். அரசியல் ரீதியான இந்த தவறு காரணமாக, போப்பு மார்க்கம் ஐந்தாம் சபையின் (சர்தை சபை) காலம் வரையிலும் வெகுவாக பலவீனம் அடைந்தது.

**அவளுடனே விபச்சாரஞ் செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளை விட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி :**

இங்கு குறிக்கப்பட்ட “மிகுந்த உபத்திரவம்” என்பது ‘நூறு வருஷ யுத்தத்தை’ (Hundred Years War) அடையாளப்படுத்துவதாக இருக்கலாம். இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் (போப்புவின் புதிய தலைமையிடம்) இடையே போர்கள் ஏற்பட்டு, ஸ்திரமற்ற நிலை நீடித்ததால், போப்புவின்ஆதரவாளர்கள் பெரிதும் பலவீனமடைந்தனர்.

**வெளி 2 : 23.**
**அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும். அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்.**

**அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன் :**

“கொல்லுதல்” என்ற பதம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் பல்வேறு விதங்களில் அடையாளமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ‘மத பகிஷ்காரம்’ , ‘விசுவாச இழப்பு’, ‘நிலைமையில் மாற்றம்’ என்று பொருள் கொள்ளும் விதத்தில் உள்ளது. மேற்குறிப்பிட்ட வசனத்தில் “கொல்லவே கொல்லுவேன்” என்று கிறிஸ்து கூறிய விதம், உண்மையான மரணத்தைக் குறிப்பதாகவே உள்ளது. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி, ‘கருப்பு சாவு’ (Black Death) ஐரோப்பாவில் நிகழ்ந்தது. இக்காலப்பகுதியைச் சார்ந்த எந்த தீர்க்கதரிசனத்திலும், உலக வரலாற்றில் நடந்த இந்த மாபெரும் சோக சம்பவத்தை ஒதுக்கிவிட முடியாது. ரோமச்சபை என்பது குருமார்கள் அடங்கிய அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் பிள்ளைகளாக, அமைப்பைப் பின்பற்றும் ஜனங்கள் குறிக்கப்படுகிறார்கள்.

**கருப்பு சாவு :** எலிகளை மொய்க்கும் ஈக்களால் கொள்ளை நோய் கிருமிகள் பரவி, ஐரோப்பாவில் ஜனக்கூட்டம் திரளாக வசிக்கும் பகுதிகளைத் தாக்கியது. ஜனக்கூட்டம் அதிகம் வசிக்காத நாட்டுப்புற பகுதிகளில் நோயின் தாக்கம் அதிகம் இல்லை. ஜனநடமாட்டம் இல்லாத மலைப்பகுதிகளில் மறைவாக வசித்து வந்த வால்டோவின் சீஷர்களுக்கு இந்த கொள்ளைநோய் தாக்கும் வாய்ப்பு இல்லை. தியத்தீரா சபையின் பரிசுத்தவான்களின் அனுபவங்களில் இந்த கொள்ளை நோய் சம்பவம் ஒரு பெரிதான விஷயமாக இருக்கவில்லை.

**அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும் :**

இந்த வசனத்தை புரிந்து கொள்வதில் சிரமம் உள்ளது. இதன் காரணமாக, இந்த தீர்க்கதரிசனத்தில் உள்ள "மிகுந்த உபத்திரவம்",சுவிசேஷ யுகத்தின் கடைசியில் நடப்பதைக் குறிப்பதாக சிலர் நினைக்கின்றனர். சமகாலத்திய சம்பவங்கள் தியத்தீரா சபைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் உள்ளதால், இவ்வசனம் சுவிசேஷ யுக இறுதிவரைக்கும் பொருந்தக்கூடியதாக எடுத்துக் கொள்ள முடியாது.

**"எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும்" :**

தியத்தீரா சபை காலப்பகுதி முடிவுற்ற பின் வரக்கூடிய மற்ற சபைகளின் காலப்பகுதிகளை இந்த வசனம் குறிக்கிறதா?

அல்லது

தியத்தீரா சபைக்கு முன்பிருந்த சபைகளையும், பின் வரக்கூடிய சபைகளையும் குறிக்கிறதா?

அல்லது

சபையின் ஏழு காலப்பகுதிகளைக் குறிக்காமல், தியத்தீரா சபையின் காலப்பகுதியிலிருந்த சபைகளைக் (Ecclesia's) குறிக்கிறதா?

இயேசு, யுகம் முழுமையிலும் எந்த நேரத்திலும் கடிந்து கொண்டு, பழி வாங்குவார் என்பதை, பிற்காலத்தில் வரும் சபை பின்னோக்கிப் பார்த்து அறிந்து கொள்வர் என்பதை குறிக்கிறது. மேலும் கிறிஸ்து, 'கருப்பு சாவு' போன்ற விபரீதங்களை அனுமதிக்கும் போது, இந்த பேரழிவுகளை கண்ணோக்கும் சபையினர் நிதானமுடன் செயல்பட உதவும்.

**உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் :**

உள்ளிந்திரியங்கள் (மனங்கள்) : சிறு நீரகங்கள் (kidneys)

இருதயங்கள் (உணர்வுகள்) : இதயங்கள் (hearts)

சிறுநீரகங்கள் : இவை உடலின் கழிவுகளை அகற்றி, தூய்மைப்படுத்தும் அவயவங்கள் ஆகும் ; இது, மனுஷர் மாம்சீகத் தன்மையிலிருந்து ஆவிக்குரிய தனமைக்கு மாறும் சக்தியை அடையாளப்படுத்துவதாகத் தெரிகிறது; இவை ரத்தத்திலிருந்து (ஜீவன்) விஷத்தை (மாம்சீகத்தை) பிரித்தெடுத்துப் போடுகிறது.

இருதயங்கள் : இவை மனுஷ உணர்வுகளை உள்ளடக்கியதாகும் ; உள்ளிந்திரியங்கள் செய்து முடிப்பதற்குரிய உத்வேகத்தை இருதயங்கள் வெளிப்படுத்துகின்றன;

தியத்தீரா சபையின் செய்தியில் இயேசு குறிப்பிடுவது இதுவே !

“எனக்கு ஊழியஞ் செய்கிறேன் என்று சொல்பவர்களின் மன நிலையையும், அவர்களின் செயல்பாட்டையும் உற்று நோக்கி, அவனவனுடைய கிரியைகளின்படி பலனளிப்பேன்” என்று இயேசு தெரிவிக்கிறார்.

**அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன் :**

மேற்குறிப்பிட்ட வசனத்துடன், அடுத்து வரும் 24ம் வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ரோமச் சபையில் இன்னும் கிறிஸ்துவைச் சார்ந்த கூட்டத்தார் இருப்பது தெரிகிறது. சிலர் (வால்டோவைப் பின்பற்றியவர்கள்) ரோமச் சபையிலிருந்து வெளியேறி, மலைகளுக்கு ஓடிப் போய்விட்டனர். இயேசு இவர்களை வித்தியாசமாக வழி நடத்துகிறார்.

இன்னொரு கூட்டத்தார் பற்றி வெளி 2 : 20ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய இவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஸ்திரீயுடன் வேசித்தனம் பண்ணியவர்கள். இவர்களைப் பற்றி வெளி 2 : 22ம் வசனத்திலும் படிக்கிறோம். “தங்களுடைய கிரியைகளை விட்டு மனந்திரும்பாவிட்டால், அவர்கள் மிகுந்த உபத்திரவங்களுக்கு உள்ளாவார்கள்” என இயேசு இந்தக் கூட்டத்தைப் பார்த்து எச்சரிக்கிறார். இதே கூட்டத்தாரைப் பார்த்து, வசனம் 23ல் இயேசு கூறுகிறார் : “உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்”.

வெளி 2 : 20 - 23ம் வசனங்களின் தொகுப்புரை :

1) உலகப்பிரகாரமான விஷயங்களிலிருந்து ஆவிக்குரிய விஷயங்களைப் பிரித்து பார்க்க முடியாதபடி, கிறிஸ்தவர்களை யேசபேல் குழப்பமடையச் செய்தாள். இதுவே வேசித்தனம் ஆகும்.

2) இந்த விஷயத்தில் அவள் மனந்திரும்ப வேண்டுமென்று , அவளுக்கு தவணை கொடுக்கப்பட்டது. ஆனால், அவள் மனந்திரும்பவில்லை.

3) ஆகவே, அவள் மீதும், வேசித்தனத்தில் பங்கு பெற்றவர்கள் மீதும் இயேசு மிகுந்த உபத்திரவங்களை அனுப்பினார்.

4) வெளி 2 : 23ல் “உள்ளிந்திரியங்கள்” என்ற பதத்திற்கு “மனது”, “சிறு நீரகங்கள்” என சில பிரதிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உடலில் அசுத்தத்தைப் பிரித்து, சுத்திகரிக்கும் பணியை ‘சிறு நீரகங்கள்’ மேற்கொள்ளுகின்றன.

   உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து ஆவிக்குரியவற்றைப் பிரித்து உணர்ந்தவர்கள் ஒரு பிரிவினர் ஆவார்கள். பிரித்து உணர இயலாமல், யேசபேல் கற்பித்த வேசித்தனத்தை பின்பற்றுபவர்கள் இன்னொரு பிரிவினர் ஆவார்கள். இந்த இரண்டு பிரிவினர்களுக்கும், அவர்கள் சுத்திகரிக்கப்படுவதின் அளவுக்குத் தகுந்த மாதிரி இயேசு பலனளிப்பார்.

வெளி 2 : 24.

**தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: உங்கள் மேல் வேறொரு பாரத்தையும் சுமத்த மாட்டேன்.**

தியத்தீரா சபை காலப் பகுதியில் சில சகோதரர்கள் (பீட்டர் வால்டோவைப் பின்பற்றியவர்கள்), விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளை (யேசபேலின் வேசித்தனம் என்று அடையாளப் படுத்தப்பட்ட கள்ள போதகங்களை) புசிப்பதற்கு (பின்பற்றுவதற்கு) ஒப்புக்கொள்ளாதவர்கள் வனாந்தர நிலைமையில் வாழ்ந்து வந்தனர். இந்த வால்டனேசியர்கள் தாம், "தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக் கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்து கொள்ளாமலுமிருக்கிற **மற்றவர்கள்**" என்று குறிக்கப்படுகின்றனர்.

**உங்கள் மேல் வேறொரு பாரத்தையும் சுமத்த மாட்டேன் :**

போலிச்சபையின் ரகசியங்களுக்கு உடன்பங்காளிகளாய் இராததால், வால்டனேசியர்கள் 'பதிதர்கள்' என கருதப்பட்டு, மத விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அடக்குமுறை இன்னல்களுக்கு ஆளாகினர். இதுவே அவர்கள் மீதான பாரம். போலிச்சபையினரின் பார்வையில், அவர்களுடைய கொள்கை பேதங்களை பின்பற்றாமல் அடக்குமுறைக்கு ஆளாகும் நிலைமையே வால்டனேசியர் மேலுள்ள பாரம் ஆகும்.

வெளி 2 : 25.

**உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள்.**

தியத்தீரா சபையின் சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த அறிவுரை , அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் ஊழியத்தை இவ்வுலகில் நிறைவேற்றி முடிக்கும் வரைக்கும் தேவைப்பட்டது. இருப்பினும், இந்த அறிவுரை சபையின் எல்லா காலப்பகுதியில் உள்ள சகோதரர்கள் அனைவருக்கும் உரியதாகும்.

வெளி 2 : 26.

**ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்கிறவனெவனோ, அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்.**

மற்ற சபைகளுக்குரிய செய்திகளில் "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு" என்ற சொற்றொடர் மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், தியத்தீரா சபைக்கு மட்டும், சற்று வித்தியாசமாக "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்கிறவனெவனோ அவனுக்கு" என்று கூடுதலாக சொல்லப்பட்டிருக்கிறது.

தியத்தீரா சபைக்குரிய செய்தியில், வசனம் 26ல் இயேசுவின் கிரியைகள், வசனம் 22ல் சொல்லப்படும் யேசபேலின் கிரியைகளிலிருந்து எப்படி மாறுபடுகின்றது என்பது தெளிவாகக் காட்டப்படுகிறது.

**வெளி 2 : 27.**
**அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்.**

'ஜாதிகள்' (nations) தாம் அடக்குமுறைகளை நிகழ்த்தும் தீவிர தரகர்களாக இருந்தனர். ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்கள் தங்களை துன்புறுத்தியவர்கள் மீது ஆட்சி செய்யப்போவது நியாயமான பரிசு ஆகும். தியத்தீரா சபையின் காலத்தில், ஜாதிகள் (இராஜ்யங்கள்) மேல் அதிகாரமுடையவளாய் யேசபேல் (போப்பு மார்க்கம்) இருந்தாள். அவ்விதமே, ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்கள் அதிகாரமுடையவர்களாய், ரோமச் சபையை அகற்றிப் போடுவார்கள்.

இருப்புக்கோலால் ஆட்சி செய்த பாவ மனுஷனை (போப்பு மார்க்கத்தை) அகற்றுவதில் ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்கள் இவ்விதமே செயல்படுவார்கள். சங்கீதம் 2 : 8, 9ம் வசனங்களில் "இருப்புக்கோலால் ஜாதிகளை நொறுக்கி, குயக்கலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவீர்" என்று இயேசுவைக் குறித்து சொன்னபடி, இயேசு ஜெயங்கொள்ளுகிறவர்களுடன் தம் சுதந்தரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

**வெளி 2 : 28.**
**விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்.**

வெளி 22 : 16ல் இயேசு தம்மை விடிவெள்ளி நட்சத்திரம் எனக் குறிப்பிடுகிறார். அவர் இருளுக்கு மத்தியில் வெளிச்சமாய் இருக்கிறார். ரோமச்சபை தன்னை விடிவெள்ளியாக, அதாவது, 'பூமியில் தேவ இராஜ்யமாக' உரிமை கொண்டாடுகிறது. ஆனால், ஜெயங் கொள்ளுகிறவர்களுக்கு உண்மையான விடிவெள்ளி நட்சத்திரம் வழங்கப்பட்டு, மணவாளனுடன் சேர்ந்து போலி உரிமையாளர்களை அழிப்பார்கள்.

**வெளி 2 : 29.**
**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.**

இந்த வாசகம், சபையின் எந்த காலத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், எல்லோரையும் நிதானமாக சோதித்தறியத் தூண்டுகிறது. எல்லா சபைகளின் அனுபவங்களும், எச்சரிப்புகளும், பலமும், பலவீனமும் நமக்குப் பாடமாக அமைகின்றன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## தியத்தீரா உவமை

## நான்காம் உவமை மத் 13 : 33.

## புளித்த மாவு

தியத்தீரா சபையின் காலத்தில் போப்பு மார்க்கமாகிய யேசபேல், மூன்று படி நிறை உள்ள உணவில் கள்ள போதகங்களை (புளிப்பு) மறைத்து வைத்து, எல்லா உணவும் புளித்துப் போகும்படி செய்தாள். இந்த மூன்று படி மாவு பற்றி வெளி 6:6ம் வசனத்தில் 'மூன்றாம் முத்திரையில்' விவரிக்கப்பட்டுள்ளது. "வாற்கோதுமை" என அடையாளப்படுத்தப்படும் "பொதுவான சத்தியங்கள்" எங்கும் கிடைத்ததாகவும், யேசபேல் அவற்றை தடை பண்ணவில்லை என்பதும் மூன்றாம் முத்திரையில் (பெர்கமு சபை காலப்பகுதியில்) சொல்லப்பட்டுள்ளது. நான்காம் சபையாகிய தியத்தீரா சபையின் காலத்திலும், பொதுவான சத்தியங்களை போப்பு மார்க்கம் (யேசபேல்) தடை பண்ணவில்லை. ஏனெனில், இதை தடை செய்தால், தான் கிறிஸ்துவத்தைச் சார்ந்ததாக அது உரிமை கொண்டாட முடியாது. ஆனால், தன் விபரீத நோக்கங்களுக்காக, வாற்கோதுமையில் விஷத்தை மறைத்து வைத்து, எல்லோரும் உண்ணும்படி செய்தாள். அந்த விஷம் அவளுடைய பிள்ளைகளுக்கு மதிமயக்கத்தை உண்டாக்கி, அவளின் இழிந்த திட்டங்களை கண்மூடித்தனமாக பின்பற்றச் செய்தது. அவளுடைய 'விஷம் கலந்த' அடிப்படை கொள்கைகள் எல்லாம் கறைபடிந்தவை என்பது, "முழுவதும் புளிப்புடையவை" என்று அடையாளப்படுத்தப்படுகிறது.

இப்படியாக, நான்காம் முத்திரையை நாம் படிக்கும் பொழுது, அந்த குதிரை மங்கின நிறமுள்ளதாக இருந்தது. அதாவது, உயிர்ப்பிக்க முடியாத செத்த நிலையை அடைந்துள்ளது. அந்த குதிரைக்கு இரத்தம் (ஜீவன்) இல்லாமையால் சவங்களைப் போல வெளுத்துப் போய், ஜீவனை அதற்குள் செலுத்த முடியாத நிலையில் உள்ளது.

முற்றிலும் இருண்ட இந்த காலப் பகுதியில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க இயலாத பஞ்சம் நிலவுவதை இந்த சிறிய உவமை வெளிப்படுத்துகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## பீட்டர் வால்டோ

## (இறப்பு : கி.பி. 1217)

பிரான்ஸில் லியோன் நகரத்தில் ஐவுளி வியாபாரியாக இருந்த பீட்டர் வால்டோ பெரும் பணக்காரர். அவர் தன் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்தவ சத்தியத்தின் பால் பெரும் பக்தி கொண்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டவர்.புதிய ஏற்பாட்டில் சில பகுதிகளை பிரெஞ்சு நாட்டில் அன்று வழங்கிய உள்ளூர் மொழியில் (franco-provencol) மொழிபெயர்த்தார். கி.பி. 1173ல் தன் சொத்துக்களை ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார்.

ரோமன் கத்தோலிக்க சபையில் காணப்பட்ட முரண்பாடுகளையும் குருமார்களின் அதிகார துஷ்பிரயோகங்களையும் தன் உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் சுட்டிக்காட்டினார். உத்தரிக்கும் ஸ்தலம், பரிசுத்தவான்களை ஆராதித்தல், சொருப வணக்கம், பாவ மன்னிப்பு சலுகைகள், மரித்தோருக்கு ஜெபித்தல் போன்ற பைபிளுக்கு விரோதமான வழிபாட்டு முறைகளை கடுமையாக விமர்சித்தார்.

“பதவி அளிப்பு“ (ordination) அடிப்படையில் குருமார்க்க செயல்பாடுகள் இருக்கக் கூடாது எனவும், தனிப்பட்டவர்களின் விசுவாசமே சுவிசேஷ ஊழியத்தின் அடிப்படையாக இருக்க வேண்டுமென்றார். ரோமன் கத்தோலிக்க குருமார்க்க முறையை எதிர்த்தார்.

சபை அமைப்புகளின் தலையீடு இல்லாமல் எளிய வாழ்க்கை வாழ போதித்தார். “லியோன் நகர ஏழை மனிதர்கள்“ (Poor men of Leon) என்ற அமைப்பை உருவாக்கி, அதில் வசதி இல்லாத, விவாகம் பண்ணாத சுவிசேஷ பிரசங்கிகளை அங்கங்களாக்கினார். இவர்கள் ஜோடி ஜோடியாக எல்லா இடங்களுக்கும் சென்று சுவிசேஷத்தை வெளிப்படையாக போதித்தனர். இவர்களின் நடவடிக்கைகளை தலைமை பிஷப் எதிர்த்தார்.

“மூன்றாவது லத்தீன் ஆலோசனை சங்கம்“ (கி.பி. 1179) மற்றும் “வெரோனா ஆலோசனை சங்கம்“ (கி.பி. 1184) பீட்டர் வால்டோவை கண்டித்தன. இவரை போப் இன்னொசென்ட் III பகிஷ்கரித்தார். ரோமச் சபையின் துன்புறுத்தலைத் தொடர்ந்து, மனுஷர்களைவிட கடவுளுக்கு கீழ்ப்படிவதே மேல் என்ற முடிவோடு, பீட்டர் வால்டோவின் ஏழை பிரசங்கிகள் (வால்டெனேஷியர்கள்) பிரான்ஸை விட்டு இத்தாலிக்கும், ஆல்ப்ஸ் மலைக்கும் ஓடிப் போனார்கள். பின்னர், ஐரோப்பா முழுமைக்கும் இவர்களால் சத்தியம் பரவியது. இவர்கள் இந்த இருண்ட காலத்தில் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பைபிளை விவேகமாக கையாண்டு பாமர ஜனங்களிடையே பயனுள்ள முறையில் சுவிசேஷத்தைப் போதித்தனர். வால்டோவைப் பின்பற்றிய இந்த விசுவாசிகள் ரோமன் கத்தோலிக்க சபையினரால் சொல்லொண்ணா துயரடைந்தாலும், பின்னர் 15ம் நூற்றாண்டின் சீர்திருத்த காலம் வரை வால்டெனேஷியர்களின் அமைப்பு செயல்பாட்டில் இருந்து வந்தது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# தியத்தீரா சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
| --- | --- |
| கி.பி. 1096 எ 1291 | சிலுவை வீரர்கள் : இஸ்லாமியர்களின் ஆட்சியிலிருந்து புனித பூமியை விடுவிக்க வலுவான முயற்சிகளை மேற்கொண்டனர்; இந்த முயற்சியில் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரும் தீவிர பங்கு கொள்ள போப்பு அர்பன் II ஊக்கமளித்தார்; முதலில் வெற்றி கிடைத்தாலும், ஆசியா மைனரில் பரவியிருந்த முகம்மதியத்தை நிரந்தரமாக களைய முடியவில்லை. |
| கி.பி. 1122 | வொர்ஸ் உடன்படிக்கை : போப்புமார்க்கத்திற்கும், சிவில்அதிகாரங்களுக்கும் இடையே சமரச ஒற்றுமை ஏற்படுவதற்கு வழி வகுத்தது. |
| கி.பி. 1157 | பிரான்ஸில் வால்டனேசியர்களின் இயக்கம் ஆரம்ப நிலையிலிருந்தது; சுவிசேஷத்தில் கூறியுள்ளபடி எளிய வாழ்க்கை முறையை அனுசரிக்க இந்த இயக்கத்தினர் வலியுறுத்தினர்; வேதாகமத்திற்கு விரோதமான சடங்காச்சாரங்கள், சபையின் ஆடம்பரம் மற்றும் ஆஸ்தியைக் குறித்தும் கண்டனம் செய்தனர்; பிறகு, குருத்துவ முறையை முழுவதுமாக எதிர்க்கத் தொடங்கினர். |
| கி.பி. 1160 | வால்டோ பிரெஞ்சு மொழியில் முதன் முதலாக பைபிளை மொழி பெயர்த்தார். |
| கி.பி. 1163 | டூர்ஸ் மன்றம்: சமய பேதமுள்ளவர்களை தேடிக் கண்டுபிடித்து, சிறையில் போடவும், அவர்களுடைய சொத்துக்களை பறி முதல் செய்யவும் சட்டம் இயற்றப்பட்டது. |
| கி.பி. 1179 | மூன்றாம் லேடரன் மன்றம்: ஏழை பிரசங்கிமார்களை உபதேசம் பண்ண அனுப்பியது குறித்து வால்டோவை கண்டனம் செய்தது. அல்பிஜினேசியர்கள் மத பகிஷ்காரம் பண்ணப்பட்டனர். |
| கி.பி. 1184 | வெரோனா மன்றம் : சமய பேதமுள்ளவர்களையும், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பவர்களையும் கண்டனம் செய்து நாடு கடத்தவும், சொத்துக்கள் பறிமுதல் செய்யவும் ஆணையிடப்பட்டது. |
| கி.பி. 1198 - 1216 | போப்புக்களில் மிகவும் அதிகாரம் உள்ளவராக இன்னொசென்ட் III விளங்கினார் ; தன்னை 'இயேசுவின் பிரதிநிதி' என உரிமை கொண்டாடி, ராஜாக்களை ஆட்சியை விட்டு அகற்ற தனக்கு முழு அதிகாரம் உண்டு என்றார்; ஜனங்கள் தங்கள் மொழியில் பைபிள் படிப்பதை தடை பண்ணினார். சமய பேதமுள்ளவர்களை கண்டுபிடித்து தண்டனை வழங்க 'சபை நீதிமன்றத்தை' நிறுவினார். 'மத விசாரணை நீதிமன்றத்தின்' தந்தையாக (FATHER OF INQUISITION) என்றழைக்கப்பட்டார். அல்பிஜினியர்களை ஒட்டு மொத்தமாக அழிக்க உத்திரவிட்டார். |
| கி.பி. 1229 | டலௌஸ் மன்றம்' : போப்புவின் 'மத விசாரணை சட்ட மன்றத்தை' அங்கீகரித்தது; புரோட்டஸ்டண்டுகள் மீது அடக்கு முறை அனுமதிக்கப்பட்டது; கத்தோலிக்கர்கள் அவர்களை தீவிரமாக துன்புறுத்த அறிவுறுத்தப்பட்டனர்; புரோட்டஸ்டண்டுகள் கூடும் இடத்தை அழிக்கவும், அநாமதேய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டு, சமய பேதமுள்ளவர்களை நெருப்பினாலும், வாளினாலும் சங்கரிக்க உத்தரவிடப்பட்டது. சாதாரண மக்கள் வேதாகமம் வைத்திருக்க தடை பண்ணப்பட்டது. |

| | |
|---|---|
| கி.பி. 1231 | ‘நைட்ஸ் டெம்ப்லர்களை’ (KNIGHTS TEMPLARS) சித்திரவதை செய்து, கொலை செய்ய பிரான்ஸ் மன்னர் பிலிப்பு IV க்கு போப்பு கிளமெண்ட் V மத விசாரணை சட்டமன்ற அதிகாரங்களை வழங்கினார். டாண்ட் (DANTE) ரோமாபுரிக்கு விஜயம் செய்த போது, வத்திக்கானை ‘ஊழலின் சாக்கடை’ என்று வர்ணித்து, அக்காலத்திய போப்புக்கள் நரகத்தின் அடிமட்ட ஆழங்களுக்குள் தள்ளப்பட வேண்டியவர்கள் என்று விமர்சித்தார். |

# சர்தை சபை

## வெளி 3 : 1 - 6

**முன்னுரை :**

சர்தை சபையின் காலப்பகுதி வெறும் 150 வருஷங்கள் உடையது. இருப்பினும், இக்காலப் பகுதியில் நிகழ்ச்சிகளுக்கு குறைவில்லை. 'கருப்புச் சாவு' என்ற கொடிய கொள்ளைநோயின் பிடியிலிருந்து ஐரோப்பா சொஸ்தமாகி திரும்பிவரும் காலத்தில் தான், சர்தை துவக்கம் பெற்றது. பெரும் பேரழிவிலிருந்து விடுபட்ட ஜனங்கள் மிகவும் பக்தி கொண்டவர்களாகவோ அல்லது பிசாசின் பிடியிலோ இருந்தனர். போப்பு மார்க்கத்தின் 'ஏவிகன் சிறையிருப்பு' முடிவுறும் காலம் இது. ஆனால், அதன் விளைவுகள் இன்னும் போப்பு மார்க்கத்தை வெகுவாக பாதித்தது. கி.பி. 1378 - 1418ல் ஏற்பட்ட பெரும் பிரிவினை காரணமாக, ஒரே சமயத்தில் இரண்டு போப்புகள் பதவிப்போட்டியில் ஈடுபட்டனர். (சில சமயங்களில் மூன்று போப்புகள் !)

"நூறு வருஷ யுத்தம்" நடந்து கொண்டிருந்ததால் இங்கிலாந்து நாடு பிரான்ஸை வெறுத்தது. பிரான்ஸில் வாழ்ந்த போப்புவை இங்கிலாந்து அசட்டை பண்ணி புறக்கணித்தது. சிறிது காலத்திற்கு போப்பு மார்க்கத்தின் மீது வெளிப்படையாக சவால் விடும் அளவிற்கு வாசல் திறந்திருந்தது. இந்த தருணத்தில் தான், ஜான் விக்ளிஃப் அந்த வாசல் வழியாக பிரவேசித்தார். ஆனால், விரைவிலேயே இத்தாலிய போப்பு திரும்ப உயர்வு பெற்றதைத் தொடர்ந்து, அடக்குமுறைகள் பயங்கரமாக தலைவிரித்தாடத் தொடங்கின. பொது இடங்களில் பரிசுத்தவான்கள் எரித்துக் கொல்லப்பட்டனர். கி.பி. 1492ம் வருஷத்தில் ஸ்பெயின் தேசத்தில், 'மத நீதிமன்ற விசாரணை' (Inquisition) என்ற பெயரில், சபையினர் மீது கொடுமையான பல அட்டூழியங்கள் நடைபெறத் தொடங்கின.

சர்தை சபையின் காலப்பகுதியில் மறுமலர்ச்சி ஆரம்பமானது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்கு ரோம சாம்ராஜ்யம் விழுந்து போனதால், துருக்கி இஸ்லாமியர் வசமானது. வாடிகன் அரண்மனையும், பீட்டர் தேவாலயமும் கட்டப்பட்டன. சர்தை சபையின் இறுதி காலப்பகுதியில் மார்டின் லூத்தர் என்ற குருவின் வருகை அமைந்தது.

தியத்தீரா சபையின் காலத்தில் இவ்வுலகத்திற்கு பிரெஞ்சு மொழியில் பைபிள் கிடைத்தது. இப்பொழுது, சர்தை சபை காலத்தில் விக்ளிஃப் முயற்சியினால் ஆங்கிலத்தில் பைபிள் கிடைத்தது.

சர்தை சபையின் துவக்க காலத்தில், வேத மாணவர்களிடையே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. தானியேலின் "1335" நாட்கள் தீர்க்கதரிசனத்தை மனதிற் கொண்டு, இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு, 1335 வருஷங்களின் முடிவில் (கி.பி. 33 + 1335 = கி.பி. 1368), அதாவது, கி.பி. 1368ம் வருஷத்தில் கிறிஸ்துவின் வருகையை சபையினர் எதிர்பார்த்தனர். இந்த ஐந்தாம் சபையினுடைய சபை, முத்திரை, எக்காளம் பற்றிய அடையாள பாஷைகளை நாம் உணர்ந்து கொள்ள, இந்த காலப்பகுதியில் நிலவிய எதிர்பார்ப்பை நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஐந்தாம் சபையின் தூதன் ஜான் விக்ளிஃப் ஆவார். இவர் கல்விமானும், பக்தி வைராக்கியமிக்கவரும், திறமைசாலியுமாய் இருந்தார். 'கருப்பு சாவு' என பெயர் பெற்ற கொள்ளை நோய் ஐரோப்பாவை தாக்கிய சமயத்தில், அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தின் மாணவராயிருந்தார். கொள்ளை நோயினால் மூன்றில் இரண்டு பங்கு மாணவர்கள் இறந்த சமயத்தில், அதிசயவிதமாக இவர் தப்பி உயிர் பிழைத்தார். அவர் அங்கேயே பேராசிரியராகப் பணியாற்றி பிரபலமானார்.

பொது மக்களிடம் பிச்சை எடுத்து தம் வாழ்க்கை நடத்தும் (இவர்கள் பெரும்பாலும் பெரும்பணக்காரர்களாக இருந்தனர்), "சமயத்தொண்டில் ஈடுபட்ட மடத்து துறவிகளை" எதிர்த்து விக்ளிஃப் சவால் விட்டார். சபையினரின் மனோபாவம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்ட, 'ஏழைத் துறவிகளை' தொலைதூர கிராமங்களுக்கு ஊழியம் செய்ய அனுப்பினார். இங்கிலாந்தில் 'இரண்டு பேரில் ஒருவர்' என்ற அளவில் பெரும்பாலான மக்கள் விக்ளிப்பின் எளிய உபதேசங்களால் ஈர்க்கப்பட்டனர்.

போப்பு மார்க்கம் பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிய காலத்தில், இங்கிலாந்துடன் பிரான்ஸ் போரிட்டுக் கொண்டிருந்ததால், விக்ளிப்பின் செல்வாக்கு தடைபடாமல் இருந்தது. ஆனால், இந்த நிலை நீடிக்கவில்லை. விக்ளிப்பை பின்பற்றியவர்கள் "லல்லார்டுகள்" (Lollards) என்று அழைக்கப்பட்டனர். இந்த 'ஏழைத் துறவிகள்' இனிய குரலில் மென்மையாகப் பாடியதால் இந்தப் பெயர் பெற்றிருக்கலாம். ('தாலாட்டு' என்ற வார்த்தையிலிருந்து 'லல்லார்டுகள்' என்ற பெயர் வந்திருக்கலாம்). ஆனால், போப்பு மார்க்கத்தினர் இவர்களை 'களைகள்' என அர்த்தம் கொள்ளும் 'லோலியா' (lollia) என்ற பெயரில் அழைத்தனர்.

விக்ளிஃப் அவர்கள் பெருமளவில் பிரசுரங்களை வெளியிட்டு, "ஈடுபலி" யின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தினார். "தேவ வசீகரம்" அதாவது, "பொருண்மை மாற்றம்" (TRANSUBSTANTIATION) என்ற போப்பு மார்க்கத்தின் கொள்கையை வலுவாக எதிர்த்தார். அவர் உயிரோடிருக்கும்வரை போப்புவினால் விக்ளிப்பை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், அவர் மரணமடைந்து அடக்கம் செய்யப்பட்டதற்குப் பிறகு, அவருடைய எலும்புகளை கல்லறையிலிருந்து தோண்டி எடுத்து எரித்து, அந்த சாம்பலை ஸ்விஃப்ட் (Swift) என்ற ஆற்றில் கரைத்தனர். போப்பு மார்க்கத்தின் இந்த செயல் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக அமைந்தது. விக்ளிப்பின் சாம்பலைப் போலவே, ஐரோப்பா முழுவதும் அவருடைய உபதேசங்கள் வியாபித்து, போப்பு மார்க்கத்தின் விழுகைக்கு காரணமாக அமைந்தது.

## சர்தை சபை

**வெளி 3 : 1.**

**சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும், ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது .**

**சர்தை சபை :** "சர்தை" என்றால் "மீதியாயிருப்பவை" என்று அர்த்தம் ஆகும். சர்தை சபை காலப்பகுதியில் நுழையும் மீதியானவர்களை இது குறிப்பதாகக் கொள்ளலாம். தானியேல் 7 : 25ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு இது இசைவாக உள்ளது. போப்பு மார்க்கமானது பரிசுத்தவான்களை பல இன்னல்களுக்குட்படுத்தி கொலை செய்வார்கள் என்று தீர்க்கதரிசனங்கள் முன்னுரைத்தபடி, இந்த சோதனைகளிலிருந்து ஒரு சிலரே உயிர் பிழைப்பார்கள் என்பது தெளிவாகிறது.

**தேவனுடைய ஏழு ஆவிகளையும், ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது :**

சர்தை சபையின் இந்த காலப்பகுதியில் வாழ்ந்த சபையினருக்கு இயேசு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறையில் ஒரு நோக்கமும், பொருளும் உள்ளது. கி.பி. 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயேசுவின் இரண்டாம் வருகையை சபையினர் எதிர்பார்த்திருந்த சமயத்தில், சபை ஏழு காலப்பகுதிகளைக் கொண்டுள்ளது என்பதை இயேசு இந்த வசனத்தின் மூலம் உணர்த்துகிறார். சபையைத் தேற்றும்படியாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நட்சத்திரங்கள் (தூதர்கள்) இன்னும் அனுப்பப்படுவார்கள் என்பதை சூசகமாக தெரிவிக்கிறார்.

**வெளி 3 : 2.**
**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.**

**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் :**

இந்த அறிவிப்பு புதிதானதல்ல. எல்லா சபைகளுக்கும் சொல்லப்படுகிற விஷயம் தான். சபையில் இயேசுவுக்கு இருக்கும் அக்கறையை வெளிப்படுத்துவதாகவும், ஆறுதலாகவும் இருந்தாலும், அதே சமயத்தில், கிரியைகள் குறைவுள்ளதாய் இருந்தால் கொட்டுவதாயும் உள்ளது. வெளி 3 : 2ல் சர்தை சபையின் கிரியைகள் குறைவுள்ளவை என்று அறிவிக்கப்படுகிறது. சபையில் பெரும்பாலோர் தங்கள் வஸ்திரங்களை கறைபடுத்திக் கொண்டுள்ளனர் என்று வசனம் 4 ல் உணரப்படுகிறது.

**நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் :**

'பெயர்' என்பது பொதுவாக 'தன்மை'யைக் (நடத்தையை) குறிக்கும். இந்த தன்மையினால் தன் ஒருவருடைய கீர்த்தியும், பெருமையும் வெளிப்படுகிறது. சர்தை சபை துவங்கியக் காலத்தில், சபை இன்னும் உயிர் பெற்றிருப்பது (போப்பு மார்க்கத்தின் அடக்குமுறைகளுக்குத் தப்பி) பெருமைக்குரிய விஷயமாயிருந்தது. போப்பு மார்க்கத்தின் கொள்கை பேதங்களுக்கு எதிரானதும், வெளிப்படையானதுமான இயக்கமாக சர்தை சபை துவங்கியது. விக்ளிப்பை பின்பற்றியவர்கள் இங்கிலாந்தில் பெருகியிருந்து, அவர்கள் உயிரோடு இருந்ததே பெருமைக்குரிய விஷயமாக இருந்தது.

ஆனால், போப்புவின் அடக்குமுறைகள் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தவுடன், விக்ளிப்பை பின்பற்றியவர்கள் திடீரென்று மறைந்தனர் ! அவர்கள் பெயரளவிற்கே உயிரோடிருந்தனர். அவர்கள் விசுவாசத்தில் நிலைநிற்க முடியாமல், தங்கள் வஸ்திரங்களைக் கறைபடுத்தி கொண்டனர். அதைத் தான், வெளி 3 : 2ல், அவர்கள் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆரம்பத்தில் தீவிரமாக செயல்பட்டனர். ஆனால், விரைவில் அவர்கள் செயல் மங்கியது.

**வெளி 3 : 2.**
**நீ விழித்துக் கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து ; உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை.**

**நீ விழித்துக் கொண்டு :**
கர்த்தராகிய கிறிஸ்து சபையினரை மனந்திரும்பச் சொல்கிறார். சர்தை சபை பல காரியங்களில் லவோதிக்கேயா சபையைப் போல் உள்ளது. நல்ல பிரகாசத்துடன் ஆரம்பித்த சபை தொடர்ந்து நிலைநிற்காமல் குறைவுபட்டது.

**சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து :**
கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய சபையினரின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. ஜான் விக்ளிப்பின் உபதேசங்களால் விழிப்புணர்வு பெற்ற சுதந்திர மனப்பாண்மை, போப்புமார்க்கத்தின் ஆதிக்கத்தால் தகர்க்கப்பட்டது. கிறிஸ்துவுக்குள் தங்களை உளப்பூர்வமாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள், தங்கள் பொறுப்புக்களிலும், நேர்ந்து கொண்டவற்றிலும் இறுதிவரை நிலை நிற்கவில்லை. வஸ்திரங்களில் கறைபடாமல் கிறிஸ்துவின் வழியில் நடப்பது தான் இதன்அளவுகோல் என்பது வெளி 3 : 4ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சபையினரின் சாவுக்கேதுவான இந்த நிலைமையில், கர்த்தராகிய கிறிஸ்துவின் ஒத்தாசை தேவைப்பட்டது.

**உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை :**

கிறிஸ்துவின் வழியில் நடக்க பிரதிஷ்டை பண்ணப்பட்ட சபையினரின் கிரியைகளில் குறைவு காணப்பட்டதால், அவர்கள் சாகிறதற்கு ஏதுவான நிலைக்குத் தள்ளப்பட்டனர். 'லல்லார்டுகள்' துவக்கத்தில் கொண்டிருந்த உத்வேகம், தடுமாற்றம் அடைந்து, நாளடைவில் மங்க ஆரம்பித்தது. இதன் காரணமாக, ஆவிக்குரிய வாழ்க்கை சில சகோதரர்களைப் பொருத்தவரையில் மங்கிப்போய் கேள்விக்குறியாயிற்று.

**வெளி 3 : 3.**

**ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப் போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்.**

**ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து :**

கிறிஸ்துவுக்குள் பிரதிஷ்டை பெற்றவர்கள் தாங்கள் நேர்ந்து கொண்டவற்றை முற்றும் முழுவதுமாக நிறைவேற்ற வேண்டுமெனில், நாம் கேட்டுப் பெற்றுக் கொண்டவைகளை நினைவு கூறவேண்டும். ஆவிக்குரிய உணவாகிய பரிசுத்த வேதாகமத்தில் உள்ள கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் **பெற்றிருக்கிறோம்.** வேதாகமத்திலிருந்து சபை தூதர்கள் வாயிலாக சத்தியங்களை அறியும் வண்ணம் நாம் செவி சாய்க்க (கேட்க) நம்மை பரிசுத்த ஆவி தூண்டுகிறது. சத்தியத்திற்கு மூல ஆதாரம் பைபிள் மட்டுமே என விக்ளிஃப் சபையினருக்கு வலியுறுத்தினார். கேட்டுப் பெற்றுக் கொண்ட வேத வசனங்களை மனதில் இருத்திக் கொள்ளாமல் இருந்தால், பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஒவ்வொருவரும் தாம் நேர்ந்து கொண்டவைகளை நிறைவேற்ற இயலாது.

**அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு :**

சர்தை சபையின் தூதன் விக்ளிஃப் வாழ்ந்த காலத்தில் சபையினருக்கு இருந்த பக்தி வைராக்கியம் போல, சபை அங்கங்கள் பழைய நிலைக்குத் திரும்ப வந்து, சத்திய வேதாகமத்தில் கூறியிருப்பவைகளைக் கைக்கொண்டு அவற்றில் நிலை நிற்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

போப்பு மார்க்கத்தின் மத விசாரணை மன்றத்தின் மரண தண்டனைக்குப் பயந்து, சபையில் பலர் விக்ளிஃப் கூறிய சத்திய வசனங்களை மறுதலித்து, யேசபேலுக்கு தங்கள் ஒத்துழைப்பை நல்கினர். லல்லார்டுகளுக்கு ஆதரவாயிருப்பவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என இங்கிலாந்து மன்னன் ஹென்றி V புதிய சட்டம் இயற்றினான். இந்த சட்டத்திற்கு சபையில் பலர் அடிபணிந்தனர். இதைத் தொடர்ந்த அடக்குமுறைகளால், 'லல்லார்டுகளாக' இயங்கியவர்கள் தலை மறைவு இயக்கமாக செயல்பட ஆரம்பித்தனர்.

போப்புவின் ஆதிக்கத்தினால் வழி விலகிய சகோதரர்கள் மனந்திரும்பி, மறுபடியும் ஊழியம் செய்த பொழுது, அவர்கள் போப்பு மார்க்கத்தால் மரத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டார்கள் என வரலாறு கூறுகிறது.

**நீ விழித்திராவிட்டால், திருடனைப் போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் :**

இயேசு தமது 'இரண்டாம் வருகை சமீபத்திலிருக்கிறது' என்ற கருத்தில் இந்த வசனத்தை சொல்ல முற்படவில்லை. "வருவேன்" என்று சொல்லுவது, "தண்டனைக் கொடுப்பேன்" என்பதை உணர்த்துவதாக உள்ளது. எபேசு சபைக்கும் இதே எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. (வெளி 2 : 5).

அதைத் தொடர்ந்து தண்டனையும் ஏற்பட்டது. எபேசு சபையும், சர்தை சபையும் பெரும் உபத்திரவங்களை சந்தித்தன. எபேசு சபை பெரும் உபத்திரங்களுடன் முடிந்து, அதனிடமிருந்து விளக்குத் தண்டு நீக்கப்பட்டு, சிமிர்னா சபை துவங்கியது. அதைப்போன்றே சர்தை சபை துவங்கிய காலத்தில், போப்பு மார்க்கத்திற்குள்ளாக நிலவிய பிரிவினைகளால், ஜான் விக்ளிஃப் அவர்களின் ஊழியத்திற்கு தடை இல்லாமல், சத்தியம் வேகமாகப் பரவியது. ஆனால், பிரிவினைகள் முடிவடைந்தவுடன், போப்பு மார்க்கத்தின் ஆதிக்கம் தலைதூக்கியதால், சத்தியத்திற்கு மீண்டும் தடை ஏற்பட்டது. துரதிஷ்டமான இந்த புதிய சூழ்நிலை, சர்தை சபையினருக்கு அதிர்ச்சியை அளித்தது. அவர்கள் தடுமற்றம் அடைந்தனர். ஆனால் இயேசு, தாம் திருடனைப் போல் வரப்போவதாக எச்சரிக்கிறார். லூக்கா 12 : 47ம் வசனத்தில் இயேசு கூறியது போல, சத்திய அறிவு அதிகம் பெற்றும் கீழ்படியாதவர்கள் அதிகமாய் தண்டிக்கப்படுவார்கள்; விக்ளிப்பின் பராமரிப்பில் சபை அதிகமாக சத்திய அறிவைப் பெற்றிருந்தும், நித்திரையில் ஆழ்ந்தது.

**வெளி 3 : 4.**

**ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தை சபையிலும் உனக்கு உண்டு ; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடே கூட நடப்பார்கள்.**

**ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தை சபையிலும் உனக்கு உண்டு :**

இந்த வசனப் பகுதி, சர்தை சபையில் இருந்த பரிசுத்தவான்களடங்கிய கூட்டத்தாரை பற்றி சொல்லுகிறது. இந்த திரளான கூட்டத்தாரிலிருந்து, தங்கள் வஸ்திரங்களை கறைபடுத்தாத சிலர் மட்டும் பிரித்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் தாம் வெண்வஸ்திரங்களை அணிந்திருந்த சிறு வகுப்பார் ஆவார்கள். ஜான் விக்ளிப்பை பின்பற்றிய 'லல்லார்டுகள்' இந்த சிறு வகுப்பாரைச் சேர்ந்தவராயிருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. கிழக்கு ஐரோப்பாவில் விக்ளிப்பின் உபதேசங்களில் சிலவற்றை ஹஸ்ஸைத்தியரும் (Hussites), மொரேவியரும் (Moravians) பின்பற்றி வந்தனர். ஆனால், சர்தை சபை காலத்தின் பெரும்பாலான பகுதியில் திரளான கூட்டம் கறைபடிந்த வஸ்திரங்களையே அணிந்திருந்தனர். வெளி 7 : 14.

**அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடே கூட நடப்பார்கள் :**

உபத்திரவங்களையும், வேதனைகளையும் தம் சொந்த அனுபவங்கள் மூலம் கிறிஸ்து அறிந்தவராதலால், சபை அங்கங்களின் தகுதியினை அவர் செவ்வனே கணித்துள்ளார். ஆகவே தான், சபையின் பரிசுத்தவான்கள் இந்த உபத்திரவங்களின் வாயிலாக தம்முடன் நடக்கும்போது, தாங்கள் நீதிமானாக்கப்பட்டிருக்கும் தன்மையை எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்வார்கள் என்று இயேசு கூறுகிறார். " வெண்வஸ்திரங்கள்" பற்றி சர்தை சபையில் இரண்டு தடவைகளும், ஐந்தாம் முத்திரையில் ஒரு தடவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. போப்பு மார்க்கத்தின் மதச் சடங்குகள் மூலம் 'நீதிமானாக்கப்படும்' போலி உபதேசத்தை விக்ளிஃப் கடுமையாக விமரிசித்தார்.

இதைப் போன்றே, ஐந்தாம் உவமையும் (மத் 13 : 44), ஈடுபலியை மையமாகக் கொண்டுள்ளது. ஐந்தாம் தூதனான ஜான் விக்ளிப்பின் மிக முக்கியமான பங்களிப்பு, "ஈடுபலி"யினால் (Ransom) நீதிமானாக்கப்படும் சத்தியத்தை சபையார் கவனத்திற்கு கொண்டு வந்ததேயாகும். ஆனால், ஆறாம் சபையின் தூதனாகிய மார்டின் லூத்தர் ஈடுபலி சம்பந்தமாக சொல்லும்போது, பிரதிஷ்டைக்குட்பட்ட கிறிஸ்தவனாக மாறவேண்டுமானால், ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் விசுவாசத்தின்

அடிப்படையில் ஈடுபலியின் பயனை பெற இயலும் என்று வலியுறுத்தினார். ஐந்தாம், ஆறாம் சபைக்குரிய இரண்டு உவமைகளும் (மத்தேயு 13ம் அதிகாரம்) ஒரே 'கருப்பொருளை' கொண்டிருந்தாலும், அவற்றில் சிறிய வித்தியாசம் இருப்பதை உணரலாம். ஜான் விக்ளிஃப், ஈடுபலி பற்றிய சத்தியத்தை எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டு வந்தார். ஆனால், மார்டின் லூத்தர், இந்த சத்தியத்தை ஒவ்வொருவரும் தன்னுடைய பிரதிஷ்டைக்கு எப்படி பிரயோகிக்க வேண்டும் (விசுவாசம் மூலமாக) என்பதை வலியுறுத்தினார்.

**வெளி 3 : 5.**
**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதாவின் முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.**

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் :**

யேசபேலுக்குத் தம்மை இடங்கொடுக்காதவர்கள் ஜெயம் கொள்ளுகிறவர்கள் ஆவர். இவர்கள் தாங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்டதில் நிலை நிற்பவர்கள். இந்த மாம்சீக சரீரத்தில் களங்கமில்லாதபடி தூய்மையாக கிறிஸ்துவின் வழியில் நடந்தால், திரைக்கு அப்பால் இவர்கள் வெண் வஸ்திரங்களால் தரிக்கப்படுவார்கள் என்று உறுதி அளிக்கப்படுகிறது. அதாவது, அவர்களுக்குப் பரிசாக, நிரந்தரமாக நீதிமான்களாக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள். இந்த வாக்குத்தத்தம் சர்தை சபை பரிசுத்தவான்களுக்கு கூடுதலான பொருள் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. வரலாற்றை நோக்கும்போது, சர்தை சபை காலத்திய பரிசுத்தவான்களுக்கு அருவருப்பாகவும், கோரமாகவும் வஸ்திரங்கள் உடுத்தப்பட்டு, பார்வையாளர்கள் மத்தியில் கேவலமான முறையில் காணப்படும் விதமாக காட்சிக்கு நிறுத்தப்பட்டனர். பிறகு அவர்கள் எரிக்கப்பட்டனர். இயேசுவுக்கும் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு இப்படியே நடந்தது. ஆனாலும், வெளி 3 : 5 வசனத்தில் கூறப்படும் வாக்குத்தத்தம், பரிசுத்தவான்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அவ்ர்களுக்கு வெண் வஸ்திரம் கொடுக்கப்படுவதைக் குறிக்கிறது.

"ஹஸ்" (Huss) என்ற வேத சாட்சி எரிக்கப்படுவதற்கு முன்பாக இதே மாதிரி சிறுமைப்படுத்தப்பட்டார். "ஹஸ்" என்றால் "வாத்து" என்று பொருள்படும் அவர் இறப்பதற்கு முன், " ஒரு வாத்தை நீங்கள் எரிக்கப் போகிறீர்கள். ஆனால், ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, ஒரு "அன்னம்" உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் அதை வறுக்கவோ அல்லது வேக வைக்கவோ உங்களால் முடியாது" என்று கூறினார். ஹஸ்ஸின் மரணத்திற்குப் பிறகு, ஆறாம் சபை தொடங்கிய காலத்தில் மார்டின் லூத்தர், தூதனாக வந்தார். அவருடைய குடும்ப சின்னம் 'வாத்து' ஆகும். ஆனால், மார்டின் லூத்தரை போப்பு மார்க்கம் கொலை செய்ய இயலவில்லை.

**ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல் :**

சர்தை சபை காலத்திற்குரிய சகோதர்களின் அனுபவங்களுக்கு ஒத்த விதமாக இந்த வாக்குத்தத்தம் உள்ளது. விசுவாசத்தில் நிலை நிற்கிற பரிசுத்தவான்களின் நாமங்கள் ரோமச் சபையின் புத்தகத்திலிருந்து விலக்கப்பட்டு (மத பகிஷ்காரம் செய்யப்பட்டு), அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டன. அதை தொடர்ந்து, அவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படுவது உறுதியளிக்கப்பட்டு, ஜீவ புஸ்தகத்தில் அவர்களுடைய நாமங்கள் இடம் பெறுவதைக் காட்டும் ஆறுதலான வார்த்தைகளாக இந்த வசனம் உள்ளது.

**என் பிதாவின் முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் :**

இங்கு "அவனை" அறிக்கையிடாமல், "அவனுடைய நாமத்தை" அறிக்கையிடுவேன் என்று சொல்லப்படுகிறது. "நாமம்" என்பது ஒருவருடைய "நடத்தை"யைக் குறிப்பிடுவதாக உள்ளது. அதாவது, "புது சிருஷ்டியாக வளரப்பெற்ற நிலை" இங்கு அறிக்கைப் பண்ணப்படுகிறது. ஒவ்வொரு பரிசுத்தவானின் அனுபவமிக்க வாழ்க்கையும் மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கும். இப்படிப்பட்டவர்களின் நாமங்கள் அவர்களுடைய மாம்சீக வாழ்க்கையில் பழிப்புக்கும், சாபத்திற்கும் ஏதுவானவையாக இருந்தன. ஆனால், அதற்கு நேர்மாறாக, இயேசு இவர்களின் நாமங்களை பெருமைப்படுத்தி, பிதாவிற்கு முன்பாகவும், தூதர்களுக்கு (மெய்சபையின் மற்ற அங்கங்களுக்கு) முன்பாகவும் அறிக்கை பண்ணுகிறார். லூக்கா 9 : 26ம் வசனத்தை ஒத்துப் பார்க்கவும்.

**வெளி 3 : 6.**
**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது .**

எல்லா சபைகளும் மற்ற காலப் பகுதிகளிலுள்ள சபைகளின் அனுபவங் களிலிருந்து கற்றுணர வேண்டியதை இவ்வசனம் தெரிவிக்கிறது. சர்தை சபையினருக்குக் கொடுக்கப்பட்ட செய்தியிலிருந்து, லவோதிக்கேயா சபை காலப் பகுதியிலிருப்பவர்களும் பலன் பெறலாம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## சர்தை சபை

## சபை உவமை

## ஐந்தாம் உவமை - மத்தேயு 13 : 44.

## நிலத்தில் புதைத்திருக்கும் பொக்கிஷம்

இந்த உவமையில் கீழ்கண்டவற்றை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| நிலம் | : | உலக மனுஷர்கள் |
| பொக்கிஷம் | : | பரிசுத்தவான்கள் |
| புதைந்திருத்தல் | : | பரிசுத்தவான்கள் உலகத்தாரின் பார்வைக்கு தெரியாதவர்களாய் இருத்தல். (சர்தை சபையைப் பொருத்தவரையில் பரிசுத்தவான்கள் மிக அரிதாக இருந்தனர்). |
| மனுஷன் | : | இயேசு |
| விற்று, கொள்ளுதல் | : | ஈடுபலி. |

வெளி 8 : 13ல், நான்காம் எக்காளம் முடிந்த பிறகு, பூமியில் இருக்கிறவர்கள் "ஐயோ" என்ற வேதனையை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். மத்தேயு 13ம் அதிகாரத்தின் முதல் நான்கு உவமைகளும் படகில் இருந்தபடியே ஜனங்களுக்கு இயேசுவினால் சொல்லப்பட்டன. ஆனால், ஐந்தாம் உவமை (மத் 13 : 36), கரையிலிருந்தபடியே சொல்லப்பட்டது.

சர்தை சபைக் கால செய்தியின் முக்கிய அம்சம், சபையில் சிலர் மட்டுமே தங்கள் வஸ்திரங்களை கறைப்படுத்தாமல் இருந்தனர் என்பதே ! இதைத் தான் நிலத்தில் "புதைந்திருப்பதாக" சொல்லப்படுகிறது. கள்ளப் போதகத்தைப் பின்பற்றும் போலிக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், தங்கள் வஸ்திரங்களைக் கறைபடுத்திக் கொண்டவர்களின் மத்தியிலும் மறைக்கப்பட்டிருந்தனர். "சர்தை" என்றால் "மீந்தது" அல்லது "குறைவான அளவு" என்று பொருள்படும். தம்முடைய பொக்கிஷமாகக் கருதி, குறைவான எண்ணிக்கை கொண்டவர்களாய் வெண் வஸ்திரங்கள் தரித்தவர்களாக தம்முடன் நடக்கப் பாத்திரவான்களாயிருக்கும் பரிசுத்தவான்களை இயேசு கண்டுபிடிக்கிறார். திரளான களைகளுக்கு மத்தியில் மறைந்திருக்கும் இந்த பொக்கிஷத்தை இயேசு அறிந்திருக்கிறார்.

உலகமாகிய நிலத்தின் ஒரு பகுதியாக "களைகள்" உள்ளன. இயேசு தமது இதயத்தில் மறைத்து வைத்திருக்கும் பொக்கிஷத்திற்கு மட்டும் தம்மை ஈடுபலியாக செலுத்தாமல், ஒட்டுமொத்த நிலமாகிய உலகத்திற்கே ஈடுபலி செலுத்தினார். இவ்விதமாக, ஈடுபலி பற்றிய இந்த உவமை, ஜான் விக்ளிப்பின் உபதேசங்களின் சாரமாக இருந்தது. அதாவது, ஈடுபலியை முக்கியப்படுத்தி, "பொருண்மை மாற்றம்" (தேவ வசீகரம்-Transubstantiation) என்ற அசத்தியத்திற்கு எதிராக ஜான் விக்ளிஃப் உபதேசித்தார்.அகில உலகம் முழுவதும் திருத்தப்பட்டு, பழைய நிலைக்கு மாற்றப்படும் வரையில், வெண் வஸ்திரங்களுக்கு மறைவில் அவருடைய பொக்கிஷத்தை இயேசு மறைத்து வைக்கிறார்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## ஜான் விக்ளிஃப்

## (கி.பி. 1320 - 1384)

ஜான் விக்ளிஃப் ஆங்கில கல்வியாளர், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைகழக பேராசிரியர், ராஜ தந்திரி.

போப்பு மார்க்கம் அரசியல், சிவில் அதிகாரங்களில் தலையிடுவதையும், அநீதியான வரி விதிப்பு கொள்கைகள் போன்ற அத்துமீறல்களை ஜான் விக்ளிஃப் கி.பி. 1366ல் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு வந்தார். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு பைபிள் ஒன்று தான் ஒரே வழிகாட்டி என்று கூறியதால் போப்பு மார்க்கத்துடன் வெளிப்படையாக மோதல் ஏற்பட்டது.

ரோமச் சபையின் முழு கட்டமைப்பையும் குழிபறிக்கும் விதத்தில் கி.பி. 1378ல் ஜான் விக்ளிஃப், பைபிளின் அடிப்படையில் கொள்கைகளை ஒழுங்குபடுத்தினார். மதம் மற்றும் அரசாங்க விவகாரங்களில் போப்பு மார்க்கம் தக்க வைத்திருந்த தகுதியற்ற உரிமைகளை எதிர்த்தார். அவர் ரோமச் சபையின் தலைமைக்குரு பதவி, குருக்கள் கட்டமைப்பு, பாவ மன்னிப்பு சலுகைகள், சொரூப வணக்கம், பாவ சங்கீர்த்தனம், விரதம், “தேவ வசீகரம்“ அதாவது “பொருள் மாற்றமைவு“ (Transubstantiation) போன்ற வேத முரண்பாடுகளை எதிர்த்தார். இவருடைய போதனைகளால் குருமார்களின் கடுங்கோபத்திற்கு ஆளானாலும், பொதுமக்களின் எல்லா பிரிவினரிடமும் பெரும் ஆதரவு பெற்றிருந்தார்.

இங்கிலாந்திலும், வெளி நாடுகளிலும் உயர்வாக போற்றப்பட்ட ஜான் விக்ளிஃப் துணிச்சலான சீர்திருத்தவாதிகளில் ஒருவர் என புகழப்பட்டார். விக்ளிஃப் தம் வாழ்வில் தூய்மையும், சீரிய குணமும் படைத்தவராய், சத்திய வேதத்தில் மிக்க ஆர்வமும், அதை பாதுகாக்க தைரியம் கொண்டவராயும் இருந்தார். இவர் எப்பொழுதும் வேதாகமத்தை மேற்கோள் காட்டி பேசினதால், இவர் “சுவிசேஷ பிரச்சார அறிஞர்“ (Evangelical Doctor) என அழைக்கப்பட்டார்.

ஜான் விக்ளிஃப் அவர்கள் பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவரது மொழி பெயர்ப்பு மட்டுமே 150 வருட காலத்திற்கு பெரும்பான்மையோரால் உபயோகப் படுத்தப்பட்டு வந்தது.

மத்திய கால இருண்ட யுகத்தில் சீர்திருத்த பிரகடனம் செய்த முன்னோடி என்ற முறையில், ரோமச் சபையின் வல்லமையை தகர்த்திடும் பணியை வெகு காலத்திற்கு முன்பே ஆரம்பித்த பெருமை ஜான் விக்ளிஃப்பைச் சேரும். இவரைப் பின்பற்றிய லல்லார்டுகளை (Lollards) எல்லோரையும் போப்பு மார்க்கத்தார் கொடூரமான முறையில் திட்டமிட்டு கொன்றனர்.

விக்ளிஃப் ரோமச் சபையிடம் அகப்படாமல் அற்புதமாக உயிர் பிழைத்துக் கொண்டார். அவர் கி.பி. 1384ல் இறந்த பிறகு, “கான்ஸ்டன்ஸ் ஆலோசனை சங்க“ தீர்ப்பாணையின்படி அவருடைய எலும்புகளை கி.பி. 1428ல் எரித்து சாம்பலாக்கினர்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# சர்தை சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 1366 | போப்பு மார்க்கத்தின் துஷ்பிரயோகங்களையும், இராஜ்ஜீய உள்விவகாரங்களில் தலையிடுவதையும் விக்ளிப் வெளிப்படையாக கண்டித்தார். |
| கி.பி. 1377 | விக்ளிப் ரோமச்சபையின் ஒட்டுமொத்த ஒழுங்குமுறையை தளராமல் எதிர்த்து, பிரசுரங்கள் வெளியிட்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் விரிவுரைகள் செய்து வந்தார்; இதன் காரணமாக, போப்பு கிரெகொரி XI இவரை 'பதிதர்' என கண்டனம் செய்தார். பொது ஜனங்களால் விக்ளிப் "மறுமலர்ச்சியின் விடியற்கால நட்சத்திரம்" என்று புகழப்பட்டார். |
| கி.பி. 1378 | கத்தோலிக்க சபையில் 'பெரும் பிரிவினை' ஏற்பட்டு, 39 வருஷங்கள் உட்பூசல் நீடித்தது. போப்பு அர்பன் VI என்பவரும், போப்பு கிளமான்ட் VII என்பவரும் ஒரே சமயத்தில் போப்பு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு உயர் அதிகாரம் பெற்றவராக செயல்பட்டனர். |
| கி.பி. 1388 | ஜான் பர்சி என்பவரின் உதவியால் விக்ளிப்பின் பைபிள் மொழி பெயர்ப்பு முழுமை பெற்றது. |
| கி.பி. 1401 | இங்கிலாந்து தேசம் சமய பேதமுள்ளவர்கள் மீது முதன் முதலாக சட்டம் இயற்றியது; இந்த சட்டம், குறிப்பாக 'லலார்டுகள்' மீது குறி வைக்கப்பட்டது. |
| கி.பி. :1408 | ஜான் ஹஸ் (பொஹிமியா) குருத்துவ துஷ்பிரயோகங்களையும், பாவ மன்னிப்பு சலுகைகளையும் வெளிப்படையாக எதிர்த்து பிரசங்கித்தார். அவரை பிரசங்கம் பண்ணவிடாமல் ரோமச்சபை தடை செய்தது. |
| கி.பி. 1409 | விக்ளிப்பின் எழுத்துக்களை முற்றிலும் அழிக்க போப்பு அலெக்ஸாண்டர் V ஆணையிட்டார். பொஹீமியாவின் ஆர்ச் பிஷப் விக்ளிப்பின் 200 புத்தகங்களை பொது இடத்தில் எரித்தார். |
| கி.பி. 1415 | காண்ஸ்டன்ஸ் மன்றம் : விக்ளிப் மரித்து 30 வருஷங்களுக்குப் பிறகு, அவரை பகிஷ்காரம் பண்ணியது. ஜான் ஹஸ் மரத்தில் தூக்கி எரிக்கப்பட்டார். |
| கி.பி. 1453 | துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளை கைப்பற்றினர்; கிழக்கு ரோம சாம்ராஜ்யத்தின் விழுகையைத் தொடர்ந்து ரோமச் சபை போப்புவிற்கு பெரிதான போட்டியாளர் யாரும் இல்லாத நிலைமை உருவாகியது. |
| கி.பி. 1456 | ஐரோப்பாவில் முதன் முதலாக அச்சடிக்கப்பட்ட புத்தகங்களில் பைபிள் ஒன்றாகும்; மெயின்ஸ் நகரில் ஜான் கூட்டென்பர்க் என்பவரால் பைபிள் பிரசுரம் பண்ணப்பட்டது. |
| கி.பி. 1476 | ஸ்பெயின் அரசர் பெர்டினண்ட் & அரசி இசபெல்லாவிற்கு மத விசாரணை நீதிமன்ற அதிகாரங்களை போப்பு சிக்ஸ்டஸ் IV வழங்கினார். தாமஸ் டர்கமா என்ற டொமினிகன் துறவி சமய பேதமுள்ளவர்களை மிகவும் கொடுமையான முறையில் சித்திரவதை செய்து தண்டனையை செயற்படுத்தினார்; இதனால் இவருக்கு "சிறந்த மத நீதிமன்ற விசாரணையாளர்" என்ற பட்டம் அளிக்கப்பட்டது. |
| கி.பி. 1491 | 'சவனரோலா' என்ற பிரான்ஸ் நகர பிரமுகர் குருத்துவத்தின் ஊழலை கண்டித்தார்; அவர் கிபி. 1497ல் போப்பு அலெக்ஸாண்டர் VI செய்த குற்றங்களை கண்டித்தார்; அவருக்கு 'கர்தினாள்' பட்டம் வழங்கப்பட்ட போது, அதை ஏற்காமல் புறக்கணித்தார்; கி.பி. 1498ல் அவரை எரித்தனர். |

# பிலதெல்பியா சபை

# (வெளி 3 : 7 - 13)

**முன்னுரை:**

'பிலதெல்பியா' என்பதற்கு 'சகோதர அன்பு' என்று அர்த்தம் ஆகும். மார்டின் லூத்தர் அவர்களின் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும்" உபதேசம் சகலத்தையும் மாற்றிப்போடத்தக்க அளவில் வல்லமை உடையதாய் விளங்கியது. இது தனிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இடையே உள்ள உறவினை மாற்றி அமைத்தது. ஒவ்வொரு மனுஷனும் தான் நீதிமானாக்கப்படும் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள, தேவனிடம் நேரிடையான பொறுப்புள்ளவனாகிறான். குருத்துவத்தின் மூலம் மனுஷன் நீதிமானாக்கப்பட இயலாது. இப்படியாக, கிறிஸ்துவத்தின் தனித் தன்மை நிலைநாட்டப்பட்டது.

"கிறிஸ்துவுடன் உனக்கு இருக்கும் உறவினை நான் மதிக்கிறேன். நாம் அனைவரும் விசுவாசத்தில் வளரும் நோக்கமாய் சகோதரர்களாக இருக்கிறோம்." ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவனை நோக்கும் பார்வை இதுவே ! பிலதெல்பியா சபையின் பெயரை அடையாளப்படுத்தும் வகையில் 'சகோதர அன்பு பாராட்டுதல்', 'ஒருவரை ஒருவர் மதித்தல்' போன்ற குணலட்சனங்கள் வெளிப்படுகின்றன.

பிலதெல்பியா சபைக்குரிய செய்தியில் எவ்விதமான கண்டனமும் காணப்படவில்லை. சத்தியங்களில் புது வெளிச்சமும், நடைமுறைகளும் பெருகி, ரோமச் சபையின் கட்டுகளிலிருந்து விடுபட்டு, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் நாளை நோக்கி பிலதெல்பியா சபை பயணித்தது.

**வியப்பூட்டும் இணையான தேதி :**

இஸ்ரவேலுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் இணையான அம்சம், புறஜாதிகளின் காலமான 2520 வருஷங்களில் விளங்குகிறது. புறஜாதியார்களின் காலம் (கி.மு. 606ல்) ஆரம்பமாவதற்கு 393 வருஷங்களுக்கு முன்பாக (கி.மு. 999ல்) இஸ்ரவேலின் இரண்டு கோத்திரங்கள் ஒரு பிரிவாகவும், பத்து கோத்திரங்கள் வேறொரு பிரிவாகவும் பிரிந்தன. அதைப் போலவே, புறஜாதியாரின் காலம் முடிவுற்ற கி.பி. 1914ம் வருஷத்திற்கு 393 வருஷங்களுக்கு முன்னதாக, கி.பி. 1521ம் வருஷத்தில், ஆவிக்குரிய இஸ்ரவேலர்களில் 'புரோட்டஸ்டாண்டுகள்' என்று ஒரு பிரிவும், 'ரோமன் கத்தோலிக்கர்' என்ற வேறொரு பிரிவுமாய் ஆனது.

பிலதெல்பியா சபையின் துவக்க காலத்தை அறிய, மேற்குறிப்பிட்ட இணை அம்சங்களையும், வெளி 6 : 9 - 11ல் உள்ள காலத்தையும் கவனித்து, கி.பி 1521 என தீர்மானிக்க உதவுகிறது.

**வெளி 3 : 7.**
**பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும் , ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது .**

**பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில் :**
பிலதெல்பியா சபையின் தூதன் மார்டின் லூத்தர் ஆவார். இவருடைய உபதேசங்களில் சிலவற்றைப் பிடிக்காதவர்கள், வேறொருவர் தூதராக இருக்கும் வாய்ப்புள்ளதாகக் கணித்தனர். அவ்விதம் எண்ணப்பட்டவர்கள் எல்லோரும் அந்த காலத்துக்குரிய சத்திய உணவை அளிக்க வந்த விசுவாசிகள் மட்டுமே.

ஏழு சபைகளுக்குரிய தூதர்களில் ஒருவராகக் கூடிய தகுதி லூத்தருக்கு இருந்தது. அவருடைய கீர்த்தியும், உபதேசங்களும் பல தூர தேசங்களில் வியாபித்திருந்தது. கிறிஸ்துவத்தில் பிளவு ஏற்பட்டதற்கு மூல காரணமாக மார்டின் லூத்தர் திகழ்ந்தார். இது மகத்தானதும், தேவையானதுமான சாதனையாக இருந்தது. வேறு யாவரும் இந்த தனிச்சிறப்புக்கு உரியவர்கள் அல்ல! "விசுவாசத்தினாலே தனி மனிதன் நீதிமானாக்கப்படுகிறான்" என்ற இவரது உபதேசம் சகலரையும் பாதித்தது. இவரே ஆறாம் சபையின் தூதர் ஆவார்.

**பரிசுத்தமுள்ளவரும் , சத்தியமுள்ளவரும் :**

தாம் பரிசுத்தமும், சத்தியமும் உள்ளவரென இயேசு தம்மை சபைக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறார். ரோமச் சபை பரிசுத்தமும், சத்தியமும் கொண்டது என்றும், போப்பு கிறிஸ்துவின் பிரதிநிதி என்றும் எல்லோரையும் நம்ப வைப்பதில் வெற்றி கண்டது. ஆனால், இயேசுவின் அறிமுகம், பிலதெல்பியா சபையினருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. பிலதெல்பியா சபையினர் தங்கள் முழு விசுவாசத்தையும் பரிசுத்தமும், சத்தியமும் உள்ளவரான இயேசுவின் பேரில் வைக்கத் தூண்டும் விதத்தில், இந்த அறிமுகம் இருந்தது.

**தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது :**

ஆவிக்குரிய எல்லா விஷயங்களுக்கும் (லௌகீக காரியங்களுக்கும் கூட) தேவைப்படும் 'திறவு கோல்கள்' தம்மிடம் இருப்பதாக ரோமச்சபை கூறுகிறது. ஆனால், அந்த 'திறவு கோல்கள்' தம்மிடம் உள்ளதாக இயேசு கூறுகிறார். அவர் குறிப்பிட்ட "தாவீதின் திறவு கோல்" என்ற சொல் , ஏசாயா 22 : 22ம் வசனத்தில் காணப்படுகிறது. இது சம்பந்தமாக, ஏசாயா 22 ம் அதிகாரத்தை சிறிது கவனிப்போம்:

**ஏசாயா 22 ம் அதிகாரம் :**

ஏசாயா 22 : 15 - 25ம் வசனங்களில், "செப்னா" மற்றும் "எலியாக்கீம்" என்பவர்களைப் பற்றி படிக்கிறோம். "சீர்திருத்த யுகம்" பற்றி இங்கு உருவகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **"செப்னா"** என்றால் **"வளர்ச்சி"** என்று அர்த்தம். சகலவிதமான பறவைகளும் வந்து தங்கக் கூடிய அளவிற்கு மிகவும் பெரிதாக வளர்ந்த விருட்சமாகிய "போலிக் கிறிஸ்தவம்" இங்கு "செப்னா" என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. **"எலியாக்கீம்"** என்பதற்கு **"தேவனால் எழுப்பப்பட்டவர்"** என்று அர்த்தமாகும். இவன் "இல்க்கியா" என்பவனுடைய குமாரன். **"இல்க்கியா"** என்றால் **"யேகோவாவின் சுதந்திரம்"** என்று அர்த்தம் ஆகும். இல்க்கியா என்பவன் சுதந்தரவாளியான இயேசுவுக்கு அடையாளமாக இருக்கிறான். "எலியாக்கீம்" (பன்மை பெயர்) என்பது, "பரிசுத்தவான்களைக்" குறிப்பதாக உள்ளது. முக்கியமாக, சீர்திருத்த காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களைக் குறிப்பதாகத் தெரிகிறது.

ராஜரீக வம்சத்தாருக்கு பொறுப்பாளியாக்கப்பட்ட செப்னா, தன் சுய கீர்த்திக்கும், ஞாபகத்திற்குமாக பெரும் நினைவுச் சின்னங்களை அமைத்ததற்காக, தேவன் முன்பாக குற்றவாளியானான். தேவன் அவனை அகற்றிவிட்டு, முக்கியமில்லாத இடத்தில் அவன் சாகும் வரை தள்ளி விட்டார். எஜமானுடைய காரியங்களை நிர்வகிக்கும் உக்கிராணக்காரனின் பொறுப்பாகிய "தாவீதின் திறவு கோல்", செப்னாவுக்குப் பதிலாக எலியாக்கீமிற்குக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது, எலியாக்கீமிற்கு வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு அதிகாரம் வழங்கப்பட்டது. எலியாக்கீம் தன் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றி, தன் ஸ்தானத்தில் நிலையாக இருந்ததாக சொல்லப்பட்டது. இது ஒரு உருவகமான கதை. ஆனால், கடைசி வசனத்தில் (ஏசாயா 22 : 25), இந்த சீர்திருத்த சபையும் (பரிசுத்தவான்களும்) பின்பு விழுகையைச் சந்தித்தது.

வெளி 3 : 7 : ரோமச் சபையிலிருந்து வெளிவரும்படியாக இயேசு சுதந்தர வாசலைத் திறந்து விடுகிறார். இந்த பிலதெல்பியா சபையின் காலப் பகுதியில், ரோமச் சபையால் தகாத முறையில் உரிமை கொண்டாடும் வாசலை மூடிவிடுகிறார்.

**வெளி 3 : 8.**

**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்.; உனக்குக் கொஞ்சம் பலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.**

பிலதெல்பியா சபையின் கிரியைகள் என்னவென்று இங்கு குறிப்பிடாவிட்டாலும், அவைகள் சாதகமும், அனுகூலமானதாகவும் இருப்பது தெரிகிறது. தடங்கல் இல்லாதபடி இந்த கிரியைகள் தொடரும்படி வாசல் கிறிஸ்துவினால் திறந்து வைக்கப்படுகிறது. "கொஞ்சம் பலன்" சபையினரிடம் இருந்ததாக வாசிக்கிறோம். இது தானியேல் 11 : 34ம் வசனத்திற்கு ஒத்திருக்கிறது. பெரும் சக்தியாக செயல்படாமல், யேசபேல் ஸ்திரீயை எதிர்க்கும் விதமாக 'கொஞ்சம் பலன்' சபையினரிடம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ரோமச் சபையை விட்டு பிரிந்து போன நிலைமை முதல் முறையாக பிலதெல்பியா சபையின் காலத்தில் தான் நடந்தது, இதற்கு முந்தைய காலப்பகுதிகளில் இருந்த சபையில் இது நடைபெறவில்லை.

கிறிஸ்துவின் வசனத்தைக் கைக்கொண்டதும், அவருடைய நாமத்தை மறுதலியாமல் இருந்ததுமான இந்த இரண்டு குணலட்சனங்கள், சீர்திருத்தக் காலப்பகுதியில் (Reformation) பரிசுத்தவான்களிடத்தில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தன. வேதாகமே விசுவாசத்திற்கு மூல காரணம் என அறிந்திருந்தனர். இதன் வாயிலாகவே தேவனுடைய தன்மையை உணர்ந்து, அதன்படி நடப்பதையே தங்களின் உயரிய இலக்காகக் கொண்டிருந்தனர். மார்டின் லூத்தர் ஒம்ஸ் சங்க (Worms Council) மத விசாரணையின் போது இதே கருத்தை சாட்சியாகப் பகர்ந்தார் : "தேவ வசனம் மெய்ப்பித்துக் காட்டினால் ஒழிய, எனது மனசாட்சிக்கு விரோதமாக நான் நடக்கவோ, மறுதலிக்கவோ மாட்டேன்; தேவனே, எனக்குத் துணை புரியும்." என்று கூறினார்.

**வெளி 3 : 9 - 10.**

**இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன். (பின் இணைப்பு XVII ல் வசனத்திற்கான விளக்கம் பார்க்கவும்).**

**என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் :**

"பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனம்" என்ற கருத்து ரோமர் 15 : 4, 5ல் பிரதிபலிக்கிறது. சீர்திருத்த காலம் முழுமையிலும் சத்திய அறிவு விரைவாக பெருகியதைத் தொடர்ந்து, பரிசுத்தவான்கள் தங்கள் விசுவாசத்திற்கு பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மதப்பிரிவுகளும், மதத்தலைவர்களும் பெருமளவில் பெருகி, கிறிஸ்தவ வாழ்க்கை பொங்கி எழுச்சி பெற காரணமாயின. இத்தகைய சூழ்நிலையின் மத்தியில் பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய சமன்பாட்டு நிலையை அடைய முயன்றனர். பரிசுத்தவான்களின் சுமைகளோடு "சோதனைக் காலம்" மேலும் கூட்டப்படாது என்று இயேசு ஆறுதல் வார்த்தைகளை கூறுகிறார். மத ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் உருவான கருத்து வேறுபாடுகளை சோதனை காலத்தில் பிலதெல்பியா சபை சந்திக்க வேண்டியிருந்தது. அதோடு மட்டுமல்லாமல், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஸ்திரத்தன்மை குறித்த காரியங்களில் பெரும் கிளர்ச்சிகளையும் சபை சந்திக்க வேண்டியிருந்தது. உலகப் பிரகாரமான காரியங்களில் வேரூன்றியிருப்பவர்களை (பூமியில் குடியிருப்பவர்களை) சோதிப்பது தான் சோதனை காலத்தின் நோக்கமாகும். பரிசுத்தவான்களை சோதிப்பது இதன் நோக்கமல்ல. உலகத்தோடு கலவாமல் இருப்பவர்கள் ஜெயங் கொண்டவர்களாகிறார்கள். உலகத்தார் தாங்கள் சார்ந்திருக்கிற அமைப்புகளின் மீது இருந்த நம்பிக்கையினை இழக்கச் செய்து, தேவ இராஜ்யத்திற்குரிய விஷயங்களில் தயார் செய்யும் விதமாகவே சோதனை காலத்தின் நோக்கமாயிருக்கிறது.

**வெளி 3 : 11.**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன் :**

பிலதெல்பியா சபையின் இறுதிகாலப்பகுதியில் வாழ்ந்தோருக்கு இந்த வாக்குத்தத்தம் விசேஷித்த பொருள் கொண்டதாயிருந்தது. வில்லியம் மில்லர் மற்றும் வுல்ஃப் (Wolff) இயக்கத்தினருக்கு (Adventists) இயேசுவின் இந்த வாக்குறுதி பெரும் தூண்டுகோலாக அமைந்தது. பிலதெல்பியா சபையின் காலத்தில் ‘முடிவின் காலம்’ நடக்க இருந்ததால், தானியேலின் தீர்க்கதரிசனங்கள் விளங்க ஆரம்பித்தன. தானியேல் 12ம் அதிகாரத்தில் மில்லர் இயக்கத்தினர் கண்டுபிடித்தது, “சீக்கிரமாய் வருகிறேன்” என்ற ‘இரண்டாம் வருகை’ பற்றிய சத்தியம் தான் !

**ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு :**

“சீக்கிரமாய் வருகிறேன்” என்ற வாக்குத்தத்தத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ள எச்சரிப்பு இதுவே: “உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு” மில்லர் இயக்கத்தினருக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களினால் பலர் விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள். இவர்களின் சம காலத்திய பரிணாமவாதிகள், மார்க்கீசியவாதிகள், தத்துவ ஞானிகள் போன்றோரின் நிலையும் இதுவே. பிலதெல்பியா சபையின் காலத்தில் தம்முடைய வருகை இருக்கும் என்று இயேசு கூறவில்லை. “நான் சீக்கிரமாய் வருகிறேன்” என்று தான் இயேசு கூறினார். தானியேல் தீர்க்கதரிசனங்களின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து, சீக்கிரமாய் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பிரசன்னம் நடந்தது. இச்சம்பவமே, 6 ம் சபையின் காலப்பகுதியினை முடிவுக்கு கொண்டு வந்தது.

**வெளி 3 : 12.**

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்; அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும், என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுதுவேன்.**

பிலதெல்பியா சபையின் காலப்பகுதியில் பல மாறுதல்கள் உண்டாயின. புதிய சத்தியங்கள் வெளிப்பட்டு அவற்றை கண்டுணர ஏதுவாயிருந்தது. அதன் காரணமாக புதிய மதப்பிரிவுகள் பெருக ஆரம்பித்தன. இவைகள் கிறிஸ்தவர்களின் தார்மீக உணர்வுகளை சீரழிக்கும் விதத்தில் அமைந்தன. மாறுதல்களை தொடர்ந்து சந்திக்க மனுஷ சமுதாயம் விருப்பமாய் இராது. இந்த நிலையில் தான், சீர்திருத்த கால பரிசுத்தவான்கள், “தேவனுடைய ஆலயத்தில் தூணாக்குவேன்” என்ற மேலான வாக்குத்தத்தத்தைப் பெறுகிறார்கள். இவர்கள் பேர்ச்சபையாகிய போலி ஆலயத்திலிருந்து விலகியவர்கள். சில சமயங்களில் போலி ஆலயத்திலிருந்து இவர்கள் தூக்கியெறியப்பட்டவர்கள். இவர்கள் தாம், தேவனுடைய ஆலயத்தின் தூணாக மாறப்போகிறவர்கள். “தூண்” என்பது நிரந்தர பாதுகாப்புடன் கூடிய ஸ்திரத்தன்மை கொண்டது. நித்திய ஸ்திரத்தன்மைக்கு தூண் அடையாளமாய் இருக்கிறது.

சபையில் பிரிவுகள் பெருகியதைத் தொடர்ந்து, நாமங்கள் மாறின. ஆனால், “கிறிஸ்தவன்” என்ற நாமமே போதுமானது. இந்த நாமம் ஸ்திரத்தன்மை கொண்டதாய் மாற்றம் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும். தேவனுடைய நகரத்தின் நாமமாகிய புதிய எருசலேம் என்னும் மாறாத நாமம் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அளிக்கப்படுகிறது. சீர்திருத்த காலத்திற்கு முன்பு, ‘ரோமாபுரி’ என்ற நகரம் ஒன்று மட்டுமே கிறிஸ்துவத்தின் மையமாக இருந்தது. ஆனால், உடன்படிக்கையின் வித்தாகிய ‘புதிய எருசலேம்’ , ஆளுகை செய்யும்படியான வாக்குத்தத்தம் பெற்றதாய் உள்ளது. ஜெயங்கொண்டவர்கள், கிறிஸ்துவின் புதிய நாமத்தையும் தரித்து கொண்டவர்களாகிறார்கள்.
எரேமியா 23 : 5, 6 ஐ ஒத்துப் பார்க்கவும்.

“தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா ரட்சிக்கப்படும். இஸ்ரவேல் சுகமாய் வாசம் பண்ணும். அவருக்கு இடும் நாமம் ‘ நமது நீதியாயிருக்கிற கர்த்தர் ’ என்பதே”.

**யாவே** தேவனிடமிருந்து பெற்ற நாமத்தை, இயேசு தம்முடைய மணவாட்டிக்கு கலியாணம் மூலம் பகிர்ந்து கொள்கிறார்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## பிலதெல்பியா உவமை

### 6 ம் உவமை - மத்தேயு 13 : 45, 46.

### விலையுயர்ந்த முத்து

கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவனும் நிலை நிற்க வேண்டும். (விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட வேண்டும்) என்ற உபதேசத்தை மார்டின் லூத்தர் வலியுறுத்தி வந்தார். இதுவே தனி மனுஷன் தேவனுக்குள்ளாக தன்னை அர்ப்பணம் செய்வதற்கு தூண்டுகோலாக இருந்தது. (ரோமன் கத்தோலிக்க சபை என்ற கூட்டமைப்பாக நீதிமான்களாக்கப்படுவதில்லை).

விசுவாசிக்கிறவன் எவனும் தான் கிறிஸ்துவுக்குள் பெரிதான ரட்சிப்புக்கு பங்காயிருக்கிறான் என்று முன்னதாக அறிய வேண்டும். இதுவே, தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, விலையுயர்ந்த முத்தை கொள்ளுகிறவனுக்கு ஒப்பாக, தேவனுக்கென்று எல்லாவற்றையும் அர்ப்பணிக்க வேண்டும். உண்மை கிறிஸ்தவன் தன்னை போன்றவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும். இந்த ‘சகோதர அன்பு’ என்று பொருள் கொள்ளும்படியாக, பிலதெல்பியா சபைக்கு இந்த பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## மார்டின் லூத்தர்

## (கி..பி. 1483 - 1546)

இலாபம் அளிக்கும் வக்கீல் தொழிலை தேர்ந்தெடுக்காமல், தேவ கிருபையால் மனம் மாறி ஒரு எளிய துறவியின் வாழ்க்கையை மேற்கொண்ட ஜெர்மன் நாட்டைச் சார்ந்த மார்டின் லூத்தர் உலக வரலாற்றின் போக்கையே மாற்றினார். முதலில் மாணவராகவும், பிறகு குருவாகவும், பின் இறையியல் அறிஞராகவும் உருவெடுத்த மார்டின் லூத்தர் பைபிளை ஆராய்வதில் பெரு மகிழ்ச்சி அடைந்தார். தெய்வீக அதிகாரத்திற்கு மூலம் பைபிள் தான் என்றும், ரோமச் சபை அல்ல என்றும் அறிந்து கொண்டார்.

கிறிஸ்துவின் மூலமாக தேவன் மேல் கொள்ளும் விசுவாசமே ரட்சிப்பை அடையும் வழி என்றும், (ரோம 5 : 1; 1 : 17) சடங்குகள் மூலமாகவும், ஆச்சாரங்கள் மூலமாகவும் அல்ல என்பதை கண்டு கொண்டார். கி.பி. 1518ல் விட்டன்பர்க் பல்கலை கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் துவங்கினார். அவருடைய சொற்பொழிவுகள் தேவ அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து இருந்தது. விசுவாசத்தினால் ரட்சிப்பு கிடைக்கும் என்று மார்டின் லூத்தர் கூறிய கருப்பொருள் அக்காலத்தில் நிலவி வந்த வெற்று தத்துவங்கள், நாஸ்தீக கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து மாறுபட்டிருந்தது.

பகுத்தறிவு திறன், மன உறுதி, முழு அர்ப்பணிப்பு, எல்லோரையும் ஈர்க்கும் தன்மை போன்ற பண்புகளினால், ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாக மார்டின் லூத்தர் வளர்ச்சி பெற்றார். பாவங்களுக்கு மன்னிப்பு பெற பாவ மன்னிப்பு சீட்டுக்களை ஜெர்மனியில் விற்பனை செய்த டொமினிகன் கத்தோலிக்க துறவி டெட்சல் (Tetzel) என்பவரின் துஷ்பிரயோகத்தை கண்ட மார்டின் லூத்தர், கி.பி. 1517 ல் ரோமச் சபையையும், போப்புவின் அதிகாரத்தையும் எதிர்த்து 95 குறிப்புகளை விட்டன்பர்க் ஆலய வாசல் கதவுகளில் பதிவு செய்தார். இவரது இந்த செயல் எல்லா இடங்களிலும் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தி, ரோமச் சபையின் அஸ்திபாரத்தை ஆட்டங் காணச் செய்தது. இதைத் தொடர்ந்து போப்பு வெளியிட்ட தீர்ப்பாணையை (papal bull) மார்டின் லூத்தர் கி.பி. 1520ல் பொது இடத்தில் எரித்து தன் கருத்துக்களில் நிலைப்பாடு கொண்டார். தம் முக்கிய நம்பிக்கைகளை விவரித்து மூன்று பிரசுரங்களை வெளியிட்டார்.

“திருப்பலி” (MASS) சடங்கை மார்டின் லூத்தர் எதிர்த்தார். ஞானஸ்நானம் மற்றும் இயேசுவின் இராப்போஜனம் என்ற இரண்டு கட்டளைகள் மட்டுமே அனுசரிக்க வேண்டியவை என வலியுறுத்தினார். சபையையும், அரசாங்க அதிகாரங்களையும் போப்பு மார்க்கம் தன் வசம் வைத்து ஆளுகை செய்வதைக் கண்டித்தார்.

ஜெர்மன் பேரரசர் சார்லஸ் V அவர்களால் கி. பி. 1521ல் “ஒம்ஸ் பிரதிநிதிகள் சபை” (Diet Of Worms) கூட்டப்பட்டது. இளவரசர்களும், மததலைவர்களும் அடங்கிய இந்த விசேஷித்த கூட்டத்தில், மார்டின் லூத்தர் தன் நம்பிக்கைகளை குறித்து தன்னிலை விளக்கம் அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டார். பிரதிநிதிகள் சபையில் லூத்தரின் பிரசன்னம் மக்களிடையே பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. போப்பு சக்திகள் மார்டின் லூத்தர் மீது கண்டன ஆணை பிறப்பிக்க முயற்சித்தனர். ஆனால், பொதுமக்கள் நியாயமான விசாரணை மேற்கொள்ள வேண்டி நிர்ப்பந்தித்தனர்.

மார்டின் லூத்தர் பிரதிநிதிகளின் சபையினரின் முன்பாக கௌரவத்துடன் பதிலளித்தார்:

"வேதாகமத்தில் தடைபண்ணப்பட்டாலன்றி, சத்தியமுள்ள எந்த போதனை யிலிருந்தும் நான் பின் வாங்க மாட்டேன்".

கத்தோலிக்க சபையை ஆதரித்த ஜெர்மன் பேரரசர் மார்டின் லூத்தரை விலக்கி வைத்ததை தொடர்ந்து, சாக்ஸனி இளவரசர் பிரடெரிக் பாதுகாப்பில் வார்ட்பெர்க் கோட்டையில் கி.பி. 1521 மே முதல் 1522 மார்ச் வரை ஒளித்து வைக்கப்பட்டு இருந்தார். இச்சமயத்தில் தான் " மெலாங்தான் " என்ற நண்பனின் துணை கொண்டு மார்டின் லூத்தர் புதிய ஏற்பாட்டை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார்.

சீர்திருத்தத்தை தீவிரமாக்கியதில் லூத்தரின் பங்கு மிகப் பெரியது. மத்திய கால ரோமச்சபையினை சிதைக்கச் செய்து, பைபிளுக்குரிய அந்தஸ்தை வலியுறுத்தி, மக்களை சத்திய வெளிச்சத்தில் கொண்டு வந்தவர் மார்டின் லூத்தரே !

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# பிலதெல்பியா சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 1514 | லேடரன் மன்றம் : சமய பேதங்கள் அனைத்தையும் ஜெயங்கொண்டதாக பிரகடனம் பண்ணியது. |
| கி.பி. 1517 | மார்டின் லூத்தர் விட்டன்பர்க் ஆலயத்தில் 95 கருத்துக்களை வெளியிட்டார்; லூத்தரின் இந்த நடவடிக்கையினால், ஐரோப்பிய மத உலகில் பெரும் தீ பரவ ஆரம்பித்தது; இதைத் தொடர்ந்து, வலுவான பிரசங்கங்களாலும், எழுத்துக்களாலும் போப்பு மார்க்கத்தை தைரியமாகத் தாக்கினார்; இதன் விளைவாக, புரோட்டஸ்டண்டு எதிர்ப்பு இயக்கங்கள் நிறுவப்பட வழி வகுக்கப்பட்டது. |
| கி.பி. 1521 | வொர்ம்ஸ் மன்றம் : லூத்தரை சமய பேதமுள்ளவர் என்று கண்டனம் செய்தது; லூத்தரை எதிர்த்த இங்கிலாந்து மன்னர் ஹென்றி VIII க்கு 'விசுவாச காப்பாளர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. |
| கி.பி. 1534 | தன்னுடைய முதல் விவாகத்தை ரோமச் சபை ரத்து செய்ய மறுத்ததால், இங்கிலாந்து மன்னர் ஹென்றி VIII ரோமச்சபையிலிருந்து விலகினார். |
| கி.பி. 1536 | ஆங்கில பைபிள் மொழி பெயர்ப்பாளர் வில்லியம் டிண்டேல் போப்பு மார்க்கத்தால் கண்டனம் செய்யப்பட்டு, மரத்தில் தூக்கிலிடப்பட்டார். |
| கி.பி. 1547 | பாரிசிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஜான் கால்வின், ஐரோப்பாவின் புரோட்டஸ்டாண்டு இயக்கத்தின் மைய இடமாக ஜெனிவாவை தேர்ந்தெடுத்தார். |
| கி.பி. 1545 எ 1563 | சேசு சபையினரின் ஆலோசனையைக் கொண்டு ரோமச் சபையை சீரமைக்க ட்ரெண்ட் மன்றம் கூடியது. இந்த மன்றம் 'விசுவாச அறிக்கையை' திருத்தி அமைத்து, கத்தோலிக்கரின் "மறுமலர்ச்சி எதிர் இயக்கத்தை" தோற்றுவித்தது. தள்ளுபடி ஆகமங்கள் பைபிளுடன் சேர்க்கப்பட்டன. வேதாகமத்திற்கு சரிநிகராக அர்ச்சிஷ்டவான்களின் சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. |
| கி.பி. 1555 | ஆஸ்பர்க் சமாதான உடன்படிக்கை:இளவரசர்கள் தங்கள் எல்லைப்பகுதிகளில் மத சம்பந்தமான முடிவுகள் எடுப்பதற்கு உரிமை வழங்கப்பட்டது. |
| கி.பி. 1556 | காண்டர்பரி ஆர்ச் பிஷப் தாமஸ் கிராமர் ரோமச் சபையை எதிர்த்ததால், மரத்தில் ஏற்றி எரிக்கப்பட்டார். |
| கி.பி. 1559 | பிரான்ஸில் இருந்த 'ஹகனாட்ஸ்' பிரிவினரை ஒழிக்க போப்பு பயஸ் IV தீவிர முயற்சி எடுத்தார். (லூத்தரின் போதனைகளை ஏற்றுக் கொண்ட 4 லட்சம் புரோட்டஸ்டாண்டுகள் இருந்தனர்). |
| கி.பி. 1563 | ஆங்கிலிகன் சபையில் '39 விதிகள்' ஏற்றுக் கொள்ளப்பட்டன; இது, புரோட்டஸ்டண்டுகளின் சமயக் கொள்கையும், கத்தோலிக்க ஆராதனை முறைகளையும் கொண்ட கலவையாகும். |
| கி.பி. 1572 | செயின்ட். பர்த்தலமேயுவின் நாளில் (ஆகஸ்ட் 23) பாரிஸ் நகரில் பிரெஞ்சு கத்தோலிக்கர்களால் 70,000 ' ஹகனாட்ஸ்' கொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தின் நினைவாக, போப்பு கிரகொரி XIII 'நன்றியறிதல் திருப்பலியை' கொண்டாடி, யூபிலியை பிரகடனம் பண்ணி , புது பதக்கங்கள் உருவாக்கப்பட்டன; இச்சம்பவத்தை சித்தரிக்கும் விதமாக, சிஸ்டைன் கோவிலில் ஓவியங்கள் வரையப்பட்டன. |
| கி.பி. 1598 | நான்டிஸ் சட்டம் : 40 வருஷ கால தொடர் அடக்கு முறைக்குப் பிறகு, பிரான்ஸில் ஹகனாட்ஸ்களுக்கு தொழுகை சுதந்திரம் வழங்கப்பட்டது; (ஆனால், கி.பி. 1865ல் இந்த சட்டம் வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து, 5 லட்சம் ஹகனாட்ஸ்கள் பிரான்ஸை விட்டு வெளியேறி, புரோட்டஸ்டாண்டு நாடுகளுக்கு ஓடிப்போயினர். |
| 16ம் நூற்றாண்டு | மறுமலர்ச்சி இயக்கம் பைபிள் சத்தியங்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை பரவலாக மேற்கொண்டது; இதைத் தொடர்ந்து, பல புரோட்டஸ்டண்டு சபைகள் உருவாகி, போப்பு மார்க்கத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தின; முக்கிய தலைவர்களாக லூத்தர், |

| | |
|---|---|
| | சுவிங்கிலி, கால்வின், நாக்ஸ் போன்றவர்கள் இருந்தனர். ஐரோப்பாவின் மத உலகில் ஒரு வேறுபட்ட சூழ்நிலை உருவாகியது. |
| கி.பி. 1611 | 47 வேத விற்பன்னர்களின் உழைப்பின் விளைவாக, கிங் ஜேம்ஸ் பைபிள் மொழி பெயர்ப்பு பிரசுரம் பண்ணப்பட்டது; ஆங்கில மொழி பேசும் நாடுகளில் புரோட்டஸ்டாண்டுகள் வாசிக்கும் ஒரே பைபிளாக இந்த மொழி பெயர்ப்பு 300 ஆண்டுகள் வரை நீடித்தது. உலக வரலாற்றில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய புஸ்தகம் இதுவே ! |
| கி.பி. 1641 | ஐரிஸ் கத்தோலிக்கர் 30,000 புரோட்டஸ்டண்டுகளை கொலை செய்தனர். |
| கி.பி. 1648 | வெஸ்பேலியா சமாதான உடன்படிக்கையின் மூலம் கத்தோலிக்க நாடுகளுக்கும், புரோட்டஸ்டண்டு நாடுகளுக்கும் எல்லைகள் வரையறுக்கப்பட்டு, 30 வருஷங்களாக நடந்து வந்த யுத்தம் முடிவுக்கு வந்தது. |
| கி.பி. 703-1791 | வெஸ்லி வயல் வெளிகளிலும், தெருக்களிலும் பொது ஜனங்கள் மத்தியில் பிரசங்கம் பண்ணி, இங்கிலாந்தில் ஒழுக்கநெறியை மேம்படுத்தினார். |
| கி.பி. 1775 | போப்பு மார்க்கத்திற்கு எதிராக பொது ஜன அபிப்பிராயம் வெளிப்படையாக பெருமளவில் எதிரொலித்தது. பிரான்ஸிலும், இங்கிலாந்திலும் தேசிய உணர்வும், பகுத்தறிவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. |
| கி.பி. 1789 - 1799 | பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டது. இது மதத்திற்கு பொதுவான பாதிப்பை ஏற்படுத்தினாலும், குறிப்பாக போப்பு மார்க்கத்தை பெரிதாக அடக்கியது. நெப்போலியனால் சிறுமைப்படுத்தப்பட்ட போப்பு பயஸ்VI பிரான்ஸுக்கு கைதியாக கொண்டு போகப்பட்டார்; அங்கே கி.பி. 1799ல் இறந்தார். இது போப்பு மார்க்கத்தின் பின்னடவை உணர்த்தியது. (தானி 12 : 6, 7 ன் 3 1/2 காலக்கணக்கு முடிவுக்கு வந்தது). |
| கி.பி. 1806 | கி.பி. 800ம் ஆண்டிலிருந்து ஆட்சி செய்த 'புனித ரோம சாம்ராஜ்யத்தை' நெப்போலியன் முடிவுக்கு கொண்டு வந்தார். |
| கி.பி. 1799 எ 1829 | ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மத விழிப்புணர்ச்சி பெருமளவில் ஏற்பட்டது; வேதாகமத்தை ஆராய்வதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது; பைபிள் சொசைட்டிகளால் பொது மொழிகளில் பைபிள் மலிவாக பெருமளவில் விநியோகம் செய்யப்பட்டது. இதுவரை நிலவி வந்த தவறுகள் களையப்படுவதற்கான தேவையை வெளிப்படுத்தியது. |
| கி.பி. 1829 எ 1844 | கிழக்கு அமெரிக்காவில் மில்லரின் இயக்கம் தோன்றியது; முடிவு காலங்கள் பற்றிய பைபிள் தீர்க்கதரிசனங்கள் குறித்து பரவலான உற்சாகமும், ஈடுபாடும் தோன்றலாயின. தப்பிதங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு, உண்மை விசுவாசிகளை ஆசீர்வாத நிலைக்கு கொண்டு செல்லும் பணியை இந்த இயக்கம் மேற்கொண்டது. (தானி 12 : 10, 11ல் குறிக்கப்பட்ட 1290 வருஷங்களின் முடிவில் துவங்கியது). |
| கி.பி. 1846 | சுவிசேஷ கூட்டமைப்பு (EVANGELICAL ALLIANCE, LONDON) உருவானது; சபை பிரிவுகளை எல்லாம் ஒருங்கிணைக்கும் முன்னோடியாக இருக்கிறது; சபைகள் எல்லாவற்றின் கொள்கைகளை ஒருங்கிணைத்து, பாரம்பரியமாக வழக்கிலுள்ள கொள்கைகளை வலியுறுத்தும் வகையில் இந்த கூட்டமைப்பு செயல்படுகிறது. இந்த கூட்டமைப்பினர் தங்களைச் சேராத பிரிவினரை அவமதிப்புடன் நோக்குகின்றனர். (தானி 8 : 13, 14ன் 2300 வருஷங்கள் முடிவடைந்து, பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது). |
| கி.பி. 1854 | போப்பு பயஸ் IX கன்னி மேரியின் 'மாசற்ற கரு' பற்றிய கொள்கையை வெளியிட்டார். |
| கி.பி. 1859 | டார்வினின் 'பரிணாம வளர்ச்சி ' தத்துவம் பிரபலமானது. உலகமெங்கும் பகுத்தறிவு இயக்கம் பரவி, மதத்தின் முக்கியத்துவம் குறைய ஆரம்பித்தது. |
| கி.பி. 1870 | இத்தாலிய மன்னர் விக்டர் இம்மானுவேல் ரோமாபுரியில் மீதமிருந்த அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் போப்புவிடமிருந்து பறித்தார்; இது போப்பு மார்க்கத்திற்கு மூன்றாவது பின்னடைவாக அமைந்தது. |

# லவோதிக்கேயா சபை
## வெளி 3 : 14 - 22.

**முன்னுரை :**

லவோதிக்கேயா சபையின் செய்தியினை பகுப்பாய்வு மேற்கொள்ளுவது, முந்தைய சபைகளின் செய்திகளைப் போலன்றி, சற்று சிரமம் உள்ளதாயிருக்கிறது. "கோதுமையும் களைகளும்" உவமைக்கும், "புத்தியுள்ள கன்னிகைகளும் புத்தியில்லாத கன்னிகைகளும்" உவமைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக லவோதிக்கேயா சபையின் செய்தி உள்ளது. இந்த இரண்டு உவமைகளின் படிப்பினைகளும்,உள்ளடக்கிய தீர்க்கதரிசன அம்சங்களும் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபையைப் பற்றிய அறிவை உணர்வதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

லவோதிக்கேயா சபையின் செய்தியின் பின்னணியை சற்று நோக்குவோம் :

1) லவோதிக்கேயா சபை துவங்கிய சமயத்தில், கோதுமை மணிகளாக அடையாளப்படுத்தப்படும் பரிசுத்தவான்கள் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்தன. வில்லியம் மில்லர் இயக்க காலத்தில் நடந்த சம்பவங்களால் அதிர்ச்சியுற்று மயக்க நிலையில் இருந்தனர்.

2) இந்த கோதுமை மணிகள், பாபிலோனின் தற்போதைய நிலைமைகள், நம்பிக்கைகள், மனப்பாண்மைகள் அனைத்தையும் வெளிப்படையாக அறிந்த நிலையில், வெதுவெதுப்பான அரைமனதுடனும், அசிரத்தையுடனும் துயில் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் தான், ஞானத்தில் ஐசுவரியமுள்ளவர்களானோம் என்ற உணர்வினை இவர்கள் பெற்றார்கள்.

3) இந்த சூழ்நிலையில், "இதோ, மணவாளன்" என்ற சத்தம் உண்டாகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த தீர்க்கதரிசனங்களை புரிந்து கொள்வதில் சிக்கல்கள் உருவாயின. இந்த நிலையானது, கோதுமை மணிகள் தங்களின் தற்போதைய தகுதியினை மறு மதிப்பீடு செய்ய தூண்டுதலாக இருந்தது.

4) இதன் விளைவு "அவளை விட்டு வெளியேவாருங்கள்" (வெளி 18 : 4). என்ற கட்டளைக்கு அடிபணிவது ஆகும். இதைத் தான், தீவட்டிகளை ஆயத்தப்படுத்தி, "மணவாளனுக்கு எதிர்கொண்டு போக புறப்படுங்கள்" என்று மத்தேயு 25 : 6ல் குறிக்கப்படுகிறது. மல்கியா 3 : 1-3ல் சொல்லப்படும் காலப்பகுதியும் இதுவே. பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்களின் (லேவியின் புத்திரர்கள் -- பொன், வெள்ளி வகுப்பார்) வாழ்க்கையின் அங்கமாயிருக்கும் களிம்பை (மன உலைச்சல்கள், துயரங்கள், குருட்டுத்தனம், ஏழ்மை, நிர்வாணம் ஆகியவற்றை) புடமிடுகிறவனுடைய அக்கினி சுத்திகரிக்கும்.

5) இந்த சுத்திகரிப்பை செயலாக்க, வெளி 3 : 18ல் இயேசு கூறும் ஆலோசனையை மணவாட்டி கைக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவர்களின் பக்தி வைராக்கியம் தூண்டப்பட்டு, பொன்னையும், வெண்வஸ்திரங்களையும், பார்வைக்கு கலிக்கத்தையும் அடைய முயற்சிக்க வேண்டும். இவ்விதம் செய்வதால், பாபிலோனில் இன்னும் நிலவும் பெலவீனங்களிலிருந்து விடுபட்டு (வெளி 3 : 15 - 17), இயேசுவினால் நேசமுடன் கடிந்து கொள்ளுதலும், சிட்சையும் பெற்று, மனந்திரும்பி, இறுதியில் அவர் அளிக்கும் காலத்திற்கேற்ற உணவை உட்கொண்டு ஜெயங்கொள்ளுகிறவர்களாகிறார்கள்.

லவோதிக்கேயா சபையின் தூது, நம்முடைய காலத்தில் இப்பொழுது வழக்கத்திலுள்ள நிலைமைகளுக்கு தொடர்புடையனவாயிருக்கிறது. ஆகவே, நாம் (பாபிலோன் அல்ல) இவற்றை ஜெயிக்க வேண்டும். பாபிலோன் ஏற்கனவே தள்ளப்பட்டு விட்டது. புறம்பாக்கப்பட்ட பாபிலோனுக்கு கர்த்தராகிய கிறிஸ்து இனி தூது ஏதும் கொடுப்பதில்லை. லவோதிக்கேயா சபையின் தூது, முழுவதுமாக நமக்கு தான் கூறப்படுகிறது.

**லவோதிக்கேயா சபை**

**வெளி 3 : 14.**

**லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது :**

லவோதிக்கேயா சபையின் தூதன் சார்லஸ் டேஸ் ரசல்.

ஏழு சபைகளின் தூதுகளை வாசித்தால், ஒவ்வொரு சபையின் தூதும் 'தூதனுக்கு' சொல்லப்படுவதாகவே உள்ளது. சபையை விட, தூதனே தூது பற்றிய விஷயங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்பது போல உள்ளது. வரலாற்று பின்னணியில் நோக்கும் பொழுது, இந்த தூதுகளின் மையக் கருத்துக்களின் அடிப்படையிலேயே ஒவ்வொரு தூதனும் செயலாற்றி, உபதேசித்து வந்துள்ளார்கள். ஆனால், இந்த தூதுகள் சபைகளுக்கு மட்டும் என்று கொள்ளாமல், தூதர்கள் மூலமாக சபைகளுக்கு சொல்லப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும். தூதனையும், அவனுக்கு என்ன கொடுக்கப்பட்டது என்பதையும் நாம் அடையாளம் கண்டு கொள்ளாவிட்டால், தூதின் முழுமையையும் சபை பெற்றுக் கொள்ள சாத்தியமில்லை.

'லவோதிக்கேயா' என்றால் 'மக்களுடைய தீர்ப்பு' அல்லது 'மக்களினால் தீர்ப்பு' என்று அர்த்தமாகும். 'மக்களுடைய நியாயம்' அல்லது 'மக்களினால் நியாயம்' என்ற அர்த்தமும் உண்டு. சிலர், "கோதுமையையும் களையையும் பிரிக்கும்" பொருள்பட, லவோதிக்கேயா சபை "நியாயம் தீர்க்கப்படும் மக்கள்" என அர்த்தம் கொள்வதாகக் கூறுகிறார்கள். வேறு சிலர், "மக்களால் நியாயம் கோரப்படுகிறது" என்ற பொருள் உடையது என்றும் கூறுகிறார்கள்.

மேலும் சிலர், "மக்களால் தீர்ப்பளிக்கப்படுகிறது" என்று அர்த்தங் கொள்வதாக கூறுகின்றனர். இது, வெளி 18 : 21ம் வசனத்தில் காணப்படும் தீர்க்கதரிசனத்திற்கு ஒத்திருக்கிறது. அதாவது, போலி கிறிஸ்துவத்தின் தலைமை (பாபிலோன்) புறக்கணிக்கப்பட்டு, அமைதியற்ற ஜன சமுதாயத்தினால் (சமுத்திரத்தில்) விழுங்கப்படுவதைக் குறிக்கிறது.

லவோதிக்கேயா என்ற உண்மையான பட்டணத்தைப் பற்றி வரலாற்றின் வாயிலாக நாம் கண்டுணரும் பல விஷயங்களால் , லவோதிக்கேயா என்ற பெயருக்குள்ள அர்த்தத்தை நாம் தெளிவாக அறியலாம். இந்த பட்டணம், கம்பளியினால் (ஆட்டு மயிரினால்) தயாரிக்கப்படும் கறுப்பு வஸ்திரத்திற்கு பிரபலமான இடம் ஆகும். மேலும், சித்திரத் தையல் வேலைப்பாடு கொண்ட வஸ்திரங்கள், கண்களுக்கு இடும் மருந்து (Phrygian Powder) போன்றவைகளுக்கும் இந்த பட்டணம் பிரபலமாக விளங்கியது. வங்கிகளின் முக்கிய ஸ்தலமாகவும் இருந்தது. குடிமக்கள் பெரும் வசதி படைத்தவர்களாய் இருந்தனர்.

**உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும் :**

இயேசு தம் ஊழியத்தின் போது, பிதாவினுடைய சுபாவத்தையும், வல்லமையையும் குறித்து எல்லோருக்கும் முன்பாக உண்மையும் சத்தியமுமாக சாட்சி பகர்ந்தார். தற்போதைய காலப்பகுதியில், மனுஷ குமாரன் பூமியில் விசுவாசத்தைக் காண இயலாத நிலையில், நாம் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவரைப் போலவே, விசுவாசக் குறைவுள்ள இந்த நாட்களில் பிதாவிற்கு உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சிகளாவதற்கு நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையே மேற்குறிப்பிட்ட வசனம் உணர்த்துகிறது.

**தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற :**

இயேசு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும்விதமாக, தாம் தேவனுடைய முதல் சிருஷ்டி என கூறுகிறார். இயேசுவின் தனித்துவத்தை உணர்ந்தால் ஒழிய, காலத்திற்கேற்றவாறு நமக்கு அருளப்படும் உணவாகிய தெளிவானதும், பெருமளவுமான சத்தியங்களை, சபையின் இந்த காலக்கட்டத்தில் நாம் பெறவோ அல்லது கிரகிக்கவோ இயலாது. இந்த சத்தியத்தை நாம் உணரும் நோக்கில் தீர்க்கதரிசன எச்சரிப்பாக இது இருக்கிறது. (நீதிமொழிகள் 8 : 22 ஐ பார்க்கவும்).

**ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது :**

'ஆமென்' என்ற பதம் 'உண்மை', 'சத்தியம்', 'நிச்சயம்' என்று பொருள்படும். இயேசு பல சந்தர்ப்பங்களில் "மெய்யாகவே" என்று சொல்லி உபதேசிக்க ஆரம்பித்திருக்கிறார். இயேசுவின் வார்த்தைகளும், வாக்குத்தத்தங்களும் சத்தியமுள்ளவைகள் என்ற உத்திரவாதம் லவோதிக்கேயா சபைக்குத் தேவைப்படுகிறது. வேதாகமத்தில் உறுதியான சத்தியங்களைக் கண்டுபிடிக்கும் சாத்தியக் கூறுகள் மில்லர் இயக்கத்தின் எதிர்பார்ப்புகளில் இருந்தன. வேதாகம சத்தியத்திற்கு விரோதமாக, டார்வீனின் கொள்கை, மார்க்கிசீயம் போன்றவை தீவிரமாகத் தலையெடுத்தன. லவோதிக்கேயா சபையின் இந்த காலக்கட்டத்தில் தேவைப்படும் சத்தியங்களை இப்பொழுது நமக்கு கொடுத்து வருகிறார்.

**வெளி 3 : 15, 16.**

**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ குளிருமல்ல,அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திப்பண்ணிப் போடுவேன்.**

இந்த வசனங்களில் 'குளிர்' என்பது எந்த கிரியைகளைக் குறிக்கிறது என்று தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இதை நாம் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். பிலதெல்பியா சபையின் காலத்தில் சபை நன்முறையில் செயல்பட்டு வந்தது. அந்த சபையைப் பற்றி குறை ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால், மில்லருக்குப் பிறகு, சபை நித்திரை மயக்கத்திற்குள்ளாகியது. (மத்தேயு 25ன்படி). இந்த தூக்கம் தீர்க்கதரிசனத்திலும், சத்தியக் கொள்கைகளிலும் மட்டும் நிலவவில்லை. முக்கியமாக, சபை அங்கங்களின் நடத்தையிலும் அசிரத்தை தென்பட்டது. கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு விருப்பமில்லாதபடி, சபை வெதுவெதுப்பான தன்மை உடையதாயிருந்தது. நாம் குளிராகவோ அல்லது அனலாகவோ மட்டும் இருக்க இயேசு விரும்பினார். அதாவது, "அனல்" என்பது "நீதி" என்பதையும், "குளிர்" என்பது "அநீதி" என்பதையும் அடையாளம் காட்டுகின்றன. எபி 1 : 9; சங் 45 : 7; மற்றும் 1தீமோ 6 : 17, 18ம் வசனங்களைப் பார்க்கவும். 'திரள் கூட்டத்தார்' என்ற வகுப்பு இந்த யுகத்தில் அதிகமாயிருப்பதற்கு இதுவே காரணமாயிருப்பதாகத் தெரிகிறது. அதாவது, இவர்கள் பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட பரிசுத்தவான்களாயிருந்தும் வெதுவெதுப்பா யிருக்கிறார்கள்.

**வெளி 3 : 17.**

**நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்.**

**நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் :**

நாம் நம்மை ஐசுவரியவான்கள் என்று நினைத்துக் கொள்வதால், நாம் நிர்ப்பாக்கியமுள்ளவர்கள் (பஞ்சத்தை சகித்துக் கொண்டவர்கள்) என்பதை உணர்வதில்லை. ஆகவே, எனக்கு பசி இல்லையென்றும், ஆசை இல்லையென்றும் கூறிக்கொள்கிறோம். "நான் ஆசைப்பட்டபடி, எனக்கிருக்கும் ஐசுவரியங்களால் எனக்கு

வாழ்க்கையில் திருப்தி இல்லை" என்று உலகப் பிரகாரமாகவே ஐசுவரியவான்கள் சொல்வதுண்டு. நாம், உள்ளான பசியும், ஆசையும் கொண்டவர்களாய், நமக்குக் கிடைத்திருக்கும் ஐசுவரியங்களாகிய சத்திய வசனங்களை நம்முடைய சுய வளர்ச்சிக்கும், நடத்தையில் செம்மை உள்ளவர்களாக மாறவும் பிரயோகப்படுத்த வேண்டும். நமக்குண்டாகும் அடக்க முடியாத ஆசையை நாம் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அதில் ஜெயங்கொள்ளும்போது, நாம் உண்மையான திருப்தியைப் பெற்றவர்களாகிறோம்.

**பரிதபிக்கப்படத்தக்கவனும் :**

தேவனுடைய பார்வையில் நாம் இருக்கும் நிலை இதுவே. சத்தியத்தை நாம் பெற்றுக்கொண்டதோடு அல்லாமல், அதன் மதிப்பினை நாம் உணர்ந்து செயல்படாவிட்டால் பரிதபிக்கப்படத்தக்கவர்களாகவே இருப்போம்.

**தரித்திரனும் :**

சத்தியத்தைப் பற்றிய அறிவு மட்டும் போதாது. ஆவிக்குரிய விஷயங்களை நடைமுறைப்படுத்துவதில் தவறுபவர்களாயிருப்பின், தரித்திரர்களாகவே கருதப்படுவோம்.

**குருடனும் :**

சத்தியங்களைப் பற்றி அறிந்திருந்தாலும் நமது பலவீனக் குறைவுகளினால் குருடராகவே இருக்கிறோம். தனக்கிருக்கும் ஐசுவரியங்களை எப்படி தன் நலனுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று அறிந்திராத ஐசுவரியவான் குருடனாகவே பாவிக்கப்படுகிறான். ஒரு கிறிஸ்தவன் சத்தியத்தை எப்படி தன் ஜீவியத்திற்கு நன்மையாக செயல்படுத்த வேண்டும் என்று அறியாதவன் குருடன் ஆவான்.

**நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் :**

இந்த சொற்றோடர் "முழுவதும் ஆடை அணியாத நிலையை" குறிப்பதில்லை. கிரேக்க சொல் அகராதிகளும், "நிர்வாணி" என்ற வார்த்தைக்கு சில சமயங்களில் "முற்றிலும் ஆடை அணியாத நிலையை" குறிப்பதாக இருந்தாலும், இந்த சொல் அடிக்கடி "போதுமான ஆடை அணியாத நிலையை" குறிப்பதாகவே உள்ளது என்று தெரிவிக்கின்றன. வெளி 3 : 17ல் குறிப்பிட்டுள்ள இந்த வார்த்தையும், வெளி 16 : 15ல் லவோதிக்கேயா சபை காலத்துக்குரிய தீர்க்கதரிசனத்தில் காணப்படும் வார்த்தையும் ஒரே பொருள் கொண்டுள்ளதாக இருக்கிறது. வெளி 16 : 15ல் வஸ்திரங்களை அணிந்து கொண்டிருப்பவர்கள் அவற்றைக் காத்துக் கொண்டு (கிழியாமலும், கசங்காமலும், அசுசிபடாமலும்), போதுமான அளவு ஆடை அணியாமல் மானம் காணப்படத்தக்கதாக இருக்கக் கூடாதென்று படிக்கிறோம். வெளி 3 : 17, 18; மற்றும் வெளி 16 : 15ம் வசனங்களிலுள்ள தூது பிரதிஷ்டைபண்ணப்பட்டவர்களுக்கே உரியது. இவர்களில் ஜெயங்கொள்ளாதவர்கள் 'திரள் கூட்டத்தார்' ஆகிறார்கள். இவர்கள் ஆடைகளை சரியாக அணிய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். யாக்கோபு 2 : 15ம் வசனத்திலும் இதைப் போன்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. வஸ்திரம் முழுவதுமே அணியாதவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல், போதுமான வஸ்திரங்கள் இல்லாதவர்களைக் குறிப்பதாகவே உள்ளது.

வெளி 3 : 17ம் வசனம் நமக்கு எதை அறிவுறுத்துகிறது ? நம் நடத்தைகளை செவ்வைப்படுத்தும் நோக்கில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் சத்தியங்களை செலவிடாமல், வெறுமனே அவற்றை நம் வசம் கொண்டிருந்து, அதில் களிப்படைந்தால், நம்மை நாமே மனதளவில் நீதிமானாக்கிக் கொள்கிறோம். அது எவ்விதத்திலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமாயிராது. இயேசுவின் துணை கொண்டு, நம் நடத்தைகளில் சத்தியங்களின் வாயிலாக மெருகேற்றினாலே, நமது பலவீனங்கள் சரி செய்யப்படும். அப்பொழுது தான் நாம் நீதியின் வஸ்திரங்களை ஏற்ற வகையில் அணிந்து, அவற்றைப் பாதுகாத்துக் கொள்கிறோம்.

**நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால் :**

'நான் எப்படி இருக்கிறேன்' என்பதற்குப் பதிலாக 'நான் என்ன வைத்திருக்கிறேன்' என்பதினாலுண்டாகும் அகம்பாவத்தை, "நான் ஐசுவரியவான்" என்ற சொற்றொடர் வெளிப்படுத்துகிறது. "திரவியசம்பன்னன்" என்று கூறுவது, "மற்றவர்களைவிட நான் அதிகம் வைத்திருக்கிறேன்" என்று பெருமை பேசுவதை அடையாளம் காட்டுகிறது. பாபிலோனைப் பார்த்து ஏளனமாய், "நமக்கு இருப்பதைப் போல் ஐசுவரியங்கள் (ஆவிக்குரிய விஷயங்கள்) அதனிடம் அதிகம் இல்லை என்று நாம் கூறுவது இதற்கு ஒத்திருக்கிறது.

**எனக்கு ஒரு குறைவும் இல்லை :**

மற்றவர்களிடம் நாம் பெற்றுக்கொள்ள ஒன்றுமில்லை என்ற எண்ணம் வரும்போது, "எனக்கு ஒரு குறைவும் இல்லை" என்ற மனப்பாண்மை நம்மிடம் வெளிப்படுகிறது. இந்த யுகத்தின் கடைசி காலத்தில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் அறிந்து தேர்ச்சி பெற்றுள்ளோம் என்ற எண்ணம் நம்மில் தலை தூக்கும் நிலைமையை இந்த வசனம் உணர்த்துகிறது.

**வெளி 3 : 18.**
**நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வை அடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.**

லவோதிக்கேயா சபையின் குறைகளை சொஸ்தமடையச் செய்வதற்கு, கிறிஸ்து, கீழ்காணும் மூன்று பொருள்களை வாங்கச் சொல்லுகிறார்:

1) நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்
2) வெண்வஸ்திரங்கள்
3) கண்களுக்கு கலிக்கம்.

முதலாவது பொருள், நம்மை உண்மையிலேயே ஐசுவரியவான்களாக்க உதவுவது; இரண்டாவது பொருள், நம்முடைய மானத்தைக் காப்பாற்ற உதவுவது; மூன்றாவது பொருள், நாம் பார்வை அடைய உதவுவது.

ரசல் அவர்களின் அடிப்படை உபதேசங்களிலுள்ள மூன்று காரியங்கள், மேற்குறிப்பிட்டவைகளின் சாராம்சமாக இருப்பது போல் உணரப்படுகிறது. பூச்சக்கரத்து குடிகளை ஆசீர்வதிக்கும் பணியில் பங்குள்ளவர்களாவதற்கு , திருச்சபையினர் தங்கள் தியாக பலிகளின் வாயிலாக ஆவியில் வளர்ச்சி பெற்று, தெய்வீக சுபாவத்தைப் பெற வேண்டும் என்றும், இதைப் பெறுவதற்கு கிறிஸ்துவின் நீதியாகிய வஸ்திரம் நமக்குத் தேவைப்படுகிறதென்றும், நம்முடைய சொந்த ஞானமோ அல்லது பெலமோ ஒன்றுக்கும் உதவாது என்று ரசல் அவர்கள் தன் ஊழிய காலம் முழுவதும் தொடர்ந்து பிரசங்கித்து வந்தார். மேலும், அறுவடை கால சத்தியங்களை பகுத்துணர நமக்கு மிகுந்த தாழ்மையும், நமது அன்றாட வாழ்வில் அதை செயற்படுத்தவும் வேண்டியிருக்கிறது என்றும் கூறி வந்தார்.

**நெருப்பிலே புடமிடப்பட்ட பொன் :**

இது மல்கியா 3ம் அதிகாரத்தை நினைவுபடுத்துகிறது. சுய தியாகத்தின் மூலம் ஆவியில் வளர்ச்சி பெறுவதை இது காட்டுகிறது. இயேசுவைப் போன்றே அவருடைய தன்மையைப் பெற்று மகிமை அடைவது தான் நாம் உண்மையில் பெறும் ஐசுவரியங்கள் ஆகும். அழிந்து போகிற பொன்னை விட, சோதிக்கப்பட்டு ஜெயங்கொள்ளும் நமது விசுவாசம் மேன்மை பெற்றது.

**வெண்வஸ்திரங்கள் :**

லவோதிக்கேயா பட்டண குடிமக்களுக்கு வெண்வஸ்திரம் அரிதான பொருள் ஆகும். கறுப்பு கம்பளியினாலான ஆடைகளை அவர்கள் உற்பத்தி செய்தும், அணிந்தும் வந்தனர். வசனம் 17ல் சொல்லப்படும் 'நிர்வாணம்' என்பது 'முழுவதும் ஆடையில்லாத நிலை'யைக் குறிப்பதில்லை. போதுமான அளவு அல்லது சரியான முறையில் ஆடைகளை அணியாத நிலையைக் குறிப்பதாக உள்ளது ."எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது என்று சொல்லும்விதமாக, ஏசாயா 64 : 6ல் "சுய நீதியை" வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவிடமிருந்து மேலானவைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதால், நாம் மேலானவர்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது என்பது தான் இந்த வசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் ஆகும்.

**கண்களுக்கு கலிக்கம் :**

இது பிறவிக் குருடனை சொஸ்தமாக்கும் பொழுது இயேசு உபயோகித்த பொருள் ஆகும். (யோவான் 9 : 6) இது மண்ணும், இயேசுவின் எச்சிலும் கலந்தது. 'மண்' என்பது 'தாழ்மை' என்ற குணலட்சனத்துக்கு அடையாளம். நமது இரட்சகரின் வாயிலிருந்து வெளி வரும் சத்தியம் (நீர்) எச்சில் என்பதற்கு அடையாளமாக உள்ளது. இந்த இரண்டும் அடங்கிய கலவையை நாம் நம்மில் செயல்படுத்த (கண்களுக்கு கலிக்கம் போட) வேண்டும். இந்த கலிக்கம் நாம் சகோதரத்துவுடன் இயங்க உதவும். சகோதர அன்பும், ஒத்தாசையும் நமக்கு இராவிட்டால் நாம் குருடர்களே ! (1 யோவான் 2 : 9 - 11).

**வெளி 3 : 19.**

**நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் , நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு .**

வசனங்கள் 15 - 17ல், லவோதிக்கேயா சபையின் மந்தமான சோர்வு நிலை சுட்டிக்காட்டப்பட்டது. வசனம் 18ல், குறைகளை களைவதற்கு செய்ய வேண்டிய மூன்று விஷயங்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால், வசனம் 19ல், கிறிஸ்து கூறுகிறார் : "நான் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்". நீதிமொழிகள் 9 : 8 - 10ல் " ஞானமுள்ளவனை கடிந்து கொள். அவன் உன்னை நேசிப்பான்" என்று வாசிக்கிறோம். எபி 12 : 6, 7ம் வசனங்களை ஒத்துப் பார்க்கவும்.

**நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு :**

வசனம் 18ல் சொல்லப்பட்டிருக்கிற மூன்று விஷயங்களை வாங்க வேண்டுமானால், கிறிஸ்துவின் கடிந்து கொள்ளுதலையும், சிட்சைகளையும் ஜாக்கிரதையாய் கவனித்து, அதைரியப்படாமல் மனந்திரும்ப வேண்டும். இயேசுவின் இந்த செய்தி அவருக்கு அருகில் இருப்பவர்களுக்கு மட்டும் உரியதல்ல. தரித்திரமும், நிர்வாணமும் வெதுவெதுப்பும் கொண்டு வழி விலகிப் போனவர்களையும் நோக்கி இயேசு இந்த செய்தியைப் பகர்கிறார்: "ஜாக்கிரதையாயிரு; மனந்திரும்பு". கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளுடன் 2பேதுரு 3 : 9ம் வசனத்தையும் ஒத்துப் பார்க்கவும். பேதுரு அப்போஸ்தலனின் வார்த்தைகள் நம் காலத்திற்கு உரியவை !

**வெளி 3 : 20.**

**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.**

"இதோ" என்ற வார்த்தை நமது கவனத்தை ஈர்க்கும் விதத்தில் உள்ளது. 2000 வருடங்களுக்கு முன்னர், இயேசு தமது முதல் வருகையில் இவ்வுலகை விட்டுச் சென்ற காலத்திலிருந்து திருச்சபை ஆவலுடன் கேட்க காத்திருக்கும் செய்தி இதுவே !

இயேசு கூறும் உவமையிலும், "இதோ மணவாளன்" என்று சொல்லப்படுகிறது. அவர் வந்து விட்டார். திருடனைப் போல இரகசியமாக அவர் பிரசன்னம் இருக்கிறது. தம் பிரசன்னத்தை அவர் பிரகடனப்படுத்துகிறார். (மத் 25 : 6) கதவு தட்டப்படும் சத்தத்தைக் கேட்கும் சிலர், அதற்கு பதிலளிக்கும் தயார் நிலையில் இல்லை. (மத் 25 : 8 - 10; உன்னத 5 : 2 - 4) கிறிஸ்துவின் பிரசன்னம் இக்கடைசி காலப் பகுதியில் அவருடைய தூதனால் அறிவிக்கப்படுகிறது. தானியேலின் காலக்கணக்குகளடங்கிய தீர்க்கதரிசனங்களின் பொருளையும், யூபிலி வருடத்தின் நிழல் பற்றிய சத்திய அறிவையும் வெளிப்படுத்தி, கிறிஸ்துவின் பிரசன்னம் பிரகடனப்படுத்தப்பட்டது. வெளி 3 : 19, 20ல் கூறப்பட்டபடி, நாம் ஜாக்கிறதையுடன் வேத வசனத்தை ஆராய்ந்து, ஜெபத்துடன் கூடிய வாழ்வை மேற்கொண்டால், கதவு தட்டப்படும் சத்தம் நமக்கு கேட்க வாய்ப்பு உண்டு. இதில் இரண்டு வித காரியங்கள் உண்டு.

1. சத்தத்தைக் கேட்க வேண்டும்; 2. கதவைத் திறக்க வேண்டும்.

கிறிஸ்துவின் பிரசன்னம் பற்றிய பிரகடனம் சபை பிரிவுகளுக்கு உரியதல்ல. ஒவ்வொரு தனி மனுஷனுக்கும் உரியது. பிரசன்னத்திற்கு பதிலளிக்கும் கடமை ஒவ்வொரு மனுஷனையும் சார்ந்தது ஆகும். "ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு" என்று வசனம் தெரிவிக்கிறது. "சத்தம்" என்பது கிறிஸ்துவின் பிரசன்னத்தை ஏழாம் தூதன் பிரகடனம் பண்ணியதைக் குறிப்பதாக உள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பிரசன்னம் இந்த மாதிரியே இருக்கும் என்று இயேசு வாக்களித்திருக்கிறார். மத் 24 : 45 - 47; நாம் "சத்தத்தைக்" கேட்டு திறக்காமல் இருந்தால் அதாவது, உன்னதப்பாட்டு 5 : 2 - 6ல் குறிப்பிட்டுள்ள புத்தியில்லாத கன்னிகை போல தாமதம் செய்யாமல், கதவு தட்டப்படும் சத்தத்தின் முக்கியத்துவத்தை உடனடியாக உணர்ந்து ஏற்றுக்கொண்டு செயல்பட்டால், கிறிஸ்து நம்மிடையே வந்து, காலத்திற்கேற்ற உணவை (சத்தியங்களை) நம்முடன் சாப்பிடுவார். (பகிர்ந்து கொள்வார்). மத் 24 : 45; "போஜனம் பண்ணுதல்" என்ற கிரேக்க வார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது சாயங்கால வேளை உணவைக் குறிப்பதாக உள்ளது. அதாவது, தம்முடைய தூதர்களுடன் போஜனம் பண்ணும் **இறுதி** உணவு இந்த யுகத்தில் இதுவே ஆகும் ! லவோதிக்கேயா சபைக்கு இறுதி நாளில் போதுமான அளவில் கிடைக்கத்தக்கதாக, திருப்தி அளிக்கும் விதமாக முழுமையாக அபரிமிதமான அளவில் சத்தியம் கிடைக்கிறது.

**வெளி 3 : 21.**

**நான் ஜெயங்கொண்டு என் பிதாவின் சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்கிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்.**

நம்முடைய கர்த்தர் சபையின் ஒவ்வொரு காலப் பகுதியிலும், "ஜெயங் கொள்கிறவனெவனோ" என்ற தூதை அறிவிக்கிறார். சபையின் எல்லா காலப்பகுதிகளிலும் பொதுவாக நிலவும் காரியங்களில் சபையில் ஜெயங்கொள்ள வேண்டும். அத்துடன், அந்தந்த காலப்பகுதிக்கே உரித்தான தனித்தன்மை கொண்ட சமகாலத்திய இன்னல்களையும் ஜெயிக்க வேண்டும். லவோதிக்கேயா சபையினர் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை மேற்கொண்டு ஜெயித்தால், (இயேசு எப்படி ஜெயங்கொண்டு பிதாவின் சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்த்து போல) இயேசுவின் சிங்காசனத்தில் உட்காருவார்கள். லவோதிக்கேயா சபையின் காலத்தில் இயேசு தம் பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார் என்று கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு உணர்த்துகிறது. NAS அவ்விதம் உணர்த்தவில்லை.

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பை நாம் கவனத்தில் கொண்டால், இயேசு தம் பிதாவுடன் சேர்ந்து ஆளுகை செய்து கொண்டிருக்கும் நிலையானது, "மறுஜென்ம காலம்" என்று மத்தேயு 19 : 28ல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் சமாதான இராஜ்யம் (இயேசுவின் மகிமையுள்ள சிங்காசனம்) வரும்வரை நீடிக்க கூடியதாய் இருக்கிறது. அதாவது, திருச்சபையின் அங்கங்கள் அனைவரும் திரைக்குப் பின்னால் இயேசுவிடம் சென்றடையும் வரை நீடிக்கும். (மத் 25 : 31).

“சிங்காசனத்தில் உட்காருவது“ என்பது “சமாதான இராஜ்யத்தை” குறிக்கிறதா ? அல்லது, “மறுரூபமாகிறதை“ குறிக்கிறதா ? (1 கொரி 15 : 51 - 55) என விவாதிக்க வேண்டும். “உட்காருதல்“ என்பது “கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்“ என்று பொருள்படும். திரைக்கு அப்பாலுள்ள நிலையில் இயேசுவுடன் நாம் அவருடைய இராஜ்யத்தின் ஆட்சி ஆற்றலில் பங்கு கொள்வதைக் குறிக்கிறது. இதன் விளைவு மகிமை பொருந்தியதாய் இருக்கும் - முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி பூமியின் குடிகள் எல்லோரையும் ஆசீர்வதிக்கும் நிலைமையை அடைவர். “சிங்காசனம்” என்பது “நியாயத்தீர்ப்பின் அதிகாரத்தை” குறிக்கிறது. இறுதியில் நீதியுள்ள நியாயத்தீர்ப்பு விளங்கும்.

**நான் ஜெயங்கொண்டு :**

இது ஒரு முக்கியமான சொற்றொடர் ஆகும். இயேசு உலகத்தாரின் பாவங்களுக்கு பலியாக தம் ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். இது சபையின் இறுதி காலத்தில் பாவ நிவாரண பலி முழுமை அடைவதற்கு அடையாளமாய் இருக்கிறது எனலாம். உணர்வில்லாத உலகத்தாரின் கைகளில் நாம் நம் ஜீவனை தியாகம் செய்ய ஒப்புக்கொடுத்து ஜெயங்கொள்வதைக் குறிக்கிறது.

**வெளி 3 : 22 .**
**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.**

இந்த தூது, நம் காலத்திய சோதனைகளிலிருந்து ஜெயங்கொள்வதை மட்டும் குறிப்பதில்லை. மற்ற சபைகளின் தூதுகள் அனைத்தையும் நாம் கேட்டுணர வேண்டும் என்று இங்கு சொல்லப்படுகிறது. நாம் அனுபவிக்கும் சோதனைகளைப் பற்றி மட்டுமே நாம் சிந்திப்பது மனுஷ இயல்பு ஆகும். ஆனால், கர்த்தராகிய இயேசு, சபையின் ஏழு காலப்பகுதிகளின் வரலாறுகளையும் நாம் கண்ணோக்க அறிவுறுத்துகிறார். கிறிஸ்துவிற்குள்ளாக பாடுபடும் சகோதரர்களின் மீது இரக்கமும் ஐக்கியமும் கொண்டவர்களாயிருக்க இயேசு விரும்புகிறார். யுக முழுமையின் சகோதரத்துவத்தை நாம் அறிய வேண்டுமென இயேசு எதிர்பார்க்கிறார்.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

# லவோதிக்கேயா உவமை - மீன் வலை

## 7 ம் உவமை மத் 13 : 49 - 52.

இந்த உவமை, அறுவடை பற்றியதாகும். சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் லவோதிக்கேயா சபை காலப்பகுதி முழுவதும் இருக்கிறது. (கோதுமையும் களைகளும் பற்றி மத் 13 : 24 - 30; 36 - 43ல் காணப்படும் உவமை, சர்தை சபையின் காலப்பகுதியில் ஆரம்பித்து, யுக முடிவு வரையிலும் நீடிக்கிறது. இது லவோதிக்கேயா சபையைப் பாதிக்கிறது).

அமைதலற்ற ஜன சமுத்திரத்திலிருந்து விசுவாசிகளை (மீன்களை - மத் 4 : 19). சேகரிப்பதை "வலை" அடையாளப்படுத்துகிறது. அறுவடை செய்பவர்கள் நல்ல மீன்களை கூடைகளில் சேகரிப்பார்கள். (மத் 13 : 30ன் களஞ்சியம் - அதாவது, சபை பிரிவுகள்) கெட்டவைகளை (களைகளை) எறிந்து போடுவார்கள். (மத் 13 : 30 ன் அக்கினிச் சூளை ?) இவ்வாறாக, "மீன்" என்ற அந்தஸ்தை இழந்து விடுவார்கள்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# சார்லஸ் டி ரசல்

## (கி.பி. 1852 - 1916)

வணிகராயிருந்த சார்லஸ் டி ரசல் அவர்கள், பிதாவின் உயர்ந்த பண்பினை கிறிஸ்தவ சபையின் மதக் கோட்பாடுகள் வெளிப்படுத்த தவறியதைக் கண்டு துயர் கொண்டார். வேதாகமத்தை நேரடியாக ஆராய்ந்ததில் கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரராகிய சிருஷ்டிகரின் தேவ சுபாவங்கள் **நீதி, வல்லமை, அன்பு, ஞானம்** அவருக்கு தெளிவாக விளங்கியது. அனைத்து மனுக்குலத்து ரட்சிப்புக்குரிய ஆசீர்வாதம் அடங்கிய தேவத் திட்டத்தை அறிந்து உணர்ந்து கொண்ட ரசல் போதகர், தம்மை முழு நேர சுவிசேஷ ஊழியத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டார்.

(எபே 1 : 9, 10; சங் 72 ம் அதிகாரம்)

கி.பி. 1876ல் பென்னிசில்வேனியா மாநிலத்தின் 'அலெகெனி' நகர சபைக்கு போதகராக நியமிக்கப்பட்டார். வேதாகமத்தை ஆராய தீவிரமடைந்து, பைபிளை தனித் தனி பிரிவுகளாக உவமைகள், அடையாள குறிகள், நிழல் மற்றும் பொருள் அடங்கிய விஷயங்கள், காலக் கணக்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் என பிரிவுபடுத்தி ஆராய முற்பட்டதில், வேதாகம போதகங்களில் ஒரு இணக்கமான ஒற்றுமை தெரிய வந்தது.

கி.பி. 1886ல் முதன் முதலாக "யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு" என்ற புத்தகத்தை வெளியிட்டார். 60 லட்சம் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து மேலும் ஐந்து புத்தகங்களை வெளியிட்டார்.

கி.பி. 1897ல் மாதாந்திர பத்திரிகை (Zion's watch Tower & Herald of Christ's Presence) ஒன்று வெளியிட்டு, அவர் நிர்மாணித்த வேத மாணவ அமைப்புக்கு இன்றியமையாத ஒன்றாக திகழ்ந்தது.

ரசல் போதகரின் சரளமான எளிய நடையிலான அவரது எழுத்துக்களும் சொற்பொழிவுகளும் எல்லோரையும் ஈர்த்தன. பாஸ்டர் ரசல் அவர்களின் வாராந்திர சொற்பொழிவுகள் அமெரிக்க நாடு முழுவதும் 2000 செய்திதாள்களில் பிரசுரமாயின. நூற்றுக்கணக்கான சுயாதீன சபைகள் ரசல் அவர்களை தங்கள் பாஸ்டராக நியமித்துக் கொண்டன. கிறிஸ்துவின் மீட்பு பலியின் மேல் நாம் கொள்ளும் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதுவே நம்முடைய வருங்கால ஜீவனுக்குரிய நம்பிக்கைக்கு அடிப்படையான ஆதாரம் என்றுரைத்தார்.

கிறிஸ்துவின் உடன்சுதந்திரவாளிகளாக சிறு மந்தைக்கூட்டம் இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட பிறகு, இவ்வுலக மற்றைய மனுக்குலத்துக்கு பூமிக்குரிய தேவ ஆசீர்வாதம் கிறிஸ்துவும் அவருடைய திருச்சபை மூலமாக கிடைக்கப்பெறும் என்ற தேவ திட்டத்தை தெளிவுபட எடுத்துரைத்தார். கி.பி. 1916ல் மரணமடையும் வரையில் பாஸ்டர் ரசல் அவர்கள் தம்மை பாஸ்டராகத் தேர்ந்தெடுத்த எல்லா சபைக்கூட்டங்களுக்கும் சென்று பிரசங்கித்து வந்தார்.

## லவோதிக்கேயா சபை : வரலாற்று நிகழ்வுகள்

| வருஷம் | நிகழ்வுகள் |
|---|---|
| கி.பி. 1874 | இயேசுவின் வந்திருக்குதல் (கண்ணுக்குத் தெரியாத பிரசன்னம்) : தானி 12 : 12ன் '1335' நாட்கள் முடிவடைந்த தருணம்; ஆதிச் சபையின் காலந்தொட்டு இதுவரை இல்லாத அளவிற்கு ஆவிக்குரிய சத்தியங்கள் பிரவாகிக்க ஆரம்பித்தது. தொழில் வளர்ச்சி, அறிவு பெருக்கம், விரைவு பயணங்கள், அபரிமித சொத்துக்கள் போன்ற சமுதாய மாறுதல்கள் நவீன உலகத்தின் அம்சங்களாக மாறின; அத்துடன், உலக அமைதியின்மை, யுத்தங்கள், சச்சரவுகள் பெருகின. (தானி 12 : 1 - 4). |
| கி.பி. 1876 | பென்சில்வானியா மாகாணத்திலுள்ள அலெகினி நகரில் பாஸ்டர் ரசல் 'வேத மாணவர் இயக்கத்தை' ஸ்தாபித்தார். பெரு நகரங்களில் மாநாடுகள் நடத்தினார்; இருண்ட யுகங்களின் தவறுகள் ஒதுக்கித் தள்ளப்பட்டன; கிறிஸ்துவின் பலியின் முக்கியத்துவம், சுவிசேஷ யுக மேலான அழைப்பு, கிறிஸ்துவின் வந்திருக்குதல் (கண்ணுக்குத் தெரியாத பிரசன்னம்), யுக அறுவடை, அகில உலகத்தாருக்கு இழந்ததைத் திரும்பக் கொடுக்கும் தேவத்திட்டம் ஆகியவற்றிற்கு ரசல் முக்கியத்துவம் கொடுத்து சத்தியக் கருத்துக்களை வெளிப்படுத்தினார். |
| கி.பி. 19ம் நூற்றாண்டு இறுதி | வேதாகமத்தை இலக்கியம் மற்றும் வரலாற்று பின்னனியில் ஆராய்ச்சி செய்யும் மனோபாவம் ஜெர்மனியிலும் மற்ற நாடுகளிலும் அறிஞர்கள் மத்தியில் வலுப்பெற்றது. வேதாகமம் தேவ ஆவியினால் எழுதப்பட்டதையும், வேதாகமத்தின் சிறப்பையும் அதிகாரத்தையும் குறைத்து மதிப்பிட்டனர். |
| கி.பி. 20ம் நூற்றாண்டு துவக்கம் | பாரம்பரிய அடிப்படைகளுக்கும் (FUNDAMENTALISM), நவீனத்துவத்திற்கும் (MODERNISM) இடையே போராட்டம் நிலவியது. பகுத்தறிவாதிகளில் சிலர் அற்புதங்கள், மனுஷனின் விழுகை, பாவ நிவாரணத்தின் அவசியம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நம்ப மறுத்தனர். |
| கி.பி. 1914 | முதலாம் உலகப் போர் ஆரம்பமானது; யுத்தமில்லாத நவீன சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை தகர்த்தெரியப்பட்டது. இராஜாக்களின் வம்சம் ஐரோப்பாவில் அழிவை சந்தித்தது; 'ராஜாக்களின் தெய்வீக உரிமை' என்ற கோட்பாடு சீர்குலைந்தது. (புற ஜாதிகளின் காலம் முடிவு பற்றிய தீர்க்கதரிசனம் - லூக் 21 : 24). |
| கி.பி. 1925 | 'பரிணாம வளர்ச்சி தத்துவம்' பற்றிய விவாதம் பெருமளவில் நடைபெற்றது. படைப்பு பற்றிய வேத நம்பிக்கை பரிகாசம் செய்யப்பட்டது. |
| கி.பி. 1929 | லேடரன் ஒப்பந்தம் : 108 ஏக்கர் பரப்பளவு உள்ள வாடிகன் நாட்டிற்கு சிவில் அதிகாரத் தலைவராக போப்பு நியமிக்கப்பட்டு, அகில உலக இறையாண்மை தலைமையை அங்கீகரித்தது. பெரும் அரசாங்கங்கள் (அமெரிக்கா, ரஷ்யா தவிர) வாடிகனுடன் தூதராலயத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டன. |
| கி.பி. 1929 -1930 | போப்பு பயஸ் XI , ஐரோப்பிய நாடுகளுடன் "18 ஒப்பந்தங்களை" செய்து கொண்டார்; இதன் காரணமாக , அந்தந்த நாடுகளில் வாழும் கத்தோலிக்கர்கள் மீது செலுத்தும் மத அதிகாரத்தை போப்பு பெறுவதற்கு வழி வகுக்கப்பட்டது. |
| கி.பி. 1948 | சபைகளின் உலக அமைப்பு (WORLD COUNCIL OF CHURCHES) ஆம்ஸ்டர்டாமில் தோற்றுவிக்கப்பட்டது; இதைத் தொடர்ந்து, |

| | |
|---|---|
| | இவான்ஸ்டன் (1954), புது டெல்லி (1961), உப்சலா (1968), நைரோபி (1975) மற்றும் வாங்கூவர் (1983) ஆகிய நகரங்களில் மாநாடுகள் நடைபெற்றன. 90க்கும் அதிகமான நாடுகளில் உள்ள புரோட்டஸ்டாண்டு , ஆங்கிலிகன், கிரேக்க ஆர்த்தடாக்ஸ் போன்ற 250 சபை பிரிவுகள் நல்லிணக்கமாக ஒருங்கிணைந்து, 'நடைமுறை கிறிஸ்தவத்தை' செயற்படுத்துவதில் உள்ள அவசர பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முயற்சிகள், ஒருங்கிணைப்பு இயக்கத்திற்கு ( ECUMENICAL MOVEMENT) பெருந்தூண்டுதலாக அமைந்தன. |
| 20ம் நூற்றாண்டு | மத்திய யுகங்களுக்குப் பிறகு, போப்பு மார்க்கம் உலக அளவில் ஒரு கௌரவமான நிலையைத் திரும்பப் பெற்றது. உலக நாடுகளுடன் தூதரக தொடர்புகளை அதிகப்படுத்தி, வாடிகன் நிகழ்வுகளை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தி, உலகத்தார் கவனத்தை ஈர்க்கும் முயற்சியை மேற்கொள்கிறது. |
| கி.பி. 1962-1965 | ரோமாபுரியில் இரண்டாவது லத்தீன் கவுன்சில் நடைபெற்றது. போப்பு ஜான் XXIII ன் முயற்சியால், உலகம் முழுவதுமுள்ள கத்தோலிக்க பிஷப்புகள் பெரும் ஆடம்பரத்துடன் பிரமாண்டமான முறையில் கூடினர். ரோமச் சபை நிர்வாகம், நடப்பு முறைகள், ஆராதனை முறைகள் எல்லாம் திருத்தியமைக்கப்பட்டன. உலகத்திலுள்ள பல்வேறு சபை பிரிவுகளின் ஒருங்கிணைப்பிற்கான முந்தைய எதிர்ப்பை மாற்றிக் கொண்டு, புரோட்டஸ்டாண்டு பிரிவினருடன் பேச்சு வார்த்தைகளை துவக்குவதற்கான அடிப்படை பணிகளை மேற்கொண்டன. புரோட்டஸ்டண்டுகளை "பிரிந்த சகோதரர்கள்" என்று அழைக்கும் நிலை உருவாகியுள்ளது. |
| கி.பி. 1963 | போப்பு ஜான் பால் XXIII "பூமியில் சமாதானம்" என்ற பிரகடனத்தை வெளியிட்டார். இணக்கமான சூழ்நிலைக்கும், புரிந்து கொள்ளுதலுக்கும் உதவும் வகையில் கலங்கரை விளக்காக போப்புவின் பிரகடனம் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பாராட்டினார். |
| கி.பி. 1965 | நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபையில் போப்பு ஜான் பால் XXIII "இனி யுத்தமில்லை; யுத்தம் எப்பொழுதும் இல்லை" என்ற அறிவிப்பு , அகில உலக விவகாரங்களில் கிறிஸ்துவத்தின் முன்னோடியான பிரமுகராக போப்புவின் செல்வாக்கை உயர்த்தியது. |
| கி.பி. 1968 | செயற்கை முறையில் கருத்தடை செய்வதை தடை செய்து, போப்பு ஜான் பால் VI அறிக்கை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து, கத்தோலிக்க வட்டாரங்களில் பெருங்குழப்பம் ஏற்பட்டு, குருமார்களின் பிரமச்சரியம் மற்றும் போப்புவின் நிலைமாறாத்தன்மை போன்ற விஷயங்களில் பிளவு ஏற்படத் துவங்கியது. போப்புவின் பதவி காலம் முழுவதும் இந்த பிரிவினைகளை சரி செய்ய முடியவில்லை. |
| கி.பி. 1970 | "மின்னணு சபைகள்" (ELECTRONIC CHURCHES) பெருகத் தொடங்கின. டெலிவிஷன் பிரசங்கிமார்கள் சிலர் மூலம் 'மத வர்த்தகம்' பெருமளவில் நடைபெறத் தொடங்கின; இவர்கள் பிரபலம் அடைந்து, பெரும் அதிகாரம் படைத்தவர்களானார்கள். இத்தகையோரில் பில்லி கிரஹாம், ஜெர்ரி பால்வெல், ஜிம் பேக்கர், பேட் ராபர்ட்சன், ராபர்ட் ஸ்கல்லர், ஜிம்மி ஸ்வாகர்ட், ஓரல் ராபர்ட்ஸ் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இது போன்ற 12 ஊழியங்களின் வருடாந்திர இயக்க செலவு ஒவ்வொன்றும் 100 மில்லியன் டாலர்கள் அளவுக்கு இருந்தது. |
| கி.பி. 1979 | போப்பு ஜான் பால் II உலகம் முழுவதும் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு, வரலாற்றில் அதிக அளவு பயணம் செய்த போப்புவாக பெயரெடுத்தார். துருக்கியில் உள்ள இஸ்டான்புல் நகரில் (பழைய கான்ஸ்டாண்டி நோபிள்) 150 மில்லியன் விசுவாசிகளைக் கொண்ட கிழக்கு ஆர்த்தடாக்ஸ் சபையின் |

| | |
|---|---|
| | தலைமையிலிருந்த டிமிட்ரியஸ் I என்பவரிடம் ரோமன் கத்தோலிக்க சபையுடன் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தார். கி.பி. 1054ல் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட பிரிவினையை சரி செய்யும் முயற்சியாக இருந்தது. |
| கி.பி. 1982 | 'சபைகளின் உலக அமைப்பு' கொள்கை சம்பந்தமான விஷயங்களை பிரேரணை செய்தது. ஞானஸ்நானம், அப்பம் பிட்குதல், சுவிசேஷ ஊழியம் போன்றவைகளில் இது வரை சமரசம் எட்டாதவைகளை இணக்கமுறச் செய்யும் முயற்சியில் இது ஒரு மைல் கல்லாக இருந்தது. இது நடை முறைக்கு வந்தால், மறுமலர்ச்சி காலத்திற்கு முன்பு சபை இருந்த நிலைக்கு மாறி, ஒற்றுமைக்கு வழி வகுக்கும் என்று நம்பப்பட்டது. போப்பு ஜான் பால் II இங்கிலாந்து நாட்டிற்கு வரலாற்றில் முக்கியமான விஜயத்தை மேற்கொண்டார். 764 மில்லியன் விசுவாசிகளைக் கொண்ட ரோமன் கத்தோலிக்க சபையும், 65 மில்லியன் பேர்களைக் கொண்ட ஆங்கிலிகன் சபையும் மறுபடியும் போப்புவின் தலைமையில் இணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். கி.பி. 1054ல் இந்த சபைகளின் பிரிவு ஏற்பட்டது. |
| கி.பி. 1984 | அடிப்படைவாதிகளின் எதிர்ப்பை மீறி, அமெரிக்க அரசாங்கம் வாடிகனுடன் தூதரக உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டது. |
| கி.பி. 1985 | 'இயேசு செமினார்' (JESUS SEMINAR) என்ற அமைப்பு அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்டது. பெரிய செமினரிகள் மற்றும் மத கல்லூரிகளைச் சார்ந்த நூற்றுக்கு மேலான பேராசிரியர்கள் இந்த அமைப்பில் பங்கு கொண்டு இருந்தனர். சுவிசேஷங்களில் உள்ள இயேசுவின் வாக்குகளின் உண்மைத்தன்மையை மறுக்கும் விதத்தில் 'உயர் விமரிசனங்களை' மேற்கொண்டனர். |
| கி.பி. 1987 | பிரபலமான டெலிவிஷன் பிரசங்கிமார்கள் செய்த மோசடிகள் பரவலாக வெளிவரத் தொடங்கின. அவர்களுடைய ஒழுக்க நெறியில்லாமை, வசூலிக்கும் பெரும் நன்கொடை வருமானங்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற விஷயங்கள் வெளிப்படலாயின. இதனால் அவர்களுக்கு பொது ஜன ஆதரவு நலியத் தொடங்கியது. |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 4ம் அதிகாரம்

## சிங்காசன காட்சி

**வெளி 4 : 1.**

**இவைகளுக்குப் பின்பு , இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது : இங்கே ஏறி வா, இவைகளுக்கு பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்கு காண்பிப்பேன்.**

ஏழு சபைகளுக்குரிய தூதுகளை 2, 3ம் அதிகாரங்களில் அறிவித்ததை தொடர்ந்து நடக்கக்கூடிய காரியங்கள் என்ற அர்த்தத்தில் 4ம் அதிகாரத்தில் சொல்லப்படவில்லை.

4ம் அதிகாரம் யுகத்தைப் பற்றிய இரண்டாவது பார்வையாக உள்ளது.

**கண்டேன் :**

யோவான் வகுப்பார் சுவிஷேச யுகத்தின் வரலாற்றை பல சந்தர்ப்பங்களில் பார்க்கும் பொழுது ஒவ்வொரு முறையும் வெவ்வேறு கோணத்தில் காண்பர். சபைக்குரிய நிகழ்வுகளை மட்டுமே கவனித்து, அது தொடர்பான வரலாற்று பின்னனிகளையும், மதச்சார்பற்ற அரசியல் நிகழ்வுகளையும் கவனிக்க தவறினால் தீர்க்கதரிசனத்தை நாம் முழுவதுமாக அறிந்து உணர்ந்து கொள்ள இயலாது.

**பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல் :**

வாசல் (கதவு) என்பது "சந்தர்ப்பம்" அதாவது "யுகம் ஆரம்பிக்கும் பொழுது பரலோகத்தில் சிறப்பு அம்சங்களை காணும் வாய்ப்பு" என்பதை வாசல் குறிக்கிறது.

**முன்னே எக்காள சத்தம் போல் நான் கேட்டிருந்த சத்தம் :**

வெளி 1 : 10ல் சபைகளுக்கு கொடுக்கப்பட்ட அறிமுக அறிவிப்பு போல இப்பொழுது "முத்திரைகளுக்கு" இந்த அறிமுக அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.சபைகளுக்கு இயேசு தம்மை எப்படி அறிமுகப்படுத்திக்கொண்டாரோ , அதைப் போன்று இப்பொழுது , நாம் முன்பு பிரசன்னமாயிருந்த பரலோக காட்சியை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். தமக்கும் பிதாவுக்கும் இடையே உள்ள உறவினை விளக்கும் வண்ணமாக முத்திரைகளை திறக்கும் சமயத்தில் பரலோக காட்சியை காண்பிக்கிறார்.

**இவைகளுக்கு பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்கு காண்பிப்பேன் :**

வெளி 1 : 1ல் குறிப்பிட்டுள்ளபடி, வெளிப்படுத்துதலின் நோக்கமே தம்முடைய ஊழியக்காரருக்கு சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை தெரிவிப்பது தான் எனத் தெரிகிறது. முத்திரைகளைப் பற்றிய இந்த தீர்க்கதரிசனமும் முன்பு குறிக்கப்பட்டதின் நிறைவேறுதலின் ஒரு பகுதியே ஆகும்.

**வெளி 4 : 2.**

**உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது , அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.**

வெளி 1 : 10ம் வசனத்தை ஒத்துப்பார்க்கவும். சபைகளுக்கான அறிமுகம் போலவே முத்திரைகளுக்கும் இதே அறிமுகம் தொடருகிறது. யோவானின் பிரசன்னம் மாம்சீக முறையில் இல்லாமல் "மனதளவில்" தரிசனக்காட்சிக்கு கொண்டு போகப்படுகிறது.

**இதோ :**

4 : 1ல் குறிக்கப்பட்ட அதே வார்த்தை "முத்திரைகள் காட்சியில்" தேவ திட்டங்களின் அம்சங்களை நாம் உணர்ந்து அறிந்து கொள்ள நமது கவனத்தை ஈர்க்கும் வார்த்தை "இதோ".

**வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது :**
"சிங்காசனம்" என்பது தீர்ப்பின் அதிகாரத்தையும் அதின் ஸ்திரத்தன்மையையும் குறிக்கிறது.

**அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார் :**
அவருடைய பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரை அடையாளம் காண அறிகுறி பாஷை தேவை இல்லை. இருக்கிறவராகவே இருக்கிறேன்" (யாத் 3 : 14) என்பதே அவருடைய பெயர். ஆனால், அவருடைய குணாதிசயங்கள் அடையாள பாஷையில் குறிக்கப்படுகின்றன. அவற்றை பிறகு காணலாம்.

**வெளி 4 : 3.**
**வீற்றிருந்தவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்திற்கும் ஒப்பாயிருந்தார். அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது. அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று .**

**அவர் வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்திற்கும் ஒப்பாயிருந்தார் :**

**வச்சிரக்கல் :** (வெளி 21 : 11ல் இந்த கல் மிகவும் விலையுயர்ந்தது என்றும், பிரகாசமாகவும், பளிங்கைப் போல் தெள்ளந்தெளிவாக இருப்பதாயும் குறிக்கப்பட்டிருக்கிறது).

வச்சிரக்கல் எப்படி பிரகாசமாகவும் தெள்ளந் தெளிவாகவும் இருப்பது போல் தேவனுடைய சுபாவங்களில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லை. கலப்பில்லாத, பரிசுத்தமான, தெளிவான குணத்தில் தான் தேவனுடைய **மகிமை** விளங்குகிறது.

**பதுமராகம் : (sardius)** இது சிவப்பு நிறம் கொண்ட கல். இதனுடைய கட்டமைப்பு வடிவங்களை செதுக்க ஏதுவான முறையில் உள்ளது. இந்த கல் தோலின் நிறம் போன்று உள்ளதாலும், உருவங்களை செதுக்க ஏதுவாக இருப்பதாலும் இந்த கல் **அன்பை** குறிக்கிறதாக கொள்ளலாம். வசனம் 7ல் மூன்றாவது ஜீவன் (மனுஷ முகம்) அன்பைக் குறிக்கிறது.

வெளி 21 : 20ல் இந்த 'கல்' 6வது வரிசைக்கிரமத்தில் உள்ளது. என்பது முழுமைக் குறிக்காத எண். திருச்சபை முழுமை அடையாத வரைக்கும் இங்கு குறிக்கப்பட்டுள்ள "அன்பு" மனுஷ சமுதாயத்தின் பால் செயலற்றதாகவே இருக்கும் என்பதை உணர்த்துகிறது. திருச்சபை மகிமை பெற்றவுடன் ஆயிர வருட அரசாட்சியில் மனுக்குலம் தேவனுடைய அன்பிற்குள் கொண்டுவரப்படுவார்கள்.

வச்சிரக்கல்லின் மகிமைக்கு ஒத்த **நீதி, வல்லமை, ஞானம்** என்ற சுபாவங்கள் ஒரு அந்நியோன்யத்தையும், நெருக்கத்தையும் வெளிப்படுத்தாததைப் போல தோற்றமளித்தாலும், அதை சமப்படுத்தும் வகையில் பதுமராக கல்லைக் குறிக்கும் **அன்பு** விளங்குகிறது.

**அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது :**
வானவில் என்பது வேதத்தில் உடன்படிக்கையை குறிக்கிறது.

**அது (வானவில்) பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று :**
மரகதம் பச்சை நிறமான கல். **"பச்சை"** என்பது **"நித்தியத்தை"** குறிக்கிறது. அறிகுறி பாஷையில் குறிக்கப்பட்ட பச்சை நிற வானவில் தேவனுடைய நித்திய உடன்படிக்கையைக் குறிக்கிறது. (எபி 13 : 20; சங் 104 : 8 - 10; ஏசாயா 55 : 3).

**வெளி 4 : 4.**
**அந்த சிங்காசனத்தை சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன: இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரம் தரித்து, தங்கள் சிரசுகளில் பொன் முடி சூடி, அந்த சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.**

**அந்த சிங்காசனத்தை சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன :**

பிதாவின் சிங்காசனத்தைச் (தீர்ப்பின் அதிகாரம் மற்றும் ஸ்திரதன்மை) சுற்றிலும் இருபத்து நான்கு சிங்காசனங்கள் (கோள்கள் போல) (தீர்ப்பின் அதிகார நீட்சிகளாக, விரிவாக்கங்களாக) இருந்தன. புதிய ஏற்பாடு முழுமையாக எழுதப்படாததற்கு முன்பு, எழுத்துப்பூர்வமாக , மனுஷர்களிடத்தில் தேவனுடைய தீர்ப்பின் ஆயுதமாக இருந்தது **பழைய ஏற்பாடு** ஒன்றே! வெளி 12 : 1ல் பார்க்கும் வண்ணம், 24 சிங்காசனங்களின் (நியாயப் பிரமாணம் = சந்திரன்) அடித்தளத்தின் மேல் புதிய உடன்படிக்கை செயல்படுவதாக காட்டப்பட்டிருக்கின்றது.

**இருபத்து நான்கு மூப்பர்கள் அந்த சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன் :**

“இருபத்து நான்கு மூப்பர்கள்“ என்பது “இருபத்து நான்கு தீர்க்கதரிசனங்களின் சாட்சியை” குறிக்கிறது. சுவிஷேச யுகத்தில் நிறைவேறுகிற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை குறிக்கிறதாகக் கொள்ளலாம். வெளிப்படுத்தலின் பெரும்பான்மை விஷயங்கள் பழைய ஏற்பாட்டை அடித்தளமாக கொண்டவையே !

**வெண்வஸ்திரம் தரித்து :**

இந்த தீர்க்கதரிசனங்கள் மனிதருடைய முயற்சியினால் எழுதப்பட்டவை அல்ல. இவைகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பரிசுத்த மனிதர்களால் எழுதிய தேவனுடைய வார்த்தைகள். இந்த வசனங்களின் **பரிசுத்த தன்மையை வெண்மை** குறிக்கிறது.

**தங்கள் சிரசுகளில் பொன் முடி சூடி :**

“சிரசு” என்பது “கருத்துக்கள்”, “எண்ணங்கள்”, ஆகியவற்றை குறிக்கும்.

மூப்பர்களுடைய சாட்சியை (தீர்க்கதரிசனங்களின் சாட்சியை) உண்மையென தெய்வீக அதிகாரம் (பொன்முடிகள்) உணர்த்துகின்றது.

**வெளி 4 ம் அதிகாரத்தில் சிங்காசனங்கள் பற்றிய விஷயங்கள் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன :**

| | | |
|---|---|---|
| **சிங்காசனம்** | : | **தீர்ப்பிற்கான அதிகாரம்.** |
| **சிங்காசனத்தின் மேல்** | : | **அதிகாரம் உடையவர் ஒருவரே.** |
| **சிங்காசனத்தைச் சுற்றிலும்** | : | **அந்த அதிகாரத்தின் நீட்சிகள் (விரிவுகள்) வழங்கப்பட்ட நிலை.** |
| **சிங்காசனத்திலிருந்து** | : | **தீர்ப்பிலிருந்து வெளிப்படும் அதிகாரங்கள்.** |
| **சிங்காசனத்திற்கு முன்பாக** | : | **ஒரே அதிகாரத்திற்கு ஊழியக்காரர்கள் கீழ்ப்படியும்.** |

**சிங்காசனத்திற்கு மத்தியிலும், சுற்றிலும் :**

தேவனுடைய சுபாவங்கள் அவரைச் சுற்றிலும் முழுமையாக பரவி இருக்கும் நிலை. இந்த சுபாவங்கள் பிதாவை நமக்கு அடையாளம் காண்பிக்கவும், அவரின் பரிசுத்த தன்மையை வெளிப்படுத்தவும், அவரை நம்மிடத்தில் நெருங்க வைக்கவும் உணர்த்துகின்றன.

**வெளி 4 : 5 :** 4 ம் வசனத்தில் **தீர்ப்பின் தரப்பாடுகளைக்** குறித்து பார்த்தோம்.
5 ம் வசனம் **தீர்ப்பின் ஆயுதங்களைக்** குறித்து தெரிவிக்கிறது.

வெளி 4 : 5.
**அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும், இடி முழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன. தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன.**

**சிங்காசனத்திலிருந்து மின்னல்கள் :**

கூர்மையான, தெளிவான, ஊடுருவக்கூடிய சத்தியங்களை சந்திக்கும்போது அதனால் ஏற்படும் விளைவுகளை நாம் கண்டுகொள்ளும் ஆயுதம்.

**சத்தங்கள் :**

1 கொரிந்தியர் 14 : 7, 8ல் இதே வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தர்க்கரீதியாக ஆராயப்பட்ட விஷயங்களின் பால் நம் எதிர்ச்செயல் இப்படி இருக்கும்.

**இடி முழக்கங்கள் :**

சத்தியங்கள் வெளிப்படும் தருணங்களில் அதைத் தொடர்ந்து எழும் ஆட்சேபணைகள், சர்ச்சைகள், வாக்குவாதங்களை நாம் எதிர் கொள்ளும் விதம் தீர்ப்பின் மூன்றவது ஆயுதம். சத்தியங்களுக்கும், அவற்றின் வெளிப்பாடுகளுக்கும் மனுக்குலம் எப்படி பிரதிபலிக்கிறது என்பதே இந்த சுவிஷேச யுகத்தில் தேவனுடைய தீர்ப்பின் அளவுகோல் ஆகும்.

**தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன :**

தேவனுடைய ஏழு ஆவிகளும் "பரிசுத்த ஆவியைக்" குறிக்கிறது. இந்த சுவிஷேச யுகத்தின் ஏழுகாலப்பகுதிகளில் சபைக்கு அந்தந்த காலப்பகுதிகளில் அளிக்கப்படும் ஏழு தூதுகளை (செய்திகளை) வழங்கும் பணியை **"பரிசுத்த ஆவி"** மேற்கொள்ளுவதை ஏழு அக்கினி தீபங்களாக அடையாள பாஷையில் குறிக்கப்படுகிறது.

வெளி 1 : 4ல் "ஏழு ஆவிகள்" என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. "ஏழு அக்கினி தீபங்கள்" என்ற கூடுதல் குறிப்பு காணப்படவில்லை.

"ஏழு அக்கினி தீபங்கள்" என்ற குறிப்பு ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஏழு விளக்குகளைக் குறிப்பதாய் காணப்படுகிறது. சபையின் ஏழு காலப்பகுதிகளிலும் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள், தேவனுடைய சத்தியத்தின் அளவு கோலாக நித்திய காலமாய் பிரசன்னமாக இருக்கவும், அதுவே தீர்ப்பின் அளவு கோலாக யுக முழுமைக்கும் இருக்கும் வகையில் காணப்படுகிறது.

வெளி 4 : 6.

**அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடி கடலிருந்தது ; அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தை சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருந்தன. அவைகள் முன்புறத்திலும், பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன.**

**பளிங்குக்கொப்பான கண்ணாடி கடலிருந்தது :**

இது ஆசரிப்புக் கூடாரத்தைக் குறிக்கும் அடுத்த அடையாளம் ஆகும். சாலொமோன் தேவாலயத்தில் இருந்த தண்ணீர்த் தொட்டிக்கு “கண்ணாடிக் கடல்” என்று பெயர். (1ராஜா 7 : 23; 2நாளா 4 : 2).

தேவனை அணுகி, தங்கள் பாவங்களை கழுவும் மன நிலையோடு மனுஷர் வரும்பொழுது பரிசுத்தமுள்ள தெளிவான களங்கமற்ற சத்தியமாகிய ஜீவத்தண்ணீரை வழங்கும் விதமாக இந்த தொட்டி யுகம் முழுமைக்கும் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் இது அடையாளமாகக் குறிக்கப்படுகிறது.

**அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தை சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருந்தன :**

இந்த “ **ஜீவன்கள்”** பிதாவைச் சுற்றிலும் முழுமையாக சூழ்ந்திருந்தன. அவைகள் அடையாள பாஷையில் பிதாவின் சுபாவங்களைக் குறிக்கின்றன. நாம் தேவனை நேரில் தரிசிக்க இயலாததால், பிதாவின் குணாதிசயங்களின் அடிப்படை அம்சங்களை குறிக்கும் அடையாளங்களாக இந்த நான்கு ஜீவன்கள் காணப்படுகின்றன.

**நான்கு ஜீவன்கள் :**

சில மொழிபெயர்ப்புகளில் “நான்கு மிருகங்கள்” என்றும், “நான்கு சிருஷ்டிகள்” என்றும் காணலாம். தேவன் படைக்கப்பட்டவர் அல்ல. அது போன்று அவருடைய நான்கு சுபாவங்களும் படைக்கப்பட்டவைகளல்ல. ஆகவே “சிருஷ்டிகள்” என்ற மொழிபெயர்ப்பு தவறான அர்த்தத்தை தோற்றுவிக்கிறது.

“நான்கு ஜீவன்கள்“ என்பது பிதாவின் அடிப்படை சுபாவங்களாகிய **நீதி, வல்லமை, அன்பு, ஞானத்தைக்** குறிக்கும் அடையாளங்கள் ஆகும். இந்த **“ஜீவன்கள்”** உயிருள்ளவைகளாக இருப்பது, தேவ சுபாவங்களின் ஒருங்கிணைந்த நித்திய செயல்பாடுகளைக் குறிக்கின்றன.

“இருபத்து நான்கு மூப்பர்கள்“ மனிதர்கள் இல்லாதது போல, நான்கு ஜீவன்களும் சிருஷ்டிகளைக் குறிக்காது.

**ஜீவன்கள் :** “ஜீவன்” என்ற வார்த்தை தேவனுடைய பெயருக்கு பொருந்திய விதமாக உள்ளது.

**“யாவே - இருக்கிறவராகவே இருக்கிறேன்”** என்ற பெயர் என்றென்றும் ஜீவனுடையவராயிருக்கிற தேவனைக் குறிக்கின்றது. இந்த பதத்தை வேதாகமத்தில் பல இடங்களில் காண்கிறோம்: உபா 5 : 26; 2ராஜா 19 : 4, 16; சங் 42 : 2; 84 : 2; ஏசாயா 37 : 4, 17; யோவான் 6 : 57, 69; 2கொரி 3 : 3; வெளி 7 : 2; ரூத் 3 : 13; 1சாமு 14 : 39, 45; எரே 4 : 2; 12 : 16; 16 : 15; வெளி 4 : 9, 10; 5 : 14; 10 : 6; 15 : 7.

தேவனுடைய கிரியைகளின் வாயிலாக அவருடைய சுபாவங்களை உணர்கிறோம். அப் 15 : 18.

**முன்புறத்திலும், பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன :**

**"கண்கள்"** ஞானத்தைக் குறிக்கும். தேவனுடைய நான்கு சுபாவங்களில் **ஞானம்** ஒன்று. மற்ற சுபாவங்களெல்லாம் ஞானத்தின் தொடர்புடையதாக இருக்கும். கண்கள் முன்புறத்திலும், பின்புறத்திலும் இருப்பது தேவ சுபாவங்களில் மாற்றங்கள் எதுவும் இல்லாத தன்மையை உணர்த்துகின்றது. யாக் 1 : 17; எந்த கிரியைகளையும் அவர் அறிவார். அப் 15 : 18.

வெளி 4 : 7.

**முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன.**

**முதலாம் ஜீவன் :**

"நான்கு ஜீவன்கள்" எண்களால் குறிக்கப்படுகின்றன. முதல் நான்கு முத்திரைகளைப் பற்றி பின்னர் நாம் ஆராயும் போது, அங்கு வெறும் எண்கள் மட்டுமே குறிக்கப்பட்டிருக்கும். அப்பொழுது வெளி 4 : 7ல் காணும் அடையாளங்களை கருத்தில் கொண்டு ஜீவன்களை அறிய ஏதுவாகலாம்.

**சிங்கம் :** மிருகங்களுக்கு அரசன் என்ற முறையில் சிங்கம் **"வல்லமைக்கு"** அடையாளம்.

**இரண்டாம் ஜீவன் - காளை :**

நிழலான பலிகளில் பாவ நிவாரண பலியாக காளை கொல்லப்பட்டது. காளை **"நீதிக்கு"** அடையாளம்.

**மூன்றாம் ஜீவன் - மனுஷ முகம் :**

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ஜீவ பலியாக தந்தருளி உலகத்தில் அன்பு கூர்ந்தது (யோவான் 3 : 16) தேவனுடைய சுபாவமாகிய அன்பை வெளிப்படுத்துகிறது. காளை (நிழல்) பாவங்களை நிவர்த்தி செய்யாது. தேவ அன்பே மீட்பின் பலிக்கு வழி வகுத்தது. எபி 10 : 5.

**நாலாம் ஜீவன் - பறக்கிற கழுகு :**

கூரிய பார்வை உடைய கழுகு **ஞானத்தைக்** குறிக்கும். "கழுகு பறப்பது தேடுதலையும், கூர்ந்த கவனிப்பையும்" காட்டுகிறது. சகரி 4 : 10.

வெளி 4 : 8.

**அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும் , சுற்றிலும் உள்ளேயும் கண்கள் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள் : இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.**

**அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும் :**

"**சிறகுகள்**" என்பது **தேவனுடைய வார்த்தைகளைக்** குறிக்கும். வெளி 12 : 14ல் தேவனுடைய வார்த்தைகளாகிய பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு மூலம் திருச்சபை பராமரிக்கப்பட்டு வந்ததை அடையாள பாஷையில் பார்க்கிறோம். சங் 91 : 4ல் தேவன் நம்மை தம் சிறகுகளால் மூடுகிறார் என்று பார்க்கிறோம்.

சிறகுகள் ஜோடியாகவே குறிக்கப்படுகின்றன. பைபிளின் இரு பிரிவுகளைக் குறிக்கும். இந்த தரிசனக் காட்சி சுவிஷேச யுகத்தின் ஆரம்ப காலகட்டத்தைச் சார்ந்ததால் எபிரேய எழுத்துக்கள் மட்டுமே முழுமை பெற்ற நிலையில் முத்திரிக்கப்பட்டுள்ள புஸ்தகத்தின் அடுத்த அத்தியாயம் (புதிய ஏற்பாடு) திறக்கப்பட எதிர்பார்ப்பு அதிகமாய் இருந்தது.

நான்கு ஜீவன்களில் ஒவ்வொரு ஜீவனுக்கும் அவ்வாறு சிறகுகள் உள்ளதால் , மொத்தமாக 24 சிறகுகள் உள்ளன. சுவிஷேச யுகத்தின் ஆரம்ப கட்டத்தில் எழுத்துப் பூர்வமாக இருந்த தேவனுடைய வார்த்தைகளாகிய 24 தீர்க்கதரிசனங்களின் தொகுப்பை அதாவது பழைய ஏற்பாட்டின் சாட்சியை 24 மூப்பர்களாக அடையாள பாஷையில் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏசாயா 6 : 2ல் ஜீவன் ஆறு சிறகுகளை கொண்டதாகவும், இரண்டு சிறகுகள் முகத்தையும், இரண்டு சிறகுகள் கால்களையும் மூடிக்கொண்டிருப்பதாகவும், இரண்டு செட்டைகளால் பறப்பதாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டு சிறகுகள் முகத்தை மூடிக்கொண்டிருப்பது, தேவ ஒத்தாசை உலகத்தாருக்கு மறைக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. ஆனால், அவருடையவர்கள், சிறகுகள் பக்கம் அணுகி அவைகளுக்குப் பின்னுள்ளதை கண்டுணர முடியும். இரண்டு சிறகுகள் கால்களை மூடிக் கொண்டிருப்பது, மனுஷர் மத்தியில் தேவனுடைய நடவடிக்கைகள் மறைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. தேவனுடைய வார்த்தைகளின் (சிறகுகள்) மூலமாக தேவனுடைய திட்டங்களை நாம் உணர இயலும்.

பறப்பதற்கு உபயோகிக்கும் இரண்டு செட்டைகள், தேவனைப்பற்றி உத்தம இருதயத்துடன் இருப்பவர்களை தேடிக்கண்டுபிடித்து சத்தியத்திற்குள் வழி நடத்தும். 2நாளா 16 : 9.

**சுற்றிலும் உள்ளேயும் கண்கள் நிறைந்தவைகளுமாயிருந்தன :**

சிறகுகள் கண்கள் நிறைந்தவைகள் என்றால், தேவ சத்தியங்கள் கடந்த கால விஷயங்களின் ஞானத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்றி , வருங்கால விஷயங்களைப் பற்றியும் உணர்த்தும் விதத்தில் கண்கள் இரு திசைகளிலும் இருப்பதைக் காட்டுகிறது.

**கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன :**

**"ஓய்வில்லாமல்"** என்பது தேவ சுபாவங்களைக் குறித்த சாட்சி எப்பொழுதும் அறிவிக்கப்படுவதைக் காட்டுகிறது. சங் 121 : 4ல் "இரவும் பகலும்" பற்றி காணப்படுகிறது. இராக்காலம் பாவம் மற்றும் மரணத்தையும் ஆயிர வருட ஆட்சியின் ஆசீர்வாதம் பகல் காலத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

மூன்று முறை ஒரு விஷயத்தை திருப்பி சொல்வது , வேதாகமத்தின் நிச்சயமான தீர்க்க முடிவைக் காட்டுகிறது. பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று மூன்று முறை கூறப்படுவதில் **தேவனுடைய தன்மை** பூரணமாக வெளிப்படுகிறது.

**இருந்தவரும்,இருக்கிறவரும்,வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் :**

(வெளி 1 : 4ல் வரிசைக்கிரமம் மாறியுள்ளதைப் பார்க்கவும்)

இந்த வசனம் **"யாவே"** ன் தனிப்பட்ட இருத்தலை (personal existence) குறிப்பதாகக் கொண்டாலும் தேவனுக்கு கடந்த கால தன்மையை இடுவது பொருத்தமாயிராது.

வெளி 4 : 8ம் வசனத்தில் மூன்று முறை தேவனுடைய பரிசுத்த தன்மையை எடுத்துரைப்பது, நாம் கடந்த காலத்தைப் பார்த்தாலும் அவருடைய பரிசுத்தத்தை காண்போம், இப்பொழுது பார்த்தாலும், அவருடைய பரிசுத்தத்தை காண்போம், வருங் காலத்தைப் பார்த்தாலும் அவருடைய பரிசுத்தத்தை காண்போம் என்று குறிப்பதாகக் கொள்ளலாம். தேவனுடைய சுபாவங்களின் சாட்சியே இந்த வார்த்தை தான் **"பரிசுத்தம்"** !

**நீதி, வல்லமை, அன்பு, ஞானம்** ஆகிய சுபாவங்களின் ஒட்டுமொத்த சம நிலை **"பரிசுத்தம்"** தான் !

**வெளி 4 : 9.**

**மேலும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு, அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது.**

**நான்கு ஜீவன்கள் :**

9ம் வசனம் எதிர்காலத்தைக் குறிப்பதாக உள்ளது; இந்த 9ம் வசனம் (10, 11ம் வசனங்களுடன்) தேவத்திட்டம் முழுமை பெறும் காலக்கட்டத்தை நோக்கி செல்வதாய் உள்ளது; ஏனெனில் அக்காலத்தில் தேவத்திட்டங்கள் முழுமையாக உணரப்பட்டு, தேவ சுபாவங்களும், தேவ தீர்க்கதரிசனங்களும் தேவனை வெளிப்படையாக துதி செய்யும் சாட்சியங்களை இந்த வசனங்கள் நமக்கு விவரிக்கின்றன. சமாதான இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேவ சுபாவங்கள் அனைத்தும் எல்லோருடைய மத்தியிலும் உணரப்பட்டு மதிக்கப்படுகின்றன. தேவனுடைய பண்பின் கூறுகளான செயல்பாடுகளை காலக்கண்ணோட்டத்தில் பின்னோக்கிப் பார்க்கும் விதத்தில் உலகத்தாரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்; **தேவ மகிமையையும்** (வெண்மையான கல்லின் பிரகாசத்தையும், தூய்மையையும், தெளிவையும்), **கனத்தையும்** (தேவன் தம்முடைய செயல்பாடுகளின் அங்கமாக உலகத்தில் தீமையை அனுமதித்ததைப் பற்றிய பூரண அறிவினால் தேவனுடைய கனம் வெளிப்படும்), **ஸ்தோத்திரத்தையும்** ('கறையற்ற அனைத்தும் நன்மைக்காக மட்டும்' என்பதை அறிந்து நன்றியறிதலோடு தேவனைப் புகழ்வதையும்) நான்கு ஜீவன்களின் சாட்சியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறவர் :**

நமக்கு கிடைக்கப்போகும் ஏராளமான வாக்குத்தத்தங்களின் நன்மைகளை உள்ளடக்கியதாக இந்த சொற்றொடர் உள்ளது; இதன் மையக்கருத்து என்னவென்றால், தேவன் இதுவரைக்கும் நமக்கு செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நாம் அவருக்கு மகிமையையும், கனத்தையும், நன்றியறிதலையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்பது மட்டுமில்லாமல், எக்காலத்திலும் நாம் அவரைத் துதிப்பவர்களாக இருக்கிறோம்.

**வெளி 4 : 10.**

**இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு , தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து .**

**24 மூப்பர்கள் :**

தீர்க்கதரிசனங்களின் ஒட்டுமொத்த சாட்சியங்களும் தேவனுக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படுகின்றன; இது அவரை தொழுது கொள்வதற்கான ஒரு செயல் ஆகும். தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும் சமயத்தில், அவற்றின் துல்லியமானதும் சரியானதுமான தன்மைகளுக்காக தேவனுக்கு செலுத்தப்படும் தொழுகை ஆகும்;

**தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து :**

தீர்க்கதரிசனங்கள் அதிகாரங்களை (கிரீடங்களை) பெற்றதை வெளிப்படையாக அறிவிப்பது இங்கு அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. (2 பேதுரு 1 : 19 - 21).
24 தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும் வரைக்கும் இங்கு அடையாள பாஷையில் குறிக்கப்படும் 24 மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்ற முடியாது.

**வெளி 4 : 11.**
**கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவை களுமாயிருக்கிறது என்றார்கள்.**

**கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர் :**

இந்த வசனத்தில் குறிக்கப்படுபவைகள் எதிர்காலத்தில் நடக்க வேண்டியவை ஆகும்; இந்த வசனம் பிரசங்கி 12 : 7ன் கருத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளது; அதாவது, 'ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போவது' குறித்து சொல்லப்படுகிறது; மனிதன் இறந்தவுடன் ஜீவனைப் பெறும் சிலாக்கியம் அதைக் கொடுத்தவரையே அடைகிறது. தீர்க்கதரிசனங்கள் இறக்கும் பொழுது (நிறைவேறும் பொழுது), அந்த தீர்க்கதரிசனங்களின் அதிகாரங்கள் அனைத்தும் (கிரீடங்கள்) அதைக் கொடுத்தவரிடமே திரும்ப சென்றடைகிறது. இப்படியாக, சிங்காசனத்திற்கு முன்பாக கிரீடங்களை கழற்றி வைப்பது, 'எங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டவைகள் நிறைவேறி உள்ளன' என்பதை அடையாளப்படுத்துகிறது.

**நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள் :**

தீர்க்கதரிசனங்களின் வார்த்தைகள் அனைத்தின் சுருக்கமே இந்த வசனம் சொல்லும் ஆசீர்வாதம் ஆகும்; இதனாலேயே, தேவன் மகிமையயும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்பதையும், தேவனே எல்லாவற்றிற்கும் காரணராயிருக்கிறார் என்பதையும் 24 மூப்பர்கள் (தீர்க்கதரிசனங்கள்) பிரகடனப்படுத்துகின்றனர்.

வெளிப்படுத்தல் புத்தகம் முழுவதும் இயேசுவைப் பற்றியதே ஆகும் என்பதை 9ம் அதிகாரம் நமது பார்வைக்கு கொண்டு வருகிறது. **யேகோவா** தேவன் இந்த புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகிறதில்லை. (புதிய ஏற்பாட்டிலும் கூட அப்படியே). 4ம் அதிகாரத்திலும், 9ம் அதிகாரத்திலும் இந்த யுகத்தின் முழுமையிலும் இயேசுவே கவனத்திற்குரியவராக இருக்கிறார்; **யேகோவா** தேவன் இவ்விதமாக எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும் விதமாக இயேசுவை முன்னிறுத்துகிறார். தேவனே எல்லாவற்றிற்கும் தலையானவர். அவரே திட்டத்தை வகுத்தார்; அவரே சுபாவங்களை உள்ளடக்கியவர்; எல்லா துதியும் அவருக்கே உரித்தானது. ஆனால், 5ம் அதிகாரத்தில் தேவன் தம்முடைய குமாரனுக்கு பெரும் அதிகாரத்தை ஒப்படைக்கிறார்; வெளி 1 : 8ல் இது சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 5 ம் அதிகாரம்

## ஏழு முத்திரைகள் பற்றி அறிமுகம்

வெளி 5 : 1.
**அன்றியும், உள்ளும், புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்.**

"வலது கரம்" என்பது ஒத்தாசை, செயல்திறன், சக்தியைக் குறிக்கிறது. சுவிசேஷ யுகத்தில் சபை வளர்ச்சியுறும் காலப்பகுதியில் தேவனுடைய திட்டம் எவ்விதம் செயலாக்கப்படும் என்ற விவரங்கள் புஸ்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. தேவன் தம் திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்த **தயாரான நிலையில்** இருப்பதைச் சுட்டிகாட்டும் விதமாக பிதாவின் வலது கரத்தில் தேவ திட்டங்களடங்கிய புஸ்தகம் திறக்கப்பட ஆயத்தமாயிருந்தது. முத்திரிக்கப்பட்டிருந்த இந்த புஸ்தகத்தை திறப்பதற்கு தகுதியானவர் காணப்படும் வரைக்கும் இந்த நிலை நீடிக்கும்.

**அன்றியும், உள்ளும், புறம்பும் எழுதப்பட்டு :**

அந்த புஸ்தக சுருள்களில் தேவனுடைய நோக்கம் புரிந்து உணர்ந்து கொள்ளும் விதம் சில பகுதிகள் தெளிவாகவும், சில பகுதிகள் புரிய இயலாத வண்ணம் தெளிவற்றவையாகவும் இருப்பதைக் காட்டுகிறது.

**ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த :**

தேவ திட்டத்தில் மறைக்கப்பட்டிருந்த விஷயங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வரிசைக்கிரமத்தில் அதற்குரிய அந்தந்த காலப் பகுதியில் வெளியரங்க மாக்கப்படும்.

வெளி 5 : 2.
**புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன்.**

**பலமுள்ள தூதன் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் மூன்று "**பலமுள்ள தூதர்களைப்**" பற்றி படிக்கிறோம். (வெளி 5 : 2; 10 : 1; 18 : 21). ஜன சமுதாயத்தில் பெரும் மாற்றங்களை வருவிக்கும் புரட்சிகள் நிகழும்போது, தேவ திட்டத்திற்கிணங்க இந்த பலமுள்ள தூதர்கள் பிரசன்னமாவதை மூன்று முறை பார்க்கிறோம்.

வெளி 10 : 1ல் காணப்படும் **பலமுள்ள தூதன்** , முடிவு கால உபத்திரவங்களின் ஒரு முன் மாதிரியான (proto type - பத்தில் ஒரு பங்கு) **பிரெஞ்சு புரட்சியின் போது** இருக்கிறான்.

வெளி 18 : 21ல் காணப்படும் மற்றுமொரு **பலமுள்ள தூதன்,** மகா பாபிலோன் கடைசியாக சந்திக்கும் புரட்சிகரமான பேரழிவின் சமயத்தில் இருக்கிறான்.

வெளி 5 : 2ல் குறிப்பிட்டுள்ள **பலமுள்ள தூதனும்,** மற்ற தூதர்களைப் போலவே புரட்சிகரமான மாறுதலின் போது காணப்படுகிறான். அதாவது , யூத மார்க்க நியாயப்பிரமாண யுகத்திலிருந்து, கிறிஸ்தவ யுகத்திற்கு மாறும் நிலையில் இந்த பலமுள்ள தூதன் வருகை அமைகிறது.

**மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற :**

யூதர்களுடைய விழுகை ஒரு குழப்பமான உபத்திரவங்களடங்கிய காலப்பகுதி ஆகும். யூத மார்க்கத்தின் இந்த விழுகை ஒரு பெருஞ் சத்தத்துடன் கூடிய செய்தி ஆகும். மோசேயின் காலந்தொட்டு யூத மதம் பூமியில் ஒரு மெய்யான அளவுகோலாக திகழ்ந்து வந்தது. யூத மார்க்கத்துக்கு சவாலாக கிறிஸ்தவம் வர இருப்பதை இந்த **மிகுந்த சத்தம்** உணர்த்துகிறது.

**புஸ்தகத்தை திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் :**

சுவிசேஷ யுக ஆரம்ப நிலையில், யூத பிரதான ஆசாரியத்துவம் அதிகாரம் இழந்தது. ஒரு யுகத்தின் முடிவும், மறு யுகத்தின் துவக்கமும் பெரும் குழப்பத்தை தோற்றுவிக்கிறது. இயேசுவின் ஊழியம் யூத மார்க்கத்தின் முக்கியத்துவத்தை சிதைத்து விட்டது. ஆனாலும் இயேசு தமது சகோதரர்களுக்கு அடுத்து என்ன சம்பவிக்கும் என்பதை பெந்தகோஸ்தே நாள் வரைக்கும் வெளிக்காட்டவில்லை. புஸ்தகத்தை திறக்க வல்லவர் மகிமையடைந்த கிறிஸ்துவுக்கு முன்னர் யாரும் கிடையாது.

வெளி 5 : 3.

**வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்தப் புஸ்தகத்தை திறக்கவும், அதை பார்க்கவும் கூடாதிருந்தது .**

**வானத்திலாவது** : மத உலகத்தில் எந்த ஆசாரியனும் இல்லை.
ஆவிக்குரிய சரீரத்திலுள்ள எந்த தூதனும் இல்லை.

**பூமியிலாவது** : மனுஷர்களோ, அல்லது சமுதாய நடைமுறைகளோ கிடையாது.

**பூமியின் கீழாவது :** கடந்த காலத்தில் மரித்த முற்பிதாக்கள் (மோசே, ஏசாயா, யோவான் ஸ்நானகன் போன்றவர்களோ அல்லது அவர்கள் எழுதிய எழுத்துக்களோ).
எவரும் தேவ திட்டத்தை அறிந்து கொள்ளவில்லை.
**மகிமையடைந்த கிறிஸ்துவைத் தவிர !**

**புஸ்தகத்தை திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது :**

தேவனுடைய ராஜ்யம் பற்றிய தேவ திட்டங்களை யாரும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. புஸ்தகம் ஒரு வேளை திறக்கப்பட்டிருந்தாலும் அதை புரிந்து கொள்ள யாருக்கும் வாய்ப்பு இருந்திருக்காது. இயேசுவின் மீட்பு பலியின் நன்மைகள் அவருடைய சீஷர்களுக்கு பெந்தகோஸ்தே நாளில் கிடைக்கப்பெற்று, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் வரைக்கும் அவர்களே தேவத் திட்டத்தை புரிந்து கொள்ள இயலாதிருந்தது. இயேசு மாம்ச சரீரத்தில் சீஷர்களோடு இருந்த சமயத்தில் கூட , அவர் பேசிய வார்த்தைகளை சீஷர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

வெளி 5 : 4.

**ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும், அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்.**

**நான் மிகவும் அழுதேன் :**

வெளி 4ம் அதிகார தரிசனக் காட்சியில் பரலோக ராஜ்யத்தின் மகிமையைக் கண்ட யோவான், பிதாவின் வலது கரத்திலிருந்த புஸ்தகம் பெரும் ஆசீர்வாதங்களை உள்ளடக்கியிருக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தார். தரிசனக் காட்சியில் யோவான், **பெந்தகோஸ்தே நாளுக்கு முன்பு உள்ள** ஆதிச்சபைக்கு அடையாளமாக இருக்கிறார். அந்த நாட்களில் நடந்த பெரும் நிகழ்வுகளினால் ஏற்பட்ட குழப்பம், பயம், எதிர்பார்ப்புகளினால் பல கேள்விகள் அவர்கள் உள்ளத்தில் எழுந்தன! எதிர்காலத்தில் என்ன நடக்கும், தேவத்திட்டம் என்னவாய் இருக்கும் என்ற தெளிவில்லாத மனோ நிலையில் இருந்தார்.

**வெளி 5 : 5.**
**அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி, நீ அழ வேண்டாம் ; யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தை திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.**

**மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி, " நீ அழ வேண்டாம் " :**

வெளி 4 ம் அதிகாரத்தில் **24** மூப்பர்களைப் பற்றி ஏற்கனவே பார்த்தோம்; 24 மூப்பர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் சாட்சியைக் குறிக்கிறது; மூப்பர்களில் ஒருவராக ஏசாயா தீர்க்கதரிசியாக உருவகப்படுத்தப்பட்டிருக்கலாம். தேவத்திட்டத்தில் இயேசுவின் பங்கை விவரிக்கும் தீர்க்கதரிசனங்கள் வேறு எந்த தீர்க்கதரிசியைக் காட்டிலும் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் மட்டும் அதிகப்படியாக காணப்படுகிறது. எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசுவைப் பற்றி ஏசாயாவின் தீர்க்கதரிசனம் வாயிலாகவே பிலிப்பு போதித்தார். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் தேவ பிள்ளைகளுக்கு விசுவாசத்தை ஊட்டி, இயேசு வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையை தோற்றுவிக்கிறது.

**" நீ அழ வேண்டாம் " வார்த்தைகள் நம்பிக்கைக்குரிய பாவனையில் உள்ளன**

**யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் :**

இந்த இரண்டு விவரிப்புகளும் வேதாகமத்தில் நேரடியாக காணப்படவில்லை. ஆதி 49 : 9, 10; மற்றும் ஏசாயா 11 : 10ம் வசனங்கள் மேற்குறிப்பிட்ட விவரிப்புகளை அப்படியே சொல்லவில்லை.

ஆதி 49ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதை வைத்து, தரிசனத்தில் உள்ள மூப்பர் "மோசே" என்று அனுமானிக்க முடியாது. ஏனெனில், ஆதி 49ம் அதிகாரத்தில் "தாவீதின் வேருமானவர்" என்ற வார்த்தை காணப்படவில்லை. ஆனால், ஏசாயா 11ம் அதிகாரத்தில் யூதா கோத்திரத்து சிங்கத்தைப் பற்றியும், தாவீதின் வேரைப் பற்றியும் குறிப்பாக உணர்த்துகின்றது.

"**சிங்கம்** " என்பது **வல்லமையைக்** குறிக்கும். ஏசாயா 11 : 1 - 5ல் விசேஷித்த வல்லமையும், அதிகாரமும் பெற்றவரைக் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

ஈசாயின் வேர் **"யூதா".** இந்த " **சிங்கம்** " யூதாவிலிருந்து தான் வெளிப்படுகிறது. ஏசாயா 11ம் அதிகாரத்தில் **யூதா** வைப் பற்றி தான் முழுமையாக விவரிக்கப்படுகிறது.

**தாவீதின் வேர் = ஈசாயின் வேர் = யூதா**

**ஜெயங்கொண்டிருக்கிறார் :**

இயேசுவின் ஜெயம் அவருடைய உயிர்த்தெழுதலிலும், பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவி அருளப்பட்டதிலும் நிரூபணமாக்கப்பட்டுள்ளது.
ஏசாயா 11 ம் அதிகார தீர்க்கதரிசனம் வெளி 5 : 5ல் நிறைவேறுகிறது.

**புஸ்தகத்தை திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் :**

இந்த வசனம் இயேசு புஸ்தகத்தை திறக்கவும், முத்திரைகளை உடைக்கவும் **தகுதி பெற்றுள்ளார்** என்பதை உணர்த்துகிறது.

**வெளி 5 : 6.**
**அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன் ; அது ஏழு கொம்புகளையும், ஏழு கண்களையும் உடையதாயிருந்தது ; அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.**

**சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன் :**

ஆட்டுகுட்டியானவர் தேவ திட்டத்தின் நடைமுறைகளில் **மையக் கதாபாத்திரமாக** விளங்குகிறார் என்பதை தீர்க்கமாக சொல்லும் பாங்கில் இந்த வசனம் உள்ளது.

**அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி நிற்க கண்டேன் :**

இந்த காட்சி சற்று வித்தியாசமாயிருக்கிறது. சங்கரிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி நிற்காது!ஆட்டுக்குட்டியான இயேசு ஜீவபலியாக கொல்லப்பட்டாலும், அவர் **ஜெயங்கொண்டு நிற்கிறார்** என்ற உணர்வு இந்த சொற்றொடரில் வலுவாக வெளிப்படுகிறது. சிலுவையின் மரணபரியந்தம் தாழ்மையாய் இருந்து ஜெயங்கொண்ட இயேசு, அதிசயத்தக்க காரியங்களை செய்யும் அளவிற்கு தாழ்மை உள்ளவர். ஆகவே தான், அவர் ஆட்டுக்குட்டியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்.

**அது ஏழு கொம்புகளையும், ஏழு கண்களையும் உடையதாயிருந்தது :**

திருச்சபைக்கு தலையாக செயல்பட ஆட்டுக்குட்டியானவருக்கு எல்லா அதிகாரங்களும் (7 கொம்புகள்), சகல ஞானமும் (7 கண்கள்) பிதாவால் அருளப் பட்டிருக்கின்றன. “**ஏழு**“ என்பது அடையாள பாஷையில் “**முழுமை**“ என்பதைக் குறிக்கும். திருச்சபையின் வளர்ச்சிக்கான ஏழு காலப் பகுதிகளில் (சுவிசேஷ யுகத்தில்), இயேசுவின் அதிகாரம் செயற்படுத்தப்படும் என்பதையும், அவருடைய ஞானம் திருச்சபை சரித்திர ஏழு காலப் பகுதிகளில் பகிர்ந்தளிக்கப்படும் என்பதை ஏழு கொம்புகளும், ஏழு கண்களும் தெரிவிக்கின்றன.

**அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம் :**

ஆட்டுக்குட்டியானவரின் கண்கள் (அவருடைய ஞானம்) பிதாவிடமிருந்து அவர் பெற்ற பரிசுத்த ஆவியின் சக்தியைக் குறிக்கிறது. தேவனிடத்திலிருந்து புறப்படும் பரிசுத்த ஆவியின் செயல்முறை, 2 நாளா 16 : 9ல் தெளிவாகக் காணப்படுகிறது.

**வெளி 5 : 7.**
**ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்து புஸ்தகத்தை வாங்கினார்.**

யாருடைய வற்புறுத்தலினாலும் இந்த சம்பவம் நிகழவில்லை. இயேசுவுக்காக இந்த புஸ்தகத்தை பிதா தம் வலது கரத்தில் வைத்திருந்தார். தேவ நோக்கத்தை செயல்படுத்த வல்ல ஆட்டுக்குட்டியானவருக்கு, இந்த அதிகார மாற்றம் (புஸ்தகம் கை மாறுவது) நடந்தது.

**வெளி 5 : 8.**

**அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கின போது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூப வர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து .**

**நான்கு ஜீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக விழுந்து :**

தேவத்திட்டத்தை தன் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இயேசு, தேவ சுபாவங்களையும், தீர்க்கதரிசனங்களையும் வெளிப்படுத்திக் காட்டும் தருணம் வந்து விட்டதை இத்தரிசனம் உணர்த்துகிறது.

**சுரமண்டலம் :**

இணக்கமான இசையை வெளிப்படுத்தும் கருவி இது . மூப்பர் தங்கள் தங்கள் சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டிருந்த தரிசனம், பழைய ஏற்பட்டு தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும் ஆட்டுக்குட்டியானவரைப் பற்றி பாடும் பாடலைக் குறிக்கிறது.

**பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூப வர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு :**

பலி செலுத்துதலை ஊக்குவிக்கும் அன்பும், பக்தியும், அதைச் சார்ந்த அனுபவங்களும் தூபவர்க்கத்துக்கு அடையாளமாக உள்ளன. இவற்றை தேவனிடத்தில் எடுத்துக் கொண்டு போகும் கருவிகளாக பொற்கலசங்கள் (bowls) உள்ளன. “கலசம்“ என்பது வேதத்தில் “பாத்திரம்“ (cup) என்றும் குறிக்கப்படுகிறது.

இயேசுவும் தம்முடைய வெற்றிக்குத் தேவையான அனுபவங்களை தாமே ஏற்றுக்கொள்ளுவதை உணர்த்தும் விதமாக, பிதா அனுமதித்த கசப்பான அனுபவங்களாகிய பாத்திரத்தில் இயேசு பானம் பண்ணியதாக அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளது.

அனுபவங்களின் வாயிலாகவே நாம் படிப்பினைகளையும், வளர்ச்சியையும் பெறலாம். மகாபாபிலோன் மீது தீர்ப்பு / படிப்பினையை வழங்க தேவனால் முன்குறிக்கப்பட்ட சம்பவங்கள் கலசங்களில் நிரப்பப்பட்ட ஏழு வாதைகளாக அடையாள பாஷையில் வெளி 16 ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வெளி 5 : 8ல் 24 மூப்பர்கள் பொற்கலசங்களை (தேவனால் முன்குறிக்கப்பட்ட அனுபவங்களை) பிடித்திருக்கிறார்கள். இந்த பொற்கலசங்கள் முழுவதும் தூபவர்க்கங்களால் நிறைந்திருந்தது. அதாவது, பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள் அன்பையும், விசுவாசத்தையும், பக்தியையும் வெளிப்படுத்தி, திருச்சபையாருக்கு முன்மாதிரியாக விளங்குகிறார்கள். இந்த பழைய ஏற்பாட்டு கால முற்பிதாக்கள் மேகம் போன்ற சாட்சிகளாக திருச்சபையாருக்கு காட்சி அளிக்கிறார்கள்.

ரத்த சாட்சிகளான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் இசைவான சாட்சியங்களும் (சுரமண்டலங்கள்), அவர்களுடைய மகத்தான ஊழியங்களும் (பொற்கலச தூபவர்க்கங்கள்) ஆட்டுக்குட்டியானவருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. திருச்சபையின் தலையாகிய ஆட்டுக்குட்டியானவருக்கு செலுத்தும் சமர்ப்பனம், சுவிசேஷ யுக திருச்சபையாருக்கு வழிகாட்டியாக உள்ளது.

**பரிசுத்தவான்களின் ஜெபங்கள் :**

"பரிசுத்தவான்கள்" என்று இங்கு குறிக்கப்படுவது "பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைக்" குறிக்கும். (உதாரணமாக, மத் 27 : 52). குறிப்பாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை எழுதிய தீர்க்கதரிசிகளை குறிப்பதாகக் கொள்ளலாம்.

வெளி 5 : 9, 10.
**தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய ரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு, எங்களை தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டை பாடினார்கள் .**

**புதிய பாட்டை பாடினார்கள் :**
இது எதிர்பார்ப்புடன் கூடிய பாடல் அல்ல. நிறைவேறுதலின் பாடல். தீர்க்கதரிசனங்கள் விளங்க ஆரம்பிக்கும் தருணம் ! மேசியா தனி அல்ல; அவருக்கு "**சரீரம்**" உள்ளது. ஆதி காலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைக்கப்பட்டிருந்த இந்த இரகசியம் வெளியரங்கமாக்கப்பட்டுள்ளது. கொலோ 1 : 24 - 27.

**தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர் :**
முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றிய ஆட்டுகுட்டியானவர் முத்திரைகளை உடைக்கும் தகுதி பெற்றிருக்கிறார். புஸ்தகத்திலுள்ள மறைவான விஷயங்களின் பொருள் வெளிச்சத்திற்கு கொண்டுவர ஏதுவாகிறது.

**சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து :**
இச்சொற்றொடர் இவ்வுலக மனுஷ சமுதாயத்தைக் குறிக்கிறது. இதிலிருந்து தான் திருச்சபை தெரிந்து கொள்ளப்படுகிறது. இஸ்ரவேலரல்லாத புறஜாதிகளிலுமிருந்தும் திருச்சபை தெரிந்து கொள்ளப்படுகிறது.

**எங்களை தேவனுக்கென்று உம்முடைய ரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு :**
இவ்வசனம் பாவ நிவாரணத்தைப் பற்றி தெரிவிக்கிறது. இயேசு தம் இரத்தத்தை கிரயமாக கொடுத்து தம்முடைய சகோதரர்களை விலைக்கு வாங்கி அவர்களை சாபத்திலிருந்து விடுதலையாக்கினார். இந்த சகோதரர்கள் அதைப் போல பாடுகள் அனுபவித்து அவருடைய உடன் பங்காளிகளாக, ஆசாரியர்களாக ஆகிறார்கள்.
லேவி 16ம் அதிகாரத்திலுள்ள "கர்த்தருக்கென்று சீட்டு போட்ட வெள்ளாட்டு கடாவைப்" பற்றியும், மற்ற நிழல்களும், தீர்க்கதரிசனங்களும் விளங்க ஆரம்பித்துள்ளன.

**தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர் . நாங்கள் பூமியிலே அரசாளுவோம் :**

இதுவே திருச்சபையாரின் நோக்கம், குறிக்கோள், நம்பிக்கை, பார்வை, இலக்கு ஆகும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் தொடச்சி தான் வெளிபடுத்தல் ஆகமம்; இத்தொடர் விளைவு நிகழ்ச்சிகளில், ராஜ்யத்தைப் பெற்று ஆளுகை செய்வதற்காக திருச்சபை எவ்விதம் வளர்ச்சி பெறுகிறது என்பதை தரிசனங்கள் தெரியப்படுத்துகின்றன. இந்த ராஜ்யத்தின் தொலைநோக்கு பார்வை தான், திருச்சபையாரை உலகத்திலிருந்து தனிமைப்படுத்துகின்றது.

தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தராக செயல்படுபவர்கள் ஆசாரியர்கள். இது திருச்சபையாரின் மற்றொரு பணி. திருச்சபை (கிறிஸ்துவுடன்) தேவ ராஜ்யத்தை ஆளுகை செய்யும்போது, பூமியிலுள்ள குறைபாடுள்ள அமைப்புகள் அகற்றப்படும். (வெளி 1 : 5 ஐ ஒப்பிடுக).

வெளி 5 : 11.

**பின்னும் நான் பார்த்த போது , சிங்காசனத்தையும்,ஜீவன்களையும், மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன் ; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் , ஆயிரமாயிரமாகவுமாயிருந்தது .**

**சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன் :**

[ வசனங்கள் 11 - 13 , சுவிசேஷ யுகத்தின் துவக்க நிலையைக் குறிக்கவில்லை. சமாதான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைக் குறிப்பதாக உள்ளது. வசனம் 13ல் இது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ]

வசனம் 5 : 11ல் உள்ள “அநேக தூதர்கள்“ ஆவிக்குரிய சேனைகளை, அதாவது தேவதூதர்களைக் குறிக்கிறது. அவர்களின் எண்ணிக்கை “பதினாயிரம் பதினாயிரமாக“ ( 10,000 x 10,000 = 10 கோடிக்கு மேல் ) இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு தேவதூதர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. இந்த ஆவிக்குரிய சிருஷ்டிகள் எண்ணிலடங்கா அளவிற்கு இருந்தாலும், அவர்கள் எல்லோரும் **ஒரே மனதாக** இணக்கத்துடன் இராஜ்யத்திற்கான வாழ்த்துதல்களை அறிவிக்கின்றனர். இந்த மகிமையான தருணத்திற்கு அவர்கள் காத்திருந்தனர் என்பதை இவ்வசனம் உணர்த்துகிறது.

வெளி 5 : 12 .

**அவர்களும் மகா சத்தமிட்டு, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரரயிருக்கிறார் என்று சொன்னார்கள் .**

ஆட்டுக்குட்டியானவரின் உயர்ந்த நிலையை தேவ தூதர்கள் வாழ்த்துதல்களாக அறிவிக்கின்றனர்.

வெளி 5ம் அதிகாரத்தில் மூன்று வாழ்த்துதல்கள் உள்ளன;

**முதலாம் வாழ்த்துதல் :** வசனம் 9, 10.

சுவிசேஷ யுக துவக்கத்தில், முத்திரைகளை (அந்தந்த காலப் பகுதிகளில்) உடைக்கும் தகுதியை ஆட்டுக்குட்டியானவர் பெற்றிருக்கிறார் என்று தேவதூதர்கள் வாழ்த்துதல் கூறுகின்றனர்.

**இரண்டாம் வாழ்த்துதல் :** வசனம் 12.

சமாதான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் துவக்கத்தில், ஆட்டுக்குட்டியானவரின் உயர்ந்த நிலையை அறிவிக்கும் வாழ்த்துதலை தேவதூதர்கள் பகர்கின்றனர்.

மூன்றாம் வாழ்த்துதல் : வசனம் 13.

தேவதூதர்களின் பிரகடனத்திற்கு எல்லா சிருஷ்டிகளும் தங்கள் பதில் உணர்வை பிரதிபலிக்கும் விதமாக இந்த கடைசி வாழ்த்துதல் அமைகிறது. (ஏசாயா 25 : 9 ஐப் படிக்கவும்)

வெளி 5 : 13.
**அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்திலுள்ளவைகளும் அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன் .**

**வானத்திலும் :**
இது புதிய வானத்தைக் குறிக்கிறது. இந்த புதிய ஒழுங்கின் ஆளும் வர்க்கமாக ஆவிக்குரிய நிலையில் திருச்சபையாரும், திரள் கூட்டத்தாரும் மாம்சீக சுபாவத்தில் முற்பிதாக்களும் செயல்படுவார்கள். (ஏசாயா 2 : 1 - 4).

**பூமியிலும் :**
இது புதிய பூமியைக் குறிக்கிறது. (2 பேது 3 : 13)
(பழைய பூமிக்குரிய ஒழுங்கு முறைகள் அகற்றப்பட்ட பிறகு)

**சிருஷ்டிகள் யாவும் :** படைக்கப்பட்ட மனுக்குலத்தார் அனைவரும்.

**சமுத்திரத்திலுள்ளவைகளும் :**

"**சமுத்திரம்**" என்பது வேரும், பிடிமானமும் இல்லாத, அமைதியற்ற ஜன சமுதாயத்தைக் குறிக்கிறது. புதிய பூமிக்குரிய ஒழுங்கு முறைகள் நிறைவு பெற , சிறிது அவகாசம் பிடிக்கும். புதிய பூமியின் அங்கங்களாக கடைசியாக மாறுபவர்கள் இவர்களே ! அவர்களுடைய நிலையில்லாத் தன்மை அகன்று, புதிய ராஜாவை அறிந்து கொண்டு ஸ்திரம் பெறுவர். (வெளி 20 : 13; 21 : 1).

(இந்த வகுப்பாரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை ஏசாயா 33 : 17 - 24ல் பார்க்கவும்).

**அவற்றுள் அடங்கிய வஸ்துக்கள் யாவும் :**
நாம் ஏற்கனவே பார்த்த **வானம், பூமி, சமுத்திரம்** ஆகிய மூன்றும் ஆவிக்குரிய சுபாவத்தில் அல்லது மாம்சீக சுபாவத்தில் உள்ள சிருஷ்டிகளைக் குறிக்கிறது. ஆனால், "அவற்றுள் அடங்கிய வஸ்துக்கள்" என்பது, இந்த சிருஷ்டிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த உயிரற்ற அம்சங்களைக் குறிக்கும்.

சிருஷ்டிகள் தங்கள் வசம் தக்க வைத்திருந்த வளங்கள், ஆதாரங்கள் அனைத்தையும் புதிய ஒழுங்கிற்கு சமர்ப்பணமாக்குகிறார்கள்.

**சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன் :**

தேவ ஏற்பாடுகள் அனைத்திலும் பிதாவிற்கும், அவருடைய குமாரனுக்கும் இருக்கிற பங்கை அகில உலகமும் கடைசியாக அறிவார்கள். (வெளி 5 : 12ன் குறிப்புரைப் பார்க்கவும்).

வெளி 5 : 14.
**அதற்கு நான்கு ஜீவன்களும் : ஆமென் என்று சொல்லின : இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரை தொழுது கொள்ளுவார்கள் .**

**அதற்கு நான்கு ஜீவன்களும் : ஆமென் என்று சொல்லின :**

புதிய இராஜ்யத்தில் தேவனுடைய சுபாவங்கள் சரியான சம நிலையில் யாவருக்கும் தெளிவாக விளங்கும். இராஜ்யத்தின் புதிய ஒழுங்கில் தேவ சுபாவங்களின் மகிமையும், கம்பீரமும் யாவராலும் அறியப்பட்டு , வெளிப்படையாக பிரகடனப்படுத்தப்படுகிறது.

**இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரை தொழுது கொள்ளுவார்கள் :**

**இருபத்து நான்கு மூப்பர் :** தீர்க்கதரிசனங்களின் முழுத்தொகுப்பு.

**வணக்கமாய் விழுந்து :** காலங் காலமாய் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டவைகள் நிறைவேறுகிற / முடிவு பெறும் நிலையில் அவர்களுடைய ஒட்டுமொத்த சாட்சியங்கள் தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும் பாராட்டி வணங்கி, தொழுவதாக உருவகமாக தரிசனத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 6 ம் அதிகாரம்

## 1, 2, 3, 4, 5, 6ம் முத்திரைகள் உடைப்பு

**முதலாம் முத்திரை**

**வெளி 6 : 1.**
**ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகள் ஒன்றை உடைக்கக் கண்டேன் . அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி : நீ வந்து பார் என்று இடி முழக்கம் போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன் .**

**ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகள் ஒன்றை உடைக்கக் கண்டேன் :**
" முத்திரைகள் உடைக்கப்படுவது " என்பது அந்தந்த காலத்துக்குரிய தீர்க்கதரிசன அம்சங்களடங்கிய செய்திகள் தெளிவாக்கப்பட்டு, புரிந்து கொள்ளும் நிலைக்கு அடையாளமாய் இருக்கிறது.

**நான்கு ஜீவன்களில் ஒன்று :**
முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்படும்போது, வரிசையாக ஒவ்வொரு ஜீவனும் அதற்கான தரிசனக் காட்சியை காணும்படி யோவானை அழைக்கிறது. இந்த ஜீவன்கள் **எண்களால்** இங்கு குறிக்கப்பட்டாலும், வெளி 4 : 7ல் அந்த ஜீவன்கள் யார் யார் என்பதை நாம் அறிகிறோம்;

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | சிங்கம் | = | வல்லமை | (2) | காளை | = | நீதி |
| (3) | மனுஷன் | = | அன்பு | (4) | கழுகு | = | ஞானம் |

ஆகவே, இவ்வசனத்தில் நான்கு ஜீவன்களில் ஒன்றான **சிங்கம்** , இடி முழக்கம் போன்று சத்தமிடுகிறது. **இடி முழக்கம்** என்பது மின்னல் கீற்றுகளை தொடர்ந்து நடக்கும் நிகழ்வு ஆகும்; முதலாம் முத்திரை உடைக்கப்பட்ட பின் நிகழும் விளைவுகளைக் காண முதலாம் ஜீவன் யோவானை அழைக்கிறது.

**வந்து பார் :**
ஏழு சபைகளின் தூதர்கள் தத்தம் காலத்துக்குரிய செய்தியை (எக்காளம் ஊதியதை) தொடர்ந்து நடந்த நிகழ்வுகளை, சுவிசேஷ யுக முடிவு காலத்திலிருந்து கொண்டு யோவான் வகுப்பார் **திரும்பி பார்க்க விடுக்கப்பட்ட அழைப்பு இது.** அனுபவங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, அவற்றை முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. அனுபவங்கள் முடிவு பெற்ற பிறகு, கடந்த காலத்தை பின்னோக்கிப் பார்க்கும் போது, அனுபவங்களின் படிப்பினையை செவ்வனே அறிந்து கொள்ள இயலும். இதே பாணியில் தான் முடிவு காலத்திலிருக்கும் யோவான் வகுப்பார் (The John Class), சுவிசேஷ யுகத்தின் ஏழு காலப்பகுதிகளை **திரும்பி பார்க்கின்றனர்.**

**வெளி 6 : 2 .**
**நான் பார்த்த போது, இதோ, ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன் ; அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லை பிடித்திருந்தான் ; அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான் .**

**வெள்ளைக்குதிரை : முதலாம் விளக்கம் :**

**ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன் :**
யோவான் வகுப்பார் முன் நிகழ்வுகளை திரும்பி பார்க்கும் பொழுது, தரிசனத்தில் ஒரு வெள்ளைக் குதிரை தெரிகிறது. "**எபேசு**" காலப் பகுதியைச் சார்ந்த சபையில் சத்தியங்கள் கலப்பில்லாமல் இருந்த நிலை "வெள்ளைக்குதிரை"

என அடையாள பாஷையில் கூறப்பட்டுள்ளது. இயேசுவும், அவருடைய பிரதிநிதிகளாக நியமனம் செய்யப்பட்ட அப்போஸ்தலரும் உட்கார்ந்திருந்தனர். அதாவது, இவர்கள் முதல் சபையில் (எபேசு சபை) சத்தியங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது.

**அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லை பிடித்திருந்தான் :**

சங் 18 : 14ல் தேவன் தம் எதிரிகளிடம் எவ்விதம் அம்புகளை (பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கூர்மையாக ஊடுருவும் சத்தியங்களை உபயோகப்படுத்த) எய்துகிறார் என்று பார்க்கிறோம். அதைப் போன்று, இயேசுவும், அப்போஸ்தலரும் புது சத்தியங்களுக்கு எதிரானவர்கள் மீது, கூர்மையான நேரடி எதிர்ப்புரைகளை அளிக்க வல்லவர்களாயிருக்கிறார்கள் என்பது அடையாளமாக காட்டப்படுகிறது.

**அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது :**

இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, பிதா அவருக்கு அளித்த வெற்றியின் சின்னம் தான் **கிரீடம்** என்று அடையாளமாக காட்டப்படுகிறது. பிதாவின் நாமத்தினாலே பல பெரிதான காரியங்களை செயலாற்றுவதற்கு, இயேசு பிதாவிடம் பெற்ற அதிகாரத்தின் சின்னம் தான் “**கிரீடம்**“ ஆகும்.

**அவன் ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான் :**

விசுவாசிகளின் இருதயங்களையும், அன்பையும் கவர்ந்து, அவர்களைத் தம் சீஷர்களாக்கிடும் விதத்தில் இயேசு இப்பொழுதும் , எப்பொழுதும் காணப்படுகிறார்.

**முதலாம் முத்திரையைப் பற்றிய மேற்கண்ட விளக்கத்தின் பெலவீனம் :**

முதல் நான்கு குதிரை வீரர்களில் முதலாமவரைத் தவிர, மற்ற மூன்று பேர்களும் நல்லவர்கள் அல்ல ! அப்படியென்றால், இந்த வரிசையில் வெள்ளைக்குதிரையின் மேல் ஏறியிருந்தவர் மட்டும் **விதி விலக்கானவர்.**

இந்த விளக்கத்தின் முக்கியமான **பலம் , கிரீடம்** தான் ! இந்த கிரீடம் (STEPHANOS) தீய பண்பு கொண்டவருக்கு கொடுக்கப்படுவதாக எடுத்துக் கொண்டால், வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும் இப்படிப்பட்ட சம்பவம் இந்த ஒரு சமயத்தில் மட்டுமே நடந்தது என எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது !

இயேசு தம்முடைய இரண்டாம் வருகை வரையிலும் யாரையும் ஜெயிக்கிறவராக புறப்படவில்லை என்றும், தம்முடைய சத்தியங்களை மற்றவர்களுக்கு பரப்புவதில், ஊடுருவித் தாக்கும் முறையை கையாளவில்லை என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

**வெள்ளைக்குதிரை : இரண்டாம் விளக்கம் :**

**வெளி 6 : 2.**

“வெள்ளைக்குதிரை“ என்பது “கலப்பில்லாத சத்தியம்“

ஆனால், எபேசு சபையின் நிக்கொலாய மதஸ்தரின் பிரதிநிதியான குற்றவாளி வெள்ளைக்குதிரையின் மேல் சவாரிசெய்து, உண்மை சத்தியங்களுடன் முரண்பாடான கொள்கைகளை கலந்து விசுவாசிகளை தம் பக்கம் இழுக்கும் நிலைமைக்கு அடையாளமாக காட்டப்படுகிறான்.

இந்த பொல்லாங்கினர் தங்களிடமுள்ள அம்புகளை உபயோகிக்கும் விதத்தை சங் 64 : 3, 4; எபே 6 : 16ல் விரிவாகக் காண்கிறோம். இவர்கள் தங்கள் நாவுகளை பட்டயத்தைப் போல் கூர்மையாக்கி, மறைவுகளில் உத்தமன் மேல் எய்யும் பொருட்டு, கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள். சற்றும் பயமின்றி சடிதியில் நீதிமான் மேல் எய்கிறார்கள் என்று படிக்கிறோம்.

வெள்ளைக்குதிரையில் ஏறியிருக்கிறவனுக்கு “கிரீடம்“ கொடுக்கப்படுகிறது. சாத்தானும் கிரீடம் கொடுக்க முயற்சி செய்வதை மறைமுகமாக மத் 4 : 8 - 10ல் பார்க்கிறோம்; ஆதிச்சபையில் நிலவி வந்த கலப்பான சத்தியங்களையும், முரண்பாடுகளையும் கொண்டவர்களைக் குறித்து பவுல் எழுதுகிறார். தீத்து 1 : 11; தங்கள் மாயையான பேச்சுக்களால் நிக்கொலாய் பிரிவினர் எபேசு சபையில் சிலரைக் கவர்ந்து தம் பால் இழுத்து ஜெயங்கொண்டார்கள்.

**வெள்ளைக்குதிரை : இரண்டாம் விளக்கத்தின் பலவீனம் :**

நிக்கொலாய் பிரிவினர் சத்தியத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவில்லை. தம் கவர்ச்சியான பேச்சுக்களால் சிலரை தங்கள் பக்கம் இழுக்க முயற்சித்தனர். ஆனால், அப்போஸ்தலர்கள் உயிரோடிருந்த இந்த காலப் பகுதியில் நிக்கொலாய் பிரிவினர் சத்தியங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஏதுவில்லை.

மேலும், “கிரீடம்“ (STEPHANOS) இந்த பொல்லாங்கினருக்கு வழங்கப்படுவது என்பது ஒரு பெலவீனமான கருத்து ஆகும். இவர்கள் வெற்றி பெற்றவர்கள் அல்லர். வெற்றியின் சின்னமான கிரீடம் இவர்களுக்கு வழங்கப்பட ஏதுவில்லை. பொல்லாங்கினருக்கு கிரீடம் வழங்கப்படுவதாக வெளிப்படுத்தல் ஆகமத்தில் எந்த ஒரு இடத்திலும் காணப்படவில்லை.

**வெள்ளைக்குதிரை : இரண்டாம் விளக்கத்தின் பலம் :**

முதல் நான்கு முத்திரைகளில் சம்பந்தப்பட்ட நான்கு குதிரை வீரர்களும் சத்தியத்தை கைவிட்டவர்கள் என்ற கருத்து தான் இந்த விளக்கத்தின் பலமாக குறிப்பிடலாம். எபேசு சபையில் (வெளி 2ம் அதி) நிக்கொலாய பிரிவினரின் பாதிப்பு இருந்தது என்பது மெய்.

## இரண்டாம் முத்திரை

**வெளி 6 : 3.**
**அவர் இரண்டாம் முத்திரையை உடைத்த போது, இரண்டாம் ஜீவனானது : நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன் .**

**இரண்டாம் ஜீவன் : காளை** (வெளி 4 : 7)
“காளை“ நீதியைக் குறிக்கிறது.

**வெளி 6 : 4.**
**அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது ; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது .**

**அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது :**

“புறப்பட்டது“ என்பதின் கிரேக்க மூல வார்த்தை APOSTASY ஆகும். அதாவது, “போகுதல்“ (GO OUT) என்று அர்த்தம். **சத்தியத்தை விட்டு விலகிப் போன காலப் பகுதிகளில் சிமிர்னா சபை முதன்மை வகிக்கிறது.**

“சிவப்புக் குதிரை“ என்பது “பாவமுள்ள கொள்கைகள்“ அதாவது “சத்திய முரண்பாடுகளை“ குறிக்கிறது.

**அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு :**

இவன் பொல்லாங்கன் - பாதகன் என்பது தெளிவாக விளங்குகிறது. சத்தியத்திலிருந்து விலகிய பேர்கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக இவன் தரிசனத்தில் காட்டப்பட்டிருக்கிறான். தங்களை **யூதர்** என்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறார்கள். சிமிர்னா சபை காலப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் சத்தியத்தை தங்கள் விருப்பத்திற்கிணங்க திரித்துப் போட்டவர்கள். அப்போஸ்தலரின் அதிகாரமும், ஆவியின் வரமும் மறைந்த காலப் பகுதி இது.

**சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப் போடும்படியான அதிகாரம் :**

சபைக்குள்ளே ஆளுமை செய்யும் அதிகாரப் போட்டியில் ஏற்படும் நெருக்கடியான நிலை காணப்பட்டாலும், சபைக்கு வெளியேயும் சமாதானம் இழக்கச் செய்யும் நிகழ்வுகள், சிமிர்னா சபை காலப் பகுதியில் நடந்தன. ரோம புற மதம் (paganism) தன் பிடிப்பை இழக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. புதிய கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சியை தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகளாக போராட்டங்களும், குழப்பங்களும், கிறிஸ்தவர்களின் மீதான அடக்கு முறைகளும், ரோம சாம்ராஜ்யத்தின் சமாதான ஆளுகைக்கு (PAX ROMANA) அச்சுறுத்தலாக இருந்தன. பரிசுத்தவான்களை விட பேர்கிறிஸ்தவ சமுதாயம் தான், ரோம சாம்ராஜ்யத்தின் கடுங் கோபத்திற்கு காரணமாக அமைந்தனர்.

பொதுவாக இந்த காலப் பகுதியில் (சிமிர்னா) **ரோம பூமியிலிருந்து** சமாதானம் எடுத்துப் போடப்பட்டது.

**பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாக :**

“பூமியிலுள்ளவர்கள்” என்பது கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இது களை வகுப்பார் வளர்ச்சி பெற்ற காலப் பகுதி. இருப்பினும், மெய் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொள்கை பேதங்களுக்கு ஆளாகியிருக்கும் நிலைமை இங்கு குறிக்கப்படுகிறது. பேர் கிறிஸ்தவ வழிமுறைகளுக்கு சில மெய் கிறிஸ்தவர்களும் பாத்திரராகி, தங்கள் வாழ்வை இழக்கும் நிலைக்கு ஆளாகிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிகொண்டு, கிறிஸ்தவர்களாயிராமல் கொள்கை பேதங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் ஆளாகியிருக்கும் நிலை தான், தேவ தூஷணங்களாக சிமிர்னா சபையில் உருவெடுத்தது என வெளி 2 : 9ல் பார்க்கிறோம்.

**ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது :**

அப்போஸ்தலர் காலத்திலேயே அவர்களது எழுத்துக்களையும் புரட்டிப் போடுபவர்களைக் குறித்து 2 பேது 3 : 16ல் படிக்கிறோம். எபேசு சபை காலப் பகுதியில் பைபிள் எல்லாம் எழுதப்பட்டு முடிவுற்ற நிலையில், பேர் கிறிஸ்தவர்கள் மத்தியில் பைபிள் ஒரு பயங்கர ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. தம் சக விசுவாசிகளை தங்கள் வழிக்கு கொண்டு வர, வேதாகமம் சம்பந்தப்பட்ட வாக்குவாதங்கள் பட்டயம் போன்று உபயோகப் படுத்தப்பட்டது.

### மூன்றாம் முத்திரை

சத்திய கொள்கை முரண்பாடு காரணமாக **ஆவிக்குரிய நல்ல ஆகாரத்திற்கு ஏற்பட்ட பஞ்சம்** குறித்து மூன்றாம் முத்திரை விவரிக்கிறது. பெர்கமு சபையின் இந்த காலப் பகுதியில் தான் வரலாற்றின் இருண்ட காலத்தின் துவக்கம் ! “**சத்தியம்**“ தனிப்பட்டவர்களுக்கு எவ்வளவு தரப்பட வேண்டும் என **சத்தியத்தின் அளவு** வரையறுக்கப்பட்ட காலம் இது ! தனிப்பட்டவர்களை விட “பேர்ச்சபை அமைப்பு“ (போலி கிறிஸ்தவ சபை) ஸ்திரப்படத் துவங்கிய காலப்பகுதி. கடவுளுடன் தனிப்பட்டவர்களுக்குரிய உறவு முறை துண்டிக்கப்பட்டு “சபை அமைப்பு“ பிரதானமாகியது.

வெளி 6 : 5.

**அவர் மூன்றாம் முத்திரையை உடைத்த போது , மூன்றாம் ஜீவனானது : நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன் . நான் பார்த்த போது , இதோ, ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.**

**மூன்றாம் ஜீவன் = அன்பு (மனுஷ முகம்)**

பெர்கமு சபை காலப் பகுதியில் "**அன்பு**" புண்படுத்தப்பட்டது. தனிப்பட்டவர்கள் மற்றவர்கள் மேல் செலுத்தும் அன்பு மனப்பான்மைக்கு தடையாக "போலிச்சபையின்" போக்கு இருந்தது. ஒருவருக்கொருவர் அன்பை செலுத்தும் மனப்பான்மையை வளர்க்காமல், "சபை அமைப்பு" மேல் செலுத்தும் அன்பு பிரதானமாகியது.

**கறுப்பு குதிரை :**

கறுப்பு நிறம் வெளிச்சத்தை உட்கொள்ளும்; அதாவது, விழுங்கும். வேதாகம சத்தியங்களை சுய நலத்திற்காக உபயோகப்படுத்தி, சபையின் அதிகாரத்தை மேம்படுத்திக் கொண்டது பெர்கமு காலப் பகுதியில் தான். ரோமப் பேரரசன் கான்ஸ்டன்டைன் ஆட்சியில் "நைசீன் அறிக்கை" (NICENE CREED) கி.பி. 325ல் உருப்பெற்று, உண்மை சத்தியங்கள் அகற்றப்பட்டன. இந்த அறிக்கையின் விளைவாகவும், போலிச் சபையின் மூட நடை முறைகளாலும், சத்திய வசனங்களின் உண்மையான அதிகாரங்கள் அமிழ்த்திப் போடப்பட்டன. பெர்கமு காலப் பகுதியில் இருண்ட யுகம் துவக்கம் பெற்றது. (புல 5 : 10).

**அதின் மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசை தன் கையிலே பிடித்திருந்தான் :**

**அதின் மேல் ஏறியிருந்தவன் :** புதிதாக உருவாக்கப்பட்ட கொள்கைகளை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். இதுவே போப்பு மார்க்கமாக உருவெடுத்தது.

**ஒரு தராசை தன் கையிலே பிடித்திருந்தான் :** ஜனங்களுக்கு எதை, எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்களை தன் வசம் வைத்திருந்த நிலையைக் காட்டுகிறது. பெர்கமு சபையின் காலத்தில் தான், வேதாகமம் இரட்டு உடுத்திக் கொள்ளும் நிலை துவங்கியது. வெளி 11 : 3; கர்த்தருடைய வேத வசனத்தை கேட்க முடியாத பஞ்சம் இந்த காலப்பகுதியில் தான் ஆரம்பமானது. ஆமோஸ் 8 : 11, 12. உணவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் குறிக்கப்படும் தராசு, பஞ்சத்தை அடையாளமாகக் காட்டுகிறது. (லேவி 16 : 26; எசேக் 4 : 16).

வெளி 6 : 6.

**அப்பொழுது , ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமை என்றும் , ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை என்றும், எண்ணெயையும், திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களுக்கு மத்தியில் உண்டான சத்தத்தைக் கேட்டேன்.**

**நான்கு ஜீவன்களுக்கு மத்தியில் உண்டான சத்தம் :**

இந்த சத்தம் பிதாவினிடத்திலிருந்து வெளிப்படுகிறது. (எசேக் 1 : 24, 25) இது ஆறுதலளிக்கும் சத்தம் ! இந்தக் காலப் பகுதியில் தான், திருச்சபை தேவனால் போஷிக்கப் படத்தக்கதாக வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டது. போலிச் சபையினரால் இவ்வுலகத்தில் ஆவிக்குரிய சத்திய வசனப் பஞ்சம் திணிக்கப்பட்டாலும், **குறைந்தபட்ச** ஆவிக்குரிய உணவை தேவன் அவருடையவர்களுக்கு வழங்க வழி வகுத்தார்.

பஞ்சத்தின் அளவுகோலை குதிரையின் மேல் ஏறியிருந்தவன் நிர்ணயிக்க இயலாது. எவ்வளவு சத்திய பஞ்சம் நிலவ வேண்டும் என்பதை தேவன் முன்குறித்திருந்தார் !

**ஒரு பணம்** (a denarius) = இயேசுவின் உவமையில் காணும் ஒரு நாள் வேலைக்குரிய கூலி.

**ஒரு படி** (a quart) = உயிர் வாழ குறைந்த பட்ச அளவு.

**மூன்று படி** = வசதியாக வாழ்வதற்கு தேவையான அளவு.

**வாற்கோதுமை** (barley) = பொதுவாக அறியப்பட்ட சத்தியங்கள் ;
(இயேசுவின் உயிர்த்தெழுதல், பாவ மன்னிப்பு, இயேசுவின் அதிகாரம் போன்றவை) திரளான ஜனங்களுக்கு இயேசு போதித்த போதகங்கள். (சீஷர்களுக்கு அல்ல) (யோவான் 6 : 9, 13).

**கோதுமை** அல்லது அதினால்
**தயாரிக்கப்படும் அப்பம்** = திருச்சபையினருக்கு கொடுக்கப்படும் ஆகாரம்;
சங் 104 : 15, ஆமோ 8 : 11, 12; மத் 3 : 12; 13 : 30;
சங் 81 : 13, 16; 147 : 11, 14.

**எண்ணெய்** = பரிசுத்த ஆவி.

**திராட்ச ரசம்** = இயேசுவுடன் பாவநிவாரண பலியில் பங்கெடுக்கும் தகுதியை அடையாளப்படுத்துகிறது.

**தேவனால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச அளவுகள் :**

**ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமை :**

ஆவிக்குரிய ஜீவ வாழ்க்கையை தக்க வைத்துக்கொள்ள தேவைப்படும் ஆழ்ந்த சத்தியங்களை தேடி கண்டுபிடிக்க அயராத உழைப்பு தேவை. ஒரு நாள் முழுவதும் உழைத்தால் கிடைக்கும் கூலியினால் குறைந்த பட்ச ஆவியின் தேவைகளை நிவர்த்தி செய்யலாம்.

**ஒரு பணத்துக்கு மூன்று படி வாற்கோதுமை :**

பொதுவான சத்தியங்கள் ஜனங்களை கிறிஸ்துவத்தின் பால் ஈர்க்கிறது. தற்காலிகமாக விசுவாசத்தில் கொண்டு வரப்படும் நிலைமை இது. போலிச் சபையும் பொதுவான சத்தியங்களை மறைப்பதில்லை. மாறாக அவைகளைப் பிரஸ்தாபப்படுத்துகிறது.

**எண்ணெயையும் திராட்ச ரசத்தையும் சேதப்படுத்தாதே :**

இந்த இருண்ட காலப் பகுதியில் மெய்த்திருச்சபையின் வளர்ச்சி தடைபடாது. பரிசுத்தவான்களின் பிரதிஷ்டையின் ஆவியை "போலிச் சபை" யினால் அவிக்க இயலாது. திருச்சபையினருக்கு பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் தொடரும். பரிசுத்தவான்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, பாவ நிவாரண பலியாக தங்களை ஒப்படைக்கும் வாய்ப்புகளை போலிச் சபை தடை பண்ண இயலாது.

## நாலாம் முத்திரை

**வெளி 6 : 7.**
**அவர் நாலாம் முத்திரையை உடைத்த போது , நாலாம் ஜீவனானது : நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன் .**

நான்கு ஜீவன்களையும், நான்கு குதிரைகளையும் சம்பந்தப்பட்ட நான்கு முத்திரைகளில் கடைசி முத்திரை இது. தீயத்திரா சபையின் காலப் பகுதியில் ஆவிக்குரிய விஷயங்கள் நாளுக்கு நாள் தரம் கெடுகின்றன. ஆனால், தீயத்திரா சபையின் நான்காம் காலப் பகுதிக்கு பின்னர், ஆவிக்குரிய விஷயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவது இந்த வசனத்தில் உணரப்படுகிறது. நாலாம் எக்காள கால முடிவில், பேர்ச்சபைக்கு அடுத்த மூன்று காலப் பகுதிகளில் நேரிடப்போகும் "ஐயோ, ஐயோ, ஐயோ " ஆபத்துக்கள் காத்திருக்கின்றன.

**நாலாம் ஜீவன் : பறக்கும் கழுகு (4 : 7)**

"கழுகு" ஞானத்தைக் குறிக்கிறது. "பறக்கும் கழுகு" தூரத்திலுள்ளவற்றை (பின் சம்பவிக்கப்போகிறவைகளை) ஊடுருவி கண்ணோக்கும் சக்தி வாய்ந்ததைக் குறிக்கிறது. நான்காம் சபையான தீயத்திராவுக்குரிய செய்தியில், இயேசுவின் அக்கினி ஜ்வாலை போன்ற **கண்கள்,** நான்காம் முத்திரை உடைப்பில் நான்காம் ஜீவனான **கழுகு,** நான்காம் எக்காளம் ஊதுகையில் "**பறந்து** வரும் தூதன்" என்று **கழுகும், அதன் தொடர்புடைய கண்களும்** அடையாளக் குறியீடுகள் நான்காம் சபைக்குரிய விஷயங்கள் முழுமையிலும் காணப்படுகின்றன.

தீயத்திரா இருண்ட யுக காலப் பகுதியைச் சார்ந்த சபை. இக்காலத்தில் தங்களுக்கு நேரிடப் போகும் துன்பங்களை தேவ ஞானம் முன்னரே அறிந்திருக்கும் என்பதே மெய்க்கிறிஸ்தவர்களின் நம்பிக்கை ஆகும். தேவ ஞானம் தான் போப்பு மார்க்கத்தின் அபரிமித வளர்ச்சியைக் குறித்து முன்பே தீர்க்கதரிசனமாக உரைத்தது. (2 தெச 2ம் அதிகாரம்). நான்காம் சபையில் நடக்கும் சம்பவங்களால் மெய்க்கிறிஸ்தவர்கள் வேதனையுற்றாலும் அவற்றின் முடிவு தேவ ஞானத்திற்கு முன்பே தெரியும் !.

**வெளி 6 : 8.**

**நான் பார்த்தபோது , இதோ , மங்கிய நிறமுள்ள குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர் ; பாதாளம் அவன் பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற் பங்கிலுள்ளவர்களை கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப் பட்டது .**

**மங்கிய நிறமுள்ள குதிரை :**

"மங்கிய" என்ற வார்த்தையின் கிரேக்க மூலம் CHLOROS. அதாவது, **பச்சை** என்று அர்த்தம்.

குதிரையின் நிறம் பிரேதத்தின் (சவத்தின்) நிறத்தை, அதாவது **பச்சையைக்** குறிக்கிறது.

" குதிரை " என்பது கொள்கைகளைக் குறிக்கிறது.
" ரத்தம் " என்பது ஜீவனைக் குறிக்கிறது.

செத்த நிலையில், "ரத்த ஓட்டம்" இயக்கத்தில் இருக்காது. பிரேதத்தின் நிறம் கொண்ட **(பச்சை)** குதிரையிலிருந்து ஆவிக்குரிய ஜீவன் முற்றிலுமாக அகன்று போய் விட்டது. ரத்தமில்லாத நிலைமை கொள்கை சீரழிவைக் குறிக்கிறது.

**அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர் :**
**ஏறியிருந்தவன் :**

ஜீவனற்ற, முரண்பாடுள்ள கொள்கைகளை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, செயல்படும் கூட்டத்தார்-போப்பு மார்க்கம். போப்பு மார்க்கத்தின் செயல்பாட்டிற்கு பின்னணியாக சாத்தான் இருக்கிறான்.

**பெயர் :**

'பெயர்' என்பதை குணம் (தன்மை) என்று குறிக்கலாம். குதிரையில் ஏறியிருப்பவன் "மரணம்" போன்ற குணம் (இயல்பு) படைத்தவனாய் இருக்கிறான். நான்கு குதிரைகளில் ஏறியிருந்தவர்களில், இந்த குதிரையின் மேல் ஏறியிருந்தவனுக்கே முதல் முறையாக "பெயர்" கொடுக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய பெயர் "மரணம்". அவன் தன் கட்டுப்பாடுக்குள் வைத்திருக்கும் கொள்கைகளில் சிறிதளவும் **ஜீவன் இல்லை** என்பதை அவனுடைய பெயர் தெரிவிக்கிறது.

மூன்றாம் முத்திரை காலத்தில் "வாற்கோதுமை" பற்றி படித்தோம். மத் 13 : 33ல் வாற்கோதுமை அப்பத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மூன்று படிகளான** வாற்கோதுமை அப்பத்தில் (அடிப்படை பொதுவான சத்தியங்களில்) **புளிப்பு** (பேர்ச்சபைகளின் கொள்கை முரண்பாடுகள்) மறைந்திருந்ததால் புளித்த மாவாயிற்று.

**மூன்று படி** அளவுள்ள வாற்கோதுமையிலான இந்த "புளித்த மாவை" வாழ்வின் ஆதாரமாக கொண்டு செயல்படுபவர்களுக்கு, பச்சை நிற (மங்கிய) குதிரையைப் போன்று ஜீவனற்ற நிலை எய்துவார்கள். ஜீவனுக்கான நம்பிக்கை சிறிதும் கிடையாது.

ஆனால், தீயத்திரா சபையின் இருண்ட காலக் கட்டத்தில், குறைந்தபட்ச "**கோதுமை**" உணவை உட்கொண்டு ஜீவனைத் தக்க வைத்துக்கொண்ட மெய் கிறிஸ்தவர்களும் வாழ்ந்தனர். பீட்டர் வால்டோவை பின்பற்றிய வால்டெனேசியர் (waldenses) புளிப்பில்லா கோதுமை அப்பத்தினால் போஷிக்கப்பட்டனர்.

**பாதாளம் அவன் பின் சென்றது :**

நாலாம் குதிரை, மற்றும் அதன் மேல் ஏறியிருந்தவனின் நடவடிக்கைகளின் விளைவாகவும், எளிதாக கிடைத்த மூன்று படி அளவு கொண்ட வாற் கோதுமையிலான அப்பத்தை புசித்து, சத்தியத்திலிருந்து விலகி, முரண்பாடான கொள்கைகளைப் பின்பற்றிய கூட்டத்தார் "**மறதி**" நிலையை அடைவார்கள். ஆவிக்குரிய ஜீவனில் அவர்களுக்கு சிறிதும் பங்கில்லை.

**பூமியின் காற் பங்கிலுள்ளவர்களை கொலை செய்யும்படியான அதிகாரம் :**

மூன்றிலொரு பங்கை பற்றியே இதுவரை வேதாகமத்தில் படித்த நாம், முதன்முறையாக "**காற் பங்கு**" என்ற பின்ன எண்ணை பார்க்கிறோம்.

"நான்கு" என்ற எண் "உலகளாவிய பொதுத்தன்மை"யைக் (Universality) குறிக்கிறது. "காற் பங்கு" என்பது இத்தன்மையைச் சார்ந்த பிரிவு என்ற அர்த்தத்தில் உள்ளது. வேதாகமத்தில் "நான்கு உலோகங்கள்" (தானி 2ம் அதிகாரம்), "நான்கு மிருகங்கள்" (தானி 7ம் அதிகாரம்) என்று குறிக்கப்படுவதைப் பார்க்கிறோம். நாலாம் குதிரையும், அதன் மேல் ஏறியிருந்தவனும் "நான்காம் ராஜ்யத்தைக்" குறிக்கிறது. தானி 7 : 7, 8, 19 - 25). இந்த ரோம சாம்ராஜ்யம் தான் பிறகு "புனித ரோம சாம்ராஜ்யம்" (Holy Roman Empire) ஆக உருவாகியது. இந்த நான்காம் ராஜ்யம் பெரும் தீங்கிழைக்கும் இயல்பு உடையது.

தானியேல் கண்ட தரிசனத்தின் "**நாலாம் மிருகம்**" தான், இப்பொழுது நாம் காணும் **நாலாம் சபை**யாக உருவகப்படுத்தப்படுகிறது.
இந்த " நாலாம் மிருகம் " தான் புற ஜாதியார் காலங்களில் ஆளுகை செய்கிறது.

**பட்டயம் :** ஆவியின் பட்டயமாகிய பைபிளை ரோமச் சபை துஷ்பிரயோகம் செய்வதைக் குறிக்கிறது. போப்பு மார்க்கம் பரிசுத்தவான்களை **மத நீதிமன்ற விசாரணை** (INQUISITION) செய்து துன்புறுத்திய பொழுது, அவர்களுடன் ஆவிக்குரிய விஷயங்களை சம்பாஷிப்பது போல பாவனை செய்து, அவர்கள் வாக்கினாலேயே போப்பு மார்க்கத்துக்கு விரோதமான கொள்கைகளை கடைபிடிப்பதைக் கண்டு பிடித்து, அவர்களை தண்டிக்கச் செய்யும் உபாயத்தை பேர்ச்சபை கையாண்டது. இவ்வாறாக, வேதாகமத்தை தங்கள் பட்டயமாக துஷ்பிரயோகம் செய்தது.

**பஞ்சம் :** "பஞ்சம்" என்பது சத்தியத்தை மறைத்து, காணப்படாமல் செய்ய விழைவது ஆகும். ஆமோஸ் 8 : 10; சத்திய பஞ்சம் நிலவிய இந்த காலக் கட்டத்தில், பீட்டர் வால்டோ பிரெஞ்சு மொழியில் பைபிளை மொழி பெயர்த்து புழங்க விட்டது போலி சபையை பெரிதும் கலக்கமடையச் செய்தது.

**சாவு :** வெளி 2 : 23ல் குறிப்பிடுவது போல, இந்த அடையாளம் உண்மையான மரணத்தைக் குறிக்கிறது. போப்பு மார்க்கம் தேவ பிள்ளைகளை கொன்றது. தேவன் போப்பு மார்க்க பிள்ளைகளை கொல்லுகிறார்.

**பூமியின் துஷ்ட மிருகங்கள் :**

ரோமச் சபையின் **மத நீதிமன்ற விசாரணையின்** (INQUISITION) போது போப்பு மார்க்கத்துடன் ஒத்துழைத்த அரசாங்க அதிகாரங்கள் "பூமியின் துஷ்ட மிருகங்களாக" உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. வெளி 12 : 12, 13 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும். மதத்திற்கும், ராஜ்யத்திற்கும் இடையே உள்ள ஒத்துழைப்பு, தேவனுடைய பார்வையில் போப்பு மார்க்கம் மீது செலுத்தும் மிகப்பெரிய குற்றச்சாட்டு இதுவே.

# ஐந்தாம் முத்திரை

வெளி 6 : 9.

**அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்த போது , தேவ வசனத்தினிமித்தமும் , தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தில் கீழே கண்டேன் .**

**பலிபீடத்தின் கீழே :** பலிபீடத்தின் மேல் “உயிர் பலி“ இருந்தால், அது இன்னும் தகனம் செய்யப்படவில்லை என்று அர்த்தம். ஆனால், தகனம் செய்யப்பட்ட பின்பு, சாம்பலாகி பலிபீடத்தின் வலை வழியாக **பலிபீடத்தின் கீழே** சென்றடைகிறது. “பலிபீடத்தின் கீழே” என்பது அடையாள பாஷையில் “முழுமையாக நிறைவேற்றப்பட்ட உண்மையான பலி“ என்று அர்த்தம்.

**ஆத்துமாக்கள் :** வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த அடையாளச் சொல் “நித்திரையடைந்த பரிசுத்தவான்களை“ காட்டுகிறது. இவர்கள் தங்கள் பலியினால் வெகுமதிகளைப் பெறும் நம்பிக்கையைப் பெற்றிருந்தாலும், முதலாம் உயித்தெழுதல் வரையிலும் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது.

**கொல்லப்பட்டார்கள் :** “ கொல்லப்பட்டார்கள் “ என்பது 'சபையை விட்டு புறம்பாக்கப்படுதல்' , 'துன்புறுத்தப்படுதல்', 'நாடு கடத்தப்படுதல்', 'தோழமையிலிருந்து துண்டிக்கப்படுதல்' என்று அர்த்தம் ஆகும். பாரம்பரிய சபையைப் (Orthodox Church) பொருத்த வரையில், பரிசுத்தவான்கள் “**உயிரற்ற மரித்த நிலைக்கு**“ தள்ளப்படுகிறார்கள்.

**தேவ வசனத்தினிமித்தம் :**

பேர்கிறிஸ்தவத்திலிருந்து மெய்கிறிஸ்தவத்திற்கு பிரித்தெடுக்கப்பட உதவும் அளவு கோல் தேவ வசனமே ! தேவ வசனத்தினிமித்தம் மெய்கிறிஸ்தவர்கள் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு இன்னல்களுக்கும், துன்புறுத்துதல்களுக்கும் ஆளாகி “ மரித்த நிலை “ எய்துகிறார்கள்.

**தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தம் :**

சர்தை சபையின் சில பரிசுத்தவான்களுடைய சாட்சிகளில் ஒரு இசைவு காணப்படுகிறது. இவர்கள் தம்முடைய சாட்சியை இறுதி வரை கைவிட வில்லை.

ஆனால், சர்தை சபையில் உள்ள பல விசுவாசிகளுடைய கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவானவைகளாக இல்லை. “சாகும் வரையில் விசுவாசமாயிரு“ என்ற அம்சம் சர்தை சபையில் பெரும்பாலானவர்களிடம் காணப்படவில்லை.

வெளி 6 : 10.

**அவர்கள் : பரிசுத்தமும், சத்தியமுமுள்ள ஆண்டவரே , தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டு கூப்பிட்டனர் .**

**மகா சத்தமிட்டு கூப்பிட்டனர் :**

**“ஆபேல் மரித்தும் இன்னும் பேசுகிறான்“** (எபி 11 : 4) என்ற வசனம் இதற்கு ஒத்திருக்கிறது. **“மரித்தவர்கள் பேசுவது போல“** அடையாள பாஷையில் காட்டப் பட்டிருக்கிறது.

ஆபேலின் மரணம், அவன் சகோதரருடன் பலியின் விஷயத்தில் ஏற்பட்ட பிரிவினையில் தான் நடந்தது. அதைப் போல பேர்ச்சபை , மெய் சபையினருடன் கண்ட பலியின் வித்தியாசங்களினால் மெய்கிறிஸ்தவர்கள் (பரிசுத்தவான்கள்) கொல்லப்பட்டார்கள். இந்த மரித்த பரிசுத்தவான்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பதில் தண்டனை எப்பொழுது என கல்லறைகளிலிருந்து உரத்த குரலில் சத்தமிடுகிறதாக, உருவகமாக தரிசனக் காட்சியில் காட்டப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த காட்சி சர்தை சபையின் இறுதி காலக் கட்டத்தில் நடக்கிறது. வால்டோ, விக்ளிப் மற்றும் அவர்களைப் பின்பற்றி மரித்த ரத்த சாட்சிகளாகிய பரிசுத்தவான்களின் ஒட்டு மொத்த கூக்குரல்களின் சத்தம், போப்பு மார்க்கத்தின் வல்லமைமிக்க ஆளுகையின் கீழ் துன்புற்றிருந்த விசுவாசிகளின் எண்ணங்களுக்கும்,

தவிப்புகளுக்கும் உயிர்ப்பூட்டி விழிப்புணர்வு கொண்டு வந்தது. சர்தை சபையின் காலம் முடிந்து, மார்டின் லூத்தரின் ஆறாவது எக்காளம் ஊதியபோது, விசுவாசிகளின் இந்த விரக்திகளை உள்ளடக்கிய தவிப்பு வெளி உலகத்திற்கு உடனே கேட்க ஆரம்பித்தது ! (கி.பி. 1518 ல் லூத்தர் விட்டன்பர்க் ஆலயத்தின் கதவில் தன் குமுறல்களை பதிவு செய்தார்).

**"பரிசுத்தமும், சத்தியமுமுள்ள ஆண்டவரே ...எது வரைக்கும்" :**

பரிசுத்தவான்களின் கூக்குரலில் தேவன் மேல் கொண்ட **விசுவாசம்** சிறிதும் குறையவில்லை. தேவனை 'பரிசுத்தமும், சத்தியமுமுள்ள ஆண்டவரே' என விளிக்கின்றனர்.

**" எது வரைக்கும் "** என்ற பரிசுத்தவான்களின் கேள்வி முக்கியத்துவம் வாய்ந்தது. சர்தை சபையில் இயேசு தம்மை அறிமுகப்படுத்தி கொள்ளும்போது, "தேவனுடைய ஏழு நட்சத்திரங்களையும், ஏழு ஆவிகளையும் உடையவர்" என்று கூறுகிறார். அதாவது, சுவிசேஷ யுகத்தில் ஐந்தாவது காலப் பகுதியிலிருக்கும் சர்தை சபையை தொடர்ந்து, மேலும் இரண்டு காலப் பகுதிகள் வர இருப்பது குறிப்பாக உணர்த்தப்படுகிறது. "எது வரைக்கும்" என்ற பரிசுத்தவான்களின் கேள்விக்கு சர்தை சபைக்குரிய செய்தியிலேயே (வெளி 3 : 1) பதில் காணப்படுகிறது.

**யேசபேலுக்கு அடிபணியாத திருச்சபை இன்னும் இரண்டு காலப் பகுதிகள் காத்திருக்க வேண்டும்.**

**" தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் "**

வெளி 6 : 9 - 11ம் வசனங்கள் சில விஷயங்களை யூகிக்கும் விதத்தில் உள்ளன. இந்த வசனங்களை **மேலோட்டமாக** பார்த்தால், திருச்சபை அங்கங்கள் அனைவரின் உபத்திரவங்கள் முடிவடையும் **வரையில்** பரிசுத்தவான்கள் பலிபீடத்தின் கீழே இளைப்பாற வேண்டும் என்ற உட்பொருள் கொண்டதாகத் தோன்றலாம்; ஆனால், தீர்க்கதரிசனத்தை ஆராய்ந்தவர்கள், இந்த யூகம் அர்த்தமற்றது என்று சொல்ல ஏதுவாகிறது. நியாயத்தீர்ப்பின் துவக்கங்களும், பாபிலோனுக்கு தண்டனையைத் திருப்பி செலுத்தும் நடவடிக்கைகளும் திருச்சபை இலக்கம் முழுமையாக முடிவுபெறும் வரையிலும் **காத்திருக்காது ;** இந்த வசனங்களுக்கு பின்வருமாறு விளக்கம் அளிக்கலாம்:

பரிசுத்தவான்களின் இந்த கேள்வி , தீர்க்கதரிசன சொல் அலங்கார வடிவில் இருப்பதை தெளிவாக உணரலாம்; மரித்த நிலையிலிருக்கும் இவர்கள் எந்த கேள்வியையும் கேட்க மாட்டார்கள் ! ஆனால், இந்த கேள்வியின் மையக்கருத்து மிக முக்கியமானதாகும். பூமியின்மேல் குடியிருப்பவர்களிடத்தில் கர்த்தர் எப்பொழுது நியாயந்தீர்த்து, பழி வாங்குவார் ?

சூழ்நிலைபொருத்தத்தின்படி, திருச்சபை அங்கங்கள் அனைவரின் உபத்திரவங்கள் முடிவடையும் வரையில் அவர்களின் இளைப்பாறுதல் நீடிக்க வேண்டும் (கல்லறைகளிலோ அல்லது பிற்பாடு மகிமை அடைந்த நிலையிலோ) என்று சொன்னால், பாபிலோன் மீதான நியாயத்தீர்ப்பு இதுவரையிலும் துவங்கவில்லை என்று நாம் முடிவுக்கு வரவேண்டியதாயிருக்கிறது; தீர்க்கதரிசனங்கள் பலவற்றின் சாட்சியங்களை ஆராயும் பொழுது, இந்த முடிவு ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை.

"ஆத்துமாக்கள்" கேட்ட இந்த கேள்விக்கு பதில் வெளிப்படுத்தல் ஆகமத்தில் கீழ்காணும் மூன்று வசனங்களில் இருப்பதைப் பார்க்கலாம் :

(1) வெளி 19 : 11 - 15ல் இயேசு நியாயந்தீர்த்து பாபிலோன் மீது யுத்தம் செய்வதைப் பார்க்கிறோம். இந்த பணியை இயேசுவுடன் அவருடைய பரிசுத்தவான்களும் (வெண் வஸ்திரம் தரித்தவர்களாய்) செய்கின்றனர். இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறுதல் கி.பி. 1870 களில் ஆரம்பமாகிறது.

(2) 1தெச 4 : 15 ன் படி, முன்னர் யார் மரணமடைந்தார்களோ அவர்கள் இப்பொழுது உயிரோடிருக்கிறவர்களுக்கு முன்பாகவே உயிர்த்தெழுவார்கள்.

(3) வெளி 3 : 10 ன் படி பூமியில் குடியிருக்கிறவர்கள் மேல் உண்டாகும் உபத்திரவம் லவோதிக்கேயா சபை காலப் பகுதி (ஏழாம் சபை) முடிவு பெற்ற பிறகு நடக்கும் சம்பவம் அல்ல. லவோதிக்கேயா சபையின் காலத்திலேயே நடக்கும்.

ஆபேலின் ரத்தத்தைப் பற்றி எபி 12 : 24ல் படிக்கிறோம். (எபி 11 : 4) " **இரத்தத்தைக் குறித்து பழி வாங்குதல்** " என்பது வாக்குதத்தம் பண்ணப்பட்ட விஷயமும், முக்கியமானது என்றாலும், அதை விட முக்கியமானது " **தெளிக்கப்படும் ரத்தம்** " ஆகும். அதாவது, இதுவே **பாவ நிவாரணம்** சம்பந்தப்பட்ட பணி ஆகும். யேசபேலைத் தண்டிப்பதற்கு முன், இயேசு முக்கியமாக நிறைவேற்ற வேண்டிய பணி ஆகும். ஆகவே, இந்த "தெளிக்கப்படும் ரத்தம்" பற்றிய பணி முடியும் வரைக்கும், ஆபேலின் ரத்தமும், அவனைத் தொடர்ந்து மரித்த மற்ற பரிசுத்தவான்களின் ரத்தமும் **பலி பீடத்திற்கு கீழே** காத்திருக்க வேண்டியிருக்கிறது.

பூமியில் குடியிருக்கிறவர்களிடத்தில் இந்த ஆத்துமாக்களின் ரத்தத்தைக் குறித்து பழி வாங்க வேண்டும் :

"பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்பது இவ்வுலகத்திற்குரிய நலன்களில் வலுவான ஈடுபாடுகள் (உறவுகள்) கொள்ளும் வகுப்பாரைக் குறிக்கிறது. இந்த வகுப்பாரிடமிருந்து பரிசுத்தவான்கள் வரவில்லை. மெய்கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறவர்கள் இந்த வகுப்பாரிடமிருந்து தான் வருகிறார்கள். யேசபேல் மார்க்கத்தாரின் கட்டளைக்கு இணங்கி செயல்படும் அரசியல் அதிகாரங்கள் தான் பரிசுத்தவான்களை துன்புறுத்துபவர்கள். மதம் அரசியலுடன் இணைந்து நடத்தும் ரத்த வெறிக்கு ஆளான பரிசுத்தவான்கள், தாம் சிந்திய ரத்தத்தைக் குறித்து பழி வாங்க கூக்கிரலிடுகிறார்கள். பரிசுத்தவான்களைக் காட்டிக் கொடுத்து, அவர்களை ரோமன் கத்தோலிக்க சபையின் "நீதி மன்ற விசாரணை"க்கு உட்படுத்திய "சகோதரர்கள்" மீது பழி வாங்கும் நடவடிக்கையாக இந்த கூக்குரல் இருக்கிறது. இது காயீன் ஆபேலை கொலை செய்ததற்கு சமம். ( சகோதரன் சகோதரனைக் கொலை செய்வது).

**வெளி 6 : 11.**

**அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன ; அன்றியும் , அவர்கள் தங்களைப் போல கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவேறுமளவும் இன்னுங் கொஞ்சக் காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது .**

**அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன :**

சர்தை சபையில் இறுதி வரை கறைபடாமல் சத்தியத்தை கைக்கொண்ட சிலருக்கு "வெண் வஸ்திரங்கள்" கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த உறுதி நிறைவேறும் வண்ணமாக மரித்த அந்த "ஆத்துமாக்களுக்கு" வெள்ளை அங்கிகள் கொடுக்கப்படும். இவர்கள் வெற்றி சிறந்தவர்கள். (வெளி 20 : 4).

இயேசு சர்தை சபைக்கு அறிமுகமாகும் பொழுது **ஏழு** சபைகளின் காலப் பகுதிகளை உருவகமாகக் கூறினார். (வெளி 3 : 1). இதன் மூலம் சர்தை சபை சகோதரர்களுக்கு இன்னும் இரண்டு காலப் பகுதிகள் இருக்கின்றன என்பதை மறைமுகமாக உணர்த்தினார்.

**அவர்கள் இன்னும் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் :**

சில பழைய பிரதிகளில் "கொஞ்ச " என்ற பதம் காணப்படவில்லை. "**காலம்**" (CHRONOS) என்ற அடையாள பாஷை 360 வருடங்களைக் குறிக்கிறது.

பலிபீடத்தின் கீழே எவ்வளவு காலம் இந்த "ஆத்துமாக்கள்" இளைப்பாறும் ? "முதலாம் உயிர்த்தெழுதல் ஆரம்பித்த காலம் வரையில்" (கி.பி. 1878 வரையில்) என பெரும்பாலான வேதமாணவர்கள் கூறுகின்றனர். கி.பி. 1878 லிருந்து "**ஒரு காலம்**" (360 வருடங்கள்) கழிக்கப்பட்டால் கி.பி. 1518ம் வருடம் வருகிறது. இந்த ஆண்டு ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்ட சர்தை சபை காலப் பகுதியில் வருகிறது. அதாவது, சர்தை சபையின் இறுதி காலக் கட்டத்தில் வருகிறது. கி.பி. 1518ம் ஆண்டு துவக்கத்தில் (எபிரேய கணக்குப்படி இலையுதிர் காலத்துக்கு முன், அதாவது, அக்டோபர் 31, 1517ல்) மார்டின் லூத்தர் தனது 95 குறிப்புரைகளை போப்பு மார்க்கத்திற்கு எதிராக , விட்டன்பர்க் ஆலய வாசலில் பதிவு செய்த முக்கிய நிகழ்ச்சி நடந்தது.

கி.பி. 1521ல் பிரதிநிதிகள் சபையில் (Diet Of Worm) மார்டின் லூத்தர் பகிஷ்கரிக்கப்பட்ட வருஷத்திலிருந்து ஆறாம் சபையின் (பிலதெல்பியா) காலப்பகுதி துவங்குகிறது. மார்டின் லூத்தரின் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, பரிசுத்தவான்களுடைய உபத்திரவங்களின் உச்சக் கட்டம் முடிவடையத்தொடங்கியது. சத்தியம் பெருமளவில் பரவ ஆரம்பித்தது. இருப்பினும், பாபிலோன் தள்ளுண்டு போக இன்னும் ஒரு காலம் (360 வருஷங்கள்) காத்திருக்க வேண்டும். சத்தியம் பரவ ஆரம்பித்தாலும், மகா பாபிலோனும், அவளுடைய குமாரத்திகளும் செலுத்தும் ஆதிக்கத்திற்கு பணியாத பரிசுத்தவான்கள், தங்களுக்கு முன்னிருந்தவர்களுக்கு நேரிட்டது போலவே, தொடர்ந்து கொலை செய்யப்படுவார்கள்.

**" தங்கள் உடன்பணிவிடைக்காரரும், தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவேறுமளவும் " :**

இந்த சொற்றொடர், மேற்குறிப்பிட்ட காலக்கணக்கு விளக்கத்திற்கு பொருந்தி வராதது போல இருக்கும்; ஆனால், அப்படி நினைக்கத் தேவையில்லை; திருச்சபை அங்கங்கள் அனைவரின் பலியும் முடிவு பெறாத நிலையில், 1878ம் வருட கணக்கு சரியில்லை எனத் தோன்றும்; ஆனால், கி.பி. 1878ம் வருஷத்தை 'நியாயந்தீர்த்தல்' மற்றும் யுத்தம் பண்ணுதலின் (பழி வாங்குதலின்) காலப்பகுதியின் **துவக்கம்** என்றும், தங்கள் உடன்பணிவிடைக்காரர்கள் (திருச்சபையார்) மற்றும் தங்கள் சகோதரர்களின் (திரள் கூட்டத்தாரின் ?) தொகை முடிவடையும் வரையில் இக்காலப் பகுதி முடியாது எனவும் தெரிகிறது.

## ஆறாம் முத்திரை

**வெளி 6 : 12, 13.**

**அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன் ; இதோ , பூமி மிகவும் அதிர்ந்தது ; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது ; சந்திரன் இரத்தம் போலாயிற்று . அத்தி மரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது , அதின் காய்கள் உதிருகிறது போல , வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது .**

**பூமி மிகவும் அதிர்ந்தது :**

இது பிரெஞ்சு புரட்சியைக் குறிக்கிறது. திருச்சபையின் வனாந்தர அனுபவங்களின் முடிவு சார்ந்த சம்பவம் இந்த பிரெஞ்சு புரட்சி ஆகும். (வெளி 12ம் அதிகாரம்) .

ஆறாம் முத்திரையை உடைத்த உடன், துவக்கத்திலேயே ஆறாம் சபையின் இறுதி காலத்தின் சம்பவங்களை விவரிக்க ஆரம்பிப்பது சற்று வித்தியாசமாய் தெரியும் ! ஏனென்றால், 'பிரெஞ்சு புரட்சியும்', மற்றும் 'முடிவு காலம்' பற்றிய விஷயங்களுமே ஆறாம் சபையான பிலதெல்பியா சபையின் மையக்கருத்தாக இருப்பது தான் காரணமாக இருக்கலாம் . இந்த ஆறாம் சபையில் குறிப்பிடப்படும் சம்பவங்கள் எல்லாம் ஆறாம் சபையின் காலத்தின் இறுதியிலேயே நடக்கின்றன.

**சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் :**

இந்த தீர்க்கதரிசனமும், மத் 24 : 29ல் இயேசு கூறிய "அந்நாட்களின் உபத்திரவம்" என்பதும் ஒன்றே ! தானியேல் 12ம் அதிகாரத்தில் கூறப்பட்ட 1260 வருட காலப் பகுதியில் தான், இந்த உபத்திரவங்கள் நடந்தன. மத் 24 : 8ல் உரைக்கப்பட்ட வண்ணம், இந்த உபத்திரவ கால சம்பவங்கள் முடிவு காலத்திற்கு **முன்னர்** சுவிசேஷ யுக காலத்தில் நடந்ததைக் குறிக்கின்றன.

**சூரியன் : சுவிசேஷ வெளிச்சம்.**

வால்டேர், மற்றும் உலக தத்துவ ஞானிகளின் அறிவொளித் தாக்கம் சுவிசேஷ வெளிச்சத்திற்கு சவாலாக இருந்தது. இவர்களின் சவாலுக்கு தகுந்த பதிலுரை கொடுப்பதற்குரிய சத்தியம் அந்நாளைய சபை பிரிவுகளில் போதுமானதாயில்லை. இவ்வாறாக, சூரியன் தன் வெளிச்சத்தைக் (சத்தியத்தை) கொண்டு மனுக்குலத்தை தெளிவு பெறச் செய்ய இயலவில்லை.

**சந்திரன் : யூத நியாயப் பிரமாணம்.**

சுவிசேஷத்தின் பிரதிபலிப்பு தான் பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டின் உண்மைகளை புரிந்து கொள்ள இயலாத நிலையில், பழைய ஏற்பாட்டின் நிழல்களை எப்படி புரிய இயலும் ? உலக ஞானம் படைத்த அறிஞர்கள் பார்வையில் யூத நியாயப்பிரமாணம் காட்டு மிராண்டித்தனமாகவும், ரத்த வெறி கொண்டவையாகவும் காணப்பட்டன.

**நட்சத்திரங்கள் : அப்போஸ்தலர்கள்.**

அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் சமூக மற்றும் அரசியல் பயன்பாடுகளுக்கு உபயோகமாக, வெறும் ஒழுக்க விதிகளாகவும் நீதி நெறிகளாகவும் மட்டுமே இருந்தன. இவ்விதம், அப்போஸ்தலர்களின் உபதேசங்களின் மகத்துவம் சரிவர உணரப்படாமல், குறைவு பெற்றன.

ஆறாம் சபை காலத்தில் ஆரம்பமான சம்பவங்கள் ஏழாம் சபை காலத்தில் முடிவு பெறும். பிலதெல்பியா சபையின் (ஆறாம் சபை) காலத்தில் நடந்த பிரெஞ்சு புரட்சியில், நகரத்தில் பத்தில் ஒரு பங்கு இடிந்து விழுந்தது. ஆனால், மீதி பங்குகள் (9/10 பங்குகள்) ஆறாம் சபை காலப்பகுதி முடிவு பெற்ற பிறகு நடக்க இருப்பவை ஆகும்.

**அத்திமரம் : இஸ்ரவேலரைக் குறிக்கிறது .**

**பழுக்காத அத்திக்காய்கள் : இஸ்ரவேலரை திரும்பி கூட்டிச் சேர்ப்பதற்கான தருணம் இன்னும் வரவில்லை.**

கி.பி. 1799ல் எகிப்து மீது மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு நெப்போலியன் பாலஸ்தீனாவிற்கு வந்த பொழுது, அந்த பகுதியை யூதர்களின் புதிய தாய் நாடாக பிரகடனம் செய்ய முடிவு செய்தான். இந்த கருத்து தேவனுக்கு உகந்ததாயிருந்தாலும், அவரால் முன் குறிக்கப்பட்ட தருணம் இன்னும் வரவில்லை.

**பெருங்காற்று : பெரும் சச்சரவு / யுத்தம்.**

மத்திய தரைக்கடல் சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கான நெப்போலியன் திட்டங்களை, நெல்சனின் கப்பற் படை முறியடித்தது. இப்படியாக, யூதர்களின் சொந்த நாடு பற்றிய நம்பிக்கை சிதைவுற்றது. பெருங்காற்றில் ஏற்பட்ட விளைவு !

**அத்தி மரம் பற்றிய சில குறிப்புகள் :**

அத்தி மரத்திற்கு மூன்று பருவங்கள் உள்ளன.

1. முதலில் குளிர் காலத்தில் விரும்பத்தகாத பழங்கள் விளையும். (நெப்போலியன் கால முயற்சியைப் போல).
2. வயதான மரத்தில் விளையும் பழங்கள் சுமாராயிருக்கும்; இது, "அரும்பு" லிருந்து "பழமாக" மாற 70 நாட்கள் பிடிக்கும். (இது கி.பி. 1878 லிருந்து 70 ஆண்டுகள் கழித்து 1948 ல் இஸ்ரவேல் நாடு உருவானது போல).
3. புதிய கிளைகளில் விளையும் பழங்கள் தான் மிகவும் நல்ல பழங்கள். தீர்க்கதரிசனமாக இதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. இஸ்ரவேல் புதிய உடன்படிக்கையைப் பெறும் காலத்தில் தான் இதன் பலன் கிடைக்கும்.

நெப்போலியனின் மத்திய கிழக்கு பகுதியில் 'யூத நாடு' நிறுவுவதற்கான திட்டம் நிறைவேறாத சூழ்நிலையில் , பின்னர் "**சீயோனிசம்**" பிறந்தது. ஆனால், இது 'யூத நாடு' அமைய மிகவும் முன்கூட்டி உருவான கருத்து ஆகும் !

அதைப் போன்றே சூரியன், சந்திரன், நட்சத்திரங்களில் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் ஆரம்ப நிலையைச் சார்ந்தது எனலாம். பிரெஞ்சு புரட்சியின் பாதிப்பு வெறும் **பத்தில் ஒரு பங்கு (1/10)** தான் ! மீதி 9/10 பங்கு உபத்திரவங்கள் காத்திருக்கின்றன !

' ஷால்லி ' (SHALLIEU) என்ற வேதமாணவர், இந்த உபத்திரவங்களின் துவக்க நிலையை 1ராஜா 18 : 44ல் காணும் விஷயத்திற்கு ஒப்பிடுகிறார். மூன்றரை வருட (3 1/2) கால பஞ்சத்தைத் தொடர்ந்து வரும் (தானியேலின் 1260 நாட்களுக்கு ஒத்த விதமாக) மழை, காற்று. உபத்திரவங்கள் ஆகியவற்றுக்கான அடையாளமாக பெரும் மேகங்கள் வராமல், **உள்ளங்கை அத்தனை சிறிய மேகம்** தென்படுகிறது. இதை போலவே, பிரெஞ்சு புரட்சியின் சம்பவங்கள் ஒரு மனிதனின் உள்ளங்கை அளவுள்ள சக்தி கொண்ட மேகம் சமுத்திரத்திலிருந்து (அமைதியற்ற ஜன சமுதாயத்திலிருந்து) சிறிய அளவில் பிரான்ஸில் மட்டும் பிரெஞ்சு புரட்சியாக உருவெடுத்தது. **ஆனால், இது வேதனைகளுக்கு ஆரம்பமே !**

இயேசு மேகங்களுடனே வரும் போது, மனுக்குலத்துக்கு மிகுந்த உபத்திரவங்கள் காத்திருக்கின்றன.

**வெளி 6 : 14.**
**வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப் போயிற்று ; மலைகள், தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயின.**

**வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப் போயிற்று :**

சில மொழிபெயர்ப்பாளர்கள் "விலகிப் போயிற்று" (departed) என்ற வார்த்தையை விட, "பிரிந்தது" (split) என்ற வார்த்தை தான் சரியான அர்த்தம் கொள்வதாக கூறுகின்றனர்.

பிரெஞ்சு புரட்சிக்கு முன்னர், பிரான்ஸில் **ஒரே** வானம் (ரோமச் சபை) இருந்தது. பிறகு, புரட்சி துவங்கிய உடன், மதம் தடை பண்ணப்பட்டது. புரட்சி முடிந்தவுடன், ரோமன் கத்தோலிக்க அமைப்பு, புரோட்டஸ்டாண்டு அமைப்பு ஆகிய **இரண்டுக்கும்** மத சுதந்திரம் சட்டபூர்வமாக வழங்கப்பட்டது. இவ்வாறு, வானம் **இரு பிரிவுகளாகி** ஒன்றையொன்று மதிக்கவும், சகித்துக் கொள்ளவும் வேண்டிய நிர்ப்பந்தம் சட்டப் பூர்வமாக ஏற்பட்டது. இதுவே வானம் சுருட்டப்பட்ட புஸ்தகம் போல ஆனதாக அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதே போன்ற ஒரு சம்பவம் லவோதிக்கேயா சபையின் (ஏழாம் சபை) காலத்தில் நடக்க இருப்பதை ஏசாயா 34ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறிபிட்டுள்ள சம்பவங்கள் இனி வர இருக்கும் மிகுந்த உபத்திரவங்களை (நகரத்தில் 9/10 பங்கு) குறிக்கிறது. வெளி 6ம் அதிகாரத்தில் நடக்கும் சம்பவம் சிறிய அளவில் பிரான்ஸில் நடந்தது மட்டுமே !

**மலைகள், தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயின :**

"**மலைகள்**" ராஜ்யங்களைக் குறிக்கின்றன. "**தீவுகள்**" குடியரசுகளைக் குறிக்கின்றன. இவைகள் மறைந்து போகவில்லை. அகன்று போயின ! பிரெஞ்சு புரட்சி ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் கலக்கமுறச் செய்தது. நெப்போலியனின் வெற்றி, மற்றும் பிரெஞ்சு **குடியரசு அமைப்பு முறை** பரவுவதைக் கண்டு ஐரோப்பிய மன்னர்கள் பயந்தனர். இவ்வகையான புரட்சி பரவுவதை தடுக்க எல்லா முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. அதனுடைய விளைவு தான் கி.பி. 1844 ல் "**புனித கூட்டணி**" (HOLY ALLIANCE) என்ற அமைப்பு உருவானது.

வெளி 6 : 15 - 17.
**பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும்,பர்வதங்களும், அடிமைகள் யாவரும்,சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி : நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள். அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலை நிற்கக் கூடும் என்றார்கள்.**

பிரெஞ்சு புரட்சியின் அனுபவங்களால் நாடுகள் மட்டும் கலக்கமுறவில்லை; சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கமும் - ராஜாக்களிலிருந்து அடிமைகள் வரை எல்லோரையுமே பாதித்தது. பிரான்ஸில் பிரபுக்கள் வர்க்கம் மட்டும் துன்புறவில்லை. பொதுமக்கள் அனைவரும் உபத்திரவங்களுக்கு ஆளானார்கள். வசனம் 15ல் அவர்கள் அனைவரும் நல்ல ஒரு எதிர்காலத்திற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டனர். சிலர் பாதுகாப்பாக தாங்கள் கருதும் கோட்டைகளில் (அமைப்புகளில்) தங்களை ஒளித்துக் கொண்டனர். இந்த புரட்சியானது, தேசிய வாதம், கூட்டணிகள், நிறுவனங்கள், சங்கங்கள், ஒப்பந்தங்கள், அறக்கட்டளைகள், நற்பணி கழகங்கள் எல்லாவற்றையும் தடை செய்தது.

இந்த புரட்சி காலக் கட்டத்தில், **உலக முடிவு** பற்றிய சிந்தனைகள் வலுத்தன. பைபிள் தீர்க்கதரிசனங்களை ஆராய முற்பட்டனர். அட்வென்டிஸ்ட் இயக்கம் வளர ஆரம்பித்தது. பிரான்ஸ் தேசத்துக்கு அப்பாலும் பயங்கரவாதத்தின் திகில் நிலவியது. "**அர்மெகெதோன் யுத்தம்**" பற்றிய கலக்கம் எல்லோருக்கும் ஏற்பட்டது. அவிசுவாசிகள் கூட, ஏதோ ஒரு தண்டனைக்கு எல்லோரும் உள்ளாகியிருக்கிறார்கள் என்று யோசிக்கத் தொடங்கினர். வசனம் 16, 17ல் கோபாக்கினையின் நாளுக்கு பயந்து, அநேகர் தங்களை ராஜ்யங்களுக்குள்ளும், அமைப்புகளுக்குள்ளும் ஒளித்துக் கொண்டார்கள் என்று பார்க்கிறோம். **இவையெல்லாம் அவர்களுடைய மனோ நிலையை உணர்த்துகிறது.**

" உபத்திரவத்தின் மகா நாள் " என்று இங்கு சொல்லப்படவில்லை. இது வரப்போகிற மகா உபத்திரவங்களுக்கு முன்னோடியாக 1/10 அளவு உபத்திரவம் மட்டும் தான் பிரெஞ்சு புரட்சியின் வடிவில் வந்தது. **பெரும் உபத்திரவங்கள் வர இருக்கின்றன.**

# 7 ம் அதிகாரம்

## ஆறாம் முத்திரை - தொடர்ச்சி

## திருச்சபையார் மற்றும் திரள் கூட்டத்தார் பற்றி அறிமுகம்

**வெளி 7 : 1 - 17.**

வெளி 6ம் அதிகாரத்தின் இறுதிப் பகுதியான 12 - 17ம் வசனங்களில் காணப்படும் சம்பவங்களின் தொடச்சி தான் ஏழாம் அதிகாரம் ஆகும் ! 17ம் வசனத்திற்கு பிறகு அதிகாரம் பிரிக்கப்பட்டதால், 6ம் அதிகாரத்திற்கும், 7ம் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவுற உணர முடியவில்லை. இந்த 6, 7ம் அதிகாரங்களுக்கு இடையில் உள்ள தொடர்பை நாம் நோக்குவது, சம்பவங்களின் கோர்வையை செவ்வனே புரிந்து கொள்ள உதவும்.

வெளி 6 : 12 - 17ல் குறிப்பிட்ட புரட்சி காலப் பகுதியின் உபத்திரவங்கள் **மேலும் விரிவாக பரவியிருக்க முடியும்;** ஆனால் அந்த ' மகா உபத்திரவ நாளுக்கு ' இன்னும் நேரம் வரவில்லை. ஆறாம் சபையின் காலப் பகுதியில் நகரத்தில் 1/10 பங்கு மட்டும் அழிந்தது. (வெளி 11 : 3). மீதி 9/10 பங்கு ஏழாம் சபையான லவோதிக்கேயாவின் காலப் பகுதியில் நடைபெற உள்ளது. ஆகவே தான், 7ம் அதிகார துவக்கம் பின்வருமாறு கூறுகிறது :

" போதும் ! பரவியது போதும் ! காற்று வீச இது தருணம் அல்ல. முதலில் திருச்சபை முடிவடைய வேண்டும். **பிறகு** காற்று வீசட்டும் "

இது தான், 7ம் அதிகாரத்தின் சாராம்சம். திருச்சபை ஆறாம் சபையின் காலப் பகுதியில் முழுமை பெறாது. இது தான் 7 : 3ம் வசனத்தில் சொல்லப்படும் செய்தியாகும் ! மகா உபத்திரவம் தொடங்குவதற்கு முன்பாகவே திருச்சபையினரின் எண்ணிக்கை முடிவு பெற்று, இயேசுவின் சரீரமாக்கப்படுவார்கள். இது ஏழாம் சபை காலத்தில் நடக்க இருக்கும் விஷயம்.

ஆறாம் சபைக்குரிய சம்பவங்களை விவரிக்கும் போதே, ஏழாம் சபை காலத்தில் இனி நடக்க இருக்கும் திருச்சபை, திரள் கூட்டம் போன்ற விஷயங்களைக் குறித்து யோவான் சொல்ல முற்படுகிறார்.

**வெளி 7 : 1.**

**பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக் கண்டேன் .**

"நான்கு" என்பது "உலகளாவிய தன்மை"யை (Universality) குறிக்கிறது. "பூமியின் நான்கு திசைகளிலும்" என்பது "முழுமையாகத் தழுவிய" தன்மையைக் குறிக்கிறது. இதே அடையாள பாஷை மத் 24 : 31; வெளி 20 : 8; தானி 7 : 2, 3; ஆதி 2 : 10; ஆகிய வசனங்களில் கையாளப்பட்டுள்ளது. 40 வருஷங்கள் என்பது **முழுமையான** சோதனை காலத்தை அடையாளப்படுத்துகிறது; அதைப் போன்றே, ஆதி 15 : 13ல் சொல்லப்படும் உபத்திரவ காலப்பகுதியாக, 400 வருஷங்கள் உள்ளது; இந்த 400 வருஷங்கள் 400 X 360 = 1,44,000 நாட்களை உள்ளடக்கியது; அதாவது, 4 என்ற எண், திருச்சபையின் உலகளாவிய ஆட்சியை உணர்த்தும் விதத்தில் உள்ளது.

**நான்கு தூதர்கள் :** பூமியின் நான்கு காற்றுகளை (சச்சரவுகள், உபத்திரவங்களை) பிடித்திருப்பதாக கூறப்படுகிறது. இந்த உபத்திரவங்களை உண்டாக்குவதற்குத் தேவையான விஷயங்கள் வெளிப்படாத வரையில், தூதர்கள் பிடித்திருக்கும் நிலை நீடிக்கும்; பிரான்ஸில் நடந்த புரட்சி உருவாக முழு காரணமாய் இருந்தது, உரிமைகள் பற்றிய சத்தியங்கள் தாம் !
இந்த நான்கு தூதர்களும் செய்திகளை அடையாளப்படுத்துகிறார்கள்; இந்த செய்திகள் (சத்தியங்கள்) சபையின் முடிவு காலத்தில் உச்சக்கட்டத்தை அடைந்து, மகா உபத்திரவத்துக்கு வழி வகுக்கும்; வெளி 9 : 14, 15ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தூதர்களும் இவர்களாகவே இருக்க வாய்ப்புண்டு; புரோட்டஸ்டாண்டு இயக்கம் உருவாகும் வரைக்கும், சத்தியங்கள் **ஐபிராத்தில்** கட்டப்பட்டிருந்தது; அதாவது, பாபிலோன் மீது விசுவாசம் கொண்டிருந்த ஜனங்களால் சத்தியங்கள் கட்டப்பட்டு, தடை பண்ணப்பட்டு இருந்தன; ஆனால், ஆறாம் எக்காள செய்தி, சத்தியத் தேடுதலை, இதுகாறும் கட்டப்பட்ட நிலையிலிருந்து விடுவித்தது. இந்த சத்தியக் கருத்துக்களினால் (குதிரைகள்) ஏற்பட்ட வலிமைமிக்க பெரும் விளைவுகளைப் பற்றி வெளி 9ம் அதிகாரம் விவரிக்கிறது. வெளி 9 : 14, 15ன் தூதர்கள் அவிழ்த்து விடப்பட்டாலும், அவர்கள் **ஒரு குறிப்பிட்ட அளவு** தூரமே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்; வெளி 7 : 2, 3ம் வசனங்களில், திருச்சபை நிறைவு பெறும் பணிக்கு தடையாக இல்லாத விதத்தில் இயேசுவே இந்த சத்தியங்களைத் தடை பண்ணுகிறார்.

**பூமியின் நான்கு திசைகளிலும் :** சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மதம் குறித்த அனைத்து துறைகளின் செய்திகளின் ஊடே நிற்பதாக தூதர்கள் அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்; இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று எதிராக தலையெடுத்து உச்ச நிலையை அடையும்; இத்தகைய சமுதாயக்கூறுகள் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டு, ஐரோப்பாவில் தற்காலிக சமாதான நிலைக்கு வழி வகுத்தது. புரட்சிக்குப் பிறகு சத்தியம் விடுவிக்கப்பட்டாலும், உபத்திரவங்கள் மேலும் வலுவடையாமல் தற்காலிகமாக தடை பண்ணப்பட்டுள்ளது.

**பூமியின் நான்கு காற்றுகள்:**

பூமியின் காற்றுகளுக்கும், வானத்தின் காற்றுகளுக்கும் வித்தியாசம் உண்டு. (தானி 7 : 2ல் போல).

காற்றுகள் = யுத்தங்கள் அல்லது கலவரங்களை அடையாளப்படுத்துகின்றன. சில யுத்தங்கள் / கலவரங்கள் மதம் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கலாம். சில யுத்தங்கள் / கலவரங்கள் சமூக / சமுதாய தொடர்புடையதாக இருக்கலாம். சில கலவரங்கள் மனுஷரின் நடவடிக்கைகளாலும், சில விழுந்துபோன ஆவிகளின் குறுக்கீடுகளாலும் இருக்கலாம்.

இவ்வாறாக, சில யுத்தங்கள் / கலவரங்கள் வானத்தின் காற்றுகளாகவும் (மதம் அல்லது பிசாசுகளின் தூண்டுதல்), சில யுத்தங்கள் / கலவரங்கள் பூமியின் காற்றுகளாகவும் (சமுதாய அல்லது அரசியல் காரணங்கள்) உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வெளி 7 : 1ல் யுத்தம் / கலவரம், சமுதாயம் / அரசியல் (பூமி) சம்பந்தப்பட்டது. இருப்பினும், சமுதாயத்தில் நடக்கும் விஷயங்களுக்கு பின்னணியாக, மறைமுக ஆதரவுடன் ஆவியின் சக்திகளும் இருக்கின்றன. தானியேல் 7ம் அதிகாரத்தில், வானத்தின் காற்றுகள் (விழுந்துபோன ஆவிகள்) பெரிய சமுத்திரத்தின் மேல் (அமைதியற்ற ஜன சமுதாயத்தின் மேல்) அடித்து நான்கு சாம்ராஜ்யங்களை உருவாக்கின. இந்த நான்கு சாம்ராஜ்யங்களும் 20ம் நூற்றாண்டு வரை மேம்பட்டு இருந்தன. இந்த மகா உபத்திரவ காலப் பகுதியில் பிசாசுகளின் அம்சங்கள் திருச்சபையாருக்கு எதிராக செயல்படும். இதற்கு ஆதாரமாக, 2தெச 2 : 9, 10; மத் 24 : 24; வெளி 16 : 14; வசனங்கள் உள்ளன. பிறகு, வெளி 16 : 17ல் காண்கிறபடி, கடைசி வாதை ஏழாம் கலசத்திலிருந்து இந்த வானத்தின் சத்துவங்கள் மீது ஊற்றப்படும் பொழுது, வெளி 7 : 1ல் காணும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, இதுவரை பிடித்து வைக்கப்பட்டிருந்த நான்கு காற்றுகளும் கட்டவிழ்க்கப்படும். ஓசியா 8 : 7ல் குறிப்பிட்டபடி, காற்று சூறைக்காற்றாக மாறி புது அழிவை உண்டு பண்ணும்.

இப்படியாக, பிடித்து வைக்கப்பட்டிருந்த நான்கு காற்றுகளும் கட்டவிழ்க்கப்பட்ட பின்பு, சுழல் காற்றாக மாறி எல்லா திசைகளிலும் சூறைக்காற்று (தானி 2 : 35) வீசும். பெருங்குழப்பம் உண்டாகி இந்த யுகம் முடிவு பெறும்.

**பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது :**

**பூமி** : பாரம்பரிய முறைமைகளைக் கடைபிடிக்கும் கூட்டத்தார்;

**சமுத்திரம்** : சமூக / சமய ஒழுங்கு குறித்து அக்கறையில்லாத அமைதியற்ற ஜனத்திரள்;

**மரம்** : குறிப்பிடத்தக்க தலைமை பொறுப்புகள் வகிப்போர்;

காற்றுகள் வீச முடியாமல் பிடித்து வைக்கப்பட்டிருந்தால், மேற்குறிப்பிட்டுள்ளோர் மீது சேதம் ஏற்படாது. திருச்சபை முழுமை பெறுவதில் தடையேதும் வராதபடி தேவத்திட்டம் இப்படியாக செயல்படும்.

வெளி 7 : 2, 3.
**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்; அவன், பூமியையும், சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி : நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமியையும், சமுத்திரத்தையும், மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.**

இங்கு குறிப்பிடப்படும் தூதன் "இயேசுவே" ! (மல்கி 4 : 2) . முத்திரிக்கும் பணியை செய்து முடிக்க வல்ல முத்திரை அவர் வசம் உள்ளது; அவர் நான்கு தூதர்களை பார்த்து தம் அதிகாரத் தொனியில் சுவிசேஷ யுகத்தின் இறுதிக் காலத்தில் தாம் செய்யவிருக்கும் முதன்மை பணியை குறித்து உரத்த குரலில் வெளிப்படுத்துகிறார்:

1 அராஜகம், அமைதிகேடு, குழப்பம் விளைவிக்கும் சக்திகள் தடை பண்ணப்பட வேண்டும்;
2 அவருடைய மணவாட்டி முழுமை பெற வேண்டும்; அதாவது,திருச்சபை அங்கங்களின் நெற்றிகளில் ( பிதா, மற்றும் இயேசுவின் சுபாவங்களை தங்களில் தரித்துக் கொள்ளுதல் - வெளி 14 : 1) முத்திரை போட வேண்டும்.
3 இந்த முத்திரையிடும் பணி முடிவு பெறும் வரையில் , சுவிசேஷ யுக இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட " மகா நாளின் உபத்திரவங்கள் " செயல்படக்கூடாது; அதாவது, நகரத்தின் மீந்திருக்கும் **9/10 பங்குக்கான** பேரழிவு நடக்கக் கூடாது.

வெளி 7 : 4.
**முத்திரைப் போடப்பட்டவர்களின் தொகையை சொல்லக்கேட்டேன் ; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் .**

**முத்திரைப் போடப்பட்டவர்களின் தொகை 1,44,000 பேர் :**

இது உண்மையான இலக்கம். அடையாள பாஷையில் இது குறிக்கப்படவில்லை. **"ஏழு"** என்பது **தெய்வீக முழுமை** தன்மையைக் குறிக்கிறது. சபைக்கு ஏழு காலப் பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆதி 15 : 13ல் **'400' வருடங்கள்** குறிக்கப்படுவதில், 144000 என்பது மறைமுகமாக உள்ளது. 400 x 360 = 144000 (1 வருடம் = 360 நாட்கள்).

வெளி 21ம் அதிகாரத்தில் புதிய எருசலேம் குறித்த அடையாள பாஷையில் இந்த எண்ணிக்கை காணப்படுகிறது; இயேசுவின் “சரீரமாக“ அடையாளமாக குறிக்கப்படுபவர்கள் விசேஷித்த வகுப்பினர் ஆவர். ஒரு வருடத்திற்கு 72 பேர் என கணக்கிட்டால் , சுமாராக 2000 வருட சுவிசேஷ யுக காலப்பகுதியில் 2000 x 72 = 144000 பேர் தகுதி பெறுகிறார்கள். அதாவது, ஒரு மாதத்திற்கு **6** பேர்கள் என்ற தர மதிப்பீடு மிகவும் இறுக்கமான அளவாகத் தெரிகிறது. ஆனால், இது முன்குறிக்கப்பட்ட இலக்கம் ஆகும். வசனம் 9ல் குறிக்கப்படும் “திரள் கூட்டத்தார்“ மணவாட்டியாகும் தகுதியில் தோல்வியுற்றதால், அவர்கள் இலக்கைத் தவற விட்டவர்கள்.

**வெளி 7 : 5 - 8.**

**யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் . ரூபன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .**

**ஆசேர் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .நப்தலி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .மனாசே கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .**

**சிமியோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் . லேவி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் . இசக்கார் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .**

**செபுலோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் . யோசேப்பு கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் . பென்யமீன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம் .**

இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 12,000 பேர்கள் வீதம் மொத்தம் 144000 பேர் வருகிறார்கள். வெளிப்படுத்தல் ஆகமத்தில் **கிறிஸ்தவர்கள் ,** “யூதர்கள்“ என்று அடையாள பாஷையில் குறிக்கப்படுகிறார்கள். (கலா 6 : 16; ரோம 9 : 6 - 8; 24 - 26; ஒப்பிட்டுப் பார்க்கவும்). இயேசு, இந்த 12 கோத்திரங்களை அடையாள பாஷையில் குறிப்பிடுகிறார் :

1. ஆதியாகமத்தில் 49ம் அதிகாரத்தில், 12 கோத்திரங்களின் பெயர்கள் வம்சாவளியைக் குறிக்கும் நோக்கத்தில் உள்ளது. இதில் யாக்கோபின் 12 குமாரர்களைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அதிகாரத்தில் உள்ள யாக்கோபின் தீர்க்கதரிசன ஆசீர்வாதங்கள், பிற்காலத்திய தீர்க்கதரிசனங்களை விளக்கமாக நாம் அறிந்து கொள்ள உதவுகின்றன.
2. எண்ணாகமம் 2ம் அதிகாரத்தில் உள்ள 12 கோத்திரங்களில் “**லேவி**“ காணப்படவில்லை. இது நமக்கு ஆவிக்குரிய பாடத்தை உணர்த்துகிறது. லேவி கோத்திரம் திருச்சபையையும், திரள் கூட்டத்தாரையும் குறியீட்டாக சுட்டிக் காட்டுகிறது. லேவியருக்கு கானான் தேசத்தில் பங்கு ஏதும் சுதந்திரமாகக் கொடுக்கப்படவில்லை. ஆவிக்குரிய லேவியருக்கும் இப்பூமிக்குரிய சுதந்திரத்தில் பங்கில்லை. எண்ணாகமம் 2ம் அதிகாரத்தில், யோசேப்பின் கோத்திரத்தை **எப்பிராயீம்,** மற்றும் **மனாசே** என்று பிரித்து (யோசேப்பின் குமாரர்களின் பெயர்கள்), கோத்திரங்களின் எண்ணிக்கையான 12ல் மாற்றம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.
3. வெளி 7ம் அதிகாரத்தில் குறிக்கப்படும் கோத்திரங்கள் **இஸ்ரவேலரைக் குறிப்பதில்லை.** நிழலான ஆரோனின் ஆசாரியத்துவத்தின் பொருளான கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தில் பங்கு பெறும் சரீரமாகிய திருச்சபையின் அங்கங்களாக இந்த 12 கோத்திரங்கள் காட்டப்படுகின்றன. வெளி 7ம் அதிகாரத்தில் காணப்படும் 12 கோத்திரங்களில் இரண்டு கோத்திரங்களின் பெயர்கள் (தாண், எப்பிராயீம்) தவிர்க்கப்பட்டுள்ளன. அதற்கு வலுவான காரணம் இருக்க வேண்டும். தாண் கோத்திரமும், எப்பிராயீம் கோத்திரமும் இயேசுவின் சரீரத்தில் அடையாளமாக ஏன் பங்கு பெறவில்லை ?

(A) **தாண் கோத்திரம்** இரண்டாம் மரணத்துக்குரிய கூட்டத்தாரைக் குறிக்கிறது. வெளி 2 : 11ல் ஜெயங்கொள்ளுகிறவர்களை இரண்டாம் மரணம் சேதப்படுத்துவதில்லை என வாசிக்கிறோம். **தாண்** ஜெயங்கொள்ளவில்லை. **தாண்** பற்றி யாக்கோபு கூறிய தீர்க்கதரிசனத்தில் (ஆதி 49 : 17; நியாயாதிபதி 18 ம் அதிகாரத்தையும் பார்க்கவும்) , **தாண்** சர்ப்பம் போன்று உருவகப்படுத்தப்படுகிறான். ஏதேனின் சர்ப்பம் போன்று வஞ்சிக்கும் எண்ணத்துடன் குதிரைகளின் குதிகால்களை வழியில் காத்திருந்து கடிப்பவனாகவும், குதிரைகளுக்கு சாவுக்கேதுவான காயம் ஏற்பட்டாலும், குதிரைகளில் ஏறியிருப்பவர்களை கீழே தள்ளி விடுபவனாக காணப்படுகிறான்.

**குதிரைகள்** : கொள்கைகள் (இங்கு சத்தியங்கள்).

**குதிகாலை கடிப்பது** : உபாய தந்திரமான வழிகளை உபயோகித்து, சத்தியத்திற்கு சவாலாக இருப்பது.

**கீழே தள்ளி விடுவது** : மற்ற கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை (சத்தியத்தை) அழிக்கும் நோக்கத்துடன் செயல்படுவது.

அடையாளப் பூர்வமான **தாண்** கோத்திரத்தார், தம் செயல்களுக்கு பிரதிபலனாக “இரண்டாம் மரணத்துக்கு“ உட்படுகின்றனர்.

(B) **எப்பிராயீம் கோத்திரம் :**

**144000** பேர்களுக்குள் இவர்களுக்கு பங்கு இல்லை. ஆனால் இவர்கள் தங்கள் ஜீவனை இழக்கவில்லை.

“எப்பிராயீம்“ என்ற பதம் “ பலுகி பெருகும் வளம் கொண்ட “ என்று அர்த்தம் கொள்ளும்.

“எப்பிராயீம்“ என்ற வார்த்தை பத்துக் கோத்திரத்தார்களாகிய இஸ்ரவேலர்களை (தேவ ஒத்தாசை குறைவாகப் பெறுபவர்கள்) குறிக்கும் பாணியில் வேதாகமத்தில் அடிக்கடி கையாளப்பட்டுள்ளது. இந்த “எப்பிராயீம் கோத்திரத்தார்“ தான், வெளி 7 : 9ல் “திரள் கூட்டத்தாருக்கு“ நிழலாக இருக்கிறார்கள். ஓசியா 7 : 8, 11 காணும் இந்த எப்பிராயீம் கோத்திரத்தார் பற்றிய விவரம், திரள் கூட்டத்தாரைப் பற்றி தெளிவாகப் புரிய வைக்கிறது. எப்பிராயீம் கோத்திரத்தார் அந்நிய ஜனங்களோடு கலந்திருப்பது, அரை வேக்காடு-பழுக்காத கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு நிழலாக குறிக்கப்படுகிறார்கள். இந்த “திரள் கூட்டத்தார்“, எகிப்தையும், அசீரியாவையும் உதவிக்கு கூப்பிடுகிறார்கள். தங்களுக்கு உதவி எங்கிருந்து வர வேண்டும் என்ற ஞானம் இல்லாமல் செயல்படுகிறார்கள்.

எப்பிராயீம் (திரள்கூட்டத்தார்), **ஆசாரியர்களாக மாறாத லேவி கோத்திரத்தாரை** அடையாளப்படுத்துவதாக உள்ளது; எப்பிராயீமினால் அடையாளப்படுத்தப்படும் லேவி கூட்டத்தாரைப் பற்றி எண் 1 : 49; மற்றும் 2 : 33ல் குறிப்பிடப்பட்டிருப்பதை சம்பந்தப்படுத்திப் பார்க்க முடிகிறது; “லேவி தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே மற்றவர்களுடன் எண்ணப்படவில்லை”.

**இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்கள் :**

**A. யாக்கோபின் 12 குமாரர்கள் :**

**இது வம்சாவளியையும், தீர்க்கதரிசன அடிப்படையிலும் இந்த வரிசை உள்ளது.**

1. ரூபன் 2. சிமியோன் 3. லேவி 4.யூதா 5. செபுலோன் 6. இசக்கார்.
7. தாண் 8. காத் 9. ஆசேர் 10. நப்தலி 11. யோசேப்பு 12. பென்யமீன்.

**B. இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள் :**

**இது ஜனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் நிலப்பங்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வரிசை உள்ளது :**

1. ரூபன் 2. சிமியோன் 3. யூதா 4. செபுலோன் 5. இசக்கார் 6. தாண்

7. காத் 8. ஆசேர் 9. நப்தலி 10. பென்யமீன் 11. எப்பிராயீம் 12. மனாசே.

**C. முத்திரை போடப்பட்ட 12 கோத்திரத்தார் : (வெளி 7ம் அதிகாரம்).**

1. ரூபன் 2. சிமியோன் 3. லேவி 4. யூதா 5. செபுலோன் 6. இசக்கார்

7. காத் 8. ஆசேர் 9. நப்தலி 10. யோசேப்பு 11.பென்யமீன் 12. மனாசே.

**வெளி 7 : 9.**
**இவைகளுக்குப் பின் , நான் பார்த்தபோது , இதோ , சகல ஜாதிகளிலும், கோத்திரத்தாரிலும் ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து , தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாகவும் நிற்கக் கண்டேன் .**

**ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் :**

வசனம் 7 : 4ல் குறிப்பிடப்படும் இயேசுவின் சரீரமாகிய திருச்சபையாரைப் போல, இந்த திரள் கூட்டத்தாரின் இலக்கம் முன்குறிக்கப்பட்டதல்ல . சுவிசேஷ யுக கால முழுமையிலுமுள்ள இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இலக்கில் ஜெயங்கொள்ளாவிட்டாலும் (இரண்டாம் மரணத்திற்கு உட்படாமல்), இயேசுவின் சரீரத்தில் அங்கமாகும் வாய்ப்பை இழந்தாலும், கிறிஸ்து இவர்களின் பிரதிஷ்டையை அங்கீகரிக்கும் பட்சத்தில், “திரள் கூட்டத்தார்“ அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவார்கள். திரள் கூட்டத்தாரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என்று, நிழலாகக் குறிக்கப்படும் “எப்பிராயீம்“ என்ற பெயரின் அர்த்தத்தில் (பலுகி பெருகும் வளம்) விளங்கும்.

**சகல ஜாதிகளிலும், கோத்திரத்தாரிலும் , ஜனங்களிலும், பாஷைக்காரரிலும் :**

இது இவ்வுலகத்தில் உறவு / ஈடுபாடு கொள்ளாத மனுஷ சமுதாயத்தைக் குறிக்கும். இக்கூட்டத்தாரிடமிருந்து தான் திருச்சபையும், திரள் கூட்டத்தாரும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இந்த இரு வகுப்பினரும் **ஒரே அழைப்பிற்குள்** வந்தவர்கள். ஆனால், இறுதியில் ஜெயங்கொண்டவர்கள் திருச்சபை அங்கங்களாக உயர்வு பெறுகின்றனர்.

**சிங்காசனத்திற்கு முன்பாக :**

ஊழியம் செய்யும் நிலையைக் குறிப்பது.

**ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக :**

144000 பேர் ஆட்டுக்குட்டியானவருடன் இருப்பார்கள். திரள் கூட்டத்தார் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக ஊழியம் செய்யும் நிலையிலிருப்பார்கள்.

**வெள்ளை அங்கிகளைத் தரித்து :**

13, 14 ம் வசனங்களையும் பார்க்கவும் ; அவர்களுடைய அங்கிகள் வெண்மையாக ஆக்கப்பட்டது. கறையுள்ள அங்கிகளை சுத்திகரித்து, அதன் பலனாக, திரள் கூட்டத்தார் வகுப்புக்கு தகுதியானவர்கள். எண் 8 : 7, 8.

**தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து :**

குருத்தோலை என்பது வெற்றி அல்லது விடுதலையைக் குறிக்கும் அடையாளம். கூடாரப் பண்டிகை இதற்கு ஓர் உதாரணம்; வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் இஸ்ரவேலருக்கு நிரந்தரமாகத் தங்க இல்லங்கள் கிடைப்பதற்கு முன்பாக, நிரந்தரமில்லாத தற்காலிகமான வனாந்தர வாழ்க்கையை அடையாளப்படுத்தும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் குருத்தோலைகளினால் வேயப்பட்ட தற்காலிக கூடாரங்களை உண்டு பண்ணினார்கள்.

குருத்தோலைகளினாலான கூடாரங்கள் தற்காலிக நிலையிலிருந்து **விடுதலையாகி,** நிரந்தர நிலைக்கு வருவதைக் காட்டுகிறது.

வெளி 7 : 9ல் இதே கருத்து தெரிகிறது. திரள் கூட்டத்தார் இவ்வுலகத்திலிருந்து **விடுதலையாகி** பரலோகத்தில் நிரந்தரமாகத் தங்கும் தகுதியை பெறுகிறார்கள். இனி இவர்கள் இவ்வுலகத்தில் அலைய வேண்டிய அவசியம் இல்லை. தம் தேவைகளைத் தேடி எங்கும் செல்ல வெண்டியதில்லை. 16, 17 ம் வசனங்களைப் பார்க்கவும்.

லேவி 10 : 12 ல் ஆரோனின் குமாரர்களான நாதாப், அபியு என்ற இருவரும் அந்நிய அக்கினியை பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு வந்ததால் மரித்துப் போனார்கள். ஆரோனின் மற்ற இரண்டு குமாரர்கள்:

1. எலெயாசார் (கிரேக்க மொழியில் **லாசரஸ்)** 2. இத்தாமர்.

இருவரில், **எலெயாசார்** ஆரோனுக்குப் பிறகு ஆசாரியன் ஆனான். உபா 10 : 6.

**இத்தாமர்** என்ற பெயர் "குருத்தோலையின் தேசம்" என்று பொருள்படும். இவனுடைய பெயர், ஆசாரிய ஊழியத்துக்குரிய வாய்ப்பை இழந்து, விடுதலைக்குக் காத்திருக்கும் நிலையை உருவகமாக வெளிப்படுத்துகிறது. அதாவது, இந்த தற்காலிக நிலையிலிருந்து விடுதலையாக, நிரந்தர நிலையாகிய பரலோக வாசத்தை அடையப் போகும் திரள் கூட்டத்தாருக்கு அடையாளமாகக் காணப்படுகிறான்.

**வெளி 7 : 10 - 12 .**

**அவர்கள் மகா சத்தமிட்டு : இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும், நான்கு ஜீவன்களையும் சூழ நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு, ஆமென், எங்கள் தேவனுக்கு துதியும், மகிமையும், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக: ஆமென், என்றார்கள்.**

இந்த திரள் கூட்டத்தார் தங்கள் பரிதாப நிலையை உணர்ந்து, தாங்கள் இப்பொழுது பெற்ற விடுதலைக்குக் காரணம், தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் என்பதை மகிழ்ச்சியுடன் பறைசாற்றுகின்றனர். திரள் கூட்டத்தாரின் இந்த மகிழ்ச்சியுடன் மற்றவர்களும் ஒருங்கிணைந்து, (4ம் அதிகாரம்) தேவனை துதி செய்கின்றனர். தேவன் திருச்சபையை தேர்ந்தெடுக்கும் செயலில், அதனின்று வேறுபட்ட ஒரு பிரிவினராக, பல உபத்திரவங்களில் ஆட்கொள்ளப்பட்டு அதிலிருந்து மீண்டு வரும் விதமாக திரள் கூட்டத்தார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேவன் தங்கள் மேல் கொண்ட அன்பையும் பரிவையும் பாராட்டி திரள் கூட்டத்தார் தேவனை துதி செய்கிறார்கள்.

வெளி 7 : 13.

**அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார் ? எங்கேயிருந்து வந்தார்கள் ? என்று கேட்டான்.**

இந்த 13 ம் வசனத்திலிருந்து அதிகாரம் முடிவு பெறும் கடைசி வசனம் வரைக்கும், வசனம் 9ல் குறிக்கப்படும் **திரள் கூட்டத்தார்** பற்றிய கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மூப்பரில் ஒருவனுக்கும் (வசனம் 11) யோவானுக்கும் (மாம்ச சரீரத்தில் திருச்சபையினருக்கும்) நடக்கும் சம்பாஷணையாக இருக்கிறது. தேவத் திட்டத்தின் கருகலான (மறைக்கப்பட்ட) பகுதியாக, திரள் கூட்ட வகுப்பாரைப் பற்றிய விஷயம் இருப்பதை இந்த வசனம் உணர்த்துகிறது.

"மூப்பர்" என்பது தீர்க்கதரிசன சாட்சியைக் குறிக்கிறது என ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இந்த தீர்க்கதரிசன சாட்சி யோவானைப் பார்த்து, வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார் ? எங்கேயிருந்து வந்தார்கள் ? என்று வினவுகிறது.

வெளி 7 : 14.

**அதற்கு நான் : ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன் :**

மூப்பர் கேட்ட கேள்விக்கு யோவான் பதிலளிக்கிறார் : ஆண்டவனே, அது உமக்கே தெரியும்.

**அப்பொழுது அவன் : இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் :**

எண் 8 : 7, 8ல் காளையின் (இயேசு - ஆட்டுக்குட்டியானவரின்) பலியினாலே (இரத்தத்தினாலே) லேவியர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களை சுத்திகரிப்பதாக படிக்கிறோம். அதாவது, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே தோய்த்து, தங்கள் வஸ்திரங்களை **திரள் கூட்டத்தார்** வெண்மையாக்குகிறார்கள். அவர்களுடைய கசப்பான அனுபவங்களின் வாயிலாக கறைகள் நீங்கப்படுகின்றன. இந்த கசப்பான அனுபவங்கள் 14ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ள " மிகுந்த உபத்திரவத்தின் " ஒரு பகுதியாக இருக்கலாம். சுவிசேஷ யுக கடைசி காலப் பகுதியில் உயிரோடிருக்கும் திரள் கூட்டத்தார், நான்கு காற்றுகள் கட்டவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து வரும் மகா உபத்திரவங்களில் ஒரு பகுதியை அனுபவித்து, பிறகு தேவனிடத்திற்கு வருவார்கள்.

வெளி 7 : 15 , 16.

**ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.**

**இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை: வெயிலாவது, உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை.**

எண் 4 : 33ல் இத்தாமர் (குருத்தோலையின் தேசம்) தன் கீழுள்ள மெராரியின் **(கசப்பு)** குமாரர்களை ஆசரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்ய நியமித்தான் என படிக்கிறோம். அதாவது, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவித்தார்கள் என விளங்குகிறது. கசப்பான அனுபவங்களின் வாயிலாக பரலோகம் சென்று ஆலயத்தில் சேவிக்கும் அந்தஸ்தைப் பெறும் திரள் கூட்டத்தாருக்கு லேவியர்கள் (மெராரியர்கள்) அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறார்கள்.

எண் 1 : 50ல் லேவியர்கள் ஆசரிப்பு கூடார ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் என படிக்கிறோம். அதைப் போலவே, திரள் கூட்டத்தாரும் இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்.

எண் 18 : 21, 23ல் லேவியர்களுக்கு அவர்கள் ஜீவனத்திற்கு தசம பாகம் கொடுக்கப்பட்டது. ஆட்டுக்குட்டியானவர் திரள் கூட்டத்தாரின் தேவைகளையும் ,பாது காப்பையும் அளிப்பார். ஆகவே, அவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவது மில்லை. (எண் 18 : 24, 31).

யோவானைப் பார்த்து கேள்வி கேட்ட மூப்பர்களில் ஒருவன் "மோசே" யின் தீர்க்கதரிசன சாட்சி அடையாளமாகக் காட்டப்பட்டிருப்பதாக யூகிக்கலாம். மோசேயின் எழுத்துக்கள் மூலமாக யோவான் வகுப்பார் திரள் கூட்டத்தாரை பற்றி அறிய முடிந்தது.

**திரள் கூட்டத்தாரை பற்றி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் :**

ஆதி 24 : 61 - 67; சங் 45 : 13 - 15; உன் 8 : 8; 5 : 2 - 8; லேவி 16 : 8; எண் 8 : 19; 1 கொரி 5 : 5; 3 : 15.

**வெளி 7 : 17.**
**சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார் ; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான் .**

**இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு வழி நடத்துவார் :**

இயேசு கிணற்றருகில் சமாரிய ஸ்திரீயிடம் ஜீவத்தண்ணீர் பற்றி சம்பாஷிக்கிறார்; யோவான் 4 : 14.

| | | |
|---|---|---|
| ஜீவ ஊற்றுகள் | : | ஜெயங்கொள்கிற திருச்சபையார் |
| ஜீவத்தண்ணீரைக் குடிப்பவர்கள் | : | திரள் கூட்டத்தார் |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 8 ம் அதிகாரம்

## வெளி 8 : 1 - ஏழாம் முத்திரை உடைப்பு

**வெளி 8 : 1.**
**அவர் ஏழாம் முத்திரையை உடைத்த போது , பரலோகத்தில் ஏறக்குறைய அரை மணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று .**

இங்கு குறிப்பிடும் "அரைமணி நேரம்" என்பது ஒரு காலக்கணக்கைக் குறிப்பிடுவதாக பொதுவான கருத்து உண்டு. ஆனால், வேதாகமத்தில் "மணிநேரம்" என்ற சொல் 'துல்லியமாக குறிப்பிட்டுச் சொல்ல முடியாத கால அளவு' கொண்டுள்ளதாகவும், அத்துடன், சில தனித்தன்மைகள் கொண்டதுமாக இருப்பதை வேதாகமத்தில் பல சந்தர்ப்பங்களில் காணலாம்; இங்கு சொல்லப்படும் 'அரைமணி நேரம்' , வெளிப்படுத்தல் ஆகம அறுவடை கால தீர்க்கதரிசனத்தில் சம்பந்தப்பட்டிருப்பதை உணரலாம்;

சகோ: ரசல் ஊழியம் செய்த காலத்தில் மத உலகில் ஒரு நிசப்தம் நிலவியதாக சிலர் கூறுவதுண்டு; ரசல் அவர்கள் அறுவடை கால சுவிசேஷத்தை கிறிஸ்தவ உலகத்திற்கு பறை சாற்றிய தருணத்தில், அதை எதிர்க்க திராணியில்லாத நிசப்தமான நிலை மத உலகத்தில் இருந்தது; இந்த விளக்கம் ஒரு விதத்தில் சரியானது என்றாலும், இது சம்பந்தமான சில சந்தேகங்கள் எழும்புகின்றன :

(a) 8 : 1ம் வசனத்தில் 'மணி நேரம்' என்று பொதுவாகக் குறிக்கப்படாமல், "அரைமணி நேரம்" என்று ஒரு காலக் கணக்கை உணர்த்தும் விதத்தில் ஏன் சொல்லப்படுகிறது ?

(b) சபையின் ஆரம்ப காலப் பகுதியில் இல்லாமல், சபை **முடிவு பெறும்** காலத்தில் முத்திரை உடைக்கப்படுவதாகத் தெரிகிறது; உதாரணத்திற்கு, ஆறாம் முத்திரையை எடுத்துக் கொண்டால், ஆறாம் சபை கி.பி. 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துவங்கினாலும், 18ம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சு புரட்சியின் சமயத்தில் முத்திரை உடைக்கப்படுவதாகத் தெரிகிறது.

அப்படியானால், ஏழாம் முத்திரையில் குறிக்கப்படும் 'மணி நேரம்' எது ? அதில் 'அரைமணி நேரம்' எதைக் குறிக்கிறது ?

வெளி 17 : 2ல், சமாதான இராஜ்யம் நிகழ்வதற்கு முன்னர், பூமியின் அதிகாரங்கள் ஒன்றாக இணைவதைப் பார்க்கிறோம்; இந்த பத்து கொம்புகளும் மிருகத்துடன்கூட ராஜாக்கள் போல **ஒரு மணி நேரமளவும்** அதிகாரம் பெற்றுக் கொள்கிறார்கள்; இதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களின் இறுதியாக, பாபிலோன் வேசி முற்றிலும் அழிவை சந்திக்கிறாள்; இந்த காலத்தை இரண்டு பாதியாகப் பிரிக்கலாம் எனத் தோன்றுகிறது; எப்படியெனில், நாம் அறிந்துள்ளபடி, திருச்சபை திரைக்குப் பின்னால் எடுக்கப்பட்டதை உணரும் நாள் 'திரள் கூட்டத்தாருக்கு' வரும்; அப்பொழுது அவர்கள் தங்கள் நிலையிலிருந்து மாறி, உத்வேகமாக செயல்பட்டு, தங்கள் வஸ்திரங்களை தோய்த்து வெண்மையாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவார்கள்; பெரிய ஆலையிலே திராட்ச பழங்களை கொண்டு போய் சேர்க்கும் (வெளி 14 : 17 - 19) பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள்.

இவ்வாறு தங்கள் வஸ்திரங்களை வெண்மையாக்குவதற்கு முன்பு , திரள் கூட்டத்தார் தாங்கள் அநாதையாக தனித்து விடப்படுவதை உணர்ந்து தடுமாறி, ஒரு நிசப்தமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள்; இந்த நிலைக்கு உதாரணமாக, எரேமி 8 : 20; ஆபகூக் 3 : 17, 18; போன்ற வசனங்களை குறிப்பிடலாம்; இது தான் **வானத்தில்** அரை மணி நேரம் அமைதல் உண்டாகும் நிலை ஆகும்; 'வானம்' என்பது பூமியில் மீந்திருக்கும் உண்மையான வானத்துக்கு அடையாளமான 'திரள் கூட்டத்தார்களே' ! அரை மணி நேரம் அமைதல் உண்டாகும் காலப் பகுதி இதுவே .

இவ்வாறாக தங்களின் அமைதி நிலைமையை உணர்ந்த திரள் கூட்டத்தார், பின்னிட்டுத் திரும்பாமல் செயலில் இறங்கி, தங்கள் வஸ்திரங்களை வெண்மையாக்க முயற்சிப்பார்கள்; இனி அமைதல் கிடையாது; பாபிலோனை அழிக்கும் முயற்சியில் துணையாக செயல்படும் இந்த 'அரை மணி நேரம்' காலப்பகுதி பெரும் இரைச்சல் கொண்டதாயிருக்கும்; இவ்விதமாக திரள் கூட்டத்தார் மாம்சத்தில் மரித்து, ஆவியில் உயிர்ப்படைவார்கள்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## வெளி 8 : 2 - 8 : 13;  7 எக்காளங்கள் அறிமுகம்;
## 1, 2, 3, 4ம் எக்காளங்கள் ஊதப்படுதல்

**வெளி 8 : 2 .** : தேவதூதர்கள், ஏழு எக்காளங்கள் பற்றிய அறிமுகம்;

**வெளி 8 : 3. ]**
**]**
**8 : 4. ]** : இந்த மூன்று வசனங்களும் வசனம் 2ன் தொடர்ச்சி அல்ல !
**]** வேறு சம்பவம் தற்காலிகமாக இங்கு விவரிக்கப்படுகிறது.
**8 : 5. ]**

**வெளி 8 : 6.** : 2ம் வசனத்தின் தொடர்ச்சி இங்கிருந்து ஆரம்பிக்கிறது.

இது போன்ற வாக்கிய அமைப்புகள் வெளிப்படுத்தல் ஆகமத்தில் சில இடங்களில் பார்க்கலாம். உதாரணமாக, வெளி 12 : 6; மற்றும் 12 : 14ம் வசனங்களில் 'ஸ்திரீ ' வனாந்தரத்திற்கு இரண்டு முறை போகவில்லை. ஆனால், ஸ்திரீயின் வனாந்தர ஓடிப்போகுதலின் அனுபவம் **இரு வேறு** விவரிப்புகளாக காணப்படுகிறது. இதை போலவே, வெளி 8ம் அதிகாரத்தில் தூதர்கள் மற்றும் எக்காளங்கள் சம்பந்தமாக **இரண்டு வெவ்வேறு விதமான விவரிப்புகள் காணப்படுகின்றன.**

**வெளி 8 : 2.**
**பின்பு, தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களைக் கண்டேன் ; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.**

### தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களைக் கண்டேன் :

யோவான் இந்த ஏழு தூதர்களை ஏற்கனவே வெளி 1 : 16, 20ல் பார்த்திருக்கிறார். ஏழு சபைகளுக்குரிய ஏழு தூதர்கள் இவர்களே ! வெளி 2, 3ம் அதிகாரங்களில் ஏழு சபைகளுக்கும் கடிந்துரையாக எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டது போல அல்லாமல், இங்கு ஏழு தூதர்களுக்கும் **கருவிகள்** கொடுக்கப்பட்டு, அதன் மூலம் தூதுகள் பிரகடனப்படுத்தப் படுகின்றன. இந்த தூதுகள் ஏழு மந்தைகளையும் (சபைகளையும்) தாண்டி மற்றவர்களுக்கும் சென்றடையத் தக்க அளவில் எக்காளத் தொனி வெளிப்படுத்தப்படுகின்றன.

### அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது :

'எக்காளங்கள்' அதாவது, 'சுதந்திர பிரகடனங்கள்' ஏழு தூதர்களால் சமுதாயத்திற்கு அளிக்கப்படுகின்றன. தூதர்களால் கொடுக்கப்படும் இந்த தூதுகள் சமுதாயத்திற்கு விருப்பமுள்ளவைகளாக இல்லாமல் எரிச்சலை ஏற்படுத்துகின்றன. வேறொரு தூதன் வந்து பலிபீடத்தின் படியிலே நின்றான். இந்த தூதன் இயேசுவே ! வெளி 1 : 13ல் ஏழு சபைகளின் நடுவிலே நின்றவர் இவரே ! அவருடைய சத்தம் எக்காளச் சத்தம் போன்றிருந்தது. அங்கு இயேசு பிரதான ஆசாரியன் போல ஆடை அணிந்திருந்தார். அதே போன்று, இங்கு வெளி 8 : 3ல் அதே ஆசாரிய ஊழியம் செய்யும் விதமாக, இயேசு பலிபீடத்தின் கீழே நிற்கிறார். இது பிரகாரத்திலுள்ள பலிபீடம் ஆகும். இங்கு தான் இயேசு தம் ஜீவனை பலி கொடுத்தார். பலிபீடத்தின் கீழே இருந்த நெருப்பு கரி (நிறைவான பலி செலுத்துவதில் அவருக்கு ஏற்பட்ட சோதனைகளை) குறிக்கிறது. பிறகு, பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

வெளி 8 : 3.

**வேறொரு தூதனும் வந்து, தூப கலசங்களைக் காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான் ; சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்கு கொடுக்கப்பட்டது .**

**வேறொரு தூதன் :** இந்த தூதன் இயேசுவே. ஏழு எக்காளங்களைத் தொனிக்கக்கூடிய ஏழு சபைகளுக்கு மத்தியில் நிற்பதாக வெளி 1 : 13ல் குறிக்கப்படுபவர் இவரே ! அங்கே அவருடைய சத்தம் 'எக்காளத்தொனி போல' (பெருவெள்ளத்து இரைச்சல் போல) இருந்தது. அவருடைய சத்தத்திலிருந்து வெளிப்படும் செய்தி பெரும் விளைவுகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

**பலி பீடத்தின் படியிலே நின்றான் :**

இந்த நிகழ்வு வெளி 1 : 13ம் வசனத்துடன் தொடர்புள்ளதாயிருக்கிறது; அங்கு பிரதான ஆசாரியன் போல இயேசு உடை அணிந்திருக்கிறார். இங்கு 8 : 3ம் வசனத்திலும் அதே பதவியுடன் செயலாற்றும் விதமாக குறிக்கப்படுகிறார். **பலிபீடத்தின் படியிலே** நிற்பதாகப் படிக்கிறோம்; இது **பிரகார பலிபீடம்** ஆகும்; இந்த பலிபீடத்தில் தான் இயேசு தம் மனுஷீகத்தை பலியிட்டார்; பாடுகளின் வழியாக நிறைவேற்றப்பட்ட பலியை அடையாளப் படுத்துகிற **சாம்பல்** பலிபீடத்தில் உள்ளது; இந்த சாம்பல் தான் பொற் கலசத்தில் நிரப்பப்படுகிறது.

**தூபங்காட்டும் பொற்கலசம் பிடித்துக் கொண்டு :**

கலசம் நிரப்பப்படும் அளவுக்குத் தக்கதாக, தேவனால் முன்குறிக்கப்பட்ட அனுபவங்களை (சாம்பல்) உள்ளடக்கியதாக பொற்கலசம் உள்ளது.

**மிகுந்த தூபவர்க்கம் அவனுக்கு கொடுக்கப்பட்டது :**

கிறிஸ்துவின் பலியின் பூரணத்துவத்தை தூபவர்க்கம் காட்டுகிறது.

**சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி :**

எல்லா பரிசுத்தவான்களைக் குறித்த விஷயமாக இது இருக்கிறது. சுவிசேஷ கால முழுமையையும் பாதிக்கக் கூடிய விஷயமாயும் இருக்கிறது. **அவருடன் கூட** பலி செலுத்த முடியும் வண்ணம் பரிசுத்தவான்களின் ஜெபங்களை தகுதியாக்குகிறது. இது பலியைக் குறித்த விஷயம். எக்காளத்தை ஊதுபவர்கள் (ஏழு காலப்பகுதிகளுக்குரிய சபைகளின் பிரதிநிதிகள்) தங்கள் தூதுகள் தகுதியாக்கப்படாத வரையில், அவர்கள் எக்காளம் ஊத உரிமை இல்லை. இயேசுவின் பலியைத் தொடர்ந்து நெருப்புக் கரிகளின் வாயிலாக வரும் தூப வர்க்க வாசனை தான் தூதர்களின் தூதுகளை தகுதிப்படுத்துகின்றன.

**சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த :**

இது ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தல நிலையை உருவகமாக உணர்த்துகிறது. நியாயத்தீர்ப்பின் அதிகாரத்தை சிங்காசனம் காட்டுகிறது. பிரதான ஆசாரியரான கிறிஸ்து தம் பலியின் மூலமாக தீர்ப்பு நல்விதமாக அமைய வழி வகுத்துள்ளது.

**பொற்பீடத்தின் மேல் :**

ஆசரிப்புக் கூடார பரிசுத்தஸ்தலத்தில் பொற்பீடம் உள்ளது. பாவ நிவாரண பலியின் இரத்தத்தை மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் எடுத்துச் செல்வதற்கு முன்னர், பொற்பீடத்தின் மேலுள்ள தூப பீடத்திலிருந்து வாசனை வரும். இந்த வசனத்தில் (8:3ல்) குறிப்பிட்டிருப்பது இயேசுவின் இரத்தத்தைப் பற்றி அல்ல ! இது பரிசுத்தவான்களின் இரத்தத்தைப் பற்றிய விஷயம். இயேசுவின் இரத்தம் பரிசுத்தஸ்தலத்திற்குள் சென்ற பொழுது அவருடைய தகுதியான ஜெபங்களும் தூப வர்க்கங்களோடு சென்றன. ஆனால், இங்கு **பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்** செல்லப்படுகிறது. இவ்வசனத்தின் மூலம், **பாவ நிவாரண பலியில் திருச்சபையாருடைய பங்கு** செவ்வனே விளங்குகிறது.

**5ம்** அதிகாரத்திற்கும், **8ம்** அதிகாரத்திற்கும் இடையே காணப்படும் ஒற்றுமையான சில விஷயங்களை பின்வருமாறு காணலாம் :

| வெளி 5 : 8 | வெளி 8 : 1 - 4 |
|---|---|
| **1.** ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைக்க **தகுதியுள்ளவராக** அறிவிக்கப்படுகிறார். <br> **2.** 24 மூப்பர்களும் தூப வர்க்கங்கள் நிறைந்த பொற் கலசங்களைப் பிடித்திருக்கிறார்கள். <br> **3.** 'பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்' பரிசுத்தவான்களைக் குறிப்பதாக கொள்ளலாம். <br> **4.** நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வழி பிறந்திருக்கிறது. அதாவது 'முத்திரைகள்' உடைக்கப்படுகிறது. | **1.** தூதர்கள் எக்காளங்களை ஊத **தகுதியாக்கப்பட்டிருக்கிறதை** குறிக்கும் வண்ணமாக எக்காளங்கள் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. <br> **2.** இயேசு தூபங்காட்டும் பொற் கலசத்தைப் பிடித்திருக்கிறார். <br> **3.** சுவிசேஷ யுக பரிசுத்தவான்களைக் குறிகிறது. <br> **4.** எக்காளங்கள் ஊதப்படுகின்றன. |

**வெளி 8 : 4.**

**அப்படியே, பரிசுத்தவான்களின் ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூப வர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று .**

**செலுத்தப்பட்ட தூப வர்க்கத்தின் புகையானது :**

இது பலியின் பூரணத்துவத்தையும் அதனுள் அடங்கிய அன்பின் சிநேகத்தையும் சாட்சி சொல்லுகிறது.

**பரிசுத்தவான்களின் ஜெபங்களோடும் :**

இயேசுவின் நாமத்தினால் நாம் ஜெபம் செய்வதின் நோக்கமே இது தான். (யோவான் 15 : 16; 1 யோவான் 2 : 1). நம்முடன் தொடர்ந்து வரும் கிறிஸ்துவின் பலியின் தூப வர்க்கத்தை நாம் ஒத்துக் கொள்ளாத வரையிலும், நமது ஜெபங்களும், பலிகளும் தகுதியானதுமில்லை, பரிசுத்தமானதுமில்லை. **பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்** பொதுவாகவே ராஜ்யத்தைப் பற்றியதே ! இனி வரப் போகும் எல்லா எக்காளங்களும், **வரப் போகிற ராஜ்யத்திற்கு** கொண்டு செல்லும் சம்பவங்களின் அணிவகுப்பே ஆகும் ! அதாவது, மனுக்குல சமுதாயம் எப்படி ஏழு படிகளாலான பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டு, இறுதியாக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை காட்டுவதாக ஏழு எக்காளங்களும் வரிசைகிரமமாக ஒன்றன் பின் ஒன்றாக ஊதப்படுகிறது.

ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் நிகழும் கட்டாயக் கூறுகள் :

1. இயேசுவின் பலி (வசனம் 3)
2. திருச்சபையினரின் உடன் பலிகளுக்கான தகுதி (வசனம் 3)
3. ஏழு பிரகடனங்கள் (எக்காளங்கள்) ஒன்றன் பின் ஒன்றாக ஊதுவதினால் சமுதாயத்திற்கு ஏற்படும் படிப்படியான பாதிப்புகள் / முறிவுகள். (வசனம் 2 & 6)
4. யுக முடிவில் ஏற்படும் கடைசி பாதிப்பு (முறிவு). (எக்காள சத்தத்தின் உச்ச கட்டமாக எரிகோ மதில்கள் விழுந்ததைப் போல) அதைத் தொடர்ந்து ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். (வசனம் 5)

**தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று :**

உடன் பலிகள் (திருச்சபையினரின்) பிரதான ஆசாரியரான கிறிஸ்துவின் கையில் உள்ளது. ஏழு தூதரும் கிறிஸ்துவின் வலது கையில் இருப்பதை வெளி 1 : 16, 20ல் பார்க்கிறோம். திருச்சபைக்குரிய பாவநிவாரண பலி முழுவதையும் கிறிஸ்து **தேவனுக்கு முன்பாக** ஒப்படைக்கிறார்.

வெளி 8 : 5, 6.

**பின்பு, அந்த தூதன் தூப கலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி , பூமியிலே கொட்டினான் ; உடனே சத்தங்களும் , இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின :**
**அப்பொழுது , ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள் .**

எக்காளங்கள் பற்றிய அறிமுகம் :

1. இயேசு தம் பலியின் மேன்மையால் பெற்ற தகுதி, அவரது திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவியது. (வசனம் 4).
2. சபையின் தூதர்களுக்கு எக்காளங்கள் கொடுக்கப்படுவதால், அவர்களின் தூதுகள் பெரிய அளவில் மனுக்குலத்துக்கு பிரகடனம் செய்யப்படுகின்றன.
   (வசனம் 2) ஆனால் இந்த தூதுகள் சமுதாயத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் இந்த **யுக இறுதியில்** இயேசு தம் பலியின் மூலம் பெற்ற விசேஷித்த அதிகாரத்தின் துணையுடன், நியாயத் தீர்ப்பின் அதிகாரங்களை பேர்கிறிஸ்தவ சபையைக் குறிக்கும் பிராகாரத்தில் செயல் படுத்துகிறார். அவர் அனுப்பும் அழிவுக் கூறுகள் பேர்கிறிஸ்தவ சமுதாயத்தில் ஆட்சேபணைகள், சர்ச்சைகள், புரட்சி ஆகியவற்றிற்கு வழி வகுக்கின்றன. மேற்குறிப்பிட்ட வழி முறைகளில் இயேசு **இனி செயற்படுத்தப்போகும் விஷயங்களை** முன்குறிப்பாக நமக்கு காட்டியிருக்கிறார். (வசனங்கள் 3, 4, 5). இதே ' விவரிப்பு ' முறையினை வெளி 14 : 8, மற்றும் 14 : 13ல் நாம் காண்கிறோம்.

2 ம் வசனத்தின் தொடர்ச்சி 6 ம் வசனம் ஆகும். 6 ம் வசனத்தில் கூறப்பட்ட ஏழு எக்காளங்கள் பற்றி , இனி நடைபெறப்போகும் சம்பவங்கள் விவரிக்கப்பட இருக்கின்றன.

## முதலாம் எக்காளம்

### வெளி 8 : 7.

இந்த எக்காளங்கள் (தூதர்களின் தூதுகள்) பேர்கிறிஸ்தவ சபையிலும், இவ்வுலகத்தாரிலும் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் காட்டுகின்றன.

வெளி 8 : 7.

**முதலாம் தூதன் எக்காளம் ஊதினான் ; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும், அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்து போயிற்று; பசும்புல்லெல்லாம் எரிந்து போயிற்று .**

முதலாம் தூதன் பவுல் அப்போஸ்தலன். இவருடைய செய்திகள் யூத சமய தலைவர்களின் ஞானத்தை அழிக்கும் விளைவுகளை ஏற்படுத்தியது. இது அவருடைய நோக்கமல்ல. அவர் சத்தியத்தை பிரசங்கித்து, இயேசுவின் போதனைகள் நியாயப்பிரமாணத்தை எப்படி நிறைவேற்றியது என்பதை விளக்கி காண்பித்தார். ஆனால், அவிசுவாசிகளாகிய யூதர்கள், இயேசு நியாயப்பிரமாணத்தை அழிப்பதாக தவறான எண்ணம் கொண்டனர். ஆகவே தான், பவுல் அப்போஸ்தலன் யூத சமய தலைவர்களிடம் செல்வாக்கு இழந்து காணப்பட்டார்.

**கல்மழை** : கடினமும், இடுக்கணும், இடர்பாடும் கொண்ட;
**அக்கினி** : அழிவைத் தரும் நீதியான தீர்ப்புகள்; எளிதில் மிக வேகமாகப் பரவும் தன்மையுள்ள பய உணர்வு;
**இரத்தங்கலந்த** : சத்தியங்களும், தீர்ப்புகளும் ஜீவனை இழக்கச் செய்யும் நிலையைக் குறிக்கிறது. யூதசமயம் ஜீவனை இழந்தது; அதன் நிழல் பூர்வமான காரியங்கள் அதைப் பின்பற்றுவோருக்கு நீதிக்குரிய அங்கீகாரம் இனி வழங்க இயலாது.

**பூமியிலே கொட்டப்பட்டது :**

ரோம ஆக்கிரமிப்பினால் வலுவிழந்த யூத சமுதாயத்தின் மீது இச்சமயத்தில் திணிக்கப்பட்ட புதிய கிறிஸ்தவ சத்தியங்களை இது குறிக்கிறது.

**மூன்றிலொரு பங்கு :**

ஆதி சபையின் காலத்தில், சமுதாயம் மூன்று சமய பிரிவுகளைக் கொண்டதாயிருந்தது.

1 ரோம புற மதத்தினர்.
2 யூத மதத்தினர்.
3 ஆதி கிறிஸ்தவர்கள்.

இந்த மூன்று மதப்பிரிவினரை அடையாளங்காட்டும் விதமாக, பிலாத்து சிலுவையின் மேல் மூன்று மொழிகளால் எழுதி வைத்தான் **1.** லத்தீன் (ரோமர்களின் மொழி), **2.** எபிரேயம் (யூதர்களின் மொழி), **3.** கிரேக்கம் (வளரும் ஆதிச்சபை கிறிஸ்தவர்களின் மொழி).

புதிய சத்தியங்கள் வாயிலாக கிறிஸ்தவம் உருவாகத் தொடங்கியது. ஆதி சபையின் ஆரம்ப காலக்கட்டத்தில், கிறிஸ்தவ வளர்ச்சி ரோம பேரரசுக்கு பெரிதான அச்சுறுத்தலாக இருக்கவில்லை. ஆனால் யூத சமயத்தினைப் பொறுத்த வரையில் நிலைமை வேறு விதமாக இருந்தது. இந்த மூன்றிலொரு பங்கு அழியப் பெற்றது. அதாவது, யூத மார்க்கம் செயல் இழந்ததாகி விட்டது. யூத குடிமை அழிந்தது. யூதர்கள் ஐரோப்பா முழுவதும் சிதறடிக்கப்பட்டனர்.

**மூன்றிலொருபங்கு மரங்கள் வெந்து போயிற்று :**

சமுதாயத்தின் தூண்களாயிருந்த அதிகார வர்க்கத்தினர், மற்றும் அறிஞர்கள் - அவர்களின் உயர்நிலை அந்தஸ்துகள் காணப்படாமற் போயின.

**பசும்புல்லெல்லாம் எரிந்து போயிற்று :**

இங்குள்ள முக்கியமான வார்த்தை "பசுமை" என்பது ஆகும். "பசுமை" என்றால் **உயிர்** என்று அர்த்தமுள்ள **நீதிமானாக்கப்படுதலைக்** குறிக்கிறது. நியாயப்பிரமாணத்தின் மூலம் தற்காலிகமாக நீதிமானாக்கப்படும் நிலைமை இனி செல்லாது. யூத மக்கள் தங்கள் பசுமையை இழந்தனர். எல்லா புற்களும் அழியவில்லை. பசுமையான புற்கள் (யூத முறையின்படி **நீதிமானாக்கப்படுதல்)** மட்டுமே எரிந்து போனது.

**சாராம்சம் :**

சபையின் முதற்காலக் கட்டத்தில் ஊதப்பட்ட எக்காள சத்தத்தினால் இஸ்ரவேலும், யூத மார்க்கமும் அழிவுற்றது. முதல் முத்திரை உடைக்கப்பட்டபின், பின்னோக்கிப் பார்த்தால், யூத அழிவினை பார்த்தறியலாம்.

**இரண்டாம் எக்காளம்**
**வெளி 8 : 8, 9.**

சிமிர்னா எக்காள காலப் பகுதியில் இருவிதமான மனப்போக்குகள் தென்பட்டன.

1 கிறிஸ்தவம் ரோம புற மதத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கியதால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளானார்கள்.
2 சமரச இணக்கத்தினால் (ஏற்பு முறைகளினால்) பேர்க்கிறிஸ்தவர்கள் அரசியலதிகார / சமூக ஒத்தாசை பெற பெரு முயற்சிகள் மேற்கொண்டனர்.

இந்த இரண்டு போக்குகளை மனதிற் கொண்டால், சிமிர்னா எக்காளத்தை நாம் சரிவர புரிந்து கொள்ள இயலும்.

**வெளி 8 : 8.**
**இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது அக்கினியினால் எரிகிற பெரிய மலை போன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது. அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று .**

இரண்டாம் தூதன் : யோவான் ; வெளிப்படுத்தல் ஆகமத்தை எழுதியவர். நாஸ்திக் கொள்கையினரின் (gnosticism) வாதங்களை எதிர்த்து தன் நிரூபங்களில் யோவான் விளக்கியுள்ளார்.

**அக்கினியினால் எரிகிற பெரிய மலை போன்றதொன்று :**

இந்த 2ம் காலப் பகுதியில் ரோம புற சமயம் (பெரிய மலை போன்றதொன்று) அழிவடைந்தது. ரோம சாம்ராஜ்யம் (பெரிய மலை) அழியவில்லை. ரோம புற சமயம் (ரோம மதம்) அழிவடைந்தது. ஆகவே தான், 'பெரிய மலை போன்றதொன்று' என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்விஷயம் வெளி 12 : 7, 8ம் வசனங்களில், "ரோம புற சமயம்" வானமாகிய மத உலகில் இருந்த இடம் காணப்படாமற் போயிற்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தான் 2தெச 2 : 7, 8ல், "அக்கிரமத்தின் ரகசியம்" (புதிய ரோம பேர்ச்சபையின் துவக்க நிலை), அதை தடை செய்கிறவன் (ரோம புற சமயம்) நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே, அது வெளிப்படாது என்ற தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் காட்டுகிறது.

எரிகிற மலையைப் பற்றி எரே 51 : 21, 24ல் (பாபிலோனைப் பற்றி சொல்லும்போது) எழுதுகிறார்.

**சமுத்திரத்திலே போடப்பட்டது :**

சமய அக்கறையற்ற ரோம ஜன சமுதாயம், ரோம புற மதத்தின் விழுகைக்கு காரணமாய் இருந்தது. இதுவே ரோம பேர்க்கிறிஸ்தவ சபை உருவாக வழி காட்டியது. ரோம புற மதம் விழுந்த சமுத்திரத்திலிருந்து (அமைதியற்ற ரோம ஜன சமுதாயத்திலிருந்து) தான், மிருகமாகிய ரோமச் சபை அமைப்பு எழும்பி வரக் கண்டதாக வெளி 13 : 1ல் படிக்கிறோம். ரோமக் குடிமக்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவத்தை தழுவ ஆரம்பித்ததைக் கண்ட ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன், அதனுடன் சண்டை போடுவதைத் தவிர்த்து, அதை தனதாக்கி அரசியல் ஆதாயம் தேடும் பாணியில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறி, கிறிஸ்தவத்தை ரோம மதமாக்கினான்.

**அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று :**

மத ஒழுங்கு முறையில் அக்கறையில்லாத, அமைதி இழந்த **ரோம புறமத மக்கள் ,** " சமுத்திரம் " என அடையாள பாஷையில் காட்டப்பட்டிருக்கிறார்கள். இந்த ஜனத்திரளாகிய சமுத்திரத்திலிருந்து தான் மிருகம் (ரோம பேர்ச்சபை) எழும்பி வந்ததாக வெளி 13 : 1ல் படிக்கிறோம். திருச்சபையின் அங்கங்களும் இந்த ஜனத்திரளிலிருந்து தான் வருகின்றனர். இதைத்தான் வெளி 5 : 9ல் சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து மீட்டுக் கொள்ளப்படுவார்கள் என்று பார்க்கிறோம்.

ரோம புற சமயம் இரத்தமாகியது. சிமிர்னா காலப் பகுதியில் நிலவிய மதச் சக்திகளில், மூன்றில் ஒன்றான ரோம புற சமயம் **காணப்படாமற் போயிற்று.** ஆனால், மற்ற இரண்டு சக்திகள் அதாவது,

1. ரோம பேர்ச்சபை , 2. மெய்திருச்சபை தங்கள் போக்கில் செயல்படுகின்றன.

**வெளி 8 : 9.**
**சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று .**

மேற்கண்ட வாக்கியத்தில் "ஜீவனுள்ள" என்ற பதம் மிக முக்கியமானது. கர்த்தரின் பார்வையில் ரோம புற சமயத்திற்கு ஜீவன் எப்பொழுதும் இருந்ததில்லை. அது முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டதாக ஏற்கனவே வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, சமுத்திரத்தில் ஜீவனுள்ள சிருஷ்டிகளாகிய (கிறிஸ்தவர்களின் அடையாளக் குறி - மீன்) மூன்று பிரிவினருக்கும் ஜீவன் (நீதிமானாக்கப்படுதல்) இருக்கிறது.

1. திருச்சபையினரான பரிசுத்தவான்கள், 2. திரள்கூட்டத்தார், 3. இரண்டாம் மரண வகுப்பினர். - புறம்பான கொள்கையினால் ஜீவனை இழந்தவர்கள். இந்த பிரிவினரில் மூன்றாம் பிரிவினரின் முடிவு துயரமானது. சிமிர்னா சபையில் பலர் ஜீவனை இழந்ததாகப் படிக்கிறோம். அதாவது, அவர்கள் நீதிமானாக்கப்படாமல் நித்திய ஜீவனை இழந்தனர்.

**கப்பல்களில் மூன்றிலொரு பங்கு சேதமாயிற்று :**

"கப்பல்கள்" என்பது வர்த்தகத்தைக் குறிக்கும். அக்காலத்திய வர்த்தகத்தின் மூன்று பிரிவுகளை நாம் அனுமானிக்கலாம் :

1. வெளி 18ம் அதிகாரத்தில் , சில கப்பல்கள் பாபிலோனுக்கு ஊழியம் செய்வதாகப் படிக்கிறோம். சிமிர்னா சபை காலப் பகுதியில் புதிதாக உருவான ரோமச் பேர்ச்சபையுடன் செய்யப்பட்ட வர்த்தகம். (மெய்க்கிறிஸ்தவ சபைக்கு, வர்த்தகத்தினால் ஏற்படும் ஆதாயங்களில் நாட்டமில்லை). ரோமச் பேர்ச்சபையுடன் செய்யப்படும் வர்த்தகம் இந்த யுகம் முடியும் வரையிலும் தொடரும்.

2. சிமிர்னா சபை காலப் பகுதியில் நடந்த சம்பவங்களினால், ரோம ராஜ்யத்தின் (அரசியல் அதிகாரம்) வர்த்தகத்தில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

3. ரோம புற சமயத்துடன் நடத்திய வர்த்தகத்தினால் ஆதாயம் பெற்ற மூன்றிலொரு பகுதியினர் (மூன்றிலொரு பங்கு கப்பல்கள்) அழிந்தனர். அவர்கள் கப்பல்கள் செயற்படாமல் மூழ்கின.

இவ்வாறாக, இரண்டாம் எக்காளம் ஊதிய நேரத்தில் ஏற்பட்ட இவ்வுலக சம்பவங்கள் மேற்கண்டவாறு விவரித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

## மூன்றாம் எக்காளம்
## வெளி 8 : 10, 11.

**வெளி 8 : 10.**

**மூன்றாம் தூதன் : ஏரியஸ்**

**மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியை போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது. அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது .**

**ஒரு பெரிய நட்சத்திரம் :**

இதுவும் ஏரியஸை குறிக்கும்; வெளி 1 : 2ல் ஒவ்வொரு சபையின் தூதனும் நட்சத்திரமாகக் குறிக்கப்படுகிறார். ஏரியஸ் ஒரு பெரிய நட்சத்திரம் என்பது உண்மையே ! வரலாற்றிலேயே மிகப் பெரிய சமய பேதமுள்ளவர் என ஏரியஸ் பேர்ச்சபைகளால் வர்ணிக்கப்படுகிறார்.

**வானத்திலிருந்து விழுந்தது :**

மதத்தில் பற்றுறுதி கொண்ட பெரும்பாலான கிறிஸ்தவர்களால் நேரடி நிராகரிப்புக்கு உள்ளானதில் முதன்மையானவர் ஏரியஸ் ஆவார். அவருடைய செல்வாக்கும், பாதிப்பும் வலிமையும் உடையதாயிருந்ததால், அவர் காலத்திய மதம்சார் உலகத்திலிருந்து (வானத்திலிருந்து) பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார். இவரைப் போலவே, ஐந்தாம் சபையின் தூதனும் (விக்ளிப்) வானத்திலிருந்து தள்ளப்பட்டதை வெளி 9 : 1ல் படிக்கிறோம்.

புதிதாக உருவான ரோமச்சபையில், நிக்கொலாய் பிரிவினரின் கொள்கைகளை எதிர்த்தவர் ஏரியஸ். சபையில் குருமார்களின் ஆளுமை அதிகாரத்தை அவர் சகிக்க மாட்டாமல் எதிர்த்தார். அவருடைய "திருத்துவ கொள்கை எதிர்ப்பும்" ரோமச்சபை அவர் மேல் பகைமையை வளர்த்தது.

**தீவட்டியை போல எரிந்து :**

நிகேயா ஆலோசனை சங்கத்தில் ஏரியஸ் அவமதிப்புகுள்ளாகும் வரையில், இவர் கிறிஸ்தவ சமூகத்தில் ஒரு பிரகாசமான நட்சத்திரமாக திகழ்ந்தார். சங்கீதக்காரன் கூறுவது போல, கால்களுக்கு தீபமாக தேவ வார்த்தைகளை காத்து கடைபிடித்ததில் ஏரியஸ் ஒரு பிரகாசமான நட்சத்திரமாக விளங்கினார். (இதற்கு நேர் எதிரான அர்த்தத்தில் ஒரு வசனத்தை லூக் 10 : 18ல் காண்கிறோம்)

**அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது :**

தண்ணீருக்கு (சத்தியத்திற்கு) மூல ஆதாரம் ஆறுகள். இச்சத்தியங்களை ஆதரிப்பவர்கள் மக்கள். (வெளி 16 : 12; 22 : 1).
ஊற்றுகளிலிருந்து தண்ணீர் (சத்தியம்) வெளிப்படுகிறது. (யோவான் 4 : 14).

**சமய கொள்கைகளுக்கான மூல ஆதாரங்கள் :**

1. நைசீன் அறிக்கை (NICENE CREED) வாயிலாக, புதிதாக அதிகாரம் பெற்ற ரோமச்சபையின் ஆதாரம்.
2. ஏரியஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களின் தர்க்கங்களின் மூலம் வெளிப்பட்ட வேதாகம சத்தியங்களின் ஆதாரம்.
3 யூத மார்க்கம் : எருசலேம் விழுந்ததிலிருந்து இது தலையெடுக்காமல் இருந்தாலும் , பெர்கமு சபை காலப்பகுதியில் ஐரோப்பாவின் சில நகரங்களில் யூத மார்க்கத்தாரின் குடியிருப்பு பரவி வருவதை உணர முடிந்தது. எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் இது அமைந்தது. மதம் சம்பந்தமான கொள்கைகளில் மூன்றாவது மூல ஆதாரமாக யூத மார்க்கத்தைக் குறிக்கலாம்.

இந்த மூன்று பிரிவுகளின் கொள்கை மூலங்களில் (ஆதாரங்களில்), எதின் மேல் வானத்திலிருந்து பெரிய நட்சத்திரம் தீவட்டியைப் போல் விழுந்தது ?

வெளி 8 : 10ல் இந்த பெரிய நட்சத்திரம் ஆறுகளில் மூன்றிலொருபங்கின் மேல் விழுந்ததால், அதன் தண்ணீர்கள் பாதிப்புக்குள்ளாகின எனத் தெரிகிறது. இந்த பாதிப்பு நல்ல விளைவை ஏற்படுத்தியதா ? அல்லது தீய விளைவை ஏற்படுத்தியதா ? அது நாம் பார்க்கும் பார்வையைப் பொறுத்து உள்ளது ! ஏரியஸ் ஆதிச் சபையின் ஒத்தாசையினை இழந்து மத உலகத்திலிருந்து பகிஷ்கரிக்கப்பட்ட நிலையினால், அவருடைய போதனைகள் பலருடைய பார்வையில் எப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு நேரிடையான விளைவை ஏற்படுத்தியது என்பதை வரலாறு உணர்த்துகிறது. அவருடைய போதனைகள் (தண்ணீர்கள்) எட்டியைப் போல கசப்பாய் இருந்தது. அதாவது, அவரது சத்தியங்கள் அவர்களைப் பாழ்படுத்தவில்லை. மாறாக, அவர்கள் பருக முடியாதபடி ருசியாக இல்லை.

**எட்டி :**

எட்டி கசப்பு தன்மை கொண்டது. இது ஒரு நட்சத்திரத்தை (தூதனை) குறிப்பதாய் உள்ளதால், இது அந்த தூதனை பின்பற்றுகிறவர்களால் கொடுக்கப்பட்ட பெயர் இல்லை எனவும், இந்த பெயர் போலிச் சபையால் கொடுக்கப்பட்டதாகவும் யூகிக்க இடமுண்டு. அதைப் போன்றே, தண்ணீர்கள் எட்டியைப் போல கசப்பாவது போலிச் சபையின் பார்வையினால் ஏற்பட்டது என்றும் யூகிக்கலாம். இத்தண்ணீர்களை (சத்தியங்களை) விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களின் பார்வையில் கசப்பு உணரப்படவில்லை. ஆகவே மூன்றிலொருபங்கு தண்ணீர்கள் என குறிப்பிடுவது, உண்மையான தண்ணீர்களை (மெய் சத்தியங்களை) குறிக்கிறது. இச்சத்தியங்கள் ஏரியஸ் மூலமாகவும், அவரைப் பின்பற்றியவர்கள் மூலமாகவும் வியாக்கியானம் பண்ணப்பட்டவை.

**வெளி 8 : 11.**

**அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று பெயர் ; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப் போல கசப்பாயிற்று; இப்படி கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்: அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று பெயர் .**

தேவன் தம் தூதனுக்கு அவ்வாறு பெயரிட்டு அழைக்க வாய்ப்பில்லை. ஆகவே, ஏரியஸுக்கு விரோதமானவர்களால் தான் அவருக்கு கொடுக்கப்பட்ட பெயர் **எட்டி** ! நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, திருச்சபையின் சரித்திரத்தில் " பதிதன் " என்றும், " சமய புறம்பாளர்களில் முதன்மையானவன் " என்றும் போலி சபையில் அழைக்கப்பட்டவர் ஏரியஸ் ! ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் உருவாக்கிய இந்த ரோமச் சபை அவரை ஒரு தீண்டத்தகாதவராக மத உலகத்துக்கு வெளிப்படுத்தியதில் வெற்றி பெற்றது.

**அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப் போல கசப்பாயிற்று :**

ஏரியஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களின் சத்தியங்கள் தான், இந்த மூன்றிலொருபங்கு தண்ணீராகக் குறிக்கப்படுகிறது. இந்த தண்ணீர் குடிக்கத் தகாத கசப்புடையது என ரோம பேரரசனும், பிஷப்புகளும் ஏரியஸைப் பற்றியும், அவரது போதனைகளைப் பற்றியும் கிறிஸ்தவர்கள் மத்தியில் தவறான முறையில் அரசியலதிகாரத் துணையுடன் பரப்பியதில் வெற்றி பெற்றனர்.

**இப்படி கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள் :**

" மனுஷர் " என்பது கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய ஜீவனை இழந்தவர்கள். இந்த தண்ணீரை குடித்ததினால் இவர்கள் தங்கள் ஜீவனை இழக்கவில்லை. இந்த தண்ணீரை இவர்கள் குடிக்காததினாலேயே தங்கள் ஜீவனை இழந்தனர். பெர்கமு காலப் பகுதிக்குரிய தூதனுடைய சத்தத்தை அவர்கள் கேட்கக் கூடாதபடி அவர்களை போலிச் சபை நம்ப வைத்தது.

ஏரியஸின் கொள்கைகளுக்கு எதிராக போலிச் சபையின் தூண்டுதலால் ஏற்பட்ட கறைகளினால் அவருடைய சத்தியங்களை (தண்ணீரைப் பருக) பின்பற்ற வேண்டிய சாத்தியக்கூறு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. பெர்கமு சபை காலப்பகுதியில், சத்தியத்திற்கு விரோதமான அம்சங்கள் பெரு வளர்ச்சி பெற்று, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் நிலையை அடைந்தது. ரோமச்சபை அரசாங்க அதிகாரங்களுடன் வேசித்தனம் பண்ணி யாரும் தகர்க்க முடியாத வலிமை படைத்த கோட்டையாக மாறியது. ஆகவே தான், "பெர்கமு" என்றால் " பூமிக்குரிய உயர்ச்சி" (எழுச்சி) என்று அர்த்தம்.

**நான்காம் எக்காளம்**
**வெளி 8 : 12, 13.**

**வெளி 8 : 12 .**
**நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது; அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது. பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று ; இரவிலும் அப்படியேயாயிற்று .**

**நான்காம் தூதன் : பீட்டர் வால்டோ.**

இவருடைய சத்தம் சற்று பெரிதாய் இருந்தது. நான்காம் எக்காளத்தின் விவரிப்புகள் அவருடைய போதனைகளின் எதிர்விளைவுகளை உணர்த்துகிறது. சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கும் சேதப்பட்டது.

**சூரியன்** : புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ யுக போதனைகளைக் குறிக்கிறது.

**சந்திரன்** : யூத நியாய பிரமாணத்தையும், பழைய ஏற்பாட்டு எழுத்துக்களாகிய தீர்க்கதரிசனங்களைக் குறிக்கிறது.

**நட்சத்திரங்கள்** : அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது. இன்னும் குறிப்பிட்டு சொன்னால், திருச்சபை அமைப்பைப் பற்றிய அப்போஸ்தலரின் போதகங்களைக் குறிக்கிறது.

" மூன்றிலொருபங்கு சேதப்பட்டது " என படிக்கிறோம். **மூன்று பங்குகள்** எதை எதை குறிக்கின்றது என்று பார்க்கலாம் :

கி.பி. 1054 முதல் இரண்டு " மரபு வழி சபைகள் " (orthodox churches) செயல்படுகின்றன.

1. ரோமன் கத்தோலிக்க சபை.
2. கிழக்கு ஆர்த்தடாக்ஸ் சபை.

இவற்றையல்லாமல், குறிப்பிடத்தகுந்த " மூன்றாவது பிரிவு " **வால்டோ மற்றும் அவரைச் சார்ந்தவர்களே ! இந்த மூன்றாவது பிரிவே சேதப்பட்ட பிரிவு ஆகும்.** பீட்டர் வால்டோ அவர்களால் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பைபிளை எங்கும் கிடைக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளை, யேசபேல் (ரோமச் சபை) பொறுத்துக் கொள்ள இயலாத நிலையில், வால்டோவின் செல்வாக்கை சேதப்படுத்தியது.

**அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது :**
சேதப்படுத்துவதின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. வால்டோவினால் அளிக்கப்பட்ட புதிய சத்தியத்தின் பிரகாசம் இருளாக தோற்றமளிக்க போலிச் சபை விரும்பியது.

**பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற் போயிற்று; இரவிலும் அப்படியேயாயிற்று :**
" பகல் " என்பது ராஜ்யத்தைப் பற்றிய சத்தியங்களை குறிக்கிறது. (1 தெச 5 : 1 - 8).

"இரவு" என்பது பாவ அந்தகாரம், தீமை அனுமதிக்கப்படுதல் போன்ற இந்த யுகத்திற்கு சம்பந்தப்பட்ட அசத்தியங்களைக் குறிப்பதாய் உள்ளது.

இப்பூமியில் தேவ ராஜ்யமாக ரோமன் கத்தோலிக்க சபை திகழ்கிறது என ரோமச் சபை பறைசாற்றுகிறது. அச்சபையின் அளவுகோலில் இது பகலாகும். இது இருளின் ஆழங்களைக் குறிக்கிறதென்று பீட்டர் வால்டோ நன்கு அறிவார். ஆகவே, பீட்டர் வால்டோவின் சத்தியங்கள் ரோமச் சபையால் தடை பண்ணப்பட்டது.

ராஜ்யத்தைப் பற்றிய பீட்டர் வால்டோவின் சத்தியங்களும் (பகல் நேர பிரகாசம்), இவ்வுலக தீமைகளைப் பற்றிய அவருடைய போதகங்களும் (இரவு நேர பிரகாசம்) தடை பண்ணப்படுவது ரோமச் சபைக்கு அவசியமாகிறது.

பீட்டர் வால்டோவின் இந்த சத்தியங்கள் "மூன்றிலொருபங்காக" அடையாள பாஷையில் குறிக்கப்படுகின்றன.

**வெளி 8 : 13.**
**பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து வரக் கண்டேன் : அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு , ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்து வரும்) என்று சொல்லக்கேட்டேன்.**

இந்த வசனம் இறுதியாக வரப்போகிற மூன்று எக்காளங்களை (5, 6, 7ம் எக்காளங்களை) இணைக்கும் பாலமாக இருக்கிறது.

**கழுகு :**
" கழுகு " என்பது ஞானத்தைக் குறிக்கும். இந்த ஞானத்தை உள்ளடக்கிய அம்சமாக வேதாகமம் திகழ்கிறது.

வால்டோ, கூண்டில் அடைபட்டிருந்த கழுகை விடுவித்து, வானில் பறக்கவிட்டார். பிரெஞ்சு மொழியில் பைபிளை மொழிபெயர்த்து ஞானம் எங்கும் பரவ, வால்டோ கழுகை விடுதலையாக்கி உயர பறக்க விட்டார். இப்பொழுது கழுகு வானத்தின் மத்தியில் (மதச் சார்பு உலகத்தில் தங்கு தடையின்றி விவிலியம் கிடைக்கிறது) பறக்கிறது.

**ஐயோ, ஐயோ, ஐயோ :**

பூமியில் வாசம் பண்ணுகிறவர்களுக்கு (அமைப்புகளுக்கு) ஏற்படப் போகும் உபத்திரவங்களை வேதாகமம் பிரகடனப்படுத்துகிறது. சத்தியத்தை மறைக்க விழைபவர்களுக்கு இது ஒரு தொடர்ச்சியான அச்சுறுத்தலாக (வேதாகமம் சுதந்தரமாக பரவி வரும் சூழ்நிலையில்) இருக்கிறது.

5, 6 மற்றும் 7ம் எக்காளங்கள் யேசபேலுக்கும் அவளுடைய வழியைப் பின்பற்றுபவர்களுக்கும் பெரிதான உபத்திரவங்களுக்கு வழி வகுக்கும்.

## 9 ம் அதிகாரம்

### 5, 6ம் எக்காளங்கள் ஊதப்படுதல்.

**ஐந்தாம் எக்காளம்**

ஜான் விக்ளிஃப் மற்றும் அவரது ஆதரவாளர்களினால் கொண்டுவரப்பட்ட சத்தியங்கள், போப்பு மார்க்கத்தின் போதனைகள் நிறைந்த உலகத்தில் எவ்விதம் குழப்ப நிலையை உண்டு பண்ணியது என்பதை ஐந்தாம் எக்காளம் விவரிக்கிறது. போப்பு மார்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக பலர் **விரும்பியும்**, அந்த சுதந்திரம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. மார்டின் லூத்தர் காலம் வரையிலும் இந்த வகுப்பினர் காத்திருக்க வேண்டியிருந்தது.

**வெளி 9 : 1.**

**ஐந்தான் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது .**

**ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான் :**

பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுமன்றி (ஒரு பகுதியை மொழி பெயர்க்க மற்றவர்களிடம் ஒப்படைத்தார்), பல நூல்களை எழுதினார். அவருடைய பெரும்பாலான எழுத்துக்கள் நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ கிறிஸ்துவின் மீட்பின் பலியை வலியுறுத்தியது.

**அப்பொழுது வானத்திலிருந்து பூமியின் மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன் :**

மதச் சார்புள்ள உலகில் (வானத்தில்) ஜான் விக்ளிஃப் ஒரு பிரகாசமுள்ள நட்சத்திரமாக திகழ்ந்தார். அவர் இறையியலில் டாக்டர் பட்டம் பெற்றவர். அவருடைய வார்த்தைகளையும், செயல்களையும் கண்டு கடுங்கோபம் கொண்ட போப்பு மார்க்கம் (மத உலகை தம் கட்டுப்பாட்டுக்குள் தக்க வைத்திருந்த ரோமச் சபை) அவரை ஆக்ஸ்போர்டு பல்கலை கழகத்திலிருந்து நீக்கியது. அவரை "**வேத புரட்டன்**" என குற்றவாளியாக்க மேற்கொள்ளப்பட்ட இரு முயற்சிகளிலும் ரோமசபை தோல்வியையே சந்தித்தது. பொது மக்களின் அளவற்ற ஆதரவினாலும், பிரிட்டிஷ் ராஜ வம்சத்தினரின் பாதுகாப்பினாலும் ஜான் விக்ளிப் செல்வாக்கு கொண்டிருந்தார்.

நட்சத்திரங்கள், ஏழு சபைகளின் தூதர்களைக் குறிக்கின்றன. இந்த நட்சத்திரமாகிய ஜான் விக்ளிப், போப்பு மார்க்கத்தின் மத உலகத்திலிருந்து பூமிக்கு தள்ளுண்டு போனாலும், மக்கள் (பூமி) அவரை ஏற்றுக் கொண்டனர். வெளி 8 : 10ல் இதே அடையாள பாஷையாகிய நட்சத்திரம், ஏரியஸ் தூதருக்கும் குறிப்பிடப்பட்டதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது :**

" பாதாளக்குழி " என்பது "வலிமை இழந்த நிலைமையை" காண்பிக்கிறது. **பாதாளக்குழி** என்ற வார்த்தை வேதத்தில் பல இடங்களில் வேறு வேறுவிதமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ரோமர் 10 : 7ம் வசனம், இயேசு இந்த நிலையிலிருந்து தான் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கின்றது. லூக்கா 8 : 31ம் வசனம், பிசாசுகளின் வலிமை இழந்த நிலையைக் காட்டுகின்றது.

வெளி 11 : 7; மற்றும் வெளி 17 : 8ம் வசனங்களில், "பாதாளம்" என்ற வார்த்தை **வலிமை இழந்த** நிலையைக் காட்டும் அடையாளமாகக் குறிக்கப்படுகின்றன. சாத்தானும் ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் இதே வலிமை இழந்த நிலையில் தான் இருக்கப் போவதாக வெளி 20 : 3ல் படிக்கிறோம்.

வலுவிழந்த நிலையில் இருக்கும் ஒன்றை விடுதலை பண்ணும் அதிகாரம் ஜான் விக்ளிப் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. தேவ ராஜ்யத்தைப் பற்றிய சத்தியங்கள் நீண்ட காலமாக வலுவிழந்த நிலையில் மறக்கப்பட்டிருந்த விஷயத்திற்கு விடுதலை கொடுக்கும் அதிகாரம் விக்ளிப் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

**வெளி 9 : 2 .**

**அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும், ஆகாயமும் அந்தகாரப்பட்டது .**

**அவன் பாதாளக்குழியைத் திறந்தான் :**

ஜான்விக்ளிப் தன்னுடைய எழுத்துக்களினாலும், பிரசங்கத்தினாலும், நெடுங்காலமாக இழந்திருந்த சத்தியங்களை மக்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ரோம குருமார் அல்லாத மற்றவருக்கும் பைபிள் கிடைக்கப் பெற்று, அதன் மூலம் பாதாளத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த / தடை பண்ணப்பட்டிருந்தவற்றை அணுகும் வாய்ப்பினை எல்லோருக்கும் அளித்தார்.

**அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று :**

" புகை " பாதாளக்குழியில் காவலில் வைக்கப்படவில்லை. பாதாளக்குழியைத் திறந்து, அதிலுள்ளவற்றை அணுகும்போது, அதன் விளைவு தான் புகையாக, குழியை விட்டு எழும்பியது.

" புகை " என்பது 'தெளிவாகப் புலப்படாத மங்கலான' நிலையைக் காட்டுகிறது. மேலும், தீர்ப்பு (அக்கினி) நிகழ்ந்ததற்கான சாட்சியாகவும் புகை அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

பாதாளகுழியிலிருந்து 'புகை' (தெளிவற்ற நிலை) கிளம்புவது, வெளிப்படும் சத்தியங்கள் காரணமாக போப்பு மார்க்கத்தின் கொள்கைகள் குறித்து விளைந்த குழப்பமான நிலைக்கு அடையாளமாக, இந்த தரிசனக் காட்சி காட்டப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த புகை வேறு விதமாகவும் இருந்தது ; அதாவது ,

**பெருஞ்சூளையின் புகையைப்போல :**

"சூளை" (உலைக்களம்) என்பது 'புடமிடுதல்' என்று பொருள்படும்; உலோகங்களை பரீட்சித்து, சுத்திகரிப்பு செய்வற்கான இடம் அது. ஆகவே, குழியிலிருந்து வெளிப்படும் புகை (மங்கலான குழப்ப நிலை), பெருஞ்சூளையின் புகைக்கு ஒப்பிடப்படுகிறது. அதாவது, வெளிக் கொணரப்பட்ட சத்தியங்களினால், போப்பு மார்க்கத்தின் கொள்கைகளும், நடைமுறைகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டு, அதன் **தூய்மையை** நிதானித்து அனுமானிக்கும் நிலைக்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. ஆனால் நடந்தது என்ன ? போப்பு மார்க்கத்தின் பொய்களையும், குருட்டு மரபுகளையும் சத்தியத்தினால் அளந்து பார்த்ததின் விளைவு 'குழப்பமும், தெளிவற்ற நிலையும்' தான் !

**அந்தக் குழியின் புகையினால் சூரியனும், ஆகாயமும் அந்தகாரப்பட்டது :**

வெளி 8 : 13ல் குறிப்பிட்டுள்ள முதல் " ஐயோ " ஒரு வாதை தான் ! யாத் 10 : 23ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; எகிப்தியர்கள் (போப்பு மார்க்கத்தார்) இருளில் இருந்தனர். ஆனால், இஸ்ரவேலருக்கு வெளிச்சம் இருந்தது. எகிப்தில் நடந்த இந்த இருட்டான நிலை வெளி 9 : 4க்கு ஒத்திருக்கிறது. பெருஞ்சூளையின் புகையினால் ஏற்பட்ட தெளிவற்ற விஷயங்களில் பாதிக்கப்பட்டு துன்புறுவோர், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையை **தரிக்காதவர்களே** ! போப்பு மார்க்கத்தின் தப்பான கொள்கைகளிலிருந்து மாறாத் தன்மை கொண்டவர்கள், சத்தியத்தை அவர்கள் சந்தித்து நேர் கொள்ளும்போது, அவர்களை இருள் அதிகமாக சூழ்ந்து கொள்ளுகிறது ! அதாவது, வேதப் புரட்டர்களின் சுவிசேஷமும் (சூரியனும்), அவர்களின் ஆவிக்குரிய நிலையும் (ஆகாயமும்), குழியின் புகையினால் மேலும் அந்தகாரப்படுகிறது.

ஆகவே, இந்த வெளி 9 : 2ம் வசனத்தில் குறிப்பிடும் சூரியனும், ஆகாயமும், நெடுங்காலமாய் மறக்கப்பட்டிருந்த சத்தியங்கள் இப்பொழுது பரவ ஆரம்பித்ததினால் எழுந்த குழப்ப நிலையே, வேதப் புரட்டர்களின் சுவிசேஷங்களையும் (சூரியனையும்), அவர்களின் ஆவிக்குரிய அம்சங்களையும் (ஆகாயத்தையும்) அந்தகாரத்தில் தள்ளியது.

**வெளி 9 : 3.**

**அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது .**

இங்கேயும் நாம், எகிப்தியருக்கு ஏற்பட்ட வாதைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். யாத் 10 : 12 - 15; வெட்டுக்கிளிகள் இலைகளை (சமயக் குருட்டு நம்பிக்கைகளை) தின்னும். ஆனால், வெளி 9 : 4ல் இந்த வெட்டுக்கிளிகளின் செயல் ஒரு வரையறைக்கு உட்படுத்தப்படுகிறது. அவைகள் எல்லா இலைகளையும் சாப்பிட **இயலாது.** தேவனுடைய முத்திரையை தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்தும்படி வெட்டுக்கிளிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இந்த வெட்டுக்கிளிகள் எல்லாம் புகையிலிருந்து கிளம்பி வந்ததாக 3ம் வசனம் தெரிவிக்கிறது. இந்த வெட்டுக்கிளிகள் யார் ? ஜான் விக்ளிப் அவர்களைப் பின்பற்றியவர்களே! இவர்கள் “லல்லார்டுகள்” (LOLLARDS) என அழைக்கப்பட்டனர். ஜான் விக்ளிப் அவர்களின் செயலினால் உருவான குழப்ப நிலையினால் வெளிப்பட்ட புதிய சத்தியங்களை பிரகடனம் பண்ண பெரும்படையாக கிளம்ப இந்த பிரசங்கிமார்களுக்கு (லல்லார்டுகளுக்கு) கதவு திறக்கப்பட்டது. இந்த பிரசங்கிமார்களின் பெருங்கூட்டம் முத்திரைகளை தரித்திராதவர்களின் மீது, அதாவது, ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஸ்திரப்பட்ட மத அமைப்புகளைச் சார்ந்தவர்களின் மீது படையெடுத்து, அவர்களை தேள்களைப் போலக் கொட்டின.

**அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது :**

பூமியிலுள்ள தேள்கள் (லூக்கா 10 : 19) சத்துருவாகிய சாத்தானின் வல்லமையைக் குறிக்கிறது. சாத்தானுக்கு எந்தவிதமான வல்லமை உண்டு ? அவைகளுக்கு துன்புறுத்த, சேதப்படுத்த வல்லமை உண்டு; ஆனால் அழிப்பதற்கு அல்ல ! (யோபு 2 : 6). **அதை போன்ற வல்லமை** தான் ஜான் விக்ளிப் அவர்களைப் பின்பற்றியவர்களுக்கு (லல்லார்டுகளுக்கு) கொடுக்கப்பட்டது. இவர்கள் தேவனுடைய முத்திரையை தரித்திராத போலி சபையைச் சார்ந்த மனுஷரை தளராமல் கொட்டினார்கள். இருப்பினும், பெரிய சீர்திருத்தத்தை (Reformation) இவர்களால் கொண்டு வர முடியவில்லை. இந்த நிலை மாற, ஆறாம் எக்காளம் ஊதப்படும் வரைக்கும் காத்திருக்க வேண்டியிருந்தது. (வெளி 9 : 18 ஐ ஒத்துப் பார்க்கவும்). அப்பொழுது தான், சத்தியங்கள் அந்த மனுஷரை கொல்ல (மன மாற்றம் பெற) இயலும். இந்தக் கட்டுப்பாடு தான் வசனம் 5 ல் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**வெளி 9 : 4.**

**பூமியின் புல்லையும், பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது .**

பரிசுத்தவான்களுக்கு (வெட்டுக்கிளிகளுக்கு) தங்கள் கொடுக்குகளை, வேத புரட்டர்களைத் தவிர வேறு எவர் மீதும் பிரயோகப்படுத்தாதபடி கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

**பூமியின் புல் :**

சாதாரண மக்களுக்கு இருக்கும் விசுவாசம் உண்மையாய் இருந்தாலும், அது வரையறுக்கப்பட்டதாயிருந்தது. இங்கிலாந்தில் இருந்த பொதுமக்களில் பலர் ஜான் விக்ளிப்பின் ஆதரவாளர்களாயிருந்தனர்.

**பசுமையான பூண்டு :**

பசுமை : ஜீவனைக் குறிக்கிறது. ஜீவனுள்ளவர்கள் அதாவது, நீதிமானாக்கப்பட்டவர்கள் சேதத்திற்கு ஆளாகாதவர்கள்.

**மரம் :**

விசுவாசத்தில் தூண்களாய் இருப்பவர்கள்; ஆவிக்குரிய வீரியம் பெற்றவர்கள்; அதாவது, சத்தியத்தை ஏற்றுக்கொண்ட இவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் தேளின் வல்லமையைப் பிரயோகிக்க முயற்சிக்க கூடாது.

மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவினரிடம் வெட்டுக்கிளிகள் சேதம் விளைவிக்க இயலாது. ஆனால், தங்கள் நெற்றிகளில் முத்திரையை தரித்திராத வேதப் புரட்டர்களிடம் மாத்திரம் தான், சத்தியங்களை ஆதாரமாகக் கொண்டு தாக்குதல் செலுத்த முடியும். இந்த மனுஷர்கள் (கிறிஸ்தவர்கள்), தங்களை கிறிஸ்தவர்கள் என உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால், இவர்கள் "சாத்தானுடைய கூட்டத்தார்". இவர்களுக்கு, சுவிசேஷம் (சூரியன்), மற்றும் ஆவிக்குரிய உணர்வு (ஆகாயம்) மறைக்கப்பட்டு தெளிவின்றி மங்கலாக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தாம் வஞ்சகர்கள் - **பாவ மனுஷர்கள்.**

**வெளி 9 : 5.**

**மேலும் அவர்களை கொலை செய்யும்படிக்குஅவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது : அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும் .**

இங்கு சர்தை சபையின் காலப் பகுதி 150 வருடங்களைக் கொண்டதாக (30 x 5 = 150) என்று அறிகிறோம். இந்த காலக் கட்டத்தில் யாரையும் கொல்லுவதற்கு (புரோட்டஸ்டண்டு அமைப்புக்கு மாறுவதற்கு) அனுமதிக்கப்படவில்லை. வெளி 9 : 18ல் இது ஆறாம் எக்காளத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்பிரிவினரை வேதனைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அவைகள் செய்யும் வேதனை, மனுஷரைக் கொட்டும் போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும். 1இராஜா 12 : 14ல் சவுக்கினால் அடிபடும் வேதனையைவிட, தேள் கடிப்பதினால் உண்டாகும் வேதனை மிக அதிகமாயிருக்கும் என படிக்கிறோம். பாம்புகளைப் போலவே, தேளும் தன் இரண்டு துவாரங்களின் வழியாக விஷத்தைக் கக்கும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு வசனங்களின் ஆதாரங்கொண்டு, பரிசுத்தவான்களின் சத்தியங்கள் செயற்படுவதால், அதை கேட்போருக்கு ஏற்படும் மன வேதனை பெரிதாயிருக்கும். ஐரோப்பாவில் செல்வாக்குடன் வாழ்ந்த தலைவர்களும், மக்களும், போப்பு மார்க்கம் தங்ளை எப்படி நெருக்கி, அடக்கி ஆளுகிறது என்பதை அறிவர். அவர்களுடைய மறுமலர்ச்சி அரும்பு விட ஆரம்பித்தது. மக்கள் காரண காரியங்களை பகுத்தறியும் நிலையை அடைந்தனர். அவர்கள் போப்பு மார்க்கத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற விரும்பினர்.

**வெளி 9 : 6.**

**அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாக வேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.**

**அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள் :**

'மனுஷர்கள்' (பேர்கிறிஸ்தவர்கள்) சாவை (போப்பு மார்க்கத்திலிருந்து விலக) தேடுவார்கள். அறிவுக்குப் பொருந்தாத போப்பு மார்க்கத்திற்கு ஊழியஞ் செய்வதில் வெறுப்படைந்து, ரோமன் கத்தோலிக்கர்களாக வாழ்ந்த நிலையினை உதறித் தள்ள விரும்பினர். ஆனால் சீர்திருத்தம் இன்னும் காலடி எடுத்து வைக்கவில்லை; போப்பு மார்க்கத்தை எதிர்த்து, அவர்களுக்கு விடுதலை பெற்றுத்தர தேள் போன்ற வெட்டுக்கிளிகளால் இயலவில்லை. அவர்கள் இன்னும் ரோமச்சபைக்கு அடிமைகளாயிருந்தனர்; அவர்கள் போப்புவுடன் தங்கள் உறவை இன்னும் துண்டித்துக் கொள்ள முடியவில்லை.

**சாக வேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம் :**

இவர்கள் எதிர்கொள்ளும் வேதனைகளின் முக்கியத்துவத்தை இந்த வசனம் தெரிவிக்கின்றது; பழைய சடங்காச்சாரங்களிலிருந்து விலகிப் போக விரும்பிய மனுஷரிடம் மறுமலர்ச்சி மனப்பாண்மை மேலோங்கியிருந்தது; ஆனாலும் போப்புவின் பிடியிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள முடியவில்லை; போப்புவின் அதிகாரத்திற்கு சவால் விடும் வகையில் தர்க்கங்கள் நிகழ்ந்தாலும், போப்பு மார்க்கத்திலிருந்து பிரிந்து செல்லத்தக்க சக்தி இல்லை.

எக்காளத்தினால் ஏற்பட்ட விளைவுகளை 9 : 1 - 6ம் வசனங்களில் பார்த்தோம்; 7ம் வசனம் முதல் 11ம் வசனம் வரை வெட்டுக்கிளிகளைப் பற்றிய கூடுதல் விவரங்கள் தரப்பட்டுள்ளன. அக்காலத்திய பரிசுத்தவான்கள் பற்றியும், அவர்களுடைய ஊழிய செயல்பாடுகள் குறித்தும் பின்வரும் வசனங்கள் உணர்த்துகின்றன.

**வெளி 9 : 7.**

**அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; அவைகளுடைய தலைகளின் மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகள் இருந்தன; அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருந்தன.**

**அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் :**

இது வெளி 9 : 17ல் கூறப்படுவது போலவே உள்ளது; வெட்டுக்கிளிகளால் அடையாளப்படுத்தப்படும் பரிசுத்தவான்களும், அவர்களுடைய கொள்கைகளும், சர்தை சபை காலப்பகுதியின் ஊழியங்களும் எப்படி இருந்தன என்பதை நாம் பார்க்கிறோம்.

**யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது :**

விக்ளிஃப்பை பின்பற்றியவர்கள், வால்டோவை பின்பற்றியவர்களைப் போல மறைமுகமாக செயல்படாமல், நேரடியாகப் போராடத் தயாராயிருந்தார்கள்; இவர்கள் சத்தியங்களையும் கொள்கைகளையும் மலைக்குகைகளிலோ அல்லது வேறு எங்கும் ஒளித்து வைக்காமல், தங்களை வெளிப்படையாக காண்பித்து சுதந்திரமாக செயல்பட்டார்கள். இந்த வெட்டுக்கிளிகள் போப்பு மார்க்கத்திற்கு சவாலாக இருந்தனர்.

**அவைகளுடைய தலைகளின் மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகள் இருந்தன :**

24 மூப்பர்கள் (வெளி 4 : 4) எவ்விதமாக தெய்வீக அதிகாரம் பெற்றவர்களாய் இருக்கிறார்களோ, அவ்விதமே விக்ளிஃப்பை பின்பற்றிய பரிசுத்தவான்களும் தெய்வீக அதிகாரம் பெற்றவர்களாக (சிரசுகளில் பொன் கிரீடம் சூடப்பட்டு) இருக்கிறார்கள். ஏனெனில், இவர்கள் வேதாகம சத்தியங்களையே தங்கள் ஆதாரமாகக் கொண்டிருந்தனர்.

**அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருந்தன :**

வெளி 4 : 7ல் குறிப்பிட்டபடி, மனுஷ முகம் தேவ அன்பைக் குறிக்கிறது; அப்படியே விக்ளிஃப்பின் போதகங்களும் இருந்தன ! போப்பு மார்க்கத்தில் பரவிய கட்டுக்கதைகளுக்கும் பய உணர்வுகளுக்கும் எதிர்மாறாக, விக்ளிஃப்பை பின்பற்றியவர்கள் தேவ அன்பை வெளிப்படுத்தினார்கள். மூட நம்பிக்கைகளும், குருட்டு பக்தியும், பொருளாசையும் கொண்ட குருக்கள் போல இல்லாமல், சத்திய ஊழியத்திற்கு ஏழை பிரசங்கிமார்களை விக்ளிஃப் அவர்கள் நாடெங்கும் அனுப்பி உபதேசித்தார்.

**வெளி 9 : 8.**

**அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல் போலிருந்தது; அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள் போலிருந்தன.**

**அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல் போலிருந்தது :**

'கூந்தல்' என்பது 'ஆவியின் வலிமையை' குறிக்கிறது; (சாம்சனிடம் இருந்தது போல).

' ஸ்திரீ ' என்பது 'சபை'யை குறிக்கும்; இது உண்மை சபை ஆகும்.

வெளியாக்கப்பட்ட சத்தியங்களை ஏற்றுக்கொள்வதினால் வரும் ஆவியின் வலிமையை கூந்தல் உணர்த்துகிறது; இவ்வுலகத்துக்குரிய குருட்டு ஞானமும், சதி ஆலோசனைகளைக் கொண்ட போலிச் சபையினிடம் (பாவ மனுஷர்களிடம்) **ஆவிக்குரிய வலிமை** கிடையாது. அழகான கூந்தலுடைய ஸ்திரீகளைக் கண்டு ஏமாற வேண்டியதில்லை !

**அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள் போலிருந்தன :**

விக்ளிஃப் கூறிய வலுவான சத்தியங்கள் தாம் பற்கள் ! இந்த பற்கள் சிறிய பற்கள் அல்ல; யூதா கோத்திரத்து சிங்கத்தின் வலிமை கொண்டு, பொய்யான போதகங்களை சின்னாபின்னப்படுத்தும் விமர்சனங்களை அளிக்க வல்லவை இந்த பற்கள் !

**வெளி 9 : 9.**

**இருப்பு கவசங்களைப் போல் மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன; அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன .**

**இருப்பு கவசங்களைப் போல் மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன :**

'இரும்பு' என்பது 'வல்லமை'யைக் குறிக்கும்; (தானி 2 : 40).

'மார்க்கவசம்' என்பது 'தற்காப்பு'க்கான ஆயுதம் ஆகும்;

இந்த மார்க்கவசங்கள் 'இரும்பு' அல்ல. **இரும்பை போன்று** இருந்தன; இந்த மார்க்கவசங்கள் இரும்பின் வலிமை கொண்டிருந்தது; ஆனால், அவைகள் நீதியினால் (எபேசி 6 : 14) ஆனவை; அவைகள் 'விசுவாசம்' 'அன்பு' என்ற சுபாவங்களைக் அடித்தளமாகக் கொண்டவை. ஆகவே தான், இந்த மார்க்கவசங்களை, வேதாகமத்தை துஷ்பிரயோகம் செய்து பொய் புரட்டுகளினாலோ அல்லது இவ்வுலகத்திற்குரிய ஞானத்தினாலோ தாக்கி ஜெயங்கொள்ள முடியாது.

**அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் :**

கழுகின் சிறகுகள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளைக் குறிக்கின்றன. (வெளி 12 : 4). இந்த வேத எழுத்துக்களின் தொனியை பின்னணியாகக் கொண்டு வெட்டுக்கிளிகள் உருவாகின என்று உருவகமாய் கூறலாம்; இதுவே சத்தியத்தின் ஒலி !

**இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன :**

'இரதங்கள்' என்பது 'அமைப்புக்களை' குறிக்கின்றன; சர்தை சபை காலப்பகுதியில், விக்ளிஃப்பை பின்பற்றியவர்கள் ஒரு அமைப்பாக செயல்பட்டு சாட்சி கொடுத்து வந்தனர்; முதலில் அவர்கள் 'ஏழை குருக்களாக' இங்கிலாந்தின் கிராமப்புறங்களில் பிரயாணம் செய்து மக்களுக்கு போதித்து வந்தனர். பிறகு, லல்லார்டுகள் (LOLLARDS), ஹஸ்ஸைட்டுகள் (HUSSITES), மரோவியர்கள் (MAROVIANS) என்ற அமைப்புகளாக தங்கள் ஊழியங்களில் தொகுப்பு தொகுப்புகளாகச் செயல்பட்டனர். இவ்வாறாக, வேதாகமத்தின் (பழைய, புதிய ஏற்பாடுகளின்) ஒலி, இந்த பரிசுத்தவான்களின் ஒழுங்கு முறையிலான அமைப்புகள் வாயிலாக உலகத்துக்கு கேட்கத் தொடங்கியது. இவைகள் பூமிக்குரிய அமைப்புகள் அல்ல ! இவைகள் நமது கர்த்தராகிய கிறிஸ்துவின் சத்தியங்களால் சூழப்பட்ட அமைப்புகள் ஆகும்.

**யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் :**

இந்த சத்தியங்களாகிய கொள்கைகள் (குதிரைகள்) இவற்றின் துல்லியமான தெளிவு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட விக்ளிஃப்பை பின்பற்றியவர்கள், இந்த சத்தியங்களின் தூண்டுதலினால் அறப்போர் நிகழ்த்தினார்கள். அந்திக்கிறிஸ்துவின் அபத்தமான கோட்பாடுகளை எதிர்த்து யுத்தம் நிகழ்த்தி வந்தனர். பின்னர், இந்த அந்திக்கிறிஸ்து தான் 'மத நீதிமன்ற விசாரணை'யில் (INQUISITION) பரிசுத்தவான்களை பெருமளவில் சேதப் படுத்தினான். லல்லார்டுகள் துன்புறுத்தப்பட்டு பிரசங்கம் பண்ணத் தடை பண்ணப்பட்டனர்; இருப்பினும், விக்ளிஃப்பின் போதனைகள் **சாகவில்லை.** தொடர்ந்து யுத்தம் பண்ண பரிசுத்தவான்களின் அமைப்புகள் அவ்வப்போது செயல்பட்டு வந்தன.

**வெளி 9 : 10.**

**அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாயிருந்தன; அவைகள் ஐந்து மாதமளவும் மனுஷரை சேதப்படுத்துவதற்கு அதிகாரம் உடையவைகளாயிருந்தன.**

தேளின் வாலில் தான் 'கொடுக்கு' இருக்கும்; ('வால்' பற்றி 9 : 19ல் பார்க்கவும்). 'வால்' என்பது அமைப்பின் கடைசி பாகத்தைக் குறிக்கும்; லல்லார்டுகளின் ஊழியத்தை மட்டும் சார்ந்திருந்தால், சர்தை சபை தன் காலப்பகுதியான 150 வருஷங்களை எட்டியிருக்க முடியாது; விக்ளிஃப்பின் உத்வேகமும், ஊழியங்களும் சத்தியங்களை ஐரோப்பா முழுமைக்கும் கொண்டு செல்லப்பட்டது; விக்ளிஃப்பின் இயக்கம் பல **வால்களை** கொண்டதாக உருவெடுத்தது; எல்லையோர இயக்கங்கள் பொஹீமியா போன்ற தூர தேசப் பகுதிகள் வரைக்கும் தோன்றின. இந்த இயக்கங்கள் தாம் 'வால்கள்' -- விக்ளிஃப்பின் தூதுகளை தொடர்ச்சியாக 150 வருஷங்கள் ஐரோப்பா முழுமைக்கும் எடுத்துச் சென்றன. இந்த **வால்கள்** (இயக்கங்கள்) மார்டின் லூத்தர் காலம் வரைக்கும் செயல்பட்டு வந்தன. இவர்கள் தாம், சர்தை சபையில் வெண் வஸ்திரம் தரித்து இயேசுவுடன் கூட நடப்பவர்கள்.

**வெளி 9 : 11.**

**அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு; அவன் பாதாளத்தின் தூதன்; எபிரேயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்க பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர் .**

**அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு; அவன் பாதாளத்தின் தூதன் :**

இந்த ராஜன் 'விக்ளிஃப்' ஆவார் ; இவர் தான் 'பாதாளத்தின் தூதன்' என்று அடையாளப்படுத்தப்படுகிறார்; இவர் எப்படி 'ராஜா' என்று அழைக்கப்படுகிறார் ? இந்த வெட்டுக்கிளிகளுக்கு ராஜாவாக பாதாளத்தின் தூதன் (விக்ளிஃப்) குறிக்கப்படுகிறார்; இதன் மையக்கருத்து என்னவென்றால், இவர் தனிப்பட்டவர்களுக்கு ராஜாவாக இல்லாமல், சைன்யங்களுக்கு (இயக்கங்களுக்கு) ராஜாவாக இருக்கிறார். இவருடைய ஆளுமையினாலே தான் இயக்கம் வலுப்பெற்று, யுகம் முழுவதற்கும் அதன் பாதிப்பு விளங்குகிறது.

நீதி 30 : 27ல் "ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிற வெட்டுக்கிளிகள்" என்று பார்க்கிறோம். அதாவது, எந்த ஒரு வெட்டுக்கிளியும் தானே ராஜா இல்லை; மற்றதையும் ராஜாவாக ஏற்றுக்கொள்வதில்லை; ஆனால், அவைகள் கூட்டம் கூட்டமாக சென்று தங்கள் இலக்கை நோக்கிச் செல்கின்றன. 'இலக்கு' என்பது 'உணவு' இதே போன்று தான், விக்ளிஃப்பை பின்பற்றிய கூட்டத்தினர், யாரையும் தங்கள் ராஜாவாக எண்ணியதில்லை. விக்ளிஃப்பின் ஒரே இலக்கு --- சுவிசேஷம் பரவ வேண்டும் என்பதே ! இந்த இலக்கு தான் அவருடைய இயக்கத்தினரின் பிரதான நோக்கம். இவ்வாறாக, இந்த இலக்கை அடிப்படையாகக் கொண்ட இயக்கத்திற்கு இவர் ராஜாவாக உருவகப்படுத்தப்படுகிறார். 'ராஜா' என்ற கிரேக்க மூல வார்த்தை 'அடிப்படை' (BASIS) அல்லது அடித்தளமாக விக்ளீஃப் அவரது இயக்கத்திற்கு இருந்தார் என்று பொருள் படுகிறது.

**எபிரேயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்க பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர் :**

விக்ளிப்பிற்கு ஒரு புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. இந்த வசனத்தின் விசேஷம் யாதெனில், அவருடைய பெயர் **இரண்டு மொழிகளில் -** எபிரேயம் மற்றும் கிரேக்கு மொழிகளில் காணப்படுகிறது. எபிரேயம் மற்றும் கிரேக்கு மொழிகளின் இரண்டு புஸ்தக தொகுப்புகளை (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்) அடித்தளமாகக் கொண்டு, அவைகளை வியாக்கியானம் பண்ணவும், மொழி பெயர்க்கும் பணியினையும் மேற்கொண்டார். அவரது விசுவாசத்திற்கும், ஊழியத்திற்கும் கிடைத்த பரிசாக இந்த "ராஜரீக" அந்தஸ்து ஜான் விக்ளிப்பிற்கு வழங்கப்பட்டது.

**அபெத்தோன்** மற்றும் **அப்பொல்லியோன்** என்ற இரண்டு பெயர்களுக்கும் ஒரே அர்த்தம் "அழிவு" அல்லது "அழிப்பவன்" என்று பொருள்படும். பாதாளக் குழியிலிருந்து இழந்த சத்தியங்கள் வெளி வந்ததைத் தொடர்ந்து, விக்ளிப் சத்தியத்தின் கதவைத் திறந்து, போப்பு மார்க்கத்தின் வேதப் புரட்டுகளை அழிக்கும் வேலையைத் துவக்கி வைத்தார். இந்த பெயர்கள் விரும்பத்தகாதவைகள் போல தோற்றமளித்தாலும், அவைகள் தவறுகளை ஒழிப்பதால் , அப்பெயர்கள் இனிமையாக தென்படுகின்றன.

**வெளி 9 : 12 .**

**முதலாம் ஆபத்து கடந்து போயிற்று. இவைகளுக்குப் பின்பு இன்னும் இரண்டு ஆபத்துகள், இதோ, வருகிறது .**

இந்த ஆபத்து, மெய்யாகவே தன் வேலையை செவ்வனே செய்து முடித்தது. பூமியில் வாசம் பண்ணுகிறவர்கள் அதன் கொடுக்குகளின் கடுமையை உணர்ந்தனர். இப்பொழுது, சீர்திருத்தம் அடுத்த படியை நோக்கிச் செல்ல கதவு திறக்கப்படுகிறது.

## ஆறாம் எக்காளம்

## வெளி 9 : 13 - 21.

**முன்னுரை :**

வெளி 9 : 13 - 21, வெளி 10 மற்றும் 11ம் அதிகாரங்களில், ஆறாம் எக்காளம் பற்றிய விவரங்கள் **காலக்கணக்கின் தன்மையை உள்ளடக்கி** தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. தானியேல் 12ம் அதிகாரத்தின் காலக்கணக்கு சம்பந்தப்பட்ட காரியங்களெல்லாம், இந்த ஆறாம் சபையின் (பிலதெல்பியா) காலத்திலோ அல்லது அதன் **இறுதி காலத்திலோ** நிறைவேறுகின்றன. ஆகவே தான், ஆறாம் எக்காளம் சம்பந்தப்பட்ட தரிசனங்களடங்கிய வெளிப்படுத்தல் அதிகாரங்களில் (9, 10, 11) உள்ள காலக்கணக்குகள் நம் கவனத்தை ஈர்க்கின்றன.

வெளி **9 : 15 ல் மணி, நாள், மாதம், வருடம்** என கால அளவுகள் பற்றி படிக்கிறோம்.

வெளி **10 ம்** அதிகாரத்தில், **காலம் செல்லாது** (CHRONOS) என காலம் நிறைவேறி கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம்;

வெளி **11 ம்** அதிகாரத்தில், கால அளவுகளை, **வசனம் 2 ல்** மாதங்களாகவும், **வசனம் 3 ல்** நாட்களாகவும், **வசனம் 6 ல்** வருடங்களாகவும் மறைமுகமாக குறிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம்.

**வசனம் 9, 11 ல்** "மூன்றரை நாட்கள்" பற்றி படிக்கிறோம். **வசனம் 13 ல்** "நேரம் " (மணி) பற்றி படிக்கிறோம்.

வெளி **10 ம்** அதிகாரத்தில் குறிக்கப்படுகிற **காலம்** நமது கவனத்தை ஈர்க்கிறது. இந்த **காலம்** பற்றி தான், வெளி **11 : 13,** மற்றும் வெளி **9 : 15 ம்** வசனங்கள் விவரமாகத் தெரிவிக்கின்றன.

**வெளி 9 : 13.**

**எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தம் தோன்றி.**

| | |
|---|---|
| ஆறாம் தூதன் | : மார்டின் லூத்தர். (தூது சொன்னவர்) |
| பொற்பீடம் | : சுவிசேஷ யுகத்தில் தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவின் பலி செலுத்தப்பட்டு கொண்டிருக்கும் நிலைமை |
| கொம்புகள் | : வல்லமை |
| சத்தம் | : செய்தி |
| செய்தியை கேட்டவர் | : மாம்சத்தில் இருக்கும் சபை |

மார்டின் லூத்தரால் தூது சொல்லப்பட்டது. கிறிஸ்துவுடன் கூட ஒவ்வொரு அங்கமும் செலுத்தும் பலியின் வலிமை பற்றிய இந்த செய்தியை (தூது) திருச்சபை கேட்கிறது;

மார்டின் லூத்தரின் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" உபதேசம் சாதித்ததும் இது தான் ! கிறிஸ்தவர்கள் இனி ரோமன் கத்தோலிக்க குருத்துவத்திற்கும், அதனுடைய "பூசை பலி" என்கிற மோசடியான சடங்காச்சாரத்திற்கும் அடிமைப்பட்டவர்கள் அல்ல ! பாவ நிவாரண பலியின் பங்காக கிறிஸ்துவுடன் ஒவ்வொருவரும் தங்களை பலியிட்டு, கிறிஸ்துவின் சரீரத்தின் தனிப்பட்ட அங்கங்களாக தேவனுக்கு முன்பாக நிற்கிறார்கள். இந்த தூது தான் வெளி 3 : 7ல் வாசல் திறக்கப்படுவதும், யாராலும் மூடக்கூடாதபடி பிலதெல்பியா சபையில் ஏற்பட்ட மாற்றத்தை குறிப்பாக உணர்த்துகிறது. மார்டின் லூத்தரின் இந்த தூது மூலமாகவே போப்பு மார்க்கத்திலிருந்து பரிசுத்தவான்கள் விடுதலைப் பெற்றனர்.

**வெளி 9 : 14 .**

**எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி : ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக் கேட்டேன்.**

**நான்கு தூதர்கள் :**

ஆறாம் முத்திரையின் போது (வெளி 7 : 1 - 3) நாம் சந்தித்த அதே நான்கு தூதர்களை இங்கு காண்கிறோம். அவர்கள் எதற்கு அடையாளமாகக் காட்டப் பட்டிருக்கிறார்கள் ? "நான்கு" என்பது "உலகளாவிய தன்மையைக்" குறிப்பதாக இருக்கிறது.

வெளி 7 : 1ல் நான்கு தூதர்கள் நான்கு திசைகளில் (ஒழுங்கு முறைமையுடைய சமூக அமைப்புகளில்) நின்றார்கள். அவர்கள் தாங்கள் பிடித்திருந்த காற்றுகளை கட்டவிழ்த்து விடக் கூடாதென இயேசுவினால் கட்டளை பெற்றிருந்தனர். (வெளி 7 : 2, 3). சமுதாயத்தின் நான்கு பிரிவுகளால் நான்கு தூதர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; அதாவது, 1. சமூகம் 2. அரசியல் 3. பொருளாதாரம் 4. மதம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்திலும் இறுதியில் ஒரு பெரும் அராஜகமான குழப்ப நிலைக்கு வழி வகுக்கப்படுவதாய் இருந்தது.

**ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக் கேட்டேன் :**

ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையில் மார்டின் லூத்தரின் காலம் வரைக்கும் (வெளி 9 : 14) கட்டப்பட்டிருந்த நான்கு தூதர்கள், ஆறாம் தூதனாகிய லூத்தரின் தூதுவினால் இப்பொழுது கட்டவிழ்த்து விடப்பட்டார்கள்.

"ஐபிராத்து" என்பது "பாபிலோனுக்கு மக்கள் அளித்த ஆதரவு" என பொருள்படும் வகையில் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

மார்டின் லூத்தர் காலத்தில் இருந்த ஒரே பாபிலோனாகிய ரோமன் கத்தோலிக்க சபை, ஜனங்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருந்தது. சமுதாயத்தின் நான்கு கூறுகளையும் முழுவதுமாக தன் கட்டுப்பாட்டுக்குள் ரோமச் சபை வைத்திருந்ததால், போப்பு மார்க்கத்தின் அங்கீகாரம் இல்லாமல், சமுதாயத்தின் கூறுகள் (நான்கு தூதர்கள்) "செயல்பட முடியாத நிலை" இருந்தது. **சமூக மாற்றங்கள், அரசியல் சுதந்திரங்கள், புதிய பொருளாதார கொள்கைகளின் ஆய்வு, மத சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் எதுவும் நடப்பதற்கு சிறிதும் வாய்ப்பு இல்லாதிருந்தது.**

ரோமச் சபையைப் பின்பற்றிய பேர்க்கிறிஸ்தவர்கள், ரோமச் சபையினால் அனுமதிக்கப்படாத எந்த ஒன்றுக்கும் ஆதரவு அளிக்கப் பயந்தனர். அதாவது, நான்கு தூதர்களும் ஐபிராத்தில் (பாபிலோனில்) செயல்பட முடியாமல் **கட்டப்பட்டிருந்தனர்.** " ஒம்ஸ் பிரதிநிதிகள் சபை " கூட்டம் நடந்ததைத் தொடர்ந்து, போப்பு மார்க்கம் லூத்தரை பகிஷ்கரித்தது. இதை தொடர்ந்து, மார்டின் லூத்தருக்கு ஏற்பட்ட உடனடி அனுபவங்கள், அரசியலைக் குறிக்கும் தூதனுடைய கட்டுகள் அவிழ்த்து விடப்படுவதின் துவக்கத்தை அடையாளமாக காட்டுகிறது. சாக்ஸனி இளவரசர் ஃபிரடெரிக், மார்டின் லூத்தரை தன் கோட்டையில் ஒளித்து வைத்திருந்தார். இந்த பாதுகாப்பு கிடைத்திருக்காவிட்டால், மார்டின் லூத்தர் கண்டிப்பாக கொலை செய்யப்பட்டிருப்பார்.

**வெளி 9 : 15.**

**அப்பொழுது மனுஷரில் மூன்றிலொரு பங்கைக் கொல்லும்படிக்கு ஒரு மணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்து விடப்பட்டார்கள் .**

இந்த வசனத்தின் விளைவு உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கும், ஒரு குறிப்பிட்ட வேலைக்கும் அந்த நான்கு தூதர்கள் ஆயத்தமாக்கப்பட்டிருந்தார்கள். இதற்கு முன்னர், மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லுவதற்காக அவர்கள் கட்டவிழ்க்கப்பட வேண்டும்.

இந்த வசனத்தில் கீழ்கண்ட கால அளவுகளைப் பார்க்கிறோம் :
அந்த மணி (அந்த நேரம்)
ஒரு நாள்
ஒரு மாதம்
ஒரு வருடம்

கிரேக்க மூலப்பிரதியில் ' மணி ' என்ற வார்த்தைக்கு முன் 'வரையறு சுட்டு' (Definite Article) காணப்படுகிறது. அதாவது, " அந்த நேரம் " என்று பொருள்படும்படி உள்ளது.

பிலதெல்பியா சபைக்குரிய காலப் பகுதியை நாம் நோக்கினால், "அந்த நேரம்" என்று குறிப்பிட்டு சொல்லக்கூடியது எதுவாக இருக்கும் ? **" அந்த நேரம் " என்பது பிரெஞ்சு புரட்சியின் இறுதியில் குறிக்கப்பட்ட " முடிவின் காலம் " (TIME OF THE END) தான்,** தனிப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த " நேரம் " ஆக பெரும்பான்மை வேத மாணவர்களால் கணிக்கப்பட்டுள்ளது. (கி.பி. 1799).

ஆகவே, வெளி 9 : 15 ம் வசனம் என்ன தெரிவிக்கிறது ?

ஐபிராத்தின் (பாபிலோனின்) பிடியிலிருந்து நான்கு தூதர்கள் விடுதலையானதால், பிரெஞ்சு புரட்சியின் சம்பவங்களுக்கு பங்களிப்பவர்களாக இருக்கிறார்கள். இந்த தூதர்களின் கட்டவிழ்ப்பினால் ஏற்பட்ட பயங்கரத்தினால், சமூகம், அரசியல், பொருளாதாரம், மற்றும் சமயம் என்ற நான்கு வித சமுதாயக் கூறுகளில் ஏற்பட்ட அபரிமிகு வளர்ச்சியும், அரசியல், சுதந்திர, தத்துவ வெளிப்பாடுகளின் பெருக்கத்தின் விளைவாக பிரெஞ்சு நாட்டில் **புரட்சிப் புயல்** வீசியது. இத்தகைய வெள்ளம் பிரவாகிக்கும் வண்ணம் கருத்துக்கள் பெருகியதை வெளி 12 : 15ல் படிக்கிறோம்.

இதைத் தொடர்ந்து, நான்கு தூதர்களும் ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருடத்திற்கும் அவிழ்த்துவிடப்பட்டார்கள். இதைப் பற்றிய விளக்கத்தை ஆறாம் எக்காள காலப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ள விவரங்களிலும், தானியேலின் தீர்க்கதரிசனத்திலும் காணலாம் :

(1) இது 1260 வது நாளாகும் (வெளி 11 : 3)
(2) இது 42 வது மாதமாகும் (வெளி 11 : 2)
(3) இது 'மூன்றரை' யாவது வருடம் (வெளி 11 : 6; தானி 12 : 7)

இப்படியாக, **அந்த நேரத்தையும்**, "அந்த நாளின் இறுதியையும், அந்த மாதத்தின் இறுதியையும் அந்த வருடத்தின் இறுதியையும்" பற்றி ஆறாம் எக்காள காலப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் கொண்டு, கணிக்க ஏதுவாகிறது.

விசேஷித்த **அந்த நேரத்தை** அடைவதற்கு முன், அவிழ்த்துவிடப்பட்ட நான்கு தூதர்கள் தங்கள் பணியை தொடரும் தருணத்தில் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்படப் போகிறார்கள். மார்டின் லூத்தர் சீர்திருத்தத்தை துவக்கிய சமயத்தில், கிறிஸ்தவ உலகில் மூன்றுவித அடிப்படை பிரிவினர் இருந்தனர் :

1. ராஜ்ஜீய அதிகாரங்கள். 2. ரோமச்சபை 3. புதிய புரோட்டஸ்டண்டு பிரிவுகள்.

இந்த நான்கு தூதர்கள் புரோட்டஸ்டண்டு பிரிவினரைக் கொல்லவில்லை. உண்மையில் அவர்கள் புரோட்டஸ்டண்டுகளை உருவாக்கினர். இந்த நான்கு தூதர்கள் அரசு அதிகாரங்களை கொல்லவில்லை. ஆனால், ரோமன் கத்தோலிக்க சபையின் அங்கங்களாயிருந்து புதிய புரோட்டஸ்டண்டு மார்க்கத்திற்கு மாறியவர்களையே அந்த தூதர்கள் கொன்றனர். அதாவது, மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டனர். அவர்கள் கத்தோலிக்கர்கள் என்ற முறையில் கொல்லப்பட்டார்கள். ஆனால், புரோட்டஸ்டண்டுகளாக மறுமுறை ஜநிப்பிக்கப்பட்டார்கள். இப்படியாக, கிறிஸ்தவ உலகத்தில் ஏற்பட்ட பிளவு, பிரெஞ்சு புரட்சி உருவாக இருந்த காரணங்களில் ஒன்றாகும். இந்த நேரத்திற்கு தான் நான்கு தூதர்களும் முக்கியமாக ஆயத்தமாக்கப்பட்டிருந்தனர்.

**வெளி 9 : 16.**
**குதிரைச் சேனைகளாகிய ராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச் சொல்லக் கேட்டேன்.**

இங்கு திடீரென 20 கோடி எண்ணிக்கையுள்ள குதிரைச் சேனைகளாகிய ராணுவங்களைப் பற்றி வசனம் தெரிவிக்கிறது. சூழ்நிலை பொருத்தப்படி கவனித்தால், இந்த வசனத்திற்கும், முந்தைய 15 ம் வசனத்திற்கும் தொடர்பு இருப்பதை உணரலாம். இந்த “ராணுவங்கள்“ என்பது , பிரத்யட்சமாக, புரோட்டஸ்டண்டுகளாக மாறின மூன்றிலொருபங்கு மனுஷர்களைக் குறிக்கிறது. அவர்கள் புதிய எழுச்சி தரும் சத்தியங்களை தன்னகத்தே கொண்டு முன்னேறும் குதிரை வீரர்களாயிருக்கிறார்கள்.

இந்த வசனத்தில், “யோவான் வகுப்பார்” ராணுவங்களின் தொகையைச் சொல்லக் கேட்டதாகப் படிக்கிறோம்; இந்த எண்ணிக்கை சரியானதென்று நாம் உலக புள்ளி விவர கணக்குகள் மூலம் அறியலாம்.

'லண்டன் மிஷனரி சொசைட்டி' வெளியிட்ட அட்டவணை, லவோதிக்கேயா காலப்பகுதியின் துவக்கத்தில், மொத்தம் 11.6 கோடி புரோட்டஸ்டண்டுகள் உலகத்தில் இருந்ததாக தெரிவிக்கிறது. இந்த எண்ணிக்கையை லூத்தர் காலத்திலிருந்து கூட்டினால், பிலதெல்பியா காலப்பகுதியில் 20 கோடி பேர் இருந்ததாக கணக்கிடுவது பொருத்தமான மதிப்பீடு ஆகும். ஆனால், ரோமன் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை இதை விட அதிகமானது.

**வெளி 9 : 17.**
**குதிரைகளையும், அதின்மேல் ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்தில் கண்டவிதமாவது : அவர்கள் அக்கினி நிறமும், நீல நிறமும் கந்தக நிறமுமான மார்க்கவசங்களை உடையவர்களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப் போலிருந்தன. அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன.**

இந்த வசனமும் அடுத்த இரண்டு வசனங்களும் பிலதெல்பியா காலப்பகுதியில் புரோட்டஸ்டண்டு இயக்கத்தின் வலிமையை விவரிக்கின்றன. குதிரையின் மேல் ஏறியிருந்தவர்களுக்கு தற்காப்பு ஆயுதமாக மார்க்கவசத்தை அணிந்திருந்தார்கள். இந்த திருந்திய விசுவாசக் கூட்டத்திற்கு விவிலிய சத்தியங்கள் தான் தற்காப்பு ஆயுதமாக உள்ளதைக் காண்பிக்கிறது. (எபேசி 6 : 16) ஆனால், குதிரைகள் **தாக்குதல் உபகரணங்களை** கொண்டிருந்தன. குதிரைகளின் தலைகள் சிங்கங்களின் தலைகளைப் போலவும், வால்கள், தலைகளுள்ள பாம்புகளைப் போலவும் இருந்தன. சிங்கத்தின் தலையும், அதன் வாயிலிருந்து புறப்படுபவைகளும், சீர்திருத்த இயக்கத்தின் துவக்க காலத்தில் இருந்த வலிமையை உணர்த்துவதாக உள்ளன. இந்த ஆறாம் எக்காளத்தின் தூதுகள் (செய்திகள்) பெரும் வலிமை பெற்று விளங்கியதால் அவைகள் எதிரிகளை பட்சித்தன. அதாவது, மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டனர். (அதாவது மத மாற்றமடைந்தனர்). புரோட்டஸ்டண்டுகளின் சீர்திருத்த இயக்கம் நாளடைவில் வலுவிழந்தது. துவக்க காலத்தில் நிலவிய உத்வேகம், பிலதெல்பியா சபையின் காலப்பகுதியின் இறுதியில், ரோமன் கத்தோலிக்கர்களிடமிருந்து மன மாற்றம் அடைந்தவர் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்தது. ஆனால், வால்களின் (சீர்திருத்த இயக்கத்திலிருந்து உருவான பல புரோட்டஸ்டண்டு பிரிவுகள்) வலிமை ரோம அமைப்புக்கு மேலும் துன்பம் விளைவிக்கக் கூடிய அளவிற்கு இருந்தது. இந்த புரோட்டஸ்டண்டு பிரிவுகள் தலைகளுள்ள பாம்புகளைப் போல தங்கள் விவிலிய தூதுகளினால் சமுதாயத்தில் வேதனைகளை உண்டு பண்ணினார்கள்.

குதிரை வீரர்களின் மார்க்கவசங்கள் மூன்று நிறங்கள் இருந்தன.

அக்கினி நிறம் = சிவப்பு
நீல நிறம் = சுநீரம் (நீலக்கல்)
கந்தக நிறம் = மஞ்சள்

இந்த மூன்று அடிப்படை நிறங்கள் மூலம் மற்ற நிறங்கள் உருவாகின்றன. அதாவது, சத்தியங்களின் பூரண வெளிப்பாடு (நிறங்களின் தொகுப்பு) புரோட்டஸ்டண்டு பிரிவினருக்கு பாதுகாப்பாக இருப்பதை காட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று நிறங்களின் உற்பத்தி ஸ்தானங்களை ஆராயும் போது, நிற வெளிப்பாடு மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

1. அக்கினியின் சுத்திகரிக்கும் வல்லமையைக் (மீட்பு பலி) குறிக்கும் **சிவப்பு நிற** கொள்கை, மற்ற கொள்கைகளின் அளவு கோலாக செயல்பட்டு, அவைகளின் தூய்மையைக் கணிக்கிறது.

2. விசுவாசத்தை **நீல நிறம்** குறிக்கிறது. இந்த நீல நிறம் ஒரு பூவின் (பூங்கோரை = Hyacinth) நிறமாகும். பூவிலிருந்து (Hyacinth) வந்த நிறமாக நீலத்தைக் குறிப்பிட்டால், விசுவாசத்தின் பலனாக கிடைக்கும் கிருபைகளைக் குறிப்பதாகச் சொல்லலாம்.

   நீலக்கல்லின் (Jacinth = பதுமராகம்) நிறமாக எடுத்துக் கொண்டால், அழுத்தத்தையும், பிரகாசத்தையும் பிரதிபலிக்கும் சுபாவத்தைக் குறிப்பதாகச் சொல்லலாம்.

3. கந்தகம் என்பது விஷம். சத்தியத்தின் வல்லமையானது, பொய் உபதேசங்களை விஷமிட்டு அழிக்க வல்லது.

**அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன :**

இந்த குதிரைகள் கொடுமையும், வலிந்து சென்று தாக்கும் தன்மை உடையதாக இருப்பது, புரோட்டஸ்டண்டுகளின் துவக்க கால தீவிரமான சீர்திருத்த முயற்சிகளைக் குறிக்கிறது. அவைகளுடைய வாய்களிலிருந்து (அவர்களின் தூதுகள், சாட்சியங்கள்) அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன. வேதத்திற்கு ஒவ்வாத பழங்கால கருத்துகளையும், சடங்குகளையும் அழிக்கும் தன்மை (அக்கினி) வாய்ந்ததாக புரோட்டஸ்டண்டுகளின் கொள்கைகள் இருந்தன. இந்த கொள்கைகள் தெளிவற்றதாக (புகை) இருந்ததைக் குறிக்கிறது. பாபிலோனின் பொய் சத்தியங்களை (தண்ணீர்களை) விஷமிட்டு (கந்தகம்) கொல்லும் நிலையைக் காட்டுகிறது.

**வெளி 9 : 18 .**
**அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்.**

இது குதிரைகளின் தாக்குதல் நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இதன் விளைவாக ரோமசபையிலிருந்து பலர் மதம் மாறினர். இது எதிரிகளிடமிருந்து நாம் சத்தியத்தைக் காத்துக் கொள்ளும் நிலை அல்ல ! எவ்வித தயக்கமும், பயமும் இல்லாமல் சத்தியத் தூதை பிரகடனம் பண்ணும் ஒரு தாக்குதல் நிலையைக் காண்பிக்கிறது.

**வெளி 9 : 19.**

**அந்த குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும், வால்களிலேயும் இருக்கிறது. அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகளுள்ளவைகளுமாயும் இருக்கிறது. அவைகளாலே சேதப்படுத்துகிறது .**

சிங்கத்தின் "தலைகள்", மற்றும் பாம்பு "தலைகளுள்ள" வால்கள் - சுவிசேஷ தூது கொடுக்கத்தக்க வலிமை கொண்ட பேச்சுத் திறனைக் குறிக்கிறது.

**வெளி 9 : 20, 21 .**

**அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன், வெள்ளி, செம்பு, கல், மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும், கேட்கவும், நடக்கவுமாட்டாதவைகளுமாயிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை. தங்கள் கொலை பாதகங்களையும் தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை.**

இந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் (கிறிஸ்தவ உலகத்திலிருந்த ரோமன் கத்தோலிக்கர்கள்) தங்கள் பழைய நிலையை விட்டு மனம் திருந்தவில்லை.

வெளி 9 : 20, 21 ம் வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள இவர்களின் கைகளின் கிரியைகள், மற்றும் பொல்லாத நடவடிக்கைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் ஆராயத் தேவையில்லை. மாறாக, இரண்டு விஷயங்களில் அவர்கள் மனந்திருந்தாமல் இருப்பதை குறிப்பிட வேண்டியிருக்கிறது.

பொய் ஆராதனை - முதலாம் கற்பனை .

மற்றவர்களுக்கு துன்பம் விளைவிப்பது - இரண்டாம் கற்பனை .

மெய் ஆராதனை மற்றும் பிறரில் அன்பு கூறுதல் என்ற இரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருப்பதாக இயேசு கூறியுள்ளார். இந்த அடிப்படை ஆவிக்குரிய அம்சங்களை கிறிஸ்தவர்கள் கடைபிடிக்க புரோட்டஸ்டண்டுகளின் சீர்திருத்த இயக்கங்கள் வலியுறுத்தின. ரோமன் கத்தோலிக்கர்கள் செவி கொடுக்கவில்லை. இவர்களின் "மனந்திரும்புதல்" லவோதிக்கேயா சபையின் இறுதி காலப்பகுதியின் நடவடிக்கைகளுக்காக காத்திருக்கின்றது.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

# 10 ம் அதிகாரம்

## ஏழாம் எக்காளக் காலக் கட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க கட்டளை பிறப்பிக்கப்படுதல்

தானியேல் 12 ம் அதிகார தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் சம்பந்தமான விஷயங்கள், வெளிப்படுத்தல் ஆகமத்தின் 10 ம் அதிகாரத்தில் காணப்படுகின்றன. இந்த இரண்டு அதிகாரங்களின் தொடர்பு அம்சங்கள் கீழே குறிக்கப்படுகின்றன ;

| தானியேல் 12ம் அதி | வெளி 10ம் அதி |
|---|---|
| 1. முடிவு கால மட்டும் இந்த புஸ்தகத்தை முத்திரை போடுதல். | 1. முடிவு கால சமீபம். (இனி காலம் செல்லாது) திறக்கப்பட்ட புஸ்தகம். |
| 2. ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவராகிய புருஷன். | 2. சமுத்திரத்தின் மேல் கால் வைத்த பலமுள்ள தூதன் |
| 3. வலதுகரத்தையும், இடதுகரத்தையும் வானத்திற்கு நேராக ஏறெடுத்து | 3. ஒரு கையை வானத்திற்கு நேராக உயர்த்தியும், மறு கையில் புஸ்தகத்தை வாங்கியும் |
| 4. என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடுதல் | 4. சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர் மேல் ஆணையிடுதல் |
| 5. 1260 வருடங்களை முன்னறிவித்தல். | 5. காலம் இனி செல்லாது. அதாவது முடிவு காலம் ஆரம்பம். |

**வெளி 10 : 1.**

**பின்பு, பலமுள்ள வேறோரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப் போலவும், அவனுடைய கால்கள் அக்கினிஸ்தம்பங்களைப் போலவும் இருந்தது .**

தானியேல் 12ல் தண்ணீர்களின் மேல் நின்று 1260 வருடங்கள் (காலம், காலங்கள், அரைக்காலம்) குறித்து முன்னறிவித்ததையும், வெளி 10ம் அதிகாரத்தில் தண்ணீர்களின் மேல் நின்று, முன்னறிவிக்கப்பட்டதின் நிறைவேறுதலை அறிவித்ததையும் ஒப்பிடும்போது, முடிவு காலம் சம்பந்தப்பட்ட காரியங்களை அறிவிக்கும் பொறுப்பில் தேவதூதன் காபிரியேல் செயல்பட்டிருக்கலாம் என யூகிக்க இடமுண்டு. (தானி 8 : 16; 9 : 21; 10 : 5, 6; வசனங்களை ஒத்துப் பார்க்கவும்).

வெளிப்படுத்தல் ஆகமத்தில் "பலமுள்ள தூதன்" பற்றிய குறிப்பு மூன்று இடங்களில் காணப்படுகிறது. வரலாற்றின் திருப்புமுனைகளாக சம்பவங்கள் நிகழும் தருணங்களில் பலமுள்ள தூதர்களின் பொறுப்பு தெரிகிறது.

1. வெளி 5 : 2ல் "யார் இந்த புஸ்தகத்தை திறப்பான் ?" (தானி 12 : 4; வெளி 10:2 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்). நியாயப் பிரமாணம் மற்றும் யூத யுகத்தின் அழிவினை தூண்டும் முறையில் பலமுள்ள தூதனின் கேள்வி எழும்புகிறது.
2. வெளி 10 : 1ல் பலமுள்ள தூதனால் 1260 வருடக் காலக்கெடு முடிவும், முடிவு கால உபத்திரவங்கள் துவங்கும் நிலையும் அறிவிக்கப்படுகிறது.

3. வெளி 18 : 21 ல் பலமுள்ள தூதன் எந்திரக்கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, பாபிலோன் வேகமாக தள்ளுண்டு போகுதலும், சமாதான ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் நிலையும் முன்னறிவிக்கப்படுகிறது.

**பலமுள்ள தூதன் பற்றிய விவரங்கள் :**

**மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது :**

" வஸ்திரம் " என்பது " நீதிமானாக்கப்படுதல் " (தகுதியாக்கப்படுதல்) என்று பொருள்படும்.

" மேகம் " என்பது " உபத்திரவம் " என்று பொருள்படும்.

உபத்திரவம் நிகழப்போகும் சமயத்தில் அது சம்பந்தமான காரியங்களை முன்னறிவிக்கும் பொறுப்பிற்கான தூதனின் தகுதியைக் குறிக்கிறது.

**அவனுடைய சிரசின் மேல் வானவில்லிருந்தது :**

" வானவில் " என்பது " உடன்படிக்கை " (வாக்குதத்தம்) என்று பொருள்படும்.

" சிரசு " என்பது " சிந்திக்கும் தன்மை கொண்டது " என்று பொருள்படும்.

முன்னறிவிக்கப்பட்ட வாக்குதத்தம் மறக்கப்படாமல் நிறைவேற்றப்படும் நம்பிக்கை, சிரசின் மேல் வானவில் தோற்றத்தில் அடையாளப்படுத்தப்படுகிறது. தானியேலுக்கு அறிவிக்கப்பட்ட வாக்குதத்தங்களடங்கிய புஸ்தகம் முடிவு காலம் வரை முத்திரிக்கப்படும்.

**அவனுடைய முகம் சூரியனைப் போலவும் :**

" முகம் " என்பது " ஒத்தாசை " அல்லது " ஒத்தாசையின்மை " என்று பொருள்படும்.

" சூரியன் " என்பது " சுவிசேஷ சத்தியங்கள் " பொருள்படும்.

உலக முடிவு காலத்தில் வேத சத்தியங்களின் பிரகாசம் ஒரு வகுப்பாரை எரிக்கும் தனலாகவும், மற்றவர்களுக்கு ஞானத் தெளிவு பெறும் விதத்திலும் இருக்கும்.

**அவனுடைய கால்கள் அக்கினிஸ்தம்பங்களைப் போலவும் இருந்தது :**

" கால்கள் " என்பது " தன் கீழ் கட்டுபடுத்தும் தன்மை " என்று பொருள்படும்.

" ஸ்தம்பங்கள் " என்பது " தாங்கும் தன்மை " (ஆதரவு) என்று பொருள்படும்.

"அக்கினி " என்பது " தீர்ப்பு / சுத்திகரிப்பு / அழிக்கும் தன்மை " என்று பொருள்படும்.

தேவன் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் இரவில் அக்கினி ஸ்தம்பங்களைக் கொண்டு வழி நடத்தியது போல, பலமுள்ள தூதன் முடிவு கால ஆரம்பத்திலிருந்து நடக்க இருக்கும் தீர்ப்பு / சுத்திகரிப்பின் வேலை செயல்பட ஒத்துழைப்பதை உருவகமாகக் காட்டப்படுகிறது.

பலமுள்ள தூதன் ஏன் இயேசு அல்ல ?

இந்த பலமுள்ள தூதன் இயேசுவாக இருக்கலாம் என்றும், அதற்கு ஆதாரமாக 1 : 14, 15ம் வசனங்களைக் குறிப்பிடுவோரும் உண்டு; ஆனால், இந்த தூதன் இயேசு அல்ல என்பதற்கு வலுவான காரணங்கள் உண்டு; இயேசுவின் வருகை இந்த சமயத்தில் பொருந்தாத ஒன்றாகவும், தவறாக புரிந்து கொள்வதற்கும் வழி வகுக்கிறது. இந்த தூதன் இயேசுவாக இருந்தால், தானியேல் 12ம் அதிகாரத்துடன் சிறிதும் சம்பந்தம் இல்லாததாகி விடும்; காபிரியேல் தூதன் தான், (தானி 8 : 16, 17) "முடிவின் காலம்" குறித்த

விளக்கத்தை தானியேலுக்கு தெரியப்படுத்துகிறான்; **மிகாவேல் அல்ல !** வெளி 10 : 1ன் தூதன் இயேசுவாக இருந்தால், “பலமுள்ள தூதன்” என்று இங்கு குறிக்கப்படுவது பொருந்தாத ஒன்றாகும்; வெளி 5 : 2ல் பலமுள்ள தூதன் இயேசு அல்ல என்பது “வெளிப்படையாகத் தெரிகிறது”. வெளி 18 : 21ன் ‘பலமுள்ள தூதன்’ இயேசுவாக இருக்கலாம்.

தானியேல் 10 : 5, 6ல் காணப்படும் தூதனைப் பற்றிய வர்ணனையும், வெளி 10 : 1 தூதனைப் பற்றிய விவரிப்பும் ஒன்றாயிருப்பது போலவே, வெளி 1 : 14, 15ல் நமது கர்த்தரைப் பற்றிய விவரிப்பும் பொதுவான ஒன்றாக இருப்பதை நாம் கவனிக்க முடிகிறது.

**வெளி 10 : 2 .**

**திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடது பாதத்தைப் பூமியின்மேலும் வைத்து .**

திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் தூதன் கையில் இருந்தது; “கை“ என்பது “கிரியைகளை“ குறிக்கிறது. “சிறு“ புஸ்தகம் எனக் குறிக்கப்பட்டுள்ளதால் இது முழு வேதாகமம் அல்ல. தானியேல் புத்தகம் என அனுமானிக்கலாம்; தானியேல் 12 : 4 ல் முடிவு காலம் வரை அவனுடைய வார்த்தைகளை முத்திரை போட அறிவுறுத்தப்பட்டான். இந்த வெளி 10ம் அதிகாரத்தில் பின்வரும் வசனங்களில் “காலம் இனி செல்லாது“ அதாவது, “இது முடிவு காலம்” என உணர்த்தி, இதுவரை முத்திரைக்கப்பட்ட புஸ்தகம் இப்பொழுது திறக்கப்பட்ட நிலையில் தூதன் கையில் இருந்தது.

(ஆனால் வெளி 20 : 12ல் புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. முழு வேதாகமும் திறக்கப்பட்ட நிலையை இது குறிக்கிறது).

தூதனுடைய வலது பாதம் சமுத்திரத்தின்மேல் இருந்தது. வசனம் 1ல் தூதனுடைய முகம் சூரியனைப் போல இருந்தது. சுவிசேஷ சத்திய வெளிச்சம் காரணமாக, பல நூற்றாண்டுகளாக இருண்ட உலகத்திலிருந்த சமூக அல்லது சமய ஒழுங்குகள் குறித்து அக்கறையில்லாத, அமைதியற்ற மனுஷ சமுதாயம் இந்த காலக்கட்டத்தில் ஞானத்தெளிவு பெறத் தொடங்கினர்.

தூதனுடைய இடது பாதம் பூமியின் மேல் இருந்தது. அதாவது, பழமையான முறைமைகளை அனுசரித்து வந்த சமூக/சமய ஒழுங்கமைப்பைச் சார்ந்த பிரிவினருக்கு, இந்த முடிவு காலக் கட்டத்தில் ஏற்பட்ட அபரிமித சத்தியங்களின் வெளிச்சம் ஒரு வகையில் பிரச்சனையாகவே இருந்தது.

இந்த இருவேறு வகுப்பினரையும் கட்டுப்படுத்தும் தேவதூதன் சமுத்திரத்திலும், பூமியின் மேலும் தன் பாதங்களைப் பதித்ததின் மூலம் அடையாளமாகக் காட்டப்படுகிறான்.

**வெளி 10 : 3.**

**சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின.**

ராஜாவின் கோபம் சிங்கத்தின் கர்ஜனையைக் குறிக்கும். நீதி 19 : 12. தூதனுடைய கர்ஜனையைத் தொடர்ந்து உபத்திரவங்கள் (மேகம்) சீறிடப்போகிறதைக் காட்டுகிறது. சத்திய வெளிச்சம் காரணமாக, இதுகாறும் வழிவழியாய் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த நியாயங்கள் சிதைவு பெற்றன. மனுஷர்கள் அனைவரிடத்திலும் ஞானத்தெளிவு உண்டாகி, இடி முழக்கங்கள் போன்ற பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் வீரிட்டு கிளம்பின. பொதுவுடைமை தத்துவம், பரிமாண வளர்ச்சி, தத்துவம் போன்ற புரட்சிகரமான கருத்துக்கள் உருவாகி, பூமியின் குடிகளை பேரதிர்ச்சிக்குள்ளாக்கின.

வெளி 10 : 4.
**அவ்வேழு இடிகளும், தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்.**

' இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரை போடு ' என யோவான் அறிவுறுத்தப்பட்டார். சிறு புஸ்தகம் இப்பொழுது திறக்கப்பட்ட நிலையில் உள்ளது. இப்புஸ்தகம் சபைக்கு உரியது. இடிமுழக்கங்கள் போல பெருகிவரும் கருத்துக்கள், கொள்கைகள், மனுஷரின் அனுபவ அறிவுகள், தத்துவங்கள் எல்லாம் சபைக்குத் தேவையில்லை. எனவே தான் சபைக்கு அடையாளமாகக் குறிக்கப்படும் யோவானால் இவைகள் எழுதப்படவில்லை.

வெளி 10 : 5.
**சமுத்திரத்தின்மேலும், பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன் , தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி .**

தூதனுடைய ஒரு கை வானத்திற்கு நேராக உயர்த்தப்படுகிறது. மறு கை சிறு புஸ்தகத்தை வாங்க முற்படுகிறது. தானியேல் புஸ்தகத்தில் இரு கைகளும் உயர்த்தப்பட்டு காண்பிக்கப்படுகிறது.

வெளி 10 : 6.
**இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவ ரகசியம் நிறைவேறும் என்று.**

இந்த சிறு புஸ்தகம் திறக்கப்பட்டாலும், அதைப்பற்றிய ஞானம் முழுமையாக தெளிவாக்கப் படவில்லை. ஏழாம் தூதனின் எக்காளத் தொனியைத் தொடர்ந்து தேவத்திட்டங்களில் தெளிவு பிறக்கும்.

"தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தப்படி" என்ற வசனம், அப் 3 : 21ல் காணும் கருத்துக்களுக்கு ஒத்திருக்கின்றது. முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறித்தீரும் வரையிலும் தேவ ரகசியம் முடிவு பெறாது.

வெளி 10 : 7.
**வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர் மேல் ஆணையிட்டுச் சொன்னான்.**

தானியேல் 12 : 7ல் தூதன் தேவன் பேரில் ஆணையிட்டான். அதே போன்று இங்கும் வெளி 10 : 7ல் தேவதூதன் தேவன்பேரில் ஆணையிடுகிறான். ஆனால் "வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவர்" என்ற கூடுதல் விவரிப்பு இங்கு காணப்படுகிறது. தேவன் முன் குறித்த 1260 வருட காலப்பகுதி முடிந்த நிலையில் (அதாவது இவ்வுலக முடிவு காலம் ஆரம்பித்த தருணத்தில்) அடையாளப் பூர்வமான வானம் மற்றும் பூமியின் விவகாரங்களில் தலையிட்டு புதிய வானம், புதிய பூமியை உருவாக்கும் தேவ சித்தம் வெளிப்படுவதாகக் கொள்ளலாம்.

'வானத்தையும் அதிலுள்ளவைகளையும்' என்பது போலி வசனமாகக் கருதப்படுகிறது.

**வெளி 10 : 8.**

**நான் வானத்திலிருந்து பிறக்கக் கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி : சமுத்திரத்தின்மேலும், பூமியின்மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல :**

மத உலகத்திலிருந்து (வானம்) வந்த சத்தம் பசியுள்ள கிறிஸ்தவர்களின் சத்தியத் தேடுதலை குறிப்பதாக இருக்கலாம். மில்லரும், உலக முழுவதுமுள்ள அவரைப் போன்றோரும், சிறு புஸ்தகத்திலுள்ள அதிசயங்களை ஆராய முற்பட்டனர். எல்லோரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக் குறித்த தீர்க்க தரிசனங்களையும், குறிப்பாக அது சம்பந்தமான காலக்கணக்கெடுப்பையும் குறித்து கவனம் செலுத்தினர்.

**வெளி 10 : 9, 10.**

**நான் தூதனிடத்தில் போய் : அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன் : நீ இதை வாங்கிப் புசி. இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும்.ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப் போல மதுரமாயிருக்கும் என்றான்.**

**நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி , அதை புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று :**

பிரெஞ்சு புரட்சியைத் தொடர்ந்து, வேதாகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி செய்யும் தீவிரக் கூட்டத்தார் வரலாற்றில் எப்பொழுதும் இராத வண்ணம் உலகம் முழுவதும் பெருகினர். “கிறிஸ்துவின் இரண்டாம் வருகை” குறித்த கணிப்புகள் மிகப் பெரும் தூண்டுதலை ஏற்படுத்தி ஆயிரமாயிரம் பேர் அவற்றின்பால் (தேனைப் போல இனிப்பு) ஈர்க்கப்பட்டனர். ஆனால் தேவ தூதனின் எச்சரிப்பு '7' ம் வசனத்தில் குறிக்கப்பட்டபடி, “ரகசியம்” இன்னும் முடியவில்லை. அவர்களுடைய “புரிதல்கள்“ குறைவுள்ளதாகவும், தவறாகவும் இருந்ததால் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாகினர். (வயிற்றுக்கு கசப்பாயிருக்கும்).

**வெளி 10 : 11.**

**அப்பொழுது அவன் என்னை நோக்கி : நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்றான்.**

சபை தன் '6'ம் நிலையிலிருந்து இப்பொழுது '7'ம் நிலையை அடைகிறது. “ஜனங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்“ மட்டுமன்றி, அதிகார உச்சியிலுள்ள செல்வாக்கு மிக்கவர்களுக்கும் (ராஜாக்களுக்கும்) ஏழாம் எக்காளக் காலக் கட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. ஏழாம் சபை கால தூதர் ரசல் அவர்களின் ஊழியம் பதவியிலிருப்போர் கவனத்திற்கு எட்டியது வரலாற்று உண்மை.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 11 ம் அதிகாரம்

## காலக்கணக்கு தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதல் துவக்கம்; ஏழாம் எக்காளம் ஊதப்படுதல்

வெளி 10ம் அதிகாரத்தில் புஸ்தகம் திறக்கப்பட்ட நிலையில் "முடிவு கால தீர்க்கதரிசனங்கள்" நிறைவேறிக் கொண்டிருக்கிற ஆரம்ப கால கட்டத்தை உணர்த்தியது. 11 ம் அதிகாரத்தில் "காலக் கணக்கு" குறித்த அறிகுறி பாஷைகளின் சில அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரத்தில் 42 மாதங்கள், அதற்கு இணையான 1260 நாட்கள் (3 1/2 வருடங்கள்) குறிக்கப் பட்டுள்ளன. 1 மாதம் என்பது 30 நாட்களாகவும், 1 வருடம் என்பது 360 நாட்கள் எனவும் தெரிய ஏதுவாகிறது. பழைய ஏற்பாட்டில் 1 நாள் என்பது 1 வருடம் என ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1 வருடம் என்பது எவ்வளவு நாட்கள் என்றும், 1 மாதம் என்பது எவ்வளவு நாட்கள் என்றும் துல்லியமாகத் தெரிவிக்கப்படவில்லை. வெளி 11ம் அதிகாரம் தான், காலக்கணக்குகளின் அளவுகளை துல்லியமாகக் காட்டுகிறது.

இந்த அதிகாரத்தில் "இரண்டு சாட்சிகள்" அடையாளமாக "இரண்டு விளக்குத்தண்டுகள்" "இரண்டு ஒலிவ மரங்கள்", "இரண்டு தீர்க்கதரிசிகள்" என குறிக்கப்படுகின்றன.

மேலும் இந்த அதிகாரத்தில், "மகாநகரம்" (பாபிலோன்) அடையாள பாஷையில் "சோதோம்" என்றும், "எகிப்து" என்றும் காட்டப்படுகிறது.

**வெளி 11 : 1.**
**பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது.அப்பொழுது தேவதூதன் நின்று, என்னை நோக்கி, நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்கிறவர்களையும் அளந்து பார்.**

பிரெஞ்சு புரட்சிக்கு முன் (கி.பி. 1799), தானியேலின் வார்த்தைகள் விளங்கப்படவில்லை. இருப்பினும், 15ம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர் காலத்தில் வேதாகமம் திறந்த புத்தகமாகி, அதன் கொள்கைகள் வலிமை பெற்று, கிறித்துவத்தில் ஒரு மாபெரும் புரோட்டஸ்டாண்ட் வகுப்பினை உருவாக்கியது மறுக்கமுடியாது. தானியேல் கால ரகசியங்கள் துலங்க ஆரம்பித்து, முழு வேதாகமத்திலுள்ள விஷயங்கள் தெளிவடையத் தொடங்கின. பைபிள் ஒரு திறந்த புத்தகமாக மாறியது.

சிறு புஸ்தகம் திறக்கப்பட்டு "முடிவு காலம்" ஆரம்பமான கட்டத்தில், சபைக்கு ஒரு புதிய "தீர்ப்பு அளவு கோல்" கொடுக்கப்படுகிறது.

**அளந்து பார் :**

பிலதெல்பியா சபைக்கு கொடுக்கப்பட்ட தூதின் ஒரு பகுதி இது. அளவுகள் சரியாக உள்ளனவா என்று அளப்பதற்கு சபைக்கு கோல் கொடுக்கப்பட்டது. **தேவாலயம், பலிபீடம்** மற்றும் **தொழுதுகொள்ளுகிறவர்கள்** அனைத்தையும் சபை அளக்க வேண்டியுள்ளது. பிலதெல்பியா சபைக்கு கொடுக்கப்பட்ட தூது இதுவாகும். இச்சபை போப்பு மார்க்கத்தை விழத் தள்ளியது. இதைத் தொடர்ந்து தற்போதைய கிறிஸ்தவத்தின் பரிணாமத்தை கருத்திற் கொண்டு அளவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**தேவாலயம் :** இது தேவனுடைய திட்டத்தைக் குறிக்கிறது.. தேவன் அங்கு வாசமாயிருக்கிறார். (திருச்சபையே தேவாலயம்; ஏனெனில் திருச்சபை தேவத்திட்டத்தை உள்ளடக்கியது) தற்போதைய விவிலிய சுதந்திரத்திற்கான கதவு திறக்கப்பட்ட நிலையில் ஆறாம் சபை, தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் கவனித்துப் பார்க்க அறிவுறுத்தப்படுகிறது.

**பலிபீடம் :** சபையின் "பலிபீடத்தை" அளக்க வேண்டும். லூத்தருக்கு முன்பு, "பலி" என்பது "பூசைபலி" (MASS) ஆக இருந்தது. ஆனால் சத்திய வெளிச்சம் அதை அவமாக்கிப் போட்டது. மார்டின் லூத்தர் அவர்களின் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் உபதேசம்" கிறிஸ்தவ உலகத்தில் புதிய விசுவாச வகுப்பாரைத் தோற்றுவித்தது. "பலிபீடத்தை" அளக்கும் புதிய அளவுகோல் தேவனுக்கு உகந்த சுயபலி ஆகும்.

**தொழுதுகொள்ளுகிறவர்கள் :**

சபை அடுத்து அளப்பது "தொழுதுகொள்ளுகிறவர்களை". ஆவியில் ஜெநிப்பிக்கப்படும் நிலை தான் புதிய அளவுகோல் ஆகும்.

**வெளி 11 : 2 .**

**ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப் போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.**

ஆசரிப்பு கூடார அமைப்பில் **பிராகாரம்** என்பது, ஆவியில் ஜெநிப்பிக்கப்படாமல் இயேசுவுடன் இடுக்கமான வாசல் வழியாக பிரவேசியாமல் தம்மை முழுவதும் ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்காத **பேர்க் கிறிஸ்தவர்களைக்** குறிக்கும். இவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க இயலாது.

பிராகாரம் புறஜாதியாருக்கு (யூதரல்லாதவர்களுக்கு) கொடுக்கப்பட்டது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்" என்பது "உண்மைக் கிறிஸ்தவர்களை" குறிக்கிறது. இந்த புறஜாதியாருக்கு (பேர்க் கிறிஸ்தவர்களுக்கு) தேவனுடையத் திட்டத்தில் ஒரு பங்கு இருந்தது. பிராகாரம் இவர்களுக்கு கொடுக்கப்பட்டு பரிசுத்த நகரம் 42 மாதங்கள் மிதிக்கப்பட்டது. 42 மாதங்களாகிய 1260 வருட காலக் கணக்கு கி.பி. 1799 ல் முடிவு பெற்றது. இதுவே முடிவு கால ஆரம்பமாகும். (TIME OF THE END).

கிறிஸ்தவத்தில் இப்படியாக "இரண்டு வகுப்பினர்" உள்ளனர். இயேசு இந்த இரண்டு வகுப்பினர்களை **கோதுமை & களை** என்று குறிப்பிட்டார். தானியேல் இவர்களை **பரிசுத்த ஸ்தலம் & சேனை** என்று குறிப்பிட்டார். வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த இரண்டு பிரிவினரும் "**என்**" (திருச்சபை) என்றும், "**புறஜாதிகள்**" (பேர்க்கிறிஸ்தவர்கள்) என்றும் குறிக்கப்படுகிறார்கள். "திருச்சபை" இங்கு " பரிசுத்த நகரம் " என்று குறிக்கப்படுகிறது.

**வெளி 11 : 3.**

**என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றருபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்.**

வெளி 11 : 2ல் பிராகாரம் புறஜாதியாருக்கு கொடுக்கப்பட்டது. அவர்களால் உண்மை சபை துன்புறுத்தப்பட்டது.

வெளி 11 : 3ல் "என்னுடைய" இரண்டு சாட்சிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு , இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பட்ட இரண்டு வசனங்களிலும் 42 மாதங்கள் (1260 நாட்கள்) அவகாசம் கொடுக்கப் பட்டது.

வெளி 12 : 6, 14ல் இதே காலப் பகுதியில் சபை வனாந்தரத்திற்கு ஓடிப் போனது. இந்த காலப்பகுதியில் சபை துன்புறுத்தப்பட்டாலும், தேவனுடைய வசனத்தினால் போஷிக்கப்பட்டார்கள்.

இயேசு தம்முடைய இரண்டு சாட்சிகளையும் (பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்கள்) ஜீவனை அளிக்க வல்ல சுவிசேஷத்தை பசியுள்ளவர்களுக்கு போதிக்க அனுமதித்தார். போப்பு மார்க்கத்தின் அடக்குமுறையின் காரணமாக, தேவ வசனங்கள் துக்கமும் துன்பமுமான சூழ்நிலையில் (இரட்டு வஸ்திரங்கள் உடுத்தப்பட்டு) போதிக்கப்பட்டன. போப்பு மார்க்கத்தின் அடக்குமுறையினால் வேத வசனங்களுக்கு செவி கொடுப்பவர்கள் துன்புறுத்தப்பட்டனர். ஆகவே வேத வசனங்கள் லத்தீன் மொழியில் 1260 வருடங்கள் மறைக்கப்பட்டு, இந்த நிலை இருண்ட யுகத்தில் நீடித்து கி.பி. 1799ல் முடிவுக்கு வந்தது. பிறகு வேதாகம சுதந்திரம் எங்கும் தங்கு தடையின்றி பரிமளித்தது.

**வெளி 11 : 4.**

**பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு விளக்குத் தண்டுகளும் இவர்களே.**

இரண்டு சாட்சிகளும் இரண்டு ஒலிவ மரங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இவைகள் பரிசுத்த ஆவியாகிய எண்ணெயை அளிக்கின்றன.

இரண்டு சாட்சிகளும் இரண்டு விளக்குத் தண்டுகளாக அடையாளப்படுத்தப் படுகின்றன. இவைகள் திருச்சபைக்கு ஒளியை (வேத வெளிச்சத்தை) அளிப்பவை. 'உம்முடைய வேதம் என் கால்களுக்கு தீபம்' என சங்கீதக்காரன் கூறுகிறான்.

பூலோகத்தின் "ஆண்டவருக்கு முன்பாக" நிற்கிறவர்கள் இந்த இரண்டு சாட்சிகள். இது ஊழியம் செய்யும் நிலையை அடையாளமாக குறிக்கிறது. அடக்கு முறையிலும், துன்புறும் நிலையிலும் ஊழியம் தடைபடாதபடி தேவ நோக்கத்திற்கு இசைய செயல்படுவதைக் காட்டுகிறது.

**வெளி 11 : 5.**

**ஒருவன் அவர்களை சேதப்படுத்த மனதாயிருந்தால் , அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களை சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும்.**

வேத வசனங்களின் நிரந்தர வலிமை எந்த சூழ்நிலையிலும் குறைவுபடாது என்பது குறிக்கப்படுகிறது. வேதத்தை சேதப்படுத்துகிறவன் கொல்லப்படுவான் என்று இங்கு சொல்லப்படுகின்றது. அறியாமையினால் வேதத்துக்கு எதிரான கொள்கையுடைய நல் மனதோர் ஒரு காலக் கட்டத்தில் வேத வசனங்களுக்கு முன் தாம் ஜெயிக்கமுடியாது என்று உணரவும், தம் பொய்யான நம்பிக்கைகள், கொள்கைபேதங்கள் அனைத்தும் வேத வசனங்கள் முன்பாக அழிந்து அவர்களுக்கு பெரிதான மனமாற்றம் ஏற்படுத்தும் நிலை உருவாகுவதையே இங்கு குறிக்கப்படுகிறது. கத்தோலிக்கர்கள் மற்றும் நாத்தீகவாதிகளில் பலர் வேத வசனங்களை புரிந்து, நீடித்த போராட்டத்தின் விளைவாக மனம் மாறியது உண்டு. வேதம் அவர்களை இவ்வாறாக மேற்கொள்ளும் நிலை தான் இந்த வசனத்தில் காட்டப் பட்டிருக்கிறது.

**வெளி 11 : 6.**
**அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு .**

"இரண்டு சாட்சிகள்" என அடையாளப்படுத்தப்படும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் இருண்ட காலப்பகுதியான 1260 வருடங்களில் "ஆவிக்குரிய மழையை" வருஷிக்கப் பண்ணாமல் தடை பண்ணுவதாக இங்கு குறிப்பிடப்படுகிறது. எலியாவின் காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் இதற்கு ஒத்திருக்கிறது. தானியேலின் புஸ்தகத்தை தேவன் முத்தரித்து அடைத்துப் போட்டதை நாம் அறிவோம். மறைக்கப்பட்டு முத்தரிக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை நாம் திறக்கமுடியாது. முடிவு காலம் வரையில் ரகசியம் வெளிக்கொணரப்படாமல், ஆவிக்குரிய மழை பெய்யாமல் அடைக்கப்பட்ட நிலை கி.பி. 1799க்கு முன்வரை நீடித்தது.

**அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் பூமியைச் சகல வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு :**

பைபிள் அதன் எதிரிகளுக்கு ஒரு முள்ளாகவே இருந்து வந்துள்ளது. மார்டின் லூத்தர் ரோமன் கத்தோலிக்க சபையைப் பார்த்து கூறினார் : "உங்களுடைய தண்ணீர் குடிக்கத்தகுந்தது அல்ல" வேத வாக்கியங்கள் "தண்ணீர்கள் மேல்" (மனுஷருடைய சுய கொள்கைகள் மேல்) அதிகாரம் கொண்டவையாக உள்ளன. வழி வழியான மரபுகளை (நியமங்களை) கடைபிடிக்கும் சமுதாயத்தின் (பூமியின்) மேல் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துவதை இந்த வசனம் தெரிவிக்கிறது.

**வெளி 11 : 7.**
**அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும் போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்.**

கிரேக்க மூலத்தில் "அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது" என்ற பொருளில் இந்த வசனப் பகுதி அறியப்படுகிறது.

பைபிள் தடைபட்ட / தணிந்த நிலையில் இரட்டு உடுத்தி சாட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் கடைசி காலக் கட்டத்தில் (பிரெஞ்சு புரட்சி நடைபெற்று வரும் காலத்தில்) , படுகுழியிலிருந்து ஒரு மிருகம் வேதாகமத்தோடு 1. யுத்தம் பண்ணி 2. ஜெயித்து 3. கொன்று போட வந்தது. "படுகுழி" என்பது "வல்லமை இழந்த" நிலையைக் குறிக்கிறது. இந்த மிருகம் பிரான்ஸில் தற்போது (புரட்சி சமயத்தில்) நிறுவப்பட்டுள்ள "குடியரசு" பாணியில் உருவான புதிய அரசாங்கம் ஆகும். இத்தகைய குடியரசு பாணி அரசாங்கம் சமீப காலத்தில் ஐரோப்பாவில் எங்கும் இல்லாத நிலையில் , பிரெஞ்சு புரட்சியின் விளைவாக புதிய குடியரசு பிரான்ஸில் உருவாகியது. இந்த குடியரசு "இரு சாட்சிகளுடன்" யுத்தம் பண்ணி மேற்கொண்டது. வேத வாக்கியங்களின் அடிப்படையில் நடைமுறையிலிருந்த பல நியமங்கள் எல்லாம் சமுதாயத்தில் ஒழிக்கப்பட்டது. கி.பி. 1793 ல் பிரெஞ்சு அசெம்பிளி பைபிளை தடை பண்ணியது. வேதாகமங்கள் சேகரிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. ஓய்வு நாள் அனுசரிப்பு மறைந்தது. இரு சாட்சிகளின் உடல்கள் (பைபிள் பிரதிகள்) எரிக்கப்பட்டு, எஞ்சியவை கேட்பாரற்று தெருக்களிலே கிடந்தன.நம்பிக்கை, வலிமை அனைத்தும் இழந்து, வெறுத்து ஒதுக்கப்பட்டு, தீர்க்கதரிசனங்கள் தோல்வி பெற்று நிறைவேறாதது போன்ற தோற்றம் கொண்ட செயலற்ற நிலையில் பைபிள் இந்த காலக் கட்டத்தில் இருப்பதைக் குறிக்கிறது. பைபிள் அமைப்புகள் சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட்டன. ஞானஸ்நானம், நற்கருணை சடங்குகள் ஒழிக்கப்பட்டன. கடவுள் இல்லை என்ற சித்தாந்தத்தை நாத்தீகவாதிகள் நடைமுறைப்படுத்தினர்.

**வெளி 11 : 8.**
**அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும், எகிப்து என்றும் ஞானர்த்தமாய்ச் சொல்லப்படும். அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.**

ரோமன் கத்தோலிக்க சபையின் ஆதிக்கம் மிகுந்த இடமாக விளங்கிய பிரான்ஸின் "மாநகரம்" (பாபிலோன்) இந்த வசனத்தில் அடையாளப் பூர்வமாக காட்டப்பட்டுள்ளது. புரோட்டஸ்டண்டு சபைக்கு சவாலான எதிர்ப்பு சக்தியாக விளங்கிய இந்த " **மாநகரம்** " (பாபிலோன்) ஞானார்த்தமாய் **சோதோம்** என்றும், **எகிப்து** என்றும் பெயர் பெறும்.

| | | |
|---|---|---|
| **சோதோம்** | : | இதன் குணங்கள் எசேக் 16 : 49 ல் குறிக்கப்படுகின்றன. |
| **எகிப்து** | : | தேவனை அறியாத, உலக ஞானம் கொண்ட "பேர்கிறிஸ்தவ உலகத்தை" குறிக்கிறது. |

ரோமச் சபையைக் குறிக்கும் "போலி எருசலேமில்" இயேசு சிலுவையில் அறையப்பட்டார். "பூசை பலி" என்ற பெயரில் ரோமன் கத்தோலிக்க சபை இயேசுவை தினம் தினம் சிலுவையில் அறைந்து கொண்டிருந்த நிலையையும் அறியலாம். ஆனால், மார்டின் லூத்தரின் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும்" நிலை பூசைபலி முறையை தள்ளிப்போட்டது.

**வெளி 11 : 9 - 10.**
**ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள். அவர்களுடைய உடல்களை கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.**

**அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள் :**

பைபிளும், மதமும் பிரான்ஸில் சட்டப்பூர்வமாக தடைபண்ணப்பட்டு, செயலற்ற நிலையிலிருப்பதைக் கண்ணுற்ற **இரண்டு வகுப்பார்களை** பற்றி வெளி **11 : 9, 10**ம் வசனங்களில் பார்க்கிறோம்.

1. அமைதியற்ற ஜன சமுதாயத்தில் கடவுளைப்பற்றிய சிந்தனையும், ஈடுபாடும் கொண்ட ஒரு சிலர் பைபிளின் இந்த நிலையைக் கண்ணுற்று, அதைப் பற்றிய தங்கள் நினைவுகளிலிருந்து மறந்து போகாமல் (அதாவது கல்லறைகளில் வைக்கவிடாமல்) மனதில் இருத்திக் கொள்வர். இந்த நிலை 3 1/2 வருடங்களுக்கு நீடிக்கும்.

2. பிரான்ஸில் நிலவிய அரசியல்,மத,பொருளாதார மாற்றங்களை விரும்பிய புரட்சியாளர்கள் புரட்சியின் விளைவுகளைக் கண்டு களிகூர்ந்தார்கள். பைபிளின் சட்ட திட்டங்களால் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் பைபிளின் பால் வெறுப்புண்டாக்கியது. மத நம்பிக்கையற்ற நாத்தீக வாதிகள், உலக ஞானத்தை மேலிருத்தி, மத அழிவினைக் கண்டு பேரானந்தமடைந்தனர். ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்பினர் புதிய குடியரசுக்கு நினைவுச் சின்னங்கள் (வெகுமதிகள்) உருவாயின. உதாரணமாக, "நாட்டர்டாம் ஆலயம்" (Temple of Reason) என அழைக்கப்பட்டது.

**வெளி 11 : 11.**

**" மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள். அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று ".**

பைபிளை தடைபண்ணி செயலற்றதாக்கிய இந்நிலை நவம்பர் 1793 லிருந்து தொடங்கி, 3 1/2 வருடங்கள் தொடர்ந்து, 1797 ல் முடிவுற்றது. பிரெஞ்சு அசெம்பிளி 17-06-1797 ல் புதிய சட்டம் இயற்றி மத தொழுகை சம்பந்தமான எல்லா தடைகளும் நீக்கப்பட்டன. போப்பு மார்க்கம் தன் பழைய நிலைக்குத் திரும்பியது. ஆனால் இதில் அதிக அனுகூலம் பெற்றது புரோட்டஸ்டாண்டு சபையினரே ! மத நம்பிக்கை இல்லாத மக்களின் எதிர்ப்பினாலும், பிரெஞ்சு அரசன் லூயிஸ் xivன் கொடுமையான அடுக்குமுறையினாலும் புரோட்டஸ்டாண்டு சபையினர் நசுக்கப்பட்டனர். மேற்குறிப்பிட்ட சட்டத்தினால் இவர்கள் சுதந்திரம் பெற்று (அவர்கள் காலூன்றி நின்றார்கள்) இயல்பு நிலைக்குத் திரும்பினர்.

**வெளி 11 : 12.**

**இங்கே ஏறி வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்.**

பைபிள் (இரண்டு சாட்சிகள்) திரும்பவும் உயர்த்தப்பட்டு, கி.பி. 1804ல் பைபிள் சொசைட்டிகள் உலக அளவில் தோற்றுவிக்கப்பட்டன. புரோட்டஸ்டாண்டு சபையினரின் இந்த வீரிய நடவடிக்கைகள் பெரிய சத்தமாக மத உலகில் (வானத்தில்) கேட்கப்பட்டது. இதை தொடர்ந்து, இரண்டு சாட்சிகள் வானத்திற்கு ஏறிப்போனது. அதாவது, மத உலகில் தங்கள் நிலையை, பைபிள் தக்க வைத்துக் கொண்டதைக் குறிக்கிறது.

பிரெஞ்சு புரட்சியின் உபத்திரவ (மேகம்) காலத்தில் பைபிள் திரும்பவும் உயர்த்தப்பட்டதைக் கண்ட எதிரிகள், பைபிளை முன்பு தடை பண்ணி அடக்கி ஆண்டதைப் போல் இனி செய்ய இயலாத அளவிற்கு நிலைமை மாறிப் போனதை உணர்ந்து பிரமித்தனர்.

**வெளி 11 : 13.**

**அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம் பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.**

வெளி 11 : 8ம் வசனத்தில் சொல்லப்பட்ட அதே நகரம் - பாபிலோன் இங்கும் குறிக்கப்படுகிறது. அதன் விசாலமான வீதி பிரான்ஸில் இருந்தது. பாபிலோனின் விழுகையில் பத்தில் ஒரு பங்கு ரோமச் சபையின் பிரெஞ்சு பிரிவு ஆகும். பாபிலோனில் மீதியுள்ள 9/10 பங்கு ஏழாம் எக்காளக் காலக்கட்டத்தில் விழுகையைச் சந்திக்கும்.

**மனுஷரில் ஏழாயிரம் பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள் :**

இந்த வசனப் பகுதியை 1 இராஜா 19 : 18 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அடையாளமான பொருள் விளங்குகிறது. எலியாவின் காலத்தில் பாகாலுக்கு தலை வணங்காத 7000 பேர் இருந்தனர். இவர்கள் அனைவரும் எலியாவின் காலத்தில் **யேகோவா** தேவனை உண்மையாய் தொழுது கொண்ட மீதியானவர்கள். வெளி 11 : 13ன் காலக்கட்டத்தில் பிரெஞ்சு புரட்சியின் போது, பிரான்ஸில் ஏழாயிரம் மெய்க்கிறிஸ்தவர்கள் இருந்தனர். புரட்சி அரசாங்கத்தால் பைபிளும், மதமும் தடை பண்ணப்பட்ட போது, இந்த 7000 மெய் கிறிஸ்தவர்களின் பெயர்கள் (ஊழியங்கள், கிறிஸ்தவ பண்புகள்) கவனத்தில் கொள்ளப்படாமல் புறம்பாக்கப்பட்டனர். " மெய்கிறிஸ்தவத்தின் " அழிவை தொடர்ந்து அதைச் சார்ந்தோரின் பெயர்களும், கீர்த்திகளும் மறக்கடிக்கப்பட்டன.

**மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் :**

புரட்சியின் பயங்கரத்தைத் தொடர்ந்து , போப்பு மார்க்கமும், பொதுவாக மதமும் சகஜ நிலைக்குத் திரும்பியவுடன், மீதியானவர்கள் (பேர்க்கிறிஸ்தவர்கள்) போப்பு மார்க்கத்திற்கு மகிமை செலுத்தினார்கள்.நெப்போலியனின் கீழ் பிரான்ஸின் தேசிய மதமாக போப்பு மார்க்கம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பிரான்ஸ் கத்தோலிக்க சபையின் முக்கிய அங்கமாக இருந்து வருகிறது. ஆகவே, பரலோகத்தின் தேவன் "போப்பு" என குறிக்கப்படுகிறது.

**வெளி 11 : 14.**
**இரண்டாம் ஆபத்து கடந்து போயிற்று; இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது .**

ஆறாம் எக்காளம் (இரண்டாம் ஆபத்து) முடிந்தது. ஏழாம் எக்காளம் (மூன்றாம் ஆபத்து) வர இருக்கிறது. ஆறாம் எக்காள காலம் முடிந்து, ஏழாம் எக்காள காலத்திற்கு மாறுவது தெளிவற்ற நிலையில் ஆரம்பிக்கும்.

**வெளி 11 : 15.**
**ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.**

நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் பிரகடனம் பற்றிய ஏழாம் எக்காளத் தூதும், லவோதிக்கேயா சபையின் தூதும் ஒரே மாதிரி உள்ளன; வெளி 3 : 20ம் வசனத்தில் சொல்லப்பட்ட "என்னுடைய சத்தம்" என்பது, கிறிஸ்துவின் பிரசன்னத்தையும், அவருடைய அரசாட்சியையும் குறித்து பிரகடனம் பண்ணிய ரசல் அவர்களின் செய்தியைக் குறிப்பதாக இருக்கலாம். ரசல் அவர்களுடன் விசுவாசிகளில் பலர் இந்த பிரகடனத்தில் மிகுந்த உற்சாகத்துடன் பங்கு பெற்றுள்ளனர்; ஆகவே தான், கிறிஸ்துவின் பிரசன்னம் பற்றிய இந்த பிரகடனம் வானத்தில் (மத உலகத்தில்) வெளிப்படும்போது, "கெம்பீர சத்தங்கள்" ஏற்பட்டன.

இவ்வுலக இராஜ்யங்கள் (அரசுரிமை) நம்முடைய கர்த்தருக்கும் (**யேகோவா**வுக்கும் - சங் 2 : 2 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்) , அவருடைய கிறிஸ்துவுக்கும் (இயேசுவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும்) உரியதாயின. அவர் **(யேகோவா)** சதா காலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்; ஆனால், கிறிஸ்துவோ, முதல் 1000 வருஷங்கள் மட்டும் அரசாளுவார். (1 கொரி 15 : 24 - 28).

1 கொரி 15 : 52ல் சொல்லப்படும் "கடைசி எக்காளம்" இந்த ஏழாம் எக்காளமே ! 1 தெச 4 : 16ல் சொல்லப்படும் "தேவ எக்காளம்" மற்றும் லேவி 25ம் அதிகாரத்தின் "யூபிலி எக்காளம்" யாவும் ஒன்றே! அப் 3 : 19 - 21ம் வசனங்கள் உணர்த்தும் கருத்து இதுவே .

**வெளி 11 : 16 - 17.**
**அப்பொழுது, தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள் மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து, இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்தரிக்கிறோம் ; தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறீர்:**

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் விரிவாக்கங்களாக உள்ள எபிரேய வேதாகமத்தின் இந்த 24 தீர்க்கதரிசனங்களும் தங்கள் சிங்காசனங்களில் உட்கார்ந்திருக்கும் காட்சி, நியாயத்தீர்ப்புகளின் அதிகாரம் நிலவுவதை அடையாளப்படுத்துவதாய் காட்டப்பட்டுள்ளன. "24 மூப்பர்கள் முகங்குப்புற விழுந்து தேவனை தொழுது கொள்கிறார்கள்" - அதாவது, இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறியதன் காரணமாக, அவைகள் தேவனுக்கு கனத்தையும் மரியாதையையும் செலுத்துகின்றன.

**“இருக்கிறவரும், இருந்தவரும்”** என்ற சொற்கள் இங்கு உபயோகப்படுத்தப்பட்டிருப்பது முக்கியமான விஷயமாகும்; தேவன் கடந்த காலத்தில் தீர்க்கதரிசனங்களை முன்னுரைத்தார் என்பதும், அந்த தீர்க்கதரிசனங்கள் வாயிலாக தேவன் “இருந்தார்” என்பது இங்கு உணர்த்தப்படுகிறது; ஆனால் இப்பொழுதோ, கடந்த காலத்தில் தேவன் உரைத்ததெல்லாம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன என்ற அடிப்படையில், அவர் “இருக்கிறார்” என்பது உணரப்படுகிறது; மேலும், தேவனுடைய சதா “காலங்களிலும்” இருக்கும் சுபாவத்திற்கு மறுகேள்வி ஒன்றுமில்லை; “**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவரும்”** என்ற சொற்றொடரின் மூலம் கடந்த காலத்திலிருந்து நிகழ் காலத்திற்கும், வர இருக்கும் காலத்திற்கும் தேவன் தம்முடைய நித்திய சுபாவத்தை வெளிப்படுத்துகிறார் என்பதை சுட்டிகாட்டி, இந்த 24 தீர்க்கதரிசனங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்துகின்றன

**வெளி 11 : 18.**

**ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும் தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுது கொண்டார்கள்.**

தேவனுடைய ஆட்சியின் அம்சங்களைப் பற்றி இந்த வசனம் விளக்குகிறது; இவைகள் ஏற்கனவே பழைய ஏற்பாட்டு புஸ்தகங்களில் முன்னுரைக்கப்பட்டவைகள் ஆகும்; தானியேல் 12 : 1ம் வசனத்தில் , பெரும் ஆபத்துக் காலத்தில் , கோபம் அடைந்த ஜாதிகள் மத்தியில் இயேசு எழும்பி நிற்கிறார்; தம்முடைய பிதாவுடனும், பிதாவினால் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துடனும் பிரதிநிதி ஆட்சியை செயற்படுத்த ஆரம்பிக்கிறார்; இந்த வசனத்தில் 3 அடிப்படையான சம்பவங்கள் தெரியப்படுத்தப்படுகின்றன:

1. உபத்திரவம் 2. தேவனுடைய கோபம் 3. மரித்தோர் கையாளப்படும் முறை ;

ஜாதிகள் கோபம் அடைவதை கி.பி. 1914ம் வருஷத்துடன் சம்பந்தப்படுத்தலாம் : ‘தேவனுடைய கோபாக்கினை’ என்பது 7 கடைசி வாதைகள் ஆகும்; ஏனெனில், அந்த வாதைகளுடன் தான் தேவனுடைய கோபாக்கினை முடிவடைகிறது; (வெளி 15 : 1). மரித்தோரை தேவன் கையாளும் விதம் ஒரு வரிசைக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது; மரித்தவர்களில் உள்ள பல்வேறு பிரிவினர்களின் வருங்கால நிலைமையை தேவன் கீழ்கண்டவாறு செயற்படுத்துகிறார்:

1. கடந்த காலத்தில் தேவனுக்கு ஊழியஞ் செய்த ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளின் ‘நித்திய நிலைமை’ முதலில் தீர்மானிக்கப்படுகிறது; (எபி 11 : 35).

2. சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களின் நிலைமை தீர்மானிக்கப்படுகிறது; (திருச்சபையாரும், திரள் கூட்டத்தாரும்).

3. இறுதியாக, சிறியோரும் பெரியோருமாகிய அகில உலகத்தார் அனைவரின் நித்திய வாழ்வு பொதுவான உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நிர்ணயிக்கப்படுகிறது; இவர்கள் தேவனுடைய நாமத்துக்குப் பயந்து கீழ்ப்படிய வேண்டும். இந்த சிலாக்கியத்தை கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சியில் பெறாமல் இருப்பவர்கள், பின்னர் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்; ஏனெனில், இவர்கள் அன்றைய உலகத்தின் சமுதாய ஒழுங்குகளுக்கும், மத்தியஸ்தரின் சட்ட திட்டங்களுக்கும் கீழ்ப்படிய விருப்பமில்லாதவர்கள்.

**வெளி 11 : 19.**
**அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது; அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.**

இந்த வசனம், வெளி 15, 16ம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்ட சம்பவங்களின் தொகுப்பு ஆகும்;

வெளி 15 : 1ல் சொல்லப்படும் வாதைகள், வெளி 11 : 18ன் தேவனுடைய கோபாக்கினையாக உள்ளது;

வெளி 15 : 5 - 8ல் விவரிக்கப்படும் காட்சி, வெளி 11 : 19ன் ஆலயமாக உள்ளது;

வெளி 16 : 17 - 21ல் சொல்லப்படும் ஏழாம் வாதை, வெளி 11 : 19ன் 'மின்னல்கள்', 'சத்தங்கள்' (இரைச்சல்கள்), 'பூமியதிர்ச்சி', 'பெருங்கல்மழை' ஆகியவை வாதைகளின் உச்சக்கட்டமாக ஏழாவது வாதையாக உள்ளது.

பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது;
(கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு)
பரலோகத்திலுள்ள தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது;
(நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்டு மொழிபெயர்ப்பு)

மேற்குறிப்பிட்ட இரண்டு மொழி பெயர்ப்புகளையும் ஒற்று நோக்கும் பொழுது, கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு சரியாக உள்ளது என்று கூறலாம்; "ஆலயம்" என்பது தேவனுடைய திட்டத்தை (அதாவது, திட்டத்தின் பல்வேறு பகுதிகளின் செயல்பாடுகளை) அடையாளப்படுத்துகிறது; ஏழாம் எக்காளம் முழங்கிய பொழுது (கி.பி. 1874), ஆவிக்குரிய சுபாவத்தில் வாழ்ந்து, ஜெபத்துடன் உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்த பரிசுத்தவான்களுக்கு இந்த ஆலயத்தின் கதவு திறக்கப்பட்டது. இந்த 'திறப்பின் எக்காளம்' தேவனுடைய உடன்படிக்கைகளை உள்ளடக்கியதாக உள்ளது; இந்த உடன்படிக்கைகள் தாம், திறக்கப்பட்ட ஆலயத்தில் வெளிப்படுத்தப்படுகிறது; நிழலாயிருந்த 'உடன்படிக்கை பேழை' பொருளான 'கிறிஸ்துவே' ! ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து விளங்குகிறார். சுவிசேஷ யுக வரலாற்றின் இந்த காலக்கட்டத்தில் தான் புதிய உடன்படிக்கையைக் குறித்த முழுமையான அறிவை ஏழாம் தூதன் (ரசல்) வாயிலாக நாம் அறிந்து கொள்ள ஏதுவானது.

**மின்னல்கள் :** மின்னல்கள் பூச்சக்கரத்தை பிரகாசிப்பித்தது; ஏனெனில், சத்தியங்களின் பிரவாகம் சமுதாயத்திலும், மத உலகத்திலும் குழப்பத்தை உண்டு பண்ணுகிறது;

**சத்தங்கள் :** சமுதாயத்திலும், மத உலகத்திலும் நிகழும் பெரும் விளைவுகள் நிமித்தம் ஏற்படக்கூடிய பல சத்தியத் தூதுகளும், விளக்கங்களும் இங்கு "சத்தங்கள்" என்று அடையாளப்படுத்தப்படுகின்றன.

**இடி :** இடி என்பது பெரும் வெளிச்சத்தின் காரணமாக ஏற்படும் தர்க்க பேதங்களைக் குறிக்கின்றன.

**பூமியதிர்ச்சி :** சமுதாய ஒழுங்குகளில் ஏற்படும் தடுமாற்றங்களையும், விரைவில் அவைகள் அதிகரிக்கப் போவதையும் குறிக்கின்றன.

**கல்மழை :** இது கடினமான சத்தியங்களை அடையாளப்படுத்துகின்றது; (ஏசாயா 28 : 17). இது சிறிய அளவில் ஏற்கனவே ஆரம்பித்தாலும், அதனுடைய எடை தாங்க முடியாத அளவுக்கு மிகவும் பெரிதாகி, பழைய ஒழுங்குகளில் மீந்திருப்பவற்றை முற்றிலும் ஒழித்துப்போடும்.

## 12 ம் அதிகாரம்

### சுவிசேஷ யுகத்தில் சிவில் அதிகாரம், மத அதிகாரம் பற்றிய வரலாறு:

**வெளி 12 : 1.**
**அன்றியும், ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது . ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.**

மதம் மற்றும் அதன் ஆதிக்கம் பரவியுள்ள உலகத்தில் (வானம்), யூத யுகம் முடிவு பெற்று சுவிசேஷ யுகமாக மாறக்கூடிய ' யுக மாற்றம் ' அடையாளமாக இந்த வசனத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

"ஸ்திரீ" சபைக்கு அடையாளம். "ஸ்திரீ" கன்னிகையாக இருந்தால் திருச்சபையையும், வேசியாக இருந்தால் பேர்ச்சபையையும் குறிக்கின்றன. வெளி 12 : 1ம் வசனத்திலுள்ள "ஸ்திரீ" கீழ்கண்டவாறு வேதத்தில் குறிக்கப்படுகிறாள் :

| | | |
|---|---|---|
| **ஸ்திரீ** | **= சாராள் உடன்படிக்கை.** | |
| | **சுயாதீனமானவள்.** | |
| | **மேலான ( புதிய ) எருசலேம்.** | **கலா 4 : 26.** |
| | **பலியின் உடன்படிக்கை** | **சங் 50 : 5.** |
| | **நித்திய உடன்படிக்கை** | **எபி 13 : 20; சங் 111 : 9.** |
| | **இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை** | **1 கொரி 11 : 25.** |

ஸ்திரீயாகிய புதிய உடன்படிக்கையின் மூலம் சபை உரு பெறுகிறது. அவள் சுவிசேஷத்தை (சூரியனை) அணிந்திருந்தாள். ஆனால், அதற்கு அடித்தளமாக யூத நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் (சந்திரன்) அமைந்திருந்தன. கிறிஸ்துவின் ஞானத்தை (சிரசு) தன்னகத்தே கொண்டிருந்த அவளுடைய சிரசில் "ஒளி தாங்கிகளாக" (வேத வெளிச்சத்தை) அப்போஸ்தலர்கள் பன்னிருவரும் கிரீடம் சூடப்பட்டுள்ளார்கள்.

**வெளி 12 : 2 .**
**அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.**

வித்து = உண்மையான சந்ததி - கோதுமைமணி பிரிவினர்.

ஸ்திரீ (புதிய உடன்படிக்கை) தன் வித்து (உண்மையான சந்ததி) பல பிரயாசங்களினூடே பிரசவிக்கப்பட யத்தனித்தாள். இயேசு உவமையாக பேசும்போது (மத் 13 : 24 - 30), நல்ல விதைகளுடன் களைகளும் இருப்பதாக குறிப்பிடுகிறார். வெளி 12 : 17ம் வசனத்தில் ஸ்திரீக்கு "மற்ற சந்ததிகள்" இருப்பதாக பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளி 12 : 3.

**அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின் மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது .**

இங்கு காட்சி மாறுகிறது. சிவப்பான பெரிய வலுசர்ப்பம் ஒன்று காணப்படுகிறது. "வலுசர்ப்பம்" சிவில் அரசாங்க அதிகாரத்தைக் குறிக்கிறது. புற மத ரோம ராஜ்யத்தின் அரசாங்க சின்னமாக "கழுகு" இருந்தது. அதன் பிறகு, "வலுசர்ப்பம்" அரசாங்க சின்னமாகவே மாறியது. இந்த ரோம ராஜ்யத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் 2 தெச 2 : 7ல் குறிப்பிடுகிறார் :

"அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும், **தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே** அது வெளிப்படாது".

ஆதி கிறிஸ்தவ சபையின் (உண்மை மற்றும் பொய் கலந்த சபை) அபரிமித வளர்ச்சியினை கட்டுப்படுத்த புற மத ரோம சாம்ராஜ்யம் (தடை செய்கிறவன்) போராடியது. ஆனாலும் தன் முயற்சியில் தோல்வி அடைந்து சிதைந்து போகும் வரையில், "அக்கிரமத்தின் இரகசியம்" (பாபிலோன்) வெளிப்படாது என பவுல் கூறுகிறார். அதாவது, "களை வகுப்பார்" ஆதிச் சபையில் மேலோங்கி, சபையை அந்திகிறிஸ்துவின் அமைப்பாக (பாபிலோன்) மாற்றுவர். ஆனாலும் இதைக் குறித்த ரகசியம் உடனே வெளிப்படாது. இந்த வலுசர்ப்பம் (ரோம ராஜ்யம்) ஏழு தலைகளையும் (ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வரும் ஏழுவித அரசாங்கங்கள்), பத்து கொம்புகளையும் (ரோம ராஜ்யத்தை ஆதரிக்கும் எல்லை மாகாண அதிகாரங்கள்) கொண்டுள்ளது. காலப் போக்கில், அந்தி கிறிஸ்து இந்த பத்து அதிகாரங்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்.

ஏழு தலைகளின் மேலுள்ள கிரீடங்கள் ரோம சாம்ராஜ்யத்தின் ஏழு நிலைகளிலும் தனக்குரித்தான ஆளுமையை பறைசாற்றுகின்றன.

வெளி 12 : 4.

**அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவ வேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப் போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது .**

ரோமாபுரியை தலைநகரமாக கொண்டு ஆட்சி புரிந்த கடைசி பேரரசன் கான்ஸ்டண்டைன் வலுசர்ப்பத்தின் "**வால்**" போன்று உருவகமாய் சித்தரிக்கப்பட்டான். தலைநகரத்தை "கான்ஸ்டன்டிநோபிள்" என மாற்றி, வரலாற்றில் ஒரு முக்கிய மாறுதலை ஏற்படுத்தி, கிறிஸ்துவத்தை தழுவினான். ரோம முறைமையின்படி சாம் ராஜ்யத்தின் "**பிரதான மத ஆளுநராக**" **(PONTIFEX MAXIMUS)** இருந்த பேரரசன் கான்ஸ்டண்டைன் கி.பி. 325ல் 'நிகேயா கவுன்சிலை' (Nicae Council) கூட்டி, கிறிஸ்தவ மத ஆளுமையரான பிஷப்புக்களில் (மத போதகர்களில்) மூன்றிலொரு பங்கினரை (தோராயமாக 300 பிஷப்புக்களை) ரோம ராஜ்ஜீய வலைக்குள் விழ வைத்தான். இந்த பிஷப்புக்கள் பூமிக்குரிய அதிகாரங்களில் நாட்டம் கொண்டு அரசியல் காரியங்களில் ஈடுபட்டவர்களாய் ஆவிக்குரிய தன்மையை இழந்தனர். இந்த தருணத்தில் தான் "பாபிலோன்" (கோதுமையும், களையும் சேர்ந்த கலவையான சபை) பிறந்தது. இந்த ஆண் பிள்ளையை (புதிதாக உருவான ரோம மதத்தை) தன்னுடைய சாதுரியமானஅரசியல் காரணங்கள் முன்னிட்டு உட்கிரஹித்து தன் ராஜ்ஜீய முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வலுசர்ப்பம் (புற மத ரோம சாம்ராஜ்ஜீய அதிகாரம்) ஆவலாய் காத்திருந்தது.

**வெளி 12 : 5.**

**சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண் பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது .**

மெய்கிறிஸ்தவ அடிப்படையிலான புதிய உடன்படிக்கையின் சந்ததியாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், "ஆண் பிள்ளை" யாக கறைபடிந்த போப்பு மார்க்கம் உருவெடுத்து, கிறிஸ்தவ யுகத்தில் சகல தேசங்களையும் ஏகபோக அதிகாரங் கொண்டு (இருப்புக்கோலாக) ஆட்சி புரிய ஏதுவானது. "இருண்ட காலங்கள்" என்று வல்லுநர்களால் வர்ணிக்கப்படும் இந்த காலக்கட்டம் தான் போப்பு மார்க்கத்துக்கு (ஆண் பிள்ளைக்கு) சொந்தமானது. இந்த போப்பு மார்க்கம் பூமியிலே "தேவன்" என்று தன்னை உயர்த்தி காண்பிக்கிறது. (2 தெச 2 : 3, 4 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்).

**வெளி 12 : 6.**

**ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றருபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது .**

ஸ்திரீயாகிய " புதிய உடன்படிக்கை " (அவளுடைய உண்மை சந்ததியான கோதுமை மணிகளுடன்) தன்னை துன்புறுத்தும் பூமிக்குரிய அதிகாரங்களை (ரோமச் சபையுடன் இணைந்த அரசியல் பிணைப்புகளை) விட்டு ஒதுங்கியிருந்தது. அதாவது, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் / வழி முறைமைகளிலிருந்து பிரிந்த மனோ நிலையில் (வனாந்தரத்தில்) ஒதுங்கி இருந்தது.

கி.பி. 539ல் ரோமாபுரி நகரம் முழுவதுமாக போப்பு மார்க்க கட்டுப்பாட்டுக்குள் (மதம், அரசியல் அனைத்தும்) வந்ததிலிருந்து, கி.பி. 1799ல் பிரெஞ்சு புரட்சியில் நெப்போலியன் போப்புவை கைது செய்து போப்பு மார்க்க ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்த காலப்பகுதியான 1260 வருட இருண்ட காலக்கட்டத்தில், உடன்படிக்கையின் கீழுள்ள பரிசுத்தவான்களுக்கு தேவனால் அவ்வப்பொழுது சத்திய உணவுகள் கொடுக்கப்பட்டு போஷிக்கப்பட்டு வந்தனர்.

**வெளி 12 : 7.**

**வானத்திலே யுத்தமுண்டாயிற்று ; மிகாவேலும், அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்துடனே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும், அதைச் சேர்ந்த தூதர்களும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.**

போப்பு மார்க்கம் ('தேவனைப் போன்றவர் யார்' என அர்த்தங்கொள்ளும் மிகாவேல்), மற்றும் அதைப் பின்பற்றும் பேர்க்கிறிஸ்தவர்களுக்கும், புறமத கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு, கிறிஸ்துவத்தை தன் முழு ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர விழையும் புற சமய ரோம சாம்ராஜ்ய பரிபாலனத்திற்கும் (வலுசர்ப்பத்திற்கும்) இடையே மதம்சார்ந்த உலக அரங்கில் பெரும் ஆதிக்கப் போராட்டம் நடந்தது.

**வெளி 12 : 8.**

**வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று .**

புற மத சாம்ராஜ்யம் தன் முயற்சியில் வெற்றி பெறவில்லை. பழைய ரோமை புறமதம் தலையெடுக்காமல் மத உலகில் முற்றிலுமாக காணப்படாமற் போயிற்று.

**வெளி 12 : 9.**

**உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது ; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.**

ரோம சாம்ராஜ்யம் மத அதிகாரம் செலுத்தும் வல்லமையை இழந்தது. 'ஜஸ்டினியன்' என்ற ரோம பேரரசன் "பிரதான மத ஆளுநர்" **(PONTIFEX MAXIMUS)** பதவியை போப்புவிற்கு அளித்து விட்டார். இதன் மூலம், மத உலகத்தில் (வானத்தில்) மத சம்பந்த ஆதிக்கத்தை ரோம அரசாங்க சிவில் அதிகாரம் முற்றிலும் இழந்து பூமியில் விழுந்தது. அதாவது, சிவில் அரசாங்க அதிகாரம் மட்டும் செலுத்தும் நிலைக்கு ரோம சாம்ராஜ்யம் தள்ளப்பட்டது.

'பிசாசு' 'சாத்தான்' 'பாம்பு' 'வலுசர்ப்பம்' என்ற நான்கு நாமங்களையும் ஒருங்கே பெற்ற இந்த சிருஷ்டி "சிவில் அதிகாரம்" மட்டும் கொண்ட பிரதிநிதியாக காட்டப்படுகிறது. இவ்வுலக சிவில் அரசியல் அதிகாரம் லூசிபர் பிசாசின் கட்டுப்பாட்டிற்குள் செயல்பட்டு வருகிறது. (வெளி 20 : 2).

**வெளி 12 : 10.**

**அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி : இப்பொழுது இரட்சிப்பும் , வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும் , அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாடுகிறவன் தாழத் தள்ளப்பட்டான்.**

போப்பு மார்க்கம் இந்த வளர்ச்சியின் காரணமாக மத உலகத்தில் பெரும் ஆரவார தற்புகழ்ச்சியில் ஈடுபட்டது.

" போப்பு மார்க்கமாகிய நாங்களே இந்த பூமியில் தேவனுடைய இராஜ்யம் ! புற மத ஆதிக்கத்தை வென்று விட்டோம்; எங்களை இதுகாறும் துன்புறுத்தியவர்கள் எங்கள் அதிகாரத்திற்கு கீழ்பட்டவர்களாகியுள்ளனர் "

போப்பு மார்க்கம் இயல்பாகவே இந்த வெற்றியை இயேசுவுக்கு உரித்தாக்கியது. மேலும் , தான் ஆராதிக்கும் ரத்த சாட்சிகளுக்கும் இந்த வெற்றியை உரித்தாக்கியது.

**வெளி 12 : 11.**

**மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் , ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் .**

" குற்றஞ் சுமத்தப்பட்டவர்களின் " உயிர்த்தியாகங்களும் (ஜீவ பலிகளும்), அவர்களுடைய வாழ்வு நிகழ்வுகளும் (அவர்களுடைய சாட்சியின் வசனங்களும்), தம் ஜீவனையும் பாராமல் சபையின் மேல் கொண்ட பற்றுதலுமே தங்களின் வெற்றிக்கு காரணமாக அமைந்தன என்று போப்பு மார்க்கம் பறை சாற்றியது.

வெளி 12 : 12 .

**ஆகையால் பரலோகங்களே ! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே ! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே ! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு , உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக்கேட்டேன்.**

இந்த கள்ள மார்க்கத்தின் அங்கமாயிருப்பவர்களுக்கு மத உலகில் களிப்பு ஏற்பட்டது. அந்த மார்க்கத்தை சாராதவர்களை வலுசர்ப்பத்தின் (சிவில் அதிகார அமைப்புகளின்) துணையுடன் துன்புறுத்தும் வல்லமையை பிரயோகித்தது. போப்பு மார்க்கத்தின் 1260 வருட மேலோங்கிய ஆதிக்கம் சதாகாலங்களிலும் நிலை பெற்றிருக்கும் என்ற எண்ணத்தில், இப்பூவுலக அதிபதிகள் தங்களின் குறுகிய கால ஆட்சியின் ஸ்திரமின்மையைக் கருத்திற் கொண்டு போப்பு மார்க்கத்திற்கு கீழ்படிந்திருந்தனர். ஏனெனில், அதிபதிகள் அடங்காமல் இருக்கும் பட்சத்தில் பதவி இறக்கப்படுவர் என்ற பயம் இருந்தது.

வெளி 12 : 13.

**வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது .**

இது முதற்கொண்டு சிவில் அதிகாரம் பாவ மனுஷனுடன் (போப்பு மார்க்கத்துடன்) ஒத்துழைப்பு நல்கி, போப்பு மார்க்க கொள்கைக்கு எதிரானவைகளை அழித்து ஒழிக்கும் பணியில் ஈடுபாடு கொண்டது. இந்த 'எதிரான கொள்கைகள்' தேவனுடைய சத்தியங்களே ! வனாந்தர நிலையிலிருந்த ஸ்திரீயினாலும் (உடன்படிக்கை), ஸ்திரீயின் அரவணைப்பில் வளர்ச்சி பெற்று வரும் “ மற்ற சந்ததிகளினாலும் “ இந்த சத்தியங்கள் பிரஸ்தாபமாக்கப்பட்டு வந்தன.

வெளி 12 : 14.

**ஸ்திரீயானவள் அந்த பாம்பின் முகத்திற்கு விலகி , ஒரு காலமும் , காலங்களும் , அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது .**

'ஜலம்' (தண்ணீர்) சத்தியத்தைக் குறிக்கிறது. ஆமோ 8 : 11. எலியாவின் காலத்தில் 3 1/2 வருட காலம் மழை பெய்யாமல் பஞ்சம் உண்டாயிருந்தது. போப்பு மார்க்க இருண்ட யுக காலக் கட்டத்தில் அடையாள பாஷையில் குறிக்கப்பட்ட 3 1/2 வருட காலப்பகுதியில்) வசனப் பஞ்சம் மேலோங்கியிருந்தது. பெரும் கழுகின் (ஞானம்) இரண்டு செட்டைகள் (பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்கள்) துணையுடன் உண்மைச் சபை பராமரிக்கப்பட்டு வந்தது. போப்புவின் 1260 வருட உபத்திரவ காலத்தில் பைபிள் என்கிற தேவ ஞானமே உண்மைக் கிறிஸ்தவர்களை வழி நடத்தி வந்தது.

பாம்பின் (சிவில் அதிகாரம்) முகத்திற்கு ஸ்திரீ விலகியிருந்ததாக கூறப்பட்டது. “முகம்“ என்பது ' ஆதரவு ' நிலையைக் குறிக்கும். அதாவது , பூமிக்குரிய ராஜ்ஜீய சிவில் அதிகாரங்களின் 'ஆதரவு' உண்மை சபைக்கு இல்லாமலிருந்தது.

வெளி 12 : 15.

**அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதி போன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது .**

போப்புவின் நீண்ட கால ஆதிக்கத்திலிருந்த சமுதாய கூறுகள் விழிப்புற்று புரட்சிக்கு வித்திட்டன. வரலாற்றில் இந்த புரட்சி ' அறிவு பெருக்க யுகமாக ' கருதப்பட்டது.

இக்காலக் கட்டத்தில் “சத்தியங்கள் பெருவெள்ளம் போன்று” பரம்பின. ஜனங்களின் பார்வையில் இந்த சத்திய பிரவாகம் மதக் கெடு பிடியிலிருந்தும் (மெய் அல்லது பொய் மதங்கள் என்ற வேறுபாடு இல்லாமல்), ராஜாக்களின் கொடுங்கோண்மையிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ள ஏதுவாயின.

இந்த புரட்சி பிரான்ஸ் தேசத்தில் மையங்கொண்டு 'பிரெஞ்சு புரட்சியாக' வெடித்தது. இந்த புரட்சியின் பல்வேறு விளைவுகளில் ஒன்றாக “மதம் தடைபண்ணப்பட்டது”. இந்த வசனப்படி, சாத்தான் பெருவெள்ளம் போன்ற சத்தியங்கள் பரவ பின்னணியில் இருந்தான். அரசாங்கம் - மதம் இணக்கம் முழுவதுமாக சிதைவுற்ற நிலையினை அறிந்து கொண்டு சத்திய பெருவெள்ளத்தில் மக்கள் குழம்பி சரியான முடிவு எடுக்க முடியாத நிலையில், தன் முந்தைய மதம் சார்ந்த ராஜ்ஜீய உறவு நிலைக்கு ஜனங்கள் திரும்ப வர எதிர்பார்த்திருந்தான். இத்தருணத்தில், மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெருகி வர சாத்தான் உதவியாய் இருந்தான்.

**வெளி 12 : 16.**
**பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது .**

சாத்தான் எதிர்பார்த்த வண்ணம் காரியங்கள் சித்தியாகவில்லை. பூமியில் சமுதாயமெங்கும் சத்தியம் பற்றிய ஈடுபாடு காணப்பட்டது. புரட்சிகள் எங்கும் பரவின. புரட்சிகளை ஆதரிக்கும் போக்கு , மத சம்பந்தமான சுதந்திரம் கிடைக்க வழிகோலியது. பூமி (சமுதாயம்) பெருவெள்ளத்தை (சத்திய பிரவாகத்தை) விழுங்கியது. அதாவது, மத சுதந்திரம் எங்கும் கிடைக்கும் சூழ்நிலை உருவாகி, சத்தியம் பரம்ப ஏதுவான சந்தர்ப்பங்கள் பெருகின.

பெரு வெள்ளம் போன்ற சத்தியங்களை இவ்வுலகில் அனுமதிப்பதினால் மக்கள் மனம் குழம்பிய நிலையில், தாம் முன் அனுசரித்த நியமங்களுக்கு (போப்பு மார்க்கத்துக்கும், அதை ஆதரிக்கும் ராஜ்ஜீய அதிகார அமைப்புகளுக்கு) திரும்புவர் என்ற திட்டம் சாத்தானுக்கு தோல்வியில் முடிந்தது.

போப்பு மார்க்கத்தின் ஆதிக்கம், வல்லமை சின்னா பின்னமாகியது. கி.பி. 1799ஐ தொடர்ந்து மதம் சார்ந்த சத்தியங்களை தேடி ஆராய்ந்து அறியும் வாஞ்சை பெருக்கம் கண்டது. எலியாவின் பார்வையில் மழை எங்கும் பொழிந்தது !

வேதாகமங்கள் மற்றும் வேத சத்திய ஆராய்ச்சிகள் கி.பி. 1800ம் வருட ஆரம்பங்களில் பெருமளவில் துளிர்விட ஆரம்பித்தது. இது சாத்தானை வேதனைப்படுத்தக் கூடிய விஷயமாக உள்ளது.

**வெளி 12 : 17.**
**அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபங்கொண்டு , தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்போயிற்று .**

திருச்சபை முடிவு பெறும் காலத்தில் ஸ்திரீயின் (உடன்படிக்கையின்) மற்ற சந்ததிகளுடனே (மீதமுள்ள திருச்சபை அங்கங்களுடனே) வலுசர்ப்பம் (சிவில் அதிகாரங்கள்) யுத்தத்திற்கு தயாராகின்றன.

**குறிப்பு :**

வெளி 13 : 1ம் வசனம், 12ம் அதிகாரத்தின் இறுதியில் சேர்க்கப்பட வேண்டியதாயிருக்கத் தோன்றுகிறது. “பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன்“ என்பதற்கு சரியான மொழி பெயர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

“ பின்பு அவன் கடற்கரை மணலின் மேல் நின்றான் “

'கடற்கரை மணல்' என்பது மனித பெருங்கூட்டத்தை குறிக்கிறது. கர்த்தராகிய கிறிஸ்து பூமிக்குரிய ராஜ்ஜீய ஆளுகையை தகர்த்தெரியும் வரையில், சிவில் அதிகாரங்கள் ஜனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தும்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 13ம் அதிகாரம்
## பரிசுத்தவான்கள் - போலிச்சபைகள் பற்றிய வரலாறு:

வெளி 13ம் அதிகாரத்தின் 3ம் வசனத்தில் , மிருகத்தின் தலை ஒன்று காயப்பட்டதாகவும், 5ம் வசனத்தில் மிருகத்தின் அதிகாரம் 1260 வருடங்களுக்கு அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. கோர்வையாக செய்திகள் குறிக்கப்படாததால், அவற்றை வரலாற்று பின் நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் சிரமம் உள்ளது. வரலாற்றுப் பகுதிகளை கீழ்கண்டவாறு வரிசைப்படுத்தினால், குறிக்கப் பட்டிருக்கும் வசனங்களை தெளிவாக புரிந்து கொள்ளலாம் ;

(A)

2 ம் வசனம் : மிருகத்திற்கு (1). பலம் (2). சிங்காசனம் (3). அதிகாரம் மூன்றும் கொடுக்கப்பட்டன.

3,4 ம் வசனங்கள் : அந்த மூன்று விஷயங்களைப் பற்றிய வரலாறு இங்கு விவரிக்கப்படுகிறது. தலைகளில் ஒன்று (அதிகாரம்) காயப்பட்டது. ஆனால், மிருகத்தின் காயம் சொஸ்தமாக்கப்பட்டது.

(B)

5 ம் வசனம் : மிருகத்திற்கு கீழ்கண்டவைக் கொடுக்கப்பட்டன.
(1). வாய் (2). 1260 வருடங்கள் யுத்தம் பண்ணும் அதிகாரம்.

6 ம் வசனம் : இந்த இரண்டு விஷயங்களின் வரலாறு இங்கு விவரிக்கப்படுகிறது.
(1). தேவனுக்கு விரோதமாக தேவ தூஷணம். (வாய்).
(2). பரிசுத்தவான்களுடன் 1260 வருடங்கள் யுத்தம் பண்ணுதல்.

(C)

7 ம் வசனம் : ஒழுங்கு முறைமை இல்லாத அமைதியற்ற ஜனத்திரள் மேல் மிருகத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

8 ம் வசனம் : அந்த அதிகாரத்தின் விளைவு பற்றிய வரலாறு இங்கு குறிக்கப்படுகிறது. பரிசுத்தவான்கள் அல்லாத பூமியின் குடிகள் மிருகத்தை வணங்கினார்கள்.

மேற்குறிப்பிட்ட 3 பகுதிகளான (A, B, C) வரலாறுகளின் மூலம் கிடைக்கும் படிப்பினை இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

**வெளி 13 : 1.**
**அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின் மேல் பத்து முடிகளும் , அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.**

மனுஷர் தம் பூரண நிலையிலிருந்து குறைவுபட்டு தாழ்நிலை அடைவதை மிருகத்திற்கு ஒப்பிட்டு எசேக் 3 : 18ல் பேசப்படுகிறது. வேதத்தில் சில சமயங்களில் மிருகம் ஒரு தனி மனிதனை (நேபுகாத்நேச்சார் - தானி 4 : 16) குறிக்கிறது. பெரும்பாலும் மிருகம் என்பது, பரிசுத்த பண்புகளில்லாத பிரிவினரை (ராஜ்ஜியம் அல்லது அமைப்பு) குறிக்கும்.

சிறுத்தை போன்ற இந்த மிருகம் (ரோமச்சபையின் ஆதிக்கம் மேலோங்கிய ரோம ராஜ்யம்) சமுத்திரத்திலிருந்து (அமைதியற்ற மக்கள் சமுதாயத்திலிருந்து) எழும்பி வந்தது. ஏனெனில் மிகுந்த குழப்பமும் அமைதியற்ற சூழ்நிலையில் புற மத ரோம சாம்ராஜ்யத்தின் சிதைவுகளின் மத்தியில் கள்ள சபை (பாபிலோன்) உருப்பெற்றது.

**பத்து கொம்புகள் :** **'கொம்புகள்'** வல்லமையைக் குறிக்கும். ரோம ஐரோப்பாவின் வரலாற்றை நோக்கும் பொழுது மேற்குறிப்பிட்ட ரோம ராஜ்யத்தின் மைய அமைப்புக்கு (சிறுத்தை போன்ற மிருகத்திற்கு), பத்து ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து ஆதரவு நல்கி வந்தது. இந்த எல்லையோர மாகாண அரசுகள் மிருகத்தின் மேலுள்ள பத்து கொம்புகளால் அடையாளமாகக் குறிக்கப்படுகிறது.

**ஏழு தலைகள் :** **'தலை'** என்பது எந்த சிருஷ்டிக்கும் ' எண்ணம் ' 'அறிவு ' சம்பந்தப்பட்ட பகுதியை அடையாளப்படுத்திக் காட்டுகிறது. ரோம பேரரசன் 'ஜஸ்டினியன்' காலத்தில் ரோமச் சபை, மத அமைப்பிற்கு மேலான அந்தஸ்தை பெற்றது. சிறுத்தை போன்ற மிருகத்தால் அடையாளமாகக் குறிக்கப்பட்ட "போப்பு மார்க்க ஆதிக்கம் மேலோங்கிய ரோம ராஜ்ஜீய அமைப்புக்கு" கிபி. 539க்கு பிறகு ஏற்பட்ட ஏழு முக்கிய நிலைகளை ஏழு தலைகளாக அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் ஏழு தலைகளுள்ள மிருகங்களை கீழ்கண்டவாறு காணலாம் :

1. சிவப்பான பெரிய வலுசர்ப்பம் = ஏழு தலைகள் (வெளி 12 : 3)
2. சிறுத்தை போன்ற மிருகம் = ஏழு தலைகள் (வெளி 13 : 1, 2)
3. சிவப்பு நிறமுள்ள மிருகம் = ஏழு தலைகள் (வெளி 17 : 3)

[ ஆனால், தானியேல் 7 : 20ல் காணும் "வேற்றுருவும், கெடியுமுள்ள" மிருகத்திற்கு 'ஒரு தலை' மட்டுமே உள்ளது. ரோம சாம்ராஜ்யத்தின் ஏழு வித நிலைகளைப் பற்றிய விஷயத்தில் நாம் அக்கறை கொள்ளத் தேவையில்லை என்ற நோக்கில், ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு நிலையாகிய ஒரு தலை தானியேல் அதிகாரத்தில் குறிக்கப்பட்டதாகக் கொள்ளலாம் ].

ரோமன் கத்தோலிக்க பேர்ச்சபை ஆதிக்கம் பெற்ற காலத்திலிருந்து, ரோம ராஜ்ஜீய தலைமைகளில் ஏற்படும் மாற்றங்களை (ஏழு தலைகளாக) கருத்தில் கொள்ளலாம்.

வெளி 12, 13ம் அதிகாரங்களில் சிவப்பு வலு சர்ப்பத்தின் (புற சமய ரோம சாம்ராஜ்யம் - PAGAN ROMAN EMPIRE) ஏழு தலைகளில் ஏழு முடிகள் இருந்தன. ரோம ராஜ்யத்தின் வல்லமை மற்றும் அதிகாரம் மத்திய அரசாங்க கட்டமைப்பில் தக்க வைக்கப்பட்டிருந்தது. எல்லையோர மாகாண அரசுகள் வெறும் ஆதரவு அளிக்கும் வரம்புக்கு மட்டுமே உட்பட்டிருந்தன. ஆனால் சிறுத்தை போன்ற மிருகத்தால் அடையாளமாய் குறிக்கப்பெற்ற "போப்பு மார்க்க ஆதிக்கம் மேலோங்கிய ரோம ராஜ்ஜீய அமைப்புக்கு" **கொம்புகளில் கிரீடங்கள்** சூடப்பட்டிருந்தன. அதாவது, ரோமச்சபை தன் கட்டுப்பாட்டிலுள்ள மாகாண சிவில் அரசுகளுக்கு கிரீடங்கள் சூட்டின. மாகாண அரசுகள் சிவில் அதிகாரங்களை முழுமையாக பெற்றிருந்தன.

தானியேல் 12ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி புற சமய ரோம சாம்ராஜ்யத் தலைமைக்கு (சிவப்பு வலுசர்ப்பம்) பூரண அதிகாரம் கொண்டதாய், எல்லையோர மாகாண அரசுகள் அதிகாரமற்றவைகளாய் இருந்தன. ஆகவே ரோம ராஜ்யத் தலைமைக்கு தலையில் முடிகள் இருந்தன. ரோம பேரரசன் 'ஜஸ்டினியன்' ரோமச்சபை பிஷப்பிற்கு "தலைமை மத ஆளுநர்" (PONTIFEX MAXIMUS) அந்தஸ்தை அளித்ததைத் தொடர்ந்து, ரோமாபுரி நகரத்திற்கு அருகாமையிலுள்ள எல்லையோர மாகாணங்கள், ரோம ராஜ்யத் தலைநகரான கான்ஸ்டாண்டிநோபிள் வெகு தொலைவிலுள்ளதால் அவற்றினை ஆண்ட அரசியல் (சிவில்) அதிகாரங்கள் போப்புவின் வசம் மாறுவதற்கு வழி வகுத்தது. மூன்று மாகாணங்களை (கொம்புகளை) வீழ்த்திய "சின்ன கொம்பு" (போப்புவின் சிவில் அதிகாரம்) அரசியல் வளர்ச்சி பெற்றதை

“பருமனாக” உருவகப்படுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. கி.பி. 539 க்கு பிறகு ரோம ராஜ்யம் செல்வாக்கு இழந்து, அதன் எல்லையோர மாகாணங்கள் (கொம்புகள்) அரசியல் சுயாதீனம் பெற்றன. வரலாற்றில் “இந்த காலக் கட்டத்திலிருந்து தான்” கொம்புகளில் கிரீடங்கள் இருக்கும் நிலையை அடையாளமாய் காட்டப்பட்டிருக்கிறது. இந்த பத்து கொம்புகளில் ஒன்று தான் கிரீடம் சூட்டப்பட்ட போப்பு மார்க்கமாகிய 'சின்ன கொம்பு' ஆகும். இந்த 'போப்பு மார்க்க கொம்பு', மற்ற சிறிய கொம்புகளாகிய நாடுகளின் தலைமைகளுக்கு 'தெய்வீக உரிமை' வழங்கும் அதிகாரமுடையதாய், ஆவிக்குரிய ஆளுமையை உணர்த்தும் “திருச்சபை கிரீடத்தை“ அணிந்துள்ளது. மற்ற கொம்புகளைப் போல வெறும் சிவில் அதிகாரத்தை உணர்த்தும் கிரீடத்தை போப்பு மார்க்கம் அணிந்திருந்தால், இத்தகைய அபரிமித அதிகாரத்தை மற்ற நாடுகளின் மீது செலுத்த இயலாது.

போப்பு மார்க்க ஆதிக்கம் மேலோங்கிய ரோம ராஜ்ஜீயத்தின் 7 தலைகளில் முதல் தலையாக 'ஜஸ்டினியன்' பேரரசனைக் குறிக்கலாம். ஏனெனில், கொம்புகளுக்கு சுயாதீன அதிகாரங்களை வழங்குவதற்கு வழி வகுத்தது. முதல் தலையாகிய ஜஸ்டினியனைச் சேரும்.

**சிறுத்தை போன்ற மிருகத்தின் தலையில் தேவ தூஷணமான நாமங்கள் இருந்தன :**

சபையும் அரசாங்கமும் இணைந்து செயல்படும் அம்சம் தேவனுடைய பார்வையில் அருவருப்பான வேசித்தனம் ஆகும்; ஆகவே இந்த முறையற்ற இணைப்பு தேவ தூஷணமாக தலையில் குறிக்கப்பட்டுள்ளது.

**வெளி 13 : 2 .**

**நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது .**

தானியேல் 7ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள முதல் மூன்று மிருகங்களாகிய சிவில் அதிகாரங்களான பாபிலோன் , பெர்சியா மற்றும் கிரேக்க ராஜ்ஜீயங்கள் ஒவ்வொன்றும் தம் பிரத்தியேக விசேஷித்த அம்சங்களினால் மிகுந்த வல்லமை பெற்று விளங்கின. அவற்றின் பழைய முயற்சிகள் அனைத்தும் புதிய மிருகமான சிறுத்தையில் சாத்தான் உள்ளடக்கினான்; ஆகவே இந்த 'போப்பு மார்க்க ஆதிக்க அமைப்பு' நீண்ட காலத்திற்கு வல்லமை பொருந்தியதாக விளங்கியது.

**சிறுத்தையைப் போல :** (எரே 13 : 23 ஐ பார்க்க)

ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய் மாதிரி மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபட்டு தன் காரியத்தை சாதித்து கொள்ளும் வண்ணம் மிருகம் உருவ அமைப்பு கொண்டுள்ளது. உடலிலுள்ள புள்ளிகள் சமயத்திற்கேற்றவாறு தன் கொள்கைகளை முன்னுக்குப்பின் முரணாக சுய லாபத்திற்கு உபயோகிக்க கூடியதை உணர்த்துகிறது. கிரேக்க ராஜ்யத்தைப் போல நாகரீக மேம்பாடும் உயரிய கல்வியறிவின் இருப்பிடமாக போப்பு மார்க்கம் தன்னை விசேஷித்துக் காட்டியது.

**கரடியின் கால்களைப் போல :**

தானியேல் 7 : 5ல் பெர்சிய சாம்ராஜ்யத்தின் உருவகமாக விளங்கிய கரடி மற்றவர்களை பயமுறுத்தும் தோற்றத்தில் காணப்படுகிறது. போப்பு மிருகம் தன் பிரமாண்ட தோற்றத்தில் தனக்கு சவாலாக வரும் அனைத்து சக்திகளையும் அடி பணிய வைக்கும் வல்லமை கொண்டதாயுள்ளது.

**சிங்கத்தின் வாய் போல :** (தானியேல் 4 : 30; 3 : 19)

பாபிலோனிய பேரரசன் நேபுகாத்நேச்சாரின் தற்புகழ்ச்சியும், தானியேலின் நண்பர்களை எரியும் சூளையிலிட கட்டளையிட்ட கொடூரமும் போப்பு மார்க்கத்திலும் காணப்படுகிறது. பெருமையானவைகளை பேசும் குணமும், பரிசுத்தவான்களை துன்புறுத்தும் கொடூரமும் போப்பு மார்க்கத்தின் அம்சங்களாக தானியேல் 7 : 8, 20, 25ல் குறிக்கப்படுகிறது.

**வலுசர்ப்பமானது தன் பலத்தையும் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது :**

புற மத ரோம சாம்ராஜ்யம் நலிவுற்று, கிறிஸ்தவம் ராஜ்ஜீய சிவில் அதிகாரங்களுடன் இணைந்து தான் மிருகத்தின் மிகுந்த அதிகாரத்திற்கு வழி வகுத்தது.

**பலம் :** கிறிஸ்தவத்தை ரோம சாம்ராஜ்யத்தின் தேசிய மதமாக கான்ஸ்டண்டைன் ஏற்படுத்தியது தான் மிருகத்திற்குக் கொடுக்கப்பட்ட முதல் உண்மையான பலம் ஆகும்.

**சிங்காசனம் :** ' சிங்காசனம் ' என்பது ' தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை ' குறிக்கிறது. பேரரசன் ஜஸ்டினியன் ' முதன்மை மத ஆளுநர் ' பதவியை போப்புவுக்கு அர்ப்பணித்த காலத்திலிருந்து சின்ன கொம்பாகிய போப்பு மார்க்கம் மிருகமாகிய ரோம சாம்ராஜ்யத்தை காட்டிலும் மேன்மையான அந்தஸ்து பெற்று தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை (சிங்காசனத்தை) தன்னகத்தே கொண்டு விளங்கியது.

இதையே வெளி 2 : 13ல் பெர்கமு சபைக்கு சொல்லும் போது (பூமியிலே தன்னை உயர்த்தி காண்பிக்கும் காலம்) ' சாத்தானுடைய சிங்காசனம் ' என்று மிருகத்தின் இருப்பிடம் (ரோமிலிருந்து சிவில் அதிகாரம் கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றப்பட்டதால் மிருகத்துக்கு ரோமாபுரி விசேஷித்த வாசஸ்தலமாக மாறியது) குறிக்கப்பட்டுள்ளது.

**மிகுந்த அதிகாரம் :** போப்பு மார்க்கம் மத ஆளுமை பதவி மட்டுல்லாமல் , சிவில் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் ' மிகுந்த அதிகாரம் ' வலுசர்ப்பத்தால் (சிவில் அதிகாரம்) கொடுக்கப்பட்டது. ரோம பேரரசன் சார்ல்மேகன், போப்புவை தனக்கு முடி சூட்ட அனுமதித்தான். ' ஓட்டோ ' பேரரசன் தன் ராஜ்யத்திற்கு 'புனித ரோம சாம்ராஜ்யம்' **(HOLY ROMAN EMPIRE)** என பெயர் சூட்டி போப்பு மார்க்கத்தின் அந்தஸ்தை உலகுக்கு பறை சாற்றினான்.

இவ்வாறாக, வலுசர்ப்பம் போப்பு மார்க்கத்திற்கு ' மிகுந்த அதிகாரத்தை ' கொடுத்தது.

**வெளி 13 : 3.**
**அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது; பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி .**

கிரேக்க மூலத்தில் ' மிருகத்தைக் ' குறிப்பிடும் போது உயர்திணையிலும், 'தலையை' குறிப்பிடும் போது அஃறிணையிலும் சொல்லப்பட்டுள்ளது.

தலை காயப்பட்டு செத்திருந்தால், வேறொரு தலை இல்லாத பட்சத்தில் மிருகத்துக்கு முடிவு (சாவு) ஏற்பட்டிருக்கும்.

'மிருகம்' என்பது 'சின்ன கொம்பிற்கும்' 'சிவில் அதிகாரத்திற்கும்' இடையே உள்ள கூட்டமைப்பு ஆகும். 'சின்ன கொம்பு' பல நூற்றாண்டுகளாக தன்னுடைய தனித்துவத்தை தக்க வைத்துக் கொண்டாலும், தலைகள் (ராஜ்ஜீய முறைமைகள் - SYSTEM OF GOVERNMENT) மாறிக்கொண்டிருந்தன.

**முதல் தலை :**

ரோம பேரரசன் ஜஸ்டினியன் (தலை) ராஜ்ஜீய ஆளுநராகவும், போப்பு (சின்ன கொம்பு) முதன்மை மத ஆளுநராகவும் இருந்தனர்.

**இரண்டாம் தலை :**

ரோம சாம்ராஜ்யம் இரண்டாக பிளவு பட்டு, கிழக்கு ரோம பேரரசு தொடர்ந்து கான்ஸ்டாண்டிநோபிளை தலைநகரமாக கொண்டு இயங்கி வந்தது. இதிலிருந்து சுயாதீனம் பெற்று, புதிய அரசு ரோமாபுரியை தலைநகரமாக கொண்டு, சார்ல் மேகன் தலைமையில் மேற்கு ரோம பேரரசு உருவானது. போப்புவின் சூழ்ச்சியினால் , சார்ல் மேகன் போப்புவினால் முடி சூட்டிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டான். பிறகு இதற்காக வருத்தப்பட்டான். இருப்பினும், அடையாளப்பூர்வமான இந்த செயல், மற்றும் மேற்கு பேரரசில் அமையப்பெற்ற இந்த ஏற்பாடு, ஒரு புதிய தலையாக (புதிய ராஜ்ஜீய முறைமையாக) உரு பெறுகிறது.

**மூன்றாம் தலை :**

கி.பி. 962ல் பேரரசன் ஒட்டோ (OTTO THE GREAT) தலைமையில் “புனித ரோம பேரரசு“ என்ற பெயரில் சிவில் அதிகாரம் அழைக்கப்பட்டது. சின்ன கொம்பின் ஆதிக்கம், மேற்கு ரோம பேரரசின் புதிய பெயரில் விளங்குகிறது. இந்த முறைமை அரசாங்கம், மேற்கு பேரரசை கிழக்கு பேரரசிலிருந்து முற்றிலும் தனியாகப் பிரித்தது.

இந்த மூன்றாம் தலையாகிய “புனித ரோம பேரரசு“ க்கு, மறுமலர்ச்சி காலத்தில் (REFORMATION) சாவுக்கேதுவான காயம் ஏற்பட்டு, இந்த 'மேற்கு பேரரசை' சிதைவு பெறும் நிலைக்குத் தள்ளியது.

**நாலாம் தலை : சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது :**

“புனித ரோம பேரரசு“ முற்றிலும் அழியாமல், அதே பெயரில் வேறொரு தலையுடன் (4ம் தலை) (அதாவது, புதிய அமைப்பு ஒழுங்குடன்) காணப்பட்டது. வெஸ்ட்பாலியா சமாதான உடன்படிக்கையைத் (PEACE OF WEST PHALIA) தொடர்ந்து இது நடந்தது.

**ஐந்தாம் தலை :**

“புனித ரோம பேரரசு“ நெப்போலியனால் கி.பி. 1806ல் முழுவதுமாக அழிக்கப்பட்டு 5 ம் தலை உருவானது.

**பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி :**

போப்பு மார்க்க ஆதிக்கம் மிகுந்த ரோம பேரரசிற்கு மறுமலர்ச்சி பெரும் சவாலாக இருந்து, இந்த கட்டமைப்பு ஆட்டங்கண்டது. இருப்பினும், இதற்கு வந்த ஆபத்தை மேற்கொண்டு தன் நிலையை, ஸ்திரப்படுத்தி கொண்டது, உலக மக்கள் பார்வையில் நம்ப முடியாத அளவிற்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. காயப்பட்ட மிருகம் சொஸ்தமாகி எழும்பி நின்றது. அதற்கு சிறிய அளவில் உறுதுணையாக வசனம் 12ல் குறிப்பிட்டுள்ளபடி இரண்டு கொம்புகள் உள்ள மிருகத்தின் வருகை கிறிஸ்தவ-ரோம பேரரசு கூட்டமைப்பிற்கு ஒரு ஆசீர்வாதமாக அமைந்தது. இங்கிலாந்தில் உருவான இரண்டு கொம்புகளுள்ள மிருகத்தின் (ஆங்கிலிகன் சபை) வருகையினால், மற்ற ஐரோப்பியர்கள் அதற்கு பதிலான வேறொரு அமைப்பாக பத்து கொம்புகளாலான மிருகத்தை அங்கீகரித்தனர்.

**வெளி 13 : 4.**
**அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள்; அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார் ? அல்லாமலும், மிருகத்திற்கு ஒப்பானவன் யார் ? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.**

**அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள் :**

போப்பு மார்க்கமும், சிவில் அதிகாரமும் ஒன்றையொன்று தங்களிடையே சார்ந்திருப்பது தவிர்க்க முடியாததாகும்; “எங்களுடைய ஆவிக்குரிய (மத) தலைமை போப்பு மார்க்கமே ! நாங்கள் ஆட்சி செய்வதற்கான தேவ உரிமையை எங்களுக்கு போப்பு மார்க்கம் அளித்துள்ளது“ என்று ரோம பேரரசு அறிவிக்கிறது.

இந்த சூழ்நிலையில், ஜனங்கள் ரோம பேரரசுவுக்கு (சிவில் அதிகாரத்திற்கு) தங்கள் ஒத்தாசையைக் கொடுக்கின்றனர்; இது, போப்பு மார்க்கம் ஒரு பெரும் மிருகமாக உருவெடுக்க வழி வகுத்தது.

**மிருகத்திற்கு ஒப்பானவன் யார் ?**

கத்தோலிக்க 'புனித ரோம பேரரசு' வின் கீழிருந்த சில பகுதிகள் புரோட்டஸ்டாண்ட் பிரிவின் ஆதிக்கத்திற்கு வந்தாலும், இன்னும் அந்த அமைப்பு பெரிதும் விஸ்தாரமாக வேரூன்றிய நிலையில் உள்ளது, ' அந்த மிருகத்திற்கு ஒப்பானவன் யார் ? ' என்ற கேள்வி பொருத்தமாகவே இருந்தது.

**அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார் ?**

போப்பு - ரோம பேரரசை யார் எதிர்க்க முடியும் ? மறுமலர்ச்சிக்குப் பிறகு சிறிது பாதிப்பு இருந்தாலும் மீண்டும் பலம் பெற்றது. பிற்காலத்தில், நெப்போலியன் முயற்சித்தாலும் போப்பு-ரோம பேரரசை அழிக்க இயலவில்லை. அவன் 'சிவில் அதிகாரத்தை' அழித்தாலும், கிறிஸ்தவ - ராஜ்ஜீய இணைப்பை (மிருகத்தை) அழிக்க இயலவில்லை.

**மிருகத்தையும் வணங்கினார்கள் :**

போப்பு மார்க்கத்தை வணங்கவில்லை. போப்பு மார்க்கத்துடன் இணைந்த ராஜ்ஜீய அமைப்பை வணங்கினார்கள். இந்த மிருகத்திலிருந்து போப்பு மார்க்கம் (வேசி) தனியாக பிரிக்கப்பட்டு செயல்படும் நிலை வெளி 17ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

**வெளி 13 : 5.**
**பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது . அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது .**

(தானி 7 : 8, 11, 25ம் வசனங்களை ஒத்துப்பார்க்கவும்).

பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது :

போப்பு மார்க்கம் ' தலை ' அல்ல; தீர்க்கமான கண்களும் வாயும் உடைய கொம்பு ; போப்பு மார்க்கம் குரைக்கும் தன்மை உடையது; “ சிவில் அதிகாரம் “ கடிக்கும் தன்மை உள்ளது.

**நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது :**

போப்பு மார்க்கம் பொதுவாக அரசாங்கங்கள் (சிவில் அதிகாரங்கள்) மூலம் மறைமுகமாக தன் காரியங்களை செய்யும். ஆனால் , இந்த அதிகாரம் அரசாங்கங்கள் துணையுடன் 42 மாதங்கள் முடிவுற்ற கி.பி. 1799 வரை எந்த எதிர்ப்பும் சவாலும் இல்லாமல் தன் காரியத்தைத் தொடர்ந்தது.

**வெளி 13 : 6.**

**அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து , அவருடைய நாமத்தையும் , அவருடைய வாசஸ்தலத்தையும் பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது .**

போப்பு மார்க்கம் பொய்களைப் பேசி தேவனைத் தூஷிக்கும் தன்மையை பொதுவான வழக்கமாகக் கொண்டிருந்தது.

**முதலாவது தூஷணம் : நாமம்**

தேவனுடைய சுபாவத்தை திரித்து காண்பித்து தன் கள்ள போதகங்களால் பெரும்பாலான மக்கள் தேவனைப் பற்றி அறியும் அறிவை இழக்கச் செய்தது.

**இரண்டாவது தூஷணம் : வாசஸ்தலம்**

தேவனுடைய கூடாரமும் தேவாலயமும், தேவத் திட்டங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தும் நிழலாய் இருந்தன. ஆசரிப்பு கூடாரம் ரட்சிப்பின் (மீட்பின்) திட்டத்தை குறிக்கும் நிழலாய் உள்ளது. ஆனால், தேவனுடைய திட்டங்களின் மையக்கூறுகளை பாழ்படுத்தி, பூசை பலியையும், மற்ற அருவருப்புகளையும் கிறிஸ்தவத்தில் உலவச் செய்து தேவனுடைய கூடாரத்தை தூஷித்தது.

**மூன்றாவது தூஷணம் : பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்கள்**

பரிசுத்த ஆலயம், ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம், பரம வாசஸ்தலம் என பரிசுத்தவான்களின் பரலோக வாசம் பற்றி பவுல் அப்போஸ்தலன் எபே 2 : 21; 2கொரி 6 : 16; 2கொரி 5 : 2ம் வசனங்களில் குறிப்பிடுகிறார். போப்பு மார்க்கத்தின் மூன்றாவது தேவ தூஷண இலக்கு பரிசுத்தவான்கள் ஆவர்.

தானியேல் 7 : 25ல் (1). உன்னதமானவர் (2). பரிசுத்தவான்கள் (3). தேவத்திட்டத்தின் கால பரிமாணங்கள் ஆகிய மூன்றின் பேரில் இலக்கு வைத்து போப்பு மார்க்கம் தேவ தூஷணம் பேசியது.

**வெளி 13 : 7.**

**மேலும் , பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி , அவர்களை ஜெயிக்கும்படிக்கு. அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர் மேலும் , ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது .**

“பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி , அவர்களை ஜெயிக்கும்படிக்கு.அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதல்லாமல்”. இந்த வசனப்பகுதி போலி என கருதப்படுகிறது.

**ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர் மேலும், ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது :**

மிருகத்தின் தற்போதைய இலக்கு “ ஜனங்கள் “. அமைதியற்ற ஜனத்திரள் மேல் போப்பு மார்க்கம் தன் ஆதிக்கத்தை செலுத்துகிறது.

இவ்வாறாக, மிருகத்திற்கு மூன்று விதமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன :

1. ஆளுகை செய்யும் மிகுந்த அதிகாரம் (வசனம் 2).
2. பரிசுத்தவான்களை ஒடுக்கும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய அதிகாரம் (வசனம் 5).
3. ஜனத்திரள் மேல் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் (வசனம் 7).

**வெளி 13 : 8.**

**உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.**

பூமியின் குடிகள் : ஆவியில் ஜநிப்பிக்கப்படாதவர்கள்.
பரிசுத்தவான்கள் : ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்கள். ஆட்டுக்குட்டியானவரை மாதிரியாய் பின்பற்றி, சாவை ஒரு பொருட்டாக எண்ணாதவர்கள் . ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டுள்ளவர்கள். மிருகத்தை இனம் கண்டு அதை வணங்காதவர்கள்.

**வெளி 13 : 9.**

**காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்.**

மெய் திருச்சபையின் அங்கங்களாக முன்குறிக்கப்பட்டவர்கள். காதுள்ள இவர்கள் கேட்பார்கள். இவர்களே மிருகத்தை ஜெயங்கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

**வெளி 13 : 10.**

**சிறைப்படுத்திக் கொண்டுபோகிறவன் சிறைப்பட்டுப்போவான் ; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும்; பரிசுத்தவான்களுடைய பொறுமையும், விசுவாசமும் இதிலே விளங்கும்.**

தேவனுடைய சட்டங்கள் இவைகளே. கண்ணுக்கு கண். பல்லுக்கு பல் 1ம் வசனத்திலிருந்து 8ம் வசனம் வரைக்கும் மிருகத்தின் நீண்ட கால செயல்பாடுகள் விவரிக்கப்பட்டன. இவை எல்லாவற்றிலும் பொறுமையையும் , விசுவாசத்தையும் கடைப்பிடித்து , பாபிலோனுக்கு வரும் அழிவினை எதிர்பார்த்திருக்கும் பரிசுத்தவான்கள் ஜெயங்கொள்வார்கள் என்ற படிப்பினை இங்கு குறிக்கப்படுகிறது.

**இரண்டு கொம்புகளுள்ள மிருகம் :**

மறுமலர்ச்சியின் தாக்கத்தினால் பத்து கொம்புகளுடைய மிருகம் காயப்பட்டது. மதமும், அரசும் இணைந்த இந்த அமைப்பு முற்றிலும் சிதைவு பெற்ற சமயத்தில், பத்து கொம்புகளுள்ள மிருகத்தினின்று முற்றிலும் வேறுபட்ட இரண்டு கொம்புகளுள்ள மிருகம் மதமும் அரசியலும் இணைந்த வேறொரு அமைப்பு (இங்கிலாந்து சபை) தோன்றியது. இதைத் தொடர்ந்து, இதே பாணியில், பத்து கொம்புகளுள்ள மிருகம் மீண்டும் செயல்பட வழி வகுத்தது. இதன் விளைவாக, சொஸ்தமாகி புத்துணர்வு பெற்றது. புரோட்டஸ்டாண்ட்டுகளின் ஆதிக்கம் பெற்ற நாடுகளை தவிர்த்து, மீதமுள்ள கத்தோலிக்க ஐரோப்பிய நாடுகள் போப்பு மார்க்கத்துடன் தங்கள் இணைப்பை உறுதி செய்தது.

**வெளி 13 : 11.**

**பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன் ; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து , வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது .**

இந்த இரண்டு கொம்புகளுள்ள மிருகம், பத்து கொம்புகளுள்ள மிருகத்தைப் போல அமைதியற்ற குழப்பமான நிலையிலிருந்து உருவாகாமல், ஏற்கனவே பின்பற்றிவரும் முறைமைகளுடன் கூடிய சமுதாய அமைப்பிலிருந்து சுமூகமாக உருவானது. “ இரண்டு கொம்புகள் ” என்பது இங்கிலாந்து, அயர்லாந்து என்ற இரு நாடுகளின் சிவில் அதிகாரங்களைக் குறிக்கின்றன. இவ்விரு நாடுகளும் சபையோடு (ஆங்கிலிகன் சபை) இணைந்து செயல்படும் விதத்தில் அமைந்தது.

**ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக :**

இரண்டு கொம்புகளுள்ள மிருகம் (இங்கிலாந்து-அயர்லாந்து - கிறித்தவ அமைப்பு) ஆட்டுக்குட்டியைப் போல சாதுவாக செயல்பட்டது. ஆனால் வெளி 13 : 1, 2ல் குறிப்பிட்ட 10 கொம்புகளுள்ள சிறுத்தையைப் போலிருந்த மிருகம் (புனித ரோம பேரரசு) முற்றிலும் வேறுபாடாயிருந்தது.

**வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது :**

இங்கிலாந்து சாம்ராஜ்யத்தில் சபைக்கு தலைவர் ' ராஜா ' ஆவார். இங்கிலாந்து அரசு - மதக்கட்டமைப்பில் அரசியல் ரீதியான அம்சங்கள் அதிகம் வெளிப்படும். மதக் கொள்கைகளில் பெரும் மாற்றங்கள் நடக்க வாய்ப்பு இல்லை. இந்த இரண்டு கொம்புகளால் குறிக்கப்படும் அரசியல்-மத இங்கிலாந்து கூட்டமைப்பில் அரசியல் அதிகாரங்கள் மேலோங்கி இருக்கும். இந்த மிருகத்தைப் பற்றிய தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள், அரசியல் அம்சங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்க வாய்ப்பு உண்டு.

**வெளி 13 : 12 .**

**அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து , சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் , அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது .**

முந்தின மிருகத்தின் (10 கொம்புகள் உள்ள சிறுத்தை போன்ற) அதிகாரம் முழுவதையும் இரண்டு கொம்புகளுள்ள மிருகமான "அரசியல்-மத இங்கிலாந்து கூட்டமைப்பு" அதின் முன்பாக நடப்பித்தது.

1. ஆளுகை செய்யும் மிகுந்த அதிகாரம்.
2. ஜனக்கூட்டம் மேல் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம்.
3. பரிசுத்தவான்களை ஒடுக்குவது.

முந்தின மிருகத்திற்கு கொடுக்கப்பட்ட 1260 வருட அனுமதி இங்கிலாந்து மிருகத்திற்கு கிடையாது. இங்கிலாந்து மிருகத்தின் கொடுங்கோண்மை இந்த வசனத்தில் குறிக்கப்படுகிறது.

10 கொம்பு மிருகத்தில் "போப்பு மார்க்கம்" வாயாக செயல்படுகிறது.
2 கொம்பு மிருகத்தில் " ராஜா" வாயாக செயல்படுகிறார்.

**சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும், அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது :**

முந்தின மிருகத்தின் காயம் மறுமலர்ச்சியினால் உண்டானது. இங்கிலாந்து அரசர் ஹென்றி VIII, இங்கிலாந்து சபையை நிறுவி மதத் தலைமையையும் ஏற்றார். இந்த புதிய அரசியல் - மத இணைப்பு , ரோமமிருகம் சொஸ்தமாக ஏதுவானது. மத கொள்கைகளிலும், அரசியல் - மத கூட்டமைப்பிலும் ஒரே மாதிரியைப்பின்பற்றிய இங்கிலாந்து மிருகம் தன் செயல்பாட்டினால் ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ரோம மிருகத்தை பூமியின் குடிகள் வணங்குவதற்கு வழியமைத்தது.

இங்கிலாந்து அமைப்பு, போப்பு மார்க்க தலைமையை ஆதரித்த 'துரோகிகளை' சங்கரித்தது. அதே சமயம் போப்பு கொள்கைகளையே தன்னகத்தே கொண்ட இங்கிலாந்து அமைப்பு "மத விரோத கொள்கைவாதிகளை" (HERETICS) எரித்தது. இரண்டு மிருகங்களுக்கும் பெரிய அளவில் வித்தியாசம் இல்லை. இரு அமைப்புகளுக்கும் உள்ள பகைமை அவற்றின் வாய்களே. ( அரசர் / போப்பு ).

**வெளி 13 : 13.**
**அன்றியும் , அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்கள நடப்பித்தது .**

**பெரிய அற்புதங்கள் :**
இங்கிலாந்து அரசியல்-மத அமைப்பு தன் கொள்கைகளையும், நடைமுறைகளையும் பூரணமாக செயல்படுத்துவதில் தன் முழு அதிகாரங்களையும் பிரயோகித்ததை குறிக்கிறது.

**வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக :**
அக்கினி என்பது தீர்ப்புகளையும் , அதனால் உண்டாகும் அழிவுகளையும் குறிக்கிறது. வானம் என்பது மத உலகம். மதத்திற்கு எதிரான கொள்கையுடையவர்கள் மீது இங்கிலாந்து சபை அமைப்பின் தீர்ப்புகளும் அதைத் தொடர்ந்த தண்டனைகளும் மிகவும் கொடூரமானவை.

**மனுஷருக்கு முன்பாக :**
இங்கிலாந்து சபைக்கு எதிரான கொள்கையாளர்களுக்குரிய தண்டனை எல்லா மனுஷருக்கு (உண்மை கிறிஸ்தவர்களுக்கு) முன்பாக பொது இடங்களில் நிறைவேற்றப்பட்டன. சபையின் இந்த கொடூர நடவடிக்கைகள் தன் கொள்கைக்கு எதிரானவர்களுக்கு பயமுறுத்தலாகவும், எச்சரிப்பாகவும் அமைந்ததன் காரணமாக, அதிருப்தியாளர்கள் அநேகர் இங்கிலாந்தை விட்டு அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தனர்.

**வெளி 13 : 14.**
**மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கி , பட்டயத்தினாலே காயப்பட்டு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று .**

இங்கிலாந்து சபை தம் மதக் கொள்கைகளை எதிர்ப்போரிடம் காட்டும் தீர்ப்புக்களின் உக்கிரமான தண்டனைகளால், ஜனங்களின் மத்தியில் தன் விசேஷித்த வல்லமையை உணரச்செய்து பொய்யை உண்மையென நம்பச் செய்யும் வல்லமை கொண்டிருந்தது. ஆவியில் ஜநிப்பிக்கப்படாத, இவ்வுலக காரியங்களில் இழுப்புண்ட ஜனங்களே மோசம் போனார்கள். **பட்டயத்தினாலே காயப்பட்டு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று .**

**பூமியின் குடிகள் :**
மறுமலர்ச்சியில் பங்கு கொண்ட புரோட்டஸ்டாண்டுகளில் பெரும்பாலோர் பரிசுத்தவான்கள். சொரூபம் பண்ண வேண்டிய ஆலோசனைக்கும், இவர்களுக்கும் தொடர்பில்லை. உலக காரியங்களில் ஈடுபாடு கொண்டு சுய லாபத்திற்கு ஏதுவாக புதியதொரு அமைப்பை ஏற்படுத்தி ஆதாயம் பெற விழையும் ' பூமியின் குடிகள் ' தான் சுரூபம் பண்ண பின்னணியாக இருந்தனர்.

இரண்டு கொம்புகளுள்ள மிருகம் , பத்து கொம்புகளுள்ள மிருகத்திற்கு ஒரு சுரூபம் பண்ண பூமியின் குடிகளுக்கு ஏன் சொல்லியது ? உண்மை என்னவென்றால், இந்த இரண்டு கொம்புகளுள்ள மிருகம் , பத்து கொம்புகளுள்ள மிருகத்தைப் போன்ற எல்லா பண்புகளும் நிறைந்த ஒரு சுரூபமே ! ஆகவே தான், இது பூமியின் குடிகளுக்கு தான் செய்ததைப் போன்றே , மற்றவர்களும் முயற்சி செய்ய தூண்டுதலாய் இருந்தது.

கத்தோலிக்க அரசியல், சமூக, பொருளாதார சமுதாயமானது புரோட்டஸ்டாண்டு உலகத்தை இழந்ததால், அப்பகுதிகளிலிருந்து வருவாய் சம்பாதித்து செல்வாக்கு அடைய சந்தர்ப்பமில்லாதிருந்தது. அந்த வியாபார சந்தையைக் கைப்பற்ற புரோட்டஸ்டாண்டு பிரிவுகள் அனைத்தையும் ஒரு கூட்டமைப்பாக ஒன்றிணைத்தால், அந்த புதிய அமைப்பு , காயப்பட்டு சொஸ்தமடைந்த மிருகத்தின் சாயலாக (சொரூபம்) உருவெடுக்க வாய்ப்பிருந்தது.

**வெளி 13 : 15.**

**அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படிக்கு அதற்கு சத்துவங் கொடுக்கப்பட்டது .**

“புரோட்டஸ்டாண்டு சபைகள் கூட்டமைப்பு“ தான் இந்த சொரூபம் ஆகும் . இந்த சொரூபம் உருவாக இங்கிலாந்து மிருகம் மிகப் பெரிய தூண்டுதலாக இருந்ததை வரலாற்றின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்து சாம்ராஜ்யம் தன் வல்லமை மிகுந்த சிவில் அதிகாரம் மூலமாகவும் , மத ஆதிக்க துணைகொண்டும் புரோட்டஸ்டாண்டு பிரிவினரை ஒன்று சேர்த்து கூட்டமைப்பு ஏற்படுத்தும் முயற்சியில் முக்கிய பங்கு உண்டு.

இந்த சொரூபத்திற்கும், தானியேல் 3 : 1ல் குறிப்பிட்டுள்ள சிலைக்கும் ஒற்றுமை இருப்பதை காணலாம். வெளி 13 : 18ல் ரோம மிருகம், இலக்கம் 666 என குறிக்கப்படுகிறது. தானியேலின் சொரூபம் (சிலை) 60 முழம் உயரம் , 60 முழம் அகலம் என்று இந்த அளவுகள் இரு பரிமாணங்களைக் கொண்டவை . இதற்கு ஆழம் இல்லை . இதே போன்று வெளி 13 : 15ல் உள்ள மிருகத்தின் சொரூபமும் (புரோட்டஸ்டாண்டு சபைகள் கூட்டமைப்பு) இரு பரிமாணங்களைக் கொண்டதாகவே கருத வேண்டியுள்ளது . அதாவது, மிருகத்தைப் போன்ற பெரிதான வல்லமை , கீர்த்தி, அதிகாரம் ஆகியவற்றை பெற வாய்ப்பு இல்லை. இருப்பினும், புரோட்டஸ்டாண்டு சபைகள் கூட்டமைப்பு சுவாசம் பெற்று இயங்கி வருகிறது. இந்த கூட்டமைப்பில் இடம்பெறாவிட்டால், அவற்றின் நியமங்களுக்கு இணக்கமாக செயற்படாத பிரிவினர் புறம்பாக்கப்படுவர்.

**வெளி 13 : 16.**

**அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையாவது பெறும்படிக்கு :**

**இவர்கள் யாவரும் :** எவ்வித பேதமில்லாமல் எல்லாரும் ஒரே நிலையில் நடத்தப்படுவதைக் குறிக்கிறது. இவ்வுலகத்தில் செல்வாக்கு படைத்தவர்களாயிருந்தாலும், வசதிபடைத்தவர்களாயிருந்தாலும், அறிவு படைத்தவர்களாயிருந்தாலும், கருத்து சுதந்திரமுடையவர்களாயிருந்தாலும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் அனைவரும் தங்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கி (வலது கையில்), முழு மனதோடு (நெற்றியில்) கூட்டமைப்பில் தங்களை இணத்துக் கொண்டதற்கான அடையாளம் (குறி, முத்திரை) பெற வேண்டும்.

**வெளி : 13 :17.**

**அந்த மிருகத்தின் முத்திரையையாவது , நாமத்தையாவது , அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வெறொருவனும் கொள்ளவும் , விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது .**

ஆவிக்குரிய சந்தையில் பிறர் கருத்துக்களை சுதந்திரமாக ஏற்றுக்கொள்ளவோ அல்லது தம் கருத்துக்களை பிரஸ்தாபப்படுத்தவோ இயலாத சூழ்நிலை உருவாகி உள்ளது. சத்திய வெளிச்சம் பெற்றவர்கள் பாரம்பரிய மதக் கோட்பாடுகளில் நம்பிக்கையுடையோர் மற்றும் புரோட்டஸ்டாண்டு சபைகள் கூட்டமைப்பின்

சந்தையிலிருந்து படிப்படியாக புறம்பாக்கப்படுவார்கள். சத்தியங்கள் வெளிப்பட அக்கூட்டமைப்பில் வாய்ப்பில்லை. கூட்டமைப்பிற்கு ஒத்துழைப்பு நல்கி இணக்கமாய் நடப்பவர்களுக்கு, அதாவது முத்திரையைப் பெற்றவர்கள் மட்டுமே ஆவிக்குரிய சந்தையில் பரிமாற்றங்கள் செய்ய இயலும்.

**மிருகத்தின் நாமம் :**

"நாமம்" என்பது குணாதிசயத்தைக் குறிக்கிறது. கூட்டமைப்புடன் ஒத்துழைக்க நாட்டம் கொள்வது மட்டுமன்றி, மிருகத்தின் குணாதிசயங்களை தன்னிலே நிலைத்திருக்கச் செய்பவர்களைக் குறிக்கிறது.

**நாமத்தின் இலக்கத்தையாவது :**

"நாமம்" என்பது குணத்தைக் குறிக்கிறது என்பதைப் பார்த்தோம்; "இலக்கம்" (எண்) என்பது "மதிப்பு" என பொருள்படும். "நாமத்தின் இலக்கம்" என்பது ஒருவரது குணங்களின் மதிப்பைக் குறிக்கிறது; அதாவது, கூட்டமைப்பில் உங்கள் பங்கீடு மதிப்பு வாய்ந்ததாய் உபயோகமாக இருந்தால் உஙகளுக்கு பாதுகாப்பு உண்டு. தம் கூட்டமைப்பிற்கு நீங்கள் மதிப்பு சேர்ப்பவராக இருக்கும் வரையில் அவர்கள் உங்களை பயன்படுத்திக் கொள்வர். வரலாற்றினை நோக்குங்கால், 10 கொம்புகளுடைய மிருகம் இதே யுத்தியை பயன்படுத்தி வந்துள்ளது.

வெளி 13 : 18.
**இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது ; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு .**

தானியேல் 12 : 10ல் குறிப்பிட்டுள்ளபடி தேவ கிருபை பெற்ற ஞானவான்களே அறிந்து கொள்வர். மற்றவர்கள் விளங்க இயலாது.

**அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன் :**

இந்த 'இலக்கம்' (எண்) பத்து கொம்புகளுள்ள மிருகத்திற்கு தொடர்பு உடையது ; தன் சாயலில் தான் சொரூபம் உருவாக்கப்பட்டது ; (வசனம் 14). இலக்கம் என்பது மதிப்பைக் குறிக்கிறது; மிருகத்தினுடைய மதிப்பின் அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட இலக்கம் கணக்கிடப்பட வேண்டியதாய் இருக்கிறது. அதற்கு மிருகத்தின் "நாமம்" தேவைப்படுகிறது. "நாமம்" குணலட்சனத்தைக் காட்டுகிறது. ரோம மிருகமாகிய போப்பு மார்க்கம் மிகுந்த அதிகாரமும் பலமும் பெற்று கள்ள போதகங்களால் தன்னை பூமியிலே தேவனைப் போல நிறுத்தி , "தேவ குமாரனின் பிரதிநிதி" **(VICARIUS DE FILLI DEI)** என்ற நாமத்தை தரித்து தேவனை தூஷித்தது.

**அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு :**

பவுல் அப்போஸ்தலன் இந்த மனுஷன் "பாவ மனுஷனை", "கேட்டின் மகன்" (2 தெச 2 : 3, 4) என அடையாளங் கண்டார் ; இது போப்பு மார்க்கமே !

**அவனுடைய இலக்கம் 666 :**

" **VICARIUS DE FILII DEI** " என்ற பதத்தில் உள்ள எழுத்துகளின் ரோம எண்களை கூட்டினால் 666 வருகிறது.

எபிரேய பதம் **ROMITH** என்பதின் கூட்டுத்தொகை 666. இதில் எபிரேய எழுத்துக்களை உபயோகப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| R | = | 200 |
| O | = | 6 |
| M | = | 40 |
| I | = | 10 |
| I | = | 10 |
| TH | = | 400 |
| | | ------- |
| | | 666 |
| | | ------- |

கிரேக்க பதம் **LATEINOS** என்பதின் கூட்டுத்தொகை 666. இதில் கிரேக்க எழுத்துக்களை உபயோகப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| L | = | 30 |
| A | = | 1 |
| T | = | 300 |
| E | = | 5 |
| I | = | 10 |
| N | = | 50 |
| O | = | 70 |
| S | = | 200 |
| | | ------- |
| | | 666 |
| | | ------- |

அதிகாரம் 14 : 1 - 5 வசனங்கள், 13ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாக சேர்க்கப்பட வேண்டியது. 13ம் அதிகாரத்தின் இறுதியில் மிருகத்தின் நாமத்தை தரித்தவர்களைப் பற்றிய விவரிப்பு முடிந்தவுடன், அடுத்து, மிருகத்தின் நாமத்தை தரிக்காது , பிதாவின் நாமம் தங்களின் நெற்றியில் எழுதப்பட்டிருந்த விவரங்கள் தொடர்ச்சியாக 14ம் அதிகாரத்தின் முதல் 5 வசனங்கள் விவரிக்கின்றன. இத்துடன் ஒரு காட்சி முற்றுப் பெறுகிறது.

வெளி 14 : 6ம் வசனம் தொடங்கி புது தரிசனம் (அறுவடை) விவரிக்கப்படுகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 14 ம் அதிகாரம்

## அறுவடை அறிமுகம் : கிறிஸ்துவும் ஆறு தூதர்களும்

வெளிப்படுத்தல் 14ம் அதிகாரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

வசனங்கள் : 6 - 12 ( மூன்று தூதர்கள் )
வசனங்கள் : 13 - 14 ( இயேசு )
வசனங்கள் : 15 - 20 ( மேலும் மூன்று தூதர்கள் )

**6 - 12 ம் வசனங்கள் :**

இங்கு காணப்படும் மூன்று தூதர்களும் அறுவடை தூதின் மூன்று கூறுகளைக் குறிக்கிறது. இவர்களின் செய்திகளின் தீவிரம் ஒன்றை ஒன்று மிஞ்சும் வகையில் அதிகமாகி வருவதைக் காணலாம்.

முதல் தூதன் **உபதேசம்** பண்ணுகிறான் .
இரண்டாம் தூதன் **கண்டனம்** செய்கிறான்.
மூன்றாம் தூதன் **எச்சரிக்கை** செய்கிறான்.

இந்த தூதுகள் நமது சிந்தனையின் வளர்ச்சியை உணர்த்துகின்றன. அதாவது, சொந்த அனுபவங்களில் அறுவடை கால சத்தியங்களை அறிந்து கொள்வதில் நாம் எவ்விதம் முன்னேறுகிறோம் என்பதைக் காட்டுகிறது.

1. முதலில் நாம் தூதைக் கேட்கிறோம்.
2. பிறகு வரலாற்று கிறிஸ்தவத்தின் இழிந்த (அசுத்தமான) கொள்கைகளை தெளிவுற அறிகிறோம்.
3. கடைசியாக, தேவனால் உதறித் தள்ளப்பட்ட இந்த அமைப்புகளின் பங்காக இருப்பதின் அபாயங்களைக் கண்டு, அதிலிருந்து நம்மை தனிமைப்படுத்திக் கொள்ளும் கடமையை உணருகிறோம்.

**வெளி 14 : 6.**
**பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன். அவன் பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து .**

**முதலாம் தூதன் :**
" வேறொரு தூதன் " என்ற பதம் மூலப் பிரதிகளில் இல்லை. "ஒரு தூதன்" என்று தான் மூலப் பிரதிகளில் உள்ளது. இவன் தான் முதல் தூதன். இவனுக்கு முன் ' வேறு தூதன் ' இந்த தூதில் இல்லை; ஆகவே , ' வேறொரு தூதன் ' என்ற பதம் சரியான அர்த்தம் கொண்டதாக இல்லை.

இந்த முதலாம் தூதன் அறுவடை தூதை ஆரம்பிக்கிறான். அவன் வானத்தின் மத்தியிலே **பறக்கிறான்** . " பறப்பது " என்பது தேடுதலின் கருவியாகும். (இது கோதுமை மணிகளைத் தேடும் நிலை). வானமாகிய கிறிஸ்தவ மத உலகத்தின் மத்தியில், எந்த ஒரு பிரிவினரையும் சாராமல் தூதன் நேரடியாக செயல்படுகிறான். அவன் நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருக்கிறான். எல்லா யுகங்களின் நற்செய்திகளின் தொகுப்பாக இந்த சுவிசேஷம் விளங்குகிறது.

எல்லா நிலங்களிலும் அறுவடை செய்வதற்கான தூதாக இது உள்ளது; ஏனெனில் , இந்த தூது **இரு பிரிவினருக்கும்** உபதேசிக்கப்படுகிறது :

1. பூமியிலே வாசம் பண்ணுகிறவர்கள் : (நடை முறையில் செயலாக்கப்பட்ட கிறிஸ்தவ மரபு அமைப்புகளின் பிடியில் வேறூன்றி இருப்பவர்கள்).
2. சகல ஜாதிகள், கோத்திரத்தார், பாஷைக்காரர், ஜனக்கூட்டத்தார் : (கிறிஸ்தவ சமய மரபுகளில் வலுவான உறவு இல்லாத மக்கள்- இவர்களிலிருந்து தான் திருச்சபையும், திரள் கூட்டத்தாரும் தேர்வு பெறுகின்றனர்) .

இந்த தூது மேற்குறிப்பிட்ட இரண்டு பிரிவினருக்கும் (வானத்தின் ஒரு முனை கொண்டு மறுமுனை வரைக்கும்) அறுவடை தூது பிரகடனப்படுகிறது. (மத் 24 : 31).

**வெளி 14 : 7.**
**மிகுந்த சத்தமிட்டு : தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள் ; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது ; வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்.**

தூதனுடைய சத்தம் பெரிதாயிருந்தது. வரலாறு இதை நமக்கு உணர்த்தியுள்ளது. இந்த தூது இதற்கு முன்பு நடந்த எந்த சீர்திருத்தத்தையும் மிஞ்சிய அளவில் தெளிவான முறையில் பிரகடனமாகவும், எழுத்துக்களின் பிரசுரமாகவும் வெளிப்பட்டன !

[ இந்த தூதுவின் மையக் கருத்து ' தேவனை தொழுதல் ' ஆகும். சிருஷ்டிகளை தொழாதே; சிருஷ்டிகரை தொழுதுகொள். இதை தவிர வேறு எந்த வழியிலும் சத்தியத்தை அறிய இயலாது. மத உலகத்தை தொழாதே (வானம்) ; சமுதாயத்தை தொழாதே (பூமி); சுதந்திரங்களை நாடும் பெருங்கூட்டத்தினரை (சமுத்திரம்) தொழாதே; சத்தியம் வெளிப்பட காரணமாயிருந்தவர்களை, அதாவது பரிசுத்தவான்களை (நீரூற்றுகளை) தொழாதே ].

ஆனால் , ஜனங்கள் மேற்குறிப்பிட்ட சிருஷ்டிப்புகளையே வணங்கினர். அவைகளைப் படைத்த “ அவரை “ வணங்கவில்லை.

**அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது :**
தேவனைத் தொழுது கொள்ளுவதற்கான கவனத்தை ஈர்க்கும் விதமாக தூது இருப்பதற்கு காரணம்,நியாயத் தீர்ப்பின் வேளை நெருங்கியுள்ளது ஆகும். இது அறுவடையின் வேளை (நேரம்) ஆகும். சிருஷ்டிகரைத் தொழாமல் சிருஷ்டிகளை தொழுபவர்கள் அனைவரும் இந்த நியாயத்தீர்ப்பில் தோல்வியை சந்திப்பார்கள். இது அறுவடை நாள் அல்ல; இது வேளை ! இது ஆயிர வருட தீர்ப்பின் துவக்கமே; இந்த தூது ஆயிர வருடம் முழுமைக்கும் உள்ளதாயிராமல், அதன் ஆரம்ப காலத்திற்கு உரியதாயிருக்கிறது; இந்த தீர்ப்பின் துவக்கம் முதலில் போலி கிறிஸ்துவத்தை அளந்து, அறிவிப்பதுவே ; அதன் பிறகு, தனி மனித தீர்ப்பு ஆரம்பமாகும்.

**வெளி 14 : 8.**
**வேறொரு தூதன் பின்சென்று : பாபிலோன் மகாநகரம் விழுந்தது ! விழுந்தது ! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே ! என்றான்.**

**இரண்டாம் தூதன் :** முதலாம் தூதனின் தூதை தொடர்ந்து, இரண்டாம் தூதனின் தூது வருகிறது; முதலாம் தூதனை “அறுவடையின் தூதன்“ என்று அழைத்தால், இரண்டாம் தூதனை “ தீர்ப்பின் தூதன் “ என்று அழைப்பது பொருத்தமே !

வெளிப்படுத்தல் ஆகமத்தில் முதன் முதலாக "பாபிலோன்" அறிமுகப்படுத்தப்படுகிறது. "பாபிலோன்" என்ற அடையாள வார்த்தையின் விவரங்கள் இந்த வசனத்தில் பெருமளவில் காணப் படுகின்றன. வரலாற்றை நோக்கும் போது, பாபிலோன் ஒரு நகரமாகவும், ஒரு ராஜ்யமாகவும் இருந்தது. அதைப் போலவே, இந்த அடையாள பாஷையில் குறிக்கப்படும் "பாபிலோன்" ஒரு தலை நகரமாகவும், தனி அதிகாரஅமைப்பாகவும் இருக்க வேண்டும். (இது 'மகா நகரம்' என வர்ணிக்கப்படுகிறது). உண்மையான பாபிலோன் ஒரு பெரும் சாம்ராஜ்யமாக திகழ்ந்தது போல, இந்த பாபிலோனும் பெரும் செல்வாக்குடன் இருக்க வேண்டும். இது "அவள்" என பெண்மையில் குறிக்கப்படுகிறது. அடையாள பாஷையில் "ஸ்திரீ" என்பது ஒரு 'சபை' அல்லது 'உடன்படிக்கை' என அர்த்தம் பெறும்; ஆனால், இந்த 8ம் வசனத்தில் காணப்படும் விவரங்களுக்கு ஒத்த விதமாக எந்த உடன்படிக்கையும் இல்லை ! இவள் ஒரு கன்னிகை இல்லை. ஆகவே, இவள் ' உண்மை சபை ' கிடையாது. போலிச் சபையைக் குறிக்கிறது.

இந்த பாபிலோன் (போலிச் சபை) தன் எல்லைகளைத் தாண்டி உலகளவில் செல்வாக்குப் பெற்றிருந்ததை, அவள் சகல ஜாதிகளுக்கும் மதுவை குடிக்கக் கொடுத்ததில் விளங்குகிறது. அவளது பிரதான பாவம் ' வேசித்தனம் '. அதாவது, சபையும் ராஜ்யமும் இணைந்த உறவு. அவளுடைய தலையாகிய கிறிஸ்துவுக்கு அவள் இழைத்த துரோகம் வெறுப்பூட்டியது. அவருடைய வருகைக்கும், மணவாட்டியாக அவருடன் ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்கும் காத்திராமல், அவள் ராஜ்ஜீய அதிகாரங்களுடன் இணைந்து ஆளுகை செய்தாள். மதமும் அரசியலும் இணைந்த இந்த கொள்கைகளினால் (கோபாக்கினையின் மதுவினால்) சகல ஜாதிகளையும் குடிக்க வைத்தது, (நிலையற்றதும், தெளிவான சிந்தனை சக்தி இல்லாமல்) கடந்த இரண்டாயிரம் வருடங்களாக ஐரோப்பா முழுவதும் குழப்பமான ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவ காரணமாய் அமைந்தாள்.

பாபிலோனின் விழுகை கி.பி. 1878 க்கு நிர்ணயிக்கப்பட்டதை காலக் கணக்கு மூலம் வேதாகம துணை கொண்டு அறியலாம். 13ம் வசனத்தை ஆராயும் பொழுது இந்த விவரம் நமக்கு தேவைப்படுகிறது.

**வெளி 14 : 9 - 12 .**

**அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து , மிகுந்த சத்தமிட்டு மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ,**
**அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமான மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.**

**அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.**
**தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்.**

**மூன்றாம் தூதன் : ( வசனங்கள் 9 - 12 )**

இத்தூதனை "கொள்ளை நோயின் தூதன்" என்று அழைக்கலாம். அவனுடைய தூது இதுவே. (வெளி 18 : 4). 13ம் அதிகாரத்தில் காணப்படும் பாத்திரங்களையும், அவைகளுடன் தங்களை இணைத்துக் கொண்டு அவைகளைப் பின்பற்றுவோரை எச்சரிக்கிறது.

**அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமான மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். (10 ம் வசனம்)**

இந்த வசனத்தில் , அறுவடை நேரத்தின் விளைவுகளை காண்கிறோம். தேவ கோபாக்கினையால் போலிச் சபைகள் அழிக்கப்படும்போது, அவற்றுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ள அனைவரும் பெரும் வாதைக்கு பங்காளிகளாவார்கள். இந்த வாதை அவர்களுக்கு மன வேதனையைத் தரும். பழைய வேதப்புரட்டுக்களையும், அதை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளையும் அக்கினி அழிக்கிறது. அக்கினி அழிக்க தவறியதை கந்தகம் முழுமையாக அகற்றிவிடும். இந்த அழிவுகள் பரிசுத்த தூதர்கள் மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் முன்பாக நடக்கிறது. அதாவது இயேசு வந்து விட்டார்; அறுவடை செய்யப்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள் அவருடன் கூட நின்று, மீதியான கிறிஸ்தவத்திற்கு நிகழ்பவற்றை காண்கின்றனர்.

**அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும் : (11 ம் வசன பகுதி)**

அக்கினியினாலும், கந்தகத்தினாலும் சுட்டெரிக்கப்பட்டதின் சாட்சியாக புகை எங்கும் எழும்புகிறது. இந்த கொள்கை பேதங்கள் (அசத்தியங்கள்) அழிவு பெறுவது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒளிவு மறைவு இல்லை. இந்நிலை யுகம் முடியும் வரை தொடரும்.

**மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது : (11 ம் வசன பகுதி)**

ஆட்டுக்குட்டியானவருடன் இருப்பவர்கள் இளைப்பாறுதல் பெறுவார்கள். மத் 11 : 28. போலிச் சபைகளை விட்டு வெளிவராதவர்களுக்கு வாதை தொடர்ந்து (இரவு பகல்), நாளுக்கு நாள் மோசமடையும்.

இந்த வசனத்தில் "அதினுடைய நாமத்தின் முத்திரையை" பற்றி சொல்கிறது. இது மிருகத்தின் பெயரினால் குறிக்கப்படும் அதன் ' பண்பு ' ஆகும். ஒரு இலக்கம் அதன் பெயரை அடையாளமாகக் காட்டுகிறது. அந்த இலக்கத்தை கணக்குப் பார்க்க வேண்டும். அந்த இலக்கத்தின் கூட்டுத்தொகை 666. இது போப்பு மார்க்கத்தின் பிரதான சிறப்பு பட்டங்களில் ஒன்று. இந்த ' சிறப்பு பெயர் ' வாடிகன் நகர வாசலில் முன்பு பதிக்கப்பட்டிருந்தது. அது, "**தேவ குமாரனுக்குப் பதிலாக இருப்பவர்**" (VICARIUS FILII DEI) என்று பொருள்படும். ரோம எண்களில் இந்த பெயரின் கூட்டுத்தொகை 666 ஆகிறது. இந்த நாமத்தின் முத்திரையின் (666) முக்கியத்துவம், அதன் நடத்தையில் (பண்பில்) வெளிப்படுகிறது. இயேசுவின் அதிகாரத்தை தகாத முறையில் உரிமை கொண்டாடி, அதன் மூலம் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மையைக் காட்டுகிறது. இது தான் வெளி 2 ம் அதிகாரத்திலுள்ள நிக்கொலாய மதஸ்தர் என அடையாளம் காட்டப்படுகிறது.

**தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான் : (12 ம் வசனம்)**

இந்த வசனம் மிக முக்கியமானது. 6ம் வசனத்திலிருந்து சொல்லப்பட்ட அனைத்து விஷயங்களும் சுருக்கமாக இங்கு திரட்டிச் சொல்லப்படுகிறது. இந்த எல்லா வாதைகளும் நீட்டிக்கப்படுவதினால் பரிசுத்தவான்களின் பொறுமை இதில் விளங்கும் என்று கூறப்படுகிறது. இந்த வாதைகள் கி.பி. 1878 முதல் (8ம் வசனம்)

இன்று வரையிலும் தொடரும் சூழ்நிலையில் இது நம் விசுவாசத்திற்கு ஏற்படும் சோதனை என்று கூறலாம். இந்த முழு அறுவடைகாலப்பகுதி நீடிக்கும் என நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. "விசுவாசத்தைக் காத்துகொள். விட்டு விடாதே. தாமதித்தாலும், அதற்கு காத்திரு".

**வெளி 14 : 13.**

**பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கண்டேன்; அது : கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று .**

**மரிக்கும் பரிசுத்தவான்கள் :** 12 ம் வசனம் நம்மை தளர்ச்சி அடையும் விதத்தில் இருப்பதாக தோன்றினாலும், 13ம் வசனம் ஆறுதல் அளிக்கும் விதத்தில் இடையில் காணப்படுகிறது;

"இந்த போலிச் சபைகளின் அழிவு முழுமை பெறுவதற்கு வெகு காலம் காத்திருக்கும் நிலையில், இந்த காலப்பகுதியில் நீ மரித்தால், நீ நித்திரையில் நீடிப்பதில்லை; ஒரு கணநேரத்தில் நீ மறுரூபமாக்கப்படுவாய் (1கொரி 15 : 51, 52). ஏனெனில், நீ இப்பொழுது கடைசி எக்காளம் தொனிக்கின்ற காலத்தில் (ஏழாம்) இருக்கிறாய். வெளி 14 : 8ம் வசனத்தில் நாம் பார்த்த வண்ணம், பாபிலோனின் விழுகையைத் தொடர்ந்து கி.பி. 1878 லிருந்து அந்த விசேஷித்த ஆசீர்வாதம் உரித்தாகிறது. இயேசுவுக்குள் நாம் மரித்தவர்களாய் (மாம்சீகத்தில் பலியின் ஜீவியம் மேற்கொண்டு) இருக்கிறோம். அவருடைய மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 6 : 3). அதிலிருந்து நாம் சாகிறோம்; இது முதல் நாம் மரித்தால் (சொல்லர்த்தமாக), நம் பிரயாசங்கள் (ஊழியத்தின் மிகுதியினால்) முடிவடையும். ஆனால், நம்முடைய ஊழியம் (தேவனைத் துதித்தலும், சேவித்தலும்) திரைக்குப் பின்னால் பிரயாசம் இல்லாமல் தொடரும். இளைப்பாறுதல் பெறுவோம்".

திருச்சபையின் பாத அங்கங்கள் குறித்த விஷயங்கள் மேற்கண்டவாறு விளங்க ஏதுவாகிறது.

**வெளி 14 : 14.**

**பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின் மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய் தமது சிரசின்மேல் கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.**

**அறுவடை செய்யும் கர்த்தர் :**

இது 13ம் வசனத்தின் தொடர்ச்சி இல்லை. 14ம் வசனத்திலிருந்து அறுவடையைப் பற்றிய விஷயங்களை ஒரு புதிய கோணத்தில் பார்க்கிறோம். 13ம் வசனத்திற்கு சிறிதும் தொடர்பு இல்லாமல், 14ம் வசனம் 'அறுவடையைப்' பற்றிய புதிய பார்வையை விவரிக்க முற்படுகிறது.

"மேகம்" என்பது உபத்திரவத்தைக் குறிக்கிறது. ஆனால், இந்த மேகம் வெண்மையாய் இருக்கிறது. இது நீதிக்குரிய உபத்திரவம். ஏனெனில், இது இந்த யுகத்தின் அநீதத்தன்மையை அகற்றும்; கர்த்தரின் கோபாக்கினை இதுவே. இயேசு வந்து இருக்கிறார். வெளிப்படுத்தல் ஆகமத்தின் வழக்கப்படி, இவர் 'இயேசு' என்று சொல்லாமல், 'மனுஷ குமாரன்' என்று குறிக்கப்படுகிறார். இதில் ஒரு விசேஷம் என்னவெனில், **இவர் மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார் !** "உட்காருதல்" என்பது " கட்டுப்பாடு செய்தல் " என்று அர்த்தம் ஆகும். இந்த உபத்திரவங்கள் ஏதோ தானாக ஏற்படுவது அல்ல. இது மனுஷ குமாரனுடைய கட்டுப்பாட்டிற்குள் நடக்கும் உபத்திரவம் ! இந்த உபத்திரவங்கள் எவ்வளவு மோசமான நிலையை எட்டினாலும், அது மனுஷ குமாரனுடைய கட்டுப்பாட்டை மீறி எதுவும் நடக்காது என்பது நமக்கு நம்பிக்கையான விஷயம்.

அவருடைய சிரசில் பொற்கிரீடம் (தெய்வீக அதிகாரம்) உள்ளது. அவருடைய கையில் கருக்குள்ள அரிவாள் (அறுவடை செய்யும் கருவி) உள்ளது. இந்த காட்சி நமக்கு எதை உணர்த்துகிறது ?

ராஜாவின் வருகை ஒரு சமாதான ராஜ்யத்தை உடனடியாக நிறுவுவதற்காக இல்லை என்றும், பாபிலோனை அழிவிக்கும் வாதையை உச்ச நிலையை எட்டாமல் கட்டுப்படுத்தவும், கோதுமை மணிகளை அறுவடை செய்வதுமே முதல் நோக்கமாகத் தெரிகிறது.

**மேலும் மூன்று தூதர்கள் :**

இயேசு வந்திருக்கும் சமயத்தில் அவர் செய்யவேண்டிய வேலைகளுக்கு சம்பந்தபட்டவர்களாக மேலும் மூன்று தூதர்கள் இங்கு தரிசனத்தில் காட்டப்படுகிறார்கள். வசனம் 14ன் தொடர்ச்சியே 15ம் வசனத்தின் நிகழ்வு; நடுவில் எந்த இடைவெளியும் கிடையாது. இந்த கடைசி மூன்று தூதர்களைப் பற்றிய சுருக்கத்தை கீழே காணலாம் :

**4 ம் தூதன் :** தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான். (வசனம் 15)

**5 ம் தூதன் :** பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான். (வசனம் 17 & 19)

**6 ம் தூதன் :** பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வந்தான். (வசனம் 18)

**4 ம் தூதன் :** கர்த்தருக்கு செய்தி சொல்கிறான்.

**5 ம் தூதன் :** செய்தி எதுவும் சொல்லவில்லை. ஆனால் அரிவாளைப் பிடித்திருந்தான்.

**6 ம் தூதன் :** 5 ம் தூதனுக்கு ஒரு செய்தியை சொல்கிறான்.

**வெளி 14 : 15, 16.**

**அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து நோக்கி, புறப்பட்டு, மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி : பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்கு காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.**

**அப்பொழுது மேகத்தின் மேல் உட்கார்ந்திருந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது :**

**நாலாம் தூதன் :**

' தேவாலயம் ' என்பது தேவனுடைய திட்டங்களை குறிக்கும். இந்த தூதன் இயேசு செய்ய வேண்டியவைகளைக் குறித்து சொல்கிறான். இந்த அதிகாரம் எப்படி வந்தது ? இந்த தூதன் கடவுள் அல்ல. இது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது தம் பிதாவின் திட்டமாகையால், இயேசு அந்த தூதன் சொல்லும் தூதைக் கேட்கிறார். "அறுக்கிறதற்கு காலம் வந்தது" . தேவனால் நிர்ணயிக்கபட்ட காலக் கணக்குப்படி இயேசு செயல்பட ஆரம்பிக்கிறார். இந்த காலக்கணக்கு தான் **மிகுந்த சத்தம்** ! மில்லர் காலத்தில் தான் கிறிஸ்தவ உலகம் விழிப்படைந்தது. மத் 25 : 1 - 13; தேவ தூதனின் இந்த செய்தியின் நோக்கம் என்ன ? பூமியின் பயிர் முதிர்ந்தது. அறுக்கிறதற்கு காலம் வந்தது ! இது பூமியின் அறுவடை ஆகும்; பூமி என்பது என்ன ? அப் 1 : 8 ன் ' பூமி ' , மத் 28 : 19ம் வசனத்தில் உள்ள 'சகல ஜாதிகள்' என்பதைக் குறிக்கும்; முதிர் பயிராகிய கோதுமை மணிகளை தேடுதல் பணி இதுவே ! தூதன் சொன்னவிதமாக இயேசு பூமியில் அறுவடை செய்கிறார் (வசனம் 16). அதாவது திருச்சபை முடிவு பெற்றது. 1,44,000 பேர்கள் மகிமை அடைவதை வசனம் 16ன் இறுதி பகுதி தெரிவிக்கிறது. " பூமியின் விளைவு அறுப்புண்டது ".

**வெளி 14 : 17.**
**பின்பு வேறொரு தூதன் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான்.**

**ஐந்தான் தூதன் :**

இந்த தூதன் எந்த தூதும் சொல்லவில்லை. இவன் "பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து" வந்தான். அதாவது, தேவனுடைய திட்டத்தின் "வேறொரு பகுதியை" செயற்படுத்த அவன் வருகிறான். அது என்ன ? அது பூமியின் மத உலகத்தைப் பற்றியது ஆகும். இயேசு பிடித்திருந்தது போலவே, அவனும் அறுவடை செய்யும் கருவியாகிய அரிவாளைப் பிடித்திருந்தான். எதற்காக ? வசனம் 16ன்படி திருச்சபை முடிவு பெற்றுவிட்டது. பிறகு அறுவடை செய்ய வேறு என்ன மீதியாக உள்ளது ? அறுவடை என்பது ' பரிசுத்தவான்களை தேர்ந்தெடுப்பது ' மட்டுமல்ல. களைகளை சுட்டெரிப்பதும் தான். இந்த 1,44,000 பேர்கள் மகிமையடைந்த பட்சத்தில், இக்கடைசி அறுவடையை செய்பவர் யார் ? "திரள் கூட்டத்தார்களே". இந்த தூதன், திரள் கூட்டத்தாருக்கு அடையாளமாய் இருக்கிறான். இவனைப் பற்றிய விஷயத்தைப் பிறகு பார்ப்போம்.

**வெளி 14 : 18.**
**அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து , கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி : பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது. கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்.**

**ஆறாம் தூதன் :**

இந்த தூதன் அக்கினியின்மேல் அதிகாரமுள்ளவனாய் பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். இந்த தூதன் யார் என்று முழுமையாக விளங்குகிறது. மெய் திருச்சபையினர் தம் வாழ்நாள் முழுவதையும் ஜீவ பலியாக பலிபீடத்தில் கழித்து, அவர்கள் ஒவ்வொருவரும் தம் தனிப்பட்ட பலிகளை முற்றிலும் நிறைவேற்றி பலிபீடத்தின் கீழே சாம்பலாயிருக்கிறார்கள். (வெளி 6 : 9, 10). அவர்களின் கிரியைகளினாலான விசுவாசத்தின் காரணமாக,அவர்களை துன்புறுத்திய (வெளி 2 : 26, 29) சகல ஜாதியினரையும்அழிக்கும்படியாக அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மகிமை அடைந்தவுடன் அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற அதிகாரத்தினால் அழிக்கும் (அக்கினியின் மேல் அதிகாரம்) வல்லமை பெற்றுள்ளனர். இந்த தூதன் "மகிமையடைந்த திருச்சபையைக்" குறிக்கிறான்.

இந்த ஆறாம் தூதன் பூமியில் இன்னும் இருக்கும் திரள் கூட்டத்தாரை (ஐந்தாம் தூதனை) நோக்கி, பூமியின் பழுத்திருக்கும் திராட்சப்பழங்களை (அசுத்தமான) அறுத்துவிடச் சொல்கிறான். இயேசு தம்மை மெய்யான திராட்ச செடி என்று கூறி, பொய்யான திராட்ச செடி இருக்கிறதை தீர்க்கதரிசனமாகக் கூறினார். அது தான் போலி கிறிஸ்தவ சபை- அதுவே இப்பொழுது முதிர்ச்சியடைந்து அசுத்தமான பழங்களை பிறப்பித்தது. அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

பூமியில் திரள் கூட்டத்தாரின் இறுதி நேரங்களைப் பற்றிய விவரங்கள் அதிகம் சொல்லப்படவில்லை. அறுவடை காலத்தின் இறுதி கட்டங்களில் பாபிலோனை தள்ளுண்டு போகச் செய்வதில் உதவியாக இருப்பர் எனத் தெரிகிறது. இந்த தூதன் ஆலையில் பழங்களை மிதிக்கவில்லை. ஆனால் அறுவடை செய்யப்பட்ட பழங்களை ஆலையில் போடுவதாகப் பார்க்கிறோம். பிறகு, இந்த பழங்கள் மிதிக்கப்படும். இதுவே அறுவடை கால காட்சியில் நடக்கும் நிகழ்ச்சி.

**வெளி 14 : 19.**
**அப்பொழுது அந்த தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினை யென்னும் பெரிய ஆலையிலே போட்டான்.**

"ஆலை" என்பது ரசம் எடுப்பதற்காக பழங்களை நசுக்கும் கருவியாக செயல்படுகிறது. இந்த ரசம் 'இரத்தம்' ஆகும். பாபிலோனின் ஜீவனை (இரத்தம்) நசுக்கி அழிக்கும் கருவியாக ஆலை இருக்கிறது. ஏசாயா 63 ல் கோபாக்கினை என்னும் திராட்சப் பழங்களை மிதிப்பதைப் பற்றி படிக்கிறோம். இந்த "மிதிக்கப்படும் செயல், நகரத்திற்கு புறம்பே நடக்கிறது".

**வெளி 14 : 20.**
**நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது. அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகி வந்தது .**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் இரண்டு நகரங்கள் மட்டுமே குறிக்கப்படுகின்றன :

**(1) புதிய எருசலேம்; (2) பாபிலோன்;**

புதிய எருசலேமுக்கு ' புறம்பே ' என்று பொருள் கொள்ள முடியாது. 14ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே நகரம் "பாபிலோன்" மட்டுமே. ஆகவே, இந்த 20ம் வசனத்தில் குறிக்கப்பட்டுள்ள நகரம் பாபிலோனைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. பாபிலோனால் தீட்டுப்படாத ஒரு இடத்தில் தான் (புறம்பே), பாபிலோனின் ' ஜீவன் ' (இரத்தம் - ரசம்) நசுக்கப்படும் எனத் தெரிகிறது.

என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் நாமத்தைத் தெரிவிப்பேன் (எசேக் 39 : 7) என தேவன் உரைத்திருக்கிறார். கடைசி கால உபத்திரவங்களிலிருந்து இஸ்ரவேலர்கள் எப்படி விடுவிக்கப் படுவார்களோ, அதே உபத்திரவங்களின் நடுவில் பாபிலோன் தன் ஜீவனை இழக்கும். பாபிலோன் நகரத்திற்கு புறம்பே நடக்கும் இந்த நிகழ்ச்சி அதன் பேரழிவை நமக்குக் காட்டுகிறது.

இரத்தம் (ஜீவன்) குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் வருகிறது. ' குதிரை ' என்பது ' கொள்கை ' என்றும், ' கடிவாளம் ' என்பது ' கொள்கையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ' என பொருள்படும். பாபிலோனில் ஜீவன் இல்லாத நிலையில், அது சத்தியத்தை புரட்டும் தன்மையை இழந்து விட்டதைக் குறிக்கிறது.

வசனம் 20ல் , 1600 ஸ்தாதி தூரம் (1600 பர்லாங்குகள்) என்று காணப்படுகிறது.

[ சீனாய்டிக் பிரதியில் " 1200 ஸ்தாதி தூரம் " என்று உள்ளது. இது " போஸ்றா பட்டணத்திலிருந்து யெஸ்ரயேல் " வரைக்குமுள்ள தூரம் ஆகும். ஆலையில் மிதிபடும் இடம் " போஸ்றா " என ஏசாயா 63 : 1 - 4ல் படிக்கிறோம். வேசி சபைக்கு அடையாளமான யேசபேல் சங்கரிக்கப்பட்ட இடம் யெஸ்ரயேல் ஆகும். (2இராஜா 9 : 10) ].

"1600 ஸ்தாதி தூரம்" என்பது சரி என்றால், அது பின்வருமாறு அடையாளமாக இருக்கிறதாகச் சொல்லலாம் :

முழுமையான சோதனைக் காலம் '40' என குறிக்கப்படுகிறது. 40 X 40 (யூபிலியைப் போல) என்பது சோதனையின் முடிவுக்கெல்லாம் முடிவாக '1600' என குறிக்கலாம். அதாவது, இது தான் "கடைசி சோதனை" என்று அறுதியிட்டு கூறலாம்.

கிரேக்க மொழியில் ஒரு ஸ்தாதி தூரம் என்பது பந்தய மைதானத்தின் சுற்றளவு ஆகும். கிறிஸ்தவ பந்தய இலக்கில் ( 40 X 40 ) நியாயந் தீர்க்கப்பட்டு, பாபிலோன் குறைவாகக் காணப்படுவதாக பொருள் கொள்ளலாம்.

சுருக்கமாக, 14 ம் அதிகாரத்தின் ஆறு தூதர்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம் :

முதலாம் தூதன் : அறுவடை செய்தியாளன்.

இரண்டாம் தூதன் : தீர்ப்பு பிரகடனப்படுத்துபவன்.

மூன்றாம் தூதன் : கொள்ளை நோயின் தூதன் அல்லது எச்சரிப்பின் தூதன்.

நான்காம் தூதன் : காலக் கணக்கு.

ஐந்தாம் தூதன் : திரள் கூட்டத்தார் ( மாம்சீக சரீரத்தில்).

ஆறாம் தூதன் : மகிமையடைந்த திருச்சபை.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 15 ம் அதிகாரம்

## பாபிலோனுக்கு எதிரான ஏழு வாதைகள் அறிமுகம்

**வெளி 15 : 1.**
**பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன். அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது .**

" கண்டேன் " (பார்த்தேன்) என்ற பதம் இந்த அதிகாரத்தில் மூன்று முறை (வசனங்கள் 1, 2, 5) வருகின்றது. நமது கவனத்தை ஈர்க்கும் விதத்தில் மூன்று விஷயங்களை யோவான் சொல்ல முற்படுகிறார்.

**வசனம் 1 :**
தேவனுடைய கோபத்தை முடிக்கும் வாதைகளையுடைய தூதர்களை இந்த முதல் பகுதியில் காண்கிறோம்; வாதைகளை அறிமுகப்படுத்துவது தான் இந்த வசனத்தின் நோக்கம்.

**வசனம் 2 - 4.**
வாதைகள் ஊற்றப்படும் இந்த அறுவடை காலத்தில், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களின் நிலையையும், அவர்களின் செயல்பாடுகளையும் குறித்து இரண்டாம் பகுதி நமது கவனத்தை ஈர்க்கிறது. இந்த வசனங்களில், அறுவடைக் கால வேலைகளில் மகிமையடைந்த பரிசுத்தவான்களின் பங்களிப்பு பற்றி தெரிவிக்கப்படுகிறது. (வெளி 14 : 13). அவர்கள் இன்னும் புதிய உடன்படிக்கையை இன்னும் செயற்படுத்தவில்லை. வெளி 15 : 8). ஆனால், பழைய ஒழுங்கு முறைகளை அழிப்பதில் (வாதைகள் ஊற்றப்படுவதில்) அவர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்குவார்கள்.

**வசனம் 5 - 8.**
இந்த மூன்றாம் பகுதியில் நமது கவனம் இரண்டு விஷயங்களில் ஈர்க்கப்படுகிறது:

1. தேவாலயமும், அதனுடன் தூதர்களுக்குள்ள தொடர்பு.
2. பரிசுத்தவான்களின் மகிமை ஆரம்பமானாலும் (கி.பி. 1878 முதல்), தேவனுடைய வாதைகள் முடிவு பெறும் வரையில் புதிய உடன்படிக்கை நடவடிக்கை இன்னும் வராது.

**வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளம் :**
இந்த சொற்றொடர் வெளி 12 : 3ல் காணப்படுகிறது. 15:1ன் அடையாளத்திற்கும், 12 : 3ன் அடையாளத்திற்கும் உள்ள பெரும் பேதம் (மாறுபாடு) தெளிவாகத் தெரிகிறது.

வெளி 15 : 1ல் காணப்படும் வேறொரு அடையாளம், 14ம் அதிகாரத்தில் காணப்படும் அடையாளங்களின் தொடர்ச்சியாக, அதாவது இணைப்பாகத் தெரிகிறது; 14ம் அதிகாரத்தின் பின்பாதியில் "வானத்தின் அடையாளம்" கோதுமை மணிகளையும், திராட்சபழங்களையும் அறுவடை செய்வதைக் குறிக்கிறதாக கொள்ளலாம்; அதிகாரம் 14ம், அதிகாரம் 15ம் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையது. பாபிலோன் மீது ஊற்றப்படும் வாதைகள் மூலமாக திராட்சப்பழங்களை அறுவடை செய்யும் பணி பெருமளவில் நடைமுறைபடுத்தப்படுகிறது.
தேவ கோபத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் உள்ளதால் இந்த வாதைகள் பெரிதாகவும்,இவைகள் தம் பணியை மற்றவர்கள் புரிந்து கொள்ள இயலாவண்ணம் அதிசயமாகவும் இருக்கிறது.

**ஏழு தூதர்கள் :**

ஏழு சபைகளுக்குரிய ஏழு தூதர்கள் (வெளி 2, 3ம் அதிகாரங்கள்) இவர்களே ! ஏழு எக்காளங்களை ஊதிய தூதர்களும் இவர்களே ! இதற்கான அத்தாட்சி பின்வருமாறு தெளிவாகத் தெரிகின்றது :

**முதற் சான்று :**

வெளி 17 : 1ல் ஏழு தூதர்களில் ஒருவன் யோவானிடம் தன்னை அறிமுகப்படுத்தி, அறுவடை காலப்பகுதியின் நிகழ்ச்சிகளை யோவானுக்கு விளக்கிக் காட்டுகிறான்; இந்த தூதன் ஒரு மனுஷன். (வெளி 19 : 10; 21 : 9; 21 : 17; 22 : 9). இந்த தூதன் சார்லஸ் ரசல். ஏழாம் சபையின் தூதனாக ஒருவரை அடையாளம் கண்டுவிட்டால், மற்ற ஆறு பேர்களையும் அனுமானிக்கலாம்.

**இரண்டாம் சான்று :**

இந்த ஏழு வாதைகளும் எவற்றை குறி இலக்காக கொண்டுள்ளதோ, அதே இலக்குகளை குறி பார்த்தே ஏழு எக்காளங்களும் வரிசைக்கிரமமாக ஊதப்படுகின்றன. எக்காளச் சத்தத்திற்கு "செவி கொடுக்கவில்லை". இந்த எக்காள எச்சரிப்பின் சத்தியங்கள் வாதைகள் மூலமாக அவர்களுக்கு வலியத் திணிக்கப்படுகின்றன.

**மூன்றாம் சான்று :**

இந்த ஏழு தூதர்களும் வாதைகளை "ஏற்கனவே தம் வசம் வைத்திருந்ததாக" பார்க்கிறோம்; இந்த தூதர்கள் மாமிச சரீரத்திலிருந்த போது எக்காளம் ஊதிய அதே சத்தியங்கள் தாம் இந்த வாதைகளையும் குறிக்கும் சத்தியங்கள். ஏழு எக்காள செய்திகளின் "திரட்டு" தான் வாதைகளாக உருவெடுக்கின்றன. எரிகோ பட்டணம் ஒரு நாளில் ஒரு முறையாக ஆறு நாட்கள் சுற்றி வரப்பட்டு, ஏழாம் நாளில் ஏழு முறை சுற்றப்பட்டு பட்டணம் இடிந்ததை குறிப்பது போல் உள்ளது. (யோசுவா 6ம் அதிகாரம்).

**அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது :**

நித்திய சமாதானத்தை வர காத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இது மகிழ்ச்சியான விஷயம்; வாதைகள் ஒவ்வொன்றும் முடிய, வாதையில்லாத அந்த நாள் நெருங்குகிறது என்பது வெளிப்படை !

**வெளி 15 : 2 .**
**அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.**

**அக்கினி கலந்த கண்ணாடி கடல் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த சொற்றொடர் இரண்டு முறை வருகிறது. (வெளி 4 : 6; 15 : 2). இங்கு குறிப்பிட்டுள்ள 'அக்கினி கலந்த கண்ணாடி கடல்' என்பது, அமைதியிழந்த மனுஷ சமுதாயத்தைக் குறிக்கக்கூடிய கடல் (சமுத்திரம்) என்ற அடையாள பாஷையில் இங்கு குறிக்கப்படவில்லை.

சுவிசேஷ யுகத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது (வெளி 4ம் அதிகாரம்), இந்த யுகத்தில் தேவன் தாம் நியமித்திருந்த திட்டங்களை நிறைவேற்றும் வகையில் பலவிதமான பொருட்கள் அடையாளங்களாக தேவனால் கையாளப்பட்டிருந்தன. அவற்றுள் 'கண்ணாடிக் கடல்' (கடல் தொட்டி) என்பதுவும் ஒன்று. கிறிஸ்துவை நாடி வருபவர்களுக்கு "சுத்திகரிக்கும் பொருளாக", களங்கமற்ற பரிசுத்த சத்தியங்களாகிய தண்ணீர் இருந்தது. ஆனால், யுகத்தின் முடிவில் (வெளி 15 : 2) , தேவனுடைய சத்தியங்கள் "தீர்ப்பளிக்கும் கருவியாகவும்" கூடுதல் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே தான், "கடல்" இப்பொழுது அக்கினியுடன் கலக்கிறது. "அக்கினி" என்பது 'தீர்ப்பின் கூறு' ஆகும். ஏழு தூதர்களால் பரிசுத்தவான்களை சுத்திகரிக்கும் பொருட்டு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட "அதே சத்தியங்கள்" இப்பொழுது மரணத்தை விளைவிக்க ஏதுவாகும் வாதைகளை பாபிலோனின் மேல் வலிய செலுத்தும் தீர்ப்பின் கருவியாக செயல்படுகிறது.

இதே கருத்து தான் பொன் தூப கலசம் பற்றிய விஷயத்தில் (வெளி 8 : 2; வெளி 8 : 5) கையாளப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களின் ஜெபங்களை ஊக்குவிக்கும் நோக்கில் முதலில் தூப வர்க்கங்கள் விளங்குகின்றன. அதே தூபவர்க்கங்களிலிருந்து நெருப்பு பூமியின் மேல் கொட்டப்பட்டு வாதைகளைக் குறிக்கிற தீர்ப்பின் செயலாக காட்டப்படுகிறது.

**மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் :**

**ஜெயங்கொண்டவர்கள் :**

வெளி 15 : 2 - 4ல் காணப்படும் விவரிப்பு வெளி 14 : 1 - 3ல் காணும் விவரிப்புக்கு தொடர்பு இருப்பது தெளிவாகவே இருக்கிறது. 14ம் அதிகாரத்தில், தரிசனம் "திரைச்சீலைக்குப் பின்னால்" நடக்கிறது. இது "அறுவடை காலம் முடிவடையும் போது" முழுவதுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சபையை (1,44,000 பேர்கள்) தரிசனத்தில் பார்க்கிறோம். ஆனால் வெளி 15 : 2 - 4ல் அறுவடைகால ஆரம்ப நிலையில் கி.பி. 1878 க்குப் பின் "மறுரூபமான திருச்சபை சரீரத்தின் ஒரு பகுதியைத்" தான் தரிசனமாகக் காண்கிறோம். அதாவது, வாதைகள் தொடங்குவதற்கு முன்பு உள்ள நிலையை இது காட்டுகிறது. பாபிலோன் மீது வாதைகளை ஊற்றும் பணியில் ஏழு தூதர்களுடன் "திரைச்சீலைக்குப் பின்னால்" மகிமையடைந்த பரிசுத்தவான்கள் பங்கெடுப்பதை இந்த வசனங்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றன. (வெளி 15 : 2 - 4). இந்த மகிமையடைந்த பரிசுத்தவான்கள், கண்ணாடிக் கடல் போன்ற தீர்ப்பின் சத்தியங்களை உபயோகப்படுத்துகின்றனர். "திரைச்சீலைக்குப் பின்னால் இருப்பவர்களுக்கு "அக்கினியின் மேல் அதிகாரம்" (வெளி 14 : 18) கொடுக்கப்பட்டு, 'கண்ணாடிக் கடலுடன்' (சத்தியங்கள்) செயல்படுகின்றனர். இவர்களுக்கு சகல ஜாதிகளின் மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டு (2 : 26, 27), அவர்களை மண்பாண்டங்கள் போல நொறுக்கி போடுவார்கள்.

இப்படியாக, யோவான் இந்த "ஜெயங்கொண்டவர்களை" காண்கிறார்.மேலும், முதலாம் உயிர்த்தெழுதல் ஆரம்பித்து விட்டதையும், (வெளி 14 : 13), மகிமையடைந்த பகுதியினர் 14ம் அதிகாரத்திலுள்ள அறுவடை பணியிலும், 16ம் அதிகாரத்திலுள்ள வாதை பணியிலும் பங்கு கொள்கிறார்கள் என்றும் யோவான் தெரிவிக்கிறார். இதையே வெளி 15 : 2 - 4ம் வசனங்கள் உணர்த்துகின்றன. வாதைகள் ஆரம்பம் ஆவதற்கு முன் (வசனம் 1க்கும் 5 க்கும் இடையே) இவர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுவது இதற்காகவே !

வெளி 14 : 8 - 12ல் குறிப்பிட்டுள்ளபடி, மிருகம் மற்றும் அதன் சொரூபத்தின் கறைபடாமல் அவைகளிடமிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்படும் நிலை தான், அவைகளுடன் நடக்கும் யுத்தத்தில் பரிசுத்தவான்கள் ஜெயங்கொள்வதைக் குறிக்கும்; "மாம்சத்திலிருக்கும் பரிசுத்தவான்களுக்கும்" இந்த ஜெயம் பொருந்தும்; கி.பி 1878 லிருந்து இன்று வரை நடைபெற்றுவரும் இந்த ஜெயங்கொள்ளுதலைப் பற்றி வெளி 14 : 8 - 12ல் வாசிக்கிறோம். பரிசுத்தவான்களுடைய இந்த நீண்ட கால காத்திருப்பு (கி.பி.1878 லிருந்து) அவர்களின் பொறுமையைக் காட்டுகிறது என்று வெளி 14 : 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளி 15 : 2ல் காணப்படும் விவரம் மகிமை அடைந்த பரிசுத்தவான்களைக் குறிக்கிறது.

**கண்ணாடிக் கடலருகே நிற்கிறதைக் கண்டேன் :**

“நிற்பது“ என்பது “ஜெயம்“ கொண்ட நிலையைக் காட்டுகிறது. சத்தியங்களை தீர்ப்புகளாக பாபிலோன் மீது செயற்படுத்தும் அதிகாரம் மகிமை அடைந்த பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. (வெளி 2 : 26, 27).

**தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு :**

வெளி 14 : 2ல், திருச்சபை முழுமை பெற்றவுடன் சுரமண்டலங்களை “வாசிக்கிறார்கள்”. இங்கு வெளி 15 : 2ல் சுரமண்டலங்களை வெறுமனே “பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்”. வாதைகள் முடிவு மட்டும் இவர்கள் சுரமண்டலங்களை இசைக்க இயலாது. புதிய உடன்படிக்கை ஏற்பாடு நடைமுறைக்கு வருவதற்கான முன்குறிக்கப்பட்ட காலம் வரையிலும் இவர்கள் சுரமண்டலங்களை இசைக்க இயலாது.

**வெளி 15 : 3.**
**அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி : சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும், ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.**

இந்த பாடல் வெளி 14 : 3ல் குறிப்பிட்டுள்ள புதிய பாடல் அல்ல; புதிய பாட்டை 144,000 பேர்களைத் தவிர வேறொருவரும் கற்றுக்கொள்ள கூடாதிருந்தது; அந்த புதிய பாட்டு பாடுவதற்கும், சுரமண்டலங்கள் இசைக்கப்படுவதற்கும் திருச்சபை முழுமையுடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

ஆனால், வெளி 15 : 3ல் குறிக்கப்படும் பாடல் மோசேக்கு தெரிந்த பாடல்; மோசேயின் பாட்டு உபாகமம் 32 ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. மோசேயின் இந்த பாட்டும், வெளி 14 : 3ன் புதியப் பாட்டும் தீர்ப்பை மையமாகக் கொண்டு உள்ளன.

இருப்பினும், மோசேயின் பாட்டு “பழைய ஏற்பாட்டு எழுத்துக்களை” குறிப்பதாகவும் உள்ளது. மோசேயை “ தேவனுடைய ஊழியக்காரன் “ என்று அழைப்பது நியாயப்பிரமாண ஒழுங்கு முறையை நினைப்பூட்டும் வண்ணம் உள்ளது.

ஆட்டுக்குட்டியானவருடைய பாடல் வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இது ராஜ்யத்தையும், நிறைவேறுதலின் காலத்தையுமே குறிக்குமாறு இருக்கலாம். இது 4ம் வசனத்தின் மூலம் உணரலாம்.

**சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே :**
மகிமையடைந்த நிலையில் பரிசுத்தவான்கள் ஆட்டுக்குட்டியானவருடன் இணைந்து தேவன்மேல் தம் கவனத்தை செலுத்துகின்றனர்; ஏனெனில், இந்த வாதைகளில் தேவனுடைய கோபம் முடிவடைகிறது.

**தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும், ஆச்சரியமுமானவைகள் :**
இது தேவனுடைய எல்லா கிரியைகளையும் குறிக்கிறது. இருப்பினும், வசனம் 1ல் குறிப்பிட்டிருக்கும் அதே சொற்றொடர் (பெரிதும் ஆச்சரியமுள்ள), இங்கு வசனம் 3 ல் காணப்படுகிறது. இது ஏழு தூதர்களாலும், மகிமையடைந்த பரிசுத்தவான்களாலும் செயற்படுத்த இருக்கும் வாதைகளையே தேவனுடைய கிரியைகளாக இங்கு முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது.

**பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள் :**

தேவனுடைய கிரியைகளில் பங்கு பெறும் பேறு பெற்றவர்கள் தேவனுடைய இரண்டு குணாதிசயங்களை பிரகடனப்படுத்துகின்றனர் : 1. நீதி அதாவது தீர்ப்பு 2. சத்தியம். இந்த இரண்டும் நீண்ட காலத்திற்கு முன்பே வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகள். (வெளி 6 : 10, 11). தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை இப்பொழுது செயற்படுத்துகிறார். தம் வார்த்தைகளுக்கு தேவன் உண்மையாயிருக்கிறார்.

வெளி 15 : 3ல் குறிப்பிட்டுள்ள "பரிசுத்தவான்களின் ராஜாவே" என்ற சொற்றொடர் பழமையான பிரதிகளில் "யுகங்களின் ராஜாவே" என்று காணப்படுகிறது. "யுகங்களின் ராஜாவே" என்ற சொற்றொடர் சரியானது என்று எடுத்துக் கொண்டால், தேவனுடைய நீதியும் சத்தியமும் வெளிப்படும் காலம் வரை, அதாவது நிர்ணயிக்கபட்ட காலம் வரை காத்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

**வெளி 15 : 4.**

**கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம் ? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.**

எல்லோரும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்பதே பரிசுத்தவான்களின் வாழ்வின் குறிக்கோள் ஆகும்; வாதைகள் ஊற்றப்பட்டு தேவனை அறியும் அறிவில் தேர்ச்சி பெற்றதும் எல்லோரும் அவரைப் புகழ்வார்கள். தேவனுடைய நீதி வெளிப்படும் தருணம் இதுவே.

**அதிகாரச் சுருக்கம் :**

வாதைகள் ஊற்றப்பட இருக்கின்றன. இதை குறித்து மகிமையடைந்த பரிசுத்தவான்கள் பெருமகிழ்ச்சியுறுகிறார்கள். வெளி 6 : 10, 11ல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மாறுத்தரமாக , பழைய முறைமைகளுக்கு எதிரான தீர்ப்புகளின் துவக்கமாக இருக்கும் வாதைகள் ஆரம்பமாக இருக்கின்றன. வசனம் 1க்கும் 5க்கும் நடுவில் உள்ள பகுதி, மகிமையடைந்த பரிசுத்தவான்கள் (கி.பி. 1878 லிருந்து இன்று வரை) என்ன செய்கிறார்கள் என்பதை காட்டுவதாக 15 : 2 - 4ம் வசனங்கள் உள்ளன. இந்த பாபிலோனின் மீது வரும் பேரழிவின் செயற்பாட்டில் ஏழு தூதர்களுக்கு மட்டுமல்லாமல் மகிமையடைந்த பரிசுத்தவான்களுக்கும் பங்கு உள்ளது.

**வெளி 15 : 5.**

**இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது.**

வெளி 15 ம் அதிகாரத்தின் மூன்றாம் பகுதி (கடைசி பகுதி) துவங்குகிறது.

பரலோகத்தில் (மகிமையடைந்த பரிசுத்தவான்களடங்கிய உலகத்தில்), மகா பரிசுத்தஸ்தலமாகிய ஆலயம் (மகிமையடைந்த திருச்சபை-புதிய உடன்படிக்கையின் ஏற்பாடு) திறக்கப்படுகிறது (முழுமையாக புரிந்து கொள்ளும் நிலை உருவாகிறது).

இந்த வெளி 15 : 5ம் வசனம், வெளி 11 : 19ன் முற்பகுதியில் காணப்படும் வசனத்தின் (பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது) நிறைவேறுதலாகும். புதிய உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களனைத்தையும் புரிந்து கொள்ள ஏதுவாகும் காலத்தை (அறுவடை காலம்) வெளி 15 : 5ம் வசனம் சுட்டிக் காட்டுகின்றது. இந்த முழு விவரிப்பும் (15 : 5 - 8) புதிய உடன்படிக்கையின் திறப்பு விழாவின் விசேஷித்த நிகழ்ச்சியைக் காட்டுகிறது. ஆனால், இது நடைபெறுவதற்கு, வாதைகள் ஊற்றப்பட்டு தேவ கோபம் முடிவு பெறும் வரைக்கும் காத்திருக்க வேண்டியதாகிறது.

**வெளி 15 : 6.**

**அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.**

**ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்கள் :**

நாம் இப்பொழுது இந்த 15ம் அதிகாரத்தின் துவக்கப் பகுதிக்கு (வசனம் 1) திரும்புகிறோம்; வெளி 15 : 1ம் வசனத்தில் அந்த தூதர்கள் வாதைகளை உடையவர்களாய் இருந்தார்கள் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அந்த ஆலயத்திலிருந்து புறப்பட்டார்கள் :**

மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து (மகிமையடைந்த நிலையில் புது சிருஷ்டிகளாக) அவ்வேழு தூதர்களும் புறப்பட்டார்கள். இவ்விதமாக, இவர்கள் தங்களுடைய தனித்தனியான வாதைகளை ஊற்றும் பணியை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து :**

கிறிஸ்துவுக்குள்ளான நீதியையும், குறுகலான பாதையில் சென்று ஜெயங் கொண்டதையும் அடையாளப்படுத்துகிறது.

**மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு :**

வெளி 1 : 13ல் மார்பருகே பொற்கச்சை கட்டிக்கொண்டிருந்த இயேசுவைப் போல, அவ்வேழு தூதர்கள் மகிமையடைந்த பிறகும், தேவ ஊழியத்திற்காக தம் முழு இருதயத்துடன் தாமாகவே முன்வருகின்றனர் என்பதை குறிக்கிறது.

**வெளி 15 : 7.**

**அப்பொழுது, அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று , சதா காலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது .**

இந்த வசனத்தில் குறிக்கப்படும் “ஜீவன்“ , தேவனுடைய சுபாவங்களில் ஒன்றான “ நீதி “ ஆகும். ஏனெனில், இது “தீர்ப்பு” தரிசனக் காட்சியாகும்.

“தீர்ப்பு” என்பது ‘தண்டிக்கும் தன்மை' வாய்ந்தது; தேவ நீதியானது வாதைகளை கொண்டு செல்வதற்கான ஊர்திகளாக பொற்கலசங்கள் அடையாளமாக காட்டப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு தூதர்களும் வாதைகளை (சத்திய புரட்டுகளையும் பொய்கொள்கைகளையும் சேதப்படுத்தும் வலிமையான சத்தியங்களை) ஏற்கனவே உடையவர்களே ! தெய்வீக திட்டத்தின்படியும், அளவின்படியும் பழைய முறைமைகளை அழிக்கும் வண்ணம் சத்தியங்கள் செயல்படுவதற்கான நிகழ்வுகள் உருவாகுவதை இந்த கலசங்கள் அடையாளமாக காட்டப்படுகின்றன.

ஆசீர்வாதங்களை அளிக்கும் சத்தியங்களுடன் தேவ கோபாக்கினையையும் எடுத்துச் செல்லும் கருவிகளாக பொற்கலசங்கள் அடையாளமாக காட்டப்படுகின்றன. தங்களுடைய தப்பான வழிகளிலிருந்து விலகிவிடும் வகையில், தேவனுடைய கோபம் இவ்வுலக ஜனங்களுக்கு வலுக்கட்டாயமாக நேரிடும் நிகழ்வுகள் மூலமாக வெளிப்படும். இந்த வாதைகள் முடிவு பெற்றவுடன், அவருடைய கோபம் முடிவடைந்ததாக வசனம் 1-ல் வாசிக்கிறோம். பழைய முறைமைகள் அழிந்து, ராஜ்யம் ஏற்பட வழி வகுக்கும்.

**சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர் :**

இது மிக நீண்ட காலப்பகுதி; சதா காலங்களிலும் தேவ கோபம் இனி கிடையாது; எப்படிப்பட்ட வாக்குத்தத்தம் இது !

**வெளி 15 : 8.**
**அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும், அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது. ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடிவடையும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது .**

இந்த வசனத்தை 1இராஜா 8 : 6, 10, 11ம் வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம். உடன்படிக்கை பெட்டியை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வருவது, மகிமை அடைவதற்கான திருச்சபையின் பிரவேசத்தை அடையாளமாகக் காட்டுகிறது. ஆனால் ஒரு கேள்வி எழுகின்றது !

திருச்சபை திரைச் சீலைக்குப் பின்னால் எப்பொழுது பிரவேசிக்கிறது ? இரண்டு சாத்தியங்கள் உள்ளன :

(1) கி.பி. 1878 லிருந்து இந்த வேலை துவங்குகிறது;
(2) திருச்சபை முழுமை பெற்றவுடன்;

இதில் இரண்டாவது இன்னும் சாத்தியமில்லை; முதலாவது மட்டும் சாத்தியமாகிறது; நித்திரை யடைந்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவதும் (வசனங்கள் 2 - 4), வாதைகளையுடையத் தூதர்களின் உயிர்த்தெழுதலும் (ஏழாம் தூதனைத் தவிர) கிபி. 1878ம் வருடத்தைக் குறித்துக் காட்டுகிறது. ஏழாம் தூதனுடைய எக்காளம் இன்னும் ஊதப்படுகிறது.

எசேக் 9 : 3 மற்றும் 10 : 2 - 6ம் வசனங்கள் மேற்கூறியவற்றை சம்பந்தப்படுத்துகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 16 ம் அதிகாரம்

## பாபிலோனுக்கு எதிராக ஏழு வாதைகள் ஊற்றப்படுதல்

**வெளி 16 : 1.**
**அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே : நீங்கள் போய் தேவனுடைய கோபக்கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன்.**

**தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் :**
"தேவாலயம்" என்பது தேவனுடைய திட்டங்களையும், அதைச் சார்ந்த செயல், மற்றும் பயன்பாடுகளைக் குறிக்கின்றது; வாதைகள் துவங்குவதற்கு முன்பாக "ஒரு பெருஞ்சத்தம்" உண்டாகிறது. வெளிபடுத்தல் ஆகமத்தில் சத்தங்களும், இரைச்சல்களும் அநேக இடங்களில் கேட்கப்பட்டாலும், "பெருஞ்சத்தம்" வரலாற்றின் சில முக்கிய திருப்பு முனைகளில் கையாளப்படுவதை நாம் காணலாம். வாதைகள் ஆரம்பமாவதே வரலாற்றில் மிக முக்கியமான திருப்பு முனை சம்பவமாகும். வாதையின் துவக்க காலம் கி.பி 1914 என்பதை வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து வெளிப்படையாக உணரலாம்.

**அந்த ஏழு தூதருடனே சொல்லக்கேட்டேன் :**
ஏழு தூதர்களும் மகிமை அடைந்த நிலையில், இயேசுவுடன் தேவத் திட்டத்தில் முன் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் பங்காளர்களாக இருப்பதில் (வெளி 14 : 15) ஏழு தூதர்களுக்கும் மகிழ்ச்சியே !

**நீங்கள் போய் தேவனுடைய கோபக்கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் :**

அந்த ஏழு தூதர்களும் "இயேசுவுடன் இருக்கும் நிலையில்" (வெளி 15 : 6, 7), அவர்களுக்கு இடும் பணிகளை செய்து முடிக்க ஏதுவானவைகளை பெற்றிருக்கிறார்கள். வாதைகள் எல்லாம் ஒரே இடத்தில் ஊற்றப்படவில்லை. அவரவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எங்கெங்கு நிறைவேற்றப்பட வேண்டுமென கட்டளை பெற்றிருக்கிறார்கள். அதைத் தான் " நீங்கள் போய் " என்ற பதம் குறிக்கிறது;

வாதைகளுக்கும், கலசங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை 15ம் அதிகாரத்தில் ஏற்கனவே பார்த்தோம். (வெளி 15 : 1; மற்றும் 15 : 6, 7). கலசங்களில் வாதைகள் இருப்பது வெளிப்படை. நிகழ்வுகள் (கலசங்கள்) தக்க தருணங்களில் சத்தியங்களை (வாதைகளை) பாபிலோனின் மீது (பேர்ச்சபைகளின் மீது) வலுக்கட்டாயமாகத் திணிக்கின்றன. மேலும், அந்த கலசங்களில் "கோபாக்கினையும்" உள்ளது.

**தீர்ப்புகளை பிரயோகம் பண்ணும்விதமாக, வலுவான சத்தியங்களின் (வாதைகளின்) வடிவத்தில் கோபாக்கினைகள் செலுத்த ஊக்குவிக்கப்படுத்தும் ஊர்திகளாக இந்த கலசங்கள் செயல்படுகின்றன :**

**பூமியின் மேல் ஊற்றுங்கள் :**
எல்லா கலசங்களும் பூமியின் மேல் கொட்டப்படுகின்றன ; ஆனால், ஒவ்வொன்றும் "பூமியின் மேல்" செலுத்தப்படுவதாய் தோன்றாதது போல் தெரிகிறது ! இரண்டாவது கலசம் சமுத்திரத்தின் மேலும், நான்காவது கலசம் சூரியனின் மேலும், ஏழாவது கலசம் ஆகாயத்தின் மேலும் ஊற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது எதைக் குறிக்கிறது ? எல்லாவிதமான இந்த ஏழு விஷயங்களும் "பூமி சம்பந்தப்பட்டவையே" என்பதை நன்கு உணரலாம். "பூமி" என்பது பழைய முறைமைகள் ஏற்கனவே செயலாக்கப்பட்ட பாரம்பரிய மரபுகளுள்ள சமுதாயத்தைக் குறிக்கிறது! இந்த பழைய முறைமைகளை களையவே, சமுதாய (பூமி) தொடர்பானவற்றின் மீது கோபக்கலசங்கள் ஊற்றப்படுகின்றன.

**வெளி 16 : 2 .**

**முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின் மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.**

**முதலாம் வாதை :**

முதலாம் தூதன் - மகிமையடைந்த பவுல் அப்போஸ்தலன்.

முதலாம் முத்திரையும், முதலாம் எக்காளமும் முதலாம் சபையாகிய எபேசு சபைக்கு இணையாக இருப்பதை பார்த்திருப்பதால், முதலாம் எக்காளத்தை பவுல் அப்போஸ்தலன் ஊதினார் என்பதும் வெளிப்படை. அதே போல் முதலாம் கலசம், மகிமையடைந்த பவுல் அப்போஸ்தலனுக்கு கொடுக்கப்பட்டது நிச்சயமாகிறது.

**தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான் :**

“ஊற்றப்படுதல்” என்பது “நிகழ்வுகளின் விவரங்களை அமுல்படுத்துதல்“ என்று பொருள்படும். இதன் விளைவு, முதலாம் வாதை சத்தியங்களை சமுதாயத்தின் மீது திணிக்கப்படுகின்றது.

முதலாம் கலசம் முதல் உலக யுத்தத்தை குறிப்பதாகத் தெரிகிறது; (முதலாம் எக்காளத்தின் சம்பவங்களின் ஒப்புமைகளை பக்கம் 142ல் பார்க்கவும்). இந்த கலசம் பூமியின் மேல் ஊற்றப்படுகின்றது. இது மற்ற வாதைகளைப் போல பூமி சம்பந்தப்பட்ட காரியங்களின் மீது இல்லாமல், பூமியின் மேலேயே ஊற்றப் படுகிறது. முதலாம் உலக யுத்தம் என்ற வாதை மனுஷ சமுதாயம் முழுமையையும் பாதித்தது. இதுவரை இருந்த உலகத்திற்கு ஒரு பெரும் மாறுதலை பிறப்பித்தது. இந்த மாற்றத்தை வரலாற்று நிபுணர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.

**மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று :**

“புண்“ என்பது இயலாமையைக் குறிக்கிறது. முதலாம் உலக யுத்தத்தை தொடர்ந்து ஸ்திரமான அரசாங்கங்கள் அமைப்பது எங்கும் முடியவில்லை. இது ஒரு பொல்லாத தன்மையை உணர்த்துகிறது. ஒரு சமுதாயத்தில் “நிலையின்மை“ என்பது சாபக் கேடாகும். இது வேகமாக தொற்றிப் பரவக் கூடியதாயிருக்கிறது. ராஜாக்களின் தெய்வீக அதிகாரங்களுக்கு முதல் உலக யுத்தம் முற்றுப்புள்ளி வைத்தது. ரோம சாம்ராஜ்ய காலத்திலிருந்து அரசாங்கங்களின் அடித்தளமாக ராஜாக்களின் தெய்வீக உரிமை அமைந்திருந்தது. பல ராஜாக்கள் கொடியவர்களாய் இருந்ததைத் தொடர்ந்து, அந்த நிலைமை மாறியதின் விளைவாக, கம்யூனிசம், ஹிட்லர், முசோலினி, ஃபிராங்கோ போன்ற பல பயங்கரங்கள் உருவாயின.

**மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதின் சொரூபத்தை வணங்குகிறவர் களுமாகிய மனுஷர்களுக்கு :**

இந்த வாதையினால் குறிப்பாக யார் பாதிக்கப்பட்டனர் ? பழங்காலத்திய தெய்வீக உரிமை அமைப்பை, அதாவது, ராஜாக்களின் ஆளுகை தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வாதை ஐரோப்பாவை இலக்காக கொண்டு செல்லப்பட்டது. மத - ராஜரீக கலவை கொண்ட அமைப்பைச் சார்ந்த பிரிவினரிடம் வாதை ஊடுருவியது.

**வெளி 16 : 3.**

**இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின.**

**இரண்டாம் வாதை :**

இரண்டாம் தூதன் - மகிமையடைந்த யோவான் அப்போஸ்தலன்.

**இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான் :**

சினாயடிக் பிரதியில் "சமுத்திரத்தின் மேல்" என்று உள்ளது; இரண்டாவது கலசம், போல்ஷ்விக் புரட்சியின் (கி.பி. 1918) சம்பவங்களைக் குறிக்கிறதாய் தெரிகிறது; இரண்டாம் எக்காள நிகழ்வுகளின் திகைப்பூட்டும் ஒப்புமைகளை பக்கம் 143ல் பார்க்கலாம். எக்காளத்தின் போது, மதம் மற்றும் மத சம்பந்தமில்லாத கூறுகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் பெரிய மலை போன்றதொன்று விழுந்தது. ஆனால், இந்த இரண்டாம் வாதையின் போது, ரஷ்யாவில் எதிர்மாறாக நடக்கிறது. மதமில்லா சக்திகள் வெற்றி பெறுகின்றன.

மற்ற வாதைகள் எல்லாம் ரோமன் கத்தோலிக்க சபையை நேரிடையாகப் பாதிக்கின்றதை பிறகு பார்ப்போம். ரஷ்ய புரட்சி முதலில் ரஷ்ய ஆர்த்தொடாக்ஸ் சபையை பாதித்தது. ஆனால், கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவிய போது ரோமன் கத்தோலிக்க சபை பெரிதும் பாதிக்கப்பட்டது.

கலசம் சமுத்திரத்தின் மேல் ஊற்றப்பட்டது. இது சமுத்திரத்தின் மேல், அதாவது, சமூக/சமய ஒழுங்குகள் குறித்து அக்கறை இல்லாத, அமைதியிழந்த ஜனங்களின் மேல் ஊற்றப்பட்டது; இதைத் தொடர்ந்து சமுத்திரத்தில் ஒரு வித்தியாசமான சம்பவம் நிகழ்ந்தது.

**உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று :**

செத்த மனுஷரின் இரத்தம் திரவத்தையும் (serum), திடப்பொருளையும் (clot) பிரிக்கிறது; இந்த வாதை சமுத்திரத்தின் மேல் நடைபெறுகிறது; பொதுவாக சமுத்திரம் என்பது ஒழுங்கற்ற, திட்டமிடப்படாத, ஊசலாடும் ஜன சமுதாயத்தைக் குறிப்பதாகவே இருந்து வந்தது. இப்பொழுதும் ஜன சமுதாயத்தில் ஒரு பிரிவினர் தாம் முன்பிருந்தது போலவே ஊசலாடும் நிலையில் சமூக/சமய விஷயங்களில் வலுவான உறவு இல்லாத நிலையைத் தொடர்ந்தனர்; ஆனால் , இந்த அமைதியிழந்த சமுதாயத்தின் வேறொரு பகுதியினர், வரலாற்றில் முதன் முறையாக, தங்களுக்குள் சிறு சிறு அமைப்புக்களை (சங்கங்களை - clots) தங்கள் தேவைகள் ஈடேறுவதற்காக ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர்; தங்கள் உரிமைகளை பெற்றுக் கொள்வதே அவர்களுடைய குறிக்கோள் !

முதலாம் வாதை ராஜ்ஜீய-மத உறவு அமைப்புகளை சிதறடித்தது;

இரண்டாம் வாதை மத அமைப்பை (சபை) புறக்கணித்தது; ஜன சமுதாயம் தங்கள் விருப்பங்களை அடைய அமைப்புகளை உருவாக்க ஆரம்பித்தனர்.

**சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின :**

இந்த புரட்சியின் நோக்கமே , மக்களை மதி மயக்குகிற மதத்தை அழிப்பதே ஆகும். போல்ஷ்விக் புரட்சியாளர்கள் மத மயக்கத்திலிருந்து விடுபட்டனர்.

**வெளி 16 : 4.**
**மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின.**

**மூன்றாம் வாதை :**
மூன்றாம் தூதன் - மகிமையடைந்த ஏரியஸ்

இந்த மூன்றாவது கலசம் “மத இயக்கத்தை“ உருவாக்கினது. பாபிலோனின் அசத்தியங்களுக்கு சவாலாக உலகளாவிய விதமாக “யெகோவாவின் சாட்சிகள்“ இயக்கம் மூன்றாம் வாதையைக் கொண்டு செல்லும் கலசமாகத் திகழ்ந்தது; அவர்களின் அமைப்பு மெச்சத்தக்க அளவில் இருக்கிறது; அவர்களின் ஒழுங்குமுறை மிகவும் செயலூக்கமுடையதாய் இருந்தது; கிறிஸ்தவ உலகத்தின் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கதவைத் தட்டினார்கள்; இதன் விளைவாக, கிறிஸ்தவ உலகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களுடைய மதத்தலைவர்களிடமும், அதிகாரங்களிடமும் கேள்விக் கணைகளைத் தொடுத்து குழப்பங்களுக்கு ஆளாயினர். ஆனாலும், தங்கள் அமைப்புகளை நிராகரித்து வெளிவரவில்லை. (மூன்றாம் எக்காள சம்பவங்களின் பொருத்தமான அம்சத்தை பக்கம் 145 ல் பார்க்கலாம்).

ஏரியஸின் சத்தியங்கள் ரோமச் சபைக்கு பெரும் துன்பங்களை விளைவித்தன. அவரும், அவரை பின்பற்றியவர்களும் கொள்கை புறம்பாளர்களாக கருதப்பட்டு தள்ளப்பட்டனர். இந்த வாதையில் யெகோவாவின் சாட்சிகள் தங்கள் சத்தியங்களை விரைவாக பரப்பி , பழைய கிறிஸ்தவ மரபுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கினர். இந்த அமைப்புகள் இவர்களையும் சமய பகைஞர்களாக கருதுகின்றனர். (சில விஷயங்களில் உண்மை சத்தியத்திற்கு விரோதமாக கொள்கை முரண்பாடுகள் யெகோவாவின் சாட்சிகளிடத்தில் உண்டு).

**உடனே அவைகள் இரத்தமாயின :**

மூன்றாம் வாதை, தண்ணீர்களையும் அதன் உற்பத்தி ஸ்தானங்களையும் கலைத்ததால், இவை குடிப்பதற்கு தகுதியில்லாமற் போயிற்று. இந்த மரபு கிறிஸ்தவர்கள் தங்கள் பாரம்பரிய முறைமை கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு (குடிக்க இயலாமல்) அதை தவிர்க்கவோ அல்லது எதிர்க்கவோ முற்படுகின்றனர். மூன்றாம் வாதையின் விளைவே இது !

**வெளி 16 : 5.**
**அப்பொழுது தண்ணீர்களின் தூதன் : இருக்கிறவரும், இருந்தவரும், பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்.**

பாபிலோன் மேல் ஊற்றப்பட்ட இந்த மூன்றாம் வாதையிலிருந்து யோவான் நமது கவனத்தை பரிசுத்தவான்களின் பக்கம் திருப்புகிறார் :

**தண்ணீர்களின் தூதன் : மகிமையடைந்த ஏரியஸ்.**

சம்பவிக்கும் விஷயங்களையும் அதில் தனது பங்களிப்பையும் கருத்தில் கொண்டு தேவனைத் துதிக்கிறார். இந்த வாதையானது நீதியுள்ள நடவடிக்கையாக இருப்பதை ஏரியஸ் உணர்த்துகிறார்.

ஏரியஸும், அவரை பின்பற்றியவர்களும் அசத்தியங்களுக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் பெரிதான வெற்றி கிட்டவில்லை; ஆனால், இப்பொழுது அதற்கு இழப்பீடாக வாதையின் மூலமாக தப்பிதங்கள் அகற்றப்படும் வாய்ப்புகள் பெருகுவதைக் காண்கிறோம். தீர்ப்பு இல்லாமல் தப்பிதங்கள் (கொள்கை புரட்டுகள்) தொடர்ந்திருப்பது அநீதியாகும். அதைக் களையவே வாதை செயற்படுத்தப்படுவதை இந்த வசனம் உணர்த்துகிறது.

**வெளி 16 : 6.**
**அவர்கள் பரிசுத்தவான்களுடையை இரத்தத்தையும், தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக் கேட்டேன்.**

சுவிசேஷ கால முழுமையிலும் பாபிலோன் அமைப்பு பரிசுத்தவான்களின் ஜீவனை முடிந்த அளவிற்கு குடித்தது. பொய் போதகங்கள் உண்மை விசுவாசத்தை அழித்தன. ஆனால், இப்பொழுது நிலைமை மாறியுள்ளது! இப்பொழுது பாபிலோன் ரோமச் சபை தம்முடைய சொந்த கொள்கைகளையும், நடத்தைகளையும் நியாயப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வாதைகளால் (உண்மை சத்தியங்களால்), ரோமச் சபை திக்குமுக்காடிப் போகிறது.

**வெளி 16 : 7.**
**பலிபீடத்திலிருந்து வேறொருவன் : ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே ! உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும், நீதியுமானவைகள் என்று சொல்லக் கேட்டேன்.**

யோவான் நமது கவனத்தை திருப்புகிறார்; திரைச்சீலைக்கு பின்னால் (மகிமையடைந்த) இருப்பவர்களுடைய உணர்வுகளைக் குறித்து 5, 6ம் வசனங்களில் தெரிவித்தவர், திரைச்சீலைக்கு இப்புறம் இருப்பவர்களின் உணர்வுகளை இப்பொழுது வெளிப்படுத்துகிறார்; ஆம், நாம் இன்னும் பலியின் ஜீவியத்திலுள்ள (பலிபீடம்) நிலையில் இருக்கிறோம் !

**வெளி 16 : 8.**
**நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன் மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது .**

**நான்காம் வாதை :**
நான்காம் தூதன் - மகிமையடைந்த பீட்டர் வால்டோ :

நான்காம் வாதை நம்மை 'இரண்டாம் உலகப் போருக்கு' அழைத்துச் செல்கிறது; இந்த வாதையின் நோக்கம் சுவிசேஷத்தை (சூரியனை) வாதிப்பது தான். சமய நம்பிக்கையின் ஆதாரத்தை சந்தேகிக்கும் மனிதர்கள் உருவாகின்றனர். இது பாபிலோன் மேலும் தகர்ந்து போக உதவுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், பைபிள் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகம் என்ற விசுவாசம் பெருமளவும் குறைய ஆரம்பித்தது. “இருத்தலியல் கோட்பாடுகள்“ (EXISTENTIALISM) போன்ற தத்துவங்கள் தலைத்தூக்கத் துவங்கின;

வாதைக்கும் எக்காளத்துக்கும் இடையே உள்ள ஒப்புமைகளை பக்கம் 147ல் பார்க்கலாம்;

வால்டோவின் பைபிள் சத்தியங்களை 'முரண்பாடுகள்' என சித்தரித்து, யேசபேல் சபை வால்டோவைத் துன்புறுத்தியது. இந்த நான்காம் வாதையால் மதத்தின் மேலும், வேதாகமத்தின் அதிகாரத்தின் மேலும் சேதம் விளைவிக்க நிகழ்ச்சிகள் உருபெறுகின்றன. இது மரபுகள் மத ஒழுங்குகளின் அடித்தளத்தை வலுவற்றதாக்குகிறது. யூதர் பேரழிவு, போப்பு மார்க்கத்துடன் ஹிட்லரும் முசோலினியும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், அணு ஆயுதப் போர் போன்றவை, மனுஷரின் விசுவாசத்தை பலகீனமாக்கும் விதத்தில் இருந்தன.

**தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது : (1 பேதுரு 1 : 7)**

அவர்கள் விசுவாசத்தின் தகுதிக்கான சோதனையைக் குறிக்கிறது.

**வெளி 16 : 9.**

**அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.**

**மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு :**

அவர்கள் விசுவாசம் நீங்கும்படியாக ஏற்பட்ட சோதனைகளில் தோல்வி அடைந்தனர்; மனிதர்களின் விசுவாசத்தை குலைக்கும் வண்ணம் நடந்த நிகழ்வுகளில் முக்கியமானதாக இரண்டை கூறலாம். இதற்கான விடை அவர்களுக்கு கிடைக்கவில்லை. 1) அணு ஆயுதம். 2) ஹோலகோஸ்ட் . இவ்விரண்டும் நெருப்பு சம்பந்தப்பட்டவை; " ஹோலகோஸ்ட் " என்பது " முழுமையான தீ " (TOTAL BURNING) என்று பொருள்படும் ; அணுகுண்டுகளும், சுட்டெரிக்கும் சூளைகளும் (அடுப்புகள்) மனுஷரின் விசுவாசத்தை வெகுவாகக் குலைத்தன.

**இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள :**

தேவனுடைய பரிசுத்தவான்கள் தவிர மற்ற மனுஷர்கள் இந்த வாதைகளில் கடவுள் செயல்படுவதை கவனிக்கத் தவறுகிறார்கள். மனுஷர் கேடு விளைவிக்கிற அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள ஏதுவாக கடவுள் வழி நடத்துகிறார் என்பதை உணரவில்லை.

**தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்கள் :**

தேவனுடைய சுபாவத்தைக் குறித்து பொல்லாதவைகளை பேசினர். " கடவுள் ஒருவர் இருந்தால், ஏன் இப்படிப்பட்டவைகள் நிகழ்கின்றன. இதற்கு அவர் ஏன் தீர்வு செய்யவில்லை " என அறியாமையினால் தூஷித்தனர். "கடவுள் இல்லை" என்ற இயக்கம் இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிறகு வலுபெற்றது. சந்தேகங்கள் பெருகின.

**அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை :**

இந்த வாதைகள் மனுஷர்கள் தேவனை அறியும்படி செய்யவில்லை; தேவனை அறிவதற்கு அவர்களைத் "தயார்படுத்துகின்றன" . இவர்கள் இன்னும் பழைய மரபுகளையே பின்பற்றுகின்றனர். நான்கு வாதைகள் வந்தும் அவர்களில் மாற்றம் எதுவும் பெரிதாக கொண்டு வரவில்லை. அவர்கள் ஏழு வாதைகளையும் சந்திக்க வேண்டியிருக்கிறது.

**வெளி 16 : 10.**

**ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது . அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக் கொண்டு .**

**ஐந்தாம் வாதை :**

ஐந்தாம் தூதன் - மகிமையடைந்த ஜான் விக்ளிப் .

**ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான் :**

இந்த வாதை "வாடிகன் II சபை ஆலோசனை சங்கத்தை" குறிக்கலாம். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பிறகு ரோமன் கத்தோலிக்க சபை பல பிரச்சனைகளை சந்தித்தது. போப்பு ஜான் XXIII நிலைமையை சரி செய்ய எண்ணினார்; ஆனால், கர்த்தராகிய கிறிஸ்து , மிருகத்தின் மேல் வாதையை ஊற்ற திட்டமிட்டார்; வாடிகன் II ஆலோசனை சங்கம் ரோமன் கத்தோலிக்க சபையை வெகுவாக வலுவிழக்கச் செய்தது.

போப்பு மார்க்கம், மிருகத்தின் ஒரு விசேஷித்த கொம்பு ஆகும்; மிருகத்தின் ஏழாவது தலை - நாஜி பாஸிசம் அழிந்தவுடன், மிருகத்தின் நடைமுறை அதிகாரமுடையதாய் (சிங்காசனம்) இந்த விசேஷித்த கொம்பு விளங்கியது.

ஐந்தாம் எக்காளத்திற்கும் ஐந்தாம் வாதைக்கும் இடையே உள்ள ஒப்புமைகள் விசித்திரமாய் உள்ளன. இதை பக்கம் 149 - 156ல் காணலாம்.

**அதின் ராஜ்யம் இருளடைந்தது :**

போப்பு மார்க்கம் தற்பொழுது தன்னுடைய சொந்த பிஷப்புகளினாலேயும், மற்றும் குருமார்கள், கன்னியாஸ்திரீகள், கத்தோலிக்கர்களாலேயும் விமர்சிக்கப்படுகின்றது. போப்பு மார்க்கம் "தவறா நிலை யுடையது" என்ற எண்ணம் இப்பொழுது மாறியது. ரோமன் கத்தோலிக்க சபை தன் பழைய நடவடிக்கைகளை வெளிப்படையாக தர்க்கித்ததில்லை. இப்பொழுது அது நடக்கிறது. ரோமச் சபையின் அஸ்திவாரம் (சிங்காசனம்) ஆட்டங் கண்டுள்ளது. ரோமச் சபைக்குள்ளாகவே பல இயக்கங்கள் முளைத்து போப்புவின் அனுமதியின்றியே போப்பு அதிகாரத்திற்கு சவால் விடுமளவிற்கு வளர்ந்து, நிலைமை மாற்றமடைந்துள்ளது.

**அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக் கொண்டு :**

முரண்பாடுகள் ரோமச் சபையின் மேலுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன. "பிறப்பு கட்டுப்படுத்துதல்" (birth control), பெண்களின் குருத்துவம் (women priesthood), போன்ற விஷயங்களில் போப்பு அதிகார உரிமை பெற்றவராக இருக்க முயற்சிக்கும் போது, அவரைப் பின்பற்றும் பெரும்பாலோர் பார்வையில் போப்பு திறன் குறைவுள்ளவராக தோற்றமளிக்கிறார்.

வாடிகன் II ஆலோசனை சங்க முடிவுகளில் பூசை பலியை அந்தந்த வட்டார மொழிகளில் நடத்த வேண்டும் என்பதும் ஒன்று. இந்த மாற்றம் காரணமாக, ரோமச் சபை பெரும் பீதியையும், எதிர்ப்பையும் சந்தித்தது. வருத்தத்தில் இவர்கள் தங்கள் நாவுகளை கடித்துக் கொண்டார்களென எழுதப்பட்டிருக்கிறது. ரோமச் சபை வேதனை வலியில் அவஸ்தைபடுவது புலனாகிறது.

**வெளி 16 : 11.**
**தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல் தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை .**

வெளி 16 : 9ல் தேவனுடைய நாமத்தை தூஷித்தார்கள் (தேவனுடைய சுபாவத்தை).

வெளி 16 : 11ல் குறிக்கப்படும் ' பரலோகத்தின் தேவன் ' போப்பு என அறியலாம்; கத்தோலிக்க வானத்தின் கடவுள் இவரே ! ரோமன் கத்தோலிக்க சபையின் பெரும்பான்மையினரால் போப்பு தவறாக பேசப்படுகிறார்.

ஐந்து வாதைகள் முடிந்தன; ஜனங்கள் மனந்திரும்பவில்லை; ஏழு வாதைகள் தேவைப்படுகிறது; வாடிகன் II ஆலோசனை சங்கத்திற்கு பிறகு குருமார்களும், கன்னியாஸ்திரீகளும் அநேகர் தங்கள் பதவிகளை உதறித் தள்ளுகிறார்கள். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அவர்கள் ரோமன் கத்தோலிக்க சபையை விட்டு விலகவில்லை. அவர்கள் மனந்திரும்பவில்லை. அவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட பிரதிக்னையை மட்டும் விலக்கி வருகின்றனர்.

வெளி 16 : 12 .

**ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான். அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று .**

நாம் இந்த வாதையின் மத்தியிலே இருப்பதாக அறியலாம். முன்பு கண்ட ஐந்து வாதைகளையும் நடந்து முடிந்த வரலாறுகள் அவைகளை நாம் எளிதில் அறிந்துணர இயலும். இந்த ஆறாம் வாதை தீர்க்கதரிசன நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது; விஷயங்கள் இன்னும் புலப்பட இயலாத நிலைக்குத் தள்ளப் படுகிறோம். இந்த ஆறாம் கலசமாகிய "தகவல் வெடிப்பு" (INFORMATION EXPLOSION) , அதாவது, ஊடகம், கணினி, இணையத்தளம் போன்ற நிகழ்வுகள் மனுஷர் மேல் திணிக்கப்படுகின்றன. "ஐபிராத்" என்பது பழைய மரபு ஒழுங்குகளால் போஷிக்கப்பட்டு வரும் ரோமன் கத்தோலிக்க சபையினரைக் குறிக்கும். இந்த பாபிலோன் நகரத்திற்கு நம்பிக்கைக்கு உகந்த மூல ஆதாரமாக திகழ்ந்தவர்கள் இவர்களே !

" ஐபிராத் " பெரிய நதி என்று குறிப்பிடப்படுகிறது; திரளான மனுஷ சமுதாயம் நல் வாழ்வுக்காக ஏங்குகிறது; இதைத் தான் பவுல் அப்போஸ்தலன், சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது என்று ரோமர் 8 : 19, 22ல் குறிப்பிடுகிறார். மிருகங்களும், வலுசர்ப்பமும் மனுஷ வரலாற்றை கறைப்படுத்தியிருக்கின்றன.

ஆறாம் எக்காளத்தோடு ஆறாம் வாதையை ஒப்புமை பார்ப்பது சிரமமான காரியம். (பக்கம் 156 - 176ல் பார்க்கவும்). ஆறாம் எக்காளம் சிக்கலான நிகழ்வைக் கொண்டதாகும்; அதைப் போன்று, ஆறாம் வாதையும் முந்தைய ஐந்து வாதைகளையும் விட சிக்கலானது; ஆறாம் எக்காளத்திலும், ஆறாம் வாதையிலும் ஐபிராத்திலிருந்தே நிகழ்வுகள் துவங்குகின்றன. ஆறாம் எக்காளத்தின் இறுதி உச்சக் கட்டத்தில் பிரெஞ்சு புரட்சியில் முடிவடைந்து, நகரத்தில் பத்தில் ஒரு பங்கு அழிக்கப்பட்டது. இந்த ஆறாம் வாதையின் இறுதியில் நிகழ்வுகள் அர்மகெதோனை நோக்கிச் செல்கின்றன. இந்த இறுதி நிகழ்வில் தான், நகரத்தின் மீதமுள்ள பத்தில் ஒன்பது பங்கு அழிவடையப் போகிறது.

ஆறாம் சபைக் காலப்பகுதியின் நிகழ்வுகள் ஏழாம் சபைக் காலப்பகுதியின் நிகழ்வுகளுடன் ஒன்றி இணைகின்றன. **(விரிவான விளக்கம் பக்கம் 423 ல் பார்க்கவும்).** அதைப் போன்று, ஆறாம் வாதை ஏழாம் வாதையில் இணைகின்றது; ஆறாம் வாதையில் அர்மகெதோனுக்கு எல்லோரும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, ஏழாம் வாதையில் அது அர்மகெதோன் யுத்தமாக மாறுகிறது.

## ஐபிராத்து நதி

பாபிலோன் சாம்ராஜ்யத்தை கைப்பற்றுவதற்கு ஐபிராத்து நதி மாற்று வழியில் திசை திருப்பபட்ட சம்பவத்தை, தானியேல் தன் புத்தகத்தில் குறிப்பிட்டு எழுதவில்லை. வரலாற்றிலிருந்து இந்த தடயத்தை எடுத்துக்கொண்டு ஆறாம் வாதை நிகழ்வுகளை நோக்கினால், ஒரு வகையில் 'ஐபிராத்து நதி' மீது (ரோமச் சபை மீது) நம் கர்த்தரும் அதன் அடையாளமான ஐபிராத்து (பாபிலோன்) மீது ஆறாம் வாதையைச் செலுத்தி, அவர்களின் ஆதரவை திசைதிருப்பும்படி இவ்விதம் செய்தார் என யூகிக்கலாம்.

வேதாகமத்திலிருந்தும், வரலாற்றிலிருந்தும் கிடைக்கும் தடயங்களை வைத்து மற்ற விளக்கங்களை பின் வருமாறு பார்க்கலாம் :

தானியேல் 5 : 28ல் பாபிலோன் சாம்ராஜ்யத்தின் விழுகையைக் குறிப்பிடும் போது, " பெரேஸ்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறோம்.

**பாபிலோன் ராஜா பெல்ஷாத்சார் தன் அரண்மனையின் சுவரில் கண்ட எழுத்துக்களின் அர்த்தத்தை தானியேல் வெளிப்படுத்துகிறார். ”மெனே, மெனே, தெக்கேல், பார்சின்“ என்ற வார்த்தைகள் எடைகளைக் குறிக்கும் விதத்திலுள்ளது. இந்த எடை அளவுகளின் கூட்டுத் தொகை 2520 ஆகும்; இது இஸ்ரவேலின் மேல் புற ஜாதியார் ஆளுகை செய்யும் காலப் பகுதியைக் குறிக்கிறது :**

“பெரேஸ்“ என்ற பதத்திற்கு யூத ரபிகளின் வியாக்கியானங்கள் இரண்டு அர்த்தங்களைச் சொல்கின்றன:

1. “ பிரிக்கப்படுதல்” 2) “ பெர்சியா “

தானியேல் பாபிலோன் ராஜாவைப் பார்த்து, “உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டது“ என்று கூறுகிறார். மேதியா, பெர்சியா” என இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட “பிரிக்கப்படுதல்” என்ற பதம் ஆறாம் வாதையின் 'ஐபிராத்து நதியில்' காணலாம்.

ஆனால், அந்த பாபிலோன் ராஜ்யம் உண்மையில் அழிக்கப்பட்டது; புதிதாக வந்த ராஜ்யம் “மேதியா” பாபிலோனுக்கு (ரோமச் சபைக்கு) ஆதரவாயிருந்த ஜனங்களின் நடுவே “பிரிவு” ஏற்படுவதை குறிப்பதாக அல்லது, பாபிலோனிலிருந்து தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்டு பிரிந்து போன ஜனங்களைக் குறிப்பதாகவும் உள்ளது.

பாபிலோன் சாம்ராஜ்யம் மீது வெற்றிகொண்டு புதிய ஆட்சி நிறுவிய பெர்சியா, கிறிஸ்துவின் வருங்கால ஆட்சியை அடையாளப்படுத்துவதாக உள்ளது.

பெர்சியர்கள் (பெரேஸ் என்ற பதத்தின் அர்த்தமுள்ள) பாபிலோன் அமைப்பிலிலிருந்து (சாம் ராஜ்யத்திலிருந்து) மக்களைப் பிரித்து (ஐபிராத்து நதியை மாற்று வழியில் நீரோட்டத்தின் போக்கை திசை திருப்புவது போல), பாபிலோனை வெற்றி கொண்டார்கள்.

அதைப் போன்று, இந்த அடையாளம் புதிய ராஜாவாகிய கிறிஸ்துவின் பிரசன்னத்தினால் ஏற்படும் சத்தியங்கள் விரைவாக பரவி, பாஸ்டர் ரசல் காலத்திலிருந்து திரளான ஜனங்கள் தங்கள் அமைப்புகளின் மீது வைத்திருந்த ஈடுபாடுகளை பிரிவுபடுத்தும் விளைவுகளை ஏற்படுத்த சாத்தியமாகிறது.

**அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று :**

வரலாற்றில் இந்த நதி மாற்று வழியில் திருப்பப்பட்டது; ஆனால், இந்த பாபிலோனைப் பொறுத்த வரையில், இது வற்றிப் போயிற்று. ஜனங்கள் தங்கள் எண்ணங்களையும், முயற்சிகளையும் பாபிலோன் அமைப்புகளிலிருந்து விலகி, வழி மாறி, மற்றவற்றிற்கு பிரிந்து போனதை உணர்த்துகிறது.

எல்லா வாதைகளும் பாபிலோனின் மேல் ஊற்றப்படுபவையே என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு வாதையும் பாபிலோன் சம்பந்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதியின் மீது ஊற்றப்படுகிறது. இந்த ஆறாம் வாதை ஜனங்களாகிய ஐபிராத்தின் மீது ஊற்றப்படுகிறது.

இந்த ஜனங்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக பாபிலோனுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்த அர்த்தத்தில் இது குறிக்கப்படவில்லை. ஜனங்கள் எல்லோரும் தம்மில் தாமே வாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மிகவும் குழப்பமுற்று, இது நாள்வரை எவ்வித கேள்வியுமின்றி கண்மூடித்தனமாக ஆதரவு தந்து பின்பற்றி வந்த தங்கள் அமைப்புகளை இனி அவ்விதம் பின்பற்ற மாட்டார்கள். ஊடகங்கள் வழியாக பிரளயமாக பெருகி வரும் செய்திகள் மனுஷருக்கு சந்தேகத்தையும், நிலையில்லாத்தன்மையையும் உண்டாக்கும் விதத்தில் இந்த வாதை செயல்படுகிறது. தங்களுக்கு துரோகம் இழைக்கப்படுவதற்கான உணர்வுகளைக் கொண்ட தனிப்பட்ட மனுஷர்கள் தான் பாபிலோனின் விழுகைக்கு காரணமாயிருக்கிறார்கள்.

இந்த ஆறாம் வாதையில், ஜனங்கள் பாபிலோனுக்கு எதிரிகளாக ஒரு அமைப்பாக செயல்படவில்லை. தனிப்பட்டவர்கள் தங்களுக்குள்ளே மனவேதனையுற்று எதுவும் நம்பத்தகுந்ததில்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். இப்படியாக இவர்கள் பாபிலோனுக்கு ஆதரவாக இல்லை. இந்த வாதை ஜனங்களை பாதிக்கிறது. அவர்களை தங்கள் சிந்தனைகள் மூலமாக தடம் மாறி, செயல்படும் நிலை உருவாகிறது.

**அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி :**

இவர்கள் யார் ? தலையும் சரீரமுமாய் இருக்கும் கிறிஸ்துவைக் குறிக்கிறது என்பது வேதமாணவர்கள் பெரும்பாண்மையினரின் நிலை ஆகும் :

பழையமரபு வழிகளை விட்டு பிரிவது, புது ஒழுங்கு முறைக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறது. அதற்கான " பசி " (சூழ்நிலை) உருவாக்கப்படுகிறது.

"கிழக்கு" என்பது "உதிக்கும் சூரியனை" குறிக்கிறது. இது இயேசுவைக் குறித்த விளக்கமாகும். மல்கியா 4 : 2.

இது ஏசாயா 35ன் பெரும்பாதையான வழியையும், 40ம் அதிகாரத்தில் காணப்படும் **கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்** என்ற சொற்றொடர் வெளி 16 : 12ன் வசனத்தையும் ஞாபகப்படுத்துகிறது.

இருப்பினும்,

இந்த நூற்றாண்டில் முஸ்லீம் உலகம் பாபிலோனின் எல்லைகளைப் பயமுறுத்தும் விதத்தில் சம்பவங்கள் அன்றாடம் நிகழ்ந்து வருகின்றன. சில வேத மாணவர்கள் " கிழக்கிலிருந்து வரும் ராஜாக்கள் " என்பது முஸ்லீம் உலகத்திலிருந்து பாபிலோனுக்கு வரும் ஆபத்தைக் குறிப்பதாக உள்ளது என்று கூறுகின்றனர். முஸ்லீம் மதம் கிழக்கத்திய மதம்; பெர்சியாவில் (ஈரான்) இதன் ஆதிக்கம் அதிகம். இந்த பெர்சியா தானியேல் 5ல் படையெடுத்து வென்றது. " பெரேஸ் " என்பது **பெர்சியா** என்று பொருள்படும் என யூத ரபிமார்கள் கூறுகின்றனர். பெர்சியாவின் நீண்ட எல்லையாக இருந்தது ஐபிராத் நதியே ! இன்றைய உலகத்தில் பிரச்சினைகள் பெரும்பாலும் இஸ்லாம் மதத்துடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த வாதை இதை உணர்த்துவதாக இருக்கிறது. பழைய ஒழுங்கு முறைமைகளை வலுவிழக்கச் செய்யும் காரணங்களில் இஸ்லாமும் ஒன்று என்பது மறப்பதற்கில்லை. பழைய மரபுகளின் மேல் முன்பிருந்த வலுவான ஈடுபாடு ஜனங்களுக்கு தற்போது இல்லாத காரணத்தால், செல்வாக்கு இழந்த நிலையில் ஐபிராத்து நதி வற்றிப் போவது சாட்சியமாக உள்ளது.

**வெளி 16 : 13.**

**அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும் , கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக் கண்டேன்.**

ஆறாம் வாதையின் முழு விவரங்கள் 12ம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது, யோவான் ஆறாம் வாதையினால் ஏற்படும் விளைவுகள் வலிமையாகவும், பழைய ஒழுங்கு முறைமைகளுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்பதை காண்கிறார்.

**வாயிலிருந்து புறப்பட்டு வரக் கண்டேன் :**

" வாய் " என்பது 'செய்தி', 'கொள்கை', 'பிரகடனம்' என்பவைகளைக் குறிக்கும்.

**வலுசர்ப்பம் :**

இது ராஜ்ஜீய அதிகாரத்தைக் குறிக்கிறது. இது தான் வெகு காலமாக உயிரோடு இருப்பதாகத் தெரிகிறது. மற்ற இரண்டும் (மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி) இந்த யுக முடிவில் அழிக்கப்படும் வெளி 19 : 20. ஆனால் வலுசர்ப்பம் ஆயிரம் வருடம் கட்டப்பட்டிருக்கும். பிறகு அது ஆயிர வருட ஆட்சியின் முடிவில் விடுதலைப் பெற்று தன் இறுதி அழிவை சந்திக்கும். மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியுடன் அழிவில் சேர்ந்து கொள்ளும். (வெளி 20 : 7 - 10).

**மிருகம் :**

13ம் அதிகாரத்தில் காணப்படும் பத்து கொம்புகளையுடைய மிருகம் இதுவே ! இதில் போப்பு மார்க்கமாகிய ' சின்ன கொம்பு ' உள்ளது. இந்த காலக் கட்டத்தில் மிருகம் தனது ஏழாவது தலையை இழந்து விட்டது. (வெளி 17 : 10).

**கள்ள தீர்க்கதரிசி :**

இந்த அடையாளம் சிக்கலானதாகும்; இது குறித்து வியாக்கியானம் செய்வது பெருங் கஷ்டமான விஷயமாய் இருக்கிறது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த பெயர் முதன் முறையாக இப்பொழுது தான் (வெளி 16 : 13) காணப்படுகிறது. நாம் சிறிது முன்னோக்கி வெளி 19 : 20ம் வசனத்தில் பார்த்தால், சிறு தடயம் நமக்கு கிடைக்கும். இந்த கள்ள தீர்க்கதரிசி இரண்டு கொம்புகள் உள்ள வெளி 13 : 12 - 14ன் மிருகத்தை (அதின் பகுதியையாவது) அடையாளமாக குறிப்பதை வெளி 19 : 20ல் உணர முடிகிறது. சில காரணத்துக்காக, ' சொரூபம் ' கடைசியில் காணப்படவில்லை. இந்த வெளி 19 : 20ம் வசனம் “இந்த இருவரும் (மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும்) கந்தகம் எரிகிற அக்கினி கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்” என்று சொல்கிறது. அப்படியானால் “மூன்றாவது” பகுதியான சொரூபம் எங்கே ? இது நமக்கு வலுவாக உணர்த்துவது என்னவென்றால், இரண்டு கொம்புகளுள்ள மிருகம் இந்த சொரூபத்திற்கு 'சுவாசத்தை' (ஆவியை) கொடுத்த சமயத்திலிருந்து, இரண்டு கொம்புகளுள்ள மிருகம், மற்றும் உயிர் பெற்ற சொரூபம் இவை “இரண்டின்” ஒட்டு மொத்த அதிகாரத்திற்கு சமமான அதிகார நிலையைக் குறிக்கும்பாணியில் ' கள்ளத் தீர்க்கதரிசி ' என்ற பொதுவான நாமத்தை இந்த இருவரும் (இரண்டு கொம்பு மிருகம்,சொரூபம்) பெறுகின்றனர்.

இவ்வாறாக, ஆறாம் வாதையில் 'சுவாசமுள்ள சொரூபம்' (வெளி 16 : 13ல்) மறைமுகமாக காணப்படுகிறது. முதலாம் வாதையில் இது 'சொரூபம்' என்று இன்னும் அழைக்கப்படுவதை பார்க்கலாம். மத் 24 : 24 ஐ ஒத்துப்பார்க்கவும்.

**தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக் கண்டேன் :**

வெளி 16:12ல் நாம் பார்த்த வண்ணம், ஐபிராத்து நதியாக அடையாளப்படுத்தப்பட்ட ஜனங்களிடத்தில் ஏற்பட்ட “பிரிவு” மனப்பாண்மையின் “அச்சுறுத்தலை எதிர்கொள்ளும்” வகையில், சபையும் ராஜ்ஜீயமும் இடையிலான உறவுகள் மேற்கொள்ளும் எதிர் நடவடிக்கைகள் இங்கு காட்டப்பட்டிருக்கின்றன. மிருகத்தின் வாயிலிருந்தும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலிருந்தும் புறப்பட்டு வந்த அசுத்த ஆவிகளாகிய துர்போதனைகள், நம்பிக்கை இழந்த கிறிஸ்தவ உலகத்தை “ஒன்று சேர்க்கும்” ஒருவகை முயற்சியை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

தன் சால்வையை முறுக்கி, யோர்தான் நதியின் தண்ணீரை உலர்ந்த தரையாக்கிய எலியாவின் நிழலான சம்பவத்தின் (2இராஜா 2 : 7 - 11) நிறைவேறும் தருணம் இதுவே என்பது விளங்குகிறது. ஆறாம் வாதையில் ஐபிராத்து நதியின் தண்ணீர்கள் பிரிக்கப்படும் தீர்க்கதரிசனம் எலியா காலத்து நிழலான காரியத்துக்கு ஒப்பாக இருக்கிறது. வெளி 16 : 13ம் வசனம், பிரிந்த தண்ணீரை ஒன்றாக இணைக்கும் முயற்சியைத் தெரிவிக்கிறது.

இந்த மூன்று அசுத்த ஆவிகள் (போதனைகள் - 1 யோவான் 4 : 1) "தவளைகளுக்கு ஒப்பாக" உள்ளது. நியாயப் பிரமாணத்தின்படி, தவளைகள் அசுத்த பிராணிகள் வகையைச் சேர்ந்தவை; 'கோஷர்' மனுஷர் நெருங்க முடியாத உணவு இது ! தவளையை போன்ற அசுத்த போதனைகள் உண்மை கிறிஸ்தவர்களின் மனசாட்சியை சிறிதளவும் பாதிக்காது என்பது தெளிவாகிறது.

தவளைகளின் மூன்று வித இயல்புகள் இந்த தீர்க்கதரிசனம் எவ்விதம் நிறைவேறும் என்பதை அடையாளப்படுத்துகிறது.

1. தவளைகள் பெரிய வாய்களை உடையவை. (அளவுக்கு அதிகமான அதிகாரத்தை பறை சாற்றுபவை).
2. தவளைகள் பெரிய கண்கள் உடையவை. (தன்னை ஞானவான்களாக காட்டி கொள்பவை).
3. தவளைகள் தன் பிரசன்னத்தைக் காட்டிக் கொள்பவை. (பெருமையும் ஆடம்பரமும் கொண்டவை).

**வெளி 16 : 14.**
**அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது .**

**அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் :**

இந்த போதனைகள் அசுத்தமானவைகள்; ஏனெனில், அவைகள் பிசாசுகளின் செயல்களாகும்; இவ்வுலக சாம்ராஜ்யங்களை நிர்வகிப்பதில் பிசாசுகளுக்கு பங்கு உண்டு என்பதை வரலாற்றில் (தானி 10 : 13, 20) அறியலாம். இந்த பிசாசுகள் தம் அதிகாரங்களை விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. எனவே தான், பழைய மரபு ஒழுங்குகளை அழியாமல் தக்க வைத்துக் கொள்ள தம் வல்லமைகளை பிரயோகிக்கின்றன.

பிசாசுகளின் அற்புதங்களைப் பற்றி வேதாகமத்தில் பல இடங்களில் காண்கிறோம். (மத் 24 : 24; 2 தெச 2 : 9 - 12; உபா 13 : 1 - 3). பழைய ஒழுங்கு முறைமைகளை காக்கும் பொருட்டு, ஆவிகளின் உலகத்திலிருந்து பல எதிர்பாராத விஷயங்கள் வெளிப்படுவதை எதிர்பார்க்கலாம். இவைகளைப் பற்றிய முன்னறிவு இல்லாவிட்டால் நாம் வஞ்சிக்கப்பட ஏதுவாகும்.

**அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது :**

' பூலோகம்' என்ற பதம் கிரேக்க மூலத்தில் ' மக்கள் வாசம் பண்ணும் பூமி ' என்ற பொருள்பட உள்ளது; இது "சமுதாயம்" என்ற ஒரு பிரிவைக் குறிக்கும் விதத்தில் இங்கு சொல்லப்படவில்லை. இது அகிலஉலகத்தையும் குறிக்கும் விதத்தில் உள்ளது. அசுத்த ஆவிகளின் போதனைகள் கிறிஸ்தவ உலகத்தையும் தாண்டி, பூமியின் பலதரப்பட்ட செல்வாக்குள்ள பிரிவினரையும் சென்றடைகிறது. உலகம் தன் கட்டுப்பாட்டை இழந்து வரும் சூழ்நிலையில், பிசாசுகளின் விண்ணப்பங்கள் (துர்போதனைகள்) பழைய மரபு ஒழுங்குகளை தக்க வைக்க முயற்சிக்கின்றன. உலகத்தின் அனைத்து பிரிவினரையும் ஒன்று சேர்க்க விழைகின்றன. (செப்பனியா 3 : 8).

**சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு :**

இது வேறொரு உலக யுத்தம் அல்ல ! இது பழைய முறைமைகளுக்கும், புதிய முறைமைகளுக்கும் இடையே நடக்கும் யுத்தம். பூமியின் ராஜாக்களுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் இடையே நடக்கும் யுத்தம்; பழைய முறைமைகளை தக்க வைத்துக் கொள்ள அவர்கள் நடத்தும் கடைசி யுத்தம். இது தோல்வி அடையும்; இது "தேவனுடைய மகாநாளில்" நடக்கும் யுத்தம்; இது நாடுகளுக்கு இடையே நடக்கும் யுத்தம் அல்ல ! இதன் விளைவுகளை அறிந்துள்ளவர்கள் வரவேற்கும் யுத்தம் !

**வெளி 16 : 15.**
**இதோ, திருடனைப் போல் வருகிறேன்; தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் .**

**" இதோ, திருடனைப் போல் வருகிறேன் " :**

இந்த வசனம் சில மொழி பெயர்ப்புகளில் மேற்கோள் குறியிட்டும் ( " " ), அடைப்பு குறியிட்டும் [ ] காணப்படுகின்றன.

பிசாசுகளின் மாய உபாயங்களின் (அற்புதங்கள்) நடுவே இது நமக்கு ஒரு எச்சரிப்பு முறையில் "இதோ", "திருடனைப் போல் வருகிறேன்" என்று இயேசு கூறுகிறார். "நீங்கள் எதைப் பார்த்தாலும் தம்முடைய பிரசன்னத்தின் மாதிரியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; வஞ்சிக்கப்பட வேண்டாம்" என இயேசு அறிவுறுத்துகிறார். இந்த வசனத்தில் அவருடைய இரண்டாம் வருகை எந்த மாதிரி இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. இந்த கருப்பொருளை எதிர்த்தும் , மறுக்கும் வகையிலும் மக்கள் மனதை ஏமாற்றும் வகையில் பிசாசுகள் திட்டமிட்ட அற்புதங்களை நிகழ்த்துகின்றன :

கிறிஸ்துவுக்குப் பதிலாக 'அந்திக்கிறிஸ்து ' வை உருவாக்கினான்;

மனுஷ குமாரனுக்கு பதிலாக ' பாவ மனுஷன் ' ;

கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு பதிலாக ' போப்புவின் இராஜ்யம் ' ;

அந்த தீர்க்கதரிசிக்குப் பதிலாக ' கள்ள தீர்க்கதரிசி '. அப் 3 : 22, 23.

**தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் :**

**விழித்துக் கொண்டு :**
பிசாசுகளின் அற்புதங்கள், தவளைகளின் இரைச்சல்கள் நிலவும் இவ்வுலகில் ஊடகங்களின் பெரும் தாக்கங்கள் நம் உணர்வற்ற நிலைக்கு தள்ளி பொறுமையை சோதிக்கும் வண்ணம் உள்ளது; நம்முடைய எதிர்பார்ப்புகள் தாமதமாகும் என்று எண்ணி நாம் அயர்ந்து தூங்க வாய்ப்புள்ளது; இச்சமயத்தில் நாம் விழித்துக் கொண்டு இருப்பது அவசியம்.

**தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் :**

விசுவாசக் குறைவினால் நீதிமானாக்கப்படும் நிலையில் சரிவு உண்டாவது, வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளாத நிலையை அடையாளமாகக் காட்டுகிறது; கிரியைகளுள்ள விசுவாசம் அவசியம்; நம் வேத அறிவினால் இலக்கை அடைய இயலாது; நம் நடத்தை வளர்ச்சி பெற வேண்டும். அதாவது, கிரியைகளுள்ள விசுவாசத்தினால் கறைகள் ஏற்படாமல் நம் வஸ்திரங்கள் காத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**நிர்வாணமாய் நடவாதபடிக்கு :**

போதுமான வஸ்திரங்களை அணியாமல் இருப்பது, புத்தியில்லாத கன்னிகைகளிடம் காணப்பட்ட குறைவுள்ள எண்ணெயைக் குறிப்பதாக உள்ளது .

**தன் மானம் காணப்படத்தக்கதாக :**

தவறிய பரிசுத்தவான்களின் நிலையைக் கண்டு பிசாசுகள் மகிழ்ச்சி அடையும் தன்மை கொண்டவை; பிசாசுகளின் நியாயத்தீர்ப்புக்கான தருணம் நெருங்கி உள்ளது. (யூதா 6).

**வெளி 16 : 16.**
**அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான் .**

**அவர்களைக் கூட்டிச் சேர்த்தான் :**

“கூட்டிச் சேர்த்தான்“ என்ற பதத்திற்கு பதிலாக பல மொழிபெயர்ப்புகளில் ஒருமையில் இல்லாமல் பன்மையில் “ கூட்டிச் சேர்த்தன ” என்று உள்ளன;

பிசாசுகளின் ஆதரவுடன் கூடிய இந்த தவளைகளின் சத்தங்களினால், இவ்வுலகத்தின் செல்வாக்குள்ள சக்திகள் அனைத்தும் தற்காலிகமாக ஒற்றுமையுடன் கூடுகின்றனர்.

**எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே :**

யுத்தம் நடக்கும் இடம் எபிரேயு பாஷையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த யுத்தத்தில் இஸ்ரவேல் தேசம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று இதனால் உணர்த்தப்படுகிறது; வெளி 14 : 20ல் நாம் “நகரத்திற்கு புறம்பே“ (பாபிலோனுக்கு புறம்பே) ஆலையில் களைகள் நசுக்கப்படும்விதமாக, பாபிலோனுக்கு வரும் உபத்திரவம் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதாவது, பாபிலோனின் விழுகை மத்திய கிழக்குப் பகுதியில் நடைபெறும். எசேக்கியேல் 39ம் அதிகாரத்திலும் பாபிலோனின் அழிவைத் தொடர்ந்து இஸ்ரவேலின் ரட்சிப்பு வருவதை உரைக்கிறது; இங்கு, வெளி 16 : 16 லும், பழமையான ஒழுங்கு முறைமைகள் விழுந்து போவதை, இஸ்ரவேலின் ரட்சிப்புடன் சம்பந்தப்படுத்தி தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் உணர்த்துகின்றன.

அர்ம-கெதோன் என்றால் “அழிவின் மலை“ என்று பொருள்படும். 'இடம்' என்பது நிலையைக் குறிக்கிறது. பழைய மரபுகளடங்கிய மலை அழியப் போகிறது. (மத் 21 : 21). ஆறு வாதைகளுக்குப் பிறகு, ஒரு பேரழிவிற்கு தயாராகும் நிலையை இந்த இடம் உணர்த்துகிறது. விழுந்து போன தூதர்களின் துணையுடன் இவ்வுலகத்தார் இங்கு கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள்.

**சுருக்கவுரை :**

ஆறாம் வாதையினால் என்ன நிகழ்கின்றன ? இது ஜனங்களிடம் (ஐபிராத்து) 'நிலையில்லாத் தன்மை' மற்றும் 'அவநம்பிக்கை' உணர்வுகளை தோற்றுவிக்கின்றன. இதன் விளைவு, இவர்கள் சார்ந்திருக்கும் தலைமைகளுக்கும், அமைப்புகளுக்கும் ஆதரவு கொடுப்பதில் விருப்பமின்மையும், தளர்ச்சியும் ஏற்படுகிறது. இதனால் திகிலடைந்த அமைப்புகள் தங்களை காத்துக் கொள்ளவும், அந்தகார சக்திகளின் துணையுடன் (அறிந்தும் அறியாமலும்), சமூக, பொருளாதார நெருக்கடியை தவிர்க்கும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. யுத்தத்திற்கு தயாராகிறார்கள்.

**வெளி 16 : 17.**
**ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான் ; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து : ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது .**

ஏழாம் தூதன் : மகிமையடைந்த சார்லஸ் ரசல்

ஏழாம் வாதைக்கும், ஏழாம் எக்காளத்திற்கும் ஒப்புமைகள் உள்ளதை பக்கம் 175 ல் பார்க்கிறோம்; (வெளி 11 : 15 - 19). ஏழாம் கலசம் ஊற்றும் வாதை எப்படி இருக்கும் ? சார்லஸ் ரசல், இராஜ்யத்தின் துருக்கத்தை (கி.பி. 1874) பிரகடனம் செய்ய அனுமதிக்கப்பட்டார்; ஆகவே, அவர் கடைசி வாதையை ஊற்றவும் அனுமதிக்கப்பட்டார். இது முடிவு பெறும் தருவாயில், ராஜ்யம் வெளிப்படையாக தெரிய ஆரம்பிக்கும்; ஏழாம் எக்காளத்தில் கோபமுற்ற ராஜ்யங்கள் ஏழாம் வாதையில் அழிந்த ராஜ்யங்களாகும்.

"ஆகாயம்" என்பது "ஆவிக்குரிய கட்டுப்பாட்டை" குறிக்கும் அடையாளம். (எபே 2 : 2). ஆறாம் வாதையில் பிசாசுகள் செய்த திட்டங்கள் இந்த ஏழாம் வாதையில் முடக்கப்பட்டு முறியடிக்கப்படும். இந்த ஏழாம் வாதை " அர்மகெதோன் " ஆகும். அதாவது, 'அழிவின் மலை' (சகரியா 4 : 7; மத் 21 : 21).

**அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து : ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது :**

**பெருஞ்சத்தம் :**
இது ஒரு முக்கிய நிகழ்ச்சியை பிரகடனப்படுத்தும் விஷயம்.

**ஆலயம் :**
இது தேவத் திட்டத்தின் அடிப்படையைக் குறிக்கும். இது மகா பரிசுத்த நிலையை காட்டுகிறது.

**சிங்காசனத்திலிருந்து :**
இது ஒரு முக்கியமான பிரகடனத்தை நமக்கு தெரிவிப்பதாக உள்ளது :

| | | |
|---|---|---|
| பெருஞ்சத்தம் | : முக்கியமான செய்தி ] | இவைகளெல்லாம் **"ஆயிற்று"** என்ற |
| ஆலயம் -மகா பரிசுத்த ஸ்தலம் | : தேவனுடைய திட்டம் ] | சொல்லின் விசேஷத்தை பறைசாற்றுகிறது. |
| சிங்காசனம் | : தேவ அதிகாரம் ] | |

**ஆயிற்று :**

இது சிலுவையில் தம் பலியை நிறைவேற்றிய தருணத்தில் இயேசு கூறிய வார்த்தை. இது அவருடைய சரீரத்தின் பாத அங்கங்களின் மகிமையடைந்ததைக் குறித்துக் காட்டும் சொல் ஆகும்; சிங்காசனத்திலிருந்து வெளிப்படும் பெருஞ்சத்தம் இதுவே ! இந்த நிலையில், மற்ற விஷயங்கள் (வெளி 16 : 18 - 22) இன்னும் நடைபெறவில்லை. வேதத்தில் "ஆயிற்று" என்ற இந்த வார்த்தை தான் மிகவும் ஆசீர்வாதமான சொல் ஆகும்.

**வெளி 16 : 18.**
**சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது , பூமியின் மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை.**

திருச்சபை முழுமை பெற்ற காரணத்தால், இனி நடக்க இருப்பவைகளுக்கு தடை ஏதும் இல்லை; வெளி 7ம் அதிகாரத்தின் காற்றுகள் வீசப்பட்டு, பழைய ஒழுங்கு முறைகள் சின்னாபின்னமாக்கப்பட்டவுடன் சமாதான ராஜ்யத்திற்கு வழி வகுக்கும்.

**சத்தங்கள் :** தேவையில்லாத விளக்கங்களும், சாக்கு போக்குகளும் பரவும் நிலை.

**மின்னல்கள் :** கண் குருடாகும் அளவிற்கு பிரகாசமாக ஒளித்தெறிப்புகள். சத்தியங்கள் வெளிப்பட்டு ஊடுருவும் நிலைமை உலகத்திற்கு எரிச்சலை மூட்டக்கூடியவைகளாக உள்ளன. இது மாபெரும் குழப்ப நிலைக்கு காரணமாகி அர்மகெதோனுக்கு அழைத்துச் செல்கிறது.

**இடிமுழக்கங்கள் :** ஆட்சேபங்கள், கொள்கை பேதங்கள் வன்முறைக்கு தூண்டுகின்றன.

**பூமி மிகவும் அதிர்ந்தது :** இது சாதாரண அதிர்ச்சி அல்ல. பெரும் அதிர்ச்சி; பிரெஞ்சு புரட்சியின் போது ஆரம்பித்த அதிர்ச்சியின் (வெளி 11 : 13) முடிவு இது. இதே அதிர்ச்சி எசேக் 38 : 19, 20ல் குறிப்பிடப்படுகிறது. பாபிலோனின் விழுகை இஸ்ரவேலின் ரட்சிப்பு தொடர்புடையது என்பதற்கு இது ஒரு அத்தாட்சி.

**பூமியின் மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை :**

பிரெஞ்சு புரட்சியின் போது இந்த அதிர்ச்சி ஏற்பட்டு (வெளி 11 : 13), நகரத்தில் பத்தில் ஒரு பங்கு அழிந்தது; ஆனால், இனி வரும் புரட்சியில் பத்தில் ஒன்பது பங்கு அழியும் அளவுக்கு வரலாறு காணாத அளவுக்கு பேரழிவு இருக்கும்; இப்படிப்பட்ட பயங்கர விளைவுகளைத் தொடர்ந்து கிறிஸ்துவின் சமாதான ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

**வெளி 16 : 19.**
**அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது; புற ஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன; மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது .**

**மகா நகரம் :** மகா பாபிலோனும், உள்ளடக்கிய உறுப்புகள் மற்றும் அதன் ஆதரவு அமைப்புகள் யாவும்.

**மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது :**

இது வெளி 16 : 13ன் மூன்று பகுதிகளைச் சம்பந்தப்படுத்துகிறது; இது கூட்டணி பிளவுபடுவதைக் காண்பிக்கிறது.

**புற ஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன :**

சினாய்டிக் பிரதி 'பட்டணம்' என்று ஒருமையில் குறிக்கிறது. இது 'பன்மையாக' இருக்கலாம். 'பெருநகரம்' என்பது ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டது; பல தேசங்களின் தலை நகரங்கள் விழுவது இப்பொழுது குறிக்கப்படுகிறது ; இது ஒரு அராஜக நிலைக்கு வழி வகுக்கிறது; இந்த ராஜ்யங்களின் ஆளுகை விழுந்தவுடன், சிறிதும் பெரிதுமான மற்ற அமைப்புகள் அழிவுறுவதை அடுத்த வசனத்தில் (வெளி 16 : 20ல்) காணலாம்.

புற ஜாதிகளின் இந்த பட்டணங்கள் (தலைநகரங்கள் - ஆட்சி செய்யும் மையங்கள்) அழிவது தேவ நீதியாகும்; மனுக்குலத்திற்கு இந்த ராஜ்யங்கள் (மிருகங்கள்) பல வேதனைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

**மகா பாபிலோனுக்கு ....... அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது :**

இந்த நிலையில் தேவனால் மறக்கப்படவே மகா பாபிலோனின் விருப்பமாயிருக்கும்; ஆனால், தேவன் அவள் மீது நியாயந்தீர்க்க அவளை நினைவு கூர்ந்தார்; வெளி 18 : 5ல் அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது. அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார் என்று பார்க்கிறோம். வெளி 16 : 19ன் 'தேவ கோபாக்கினை' என்பது இந்த வாதைகளைக் குறிக்கிறது. (வெளி 15 : 1). ஆனால், இந்த வாதை மிக அதிகமானது.

**தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி :**

'பாத்திரம்' என்பது 'அனுபவம்'. ரசம் (மது) என்பது பல அர்த்தங்களை உடையது; அவற்றில் ஒன்று 'கொள்கைகளின் பலன்'. இந்த 'மது' உண்மையில் மகா பாபிலோனுக்கு விரும்பத்தகாதது என்பது தெளிவு. குற்றவாளிகளுக்கு மரண தண்டனையாக குடிக்கக் கொடுக்கப்படும் நச்சு மூலிகையின் ரசத்திற்கு ஒத்தவிதமாக, மகா பாபிலோனுக்கு உக்கிரமான மது குடிக்கக் கொடுக்கப்படுகிறது. இந்த பாத்திரத்தில் தேவனுடைய கோபாக்கினையின் பலன்கள் முழுவதுமாக நிறைந்திருந்தன.

**வெளி 16 : 20.**
**தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற் போயின.**

**தீவுகள் யாவும் அகன்றுபோயின :**
"தீவுகள்" என்பது "குடியரசுகள்" என்று அர்த்தம்; 'அகன்று போகுதல்' என்பது அவைகளின் அழிவு (முடிவு) என்று பொருள்படும்; அல்லது, பல பிரச்சினைகளை சந்தித்து, அதற்கான தீர்வுகள் காண இயலாமல் குடியரசுகள் தத்தளிக்கும் நிலைமையையும் குறிக்கலாம்.

**பர்வதங்கள் காணப்படாமற் போயின :**
பர்வதங்கள் (மலைகள்= இராஜ்யங்கள்); வசனம் 19ல் கண்ட ' பட்டணங்கள் ' (தலை நகரங்கள் - ராஜ்யங்களின் அதிகார மையங்கள்) தங்கள் ஆளுகையை இழந்த நிலையில், பர்வதங்களாக (இராஜ்யங்களாக) இருக்க இயலாத நிலையில், அராஜகம் (அமைதிக்கேடு) ராஜ்யங்களை விழுங்கி விடுகின்றன.

**வெளி 16 : 21.**

**தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடிதாயிருந்தது .**

**கல்மழை :** கெட்டியான தண்ணீர் - "அழிக்க வல்ல சத்தியங்கள்" ;

**தாலந்து நிறையான :**

' தாலந்து ' என்பது அதிகமான எடை அளவு ஆகும்; (100 பவுண்டுகளுக்கு மேல்) ; இதிலிருந்து அதன் அழிக்கும் வல்லமை தெரிகிறது. கிரேக்க மொழியில் 'தாலந்து' என்பது 'தராசு' என்று அர்த்தம். இது கடந்த காலத்து தப்பிதங்களுக்கு நீதியான தண்டனையாக இந்த சத்தியங்கள் விளங்குகின்றன. இந்த வாதையுடன் தேவனுடைய நீதியின் கோபாக்கினை முடிவு பெறுகிறது.

' தாலந்து ' பற்றி பழைய ஏற்பாட்டில் சில வசனங்கள் உண்டு. (2சாமு 12 : 30; 1இராஜா 20 : 39; சகரியா 5 : 7).

வெளி 16 : 21ன் 'தாலந்து' பற்றிய குறிப்பு யாத் 25 : 39 அல்லது யாத் 37 : 24ல் காணப்படுகிறது. ஆசரிப்பு கூடார பரிசுத்த ஸ்தலத்தில் குத்து விளக்கும், அதன் பணிமுட்டுக்களும் ஒரு தாலந்து நிறை பசும் பொன்னினால் செய்யப்பட்டது. குத்துவிளக்கு ஏழு சபைகளைக் குறிப்பதாலும்,இந்த ஏழு சபைகளின் தூதர்களால் அறிவிக்கப்படும் சத்தியங்கள் தான் ஏழு வாதைகளைக் குறிப்பதாலும் ஏழாவது சபையின் தூதன் மற்றும் ஏழாவது வாதை, சுவிசேஷ யுகம் முழுமைக்குமான சத்தியங்களின் தொகுப்பை கொண்டிருந்ததால், ஒரு தாலந்து நிறையான கல்மழை, இந்த யுகத்தின் ஒட்டுமொத்த சத்தியங்கள் பாபிலோனின் போலி கிறிஸ்தவ மதத்தின் மேல் பற்றுகொண்டோர் மீது தீர்ப்பாக பிரயோகிக்கப்படுவதை அடையாளமாகக் காட்டுகிறது.

**வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது :**

இது தேவ கட்டளையை குறிக்கிறது ;

'மனுஷர்' என்பது மகா பாபிலோனாகிய போலி கிறிஸ்தவத்தின் மேல் பற்று கொண்டு அதனை அனுசரிப்பவர்களை குறிக்கும். மனுஷர்கள் தங்கள் தப்பிதங்களை களைய உதவும் சம்பவமாக, வானத்திலிருந்து கல்மழையாகிய சத்தியங்கள் அவர்கள் மேல் திணிக்கப்படுகின்றன.

**மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள் :**

குழப்ப நிலையிலிருக்கும் மனுஷர்கள் தங்கள் நம்பிக்கைகளை இழந்தனர். அவர்களை சுற்றியிருந்த உலகம் பிளவு அடைந்தது. எதிர்காலம் பற்றிய ஞானம் அவர்களுக்கு இல்லை.

**அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் :**

இந்த கொந்தளிப்பில் 'மனுஷர்' எவ்விதம் சத்தியங்களை தெளிந்துணர முடியும் என்பது யூகத்துக்கிடமானது. அராஜகமும், அமைதிக்கேடுமான சூழ்நிலையில் தெளிவான சிந்தனைக்கு இடமில்லை. தங்களின் பழைய மரபுகளின் மேல் இருந்த நம்பிக்கை அழிந்து, மனுஷர் சமாதானத்திற்காக ஏங்கும் நிலை உருவாகிறது.

வாதைகளைப் பற்றிய இந்த விவரிப்பு இனி நடக்க இருப்பதின் ஒரு நோக்கத்தை நமக்கு வெளிப்படுத்துவதாக இருக்கிறது; இவ்வுலகத்தாருக்கு இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து இனி வரப்போகும் காரியங்கள் கேள்விக்குறியாக இருக்கிறது. இவையெல்லாம் "ராஜ்யத்தை" எதிர்கொள்ளும் நிலைக்கு தயாராகிறதை உணரலாம்.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

# ஏழு தூதர்கள், ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு உவமைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள்

| எண் | தூதர் | சபை | முத்திரை | உவமை | எக்காளம் | வாதை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பவுல்<br>கி.பி. 30 - 70<br><br>ஆதிச்சபை | எபேசு<br><br>அப்போஸ்தலர் வாழ்ந்த காலம் | ஜெயங் கொள்ளுதல்<br><br>வெள்ளை குதிரை | விதைப் பவன் | பூமி | பூமி |
| 2 | யோவான்<br>கி.பி. 70 - 313<br><br>ரோம புறமத அடக்குமுறை | சிமிர்னா<br><br><br>கள்ள யூதர்கள் / துன்புறுத்தல் | பட்டயத்தினால் பூமியிலிருந்து சமாதானம் எடுத்துப் போடுதல்<br>சிவப்பு குதிரை | களைகள் | சமுத்திரம் | சமுத்திரம் |
| 3 | ஏரியஸ்<br>கி.பி. 313 - 1160<br><br>போப்பு மார்க்க கொள்கை களால் கிளர்ச்சி | பெர்கமு<br><br><br>விக்கிரகங் களுக்கு படைத்த வைகளை புசித்தல் / மறைவான மன்னாவை புசிக்க கொடுத்தல் | பஞ்சம்<br><br><br>கறுப்பு குதிரை | விருட்சம் வளரு கிறது | ஆறுகளும் ஊற்று களும் | ஆறுகளும் , ஊற்று களும் |
| 4 | வால்டோ<br>கி.பி. 1160 - 1371<br><br>யேசபேல் கட்டில் கிடையாக்கப் படுதல் | தியத்தீரா<br><br><br>யேசபேல் மயக்குதல் /<br><br>அவள் பிள்ளைகள் கொல்லப் படுதல் | மரணம்<br><br><br>கொள்ளை நோய்<br><br><br>மங்கிய நிறமுள்ள குதிரை | புளித்த மாவு | சூரியன் சந்திரன் நட்சத்தி ரங்கள் | சூரியன் சந்திரன் நட்சத்தி ரங்கள் |
| 5 | விக்ளிப்<br>கி.பி. 1371 - 1521<br><br><br><br>மறுமலர்ச்சி / சீர்திருத்தம் | சர்தை<br><br><br><br>மனந்திரும்பு / தகுதியுள் ளவன் வெண் வஸ்திரம் தரித்தல் | பலிபீடத்தின் கீழ் ஆத்துமாக்கள்<br><br>வெண் வஸ்திரம் | பொக்கி ஷம் | சூரியன் கறுப்பா குதல்<br><br>வெட்டுக் கிளி<br><br>ஐயோ - 1 | இருள்<br><br><br><br>மிருகத்தின் ஆசனம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | லூத்தர்<br>கி.பி. 1521 - 1874<br><br>அங்கீகரிப்ப தற்கான வாக்குத்தத்தம் | பிலதெல்பியா<br><br>கதவு திறத்தல் | பிரெஞ்சு புரட்சி<br><br>சாத்தான் கூட்டம் வலுவிழந்தது | முத்து | ஐபிராத்து நதி<br><br>நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்ப டுதல்<br>ஐயோ 2 | ஐபிராத்து நதி<br><br>வற்றிப் போகுதல் / தவளை களைப் போன்ற 3 ஆவிகள் |
| 7 | ரசல்<br>கி.பி. 1874<br><br>கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் | லவோதிக் கேயா<br><br>கண்களுக்கு கலிக்கம் / கர்த்தருடன் போஜனம் / சிங்காசனம் | நெற்றியில் முத்திரை யிடுதல் முடிவடைதல் | மீன் வலை (அறுவ டை) | மணவாட்டி இராஜ்யத் தைப் பெறுதல்/ ஏழாம் வாதை ஐயோ -3 | அர்மகெ தோன்<br><br>கோபத்தின் உக்கிரம் |

# 17ம் அதிகாரம்

## மகா வேசிக்கு தீர்ப்பு
## (பாபிலோனுக்கு எதிரான அரசியல் - சமுதாய விளைவுகள்)

**மிருகத்தின் பாகங்கள் :**

மிருகத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் வேசியாக பாபிலோன் சித்தரிக்கப்படுவது இந்த அதிகாரத்தில் தெளிவாகத் தெரிகிறது. சபையும் இராஜ்ஜியமும் ஒன்றாக இணைந்துள்ள நிலையை மிருகமாக உருவகப்படுத்தியிருந்ததை 13ம் அதிகாரத்தில் பார்த்தோம். பாபிலோனின் விழுகை மற்றும் மிருகத்தின் அழிவு பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள, சபை, மற்றும் இராஜ்ஜியம் **தனித்தனி** அடையாளங்களாக குறிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

மிருகத்தின் மேல் ஏறி சவாரி செய்வது "போப்பாதிக்கம்" அல்ல. வெளி 12ம் அதிகாரத்தில் "போப்பாதிக்கம்" ஒரு ஆண் பிள்ளையாகவும், வாயாகவும் குறிக்கப்பட்டுள்ளது. (வெளி 13 : 5, 6; தானியேல் 7 : 20) பாபிலோனின் விழுகையில் போப்பாதிக்கத்தை விலக்கி வைக்க இயலாத போதிலும் இந்த அதிகாரத்தின் முக்கிய அம்சம் " **ரோமச்சபை** " ஆகும். இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணங்களாக கீழ்கண்டவைகளை கூறலாம்.

1) "போப்பாதிக்கம்" எப்பொழுதும் மிருகத்தின் கொம்பு போலவே சித்தரிக்கப்படுகிறது. 12ம் அதிகாரத்தில் மட்டும் இது ஒரு ஆண் பிள்ளையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த உருவகம் 17ம் அதிகாரத்தின் விளக்கத்திற்கு உகந்தது அல்ல.

2) இராஜ்ஜியத்துடன் சபை இணைந்து செயல்படும் துன்மார்க்க நிலையை வெளிப்படுத்தும் நோக்கமாக " வேசி " என **ரோமச்சபை** அடையாளப்படுத்தப்படுகிறது.

3) தலைமையை (போப்பாதிக்கத்தை) மட்டுமல்ல: ரோமச்சபையின் **முழுமையான** அழிவையுமே 17ம் அதிகாரம் வெளிப்படுத்துகிறது.

வெளி 17 : 1ல் வேசி " **தண்ணீர்கள்** " மேல் உட்கார்ந்திருப்பதையும், வெளி 17 : 3ல் **மிருகத்தின்** மேல் ஏறியிருப்பதாகவும் காட்டியிருப்பது மிருகத்தின் **உடல்** ஜனங்களைக் குறிப்பதாக தெரிகிறது.

மிருகத்தின் பாகங்களை கீழ்கண்டவாறு காணலாம் :

**சவாரி செய்பவர்** : போலிச் சபையான ரோமன் கத்தோலிக்க சபை.
இது தன் வேசித்தனத்தினால் மிருகத்தை வழி நடத்துகிறது.

**மிருகத்தின் உடல்** : தன்னிச்சையாகவோ அல்லது வற்புறுத்தலின் பேரில்
ரோமச்சபை அமைப்பை பின்பற்றும் **ஜனங்கள்.**

**அதன் கொம்புகள்** : ரோமச்சபையை ஆதரிக்கும் அதிகாரங்கள் (இராஜ்ஜியங்கள்).

**அதன் தலைகள்** : இந்த சிக்கலான அமைப்பின் அதிகார **படிவங்கள்.**

**குறிப்புரை** : வெளி 17ம் அதிகாரத்தில் சொல்லப்படும் **" ராஜாக்கள் "**
வசனம் 9 - 10ல் **தலைகளுக்கு** ஒத்துள்ளதாகவும்,
வசனம் 12ல் **கொம்புகளுக்கு** ஒத்துள்ளதாகவும் இருவிதமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதைக் குறித்த தெளிவான விளக்கம் பிறகு காணலாம்.

**வெளி 17 : 1, 2 .**

**ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே ;**
**அவளுக்கு வரும் ஆக்கினையை உனக்கு காண்பிப்பேன் என்று சொல்லி .**

**17 : 1. ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து :**

இந்த தூதர்களில் ஒருவனாகிய ஏழாம் தூதனை நாம் அடையாளம் கண்டு கொண்டால் மற்ற தூதர்களையும் (சுவிஷேச யுக சபையின் ஏழு காலப்பகுதிகளுக்கான தூதர்களை) அடையாளம் காண சாத்தியமாகிறது. ஏழாம் தூதன் சகோ. ரசல் அவர்களைக் குறிக்கிறது.

**என்னோடே பேசி :**

இந்த யுகத்தின் முடிவிலிருக்கும் யோவான் வகுப்பாராகிய நமக்கு, ஏழாம் தூதனின் சத்தம் (நேரில் அல்லது அவரது எழுத்துக்கள் மூலமாக) அறுவடை கால இறுதிக் கட்டத்தில் நிலையான தோழமையாக கடைசி பரியந்தம் நாம் தேவனில் நிலை நிற்க பிரயோஜனமாயிருக்கிறது.

**நீ வா உனக்கு காண்பிப்பேன் என்று சொல்லி :**

இந்த ஏழாம் தூதனின் கட்டளையின் பலனை நாம் அடைய வேண்டுமானால், நாம் அவனை அணுக வேண்டும். தேவத் திட்டத்தில் இந்த தூதனின் பங்கை நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால், 17ம் அதிகாரத்தை முழுமையாக புரிந்து கொள்ள இயலாது. பாபிலோனின் வரலாறு, அடையாளம், மற்றும் விழுகையைக் குறித்த விளக்கவுரையை தெள்ளந்தெளிவாக எடுத்துரைத்ததில் சபையின் மற்ற காலப்பகுதி தூதர்களைக் காட்டிலும் ஏழாம் தூதனின் (சகோ. ரசல்) பங்கு மகத்தானது.

**அவளுக்கு வருகிற ஆக்கினை :**

போலிச் சபையை **வேசி** என முதன் முறையாக (17ம் அதிகாரத்தில்) குறிக்கப்படுகிறது. போலிச் சபையின் **நம்பிக்கை கேடு** (விபச்சாரம்) காரணமாக அவள் நியாயந்தீர்க்கப்படுவதை வலுவாக உணர்த்தும் பொருட்டு " வேசி " என அழைக்கப்படுகிறது.

**திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற :**

"தண்ணீர்கள்" என்பது **ஜனங்களைக்** குறிக்கிறது. அவள் திரளான ஜனங்களை அடக்கி ஆளும் தன்மை தெரிகிறது. மேலும் வெளி 17 : 3ம் வசனத்தின்படி, மிருகத்தின் **உடல்,** ஜனங்களை உள்ளடக்கியதாகவும் தெரிகிறது.

**வெளி 17 : 2 .**

**மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்கள் :**

இது தான் வேசியின் முதன்மையான பாவம் ஆகும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, அவருடன் கலியாணம் செய்து கொள்ள ஏதுவாக கிறிஸ்துவ சபை நிச்சயிக்கப்பட்டிருந்தது. மணவாளனின் வருகை வரையிலும் உள்ள இடைப்பட்ட காலத்தில் இவ்வுலக ராஜ்யங்களின் அதிபதிகளை ரோமச்சபை (தன்னுடன் இணைந்து ஒத்துழைக்கும் வகையில்) மதி மயக்கியது. இதன் காரணமாக சபை எவ்வித தொந்தரவுகள் இல்லாமல் ஆடம்பரமாக வளர முடிந்தது. ரோமச்சபையும் மற்றும் அதன் மரபு வழிச் சபைகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய விஷயத்தில் எவ்வித ஆர்வமும், அக்கறையும் காட்டுவதில்லை.

**பூமியின் குடிகளும் :**

ஒரு நிலையான சமுதாயத்தை தக்க வைத்துக்கொள்ளும் மனோபாவம் கொண்ட (தங்கள் சுய நலன்களை முன்னிட்டு) ஜனங்கள். நீதி நெறி, மற்றும் தூய்மை பற்றிய கவலை இவர்களுக்கு இல்லை.

**அவளுடைய வேசித்தனமான மதுவால் :**

"சபை - ராஜ்ஜிய ஒருங்கிணைப்பை" அங்கீகரிக்கும் அவளது கொள்கை.

**வெறி கொண்டிருந்தார்கள் :**

ஜனங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள இயலாத , அக்கறையற்ற நிலையிலிருந்தார்கள்.

**பாபிலோனின் உன்னத நிலை பற்றிய வரலாற்று பதிவுகள் :**
**வெளி 17 : 3 - 5.**

**வெளி 17 : 3.**

**ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான். அப்பொழுது, ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும் உடையதும், தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.**

**ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்கு கொண்டு போனான் :**

தானியேலின் 1260 வருட தீர்க்கதரிசனத்தை முதன் முதலில் தெரிந்துணர்ந்தவர் சகோ. ரசல் அவர்களே. இந்த வேசியின் அடையாளம், அதிகாரம், பண்புகளை வரலாற்று பின்னணிகளுடன் அறிந்து கொள்ள கடந்த காலத்திற்கு நம்மை கொண்டு சென்றவர் இவரே.

**வனாந்தரத்திற்கு :**

" வனாந்தரம் " என்ற சொல் வெளிப்படுத்துதல் ஆகமத்தில் மூன்று முறை வருகின்றன. வெளி 17 : 3; 12 : 6; 12 : 14.

1260 நாட்கள் உபத்திரவத்திற்கு தப்பிக்க ஸ்திரீ (உண்மை சபை) வனாந்தரத்திற்கு ஓடிப் போவதை 12 ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.இதே காலப்பகுதி தான் பாபிலோன் (யேசபேல்) ஆட்சி செய்த **மேன்மையான** காலம் !

**சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன் :**

ஸ்திரீ ஒரு வேசி. (ரோமச்சபை)

சிவப்பு நிறம் (scarlet) என்பது பாவத்தைக் குறிக்கிறது. இந்த நிறம் (ஊதா நிறத்துடன் - purple) ராஜரீக அந்தஸ்தை (ஜோதியை) குறிக்க உபயோகப்படுத்தப்படுகிறது. (மத் 27 : 28; வெளி 18 : 16).

வெளி 13ம் அதிகாரத்தில் பாபிலோனின் சபை - ராஜ்ஜீய இணைப்பை குறிக்கும் விதமாக,சில குறிப்பிட்ட மிருகங்கள் அடையாளக் குறியீடுகளாக காட்டப்பட்டு, அதன் உண்மை தன்மைகளை நமக்கு காண்பிக்கும் வண்ணம் இருந்தன. ஆனால் , வெளி 17 : 3ல் உள்ள மிருகம் முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் சிவப்பு நிறம் கொண்டதாக வர்ணிக்கப்படுகிறது.

1260 வருட காலத்தில் இந்த மிருகம் எப்படி செயல்பட்டது ? யோவான் வகுப்பாரின் பார்வையில் இந்த மிருகம் பாவச்சின்னமாக காணப்பட்டது. ஆனால் , அதே நேரத்தில், இந்த சிவப்பு மிருகம் உலகத்தாரின் பார்வையில் **ராஜரீக மகிமை** கொண்டதாக காணப்பட்டது.

**தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான :**

வெளி 17 : 3; மற்றும் 13 : 1ல் மட்டும் தூஷணமான **நாமங்கள்** நிறைந்ததாக மிருகம் விவரிக்கப்படுகிறது. **நாமங்கள்** என்பது **குணலட்சனங்களைக்** குறிக்கிறது. ஆனால், குறிப்பாக இந்த மிருகம் தன்னகத்தே நாமங்களையும், பட்டங்களையும் தேவ தூஷணமான முறையில் கொண்டுள்ளதைக் குறிக்கிறது.

**ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும் உடையதும் :**

ராஜ்ஜியத்தின் ஏழு படிவங்களையும் (forms), அதை ஆதரிக்கும் பத்து அதிகாரங்களையும் (மாகாண அரசுகளையும்) குறிக்கிறது.

**வெளி 17 : 4.**

**அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும், சிவப்பான ஆடையுந்தரித்து , பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு.. தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தை தன் கையில் பிடித்திருந்தாள்.**

**அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும், சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு :**

ஸ்திரீயின் இந்த அலங்கார வர்ணனை வெளி 18 : 16 லும் காணப்படுகிறது. ராஜரீக வேசி அணிந்திருந்த ஆடையின் நிறம் இரத்தாம்பரம் (கருஞ்சிவப்பு நிறம்) எனக் குறிக்கப்படுகிறது. அவளுடைய ஆடையின் மகிமையும், அலங்காரமும் ஒரு செல்வாக்கு படைத்த ராஜரீக ஸ்திரீக்கு உரியதாக காணப்படுகிறது. கழுகினால் வனாந்தரத்தில் பராமரிக்கப்பட்ட ஸ்திரீக்கு முற்றிலும் மாறுபட்ட விதமாக இந்த வேசி காணப்படுகிறாள்.

**பொற்பாத்திரத்தை தன் கையில் பிடித்திருந்தாள் :**

**கை** என்பது **நடக்கைகளைக்** குறிக்கிறது.

பெல்சாத்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டு வந்த பொன் பாத்திரங்களை உபயோகித்த அன்று பாபிலோன் சாம்ராஜ்யம் விழுந்தது. நவீன பாபிலோன் மெய் திருச்சபையிடமிருந்து அபகரித்து, "கர்த்தருடைய பாத்திரங்கள்" என்ற பாவனையில், இழிந்த முரண்பாடான கொள்கைகளை உருவாக்கி, வேதாகமத்தையும், ஆதிக்கிறிஸ்தவத்தின் வரலாற்று தொடர்பையும் தனக்கு சொந்தமாக உரிமை பாராட்டி, ஜனங்களுக்கு அசத்தியங்களை ஊட்டுவித்து, மதி மயக்கமுறச் செய்வதில் ரோமச்சபை வெற்றி பெற்றது.

**தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் :**

பொய்களையும், தவறான கூற்றுகளையும், தேவ தூஷணங்களையும் தன்னை பின்பற்றுவோரின் மீது திணித்து மனுஷர்களை சீரழிக்க பாபிலோன் துணை போகிறது.

பாபிலோனின் பாவங்களை இரண்டு விதமாக பிரிக்கலாம் :

1. மதச் சம்பந்தமான பொய்கள்;
2. மனுஷரின் உரிமைகளையும், சுதந்தரங்களையும் அமிழ்த்துவதற்கு ஏதுவாக மத - ராஜ்ஜீய ஒத்துழைப்பு.

**வெளி 17 : 5 .**
**மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது .**

**நாமம்** என்பது **பண்பு** அதாவது நடத்தையைக் குறிக்கும். அவளுடைய சொல் மற்றும் செயல்களில் அவளின் உண்மையான பண்பு வெளிப்படும்.

**இரகசியம்** : இது வெகுவாக மறைக்கப்பட்ட விஷயம் !
**கிறிஸ்துவின்** பெயரில் **அந்திகிறிஸ்து !** இது எப்படி நடக்கும் ?
**இதுவே இரகசியங்களின் இரகசியம் !**

**மகா பாபிலோன் :** மூல பாஷையில் "கடவுளிடம் செல்லும் வாசல்" என்று அர்த்தம் கொள்ளும். அது நாளடைவில் "குழப்பம்" என்று பொருள் பெற்றது. "மகா பாபிலோன்" என்று குறிப்பிடுவது " சிறிய பாபிலோன்கள்" உள்ளதை உணர்த்துகிறது;

**வேசிகளுக்கு தாய் :** வேசிகள் என்பது " சிறிய பாபிலோன்களை " குறிக்கிறது. இவர்கள் " மகா பாபிலோன் " என்ற தாயின் வம்சாவளிகள்.

**பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் :**
மகா பாபிலோனின் நடவடிக்கைகளின் விளைவாக சமுதாயத்தில் நீதி வழுவிய சீர்கேடுகளும், வெறுப்புணர்ச்சிகளும் , மற்ற அருவருப்புகளும் உருவாக ஆதி காரணமாயிருக்கிறாள்.

**வெளி 17 : 6.**
**அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன். அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.**

இந்த வேசி (தாய்) பற்றிய வரலாறு மற்றும் தீர்க்கதரிசன உட்பொருளை யோவான் வகுப்பார் இந்த இறுதி காலத்தில் முழுமையாக அறிந்து கொண்டுள்ளனர் - இந்த வேசி ரோமச்சபை.

வேசியின் குமாரத்திகளும் முக்கிய பங்கு வகிப்பவர்களாயிருப்பினும், கர்த்தராகிய கிறிஸ்து **தாய் வேசியை** தனியாக பிரித்து விவரிப்பதை நாம் மனதில் கவனமாய் கொள்ளுதல் வேண்டும்.

**பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன் :**

அவள் வெறி கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். மெய்யான சபையை அடக்கி நசுக்குவதில் பெற்ற வெற்றி அவள் தலைக்கு ஏறியுள்ளது. தன்னை யாரும் வெல்ல முடியாது என்ற நினைப்பு அவளிடம் உள்ளது. அவளுடைய விழுதலுக்கு இந்த எண்ணமே காரணமாக அமையும் ! பரிசுத்தவான்களிடமிருந்து ஆவிக்குரிய ஜீவனை பறிக்க அவளால் இயலவில்லை. ஆனால், அவர்களுடைய மாம்சீக வாழ்க்கையை துயரமிக்கதாக்கி பறித்துக் கொள்ள முடிந்தது.

**இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன் :**

"பரிசுத்தவான்களிலிருந்து" இங்கு குறிப்பிடப்படும் "சாட்சிகள்" எப்படி வேறுபடுகிறார்கள் ?

கிரேக்க மூலத்தில், **சாட்சிகள் = இரத்த சாட்சிகள் .**

**அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன் :**

அருவருப்புகளையும், தகாத வழியில் உரிமை பெறுதலையும், சதி திட்டங்களையும், உபாயங்களையும் (எவ்வித தண்டனை பயமின்றி) மனுஷர் மேல் பிரயோகிக்கும் "வேசியை" யோவான் வகுப்பார் வியப்புடன் பார்க்கின்றனர். அவளுக்கு எதிராக முறையான குற்றச்சாட்டுகளை தொகுத்து பகர்ந்த பொழுது, சுவிசேஷ யுகத்தின் வரலாற்று நிகழ்வுகளை நாம் ஆச்சரியமாய் பார்க்கிறோம்.

**வெளி 17 : 7.**

**அப்பொழுது தூதனானவன் என்னை நோக்கி, " ஏன் ஆச்சரியப்படுகிறாய் "இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும், பத்து கொம்புகளையும் உடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் .**

**அப்பொழுது தூதனானவன் என்னை நோக்கி, " ஏன் ஆச்சரியப்படுகிறாய் " :**

இந்த கேள்வி சொல் அலங்கார பாணியில் உள்ளது. பாபிலோனின் கடந்த காலத்தை அறிந்து கொண்டு வியப்படையும் நிலையில், இதையும் மிஞ்சத்தக்க அளவில் எதிர் காலத்தில் நடக்கப் போகும் காரியங்களைப் பார்க்க கோரி, தூதன் யோவான் வகுப்பாரை அழைக்கிறான்.

**இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும் :**

அவளுடைய வெறும் கடந்த காலத்தைப் பற்றி மட்டுமல்ல; அவளுடைய எதிர் காலத்தைப் பற்றியும் சொல்லப்போவதாக இந்த வசனம் தெரிவிக்கிறது. இதுவே " முழுமையான இரகசியம் ".

ரசல் சகோதரர் பாபிலோனைப் பற்றி உரைக்க ஆரம்பித்த உடன், இந்த " இரகசியம் " துலங்க ஆரம்பித்தது. இது அறுவடை கால பரிசுத்தவான்களை ஈர்க்கும் விஷயமாக உள்ளது. சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைக் குறித்து அசட்டை யாயிராமல் சரியான சமயத்தில் வேசியின் எதிர்காலத்தைப் பற்றி உரைத்துள்ளார்.

**இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் :**

இந்த "தொடரும் இரகசியம்" போலிச் சபை சம்பந்தபட்டது மட்டுமன்றி, அவளைச் சுமக்கிற "உலகமும்" தொடர்புடையதாய் உள்ளது. ரோமச்சபை உயிர் பிழைத்திருப்பதற்கான எல்லா ஆதரவுகளையும், ஊக்குவிப்பையும் அச்சபையைப் பின்பற்றும் மனுஷ சமுதாயம் நல்குகிறது.

**ஏழு தலைகளையும், பத்து கொம்புகளையும் உடையதாய் :**

இந்த மிருகத்தின் அடையாளத்தை தெளிவாக உணர, வெளி 13ம் அதிகாரத்தில் காணப்படும் விவரங்களை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும்; பாபிலோனின் விழுகையை அறிந்து கொள்ள, மிருகத்தின் இரண்டு பாகங்களை கவனிக்க வேண்டும்; அதாவது, "தலைகள்", "கொம்புகள்"; வெளி 17ம் அதிகாரத்தில் பாபிலோனின் அழிவை விவரிக்க ஏதுவாக, சபையும், ராஜ்ஜியமும் தனித்தனியாக பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அவர்கள் உண்மையில் பிரிக்கப்படாத நிலையிலும், அவர்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக பிரியும் வரையிலும் எப்படி சுமூகமான ஒத்துழைப்புடன் இருந்துள்ளது என்பதைக் காட்டுவதற்காக, இவ்வசனத்தில் தனித்தனியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## பாபிலோனின் சரிவும் விழுகையும்

வெளி 17 : 8 - 13ம் வசனங்கள் மிகவும் கருகலானவை என வெளிப்படுத்தல் ஆகமத்தை படிக்கும் வேத மாணவர்கள் அறிவர். இந்த வசனங்களில் காணப்படும் கதாப்பாத்திரங்களை அடையாளப்படுத்த, தூதன் தேவையான யுத்திகளைக் கொடுத்துள்ளதைக் கருத்திற் கொண்டு, சரியான விளக்கங்களை நாம் பெறலாம்.

வெளி 17 : 8ம் வசனத்தில் நாம் **ஏற்கனவே கண்ட** மிருகத்தைப் பற்றி கூறப்படுகிறது ;

**மையக் கருத்து (1) :**

8ம் வசனத்தில் குறிக்கப்படும் மிருகம் **ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும்** உடைய **முழுமையான மிருகம் அல்ல .** இந்த மிருகம் (நாம் ஏற்கனவே கண்ட) **இப்பொழுது இல்லை.** ஆனால், 10ம் வசனத்தில் இந்த மிருகம் (வரலாற்றில் **அதே காலக் கட்டத்தில்) இருக்கிறது .** அதாவது, இந்த மிருகம் அதே காலக் கட்டத்தில் ஒரு தலையுடன் (6ம் தலை) இருக்கிறது. ஆகவே தான், இந்த மிருகம் **இருக்கிறது** என 10ம் வசனத்திலும், **இப்பொழுது இல்லை** என 8ம் வசனத்திலும், அதே காலக் கட்டத்தில் குறிக்கப்படுகிறது ;

இது இரண்டு விதமாக பேசும் தொனியில் இருப்பதாக தோற்றமளிக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல.

இந்த மிருகம் சில இயல்புகளுடன் (சில நடத்தைகளுடனும், பிழற்சிகளுடனும், சில தனித் தன்மைகளுடனும்) **இருந்து வந்துள்ளது .**

8ம் வசனத்தில், “நீ கண்ட மிருகம்“ என்று சொல்வதிலிருந்து, 3, 4ம் வசனங்களில் வனாந்தர காட்சியில் ஸ்திரீ ஏறி உட்கார்ந்திருந்த அந்த மிருகம் தான் சுட்டிக்காட்டப்படுகிறது என்பது விளங்குகிறது. ஆகவே, இந்த மிருகத்தினிடத்தில் நாம் காண விழையும் நெறி பிழற்சிகள் இந்த வனாந்தர காலக் கட்டத்தைச் சார்ந்ததாகவே (கி.பி. 539 - 1799) இருக்கும் என்பது தெளிவாகிறது.

**குறிப்பு :**

“ மிருகத்தின் உடல் “ கலகம் செய்தது குறித்த ஒரு வித்தியாசமான சம்பவம் வேதாகமத்தில் ஒரு இடத்தில் பார்க்கிறோம். பிரெஞ்சு குடியரசு காலத்தில், **தலை, கொம்புகள், வேசி** (மிருகத்தின் மேல் சவாரி செய்பவர்) ஆகியோருக்கு விரோதமாக **ஜனங்கள்** (மிருகத்தின் உடல்) கலகம் செய்தனர். இந்த புரட்சியின் போது தான், “ நகரத்தின் “ பத்தில் ஒரு பங்கு விழுந்தது. இந்த மிருகம் தான் (**முழுமையான** மிருகம் அல்ல; ஆனால் அதன் உடலான ஜனங்கள்) நகரத்தின் மீதியான பத்தில் ஒன்பது பங்குகளை (9/10 th) அழிக்க **மறுபடியும் ஒருமுறை** தோன்றும். (வசனங்கள் : வெளி 17 : 8, 11, 12, 13, 16, 17).

வெளி 11 : 7 - 11 வசனங்களை அதன் குறிப்புரைகளுடன் பார்க்கவும்.

பிரெஞ்சு குடியரசு **தலை அல்ல.** இது ரோமச்சபையுடனோ அல்லது அச்சபையின் கட்டுப்பாட்டிலோ செயல்படவில்லை. மற்ற எல்லா தலைகளும் ரோமச்சபையின் கட்டுப்பாட்டில் இருந்தவை.ஆகவே தான் வேசி அவைகளின் மேல் ஏறி சவாரி செய்தாள். இன்னும் உயிரோடிருந்த “புனித ரோம சாம்ராஜ்ஜியம்“ (Holy Roman Empire), பிரெஞ்சு குடியரசுக்கு சமகாலத்திய ராஜ்ஜியமாகும். கி.பி. 1806ல் நெப்போலியனால் “புனித ரோம சாம்ராஜ்ஜியம்” தூக்கியெறியப்பட்டதைத் தொடர்ந்து **அடுத்த** தலை உருவாகியது. இந்த நெப்போலியன் சாம்ராஜ்ஜியம் **5ம் தலை** ஆகும். பிறகு இந்த 5ம் தலை போப்பாதிக்கத்துடன் ஒத்துழைப்பாக இயங்கியது.

**மையக் கருத்து (2) :**

**முழுமையாயிராத (PARTIAL)** இந்த மிருகம் (வெளி 17 : 8, 11, 12, 13, 16, 17ம் வசனங்களிலுள்ள) ஏழு தலைகளைச் **சார்ந்தது** என சொல்லப்படுகிறது. ஆனால் **" ஏழு தலைகளில் ஒன்றாக "** இல்லை.

தன் தலை மற்றும் கொம்புகளுடன் முழுமையான மிருகமாக தொடர்ந்து இயங்கி வந்த காலக் கட்டத்தில் தான், **மிருகத்தின் உடல் எதிராக செயல்படும் பிறழ்ச்சி ( ஜனங்களின் கலக புரட்சி )** நடந்தது.

இப்படியாக, இந்த **முழுமையாயிராத (PARTIAL)** மிருகம் பிரெஞ்சுபுரட்சி சமயத்தில் **இருந்தது .** (மிருகத்தின் இந்த நிலை குறுகிய காலத்திற்கு மட்டும் நீடித்தது). பிறகு **5ம் தலையுடன்** இணைந்து **முழுமையான மிருகமாக** இயங்க ஆரம்பித்தது.

ஏழாம் தூதன் (சகோ. ரசல்) காலத்தில் **முழுமையாயிராத** மிருகம் இல்லை. ஏனெனில் மிருக உடலாகிய ஜனங்களின் கலகம் (பிரஞ்சு புரட்சி) அவர் காலத்தில் கடந்த கால நிகழ்வாகி விட்டது. ஆனால், இந்த **பிறழ்ச்சி** (உடலாகிய ஜனங்களின் கலகம்) **மறுபடியும் வெளிப்படும்** என தீர்க்கதரிசனம் உரைக்கிறது. **வெளி 17 : 8ல்** அது பாதாளத்திலிருந்து ஏறி வந்து நாசமடையப் போகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மையக் கருத்து (3) :**

**இந்த முழுமையாயிராத ( PARTIAL ) மிருகம் ஒரு " ராஜா ". ஆனால் , இது ஒரு புது தலை அல்ல.**

9, 10ம் வசனங்களைப் பார்க்கும் போது, நாம் ஞானத்தை பிரயோகிக்க அறிவுறுத்தப்படுகிறோம். இங்கு தான் அடையாளக் குறியீடுகளில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. முதலில், தலைகள் (ராஜ்யங்களின் படிவங்கள்) மலைகளாக (ராஜ்யங்கள்) குறிக்கப்படுகின்றன. ஏழு தலைகள் ஒவ்வொன்றும் வரலாற்றில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சாம்ராஜ்யமாக இயங்கியதை அறிந்து கொள்வதில் நமக்கு சிரமம் ஏதுமில்லை. அடுத்த வாக்கியம் (9 ம் வசனம்) கருகலாய் உள்ளது.

**அவைகள் ஏழு ராஜாக்களாம் :**

அந்த ஏழு தலைகளும் (மலைகளும்) ஏழு ராஜாக்களாம். அந்த ஏழு தலைகளையும் வரலாற்றில் வரிசைக்கிரமமாய் அறிகிறோம். சகோ. ரசல் (தூதன்) காலத்தில் ஐந்து தலைகள் (மலைகள்) கடந்த காலத்திற்குரியதாக இயங்கி முடிந்துவிட்டிருந்தன. அதே போன்று, ராஜாக்களைப் பொறுத்த வரையிலும், **ஐந்து** ராஜாக்களும் கடந்த காலத்திற்குரியவர்கள். இப்படியாக நாம் பார்க்கும் பொழுது, தலைகள், மலைகள், ராஜாக்கள் எல்லாம் **சமமாகவே** குறிக்கப்படுகின்றன.

(தலைகளும், ராஜாக்களும் வெவ்வேறான அடையாளங்களை குறிக்கிறதாக கருதினால், மேற்குறிப்பிட்ட வசனங்களுக்குரிய சரியான விளக்கம் பெற ஏதுவில்லை)

**"*தலை*" யிலிருந்து " ராஜா " என அடையாள குறியீடு ஏன் மாறுகிறது ?**

அடையாள குறியீடு மாற்றத்திற்கு காரணம், இந்த மிருகத்திற்கு **ஏழு தலைகள் மட்டுமே உள்ளன. அதற்கு மேல் எப்போதும் சாத்தியமில்லை.**

**முழுமையாயிராத (PARTIAL) மிருகம்** (இருந்தது, இப்பொழுது இல்லை, இனிமேல் இருக்கப்போவது) **ராஜாவாகப்** போகிறது. இது புதிய தலையாக வரப்போவதில்லை. ஆகவே தான், அடையாள குறியீடு **"*தலை*" யிலிருந்து " ராஜா " வுக்கு மாறுகிறது .**

வெளி 17 : 11 .

இந்த (முழுமையாயிராத) மிருகம் எட்டாவதானவனும் (ராஜாவாக), அவ்வேழிலிருந்து (வரலாற்றைச் சார்ந்தது) தோன்றுகிறவனுமாயிருக்கிறான்.

இது எதைக் குறிக்கிறது ? தலைக்கும், ராஜாவுக்கும் என்ன வித்தியாசம் ?

ஏழு தலைகளையுடைய மிருகத்தின் மேல் வேசி உட்கார்ந்திருக்கிறாள். அதாவது, எல்லா தலைகளும் வேசியுடன் இணைந்து செயல்படுகின்றன. ஆனால், **இந்த எட்டாவது ராஜா, வேசியுடன் இணைந்து செயல்படுகிறதில்லை.** இந்த மிருகத்தை (உடலாகிய ஜனங்களை) தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவோ அல்லது அதன் மேல் ஏறி சவாரி செய்யவோ அந்த வேசிக்கு இயலவில்லை. ஆகவே தான், இது எட்டாவது **தலை இல்லை.** இது எட்டாவது **ராஜா** ஆகும்.

**தலை** என்ற அடையாளம் **ராஜா** என குறிக்கப்பட்டதற்கு காரணம் இதுவே.

**வசனம் வசனமாக விளக்கவுரை :**

வெளி 17 : 8 .

**நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது , இப்பொழுது இல்லை , அது பாதாளத்திலிருந்து ஏறி வந்து நாசமடையப் போகிறது; உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் .**

**மிருகம்** : அதன் “ உடல் “ ஜனங்களைக் குறிக்கிறது.

**நீ கண்ட** : இது வசனம் 3 - 5 க்கு உரியவை. வரலாற்றில் வனாந்தர காலக் கட்டத்தில் (கி.பி. 539 - 1799) நாம் கண்டவை.

**முன்னே இருந்தது** : மிருகத்தின் இயல்பான குணங்களிலிருந்து வேறுபட்ட ஒரு பிறழ்ச்சி, பிரெஞ்சு புரட்சி சமயத்தில் மட்டும் நடந்தது. ஜனங்கள் (மிருகத்தின் உடல்) தங்கள் தலைமைகளுக்கு (தலை,கொம்புகள், வேசி) விரோதமாக எழுந்து கலகம் செய்தனர்.

**இப்பொழுது இல்லை :** பாபிலோனின் விழுகையைப் பற்றி பரிசுத்தவான்களுக்கு விரிவாக எடுத்துரைத்த தூதன் (சகோ. ரசல்) உயிரோடிருந்த மாம்சீக காலத்தில் இந்த மிருகம் இல்லை.

**இனி இருப்பதுமாயிருக்கிற :** பிரெஞ்சு புரட்சியில் நகரத்தில் **1/10** பங்கு விழுந்ததை போன்று , தங்களுடைய ஆட்சியாளர்களை எதிர்த்து மற்றுமொரு பெரும் கலகம் ( மக்கள் புரட்சி ) வர இருப்பதை வசனம் தெரிவிக்கிறது.

**அது பாதாளத்திலிருந்து ஏறி வந்து :** “அதிகாரம் செலுத்த இயலாத நிலையிலிருந்து“ என பொருள்படும்.

பிரெஞ்சு புரட்சி, பாபிலோன் மேல் வர இருக்கும் ஒரு மிகப் பெரும் உபத்திரவத்தைக் காட்டும் சிறு மாதிரியாக இருந்தது. இந்த உபத்திரவம் முதலில் பிரான்ஸில் ஆரம்பித்தது. அது இப்பொழுது தணிந்துள்ளது. ஆனால் அது மறுபடியும் திரும்பி வந்து, தன் முடிவான வேலையை செய்து முடிக்கும்.

**இது இருந்தது, இப்பொழுது இல்லை, இனிமேல் இருக்கும் :**

இந்த கருகலான வார்த்தைகள் அறுவடை கால செய்தியின் தெளிவான பகுதியாக விளங்குகிறது.

**பூமியின் குடிகள்.....மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் :**

ஆனால், பரிசுத்தவான்கள் மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறதில்லை.

**உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத :**

தற்காலத்தில் என்ன நிகழ்கிறது என்பதை ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே உணர இயலும். இந்த வசனம், பூமியின் குடிகளை ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

**....மிருகத்தைப் பார்த்து :**

இது **முழுமையாயிராத** மிருகம் ஆகும்; இதன் உடல், ஜனங்களின் கலக எழுச்சியைக் குறிக்கும். பழைய முறைமைகளை தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்போருக்கு இந்த உபத்திரவம் ஒரு இனிய அனுபவமாக இராது. இருப்பினும், தங்கள் சுய அக்கறைகளை காத்துக் கொள்ள வேண்டி, இந்த **முழுமையாயிராத** மிருகத்திற்கு ஒத்துழைப்பு நல்குவார்கள்.

**இருந்ததும் :**

ஜனங்கள் பிரெஞ்சு புரட்சியை அறிவார்கள். ஆனால் அதன் பொருளை (பாதிப்பை) தங்கள் மனங்களிலிருந்து அமிழ்த்திப் போட முயற்சிக்கின்றனர். அது சம்பந்தமான ஞாபகங்களை நடந்த காரியமாக ஒதுக்கி விட்டனர்.

**இராமற் போனதும் :**

இச்செய்தியை தூதன் எடுத்துரைக்கும் காலத்தில், இந்த மிருகம் இராதிருந்தது.

**இனி இருப்பதுமாயிருக்கிற :**

தங்கள் மத்தியில் மீண்டும் இந்த **முழுமையாயிராத** மிருகம் இருப்பதைக் கண்டு “ பூமியின் குடிகள் “ ஆச்சரியப்படுவார்கள்.

**வெளி 17 : 9 .**

**ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம் .**

**ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும் :**

தூதன் பின் வரும் வசனங்களை பகுத்துணர பரிசுத்தவான்களை அழைக்கிறார்; வசனங்களின் அர்த்தத்தை தூதன் நமக்கு தெரிவிக்கவில்லை. வெறும் அடையாள சமன்பாடுகளை பட்டியலிடுகிறார்;

ஏழு தலைகள் : ஒன்றன்பின் ஒன்றாக இயங்கி வந்த சாம்ராஜ்ஜியங்களின் படிவங்கள்.
ஏழு மலைகள் : அந்த ஏழு படிவங்களும் சாம்ராஜ்ஜியங்களாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | தலைகள் | = | மலைகள் | **(1)** |
| | மலைகள் | = | ராஜாக்கள் | **(2)** |
| ஆகவே , | தலைகள் | = | ராஜாக்கள் | **(3)** |

இந்த மூன்று சமன்பாடுகளும் முக்கியமானவை ;

அதாவது, **தலைகள் = மலைகள் = ராஜாக்கள்**

ஒவ்வொரு தலைக்கும் பெயரிட முனையும் பொழுது, இவைகளில் ஏதாவது ஒன்று சாம் ராஜ்ஜியமாக இல்லாமற் போனால் , நமது விளக்கம் தப்பானது என்பது தெரிய வரும். போப்பாதிக்கத்தை ஒரு தலையாக கருதினால், அது தவறான யூகமாகும். ஏனெனில் போப்பாதிக்கம் ஒரு மலை அல்ல.

**அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற :**

ஒவ்வொரு தலையும் ஒரு சாம்ராஜ்ஜியத்தை வரிசைக்கிரமமாக அடையாளப்படுத்துகிறது. அந்த ஒவ்வொரு சாம்ராஜ்ஜியத்தையும் ரோமசச்சபை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. (உட்கார்ந்திருந்தது). அந்த ஏழு சாம்ராஜ்ஜிய படிவங்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கூடியவரை வைத்திருந்தாலும் (சவாரி செய்தாலும்), இனி வர இருக்கிற " எட்டாவது " அமைப்பின் மேல் இந்த ரோமச்சபை (ஸ்திரீ) ஆதிக்கம் செலுத்த இயலாது. ஆகவே தான், இது "தலை" என்று சொல்லப்படவில்லை. இதன் காரணமாக, அடையாளக் குறியீட்டில் மாற்றம் தேவைப்பட்டது. **10ம்** வசனத்தில் அந்த மாற்றம் காணப்படுகிறது.

**வெளி 17 : 10 .**

**அவைகள் ஏழு ராஜாக்களாம் ; இவர்களில் ஐந்து பேர் விழுந்தார்கள் ; ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை ; வரும்போது அவன் கொஞ்சக் காலம் தரித்திருக்க வேண்டும் .**

**அவைகள் ஏழு ராஜாக்களாம் :**

அடையாளக் குறியீட்டில் இங்கு ஒரு மாற்றம் காணப்படுகிறது. "தலைகள்" இப்பொழுது "ராஜாக்கள்" என அழைக்கப்படுகிறார்கள். ஆகவே தான், புதிய தலை (சாம்ராஜ்ஜியம்) என்ற எண்ணம் ஏற்படாமல் " எட்டாவது " ராஜா எழும்புகிறது.

"ராஜாக்கள்" என்பது குறிப்பிட்ட நபர்களைக் குறிக்காமல் "ராஜ்ஜியங்களை" குறித்தாலும், சில வலுவான நபர்கள் (ஜஸ்டினியன், சார்ல்மேகன், ஒட்டோ, தி கிரேட் போன்றவர்கள்) இந்த சாம்ராஜ்ஜியங்களை நிறுவியமையால் இவர்கள் ராஜ்ஜியங்களை குறிப்பதாக பாவிக்கப்படுகிறார்கள்.

**ஐந்து பேர் விழுந்தார்கள் :**

இந்த கணக்கு ஏழாம் தூதன் காலத்தைச் சார்ந்ததாகும். ஐந்தாம் தலை (மலை அல்லது ராஜா) நெப்போலியனின் சாம்ராஜ்ஜியத்தைக் குறிக்கிறது. ஏழாம் தூதன் காலத்தில் இந்த ஐந்தாம் ராஜா (சாம்ராஜ்ஜியம்) மறைந்து போனான்.

**ஒருவன் இருக்கிறான் :**

ஏழாம் தூதன் காலத்தில் **ஆறாம் தலையாகிய** (மலை அல்லது ராஜா) விக்டர் இம்மானுவேல் வம்சம் ஆட்சி புரிந்து கொண்டிருந்தது.

**மற்றவன் இன்னும் வரவில்லை :**

**ஏழாவது தலை** நாஸிச-பாஸிச சாம்ராஜ்ஜியம் (மலை அல்லது ராஜா).

**வரும்போது அவன் கொஞ்சக் காலம் தரித்திருக்க வேண்டும் :**

ஏழாம் தூதன் " மறைவிற்கு " பிறகு நடக்கும் விஷயம். (கி.பி. 1930 - 1945 வரை).

**வெளி 17 : 10 .**

**இருந்தும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும் , நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான் .**

**இருந்தும் இராததுமாகிய மிருகம் :**

மிருகத்தின் வரலாற்றில் இந்த ஒரு வித்தியாசமான நிகழ்ச்சி நடந்தது. மிருகத்தின் உடல் (ஜனங்கள்) கலகம் செய்து பிரெஞ்சு குடியரசு உருவானது. இப்படியாக நகரத்தில் 10 ல் ஒரு பங்கு அழிந்தது.

**எட்டாவதானவனும் :**

இது எட்டாவது **தலை அல்ல.** இது எட்டாவது **ராஜா.** இந்த முழுமையாயிராத மிருகம் ஆளுகை செய்யும். ஆகவே தான் இது "ராஜா" என்றழைக்கப்படுகிறது. ஆனால் இது "தலையாக" ஆட்சி புரியவில்லை. அதாவது, இதற்கு முந்தைய ஏழு தலைகளை அடக்கி ஆண்ட வேசி, எட்டாம் ராஜாவை தன் கட்டுப்பாடுக்குள் கொண்டு வர இயலாத நிலையில் உள்ளது. ஆகவே, மிருகத்தின் மேல் **எட்டு தலைகள் இல்லை. ஏழு தலைகள் மட்டுமே !**

**அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும் :**

ஏழு தலைகளின் வரலாற்றில் இந்த "எட்டாவது ராஜா" சம்பந்தபட்டிருந்தாலும், இது அந்த **ஏழு தலைகளில் ஒன்று அல்ல.** பழைய ஏழு தலைகளில் ஒன்று திரும்பி வந்து " எட்டாவதாக " தோற்றமளிக்கவில்லை. அப்படியிருந்திருந்தால், மேற்படி வசனத்தில் "அந்த ஏழு தலைகளில் ஒன்று திரும்பி வந்து மறுபடியும் ஆட்சி செய்யும்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கும்.

**நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான் :**

இந்த எட்டாவது ராஜாவின் (ஆட்சி புரியும் மிருகத்தின் உடல் - மற்றுமொரு பிரெஞ்சு குடியரசு போன்ற ஆட்சி அமைப்பு) ஆட்சி அழிவையே சந்திக்கும். அவன் முற்றிலும் அழிக்கப்படுவான். மறுபடியும் ஜனங்களின் கலகப் புரட்சி வராது.

வெளி 17 : 12 .

**நீ கண்ட பத்து கொம்புகளும் பத்து ராஜாக்களாம் ; இவர்கள் இன்னும் ராஜ்ஜியம் பெறவில்லை ; இவர்கள் மிருகத்துடனே கூட ஒரு மணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள் .**

**நீ கண்ட பத்து கொம்புகளும் :**

வரலாற்றில் ஏழு தலைகளுக்கும் (சாம்ராஜ்ஜியங்களுக்கும்) ஆதரவு அளித்த பத்து நாடுகள் பத்து கொம்புகளாக குறிக்கப்பட்டுள்ளன.

**பத்து ராஜாக்களாம் :**

மிருகத்திற்கு ஆதரவாக இந்த பத்து நாடுகளும் **முன்பு** இருந்தன. நெப்போலியனுக்குப் பிறகு இந்த மிருகம் அளவில் சிறிதாகி வந்தது. விக்டர் இம்மானுவேல் ஆட்சி செய்த சமயத்தில், இந்த மிருகம் "இத்தாலி" நாட்டை மட்டும் ஆட்சி புரியும் நிலைக்கு சுருங்கியது. நாஜி ராஜ்ஜியம் இந்த மிருகம் பெருமளவில் வளர்ச்சியுற எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. கி.பி. 1945 ல் இந்த மிருகம் தன் ஏழாவது தலையை இழந்தது.

இப்படியாக, இந்த பத்து ராஜாக்களும் மிருகத்தின் கொம்புகளாக செயல்படவில்லை. இந்த பத்து கொம்புகளும் மிருகத்திற்கு ஆதரவு கொடுக்கவில்லை. அதாவது, இந்த பத்து நாடுகளும் இப்பொழுது கொம்புகளாக செயல்படவில்லை. ராஜாக்களாக செயல்படுகிறார்கள்.

**வெளி 17 : 10ல்,** அடையாளக்குறியீட்டில் தலைகள், ராஜாக்களாக மாற்றமடைந்ததைத் தொடர்ந்து, **வெளி 17 : 12ல்** கொம்புகள் ராஜாக்களாயின. இந்த அடையாள மாற்றங்களுக்கான ஒரே காரணம், மிருகத்தை ஆதரிக்கும் தலை ஏதும் இப்பொழுது **இல்லை.** ஆனால், இந்த கொம்புகள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன. இவைகள் கொம்புகளாக இல்லாமல், ராஜாக்களாக செயல்படுகிறார்கள். இந்த நாடுகள் மிருகத்திற்கு இப்பொழுது தங்கள் ஆதரவை அளிக்கிறதில்லை.

**இவர்கள் இன்னும் ராஜ்ஜியம் பெறவில்லை :**

இவர்கள் ராஜ்ஜியங்**களை** பெறவில்லை என்று இங்கு சொல்லப்படவில்லை. ஏனெனில், இவர்களே அவர்கள் ஒன்றாக சேர்ந்து இன்னும் பெறவில்லை. ஆனால், 17ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இவர்கள் ஒரு ராஜ்ஜியத்தை பெறுவார்கள் என்பது நிரூபணமாகிறது. இந்த ராஜ்ஜியத்தை அவர்கள் பெறும்பொழுது அதை மிருகத்திடம் கொடுக்கிறார்கள். அதாவது, பிரெஞ்சு குடியரசு போன்ற அமைப்பு உள்ள ராஜ்ஜியத்தை “முழுமையாயிராத” மிருகத்திடம் கொடுப்பார்கள்

**இவர்கள் மிருகத்துடனே கூட ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள் :**

புதிதாக மறுபடியும் வெளிப்பட்ட மிருகத்திற்கு ஒத்துழைப்பு நல்கி, இந்த ராஜாக்கள் ஒன்று சேர்ந்த நிலையில் அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். குறிப்பிட்ட காலப் பகுதியில் இவர்கள் தனித்தனியாக பத்து ராஜ்ஜியங்களாக இருந்தார்கள். பிறகு அவர்கள் தங்களுக்கிடையே “ ஒத்துழைப்பு உணர்வுடன் “ (ஒற்றுமையில் வலிமை), முன்பு இருந்ததும், இப்பொழுது திரும்பி வருகிறதுமான இந்த மிருகத்திற்கு ஆதரவு அளிக்கிறார்கள். இதற்கு முன் தனித்தனியாக இருந்த இவர்களுக்கு, ஒன்று சேர்ந்த “அதிகாரம்“ இப்பொழுது கிடைக்கிறது.

**ஒரு மணி நேரமளவும் :**

“ ஒரு மணி நேரம் ” என்பது குறிப்பிட்டு சொல்லப்படாத ஒரு காலப்பகுதியை அடையாளப் படுத்துகிறது. இது ஏழாம் முத்திரைக் காலத்தின் இடைப்பட்ட காலப்பகுதியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்;

ஜனங்களின் புரட்சியின் (கலகம்) காரணமாக புதிதாக உருவாகும் பெரிய அளவிலான ஒரு குடியரசை ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு குறுகிய காலத்திற்கு ஆதரிக்கும் எனத் தோன்றுகிறது. (பிரெஞ்சு குடியரசு போல). இந்த குடியரசு அமைப்பு பெரும் வல்லமை கொண்டதாக ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் இருக்கும்.

**வெளி 17 : 13.**
**இவர்கள் ஒரே யோசனை உள்ளவர்கள் ; இவர்கள் தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் மிருகத்திற்கு கொடுப்பார்கள் .**

**இவர்கள் ஒரே யோசனை உள்ளவர்கள் :**

“நோக்கம்“ என்ன என்பது இங்கு சொல்லப்படவில்லை. ஆனால், இவர்கள் எல்லோரும் ஒரே எண்ணத்துடன் தங்கள் ஒற்றுமையுணர்வை பேணி காத்துக் கொள்வர்.

**இவர்கள் தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் மிருகத்திற்கு கொடுப்பார்கள்:**

வெளி 17 : 12ம் வசனத்திற்கு நேர் மாறாக உள்ளது. 12ம் வசனத்தில் ராஜாக்கள் அதிகாரத்தைப் **பெறுகிறார்கள்.** ஆனால், இங்கு 13ம் வசனத்தில் இவர்கள் அதிகாரத்தை **கொடுக்கிறார்கள் .** இது “இருவழி ஒத்துழைப்பு” அமைப்பு நிலையைச் சார்ந்ததாக தெரிகிறது. 12, 13ம் வசனங்கள் மூலம், ராஜாக்களும், மிருகமும் தங்கள் தங்களின் தனித்தன்மையைத் தக்க வைத்துக் கொண்டு ஒத்துழைப்பு நல்குகிறது என்பது தெளிவாகிறது. அதாவது, தனித் தனியான ஐரோப்பிய நாடுகள் மிருகத்திற்கு ஆதரவளிப்பார்கள்.

**வெளி 17 : 14.**

**இவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடே யுத்தம் பண்ணுவார்கள் ; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார் ; அவரோடே கூட இருக்கிறவர்கள்; அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப் பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான் .**

**இவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடே யுத்தம் பண்ணுவார்கள் :**

வர இருக்கும் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு எதிராக யுத்தம் பண்ணும் கூட்டமைப்பாக மிருகமும், ராஜாக்களும் செயல்படுகிறார்கள். மேலும், இந்த கூட்டமைப்பானது பரிசுத்தவான்களுக்கு எதிரானதாகவும், பிரான்ஸில் நடந்ததைப் போன்று ஒட்டு மொத்தமாக மதங்களுக்கு விரோதமாகவும் இருக்கலாம். திருச்சபை மற்றும் திரள் கூட்டத்தாருக்கும் ஏற்படும் இறுதி அனுபவங்களுக்கான காலப்பகுதி இதுவே. இந்த காலப்பகுதியின் ஆரம்ப கட்டத்தில் திருச்சபையின் பாத அங்கங்கள் மறுரூபமடைவர்.

**ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார் :**

கிறிஸ்துவின் ராஜ்ஜியம் வருவதற்கு உகந்த விதமாக இந்த கூட்டமைப்பு தோல்வியுறும். பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை நியாயாதிபதியாக நியமித்ததால், கிறிஸ்துவை யாரும் மேற்கொள்ள இயலாது.

**அவரோடே கூட இருக்கிறவர்கள் :**

முழுமையடைந்த திருச்சபையார்.

**அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமா யிருக்கிறார்கள் :**

இந்த இறுதி கால அனுபவங்களைத் தொடர்ந்து, இவர்கள் சீயோன் மேல் ஆட்டுக்குட்டியானவரோடே இருப்பார்கள். ஆட்டுக்குட்டியானவர் எதிரிகளை ஜெயங்கொள்வார். இது பற்றிய விரிவான விஷயங்களை தேவ தூதன் பின்வரும் வசனங்களில் தெரியப்படுத்துகிறார் .

**வெளி 17 : 15.**

**பின்னும் அவன் என்னை நோக்கி : அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே ; அவைகள் ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமாம் .**

**பின்னும் அவன் என்னை நோக்கி : அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே :**

இறுதியாக நடக்க இருக்கும் புரட்சியின் முதல் படி இது தான். அந்த வேசி ஜனங்களை கட்டுப் படுத்தினாள்; ஆனால், ஜனங்கள் வேசியின் கட்டுப்பாட்டை முழுமனதுடனோ அல்லது அறியாமலோ விரும்பவில்லை. மிருகத்தின் உடலாக குறிக்கப்படும் இந்த திரளான ஜாதிகள் தான் பாதாளத்திலிருந்து வெளிப்படுகிறது. (ஜனங்கள் பிரான்ஸில் செய்தது போல).

**அவைகள் ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமாம் :**

இவர்கள் சமுத்திரம் போன்ற மனுஷ சமுதாயம்; மரபுகளில் ஈர்ப்பு இல்லாதவர்கள்; சமுதாய ஒழுங்கு முறைகளில் அக்கறையில்லாதவர்கள். இவர்கள் ராஜாக்களுக்கு துணை போகிறவர்கள். ஆனால், மிருகத்தின் சூழ்நிலைக்கு இணைந்து ஒத்துழைப்பு கொடுப்பார்கள்.

**வெளி 17 : 16 .**

**நீ மிருகத்தின் மேல் கண்ட பத்து கொம்புகளானவர்கள் ; அந்த வேசியைப் பகைத்து , அவளை பாழும் நிர்வாணமாக்கி , அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள் :**

**நீ மிருகத்தின் மேல் கண்ட பத்து கொம்புகளானவர்கள் :**

12 ம் வசனத்தில் இந்த கொம்புகள் “ ராஜாக்கள் “ என அழைக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது, இவர்கள் தாங்கள் ஆதரவளிப்பதற்கு புதிதாக ஒரு மிருகம் எழும்பி வந்திருப்பதால், மறுபடியும் “ கொம்புகள் “ என்று இப்பொழுது குறிக்கப்படுகிறார்கள்.

இந்த மிருகமும், பத்து கொம்புகளும் தங்களிடையே ஒத்துழைப்பு கொடுக்கின்றன. ஆனால் அவர்கள் ஒன்றாக “இணையவில்லை”. செயலற்ற நிலைமையாகிய பாதாளத்திலிருந்து திரும்ப எழும்பி வந்த மிருகம் இது தான். (இந்த மிருகம் ஜனங்களுடைய புரட்சிகரமான குடியரசு அமைப்பை அடையாளப்படுத்துகிறது).

**அந்த வேசியைப் பகைத்து :**

ஜனங்களும், புதிய வித்தியாசமான குடியரசு அமைப்பும் அந்த வேசியாகிய ரோமச்சபையைப் பகைப்பார்கள்; வெளி 11 : 7, 8ல் காணப்படும் முழுமையாயிராத மிருகம், ரோமச்சபையை (மற்ற மதங்களுடன்) வெறுத்தது போல, இம்முறையும் ரோமச்சபை வெறுக்கப்படுகிறது. (ஏசாயா 23 : 15 - 17).

ஏழு தலைகளையுடைய மிருகத்தின் மேல் ஏறி முன்பு சவாரி செய்தது போல, இந்த மிருகத்தின் மீதும் ஏறி சவாரி செய்ய முயற்சித்தும் (ரோமச்சபை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தும்), இந்த மிருகத்தை (புதிய குடியரசை) தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலாது.

**அவளை பாழும் நிர்வாணமாக்கி :**

ரோமச்சபையை வெறுமையாக்கி, அதன் உண்மை நிலையை வெளிப்படுத்தி.

**அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து :**

ரோமச்சபையின் அமைப்பு முறையை சிதைத்து, அதன் செல்வாக்கு, அதிகாரங்களை அகற்றி.

**அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள் :**

சம்பவங்கள் ரோமச்சபைக்கு எதிராக உருவாகி , அதன் மொத்த அழிவு நடைபெறும்.

**வெளி 17 : 17.**

**தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும் , அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும் , ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து , தங்கள் ராஜ்ஜியத்தை மிருகத்திற்கு கொடுக்கிறதற்கு அவர்களுடைய இருதயங்களை ஏவினார் .**

**தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும் :**

குடியரசு (மிருகம்), மற்றும் ரோமச்சபை (வேசி) இவற்றின் கூட்டமைப்பு தேவைபடுமளவிற்கு நீட்டிக்கப்படும். பிறகு அழிவை பெறும்.

**அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும் :**

இந்த கூட்டமைப்பின் பால் ஜனங்களின் விருப்பங்கள் வலிமையாக இருப்பதால், தேவன் தம் திட்டங்களை தகுந்த முறையில் செயலாற்றுவார்.

**ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து :**

பத்து ராஜாக்களும் ஒரே எண்ணமுடையவர்களாயிருப்பார்கள்.

**தங்கள் ராஜ்ஜியத்தை மிருகத்திற்கு கொடுக்கிறதற்கு அவர்களுடைய இருதயங்களை ஏவினார் :**

12ம் வசனத்தின் ராஜாக்கள் , தங்களுக்கு ஏற்கனவே கிடைக்காத “ ராஜ்யத்தை ” வசனம் 17ல் பெற்றுக் கொள்கிறார்கள். புதிதாக எழும்பி வந்த மிருகத்திற்கு (ஜனங்கள் அதன் உடலை குறிக்கும்) இந்த ராஜாக்கள் தங்கள் ஒட்டுமொத்த ஒத்துழைப்பை கொடுக்கிறார்கள். இதன் மூலம் தேவனுடைய நோக்கம் செயற்படுத்தப்படுகிறது. தேவனுடைய நோக்கம் என்ன என்பதை நாம் அறிவோம்; அதாவது, களைகளை எரிப்பதே நோக்கமாகும். கோபாக்கினையின் திராட்சப் பழங்கள் மிதிக்கப்பட்டு, பாபிலோன் அழிக்கப்பட வேண்டும்.

ராஜாக்களும், மிருகமும் சேர்ந்த இந்த கூட்டமைப்பு இருவிதமான வேலைகளைச் செய்கிறது ;

ஆவிக்குரிய சபைகளுக்கு விரோதமாக செயல்படுகிறது.
இது பாபிலோனுக்கும் விரோதமாக செயல்படுகிறது.

வெளி 11ம் அதிகாரத்தில், இதே மிருகம் மத சம்பந்தமானவர்கள் அனைவருக்கும் எவ்வித பாகுபாடுமில்லாமல் வெறுப்புடன் செயல்பட்டது.

**வெளி 17 : 18 .**
**நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம் :**

**நீ கண்ட ஸ்திரீயானவள் :**
இருண்ட யுகத்தில் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் தக்க வைத்திருந்தாள்.

**மகா நகரமேயாம் :**
கிறிஸ்தவத்தின் தலைநகரமான பாபிலோன் (ரோமச்சபை).

**பூமியின் ராஜாக்கள் மேல் :**
ராஜ்யங்களின் மேல் கட்டுப்பாட்டு செய்யும் சபை. (வேசித்தனம்).

**ராஜ்யபாரம் பண்ணுகிற :**
அவள் ஒரு போலிச்சபை; தகாத வழியில் அரசாண்டவள்.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

# 18 ம் அதிகாரம்

## பாபிலோனுக்கு எதிரான பொருளாதார விளைவுகள்; களிப்பும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும்.

**வெளி 18 : 1 .**
**இவைகளுக்குப் பின்பு , வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன் ; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று .**

17ம் அதிகார சம்பவங்களின் தொடர்ச்சியாக 18ம் அதிகார சம்பவங்கள் நடைபெறவில்லை. யோவான் கண்ட மற்றுமொரு தரிசனக் காட்சி தான் 18ம் அதிகாரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

**வேறொரு தூதன் :**
17 : 1ம் வசனத்தில் நாம் பார்த்த தேவதூதன் சகோ. ரசல். இங்கு 18 : 1ம் வசனத்தில் காணப்படும் தேவதூதன், 17ம் அதிகாரத்தில் கண்ட தேவதூதனைக் காட்டிலும் மிக வித்தியாசமானவர். இவர் யார் ? மீண்டும் பிரசன்னமாயிருக்கும் நமது கர்த்தராகிய கிறிஸ்து தான் !

**வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன் :**
தேவக் கட்டளைக்கு இணங்க ஆவிக்குரிய நிலையில் நமது கர்த்தராகிய கிறிஸ்து திரும்பி வரும் உண்மைச் சம்பவத்தைக் குறிக்கிறது. இந்த வருகையைத் தான் , " நிறைவேறித் தீரும் காலம் " என அப்போ 3 : 20, 21ல் வாசிக்கிறோம்.

**மிகுந்த அதிகாரமுடையவனாய் :**
நியாயத்தீர்ப்பு அளிக்கும் அதிகாரம். (மத் 28 : 18)

**அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று :**
பாபிலோன் புறம்பாக்கிப் போடப்படுவதற்கு முன்னர், **இயேசுவின் வருகை** இருப்பதை அடுத்த வசனத்தில் (18 : 2) பார்க்கிறோம். அவருடைய பிரசன்னத்தினால் பூமி பிரகாசமடைகிறது. (எசேக் 43 : 2; சங் 97 : 4) கடந்த ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேல், இவ்வுலகில் ஏற்பட்டுள்ள அபரிமித வளர்ச்சியும், ஞானமும் ஏதோ தற்செயலாக நிகழும் இயல்பான சம்பவங்கள் அல்ல ! இது கிறிஸ்துவின் பிரசன்னத்தினால் ஏற்படும் பிரதிபலிப்பு. (தானி 12 : 1, 4).

**வெளி 18 : 2 .**
**அவன் பலத்த சத்தமிட்டு , மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது ; அது பேய்களுடைய குடியிருப்பும்சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று .**

**அவன் பலத்த சத்தமிட்டு :**
விஞ்ஞானம், தத்துவம் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும், ஞானிகளும் இருண்டகால மூடநம்பிக்கைகளை ஜீரணிக்க இயலாமல், பாபிலோனின் சுய உரிமைப் பாராட்டலுக்கு எதிராக எதிர்ப்பு கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தனர். இந்த தூதனுடைய சத்தம், ஏற்கனவே முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை பிரதிபலிக்கின்றது.

**மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது :**

இங்கு "விழுந்தது" என்பது இரண்டு முறை குறிக்கப்படுகிறது. இது பாபிலோன் முழுமையாக அழிவுறாத நிலையை அடையாளமாகக் காட்டுகிறது. வெளி 4 : 8; 6 : 13ம் வசனங்களில் ஒரு விஷயத்தை "மூன்று முறை" சொல்லும் போது அது " பூரணத்துவத்தைக் " குறிப்பது தெளிவாகிறது.

**"மகா பாபிலோன்"** என்ற சொற்றொடர் ரோமச்சபை அமைப்பின் முக்கியத்தையும், சத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது. அவளுடைய குமாரத்திகளுக்கும் இங்கு பங்கு இருப்பினும், நமது கர்த்தராகிய கிறிஸ்து இந்த **"மகா வேசியை"** அழுத்தமாக விவரிப்பதை நாம் கவனத்தில் இருத்த வேண்டியுள்ளது. மத் 23 : 37, 38ல் சொல்லப்படும் இஸ்ரவேலரின் விழுகைக்கு ஒத்த விதமாக , தேவ ஒத்தாசையிலிருந்து ரோமச்சபை வழுவிப் போகிறது. இஸ்ரவேலரைப் போலவே, ரோமச்சபையின் அழிவு பின்னரே நடக்கிறது.

**அது பேய்களுடைய குடியிருப்பும் :**

" அது " என்பது கிரேக்க மூலத்தில் "பெண் பாலாக" குறிக்கப்படுகிறது.

வெளி 13 : 3ல் காணப்படும் "மிருகம் ஆண் பாலாக" குறிக்கப்படுகிறது.

வெளி 17 : 11ல் காணப்படும் "வித்தியாசமான மிருகமும் ஆண் பாலாக" குறிக்கப்படுகிறது.

வெளி 17ம் அதிகாரத்தில் "ஸ்திரீயும், மகா பாபிலோனும் பெண் பாலாக" குறிக்கப்படுகிறது.

சபையும், ராஜ்ஜியமும் இணைந்த கலவையை " பாபிலோன் " என்று பொதுவாகச் சொன்னாலும், வேதாகமம் "பாபிலோன்" ஒரு "வேசி" சபை என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது.

பவுல் அப்போஸ்தலன் 1 தீமோ 4 : 1ல் பிசாசுகளின் "உபதேசங்களை" (திரித்துவம், உத்தரிக்கும் ஸ்தலம், நரகம் போன்றவை) குறிப்பிடுகிறார். இந்த துர் உபதேசங்கள் மகா பாபிலோனில் (ரோமச்சபையில்) குடி கொண்டிருக்கின்றன. "உபதேசங்கள்" என்ற நிலையைத் தாண்டி, ரோமச்சபையின் நிர்வாகச் செயல்பாட்டில் பிசாசுகளின் தீவிரமான பங்களிப்பு உணரப்படுகிறது. இந்த பேய்களின் உச்சக் கட்ட நடவடிக்கைகள், வெளி 16 : 14; மத் 24 : 23 - 25; மற்றும் 2தெச 2 : 9 - 12ல் விவரிக்கப் பட்டிருக்கின்றன. "குடியிருப்பு" என்பது தம் விருப்பத்திற்கேற்ற வசதியான உறைவிடத்தைக் காட்டுகிறது. பேய்களுக்கு ரோமச்சபை ஒரு வசதியான உறைவிடமாக திகழ்கிறது. ஆனால் மெய்க்கிறிஸ்தவர்களுக்கு அல்ல.

**சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும் :**

வெளி 16 : 13ல் " அசுத்த ஆவிகளை " பற்றி பார்த்தோம். அவைகள் பிசாசினால் ஏவப்பட்ட உபதேசங்கள். இந்த அசுத்த ஆவிகள் பாபிலோனில் ஏன் சிறைபடுத்தப் பட்டுள்ளது ? இந்த உபதேசங்கள் வேறெங்கும் வேரூன்றி செயல்பட இயலாது. ஆகவே தான், இந்த அசுத்த ஆவிகள் (உபதேசங்கள்) பாபிலோனுக்குள் முடங்கிக் கிடக்கின்றன.

**அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று :**

பாபிலோன் ஒரு காவல் வீடு ஆகும். ஏனெனில் இந்த பறவைகள் வேறெங்கும் போய் செயல்பட முடியாது. பாபிலோன் இவைகளின் தேவைகளை நிறைவேற்றுவதால், இப்பறவைகள் பாபிலோனில் தக்க வைக்கப்பட்டுள்ளன. (காவல்படுத்தப்பட்டுள்ளன)

"அசுத்த பறவைகள்" என்பது சுயநல ஆதாயம் தேடுவோரைக் குறிக்கிறது. (சிரமமின்றி, மற்ற உயிரினங்கள் தேடி வேட்டையாடி தங்களுக்கென வைத்திருந்த உணவை தனதாக்கிக் கொள்ளும் தொடர் முயற்சியில் ஈடுபடுவது இவைகளின் குணம் ஆகும்). இத்தகைய சுய லாபத்தை ஈட்டும் மனோபாவம் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு நல்ல தளமாக பாபிலோன் அமைகிறது. இந்த பறவைகள் அருவருப்பானவைகளாக காட்டப்பட்டிருக்கிறது. உண்மை கிறிஸ்தவர்களுக்கு நேர் எதிரான குணாதிசயங்கள் கொண்ட சுய ஆதாயம் தேடும் மனோநிலை அருவருப்பாகக் காட்டப்படுகிறது. எரே 5 : 23 - 29ல் இத்தகையோரைப் பற்றி விளக்கமாக கூறப்படுகிறது. பேர் கிறிஸ்தவர்கள் இவர்கள் கண்ணில் அகப்பட்டு இரையாகிறார்கள்.

**வெளி 18 : 3.**

**அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள் ; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள் ; பூமியின் வர்த்தகர் செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் .**

**அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள் :**

பாபிலோனுடன் இணைந்து செயல்படுவோர் மூன்று பிரிவினர் ;

1. ஜாதிகள் (2) ராஜாக்கள் (3) பூமியின் வர்த்தகர்

**1.** இங்கு "ஜாதிகள்" என்பது பூமியின் குடிகளைக் குறிக்கிறது. பாபிலோனின் வேசித்தனத்தினால் ஏற்பட்ட மதி மயக்கத்தின் விளைவுகளை ஜாதிகள் அனுபவிக்கிறார்கள். அதாவது, சபை - ராஜ்ஜீய பிணைப்பினால் ஏற்பட்ட தீமைகளினால் மக்கள் துயரமடைகின்றனர். வெளி 14 : 8ம் வசனம் இங்கு மறுபடியும் சொல்லப்படுகிறது.

2. **பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள் :**

இது சபை - ராஜ்ஜீய பிணைப்பைக் குறிக்கிறது.

3. **பூமியின் வர்த்தகர் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் "வர்த்தகர்" என சொல் இங்கு தான் முதன் முறையாக காணப் படுகிறது. இது 18ம் அதிகாரத்தில் மட்டுமே உள்ளது. " வர்த்தகர் " என்பது " முதலாளிகளைக் " (CAPITALISTS) குறிக்கிறது. பாபிலோன் விழுகையின் தொடர்பான பொருளாதார அம்சங்களை விவரிப்பதே 18ம் அதிகாரத்தின் நோக்கமாகத் தெரிகிறது. முதலாளித்துவ கொள்கைகளின் பிறப்பிடம் "இத்தாலி" என்பது தற்செயலாக நிகழ்ந்தது அல்ல.

**செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் :**

பாபிலோன் அமைப்பு பூமிக்குரிய சுகபோக வாழ்க்கையின் மீது கொண்ட பசி, மற்றும்அவற்றை பெறுவதற்கு அது மேற்கொள்ளும் அதிகார பிரயோகம் காரணமாக, பாபிலோனுடன் இணைந்து ஒத்துழைப்பு கொடுப்போர் பெருஞ்செல்வம் ஈட்டினர். கி.பி. 1914ல் இந்த அதிகார அமைப்பு (பாபிலோன்) தள்ளுண்டு போக ஆரம்பித்ததால், செல்வம் திரட்டும் பழைய பாணிகள் மறையத் தொடங்கின .

18ம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களும் கிறிஸ்துவின் வருகையையும், அவருடைய நியாயத்தீர்ப்பு பிரகடனத்தையும் உரைக்கின்றன. 18 : 4ம் வசனம் முதல், இயேசுவின் நியாயத்தீர்ப்பு பிரகடனம் ராஜாக்களுக்கும், வர்த்தகர்களுக்கும், வேலையாட்களுக்கும், பரிசுத்தவான்களுக்கும், கடைசியாக பாபிலோனுக்கும் எப்படி பாதிப்பை ஏற்படுத்த போகின்றன என இனி விவரமாக சொல்லப்படப் போகின்றன.

## பகுதி - II
(வெளி 18 : 4 - 20)

பாபிலோனின் விழுகை எவ்விதம் ஆரம்பித்து, அழிவின் உச்ச நிலை அடைகிறது என்பதை பகுதி II தெரிவிக்கிறது. வெளி 8 : 4 - 20ம் வசனங்கள் அனைத்தும் " வானத்திலிருந்து உண்டான சத்தம் " (ஏழாம் தூதன்) என்று அறிகிறோம்.

**வசனங்கள் 4 - 8 :** பரிசுத்தவான்கள் அவளை விட்டு வெளியே வந்து, அவளுக்கு பலன் அளிக்கும் தேவ திட்டத்தில் பங்கு பெறுவது பற்றி கூறப்படுகிறது.

**வசனங்கள் 9 - 19 :** பாபிலோனின் சிதைவினால் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்படும் விளைவுகள் பற்றி கூறப்படுகிறது.

### மூன்று பிரிவினர்

வசனங்கள் : 9 - 10 :

**(1) பூமியின் ராஜாக்கள் (அரசியல் தலைமைகள்)**

இவர்கள் " மகா நகரமே " என்று பாபிலோனைப் பார்த்து புலம்புகின்றனர். " நகரம் " என்பது ஒரு அரசாங்கத்தின் அடையாளம் ஆகும். முதலாம் வாதையினால் (முதலாம் உலக யுத்தத்தினால்) "நிலையான அரசாங்கங்கள்" அமைப்பதில் உள்ள இயலாண்மையினால் உண்டான பயம் ராஜாக்களைப் பற்றிக்கொண்டது.

வசனங்கள் : 11 - 17 :

**(2) பூமியின் வர்த்தகர்கள் (முதலாளிகள்)**

இவர்கள் புலம்பலைக் கவனிக்கவும். இவர்களுடைய பொருட்களை வாங்குவோர் யாருமில்லை.தங்களுடைய ஆதாயம் பாதிக்கப்படுவது இவர்களை கவலையுறச் செய்கிறது.உலக யுத்தங்களும், கம்யூனிஸ புரட்சிகளும் வர்த்தகர்களுடைய உள்ளார்ந்த திறமையை அழித்தது. பெருஞ்செல்வம் ஈட்டுவதே இவர்கள் நோக்கமாகும். ஸ்திரமான பொருளாதார சூழ்நிலையை விரும்பியதற்கு மாறாக இவ்வளவு ஐசுவரியமும் அழிந்து போயிற்றே என புலம்புகின்றனர்.

வசனங்கள் : 17 - 19 :

| | | |
|---|---|---|
| **(3)** | **மாலுமிகள்** | **( பெரு வியாபாரிகள் )** |
| | **பிரயாணிகள்** | **( சிறு முதலீட்டாளர்கள் )** |
| | **கப்பலாட்கள்** | **( சிறு வியாபாரிகள் )** |
| | **சமுத்திரத்தில் தொழில் செய்வோர்** | **( தொழிலாளிகள் )** |

இவர்களுடைய புலம்பலைக் கவனிக்கவும் (வசனம் 19). இவர்களுக்கு இதுகாறும் முதலாளித்துவம் வேலைகளைக் கொடுத்து, நிரந்தரமான வருமானத்திற்கு வழி வகுத்திருந்தது. ஆனால் நிலைமை மாறி விட்டது. வாழ்நாள் முழுவதும் நிலையான வருமானம் ஈட்டும் நம்பிக்கை இப்பொழுது இல்லை. தகப்பனுடைய வேலையை மகன் செய்யும்படியான வேலை வாய்ப்பு முறைகள் அறவே நீங்கி விட்டன. வசதியான வாழ்க்கை நடத்த, வேலைகள் உரிய உத்திரவாதம் கொடுப்பதில்லை.

*"இவள் பாழாய்ப் போனாளே"* என்று இவர்கள் புலம்புவதற்கு காரணம் : ஸ்திரமான அமைப்பு மூலம் ஆதாயம் பெற்றோர், அந்த அமைப்பே பாழாய் போனதைக் காண்கின்றனர்.எதிர் காலத்தில் பாதுகாப்பான வேலைகள் அவர்களுக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை என்பதை உணர்கின்றனர்.

**வெளி 18 : 4 .**
**பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கண்டேன் ; அது, என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் , அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு, அவளை விட்டு வெளியே வாருங்கள் .**

**கர்த்தர்** தம்முடைய ஜனங்களுக்கு முன்பு உரைத்த கண்டனங்களை (1 - 3ம் வசனங்கள்) பிரஸ்தாபப்படுத்துவதற்கு ஒரு தூதன் அனுப்பப்படுகிறான். அந்த ஏழாம் தூதன் சகோ. ரசல் அவர்களே. இந்த தூதனுடைய சத்தம் மத உலகில் வெளிப்படுகிறது.

**என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள் :**

இதுவே, சகோ. ரசல் அவர்களின் ஊழியத்தில் மிக முக்கிய அம்சமாக விளங்கியது. "என் ஜனங்களே" என்ற இந்த செய்தி பிதாவிடத்திலிருந்து வருகிறது. இச்செய்தியை வெளிக்கொணரும் **கருவியாக** "இந்த சத்தம்" செயல்படுகிறது. தேவ பிள்ளைகள் இச்செய்தியைக் கேட்டு அவளை விட்டு **வெளியே வர** ஆரம்பித்தனர். இந்த முக்கியமான அழைப்பிற்கு செவி கொடுத்து, விசுவாசிகள் அவளை விட்டு இன்னும் வெளியே வந்து கொண்டு இருக்கின்றனர்.

**நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் :**

பாபிலோனின் (ரோமச்சபையின்) கிரியைகள் அனைத்தும் அருவருப்பான உபதேசங்களாலும், சபை மற்றும் உலகத்துடன் இணைந்து சமரசம் செய்து கொள்ளும் விதங்களாலும் கறைபட்டிருக்கின்றன. அவளுடைய கிரியைகள் போலிக் கிறிஸ்துவத்தின் பொய்களை ஊக்கப்படுத்தி நீடித்திருக்க செய்கின்றன. ஆனால், மேற்குறிப்பிட்ட வசனம் (18 : 4), பரிசுத்தவான்களுக்கு உற்சாகமளிக்கும் வண்ணம், அவளை விட்டு வெளியே வந்து தேவனுக்குகந்த முறையில் தங்கள் கிரியைகளை காத்துக் கொள்ளும் வகையில் உள்ளது.

**அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு :**

வாதைகள் நடைபெறும் இக்காலக் கட்டத்தில், பாபிலோனை விட்டு வெளியே வருவது முன்பைவிட இப்பொழுது கடினமான காரியமாக உள்ளபடியால், அவளுடைய பாவங்களில் பங்கு கொள்ளாமல் கவனமாய் இருப்பது அவசியமாகிறது.

**வெளி 18 : 5 .**
**அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது ; அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவு கூர்ந்தார்.**

**அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது :**

இதன் அர்த்தம் என்னவென்றால், பாவங்களின் திரட்சி குவிந்து கிடப்பதை தேவன் பாரா முகமாயிராரென்பதைக் குறிக்கிறது. அவளுடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படவோ அல்லது மன்னிக்கப்படவோ இயலாத நிலையை அடைந்திருக்கிறது.

**அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவு கூர்ந்தார் :**

துன்மார்க்கத்தை விட்டு விலகி தேவகட்டளைகளை கைக்கொள்ளும் நிலையிலிருந்தால், தேவன் அவளுடைய அநியாயங்களை மறந்துவிட வாய்ப்பிருந்தது. (எசேக் 18 : 21, 22). பாபிலோன் தன்னை திருத்திக்கொள்ள முடியாத நிலையிலிருப்பதால், தேவன் அவளுடைய அநியாயங்களை நினைவு கூர்ந்துள்ளார்.

**வெளி 18 : 6.**

**அவள் உங்களுக்கு பலனளித்தது போல, நீங்களும் அவளுக்கு பலனளியுங்கள் ; அவளுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாக கொடுத்துத் தீருங்கள்:; அவள் உங்களுக்கு கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாய் அவளுக்கு கலந்து கொடுங்கள் .**

வரலாற்றை உற்று நோக்குவோமானால், பாபிலோன் பரிசுத்தவான்களுக்கு " எவ்விதம் " பலனளித்தது என்பதை அறியலாம்; வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், சித்திரவதைகளினாலும், மரணத்தினாலும் பாபிலோன் பரிசுத்தவான்களுக்கு பலனளித்தது. இந்த பலன்கள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவளுக்கு சரியாய் செய்யப்படும்.

**நீங்களும் அவளுக்கு பலனளியுங்கள் :**

அவளை விட்டு வெளியே வந்து , அவளுக்கு செலுத்தப்படும் தீர்ப்புக்கான வேலைகளில் பரிசுத்தவான்கள் ஈடுபடுவதற்காக சொல்லப்படும் ஊக்கமான வார்த்தைகள் இவைகள்; பாபிலோனுக்கு எதிரான இந்த பலனளிக்கும் தீர்ப்பில், தேவன் என்ன செய்கிறாரோ அதையே பரிசுத்தவான்களும் செய்ய வேண்டியுள்ளது. இத்தீர்ப்பில், மறுரூபம் அடைந்த பரிசுத்தவான்கள், மற்றும் மாம்சத்திலிருக்கும் பாத அங்கங்களின் பங்கும், ஒத்துழைப்பும் வெகுவாக உள்ளது. இதைப்பற்றி சங்கீதக்காரன் தெளிவாக எடுத்துரைக்கிறான். (சங் 149 : 5 - 9) அவளுக்கு **திரும்பி பலனளிக்கும் பணியில்** பரிசுத்தவான்கள் யாவரும் பங்கு பெறுவர்.

**அவளுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாக கொடுத்துத் தீருங்கள் :**

"இரட்டிப்பு" என்பது "அதே அளவு" (duplicate) என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால், சொல் அகராதிகள் எல்லாம் "**இரண்டு மடங்கு**" என ஒருமித்து கூறுகின்றன.

பாபிலோன் மற்றவர்களுக்கு "**மரணத்தை**" கொடுத்தது; ஆனால், அதற்கு பிரதிபலனாக "**இரண்டாம் மரணம்**" அவளுக்கு கொடுக்கப்பட இருக்கிறது. இந்த பிரதிபலன் அவளுக்கு ஏற்படும் மிக மோசமான நிலைமை ஆகும். அவள் மேல் கொண்ட விசுவாசம் , அவளைச் சார்ந்தோரிடம் அழியும்; அவள் மற்றவர்களுக்கு அளித்த தண்டனைப் போல இரண்டு மடங்கு அவளுக்கு திருப்பி அளிக்கப்படும்; "**அவள் கிரியைகளுக்குத் தக்கதாக**" என்பது அவள் தண்டனை பெறுவதற்கான தகுதியைச் சுட்டிக்காட்டுகிறது; அவளுடைய அமைப்புக்குள் உள்ள ஜனங்கள் இந்த இரட்டிப்பை பெற மாட்டார்கள்;அவளே (ரோமச்சபை அமைப்பே) பெறுவாள்.

அவள் மீது இரக்கப்படுவதற்கான அறிகுறி ஏதும் இல்லை. எசேக் 9 : 5; கடைசி கால பாத அங்கங்களாகிய நாம் பாபிலோன் மீதும், அவளுடைய துர் போதனைகள், வழி முறைகள், செயல்பாடுகள் பேரில் எவ்விதத்திலும் இரக்கப்படத் தேவையில்லை.

**அவள் உங்களுக்கு கலந்து கொடுத்த பாத்திரத்திலே :**

தன்னுடன் சமரசமாய் ஒத்துவராதவர்களின் விசுவாசத்தைக் குலைக்கும் வகையில் அனுபவங்களை அவள் திட்டமிடுவதை அடையாள பாஷையில் "கலவைப் பாத்திரம்" சுட்டிக்காட்டுகிறது.

**இரட்டிப்பாய் அவளுக்கு கலந்து கொடுங்கள் :**

அவளிடம் கொண்ட விசுவாசத்தை அழிக்கும் வண்ணம், அவளுக்கு கசப்பான அனுபவங்களை இரட்டிப்பாய் திரும்ப செலுத்த பரிசுத்தவான்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். அவளுடைய தப்பிதங்களை ஜனங்கள் உணர்ந்து கொள்ளும் வண்ணம் அதற்கான வழிமுறைகளை திட்டமிடுங்கள் என பரிசுத்தவான்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிரசுரங்கள், புத்தகங்கள், வானொலி, தொலைக்காட்சி,பொது மேடைப் பிரச்சாரங்கள், வீடியோக்கள், இன்டெர்னெட், கம்ப்யூட்டர் வழி நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு வழிகள் மூலம் பாத்திரத்தில் கலந்து கொடுக்க பரிசுத்தவான்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக அவள் பரிசுத்தவான்களுக்கு கலந்து கொடுத்த, திட்டமிட்ட கசப்பான அனுபவங்களுக்கு இரட்டிப்பாக இக்கடைசி காலத்தில், குறுகிய காலத்தில் அவளுக்கு திருப்பி வழங்கப்படும். மறுரூபமான பரிசுத்தவான்கள் இந்த பாத்திரத்தில் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக வாதைகளை கலந்து கொடுப்பதில் பெரும் பங்கு வகிக்கிறார்கள். இறுதியில் இந்த கலவை அவளை விஷமிட்டுக் கொல்லும். வெளி 16 : 19ம் வசனத்தைப் படிக்கவும்.

வெளி 18 : 7.

**அவள் தன்னை மகிமைப்படுத்தி செல்வச் செருக்காய் வாழ்ந்தது எவ்வளவோ, அவ்வளவாய் வாதையையும், துக்கத்தையும் அவளுக்கு கொடுங்கள் நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தை காண்பதில்லையென்று தன் இருதயத்தில் எண்ணினாள் .**

**அவள் தன்னை மகிமைப்படுத்தி செல்வச் செருக்காய் வாழ்ந்தது எவ்வளவோ :**

பாபிலோன் தன்னை பற்றிய வீண் பெருமைகளைப் பாராட்டிக் கொள்வதிலோ, அல்லது தன் ஆடம்பர வசதிகளை நிலைநாட்டி, தன்னை எல்லோருக்கும் மேலாக உயர்த்திக் கொள்வதோ எல்லோரும் அறிந்த உண்மை.

**அவ்வளவாய் வாதையையும், துக்கத்தையும் அவளுக்கு கொடுங்கள் :**

சத்தியங்கள் அவளை இம்சிக்கின்றன; அதிகாரமும், கௌரவமும் இழந்த நிலை அவளை துக்கப்படுத்துகின்றது. இவைகள் அவளின் முந்தைய மகிமையும், ஆடம்பரமுமாக வாழ்ந்தவைகளுக்கு நேர் மாறானவை. வெளி 14 : 10ல் அவள் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தீர்ப்பும், விஷமும் அவள் முற்றிலும் அழிக்கப்படுவதைக் குறிக்கின்றது.

அவளுடைய முந்தைய ஆடம்பரங்கள் மறைகின்றன. துக்கம் தொடருகின்றன. தீர்ப்புகளான அக்கினியும், வாந்தி குமட்டலை ஏற்படுத்தும் கசப்பு அனுபவங்களாகிய கந்தகமும் அவளுக்குப் படிப்படியான மரணத்தைத் தோற்றுவிக்கிறது.

**நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல :**

அவளை (பாபிலோனை) எந்த ராஜாவும் தன்னுடைய மணப்பெண்ணாக உரிமை கோரவில்லை. அவள் இப்பொழுது விதவையாயிருக்கிறாள். இருப்பினும், தான் ஒரு ராஜஸ்திரீ என சகோ. ரசல் காலத்திலேயே உரிமை பாராட்டினாள்.

**நான் துக்கத்தை காண்பதில்லையென்று தன் இருதயத்தில் எண்ணினாள் :**

தேவனுடைய செய்திக்கு மாறான முறையில் அவள் தன்னைப் பற்றிக் கூறுவது பேதமை.அவளுடைய துக்கம் கி.பி. 1914ல் ஆரம்பித்து பெருக ஆரம்பித்துள்ளது. அவளுடைய இறுதி காலக் கட்டத்தில் வேசியாக, ஒரு குறுகிய காலத்திற்குப் பிறகு (ஏசாயா 23 : 17) அவள் பெரும் துக்கத்தை சந்திப்பாள்.

**வெளி 18 : 8.**

**ஆகையால், அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும், துக்கமும், பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள் ; அவளுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர் .**

**ஆகையால்** : மனந்திரும்பாமை மற்றும் கட்டுக்கடங்காத ஆர்வங் காரணமாக.

**ஒரே நாளில்** : இந்த நாளைப் பற்றிய விரிவான விபரங்களை ஏசாயா 47 : 8 - 15 வசனங்களில் படிக்கிறோம்; "ஒரே நாள்" என்பது காலக்கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட அடையாளக் குறியீடு அல்ல; வெளிப்படுத்தல் ஆகமத்தில் " ***நாள்*** " என்பது ஒரு காலக்கணக்கை குறிக்காமல் கையாளப்பட்டுள்ளது.

வெளி 6 : 17; 8 : 12; 16 : 14ம் வசனங்களைப் பார்க்கவும்;
வெளி 6 : 17; ல் " ***நாள்*** " என்பது 18 : 8ல் உள்ளது போலவே கையாளப்பட்டுள்ளது.

**கோபாக்கினையின் நாள் = உபத்திரவங்களின் பொதுவான நாள்**

" **ஒரு நாள்** " என்று குறிப்பிடுவது அந்த காலப்பகுதியின் விசேஷித்த தன்மையை உணர்த்துவதாக உள்ளது. இதே காலப்பகுதியை வெளி 18 : 10, 16, 19ம் வசனங்களில் **ஒரே நாழிகை** என குறிப்பிடப் படுகின்றன.

**அவளுக்கு வரும் வாதைகளாகிய :**

16ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே வாதைகள் தாம் இங்கும் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த ஏழு வாதைகளுக்குப் பதிலாக, அந்த வாதைகளின் இயல்புகளை / விளைவுகளை சாராம்சமாக இங்கு குறிப்பிடப்படுகின்றன.

**கொள்ளை நோய் ( சாவு ) :**

என். ஏ. எஸ் (New American Standard Bible) மொழிபெயர்ப்பாளர்களுக்கு முதலாம் வாதையாக "சாவு" குறிக்கப்படுவது ஏற்புடையதாக இல்லை; "சாவு" என்பதற்குப் பதிலாக "கொள்ளை நோய்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்; ஏசாயா 23 : 14, 15ம் வசனங்களுடன் ஒத்துப் பார்த்தால் நாம் புரிந்து கொள்ள ஏதுவாகும். எழுபது வருடங்களாகிய "மறக்கப்பட்டிருந்த" காலப்பகுதி கி.பி. 1914ல் முடிவடைந்து பாபிலோனுக்கு "அழிவை" கொண்டு வந்தது.

பாபிலோனுக்கு கி.பி. 1914 "சாவு மணி" அடித்தது எனக் கூறலாம். முன்னிருந்த பழைய முறைமைகள் மறுபடி **உயிர்** பெற இனி சாத்தியமில்லை.

**துக்கம் :**

"நான் துக்கத்தை காண்பதில்லை" என்று அவள் கூறினாள்; இழப்பின் பிரதிபலிப்பு துக்கம் ; கி.பி. 1914 லிருந்து பாபிலோன் இழப்பை சந்தித்து வருகிறது. பரிசுத்தவான்கள் பொறுமையைக் காக்கும் வண்ணம் , பாபிலோனின் சாவு , சாவின் செயல்பாடு படிப்படியாக, மெதுவாக உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

**பஞ்சம் :**

பாபிலோன் எக்காலத்திலும் சத்தியத்திற்காக ஏங்கியதில்லை. பணம், அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றின் மீது பாபிலோன் பசி கொண்டு இருந்தது. இக்காலத்தில், மேற்கூறியவைகளின் குறைவினால் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

**அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள் :**

அவள் படிப்படியாகவும் (வெளி 14 : 10, 11, 12), இறுதியில் முழுமையாகவும் (வெளி 17 : 16) அழிக்கப்படுவாள்.

**அவளுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர் :**

" பழி வாங்குதல் எனக்குரியது " என்று தேவன் கூறியுள்ளார். பிசாசின் ஆதிக்கம் மேலோங்கியுள்ள பாபிலோனை வெற்றிகரமாக போராட, பூமியில் எந்த அதிகாரமும் இல்லாத நிலையில், தெய்வீக அதிகாரமும், திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

**முதலாம் பிரிவினர்**
**இராஜாக்கள்**

**வெளி 18 : 9.**
**அவளுடனே வேசித்தனம் செய்து, செல்வச் செருக்காய் வாழ்ந்த பூமியின் இராஜாக்களும் அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது அவளுக்காக அழுது புலம்பி .**

**பூமியின் இராஜாக்களும் :** கிரீடம் தரிக்கப்பட்ட இராஜாக்களை மட்டுமல்லாமல், அரசியல் பதவிகளில் ஆதிக்கம் செலுத்துவோரையும் குறிக்கிறது.

**அவளுடனே வேசித்தனம் செய்து :** பாபிலோனுடன் இணக்கமுடன் உடன்பாடு கொண்டு.

**செல்வச் செருக்காய் வாழ்ந்த :**
அவளுடனான ஒத்துழைப்பு அவர்களுக்கு லௌகீக நன்மைகளைப் பெற்றுத் தந்தது.

**அவளுக்காக அழுது புலம்பி :**
அவளுடன் இணக்கமாயிருந்து பெற்ற நன்மைகள் இப்பொழுது இழந்துள்ளது; " புலம்பல் " என்பது உணர்ச்சிகரமான வெளிப்பாட்டைக் குறிக்கிறது. பாபிலோனின் நிலைப் பார்த்து, இராஜாக்கள் "பெரிதும்" ஏமாற்றமடைந்துள்ளனர். கி.பி. 1914 லிருந்து, முன்பிருந்த **சபை - இராஜ்ஜிய உறவு முறை** அமைப்புக்குப் பதிலாக, ஒரு ஸ்திரமான அரசியல் அமைப்பை காணுவதில் இக்கால அரசியல் அமைப்புகள் தடுமாறுகின்றன.

**அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது :**
வேகுதல் (மெதுவாக வேகுதல்) கி.பி. 1914ல் ஆரம்பித்தது. பூமியின் இராஜாக்கள் யுத்த முஸ்தீபுகளில் தீவிரமாய் ஈடுபட்டிருந்ததால், தேவனால் மூட்டப்பட்ட தீயினால் பாபிலோன் முழுமையாக இரையாக்கப்படும் என்பதை அவர்களால் உணரமுடியவில்லை. முதலாம் உலக யுத்தம் முடிவுற்றவுடன் அவள் வேகிறதினால் உண்டான புகையை (அவள் அழிவு ஆரம்பமானதற்கான சாட்சியத்தை) கண்டுணர முடிந்தது.

**வெளி 18 : 10.**
**அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து தூரத்திலே நின்று , ஐயையோ ! பாபிலோன் , மகா நகரமே ! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே என்பார்கள் .**
மாம்சீகத்தின் இயல்பு இப்படித்தான் இருக்கும் ! இயேசு தீர்ப்புக்காக கொண்டு செல்லப்படும் போது சீஷர்கள் தூரத்திலே நின்றார்கள். இங்கு, ராஜாக்களின் முந்தைய பங்காளியான பாபிலோன் உலகத்தாரின் கண்களில் அவமதிப்பை

சந்தித்த நிலையில், ராஜாக்கள் தம் கூட்டாளியிடமிருந்து தங்களை விடுவித்துக் கொண்டார்கள். ராஜாக்கள் அவளுக்கு ஏற்பட்ட வாதையைக் கண்டு அச்சமுற்றார்கள். அவள் தங்களை களங்கப்படுத்தி விடுவாள் என்ற பயம் ராஜாக்களுக்கு இருந்தது.

**ஐயையோ ! பாபிலோன் , மகா நகரமே ! பலமான பட்டணமே :**

இது அவர்களுடைய அச்சத்தையும், முன்னுரிமைகளையும் வெளிக்காட்டுகிறது. ஆயிரம் வருடங்களுக்கு மேலாக பலம் பெற்று ஆதிக்கம் செலுத்தி வந்த பாபிலோன் இப்பொழுது தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டு , பலவீனத்தையும், இழப்பையும், வாதையையும், துக்கத்தையும் சந்திக்கும் வேளையில், இவைகளை கண்ணுற்ற ராஜாக்கள் எப்படி பாதுகாப்பாக இருப்பார்கள் ?

**பலமான :** நகரம் என்று குறிக்கப்படுவது, ராஜாக்கள் பாபிலோனின் அதிகாரத்தை மதிக்கும் தன்மையையும், அதன் இழப்பைக் கண்டு பயமுறும் தன்மையையும் காட்டுகின்றன. இரண்டு முறை " ஐயோ " என்பது, "முழுமையிராத" அழிவைக் காட்டுகிறது.

**ஒரே நாழிகையில் :** வரலாற்றில் வழக்கத்திற்கு மாறான வித்தியாசமான ஒரு காலப்பகுதியைக் குறிக்கிறது.

**உனக்கு ஆக்கினை வந்ததே என்பார்கள் :**

" உனக்கு ஆக்கினை " என்று அவளை நேரிடையாக விழித்து பேசுவது, ராஜாக்கள் இன்னும் பாபிலோனுடன் உறவாடும் (தூரத்திலே நின்று) நிலையைக் காட்டுகிறது. பாபிலோன் இன்னும் இருக்கிறது என்பதை இந்த வாக்கியம் உணர்த்துகிறது.

## இரண்டாம் பிரிவினர்
## வர்த்தகர்கள்

**வெளி 18 : 11 .**

**பூமியின் வர்த்தகர்களும் அவளுக்காக அழுது புலம்புவார்கள் .**

இவர்கள் வேகுதலினால் பாதிக்கப்பட்ட இரண்டாம் பிரிவினர் ; **வர்த்தகர்கள்** என்பது **முதலாளிகளை (Capitalists)** குறிக்கும். இவர்கள் ராஜாக்களிலிருந்து வித்தியாசமானவர்கள் அல்ல. ராஜாக்கள் அரசியலைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். **முதலாளிகள்** பொருளாதாரத்தை கட்டுப்படுத்துகின்றனர்.

**வெளி 18 : 11 - 13 .**

**பூமியின் வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சரக்குகளாகிய பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும், முத்துக்களையும், சல்லாவையும், இரத்தாம்பரத்தையும், பட்டாடைகளையும், சிவப்பாடைகளையும், சகலவித வாசனைக்கட்டைகளையும், தந்தத்தினால் செய்த சகலவித வஸ்துக்களையும், விலையுயர்ந்த மரத்தினாலும், வெண்கலத்தினாலும், இரும்பினாலும், வெள்ளைக்கல்லினாலும் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும், இலவங்கப்பட்டைகளையும், தூபவர்க்கங்களையும், தைலங்களையும், சாம்பிராணியையும், திராட்ச ரசத்தையும், எண்ணெயையும், மெல்லிய மாவையும், கோதுமையையும், மாடுகளையும், ஆடுகளையும், குதிரைகளையும், இரதங்களையும், அடிமைகளையும், மனுஷருடைய ஆத்துமாக்களையும் இனி கொள்வார் இல்லாதபடியால் அவளுக்காக அழுது புலம்புவார்கள் .**

இந்த வசனங்களுக்கு விளக்கமளிப்பது சிக்கலான காரியமாயிருக்கிறது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பொருட்களையும் ஆவிக்குரிய அடையாளக்குறியீடுகளாக எண்ணி அவற்றுக்கு விளக்கமளிக்க சிலர் முயன்றனர். ஆனால் , 10 ம் வசனத்துடன்

நாம் ஒத்துப் பார்க்கும் போது, இவைகள் ஆவிக்குரிய காரியங்களுக்கான அடையாளங்கள் இல்லை என்பதை உணரலாம். இந்த வஸ்துக்கள் எல்லாம் செல்வம் , கீர்த்தி , ஆடம்பரம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படும் மகா பாபிலோன், தான் கொண்டிருந்த வணிக தொடர்பு நிலையைக் காட்டுகிறது.

முதலாளிகள் லாபமீட்டும் நோக்கத்துடன் தூர தேச நாடுகளில் கிடைக்கும் விசேஷித்த பொருட்களைப் பெற்று வாணிகம் செய்கின்றனர். அவர்களுடைய பேராசைக் கொண்ட வாணிகத்திற்கு தூரம் ஒரு பொருட்டல்ல. இந்த ஆடம்பர பொருட்களினால் சாதாரண மனிதனை மதி மயக்கம் கொள்ளச் செய்கின்றனர். வாணிகம் செய்யும் பொருட்களில் பொன், வெள்ளி, அடிமைகள், ஆத்துமாக்கள் (அறிவு / மனம் சார்ந்த தொழில்கள்) என்று ஒரு நீண்ட பட்டியல் இந்த வசனங்களில் குறிக்கப்படுகின்றன.

**இனி கொள்வார் இல்லாதபடியால் :**

பாபிலோனின் முந்தைய வர்த்தக சாம்ராஜ்யங்கள் கி.பி. 1914ல் சின்னாபின்னமாயின கம்யூனிஸத்தின் வளர்ச்சி இந்த வர்த்தகத்தை மேலும் உடைத்தெறிந்தது. நாணயங்கள் (செலாவணி) மற்றும் பொருட்களின் ஸ்திரமற்ற நிலை, கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஒரு வாதையாக இருந்து வருகிறது.

“இனி கொள்வார் இல்லாதபடியால்“ என்பது வர்த்தகர்களின் வாதம். இவர்கள் முந்தைய வணிக சந்தைகளை இழந்து விட்டனர் என்பது உண்மையே. ஆனால், அதற்கு பதிலாக புதிய வணிக யுத்திகளை அவர்கள் இக்காலத்தில் மேற்கொண்டுள்ளார்கள். கி.பி. 1914 க்கு முன்னர், முதலாளிகள் ராஜாக்களுக்கு கடன் கொடுத்த நிலை இப்பொழுது மாறி விட்டது. கி.பி. 1914க்கு பின்னர் ராஜாக்களின் நிலை மோசமானது. ஆகவே முதலாளிகள் சாதாரண குடிமக்களுக்கு கடன் கொடுத்து, பொருட்களை வாணிகம் செய்து (பழைய வாணிக முறைகளுக்கு பதிலாக) லாபம் ஈட்டுகின்றனர். இதுவும் ஸ்திரமற்ற பொருளாதார நிலைக் கொண்டுள்ளது.

**வெளி 18 : 14 .**
**உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் உன்னை விட்டு நீங்கிப் போயின ; கொழுமையானவைகளும், சம்பிரமானவைகளும், உன்னை விட்டு நீங்கிப் போயின ; நீ அவைகளை இனிக் காண்பதில்லை .**

**உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் :**

10 ம் வசனத்தில் ராஜாக்கள் பாபிலோனிடம் நேராக சம்பாஷித்தது போல, இங்கு வர்த்தகர்கள் பாபிலோனிடம் நேராக சம்பாஷிக்கின்றனர். இந்த வர்த்தகர்கள் அவளுக்கு நேரிட்ட தீர்ப்பைக் குறித்து பேசவில்லை. முதலாளிகளுக்கு தார்மீக (அறநெறிகளில்) விஷயங்களில் அக்கறையில்லை. கொள்ளையில் அவளுக்கு ஏற்பட்ட இழப்பிற்காக பாபிலோன் மேல் வர்த்தகர்கள் இரக்கம் கொள்கின்றனர்.

**உன்னை விட்டு நீங்கிப் போயின :**

மத்திய காலங்களிலும், மறுமலச்சி யுகத்தின் போதும், இவ்வுலகத்தின் உசிதமான பொருட்கள் அனைத்தும் பாபிலோன் விரும்பி தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டிருந்தது. செல்வம், கலை, பழம் பிரதிகள், ஆபரணங்கள், சிற்பங்கள் போன்ற எல்லாவற்றையும் தன் பால் சொந்தமாக்கியிருந்தது. ஆனால், இப்பொழுது பாபிலோனின் கவலை எல்லாம் எப்படி பிழைத்திருப்பது என்பது குறித்து தான் !இதைத் தான் யேசபேல் தன்னை சிங்காரித்துக் கொள்ளும் விதமாகவும், (2 ராஜா 9 : 30) மற்றும் வேசித்தனம் பண்ணும் விதமாகவும் (ஏசாயா 23 : 15 - 17) சித்தரிக்கப்படுகிறாள்.

**கொழுமையானவைகளும், சம்பிரமானவைகளும், உன்னை விட்டு நீங்கிப் போயின :**

முதலாளிகளின் இந்த விசனமான வார்த்தைகள் அவர்களுடைய எண்ண ஓட்டத்தை வெளிப்படுத்துகின்றன; அவர்கள் வேண்டுவதெல்லாம் செல்வம் ஒன்றே ! மற்றவற்றைப் பற்றி முதலாளிகளுக்கு கவலை இல்லை.தங்களின் சுபாவங்களாகிய சுயநலம், மற்றும் பேராசைகள் அனைத்தும் பாபிலோனிடம் பிரதிபலித்ததால் அவளை விரும்பினார்கள்; அந்த பகட்டையும், செல்வாக்கையும். பாபிலோன் இழந்ததைத் தொடர்ந்து, அதன் மேல் அவர்களுக்கு இருந்த ஈர்ப்பு விலகத் தொடங்கியது.

**நீ அவைகளை இனி காண்பதில்லை :**

பாபிலோனின் மகிமையான நாட்கள் இனி வராது என்பதை முதலாளிகள் திட்டவட்டமாக நம்பினார்கள். இது அவர்களைப் பாதித்தது; ஏனெனில் தங்களின் பேராசைகளுக்கு வடிகாலாக புதிய வணிக யுத்திகளை வர்த்தகர்கள் தேட வேண்டியிருந்தது; நம்பிக்கைக்குகந்த பழைய முறைமைகள் பாபிலோனின் சிதைவினால் அகன்று போயின.

**வெளி 18 : 15 .**

**இப்படிப்பட்டவர்களைக் கொண்டு வர்த்தகம் பண்ணி , அவளால் ஐசுவரியவான் களானவர்கள் அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து , தூரத்திலே நின்று .**

**இப்படிப்பட்டவர்களைக் கொண்டு வர்த்தகம் பண்ணி :**

பாபிலோனின் பசியை ஆற்ற யாரேனும் முன் வர வேண்டும். வர்த்தகர்கள் பாபிலோனை முதன்மையான வாடிக்கையாளராக விரும்பி ஏற்றுக் கொண்டனர்.

**அவளால் ஐசுவரியவான்களானவர்கள் :**

வரலாற்றைப் பார்த்தால் விளங்கும் ! வேசியுடன் ஒத்துழைத்ததால் உலகியல் சார்ந்த பெரும் நன்மைகள் முதலாளிகளுக்கு கிடைத்தன. பாபிலோனின் விருப்பங்களுக்கு இணங்க வணிகத் தொடர்பு கொண்டவர்கள் பெரும் வெகுமதிகளைப் பெற்றனர்.

**அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து , தூரத்திலே நின்று :**

பாபிலோனுக்கு உண்டான வாதையைக் கண்டு வர்த்தகர்கள் பயந்தனர்; மூழ்கும் கப்பலை (பாபிலோனை) கைவிட்டு விட்டனர்; முந்தைய நாட்களில் அவளால் தாம் பெற்ற நன்மைகளுக்காக அவளை விரும்பிய போதும், இழப்பை சந்தித்த பாபிலோனை நேசிக்க அவர்கள் தயாராக இல்லை. இதுவரை பாபிலோனால் பெற்று வந்த நன்மைகளின் இழப்பை நினைத்தே வர்த்தகர்கள் அழுது புலம்புகிறார்களே, அல்லாமல், பாபிலோன் அமைப்புக்காக அல்ல ! (NAS பைபிள் மொழி பெயர்ப்பில் இந்த வசனம் தெளிவாக இருக்கவில்லை). இந்த வசனத்தின்படி, பாபிலோன் அழுது புலம்பவில்லை; வர்த்தகர்களே அழுது புலம்புவார்கள்).

**வெளி 18 : 16 .**

**ஐயையோ ! சல்லாவும், இரத்தாம்பரமும், சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே ! : ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்து போயிற்றே என்று சொல்லி அழுது துக்கிப்பார்கள் .**

வெளி 18 : 10ல் ராஜாக்கள் பாபிலோனை பார்த்து புலம்பும் போது, **“பலமான பட்டணமே“** என்றனர். இவர்கள் பாபிலோனின் பலத்தையும், வெல்ல முடியாத தன்மையையும் உணர்ந்திருந்தனர். ஆனால், இங்கு **மகா நகரம்** என்று பாபிலோனை வர்த்தகர்கள் வர்ணிக்கின்றனர். வர்த்தகர்கள் பார்வையில் பாபிலோன் கீழ்கண்டவாறு இருந்ததாக வர்ணிக்கப்படுகின்றது:

**சல்லாவும், இரத்தாம்பரமும், சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மாநகரமே !**

வர்த்தகர்கள் இந்த செல்வங்களை கட்டுப்பாட்டுக்குள் வைக்க இயலாத இழப்பைக் குறித்து அழுது துக்கித்தனர்.

**ஒரே நாழிகையிலே :** வரலாற்றில் ஒரு வித்தியாசமான காலப்பகுதியைக் குறிக்கிறது.

**இவ்வளவு ஐசுவரியமும் அழிந்து போயிற்றே :**

10ம் வசனத்தில் ராஜாக்கள் புலம்பியவிதத்திற்கு நேர்மாறாக, வர்த்தகர்களின் துயரம் உள்ளது; வர்த்தகர்களின் கவலை வேறுவிதமாக உள்ளது; ஸ்திரமான (பாதுகாப்பான) பொருளாதார அமைப்பு சீர் குலைந்ததைக் கண்டு அதன் இழப்பைத் தாங்காமல் வர்த்தகர்கள் அழுது துக்கித்தனர்.

## மூன்றாம் பிரிவினர்

## மாலுமிகள், யாத்திரை பண்ணுகிறவர்கள், கப்பலாட்கள், சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்கள்.

**வெளி 18 : 17.**
**மாலுமிகள் யாவரும், கப்பலில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும், கப்பலாட்களும், சமுத்திரத்திலே தொழில் செய்கிற யாவரும் தூரத்திலே நின்று .**

**மாலுமிகள் யாவரும் :**

இவர்கள் முதலாளிகள் அல்ல; **பெரும் வணிகர்கள்.** இவர்கள் வணிகம் (வியாபாரம்) என்ற கப்பலை செலுத்துபவர்கள். இவர்களை லாபம் (ஆதாயம்) ஈட்டுவோர் எனலாம்; முதலாளிகள் அளித்த மூலதனத்தைக் கையாண்டு லாபம் சம்பாதிப்பவர்கள்.

**யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும் :**

இவர்கள் **சிறு முதலீட்டாளர்கள்,** சிறு பங்குதாரர்களைக் குறிக்கும்.; பொருளாதார ஓட்டத்தில் சிறிய அளவில் ஆதாயம் பெறுவோர்.

**கப்பலாட்கள் :**

இவர்கள் **சிறு வியாபாரிகள்.** இவர்கள் பெரும் வணிகர்களிடமிருந்து பொருட்களைப் பெற்று, சிறிய அளவில் வியாபாரம் செய்பவர்கள். இவர்கள் கப்பல்களுக்கு சொந்தக்காரர்கள் அல்ல; இவர்கள் விற்பனையை நிர்வகிப்பவர்கள்.

**சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்கள் :**

" சமுத்திரம் " என்பது **ஜனத்திரளைக்** குறிக்கும் ; இவர்கள் வர்த்தக உலகத்தை நம்பி உள்ளவர்களாவர் ; வர்த்தக உலகத்தாரால் கொள்ளையடிக்கப்படுபவர்களும் இவர்களே; வெளி 17 : 1ல் வேசி தண்ணீர்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டோம். சமுத்திரத்திலே தொழில் செய்யும் இப்பிரிவினர் படகுகளைக் கட்டவும், பாய்ச்சுருள்களை நிர்மாணிக்கவும், துறைமுகத்தில் வேலை செய்யும் **பணியாட்கள் ;** இந்த பிரிவினர் சமுத்திரத்திலே தம் ஜீவனுக்குரியவற்றை சம்பாதிப்பதாக உருவகமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

**தூரத்திலே நின்று :**

10, 15ம் வசனங்களில் "தூரத்திலே நின்று" என்று குறிக்கப்படுவதற்கும், இந்த 18ம் வசனத்தில் குறிக்கப்படுவதற்கும் வித்தியாசம் உண்டு; அங்கு பெரும் அதிகாரத்திலிருப்பவர்கள் **(ராஜாக்கள், வர்த்தகர்கள்** அதாவது முதலாளிகள்) பாபிலோனுக்கு ஏற்பட்ட வாதையைக் கண்டு அச்சமுற்றனர்; ஆனால், பொருளாதார வட்டத்திற்குள் இருக்கும் சிறிய அந்தஸ்திலுள்ளவர்கள் பாபிலோனுக்கு நிகழ்ந்த வாதைக்கும், தங்கள் அன்றாட வாழ்வில் ஏற்படும் பாதிப்பிற்குமுள்ள தொடர்பை தெளிவுற காண்பதில்லை; இவர்கள் பாபிலோனுடன் நேரிடையான தொடர்பில் இல்லாததால், இரண்டாந்தர நிலையிலுள்ளவர்கள். பொருளாதார ஸ்திரத் தன்மை இழந்ததை இவர்கள் அறிந்து துன்பத்திற்குள்ளாகிறார்கள்.

**வெளி 18 : 18 .**

**அவள் வேகிறதினால் உண்டான புகையை பார்த்து, இந்த மகா நகரத்திற்கு ஒப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு .**

**அவள் வேகிறதினால் உண்டான புகையை பார்த்து :**

முதலாம் உலகப் போருக்குப் பின்னர் , இந்த புகை வெளிப்படையாகத் தெரிந்தது. ஜெர்மனி நாடு (புனித ரோம சாம்ராஜ்யத்தின் பழைய சிம்மாசனம்) முதலில் இந்த இழப்பை உணர ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து சுமார் நூறு ஆண்டுகளாக உலகில் பொருளாதார ஸ்திரமின்மை வெகுவாகப் பரவியது. வணிகம் மற்றும் தொழிலாளர்களின் இடர்ப்பாடுகள் உலகமுழுவதும் தெளிவாகத் தோற்றமளிக்கின்றன.அனைத்துலகமும் ஒரு ஸ்திரமான (பாதுகாப்பான) பொருளாதாரத்திற்காக ஏங்குகிறது.

**இந்த மகா நகரத்திற்கு ஒப்பான நகரம் உண்டோ :**

பழைய முறைமைகளுக்காக ஏங்கும் விதமாக இது இருக்கிறது. இந்த பழம்பெரும் நகரத்திற்கு மாற்றாக (பதிலாக) வேறு ஒரு நகரம் உள்ளதா ? என வினவப்படுகிறது. அதற்கான பதில் இல்லை என்பதே .

**வெளி 18 : 19 .**

**தங்கள் தலைகள் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு, ஐயையோ ! மகா நகரமே ! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உசிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே ! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப் போனாளே என்று அழுது, துக்கித்து ஓலமிடுவார்கள் .**

**தங்கள் தலைகள் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு :**

துக்கம், ஆழ்ந்த துயரம், குறிப்பாக இழப்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் பாரம்பரிய அடையாளம் இதுவே ! (யோசுவான் 7 : 6; யோபு 2 : 12; புலம்பல் 2 : 10). தங்கள் ஜீவனத்திற்கு ஆதாரமாக மற்றவர்களை நம்பியிருப்போரின் நிலை இதுவே; இழப்பு இவர்களை வெகுவாகப் பாதிக்கிறது.

**ஐயையோ !**

மூன்று பிரிவினரும் (ராஜாக்கள், வர்த்தகர்கள், மாலுமிகளுடன் கூடிய மற்றையோர்) வெளிப்படுத்தும் கூக்குரல் இதுவே ! உபத்திரவங்களை முன்குறித்துக் காட்டும் சொற்கள் இவை. வெளி 8 : 13ல் இருப்பது போல் **ஐயோ, ஐயோ, ஐயோ,** என்று மூன்று முறை சொல்லப்பட்டு, பூரண அழிவை சுட்டிக்காட்டும்விதத்தில் இங்கு இல்லை. வெறும் இரண்டு முறைகள் **ஐயோ, ஐயோ,** என்று கூறப்படுவதால், பாபிலோன் இன்னும் பிழைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

**அழுது , துக்கித்து , ஓலமிடுவார்கள் :**

வர்த்தகர்களைப் போலவே, மூன்றாம் பிரிவினரும் "அழுது துக்கித்தார்கள்". ஆனால், முதலாம் பிரிவினரான ராஜாக்கள் "அழுது புலம்பினார்கள்" .

**மகா நகரமே !**

பழைய அமைப்பு முறை (பாபிலோன்) சிறப்பு வாய்ந்தது என்று மூன்று பிரிவினரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

**சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் :**

இந்த வசனப் பகுதி முதலாளிகளைக் குறிக்கிறது. இவர்கள் தாம் குறைந்த அந்தஸ்திலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகள், தேவைகள், கூலி போன்றவற்றை அளிப்பவர்கள். முதலாளிகளின் சேமத்தைப் பொருத்தே தங்களின் எதிர்காலம் அமைகிறது என பொருளாதார ஏணியில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உணர்கிறார்கள்.

**இவளுடைய உசிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே :**

பாபிலோனின் தொடர்பினால் ஐசுவரியவான்களான வர்த்தகர்களைப் (முதலாளிகளை) பற்றி , பொருளாதாரத்தின் அடிமட்ட நிலையிலிருப்போர் என்ன நினைக்கின்றனர் என்பது இவ்வசனத்தில் தெளிவாகத் தெரிகிறது. இன்றைய பொருளாதாரத்தில், வேலையின்மை, உற்பத்திக்குறைப்பு போன்ற பொருளாதார போக்குகளை உற்று நோக்குகின்றனர்.

**ஒரு நாழிகையிலே :**

வரலாற்றில் இது ஒரு வித்தியாசமான காலப்பகுதி . முதலாம் உலக யுத்தத்தினால் அரசியலில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் சிறிதும் எதிபாராத அதிர்ச்சியூட்டும் மாற்றங்களை உலகம் சந்தித்தது. ஒரே நாழிகையிலே இந்த உலகம் வேறுவிதமாக மாறியது.

**இவள் பாழாய்ப் போனாளே :**

தாழ் நிலையிலுள்ள மூன்றாம் பிரிவினர் "இவள் பாழாய்ப் போனாளே" எனக் கூறுகின்றனர்.இவர்களைப் பொறுத்த வரையில் தொழிலாளிகளும், வியாபாரிகளும் தங்களுக்கு ஸ்திரமான பொருளாதார நிலையை (வேலை, வருமானம்) கொடுக்கும் **அமைப்பு பாழாய்ப் போனது** குறித்து துயரமடைகிறார்கள்.இந்த வகுப்பினர் விரும்புவது இதை மட்டும் தான். இப்பிரிவினருக்கு பாபிலோனுடன் நேரடித் தொடர்பு இல்லை.இவர்கள் அவளுடைய வட்டத்திற்குள்ளானவர்கள் அல்ல.

ராஜாக்களும், வர்த்தகர்களும் அவள் பாழாய்ப் போவது குறித்து துயரமடைவது குறித்து 10 மற்றும் 17 ம் வசனங்களில் வாசிக்கிறோம்.

**பரிசுத்தவான்கள்**

பாபிலோனுக்கு வரும் பொருளாதார இன்னல்களை விவரித்ததை தொடர்ந்து, பரிசுத்தவான்கள் இச்சம்பவங்களை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதை வசனம் 20ல் ஏழாம் தூதன் விவரிக்க முற்படுகிறான்.

**வெளி 18 : 20.**

**பரலோகமே ! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே ! தீர்க்கதரிசிகளே ! அவளைக் குறித்து களிகூருங்கள் ; உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே என்று தூதன் சொன்னான் .**

**அவளைக் குறித்து களிகூருங்கள் :**

இந்த மகிழ்ச்சி பாபிலோனின் **பேரழிவிற்கு முன்** ஏற்படும் மகிழ்ச்சி . இந்த நூறு ஆண்டுகளாக பரிசுத்தவான்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு எதிர்மாறாக, சமுதாயத்தின் மற்றையோர் இந்த உபத்திரவத்தைக் குறித்து "ஐயோ" என துயரமடைகின்றனர்.

| | | |
|---|---|---|
| பரலோகமே | : | வர இருக்கும் புதிய வானம் |
| பரிசுத்தவான்கள் | : | திருச்சபை |
| அப்போஸ்தலர்கள் | : | புதிய எருசலேமின் அஸ்திபார கற்கள் |
| தீர்க்கதரிசிகள் | : | புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் - அதாவது " சுவிஷே யுக சபைகளின் தூதர்கள். |
| தேவன் | : | இவருடைய கோபம் வாதைகளினால் நிறைவு பெறுகிறது. |

**உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே :**

பரிசுத்தவான்களின் (திருச்சபை) கசப்பான அனுபவங்களை முன்னிட்டு , பாபிலோனுக்கு தேவன் அளிக்கும் நியாயத்தீர்ப்பு இங்கு தெரிவிக்கப்படுகிறது. இது வெளி 6 : 10, 11ன் நிறைவேறுதல் ஆகும். இந்த வசனங்கள் காலக்கணக்கின்படி கி.பி. 1878ம் வருஷத்தைக் குறிக்கிறது.

## பகுதி III

## வெளி 18 : 21 - 24.

கி.பி. 1914 ல் ஏற்பட்ட தீயினால் படிப்படியாக வேகிறதினால் (SLOW BURN) உண்டான புகைக்கு பிறகு நடக்க இருக்கும் **பேரழிவை,** 18ம் அதிகாரத்தின் இறுதி பகுதி விவரிக்கிறது. அவளுடைய கடைசி அழிவிற்குப் பின் அவளுக்காக துயரம் கொள்வோர் யாருமில்லை. இது தான் ஏழாம் வாதை. (பெரிய ஆலை) அவள் நெருப்பினால் சுட்டெரிக்கப்படுவாள். **வெளி 17 : 16 ; இதுவே அர்மகெதோன்.**

**வெளி 18 : 21 .**

**அப்பொழுது , பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்தரத்திலே எறிந்து : இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய் தள்ளுண்டு , இனி ஒரு போதும் காணப்படாமற் போகும் .**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் மூன்று "பலமுள்ள தூதர்கள்" உள்ளனர். (வெளி 5 : 2; 10 : 1) இவ்வுலகில் புரட்சி உருவாகும் ஒவ்வொரு முக்கியமான தருணங்களிலும் அதன் பிரதிநிதியாக ஒவ்வொரு பலமுள்ள தூதனும் குறிக்கப்படுகிறான்.

1. வரலாற்றில் பெரும் மாற்றங்களுக்கு அடிகோலிய திருப்பு முனைகள்.

2. கிறிஸ்தவம் ஸ்தாபிக்கப்படும் காலத்தில் இஸ்ரவேலின் விழுகை.

3. "முடிவின் கால" ஆரம்பமான பிரெஞ்சுப் புரட்சி.

**கல்லை எடுத்து :**

வெளி 18ம் அதிகாரமும், ஏசாயா 23ம் அதிகார தீர்க்கதரிசனமும் ஒத்தவிதமாக உள்ளன. **"தீரு"** என்பது **"கல்"** அல்லது **"பாறையை"** குறிக்கும். கிறிஸ்து கட்டிய பாறையாக ரோமச்சபை தன்னை கூறிக்கொள்கிறது. பேதுருவை (கல்) தன் முதல் போப்பு என ரோமச் சபை உரிமை கொண்டாடுகிறது. கிறிஸ்துவாகிய மூலைக் கல்லுக்கு போலியான கல்லாக ரோமச் சபை இருக்கிறது.

**பெரிய எந்திரக்கல்லையொத்த :**

இந்த கல் (தீரு) மற்ற எந்த கல்லைப் போல இல்லை. இது **பெரிய எந்திரக்கல்லைப்** போல இருந்தது. இந்த கல் கிறிஸ்துவத்தின் "உணவுக்காக" இருந்த உலகத்தின் மிகப் பெரியதும் பழமையானதுமான எந்திரக்கல் ஆகும். (மத் 24 : 41).

**சமுத்திரத்திலே எறிந்து :**

எந்திரக்கல் என்பது மிகப் பெரிய அளவிலானதும் பளுவானதுமாயிருக்கும் இது சமுத்திரத்தில் விழுந்தால் மெதுவாக மூழ்காது. சமுத்திரம் (வெளி 17 : 16ன் விசித்திர மிருகம் - ஜனங்கள்) பாபிலோனை ஒரே விழுங்கலில் வாரிக் கொள்ளும்.

**இப்படியே பாபிலோன் மகா நகரம் :**

**ராஜாக்கள் (18 : 10), வர்த்தகர்கள் (18 : 16) , தாழ்நிலை பொருளாதார சக்திகள் (18 : 19)** என்ற மூன்று பிரிவினரும் ஒன்றாக பாபிலோனின் முந்தைய மகிமையைப் பறைசாற்றுகிறார்கள்.

**வேகமாய் தள்ளுண்டு :**

" தள்ளுண்டு " என்பது ஒரு அவமதிப்பான நிலையைச் சுட்டிக்கட்டினாலும், **" வேகமாய்** தள்ளுண்டு " என்று கூடுதலாக விவரித்து, பாபிலோனின் அழிவை ஒரு "அச்சமூட்டுகிற காட்சியாக " தூதன் தன் கண் முன் நிறுத்துகிறான்.

**இனி ஒரு போதும் காணப்படாமற் போகும் :**

இந்த நாள் இனி வரப் போகிறது. வெளி 19 : 20ன் நிறைவேறுதல் இதுவே . பாபிலோனின் அழிவைத் தொடர்ந்து நடக்க இருக்கும் மாற்றத்தை ஏசாயா 23 : 18ல் படிக்கிறோம். பாபிலோனின் செல்வமும், செல்வாக்கும் உரிமையான பாறையிடத்திற்கு மாற்றப்படும். " கர்த்தருக்கு பரிசுத்தம் " என்ற நிலை உருவாகும். குதிரைகளின் மணிகளிலே " கர்த்தருக்கு பரிசுத்தம் " என்ற விலாசம் எழுதியிருக்கும் என சகரியா 14 : 20ல் பார்க்கிறோம். (வெளி 14 : 20).

ஏசாயா 24ம் அதிகாரம் வெளி 18 : 21 - 24 வசனங்களுக்கு ஒத்தவிதமாக இருக்கிறது.

**வெளி 18 : 22 .**

**சுரமண்டலக்காரரும், கீத வாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை; எந்த தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதுமில்லை; ஏந்திர சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை .**

**சுரமண்டலக்காரர் :** தேவனுடைய வார்த்தைகளுக்கு இசைவாக பொருள் விளக்கம் அளிப்போர்;
**கீத வாத்தியக்காரர் :** நற்செய்திகளைப் பாடுவோர். (பிரகடனம் செய்யும் / சாட்சி சொல்லும் கிறிஸ்தவர்கள்).

**நாகசுரக்காரர் :** இந்த அடையாளக் குறியீடு தெளிவில்லாததாக இருக்கிறது. இருப்பினும், லூக்கா 7 : 32ல் இதற்கான விளக்கம் கிடைக்கிறது. குழலூதுதல் நடனத்திற்கு வழிவகுக்கிறது. கொள்கையை நடைமுறைப்படுத்தும் போதகர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்பது சில வேதமாணவர்களின் கருத்து.

**எக்காளக்காரருமானவர்கள் :** எக்காளக்காரர் என்பது யுக சத்தியங்களை பிரகடனப் படுத்துபவர்கள்.

வெளி 18 : 23 .
**விளக்கு வெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை ; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதில்லை ; உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே : உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம் போனார்களே .**

**விளக்கு வெளிச்சம்** : வேதாகம சத்தியங்கள்.
**மணவாளனின் சத்தம்** : " சத்தம் " என்பது " தூது " (செய்தி).
மணவாளனின் நீண்ட நாளைய செய்தி : **இராஜ்யம் .**
**மணவாட்டியின் சத்தம்** : இராஜ்யத்தை நிர்வகிப்பதில் உடன் சுதந்தரராக செயல்படும் மணவாட்டியினரின் தூது.

**இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதில்லை :**
மகா பாபிலோனின் இறுதி அழிவு வரையிலும் அதன் உண்மையான நிறம் (பண்பு) தெரியாமல் உலகத்தாரில் பெரும்பாலோர் அறியாமலிருந்தார்கள். அவளுடைய சாம்பலை கிளறிப் பார்த்த பொழுது தான் அவளுடைய உண்மையான, பயங்கரமான மிச்சங்கள் வெளியுலகிற்கு தெரிய வருகின்றன. அவள் மறைந்து போனாள். இந்த நகரம் இனி செயல்படப் போவதில்லை.

**உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே :**
பரிசுத்தவான்களுடன் உறவு கொள்ளாமல் **பூமியின்** பெரிய மனுஷரோடுங்கூட இணைந்திருந்தது, அவள் தள்ளுண்டு அழிவை சந்தித்ததற்கான ஒரு காரணமாகும். அவளுடைய லௌகீக ஆசைகள் ஆவிக்குரிய ஐசுவரியங்களை அவள் இழக்க காரணமாக இருந்தன. இந்த வேசித்தனம் தான் பாபிலோன் தள்ளுண்டு போக முதன்மையான காரணம் ஆகும்.

**உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம் போனார்களே :**
சபையும் ராஜ்ஜியமும் இணைந்த அமைப்பு முறை தேவனால் அங்கீகரிக்கப்பட்டதென்று நம்ப வைத்து அவர்களை பாபிலோன் மதி மயங்கச் செய்தது. இது " விசுவாசத்தின் இரகசியம் " என்று சொல்லி, பூமியின் ஜனங்களை வசியப்படுத்தியது.

வெளி 18 : 24 .
**தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் , பரிசுத்தவான்களுடைய இரத்தமும், பூமியில்** கொல்லப்பட்ட **அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான் .**

**அவளிடத்தில் காணப்பட்டது :**
அவளுடைய அழிவைத் தொடர்ந்து, ஜனங்கள் அவளது அழிபாடுகளை ஜனங்கள் துருவி ஆராய முற்படுகின்றனர். அவளது வரலாறும், இரகசியங்களும் வெளிப்படுகின்றன.

**தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் :**

பழைய ஏற்பாட்டு போதனைகளை தவறாக பிரயோகம் பண்ணியது ; ( ஜீவனை இழக்கப்பண்ணியது ).

**பரிசுத்தவான்களுடைய இரத்தமும் :**

சுவிசேஷ யுக விசுவாசிகளை ஜீவனை இழக்கப் பண்ணியது .

**பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் :**

அவளை எதிர்த்தவர்கள் எல்லோரும் அவருடைய கோபத்திற்கு ஆளானார்கள். அவர்களின் விசுவாசத்தை தளரச் செய்து அழிப்பதற்கு பாபிலோன் ஒரு கருவியாக செயல்பட்டது. சாத்தான் விரும்பியதும் இது தான். ஆனால், தேவனுடைய திட்டம் வேறு விதமாயிருந்தது. விசுவாசிகளின் இரத்ததிற்கு சரியான தீர்ப்பாக அவள் அழிவை சந்தித்தாள்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# வெளி 19ம் அதிகாரம்

## மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி அழிவு (பரிசுத்தவான்களின் பார்வையில் அறுவடை) முன்னுரை

வெளிப்படுத்தல் ஆகமம் 19ம் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம் :

1. வெளி 19 : 1 - 10; 2. வெளி 19 : 11 - 21.

**வசனங்கள் 1 - 10 :** முதல் 10 வசனங்கள் 18ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாக உள்ளது. பாபிலோனின் அழிவு மற்றும் சபையும், திரள் கூட்டமும் மகிமை அடைவது ஆகியவற்றைப் பற்றி விவரிக்கப்பட்டவுடன், இச்சம்பவங்களால் ஏற்படும் மகிழ்ச்சியை வெளி 19 : 1 - 10ம் வசனங்கள் விவரிக்கின்றன. 10ம் வசனத்திற்கு பிறகு ஆசிரியர்கள் அதிகாரத்தைப் பிரித்திருந்தால் (11ம் வசனத்திலிருந்து 20ம் அதிகாரம் துவங்கியிருந்தால்) சம்பவங்கள் கோர்வையாக அமைந்திருக்கும்.

**வசனங்கள் 11 - 21 :** "கிறிஸ்தவம்" அழிவடைவதைப் பற்றிய இறுதியான விவரிப்பினை இந்த வசனங்களில் காணலாம். இந்த "கிறிஸ்தவம்" என்பது புரோட்டஸ்டாண்டுகளையும் உள்ளடக்கியது என்பதை நன்கு அறியலாம். இந்த 11 - 21ம் வசனங்களும், 20ம் அதிகார வசனங்களும் ஒன்றாக சேர்க்கப்பட்டிருந்தால், 1. மிருகம் 2. கள்ள தீர்க்கதரிசி 3. வலுசர்ப்பம் ஆகிய மூன்றின் அழிவும் ஒரே அதிகாரத்தில் இருந்திருக்கும். இம்மாதிரி அதிகாரம் பிரிக்கப்பட்டிருந்தால், சம்பவங்களை கிரகிப்பதற்கு எளிதாயிருக்கும். வெளி 20ம் அதிகாரத்தில் வலுசர்ப்பம் ஏதோ "பிசாசு" (சாத்தான்) என்ற சிருஷ்டியை நேரடியாக குறிப்பது போல் உள்ளது. வெளி 12 : 9; 16 : 13ம் வசனங்களில் 'வலுசர்ப்பம்' என்று அடையாள பாஷையில் ஏற்கனவே குறிக்கப்பட்டிருப்பதை நாம் உடனடியாக கவனத்தில் கொள்ள முடியாத மனப்போக்கு ஏற்படுகிறது.

வெளி 20ம் அதிகாரத்தில் உள்ள "பிசாசு" என்ற வார்த்தை "உண்மையான சிருஷ்டியை" குறிப்பதாக எண்ணி, ஆயிர வருட அரசாட்சி ஆரம்பமாகும் நிகழ்வுகளை சிலர் சரிவர புரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### அதிகாரம் 19 : 1 - 10.

### பாபிலோன் முழுமையாக அழிந்ததைத் தொடர்ந்து ஏற்படும் பெருமகிழ்ச்சி

வெளி 19 : 1. இவைகளுக்குப் பின்பு : யோவான் நமது கவனத்தை வேறு விதமாகத் திருப்புகிறார். வெளி 18 : 21 - 24ல் விவரிக்கப்பட்ட பாபிலோனின் அழிவைத் தொடர்ந்து ஏற்படும் கொண்டாட்டத்தைக் குறித்து சொல்ல முற்படுகிறார் :

**பரலோகத்தில் திரளான கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன் :**

யோவான் கேட்ட சத்தம் மெல்லியதாக இல்லை. ஒரு "பெரிதான பிரகடனம்" போன்ற ஆரவாரத்தைக் கேட்டார்.

**பரலோகத்தின் திரளான கூட்டம் :**

பாபிலோன் விழுகையைத் தொடர்ந்து மிகுந்த உபத்திரவத்திலிருந்து வெளிவந்த "திரள் கூட்டத்தாரை" குறிப்பதாக வேத மாணவர்களின் வழக்கமான பார்வை இருந்து வந்தது. ஆனால், இது பல சிக்கலான பிரச்சினைகளைக் கொண்டிருந்தது. பாபிலோன் முழுமையாக அழிந்த பிறகு, "திரள் கூட்டத்தார்" இன்னும் பூமியில் இருப்பார்கள் என்ற விஷயம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இது பரலோகத்திலுள்ள திரள் கூட்டத்தாரைக் குறிப்பதாக எடுத்துக் கொண்டால், களிப்புடன் ஆரவாரம் செய்யும்படியாக இந்த "திரள் கூட்டத்தாரை" மட்டும் ஏன் தனியாக பிரித்துச்

சொல்ல வேண்டும்? இவ்வசனத்தில் காணும் “திரள் கூட்டம்” என்பது பரலோக சேனைகளை (மணவாட்டியும், திரள் கூட்டத்தாரும் உள்ளடக்கிய) குறிப்பதாக சொல்லலாம். இங்கு பரலோகம் என்பது சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும். பழமையான வானம் (பூமியின் மத உலகம்) இந்த தருணத்தில் அகன்று போய் விட்டது. ஆகவே, இங்கு உள்ள “பரலோகம்” என்பது பூமிக்குரிய மதம் சார்ந்த உலகத்தை குறிக்க முடியாது.

**அவர்கள் : அல்லேலூயா, இரட்சண்யமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது :**

**அல்லேலூயா** : இந்த சொல் எபிரேய மொழியில் “ **யேகோவாவை** பாராட்டு ” என்று பொருள்படும். கனம், மகிமை எல்லாம் தேவனைச் சார்ந்தது. இதுவே மகிமை !

**வல்லமை** : தேவன் தம் திட்டங்களை நிறைவேற்ற பிரயோகிக்கும் அம்சம்.

**இரட்சண்யம்** : மனுக்குலத்தை தேவன் இரட்சித்துள்ளார்.

வெளி 19 : 1 - 10ல் காணப்படும் எல்லா மேற்கோள்களும் நமக்கு தேவனுடன் உள்ள சொந்த உறவைக் காட்டுகிறது. “ நம்முடைய தேவன் ” !

கடந்த காலத்தில் வெகு சிலரே தேவனை உண்மையாக உரிமை கொண்டாடினார்கள். பாபிலோனின் விழுகைக்கு பிறகு, எல்லோரும் அவ்விதம் செய்ய ஆர்வமுள்ளவர் களாயிருப்பார்கள்.

**அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் :**

இது தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்தும் அறிய வேண்டிய பாடம் ஆகும்.

**வெளி 19 : 2 .**

**தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து .**

“தேவன் இது வரையிலும் ஏன் தலையிடாமல் இருந்து வந்திருக்கிறார் ?” பல நூற்றாண்டுகளாக வானத் தூதர்களின் மனதில் எழும்பிய கேள்வி இது ! மாம்சீக இஸ்ரவேலர்களுக்குரிய காரியங்களில் அவர் குறுக்கீடு செய்துள்ளார். ஆனால், பாபிலோனின் அக்கிரமங்கள் செயல்படும் நீண்ட கால பகுதியில் தேவன் ஏன் மௌனமாயிருந்துள்ளார் ? தேவன் தாம் குறித்த காலத்தில், அவருடைய நீதிகளையும், திட்டங்களையும் காக்கும்படியாக, பாபிலோனின் பேரழிவை எல்லோர் முன்பாகவும் திருஷ்டாந்தப்படுத்தியுள்ளார். நோவாவின் நாட்களில் சீரழிந்த மனுக்குலத்திற்கு எதிராக தேவன் எப்படி செயல்பட்டார் என்பதை தேவ தூதர்கள் ஏற்கனவே அறிந்துள்ளனர். பாபிலோனுக்கு எதிராக அதைப் போன்ற நடவடிக்கையை எதிர்பார்த்து, தேவதூதர்கள் பொறுமையுடன் காத்திருந்தனர்.

**தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழி வாங்கினாரே என்றார்கள் :**

பரலோகத்தின் சேனைகள் (மணவாட்டியும், திரள் கூட்டத்தாரும்) சாட்சியமிட்ட இரண்டு அக்கிரமங்களில் இது இரண்டாவது ஆகும்.

1. பாபிலோன் பூமியை (சமுதாயத்தை) கெடுத்தது.
2. பரிசுத்தவான்களின் (தம்முடைய ஊழியக்காரரின்) இரத்தத்தை (உயிரைப் பறித்தல், கனத்தை அவமாக்குதல்) சிந்தியது.

   மேற்குறிப்பிட்ட அக்கிரமங்களுக்காக, “தேவனுடைய பழி வாங்குதல்” முழுமையானதும், சரியானதாகவும் உள்ளது.

**வெளி 19 : 3.**

**மறுபடியும் அவர்கள் : “அல்லேலூயா” என்று ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள் .**

வெளி 19 : 2 ல் முதன் முதலில் சொல்லப்பட்ட “அல்லேலூயா” கடந்த காலத்திற்குரியது; குற்றம் புரிந்தவர்களை அழித்து, நியாயத்தை செயல்படுத்துவதற்காக தேவனை புகழ்வது

மட்டுமன்றி, ஏசாயா 34 : 10ல் முன்னறிவித்தபடி, அவர் கற்பித்த பாடம் என்றென்றைக்கும் மறக்கப்படாது. அனுமதிக்கப்பட்ட அக்கிரமங்களின் காலப்பகுதியைத் தொடர்ந்து, சதா காலமும் விளங்கக்கூடிய நன்மை பிறக்கும். தீமை அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்த நித்தியமான பலன்கள் காரணமாகவே, இந்த இரண்டாவது “அல்லேலூயா” என்ற சத்தம் கேட்கிறது.

**வெளி 19 : 4 .**

**இருபத்து நான்கு மூப்பர்களும் :**

தேவனால் முன் எழுதப்பட்ட திட்டங்களின் சாட்சியங்களும் (சான்றுரைகளும்).

**நான்கு ஜீவன்களும் :**

தேவனுடைய சுபாவங்களின் ஆளுருவங்களும்.

**வணக்கமாய் விழுந்து :**

மதிப்புணர்வுகளுடனும், முழுமையான அர்ப்பணிப்புகளுடனும், வணக்கத்துடனும் தேவனை ஆராதனை செய்யும் நிலையை இது குறிக்கிறது. தேவனுடைய திட்டங்களின் நிறைவேறுதலை அறிந்து உணர்ந்து கொண்டு, தேவனை வணங்குகின்றனர்.

**ஆமென், அல்லேலூயா என்று சொல்லி, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுது கொண்டார்கள் :**

இது மூன்றாவது “அல்லேலூயா” ஆகும். இங்கு இரண்டு பிரிவினர்கள் (24 மூப்பர்கள்; 4 ஜீவன்கள்) “அல்லேலூயா” என்று கூறுகின்றனர். இந்த அல்லேலூயாக்களை “உயிருள்ளவர்கள்” சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. உயிரற்ற தன்மை கொண்ட கருத்துக்களும், எண்ணங்களும் “சடப் பொருள்களாக” உருவகப்படுத்தப்பட்டு தேவனைப் புகழ்வதாக கிரகித்துக் கொள்ள வேண்டும்.

இங்கு “அல்லேலூயா” என்ற புகழ்ச்சிக்கு முன்பாக “ஆமென்” என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, “அங்கணமே ஆகுக” என்று அர்த்தமாகும். இந்த வார்த்தை மேற்குறிக்கப்பட்ட இரண்டு சாட்சியங்களுக்கும் (24 மூப்பரகள், மற்றும் 4 ஜீவன்கள் என்று உருவகப்படுத்தப்பட்டவைகளுக்கு) பொருத்தமானவையாகவே உள்ளன. இதுகாறும் முன்னறிவித்தவைகளும், அனைத்து அம்சங்களும் நிறைவேறுகிறதைக் கண்ணுற்றதினால், இந்த இரண்டு சாட்சியங்களும் “ஆமென்” என்று பகர்கின்றன. அதை தொடர்ந்து, “அல்லேலூயா” என்ற புகழ்ச்சியுரை வெளிப்படுகிறது.

**வெளி 19 : 5.**

**மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே :**

இது முற்பிதாக்களைக் குறிப்பதாக இருக்கலாம். சுவிசேஷ யுகத்தில் “சபை” எவ்விதம் ஊழியக்காரர்களாக இருக்கிறார்களோ, அவ்விதமே ஆயிர வருஷ அரசாட்சியில் அகில உலகத்தாரும் தேவனுடைய ஊழியக்காரர்களாக ஆவார்கள் என்றும் யூகிக்கலாம்.

**அவருக்குப் பயப்படுகிற :**

இது புதிய யுகத்தின் ஆரம்ப கால போதனையாக இருக்கும். (கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என சாலமோன் ஞானி குறிப்பிடுவதைப் போல - நீதி 1 : 7).

**சிறியோரும் பெரியோருமானவர்களே :**

முற்பிதாக்கள் தொடங்கி கீழ் நிலையிலுள்ள அனைவரையும் நோக்கி ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது. இந்த சத்தம் தேவனுடையது அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் இது தேவனைத் துதி செய்வது பற்றியதாக உள்ளது. இந்த சத்தம் சிங்காசனத்தில் இருப்பவருடைய சத்தமாக உள்ளது. அதாவது, சிங்காசனத்தில் வீற்றிருக்கும் “இயேசு” அல்லது “இயேசு மற்றும் அவருடைய சபையின்“ சத்தமாக இருக்கிறது (வெளி 3 : 21) என சொல்லலாம்.

**நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் :**

இந்த சத்தம் தேவனைக் குறிப்பதாகச் சொல்ல முடியாது. தேவனை துதி செய்ய மற்றவர்களுக்கு கட்டளையிடுவதாகவே உள்ளது. இது மத்தியஸ்தரான இயேசுவின் கட்டளையாகவே தெரிகிறது !

**அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெரு வெள்ள இரைச்சல் போலவும் பலத்த இடி முழக்கம் போலவும் உண்டாகி :**

இந்த வசனத்திலுள்ள விஷயங்களை விமர்சிப்பது சிக்கலானது. மூன்று விதமான விவரிப்புடன் கூடிய "ஒரு பிரிவினரை" மட்டும் குறிப்பதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது எனலாம். ஆனால், இந்த வசனத்தின் சொல்லமைப்பு, மூன்று பிரிவினர்களை குறிப்பது போல தோற்றமளிக்கிறது. சிங்காசனத்திலிருந்து பிறந்த சத்தத்திற்கு மறுமொழியாக உலகத்தார் அனைவரும் ஆரவாரிப்பதை இந்த வசனம் காண்பிக்கிறது.
1) திரளான ஜனங்கள் 2) பெருவெள்ளம் 3) இடிமுழக்கம் என்ற இவை மூன்றும் சேர்ந்த ஒருமித்த சத்தம் பெரிதும், மிக உற்சாகமானதுமான விளைவை ஏற்படுத்துவதாக உள்ளன.

1. **திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும் :**

(இது "திரள் கூட்டத்தார்" என நாம் வழக்கமாக குறிப்பிடும் தோழி வகுப்பாரைக் குறிக்காது). இது "பூமியில் வாசம் பண்ணுகிறவர்கள்" என்று முன்பு குறிப்பிடப்பட்டுள்ள கூட்டத்தாரைக் குறிப்பனவாக உள்ளது. புதிய பூமியில் தாங்கள் வேரூன்றப் போவதற்கு தங்களை இறுதியாக தயார் நிலைக்கு தகுதியாயிருப்பார்கள்.

2. **பெரு வெள்ள இரைச்சல் போலவும் :**

"சமுத்திரம்" என்று அடையாள பாஷையில் குறிக்கப்படும் "அமைதியற்ற ஜனசமுதாயம்" இவர்களே. அதாவது, "ஒவ்வொரு கோத்திரத்தார், பாஷைக்காரர், ஜாதிகள்" என்று முன்பு அறியப்பட்டவர்களை இது குறிக்கிறது. "சமுத்திரமும் இல்லாமற் போயிற்று" என வெளி 21 : 1ல் சொல்லப்படும்விதமாக, இந்த பிரிவினர் ஸ்திரத் தன்மை பெறும் நிலையை அடைகிறார்கள்.

3. **பலத்த இடி முழக்கம் போலவும் :**

இது முற்பிதாக்களைக் குறிக்கிறது. "இடி முழக்கம்" என்பது சர்ச்சைகளை (ஆட்சேபனைகளை) அடையாளப்படுத்துகின்றன. முற்பிதாக்களில் பரிசுத்தவான்கள் பலர் இருந்தாலும், சிலர் தம் வாழ்க்கையில் சர்ச்சைக்குரிய அளவில் வாழ்ந்துள்ளனர். எல்லா சர்ச்சைகளையும் சமரசம் பண்ணும் மத்தியஸ்தர்களாக, இந்த முற்பிதாக்கள் இப்பூமியில் பிரபுக்களாக இருப்பார்கள். சங் 45 : 16; இந்த கருத்து யோபு 39 : 25ல் படைத்தலைவர்களின் (முற்பிதாக்களின்) ஆர்ப்பரிப்பு என்று குறிப்பிடுவதில் வலுபெறுகிறது. இந்த படைத்தலைவர்கள் (பிரபுக்கள்) கட்டளைப் பிறப்பிக்கும் பொழுது, படைகள் துவக்கத்தில் புரிந்து கொள்ள இயலாமல் மாறுபாடாக (ஆட்சேபிக்கும் வகையில்) இருப்பார்கள். இயேசு தம் இரண்டு சீஷர்களை "இடி முழக்கத்தின் மக்கள்" என பெயரிட்டார். இது, அவர்களது நிலைமை சர்ச்சைக்குரியதாயிருந்தாலும் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு தனித்து இயங்க அவர்கள் விருப்பங்கொண்ட நிலையை உணர்த்துவதைப் போல இந்த பெயர் இருந்தது. (மாற்கு 3 : 17).

**அல்லேலுயா, தேவனாகிய கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் :**

இது **நான்காவது** அல்லேலுயா ஆகும். "நான்கு" என்ற எண் "உலகளாவிய" **(universal)** என்று பொருள்படும். அதாவது, தேவனை துதி செய்வது உலகளாவிய அளவில் நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

“தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்” என்ற செய்தி பரலோகத்தை பிரதானமாக சம்பந்தப்படுத்துவதாக இருந்தாலும், பூலோகத்திலிருப்பவர்களுக்கு இது எண்ணிலடங்காத அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக உள்ளது. யுகங்கள் முழுமையிலும் வேண்டிக் கொள்ளபட்ட எதிர்பார்ப்புகளுக்கு இப்பொழுது நமக்கு கண்ணெதிரே பதில் கிடைத்துள்ளது. வெளி 11 : 15 - 17ல் குறிப்பிட்டுள்ளபடி, இராஜ்யம் பற்றிய இந்த செய்தி பல வருடங்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தாலும், ஒரு சிலர் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது; இப்பொழுது எல்லோரும் அறிகிறார்கள் !

**வெளி 19 : 7.**

வெளி 19 : 5ம் வசனத்தின் சிங்காசனத்திலிருந்து வந்த சத்தம் பிறப்பித்த “தேவனைத் துதியுங்கள்“ என்ற கட்டளையைத் தொடர்ந்து, 6ம் வசனத்தில் பெருமகிழ்ச்சியின் ஆரவாரம் ஏற்பட்டது. இது ரோமர் 8 : 19ன் நிறைவேறுதல் ஆகும். **யேகோவாவை** துதி செய்த பின், எல்லோரின் கவனமும் இயேசுவின் பால் ஈர்த்தது. கிறிஸ்துவே மத்தியஸ்தரும், மீட்புமானவர். (ஒபதியா 21)...

**நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து :**

மத்தியஸ்தராகிய கிறிஸ்து உலகத்தாருக்காக இரக்கம் கொள்வார். இதுவே அவர்கள் சந்தோஷம் அடைவதற்கான காரணம் ஆகும். “கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்த களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். இத்தகைய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும். சந்தோசமும், மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். என்று ஏசாயா 35 : 10 ல் இந்த களிப்பைப் பற்றி விவரிக்கிறார்.

**அவருக்கு துதி செலுத்தக்கடவோம் :**

இது தேவனுக்கு செலுத்தப்படும் துதி. இது பொருத்தமானதாகும். தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பவர். (1 கொரி 15 : 28). உலக மக்களின் பார்வையில் தேவனுக்கு மகிமை செலுத்தும்படி செய்வது மத்தியஸ்தரின் பிரதான பணியாகும்.

சினாய்டிக் பிரதியில் “அவர்களுக்கு துதி செலுத்தக்கடவோம்” என்று காணப்படுகிறது. அப்படியானால்,“மணவாட்டியையும், மணவாளனையும்” குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், 6ம் வசனத்தின் சூழ்நிலை பொருத்தத்தைக் காணும்போது, “தேவனுக்கு துதி செலுத்தக்கடவோம்“ என்பது சரியாகத் தோன்றுகிறது.

**ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது :**

கிறிஸ்துவின் சரீரம் முழுமை அடைந்தது என்ற உண்மை இதுவே ! தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடு காத்திருந்தது இதற்காகவே !

**அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன் :**

உலகத்தாரால் அசட்டை பண்ணப்பட்டு, புறக்கணிப்பு செய்யப்பட்ட மணவாட்டியாகிய திருச்சபையினர், இப்பொழுது மேன்மை மிகுந்த பதவி பெற்று செயல்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்ற செய்தியை உலகத்தாரே அங்கீகரிக்கிறார்கள்.

**வெளி 19 : 8 .**

**சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதிகளே.**

**மணவாட்டிக்கு கிடைத்த வெற்றியும் அதன் காரணமாக பெறும் உரிமையினால் இந்த வஸ்திரம் அவளுக்கு கிடைத்தது. “மெல்லிய வஸ்திரம்” என்பது பரிசுத்தவான்களின் நீதிகளைக் குறிக்கிறது. “சுத்தமும், பிரகாசமுமாக இருப்பது” என்பது, உலகத்தார் மணவாட்டியின் நீதிகளை தெளிவாக புரிந்து, உணர்ந்து கொள்வதைக் காட்டுகிறது .**

வெளி 19 : 9.

**பின்னும் அவன் என்னை நோக்கி :**

இங்கு "அவன்" திடீரென்று எங்கிருந்தோ வருவதாகத் தோன்றுகிறது ! ஆனால், நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, வெளி 19 : 1 - 10 வசனங்கள், 18ம் வசனத்தின் தொடர்ச்சியே ஆகும். வெளி 18 : 4ல் குறிப்பிட்டுள்ள "சத்தம்" **அவனுடையதே !** இவன் தான் வெளி 17 : 1ல் குறிப்பிட்டுள்ள தூதன். இந்த தூதன் வெளி 18 : 4ம் வசனத்திலும், அதைத் தொடர்ந்து வெளிப்படுத்தலாகமத்தின் மீதியான பகுதிகளிலும் யோவானுக்கு (யோவான் வகுப்பாருக்கு) துணையாகவும், பயிற்றுவிக்கிறவனுமாயிருக்கிறார். இந்த "தூதன்" ரசல் என்ற ஏழாம் தூதன் ஆவார். சபைக்கு தம் எழுத்துக்கள் வாயிலாக தூது அளித்தவர் இவரே !

**ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான் :**

7ம் வசனத்தில் மணவாட்டி சபையினரை அழுத்தமாக விவரித்து, 8ம் வசனத்தில் யோவானின் விளக்கத்தைத் தொடர்ந்து, சுவிசேஷ யுகத்தின் மற்றுமொரு வெளிப்பாடாக, ஆவிக்குரிய மற்றொரு பிரிவினரான "திரள் கூட்டத்தார்" பற்றி மறக்காமல் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் என்று ஏழாம் தூதன் வலியுறுத்துகிறார். இந்த "திரள் கூட்டத்தார்" மட்டுமே பெருமகிழ்ச்சி பற்றிய விவரிப்புகளில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், வெளி 19 : 1ம் வசனத்தின் "பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டத்தில்" இவர்களும் அடங்குவர் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாகத் தெரிகின்றது.

**அழைக்கப்பட்டவர்கள் :** இது தெய்வீக அழைப்பு; மகா கனம் பொருந்தியது.

**பாக்கியவான்கள் :** உண்மையில் இந்த "திரள் கூட்டத்தார்" பாக்கியவான்கள். அவர்கள் கண்ணீர் துடைக்கப்படுகின்றது. தேவனுடைய திட்டத்தை செயற்படுத்துவதில் இது ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த திரள் கூட்டத்தாரையல்லாமல், மேலும் ஒரு ஆவிக்குரிய வகுப்பாரை, தீமை அனுமதிக்கப்பட்ட இவ்வுலகத்திலிருந்து மறுபடியும் உருவாக்குதல் என்பது சாத்தியப்படாது.

**ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு :**

விருந்துக்கு அழைக்கப்படுபவர்கள் "மணவாட்டியின் அங்கமாக" அல்ல. சங்கீதம் 45 : 14, 15ல் குறிப்பிட்டுள்ளபடி, இந்த "திரள் கூட்டத்தார்" மணவாட்டிக்குப் பின்னாலே செல்லும் தோழிகளாகிய கன்னிகைகள் ஆவர். "கலியாண விருந்து" என்பது, கலியாணத்தின் பலன்களை செயல்படுத்துவதில் பங்கு பெறுவதை அடையாளப்படுத்துகிறது. அதாவது, மத்தியஸ்த தன்மை வாய்ந்த ராஜரீகத்தின் ஆசீர்வாதம் வழங்கும் நிர்வாகத்தை செயற்படுத்துவதில் பங்கு பெறும் நிலையைக் குறிக்கிறது. கலியாணத்தின் போது விருந்துண்பது மேன்மைக்குரிய காரியம் ஆகும். சிலுவை மரணத்தின் மேன்மையான பலன்களை செயற்படுத்துவதை "பஸ்கா விருந்து கொண்டாட்டத்தில்" சுவிசேஷ யுகத்தில் பங்கு பெறுவதற்கு ஒத்த விதமாக, இந்த கலியாண விருந்தின் பலன்களை செயற்படுத்தும் நோக்கில் திரள் கூட்டத்தார் பங்கு பெறுகிறார்கள்.

**மேலும், இவைகள் தேவனுடைய வசனங்கள் என்று என்னுடனே சொன்னான் :**

"திரள் கூட்டத்தார்" பிரிவினரைப் பற்றிய சத்தியங்களை யோவான் வகுப்பாருக்கு இந்த ஏழாம் தூதன் தெரிவிக்கிறார்.

**இவைகள் தேவனுடைய வசனங்கள் :**

"திரள்கூட்டத்தார்" பற்றிய சத்தியம் தெளிவில்லாததும், கருகலானதுமாயும் உள்ளது. இது சம்பந்தமான கொள்கையினை புரிந்து கொள்வது மூலம், மணவாட்டி ஆவதற்குரிய மேலான தகுதிகளை நாம் சரியாக அறிந்து கொள்ள உதவுகிறது. பரலோக வெகுமதிக்காகப் போராடும் எண்ணிலடங்காத நபர்களில், 1,44,000 பேர்கள் மட்டும் மணவாட்டி வகுப்பாராக (சிறு மந்தையாக) ஆவார்கள் என்ற சத்தியத்தைக் குறித்து பல்வேறு ஆட்சேபனைகள் நீக்கம் பெற, "திரள் கூட்டத்தார்" பற்றிய சத்தியம் வெகுவாக உதவுகிறது.

**வெளி 19 : 10.**
**அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன் .**

இது முழு மரியாதையையும், அர்ப்பணிப்பையும் வெளியரங்கப்படுத்தும் விதமாக உள்ளது. ஆனால், இது **“தவறான செயல்”** ஆகும். தூது அனுப்பியவரை வணங்காமல், தூதனை யோவான் வகுப்பார் வணங்க முயற்சிக்கின்றனர். இந்த வணக்கம் மறுபடியும் இரண்டாவது தடவையாகவும் நடக்கிறது. (வெளி 22 : 8, 9). இரு முறை நடந்த இந்த விஷயம் அனுமானத்திற்கும், அக்கறையுடன் அணுகும் விதத்திலும் உள்ளது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தூதன் வாயிலாக ஆச்சரியப்படத்தக்க விஷயங்களை யோவான் அறிந்து கொண்ட பிறகு நடக்கின்றன. இது எதைக் குறிக்கிறது ? யோவான் வகுப்பாரில் ஒரு பகுதியினருக்கும்,, ஏழாம் தூதனாகிய ரசல் வாழ்ந்த காலத்திலும், இப்பொழுதும் இருக்கிற மற்றவர்களுக்கும் இது ஒரு நினைப்பூட்டுதலாக உள்ளது. தூதனாகிய ரசல் அவர்களையும், அவருடைய எழுத்துக்களையும் சரிவர கணிக்காமல் (மதிப்பிடாமல்) தவறாகப் பிரயோகப்படுத்தினால் இயேசுவின் பாதுகாப்பை நாம் பெற இயலாது.

தூதனின் செய்தியை மெச்சி, ஏற்றுக்கொள்வது வேறு; தூது சொல்லும் தூதனை வழிபாடு செய்வது வேறு. இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**அவன் என்னை நோக்கி, இப்படி செய்யாதபடிக்குப் பார் :**

நாம் இப்படிச் செய்தால், தூது அனுப்பிய கர்த்தராகிய கிறிஸ்துவையும், தூதை ஒப்படைத்த மனுஷனையும் நாம் மறுதலித்தவர்களாகிறோம்.

**உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன் :**

“உன்னோடும் உன் சகோதரரோடும்” என்பது, “யோவான் வகுப்பாரையும் (சபையையும்), அதன் தோழர்களையும் (திரள் கூட்டத்தாரையும்) குறிக்கின்றன. “இயேசுவைக் குறித்து சாட்சியிட்ட” என்ற விஷயம் முக்கியமானதாகும். ரசல் சகோதரர், வேதாகமத்தை அதாவது இயேசுவைக் குறித்த சாட்சியைக் கொண்டிராதவர்களுக்கு அவர் ஊழியஞ் செய்யவில்லை.

**தேவனைத் தொழுது கொள் :** இந்த உபதேசம் விலையேறப் பெற்றது.

**இயேசுவைப் பற்றின சாட்சி :**

அவரைப் பற்றி சொல்வதும், அவருடைய வசனங்களை நம் இருதயத்தில் வைத்து, நம் வழிகளில் கைக்கொள்ள வேண்டும்.

**தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது :**

தீர்க்கதரிசனத்திற்கு உயிரையும் மூச்சையும் கொடுத்து ஜீவனுடையதாக்குகிறது. இயேசுவைக் குறித்த இந்த சாட்சி நம் வார்த்தைகளிலும் வாழ்விலும் பரவி விடுகிறது.

## வெளி 19 : 11 - 21.

### மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி - அழிவு

வெளி 19 : 11 - 21ம் வசனங்கள், 20ம் அதிகாரத்தின் துவக்கத்தில் இருந்திருந்தால் பொருத்தமாயிருக்கும். ஒரே பொருளைப் பற்றி சொல்லப்படும் விஷயமாயிருப்பதினால் மட்டுமல்ல; ஏற்கனவே நமக்கு அறிமுகமான மூன்றில் இரண்டு பாத்திரங்களின் (1. மிருகம் 2. கள்ளத்தீர்க்கதரிசி) அழிவைப் பற்றி வெளி 19 : 11 - 21ம் வசனங்கள் விவரிக்கின்றன. மூன்றாவது பாத்திரமாகிய (வெளி 20 : 1 - 3; 7 - 10) "வலுசர்ப்பம், பழைய பாம்பு, பிசாசு, சாத்தான்" பற்றி நாம் ஏற்கனவே வெளி 16 : 13; 12 : 9; 13 : 2; 13 : 11ம் வசனங்களில் படித்திருக்கிறோம். இந்த மூன்று பாத்திரங்களின் தொடர்பினை நாம் கூர்ந்து கவனிக்கத் தவறி விட்டால், 20ம் அதிகாரத்தின் வலுசர்ப்பம், உண்மையான பிசாசு என தவறாகப் புரிந்து கொள்வோம்.

வெளி 19 : 11 - 21ம் வசனங்கள், பழைய பாபிலோனிய அமைப்பின் அழிவைப் பற்றி மறுபடியும் (இறுதியாக) சொல்லப்படும் ஒரு பார்வை கோணம் ஆகும். இதற்கு முன்னால் பல்வேறு நோக்குகளில் விவரிக்கப்பட்டவைகளை உள்ளடக்கிய ஒரு பெட்டகம் என இந்த வசனங்களை சொல்லலாம். பாபிலோனின் விழுகையைப் பற்றி மேலும் அறிவதற்கு உதவியாக மற்ற தீர்க்கதரிசனங்களின் தொடர்புகளை இந்த வசனங்கள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

வெளி 19 : 11ம் வசனத்திலிருந்து ஒரு புதிய அதிகாரம் (விவரிப்பு) துவங்குகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இங்கு விவரிக்கப்படுகிற உபத்திரவங்கள், வெளி 19 : 1 - 10ம் வசனங்களிலுள்ள பெரு மகிழ்ச்சியான ஆரவாரத்தைத் தொடர்ந்து நடப்பவை அல்ல !

வெளி 19 : 11 - 21ல் யோவானுடைய வழக்கமான கவன ஈர்ப்பு வார்த்தைகளால் ("பின்பு நான் கண்டேன்.....") பிரிக்கப்படும் மூன்று காட்சிகளை (11, 17, 19ம் வசனங்கள்) நாம் பார்க்கிறோம். இந்த பிரிவுகளை நாம் கவனத்தில் கொள்வது அவசியம் ஆகும். நாம் காட்சிகளை சரியாகப் புரிந்து கொள்ள இந்த பிரிவுகள் முக்கியமானவை. இவற்றை கீழ்கண்டவாறு மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆராய்வோம்.

1) ராஜா
2) பறவைகள்
3) மிருகங்கள்

### ராஜா
### வெளி 19 : 11 - 16.

**வெளி 19 : 11 .**
**பின்பு , பரலோகம் திறந்திருக்க கண்டேன் :**

யோவான் வகுப்பார் எப்பொழுது பரலோகம் திறந்திருக்கக் கண்டார்கள் ? (ஆவிக்குரிய வெளிச்சம் எப்பொழுது ஏற்பட்டது ?) இது அறுவடை காலத்தின் ஆரம்பத்தில் தான் ! இவ்வாறாக, பாபிலோன் அழிவு பற்றிய ஒட்டுமொத்த பார்வை கோணம் சகோ. ரசல் காலத்தில் ஆரம்பமானது.

**இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது :**

"இதோ" என்ற சொல். ஒரு கருத்தார்ந்த விஷயம் வெளிப்படப் போவதை உணர்த்துகிறது. வெள்ளைக் குதிரையைப் பற்றி நாம் ஏன் ஆழ்ந்து ஆராய வேண்டும் ? எபேசு சபைக்குப் பிறகு (வெளி 6 : 2), முதன் முறையாக இப்பொழுது தூய உபதேசங்களாகிய களங்கமில்லாத போதகங்களை (வெள்ளைக் குதிரையை) சந்திக்கிறோம். இது ஒரு அரிய காட்சி ! தூய்மையான போதகங்கள் இந்த யுக முடிவில் திரும்ப நிலை நாட்டப் படுவதைத் தொடர்ந்து,

1) சபை முழுமை பெறுகிறது;
2) பாபிலோனுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் ஆயுதமாக சத்தியம் செயல்படுகிறது.

யுக முடிவிலிருக்கும் நாம் எதேச்சையாக இந்த **சத்தியத்தை** எவ்வித தடையுமில்லாமல் பெற்றிருக்கிறோம் என்று அர்த்தமல்ல. நாம் வெள்ளைக் குதிரையை உற்று நோக்குகிறோம்.

**அதின் மேல் ஏறியிருந்தவர் :**

சத்தியத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவரை நாம் கவனிக்கிறோம். இரண்டாம் வருகையில் இயேசு, புதிதாக சீரமைக்கப்பட்ட தூய போதகங்களின் பிரயோகப்படுத்துதல் குறித்த கட்டுப்பாட்டினை முழுவதுமாக தம் வசம் கொண்டுள்ளார். அவருடைய பிரசன்னத்தை மட்டும் நாம் நோக்குபவர்களாக இல்லாமல், அவருடைய நாமத்தையும், நோக்கங்களையும் உற்றுப் பார்க்கிறோம்.

**உண்மையும் சத்தியமுள்ளவரென்னெப்பட்டவர் :**

இயேசுவைப் பற்றி சொல்லப்படும் இந்த மேற்கோள், லவோதிக்கேயா சபையின் துவக்க செய்தியிலும் (வெளி 3 : 14ல்) காணப்படுகிறது. இவ்விதமாக, பரலோகம் திறக்கப்படுவதும், தூய்மையான போதகங்களை அடையாளப்படுத்தும் வெள்ளைக் குதிரையும், மறுபடியும் திரும்ப வந்த கர்த்தர் குதிரையின் மேல் ஏறியிருப்பதும், "உண்மையும் சத்தியமுமுள்ளவர்" என்ற இவை அனைத்து சம்பவங்களும் கி.பி. 1870ம் ஆண்டுகளில் நடக்கிறதை இந்த வசனம் காட்டுகிறது.

**அவர் நீதியாய் நியாயந்தீர்த்து :**

இயேசுவின் இரண்டாம் வருகையின் முதல் பணி 40 வருட நியாயத்தீர்ப்பு (கி.பி. 1874 - 1914). "40 வருடங்கள்" என்ற முழுமையான காலப்பகுதி "தீர்ப்பு" அல்லது "சோதனை"யை அடையாளப்படுத்துகிறது. இந்த "தீர்ப்பு" அறுவடையின் முதற் பகுதி ஆகும். இரண்டாம் பகுதி இதைப் பின் தொடரும்.

**யுத்தம் பண்ணுகிறார் :**

இந்த யுத்தம் கி.பி. 1914ல் துவங்கியது. அது இன்னும் தொடருகிறது. பாபிலோன் தீர்ப்பில் தோல்வி அடைந்ததால் யுத்தத்தை சந்திக்க நேர்ந்தது. கொள்ளை நோயாக இந்த பகைமை, ஆலையில் மிதிக்கப்படுவதுடன் முற்று பெறும்.

**வெளி 19 : 12 .**
**அவருடைய கண்கள் அக்கினி ஜூவாலையைப் போல இருந்தன :**

"கண்கள்" ஞானத்தைக் குறிக்கும். "அக்கினி" தீர்ப்பை அடையாளப் படுத்தும். அதாவது, இயேசு பூரணமான தீர்ப்பின் ஞானமாக விளங்குகிறார் என்பதற்கு சாட்சியாக இந்த காட்சி வெளிப்படுகிறது.

**அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன :**

யுத்தத்தில் விழுந்து போகும் ராஜாக்களின் கிரீடங்களின் உரிமை இயேசுவைச் சேருகிறது என்பதை வெளி 11 : 15ல் படிக்கிறோம். "அப்பொழுது உலகத்தின் ராஜ்யம் (ஒருமையில்) நம்முடைய கர்த்தருக்கும் கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யமாயின." எல்லா ராஜ்யங்களின் மேலும் அதிகாரம் பெறுபவராக இயேசு திகழ்கிறார்.

**அவருக்கேயன்றி வெறொருவருக்குத் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது :**

இந்த சொற்றொடர் வெளி 2 : 17ல் கூறப்பட்டவைகளுக்கு முற்றிலும் இணையாக, அதே பொருள்படும்படியாக உள்ளது. ஜெயங்கொள்ளுகிறதினால் அழியாமையையும், அதன் தொடர்பான சகல சிறப்புரிமைகளையும் இயேசு பெற்றுக் கொண்டார். நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை கொண்டிருக்கிறார். இவர் தேவனுடன் நேர்முக உறவைக் கொண்டுள்ளார். இது தேவனுக்கும் இயேசுவுக்குமுள்ள, மற்றவர்களுக்குப் புலப்படாத தனிப்பட்ட தொடர்பு ஆகும். இத்தகைய உறவைத் தான் 1,44,000 பேர்களடங்கிய சிறு மந்தையின் ஒவ்வொரு அங்கமும் பெறுகிறது. இத்தகைய உறவு யாருடனும் பங்கிட முடியாத தனிப்பட்ட ஒன்றாகும்.

"நாமம்" என்பது தன்மையை ( பண்பு ) குறிக்கிறது.
இயேசு "தேவனுடைய வார்த்தை" (வெளி 19 : 13), "ராஜாதி ராஜா" , "கர்த்தாதி கர்த்தா" (வெளி 19 : 16) என பல நாமங்கள் உடையவராயிருந்தாலும், வெளி 19 : 12ல் காணப்படும் "நாமம்" தனிப்பட்ட ஒன்றாகும்.

**வெளி 19 : 13.**
**இரத்தத்தில் தோய்க்கப்பட்டிருந்த வஸ்திரத்தைத் தரித்திருந்தார் :**

"வஸ்திரம்" என்பது "உரிமையை மெய்ப்பித்தல்" என பொருள்படும். "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம்" என்று ஏசாயா 63ம் அதிகாரத்தில் உள்ள சம்பவத்தைக் குறிப்பதில்லை. ஏனெனில் ஏசாயா அதிகாரத்தில் சொல்லப்படுவது, ஆலையில் மிதித்துவிட்டு **திரும்பி வரும்** நிலையைக் குறிக்கிறது. "இரத்தத்தில் தோய்க்கப்பட்டது" என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது, அழிப்பதற்காக **அவர் மேற்கொண்டிருக்கும் செயலுரிமையை** (பொறுப்புள்ள பணியை) அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

பெரிய ஆலையில் மிதிக்கப்படுவதினால் ஏற்படும் சங்காரத்தினை ஏசாயா 63, வெளி 14 : 20 மற்றும் வெளி 19 : 15ல் படிக்கிறோம். இரத்தம் தெறிக்கப்பட்டு வஸ்திரம் சிவப்பாகும் நிலையை இது உணர்த்துவதாக உள்ளது.

**அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே :**

நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு பல நாமங்கள் இருந்தாலும், இந்த நாமத்தை இந்த கட்டத்தில் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் உள்ளது. லவோதிக்கேயா சபையின் காலப்பகுதியில் "திருத்துவம்" என்ற கொள்கை பேதம் பிரதான அம்சமாயிருந்ததை வெளி 3 : 14ம் வசனம் அழுத்தமாகத் தெரிவிக்கிறது. இயேசு தம்மை தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர் என்று வெளிப்படுத்துகிறார்.

இயேசு தற்காலத்தில் பாபிலோனை உபத்திரவப்படுத்தி, அழித்துக் கொண்டிருக்கிறார் என்பதை எத்தனை பேர் அறிவார்கள் ? அவரை அறிந்த வெகு சிலருக்கே இது தெரியும் ? "தேவனுடைய வார்த்தை" என்று இயேசுவை அழைக்கும் அவருடையவர்கள் தான், தற்காலத்தின் உபத்திரவங்களையும், அவற்றிற்கான

காரணங்களையும், பின் விளைவுகளையும் புரிந்து கொள்வார்கள். இந்த 13ம் வசனத்தின் விவரிப்பு நம் அறிவை உறுதிப்படுத்தி நம் இதயங்களுக்கு ஆறுதலளிப்பவைகளாக உள்ளன. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை அணிந்தவர் யார் ?, அவர் ஏன் அப்படி காட்சியளிக்கிறார் ? அவருடைய உண்மையான அடையாளம் (தனித்துவம்) என்ன ? என்பவற்றை நாம் நன்கு அறிவோம். ஆனால்,கிறிஸ்தவ மத உலகத்தில் இந்த அறிவு நுட்பம் காணக் கிடைக்காத ஒன்று ! **வார்த்தை (லோகோஸ்)** என்பது வெறும் சொல் அல்ல என்பதும், பல விஷயங்களை உள்ளடக்கிய **திட்டம்** என்பதையும் அறிவோம். பரலோகம் திறக்கப்பட்டு, வெள்ளைக் குதிரையைக் கண்டதும், தெய்வீக கிருபையும், இரக்கமும் அடங்கிய **திட்டத்தை** நாம் அறிந்துணருகிறோம்.

வெளி 19 : 11 - 13ம் வசனங்களில் புதிய ராஜாவைப் பற்றியும், அவருடைய பண்புகளையும், நோக்கத்தையும் வரலாற்றில் அவருடைய தனித்துவத்தையும் அறிந்தோம்.

**வெளி 19 : 14.**

**பரலோகத்திலுள்ள சேனைகள் :**

"பரலோகம்" என்பது இங்கு சொல்லர்த்தமாகவும், அடையாளப் படுத்தியும் (பூலோக மத உலகத்தை) இரண்டு விதமாக உள்ளது. "சேனைகள்" என்று பன்மையில் சொல்லப்பட்டிருப்பது, 140 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் அறுவடை காலப்பகுதி முழுமையையும் குறிக்கிறது. திரைக்கு **இரு பக்கங்களிலும்** கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஊழியஞ் செய்கிறார்கள்.

[ இதற்கு மாறாக, வெளி 19 : 19ல் நமது கர்த்தருடைய சேனை ஒருமையில் கூறப்பட்டுள்ளது. ஏனெனில், இக்காட்சியில் எல்லோரும் திரைக்கு அப்பால் சென்று விட்டதைக் குறிக்கிறது ] .

**வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய் :**

பரிசுத்தவான்கள் தம் தலையாகிய கிறிஸ்துவுடன் பாபிலோனுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் பழி வாங்கும் நோக்கத்துடன் செயலாற்றவில்லை. தெய்வீக நீதியை நிலை நாட்டும் உள் நோக்கம் கொண்டவர்களாய் செயல்படுவதை, "வெண்மையும் சுத்தமும்" என்று இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது. நீதிமான்களாக்கப்பட்டவர்களாய் மகிமை அடைந்த நிலையிலிருக்கும் பரிசுத்தவான்களும், மாம்சீக சரீரத்தில் இருந்து கொண்டு கிறிஸ்துவின் நீதியை தம்மில் தரித்து நீதிமான்களாக்கப்படும் நிலையிலிருப்பவர்களும் மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாயிருப்பதை அடையாளப்படுத்தப்படுகிறது.

**வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள் :**

தவறான கொள்கை பேதங்களை நிவர்த்தி செய்யும் தீர்ப்பின் ஆயுதம் சத்திய வேதமே. ஒவ்வொரு பரிசுத்தவானும் தனித்தனியாக வெள்ளைக் குதிரைகளில் செல்லவில்லை. சுத்தமான கொள்கையைக் குறிக்கும் ஒரே வெள்ளைக் குதிரை உள்ளது. அதன் மேல் ஒவ்வொரு பரிசுத்தவானும் தனியாக சவாரி செய்கின்றனர். எல்லா தீர்க்கதரிசனங்களும் தவறான போதகங்களை வெளிப்படுத்துவது தான் பாபிலோனிய கப்பலை மூழ்கடையச் செய்கிறது.

**வெளி 19 : 15 .**

**புற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது .**

2தெச 2 : 8ம் வசனத்தின் நிறைவேறுதலாக, **அவருடைய வாயிலிருந்து** செய்தி வெளிப்படுகிறது. அவர் ராஜாவின் அந்தஸ்தில் சக்திமிக்க பிரகடனங்களையும், பழிப்புரைகளையும், கட்டளைகளையும், தீர்ப்புகளையும் இடுகிறார். வேதாகம சத்தியம் என்ற பட்டயத்தினால் பாபிலோனை நியாயந்தீர்க்கவும்,

அழிக்கவும் செய்வதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. சத்தியங்களினால் நிலை குலைந்து பாதிக்கப்படுவது பாபிலோன் மட்டுமல்ல. இந்த சத்தியங்கள் பரவுவதினால் பூமியில் வாசம்பண்ணுவோர் அனைவரும் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். அவர்கள் இதுகாறும் நம்பியிருந்த அடிப்படை எண்ணங்களும் நம்பிக்கைகளும் ஆட்டங்காணும்.

**இருப்புக்கோலால் அவர்களை ஆளுவார் :**

சொல்லர்த்தமாகப் பார்த்தால், “அவர் அவர்களை மேய்ப்பார்” என்று பொருள்படும். இயேசுவின் உண்மையான நோக்கம் இதில் தெரிகிறது. இந்த உலகத்தின் ஜனங்களை அவர் அடிப்பதில்லை. மனுக்குலத்தின் தவறிப் போன ஆடுகளுக்கு, மேய்ப்பர் ஒருவர் இருக்கிறார் என்பதும், அவர் அந்த ஆடுகளின் கவனத்தை கடுமையான முறையில் ஈர்த்தாலும், முடிவான குறிக்கோளாக ஆசீர்வாதம் அளிப்பதையே தம் மனதில் கொண்டுள்ளார். இந்த ஆசீர்வாதங்கள் கிடைக்கப் பெறுவதற்கு முன்பாக, உலகத்தாரின் மனங்களை விஷமாக்கிய போலி மதங்களை அவர் அழித்து, அகற்ற வேண்டியுள்ளது.

**அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் :**

இந்த சிறப்பு அம்சத்துடன் அறுவடை காலப்பகுதி முடிவடையும். இது முடிவுறும் போது பாபிலோன் முற்றிலும் மறைந்து விடும். அவளுடைய “திராட்சைப்பழங்கள்” முழுவதும் பழுத்த நிலையை அடைவதற்காக இயேசு காத்திருந்தார். (வெளி 14 : 18). இந்த மாசுபட்ட திராட்சைப்பழங்களை சாப்பிட்டவர்கள் சலிப்படைந்து, பகைத்து அவளுக்கு எதிராக கிளம்பியதை வெளி 17 : 16ல் படிக்கிறோம். இந்த செயலைத் தான் “தேவனுடைய உக்கிரம்” என்ற பெயரில் ஏசாயா 63ம் அதிகாரத்தில் விவரிக்கப்படுகிறது. தேவனுடைய கோபத்தின் இறுதி அம்சம் இதுவே ! (வெளி 15 : 1).

தேவனுடைய கோபம் வளர வளர, அது பெருகி உக்கிரமமாக அறுவடை காலத்தில் மாறுகிறது. வாதைகளின் இறுதிக் கட்டத்தில் “பெரிய ஆலையில்” திராட்சைப்பழங்கள் மிதிக்கப்படுவதே உபத்திரவங்களில் மிகவும் பயங்கரமானதாகும். எசேக்கியேல் 38 : 18; ஏசாயா 42 : 14).

**வெளி 19 : 16.**
**ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப் பட்டிருந்தது .**

இங்கு சொல்லப்பட்டிருக்கும் “நாமம்”, புதிய எல்லா அதிகாரங்களையும் **(யேகோவாவைத் தவிர)** இயேசு உடையவராயிருக்கிறார் என்பதை தெளிவாக உணர்த்துகிறது. அவரை எதிர்க்கும் எல்லோருக்கும் அவர் நியாயந்தீர்க்க முயல்வதை வெள்ளைக் குதிரையின் மேல் ஏறியிருக்கும் காட்சி அடையாளப்படுத்துகிறது.

அவருடைய நாமம் வஸ்திரத்திலும், தொடையிலும் ஏன் காணப்படுகிறது ?

“வஸ்திரம்” என்பது அதை அணிந்து கொண்டிருப்பவரின் அந்தஸ்தை வெளிப்படுத்துகிறது. அவர் தாம் மேற்கொள்ளும் செயலை செய்வதற்குரிய தகுதியை நியாயப்படுத்துவதாக “வஸ்திரம்” உள்ளது. ஆகவே, இரத்தத்தினால் தோய்க்கப்பட்டுள்ள வஸ்திரத்தை அணிபவராக இங்கு சொல்லப்படுவது அவருடைய பிரத்தியேக அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது. ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறவர், தம்மை எதிர்ப்பவர்களின் இரத்தத்தை சிதறடிக்கும் உரிமை பெற்றவராயிருக்கிறார்.

"வஸ்திரம்" அவருடைய பதவியைக் குறிக்கிறது; ஆனால், அவருடைய நாமம் வெறும் பதவியை மட்டுமல்லாமல், தனி நபரையும் குறிப்பதாக உள்ளது. அதாவது, வஸ்திரத்தை அணிந்திருப்பவரின் தனித்துவமான பண்பையும் நியாயப்படுத்துவதாக உள்ளது. கால் (தொடை) என்பது ஒரு மனிதனின் "சக்தி"யைக் குறிக்கிறது. (சங் 147 : 10; லேவி 7 : 32, 33; 8 : 25, 26; 9 : 21). ஜெயங்கொண்டதினால் கிடைத்த பதவியின் மூலம் அவர் பெற்ற வல்லமையை "தொடையில்" இருந்த நாமம் அடையாளப்படுத்துகிறது.

ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலின் அம்சமாக தொடையின் மேல் ஆணையிடும் சம்பவத்தை ஆதி 24 : 2, 9; 47 : 29ல் படிக்கிறோம். உடன்படிக்கையின் தூதனாக இயேசு வருகிறதால் (மல்கியா 3 : 1 - 3), அவருடைய நாமம் "ராஜாதி ராஜா" என்று குறிக்கப்பட்டிருப்பது, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் காண்பிக்கிறது. இது சம்பந்தமான மேலும் சில விவரங்களை யாக்கோபு தூதனுடன் போராடும் சம்பவங்களில் அறியலாம். (ஆதி 32 : 25, 31, 32; மற்றும் 35ம் அதிகாரம்). யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கியதைப் படிக்கிறோம். இறுதியில் யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றான். இந்தக் காட்சி நியாயப்பிரமாண உடன்படிக்கையின் தோல்வியை காட்டுகிறதா ? ஆனால், இது ஆபிரகாமின் உடன்படிக்கையின் தோல்வியைக் குறிப்பதாக இல்லை. யாக்கோபு இந்த உடன்படிக்கையை மறக்கவே இல்லை. தம்முடைய முயற்சிகளில் விடாப்பிடியாக இருந்ததால் கிடைக்கும் வெற்றியை யாக்கோபு என்ற பெயரின் சொல்லிலக்கணம் அடையாளப் படுத்துகிறது. யாக்கோபுக்கு கிடைக்கப் பெற்ற புதிய நாமம் "இஸ்ரவேல்" என்பது வல்லமையைக் குறிக்கிறது. ஏனெனில், தேவனுடன் அவனுக்கு இருந்த உறவு காரணமாக இந்த நாமம் அவனுக்குக் கிடைக்கிறது. இப்படியாக, "தொடை" என்பது புதிய ராஜாவாகிய இயேசுவில் நிறைவேறும் உடன்படிக்கையின் வல்லமையை அடையாளப்படுத்துவதாக இருக்கிறது.

## பறவைகள்
## வெளி 19 : 17, 18.

வெளி 19 : 11 - 16ம் வசனங்களில் சகோ ரசல் காலத்திலிருந்து ஆலையில் மிதிக்கப்படுவது வரையிலுமான காட்சியைப் பார்த்தோம். அத்துடன், ராஜாவும் அவருடைய சேனைகளும் வருகிறதைப் பார்த்தோம். ஆனால், இப்பொழுது ஒரு முக்கியமான விஷயம் அறிமுகமாகிறது - **"திரள் கூட்டத்தார்"** என்ற பிரிவினர். பெரிய ஆலையில் திராட்சைப்பழங்களைப் போடும் பணியில் உதவி புரிகின்ற கூட்டத்தார் இவர்கள். (வெளி 14 : 17 - 19). "கருக்குள்ள அரிவாளை" பயன்படுத்தி அவர்கள் இந்த வேலையைச் செய்வார்கள். இந்த "திரள் கூட்டத்தார்" மகிமையடையப் போகிறவர்கள். தங்கள் வஸ்திரங்களை தோய்ப்பவர்கள் இவர்களே. இதை அவர்கள் எப்படி செய்வார்கள் ? வெளி 14 : 17 - 19; மற்றும் 19 : 17,18ம் வசனங்களில், இவர்கள் தாம் பெற்ற சத்தியங்களை **மிகுந்த சத்தத்தோடே** அறிவித்து, பாபிலோனினால் அதிருப்தியானவர்களின் மூர்க்கமான கோபத்துக்கு தூண்டுதலாக செயல்படுவார்கள் என்று குறிப்பாக அறிந்து கொள்கிறோம்.

**பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக் கண்டேன் :**

இந்த வசனத்தில் யோவான் தம் வழக்கப்படி, புதிய காட்சிக்கு நம் கவனத்தை ஈர்க்கிறார். (பின்பு கண்டேன்).

**சூரியனில் நிற்கும் தூதன் :**

இது "திரள் கூட்டத்தாரை" குறிக்கிறது; இச்சம்பவம் சபை திரைச்சீலைக்குப் பின்னால் சென்றவுடன் நடக்கிறது.

“சூரியன்” என்பது சுவிசேஷ ஒளியைக் குறிக்கிறது. இது பூலோகத்தைப் பிரகாசிப்பிக்கிறது. இந்த சுவிசேஷ ஒளியில் (சூரியனில்) யார் மீந்திருந்து நிற்கிறார்கள் ? (யார் செயல்படுகிறார்கள் ?) மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்த பரிசுத்தவான்கள், (வெளி 7 : 14) தேவனுடைய திட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாக உள்ளார்கள். நாம் இவர்களை மறந்திருக்கக்கூடாது. இவர்களுக்கு கிடைக்கப் போகும் ஆசீர்வாதத்தைப் பற்றி (ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திற்கு அழைக்கப்படுபவர்கள்) வெளி 19 : 9ம் வசனம் நமக்கு ஞாபகமூட்டுகிறது.

**அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து :**

இந்த பறவைகள் பாபிலோனின் கூட்டுக்குள் (வெளி 18 : 2). சிறையிருந்தவைகள் அல்ல. வெளி 19 : 17ல் குறிப்பிடப்படும் இந்த பறவைகள், தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லி பெயரளவில் இருக்கும் பிரதிஷ்டைக்குட்படாத ஜனங்களை அடையாளப்படுத்துகிறது. போலிக் கிறிஸ்துவத்தைச் சார்ந்தவர்களாய் எளிதாக ஆதாயம் பெறும் பெருங்கூட்டத்தார் இவர்கள். பாபிலோனைப் பற்றிய வஞ்சகமான போதகங்களை அறிந்தவுடன் (சூரியனில் நிற்கும் தூதன் வாயிலாக), கடிவாளம் இல்லாத நிலையில், பாபிலோன் மீது **எரிச்சல்** அடைவார்கள். இந்த பறவைகள் **களைகள்** ஆவர். இந்த களைகளை எரிக்கும் போது, அவர்களுடைய சூழ்நிலைகள் எரிக்கப்படும். வெளி 17 : 16ல் குறிப்பிட்டுள்ள வித்தியாசமான மிருகத்தின் ஒரு பகுதியே இவர்கள். “வேசியின் மாம்சத்தை பட்சிப்பவர்கள்” இவர்களே. அடுத்த வாக்கியம் இதையே தெரிவிக்கிறது.

**வெளி 19 : 18.**
**நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர், அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான் .**

**மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டான் :**

இந்த அழைப்பு, எசேக்கியேல் 39 : 4, 17 - 20ல் காணும் சம்பவத்திற்கு இணையாக உள்ளது. வெளி 14 : 20ம் வசனத்தில், பாபிலோன் தன் பேரழிவை கோகைப் போலவே “நகரத்திற்கு புறம்பே” சந்திக்கிறது. வெளி 14 : 20ல் பாபிலோன் மீது நடக்கும் அழிவும், எசேக்கியேல் 39ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் மீது படையெடுத்து வரும் கோகுவிற்கு ஏற்படும் அழிவும் இணையாக இருப்பதை அறியலாம்.

மகாதேவன் கொடுக்கும் விருந்துக்கு கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்துடன் கூறுவது, “திரள் கூட்டத்தாரின் இறுதி தூது”வின் சுருக்கத்தை அடையாளப்படுத்துகிறது. அதாவது, “பாபிலோன் விழும்; அவளுக்கு விரோதமாக உங்களுக்கு நியாயமான குறைபாடுகள் இருப்பின், அவற்றை நிவர்த்திக்க அவளுக்கு எதிராக எழுந்து செயல்படுங்கள். அவள் மீது பழி வாங்க, உங்கள் பசி ஆற, தேவன் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்” என்று திரள் கூட்டத்தார் இறுதியாக தூது விடுவிக்கின்றனர். வெளி 8 : 1ல் சொல்லப்படும் “பரலோகத்தில் அமைதல்” உண்டான நிலை இப்பொழுது இல்லை. உபத்திரவங்களிலிருந்து வந்த பரிசுத்தவான்கள் தங்கள் சத்தியத்தை நிலை நாட்டுவதற்கு, அவர்களின் இறுதி தூது மிகவும் தீவிரமாக இருக்கும் என்பது, “மிகுந்த சத்தம்” என்று இங்கு குறிக்கப்படுகிறது.

**நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும் :**

"மாம்சம்" என்பது "தசை நார்" ஆகும். இது அசைவிற்கும், இயக்கத்திற்கும் உதவுபவை. இந்த அடையாள பாஷை எதைக் குறிக்கிறது ? பாபிலோனின் பல்வேறு பிரிவுகளை இயக்க விடாமல் செயலிழக்கச் செய்வதையே (அதனை பட்சிப்பதை) அடையாளப்படுத்துகிறது. பாபிலோன் வேசி இயங்க உதவும் பகுதிகள் பின்வருபவை ஆகும் :

**ராஜாக்களின் மாம்சம் :** அரசாளும் ஆற்றலை (அராஜகம் நிலவுவதை) இழக்க செய்வது.

**சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும் :**

ஆயிரம் பேருக்கு அதிபதிகளாகிய இவர்களுடைய அதிகாரம் அழிந்து, ஜனங்களை வழி நடத்த இயலாத நிலையை அடைவர்.

**பலவான்களின் மாம்சத்தையும் :**

கீர்த்தி பெற்றவர்களும், முதன்மையானவர்களும், செல்வாக்கு உள்ளவர்களும் தங்களுடைய அந்தஸ்தை இழந்து விடுவர்; அதாவது, மனுஷர்பேரில் உண்டாகும் பயம் மறைந்து போகும் நிலை.

**குதிரைகளின் மாம்சத்தையும் :**

ஜனங்களை அடக்கும்படி பிரயோகிக்கும் உபதேசங்கள், கொள்கைகள் அனைத்தும் இழந்துவிடும் நிலை.

மந்திரிமார்களும், ஆலோசனைக்காரரும், கொள்கைவாதிகளும் ஜனக்கூட்டத்தின் மேல் தங்கள் கருத்துக்களையும், வாதங்களையும் வலுக்கட்டாயமாக திணிக்க இயலாத நிலையை அடைவது.

**சுயாதீனர், அடிமைகள் :**

இது போலி கிறிஸ்தவம் முழுவதையும் குறிப்பிடுவதாக உள்ளது. பாபிலோன் மார்க்கத்திலேயே பிறந்தும், அதே குடும்ப சூழ்நிலையில் வளர்ந்துமிருப்பவர்களும், கிறிஸ்தவத்தின் ஒரு பிரிவிலிருந்து விடுபட்டு, சுய விருப்பத்தில் மற்றொரு பிரிவை தேர்ந்தெடுத்து பின்பற்றுபவர்களும் இயக்கம் பெறாத நிலையை அடைவர்.

**சிறியோரும் பெரியோரும் :**

மனுஷர் செல்வாக்கு உள்ளவர்களாயிருப்பினும், செல்வாக்கு இல்லாதவர்களாயினும், எவ்வித பேதமும் இல்லாமல், பேர்கிறிஸ்தவர்கள் அனைவரும் செயல்பட முடியாத நிலை ஏற்படும். அதாவது, "களைகள்" எல்லாம் சுட்டெரிக்கப்படும்.

# மிருகங்கள்

## வெளி 19 : 19 - 21 .

19ம் அதிகாரத்தின் இறுதிப் பகுதியாகிய 19 - 21ம் வசனங்களில் பெரும் யுத்தம் பற்றியும், இரண்டு பெரும் "போலி கிறிஸ்தவ அமைப்புகளின்" நிரந்தர அழிவையும் காண்கிறோம்.

**வெளி 19 : 19.**
**பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரோடும், அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன் .**

"பின்பு.....கண்டேன்" என்று புதியதொரு காட்சியை காண, யோவான் நம் கவனத்தை ஈர்க்கிறார்.

**மிருகம் :**

வெளி 13ம் அதிகாரத்தின் பத்து கொம்புகளுள்ள மிருகத்தின் மீந்தவை இத்தருணத்தில் எடுப்பான தோற்றமுடைய கொம்பு ---- போப்பு மார்க்கம்.

**பூமியின் ராஜாக்கள் :**

உலகியல் சார்ந்த ஆட்சியாளர்கள். (இந்த ராஜாக்களுடன் ஏதோ ஒருவகையில் போப்பு மார்க்கம் உறவாடுவதை இந்த வசனம் உணர்த்துகிறது).

**அவர்களுடைய சேனைகள் :**

இங்கு பன்மையில் குறிக்கப்பட்டுள்ளதால், பலதரப்பட்டவர்களாக இருக்கின்றனர். "பூமியில் வாசம்பண்ணுகிறவர்களை" இது குறிக்கிறது. இவர்கள் பழைய முறைமைகளை கைவிட மனதில்லாமல் எவ்விதத்தினாலாவது விடாப்பிடியாக பின்பற்றுபவர்களை "சேனைகள்" அடையாளப் படுத்துகிறது.

**யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக் கண்டேன் :**

"கூடி வருதல்" என்பது முக்கியமான சொல் ஆகும். "ஜாதிகளை சேர்க்கவும், ராஜ்யங்களைக் கட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." என்றும், "அர்மெகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களை கூட்டிச் சேர்த்தான்" என்றும் (செப்பனியா 3 : 8; வெளி 16 : 16) தீர்க்கதரிசனங்கள் உள்ளன. நமது கர்த்தராகிய கிறிஸ்து எல்லாவற்றையும் உடனடியாக கீழே விழத் தள்ளுவார்.

ஆறாம் வாதையின் **இறுதி** காலக்கட்டத்தை வெளி 16 : 16ம் வசனம் சுட்டிக்காட்டுகிறது. ஏழாம் வாதையின் ஆரம்பத்தில் சபை மறுரூபம் அடைவதால் (வெளி 16 : 17), வெளி 19 : 19ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளவைகளும், அதைத் தொடர்ந்த காரியங்களும் சபை மகிமையடையும் காலத்தைச் சேர்ந்ததாக தெரிகிறது. (வெளி 19 : 17, 18ம் வசனங்களைப் போலவே).

**குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரோடும் :**

அவர்கள் அவரை விரும்பவில்லை. அவருடைய குதிரையையும் (கொள்கையையும்) விரும்பவில்லை. ஏனெனில் மனித வாழ்வின் தவறான வழிகளுக்கு அவருடைய சத்தியங்கள் மாபெரும் எச்சரிப்பாக உள்ளது.

**அவருடைய சேனையோடும் :**

இங்கு “சேனை” என்று ஒருமையில் உள்ளது. ஏனெனில், எல்லோரும் திரைக்குப் பின்னால் மகிமையடைந்த நிலையில் உள்ளதை (வெளி 19 : 14). குறிக்கிறது. அவரும், அவருடைய சேனையும் வரவிருக்கும் புதிய ஒழுங்கினை அடையாளப்படுத்துகிறார்கள். இந்த மாறுதலில் பழைய ஒழுங்குகள் அனைத்தும் தங்க இயலாது. இந்த “யுத்தத்தின்” முதன்மையான தாக்குதலுக்குள் “திரள் கூட்டத்தார்” தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

**வெளி 19 : 20.**

**அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத் தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.**

**அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது :**

இந்த மிருகம் எப்படி பிடிபட்டது என்பதைக் காண நாம் சிறிது காத்திருக்க வேண்டும். வெளி 17 : 16ல் கூறும் வண்ணம், அவளைப் பிடித்த அந்த ஜனங்கள், அவளை கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே போடுகிறார்கள்.

**கள்ளத்தீர்க்கதரிசி :**

இரண்டு கொம்புகளுள்ள மிருகமும், சொரூபமும் அடங்கிய அமைப்பு. (வெளி 16 : 13ம் வசனத்தின் குறிப்புக்களைப் பார்க்கவும்).

**மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான் :**

வெளி 13 : 11 - 17ம் வசனங்களில் ஆரம்பமான சம்பவங்கள் முற்றி, உச்சக் கட்ட நிலை அடைவதை நமக்கு இது நினைவூட்டுகிறது. இது மிக முக்கியமான நினைவூட்டுதல் ஆகும். இந்த இரண்டு மிருகங்களும் (மிருகம் மற்றும் அதன் சொரூபமும்), ஆறாம் வாதையில் வலுசர்ப்பத்துடன் உள்ள முக்கியமான காரணிகளாகும். ஆனால், இங்கு வெளி 19 : 20ல் மூன்று அமைப்புகளில் இரண்டு அமைப்புகளின் (1. மிருகம் 2. கள்ளத்தீர்க்கதரிசி) முழுமையான அழிவை நாம் காண்கிறோம். மூன்றாவது அமைப்பு பற்றி வெளி 20ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

**இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள் :**

போலிக் கிறிஸ்தவத்தின் அழிவு சடுதியாகவும் முழுமையாகவும் ஏற்படும் என்பதை இந்த வசனம் காண்பிக்கிறது. இது படிப்படியாக நடக்கும் காரியமல்ல. **உயிருடன்** இருக்கும் பொழுது, அவர்கள் அழிவை சந்திக்கின்றனர். அழிவிற்குள் அவர்கள் தூக்கியெறியப்படுகிறார்கள். இதை நாம் ஏற்கனவே வெளி 18 : 21ல் பார்த்துள்ளோம்.

“கந்தகம் எரிகிற அக்கினிக் கடல்” : இரண்டாம் மரணம்; அதாவது, “முற்றிலும் மறக்கப்பட்ட நிலை” ; (வெளி 20 : 14).

“அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்” என்பது, அவர்களைப் பற்றி அருவருப்பு இல்லாமல் யாரும் பேச இயலாது என்பதை உணர்த்துகிறது.

**வெளி 19 : 21 .**
**மற்றவர்கள் குதிரையின் மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.**

**மற்றவர்கள் :**

ராஜாக்களும் , அவர்களுடைய சேனைகளுமே. **மிகுந்த சத்தமாய்** கூப்பிட்டதின் விளைவாக இவர்களின் மாம்சம் பட்சிக்கப்பட்டது ; இந்த சத்தம், "திரள் கூட்டம்" எழுப்பிய சத்திய பிரகடனத்தைக் குறிக்கிறது.

**குதிரையின் மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் :**

| | | |
|---|---|---|
| குதிரை | : | களங்கமில்லாத கொள்கைகளின் தொகுப்பு. |
| மேல் ஏறினவர் | : | தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருபவர். |
| பட்டயம் | : | சத்திய வசனங்கள். |
| வாயிலிருந்து புறப்படுகிற | : | வெளி 19 : 15ன் குறிப்புரைகளைப் பார்க்கவும். |

**கொல்லப்பட்டார்கள் :**

சத்தியங்கள் பாபிலோனை அழித்த மாதிரி, மீதியுள்ள எல்லா அமைப்புக்களையும் அழிக்கும். இந்த சத்தியங்கள் அமைதியற்ற நிலையை உருவாக்கும். (எசேக் 38 : 21 ஐப் பார்க்கவும்).

**அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன :**

சங்காரத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் (வெளி 19 : 17ஐ பார்க்கவும். பழியுணர்வை போதுமான அளவில் தங்கள் வசம் தக்க வைத்திருந்து, பழைய மரபுகள் முற்றிலும் மாறுதல் அடைந்து, புதிய மகிமையின் ராஜ்யத்தில் பங்கு பெற ஆயத்தமாயிருப்பார்கள்.

மேற்குறிப்பிட்ட விவரிப்பைத் தொடர்ந்து, வலுசர்ப்பத்திற்கு நிகழும் சம்பவங்களை **20 ம் அதிகாரம்** தொடர இருக்கிறது.

**@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@**

# வெளி 20 ம் அதிகாரம்

## ஆயிர வருஷங்களும், வலுசர்ப்பமும்

"நான் கண்டேன்" என்று நான்கு முறைகள் (1, 4, 11, 12ம் வசனங்களில்) யோவான் கூறுவதைக் கொண்டு, 20ம் அதிகாரத்தை நான்கு தனிப் பகுதிகளாகப் பிரிக்கலாம். இந்த நான்கு பகுதிகளையும் ஒவ்வொன்றாக ஆராய்வதற்கு முன்பாக, "ஆயிரம் வருஷங்கள்" பற்றி பொதுவான சில விஷயங்களை நாம் நோக்குவோம் :

சிருஷ்டிப்பின் ஏழாவது நாள் ஏழாயிரம் வருஷங்களைக் கொண்டது என்ற கருத்தின் அடிப்படையில், நம்முடைய காலக் கணக்கின் எல்லா அம்சங்களும் அமைந்துள்ளன. இதற்கு யூத ஓய்வு நாள் முறை (ஒவ்வொரு வாரத்திலும் 6 நாட்கள் வேலை செய்வதும், 7ம் நாள் ஓய்வு கொள்வதும்) நிழலாய் உள்ளது. சிருஷ்டிப்பின் விவரம் ஆதியாகமத்தில் காணும் போது, ஒவ்வொரு நாளும் "சாயங்காலமும் விடியற் காலமுமாகி ........நாள் ஆயிற்று" என்று முதல் 6 நாட்களிலும் சொல்லப் படுகிறது. ஆனால், இந்த குறிப்பு ஏழாம் நாளில் சொல்லப்படவில்லை. ஏனெனில், ஏழாம் நாள் இப்பொழுதும் கூட, இன்னும் முடியவில்லை. ஏழாம் நாளின் கால அளவாய் (நீட்சியை), ஓரளவு வெளி 20ம் அதிகாரத்தின் துணை கொண்டு அறிய ஏதுவாகிறது. இயேசு தம்மை "ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்" என்று கூறியுள்ளார். (மத் 12 : 8; லூக் 6 : 5; மாற் 2 : 28). "பெரிய ஓய்வு நாளில்" உலக மனுஷர்கள் அனைவரையும் குணமாக்கப் போவதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில், இயேசு ஓய்வு நாளில் குணமாக்குவதை பல சமயங்களில் வழக்கமாகக் கொண்டிருந்தார். நிழலாக இருந்த "ஓய்வு நாள்" குறித்து தெளிவான பொருள் விளக்கங்களில் ஒன்றாக வெளி 20 ம் அதிகாரம் விளங்குகிறது. இது "ஆயிரம் வருஷங்கள்" கால அளவு கொண்டது என்று தெளிவாக சொல்வதிலிருந்து, இதற்கு முன் காலப் பகுதியான பாவமும் மரணமும் கொண்ட "வேலை செய்யும்" ஆறு நாட்கள் ஒவ்வொன்றும் "ஆயிரம் வருஷங்கள்" கால அளவு கொண்டது என்பது உய்த்துணரப்படுகிறது.

வம்சாவளி பற்றி வேதாகமம் பகர்வதையும், வரலாற்றையும் சேர்த்து நோக்கும்போது, மனுஷ வரலாற்றின் ஆறாயிரம் வருடங்களின் முடிவுற்ற நிலையில் நாம் வாழ்கிறோம் என்பதும், ஏழாவது ஆயிரவருட காலப்பகுதிக்குள் அல்லது ஏழாம் ஓய்வுநாளுக்குள் (அப்போ 3 : 21) பிரவேசித்திருக்கிறோம் என்பதும் தெளிவாகிறது. இக்காலப் பகுதியைத் தான் பேதுரு அப்போஸ்தலன் "தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினால் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்கள்" என்று கூறுகிறார். இந்த காலப்பகுதி (ஏழாவது ஆயிரம் வருடங்கள்) துவங்கும் வரையில் இயேசுவை பரலோகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளி 20ம் அதிகாரம் இல்லாவிட்டால், மனுக்குலத்தின் நீண்ட துயரமான காலம் எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்பது நமது யூகத்திலேயே இருக்கும்.

"ஆயிரம் வருஷங்கள்" என்பது வேதாகமத்தில் வேறு இரண்டு இடங்களில் மட்டும் காணப்படுகிறது. சங்கீதம் 90ம் அதிகாரம் மற்றும் 2 பேதுரு 3ம் அதிகாரம். இந்த இரண்டிலும் கருப்பொருள் ஒன்றே. அதாவது, மனுஷன் இழந்து போனதை திரும்ப பெறுதல்; வெளிப்படுத்துதல் 20ம் அதிகாரத்தின் துணை கொண்டு, சங்கீதம் 90ம் அதிகாரம், மற்றும் 2 பேதுரு 3ம் அதிகார பகுதிகளை ஆராய்வோம் :

## சங்கீதம் 90 ம் அதிகாரம்

அதிகாரம் முழுவதும் படித்த பிறகு, 14, 15ம் வசனங்களை நோக்கினால், "காலை நேரத்தில்" நமக்கு வாக்குத்தத்தம் நிறைவேறப் போகிறது எனத் தெரிய வருகிறது. மகிழ்ச்சியான பாடல் துவங்கும் காலப் பகுதி இது. இழந்து போனதை எல்லாம் திரும்பவும் பெறும் காலம் இதுவே. (அப்போ 3 : 21). தேவன் தீமையை அனுமதித்தலின் கொள்கை 15ம் வசனத்தில் வலியுறுத்தப்படுகிறது. பாவம் மற்றும் மரணம் தருவித்த வேதனைகள் முற்றிலும் நீக்கப்பட்டு வாழ்வில் மகிழ்ச்சி நிலவுவதுடன் 90ம் சங்கீதம் முடிவு பெறுகிறது. "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்" என்று மூன்றாம் வசனத்தில் மனுஷனுடைய விழுகையும், திரும்புதலையும் அடங்கிய 7000 வருடங்களின் சங்கதிகள் சுருக்கமாக தெரிவிக்கப்படுகிறது. காலக் கணக்கு பற்றிய மிக நுட்பமானதும், தவிர்க்கமுடியாததுமான இந்த செய்தியை சங்கீதக்காரன் நமக்குத் தெரிவிக்கிறான். மரணமும், திரும்ப பெறுதலுமான இந்த நிகழ்வு தேவனுடைய பார்வையில் நாட்கள் கணக்கில் --- அதாவது, ஒவ்வொரு நாளும் "ஆயிரம் வருடங்கள்" அடங்கிய காலப் பகுதியில் நடக்கக் கூடியதாய் உள்ளது. "ஆயிரம் வருடங்கள்" கொண்ட நாட்கள் இராக்கால சாமங்களை (காவல்களை) போல உள்ளது. காலை நேரத்து ஆசீர்வாதத்திற்கு முன்னர் உள்ள இராக்காலத்தைத் தான் 14ம் வசனம் குறிப்பிடுகிறது.

கழிந்து போன "முதலாம் நாள்" என்ற காலப் பகுதியில் ஆதாமுக்கு வாக்களித்தபடியே (ஆதி 2 : 17), அவன் மீறுதலின் காரணமாக, முதலாம் "ஆயிரம் வருட நாளுக்குள்" தன் 930ம் வருடத்தில் இறந்தான். ஓசியா தீர்க்கதரிசியும் இந்த காலக் கணக்கையே உபயோகப்படுத்துகிறார். இயேசு வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேலர்கள் தள்ளுண்டு போனதற்கு பின்பு, இஸ்ரவேலரை மீண்டும் கூட்டிச் சேர்க்கும் கிறிஸ்துவின் நாளைக் குறித்து ஓசியா தீர்க்கதரிசனம் உரைத்தார். மனித வரலாற்றின் "5 வது ஆயிர வருட நாளில்" இயேசு வாழ்ந்தார். "இரண்டு நாளைக்குப் பின் அவர் நம்மை உயிர்ப்பிப்பார்" என்ற வசனத்தின்படி, இயேசு இஸ்ரவேலரை "மூன்றாம் நாளில்" கூட்டிச் சேர்க்க வேண்டும். இந்த "மூன்றாம் நாள்" என்பது 7வது ஆயிர வருடக் காலப் பகுதியாகும். இதைத் தான் வெளி 20ம் அதிகாரம் தெரிவிக்கிறது. இதே அடையாள பாஷையைத் தான், இயேசு யோவான் 2 : 19 - 21ம் வசனத்தில் உபயோகப்படுத்துகிறார். "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள். மூன்று நாளைக்குள்ளே எழுப்புவேன்". அவர் சொல்லர்த்தமாக எருசலேம் ஆலயத்தைப் பற்றி பேசாமல், தம் சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். இதை பலர் கல்லறையிலிருந்து வெளிப்பட்ட இயேசுவின் உயிர்த்தெழுதலுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள். இது அதுவல்ல. அவருடைய மாம்ச சரீரம் எழுப்பப்படவில்லை. இயேசு தாமே எழுந்திருக்கவில்லை. தேவன் அவரை எழுப்பினார்.. இங்கு இயேசு தம்முடைய சரீரமாகிய சபையைக் குறித்துப் பேசுகிறார். இவர் தான் பரிசுத்தவான்களை கடைசி எக்காளம் தொனிக்கும் காலத்தில் உயிர்த்தெழ வைக்கிறார். இந்த ஏழாவது எக்காளம் அறுவடை காலத்தில் (7வது ஆயிர வருட இந்த காலப்பகுதியில்) தொனிக்கிறது. அவருடைய சரீரம் 5வது நாளில் அழிய ஆரம்பித்தது. 7ம் நாளில் அந்த சரீரத்தை எழுப்பினார்.

இயேசு தம்முடைய வருகையைப் பற்றி சொல்லும்போது, "இராக்கால ஜாமம்" என்று லூக் 12 : 37, 38ல் குறிப்பிடுகிறார். அவருடைய வருகையின் போது சபை முழுமை அடைந்திருக்காது என்பது அவர் சபையினருக்கு அச்சமயத்தில் போஜனம் அளிக்கிறதினால் தெரிய வருகிறது. "போஜனம்" என்பது யுக முடிவின் கடைசி அறுவடைகால சத்தியங்கள் ஆகும். இயேசு தம் வருகை எப்பொழுது என்பது மிகவும் ரகசியமானதாயிருக்குமெனக் கூறுகிறார்.

“வருகை” பற்றி “வீட்டெஜமான்” (சாத்தான்) தெரிந்திருந்தால் முன் ஜாக்கிரதை நடவடிக்கை எடுத்திருப்பான் என்று இயேசு கூறுகிறார். இருப்பினும், இயேசு தம்முடைய வருகை **இரண்டாம்** அல்லது **மூன்றாம்** ஜாமத்தில் இருக்கலாம் என்று கூறுகிறார். சங்கீதம் 90ம் அதிகாரம், ஓசியாவின் தீர்க்கதரிசனம், மற்றும் யோவான் சுவிசேஷத்தில் சொல்லப்படும் அடையாள பாஷையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஜாமங்கள், ஆறாவது மற்றும் ஏழாவது ஆயிர வருடங்கள் காலப்பகுதிகளைக் குறிப்பிடுபவையாக உள்ளன. இந்த இரண்டு ஜாமங்களும் இணையும் பகுதியில் ----1874ல்---- ஆதாமின் விழுகைக்குப் பின் ஆறாவது ஆயிர வருடங்கள் முடிவில் இயேசுவின் வருகை இருக்கிறது.

**2பேதுரு 3ம் அதிகாரம்**

“ஆயிரம் வருடங்கள்” பற்றிய பேதுருவின் சாட்சி மிகவும் இசைவாக உள்ளது. நியாயத்தீர்ப்பின் **நாளில்** (7ம் வசனம்) இயேசுவின் வருகை இருக்கும் என்று பேதுரு கூறுகிறார். இந்த **நாளில்** (10 - 12ம் வசனங்கள்), பழைய ஒழுங்கு முறைகள் அழிந்து போகும். ஏனெனில், அதற்குப் பதிலாக, நீதியுள்ள புதிய ஒழுங்கு முறை (புதிய வானமும் புதிய பூமியும்) ஸ்தாபிக்கப்படும். இந்த நாளைப் பற்றி குறிப்பிடும்போது, நியாயத்தீர்ப்பின் கால அளவு “ஆயிரம் வருடங்கள்” என வசனம் 8ல் விவரிக்கிறார். இந்த “நியாயத்தீர்ப்பின் நாள்”, இஸ்ரவேலரின் வனாந்திர “40 வருட” நாளையோ அல்லது வனாந்திரத்தில் இயேசு சோதிக்கப்பட்ட “40 நாட்கள்” காலப் பகுதியையோ, அல்லது தேவனுடைய சிருஷ்டிப்பின் ஓய்வு நாளாகிய “7000 வருட” நாளையோ குறிக்கவில்லை. இந்த நாள் “ஆயிரம் வருடங்கள்” ஆகும். இந்த நாளை 90ம் சங்கீதம் **“காலை”** என்றும், ஓசியா 6ம் அதிகாரமும், யோவான் 2ம் அதிகாரமும் **“மூன்றாம் நாள்”** என்றும் குறிப்பிடுகிறது. இந்த நாள் இயேசு ஆண்டவராயிருக்கும் “ஓய்வு நாள்” ஆகும்.

இது ஏன் 1000 **நாட்களைக்** குறிக்கவில்லை. வெளிப்படுத்தல் ஆகமத்திலும், வேதாகமத்தின் மற்ற புத்தகங்களிலும் “ஒரு வருடம்” என்பது அடையாள பாஷையில் “ஒரு நாள்” என குறிக்கப்படுகிறது. வெளி 20ம் அதிகாரத்தில் “ஆயிரம் நாட்கள்” என அடையாள பாஷையில் குறிக்கப்படாமல், “ஆயிரம் வருடங்கள்” என சொல்லர்த்தமாகவே குறிக்கப்பட்டுள்ளது ! ஏனெனில், “ஆயிரம் வருடங்கள்” என்பதை அடையாள பாஷையாக எடுத்துக் கொண்டால், 1000 x 360 = 3,60,000 வருடங்கள் என பொருள்படும்படி உள்ளது. இந்த காலக் கணக்கு வேதாகமத்தின் சத்தியங்களுக்கு எவ்விதத்திலும் இசைவானதாக காணப்படுகிறதில்லை. வெளி 20ம் அதிகாரத்தில் “1000 நாட்கள்” என்று சொல்லப்பட்டிருந்தால், சங்கீதம் 90 அல்லது 2 பேதுரு 3ம் அதிகாரத்துடன் எவ்வித தொடர்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும். பேதுரு தம் நிரூபத்தில் “கர்த்தருக்கு ஒரு நாள் என்பது 1000 நாட்களைக் குறிக்கும் என்று சொல்லியிருந்தால் எவ்வளவு வித்தியாசமானதாயிருந்திருக்கும் ? சங்கீதம் 90 மற்றும் 2 பேதுரு 3ம் அதிகாரங்களில் “ஆயிரம் வருடங்கள்” என்று சொல்லப்பட்டிருப்பது, ஓய்வு நாள் முறைமையின்படி “ஆயிரம் வருடங்கள் கொண்ட ஒரு நாள்” பற்றிய கருப்பொருள் தெளிவு பெறுகிறது. சங்கீதம் 90 மற்றும் 2 பேதுரு 3ம் அதிகாரங்களின் வசனங்கள் சொல்லர்த்த முறையில் குறிப்பிட விழைந்ததால், வெளி 20ம் அதிகாரமும் அதே போன்று சொல்லர்த்தமாகவே “ஆயிரம் வருடங்கள்” என்று சொல்லுகிறது.

## முதல் பகுதி : வெளி 20 : 1 - 3.

### வலுசர்ப்பம்

வசனம் 2ல், பிசாசு, சாத்தான், பாம்பு, வலுசர்ப்பம் என நான்கு பகுதிகளைக் கொண்ட பெயரைப் பார்க்கிறோம். இதைப் போலவே, வெளி 12 : 9ம் வசனத்திலும் படிக்கிறோம். இந்த சொற்றொடர், சாத்தானின் மறைமுக ஆதரவுடன் இருக்கும் “இராஜ்ஜீய அதிகாரத்தை” **(civil empire)** அடையாளப்படுத்துகிறது. புற சமய ரோம சாம்ராஜ்யம் சாத்தானுக்கு மதிப்பு வாய்ந்த ஆயுதம் ஆகும். கி.பி. முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் எவ்வித பெரும் எதிர்ப்பு இல்லாமல் இந்த உலகத்தை சாத்தான் கட்டுப்படுத்தி வந்தான். “கிறிஸ்தவம்” என்ற புதிய மத வளர்ச்சியினால், புற மத ரோம சாம்ராஜ்யம் சவாலை சந்தித்தது. இதைக் கண்ணுற்ற சாத்தான், புதிதாய் பிறந்த மதத்தை தன்வசப்படுத்தியதைத் தொடர்ந்து (வெளி 12 : 4), ரோம புற மதம் நலிவடையத் தொடங்கியது. சிவில் அதிகாரம் மத ஆளுகைக்கு அடிபணியத் தொடங்கியது. இதன் விளைவு, சாத்தானுக்கு உலகத்தை ஆள புதிய ஆயுதம் கிடைத்தது. அது தான், “புனித ரோம சாம்ராஜ்யம்”. வெளி 20ம் அதிகாரம் கற்பிக்கும் பாடம் நமக்குத் தெளிவாகிறது. இராஜ்ஜீய அதிகாரத்தின் மிச்சங்கள் இன்னும் உள்ளன. அவற்றின் பழமையான ஆட்சியாளன் இருக்கிறான். இதன் பெயர் தான் --- “பிசாசு, சாத்தான். பாம்பு, வலுசர்ப்பம்” என்ற **இராஜ்ஜீய அதிகாரத்தைக்** குறிக்கும் அடையாளப் பெயர். இதன் ஆவிக்குரிய தலைமை தான், சொல்லர்த்தமான “ பிசாசு”.

வெளி 16 : 13ல் **மூன்று** அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடையாளங்களைப் பற்றிய விஷயங்கள் வெளி 12, 13ம் அதிகாரங்களில் உள்ளன. 1) வலுசர்ப்பம் 2) மிருகம் 3) கள்ளத்தீர்க்கதரிசி; இவைகளைப் பற்றி வெளி 16 : 13ல் சொல்லப்பட்டிருப்பது. அவற்றின் அழிவு பற்றி வெளிப்படுத்தல் ஆகமத்தில் நாம் மேலும் கூர்ந்து கவனிக்க வேண்டிய தடயமாக இருக்கிறது. இந்த மூன்றில் இரண்டு அடையாளங்களாகிய மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் (போலிக் கிறிஸ்தவ அமைப்புக்கள்) கந்தகம் எரிகிற அக்கினிக் கடலில் எறியப்படுகிறதாக வெளி 19 : 20ல் பார்க்கிறோம். இது சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் நிகழ்கிறது. ஆனால் **மூன்றாம்** அடையாளம் எங்கே ? **“வலுசர்ப்பம்”** என அடையாளப்படுத்தப்பட்ட “இராஜ்ஜீய அதிகாரம்” எங்கே ? இது தான் வெளி 20ம் அதிகாரத்தில் விவாதிக்கப்படும் விஷயமாகும். இந்த மூன்றாம் எதிரி, மற்ற இரண்டு எதிரிகளுடன் எவ்விதம் அக்கினிக் கடலில் சேருகிறது என்பதை வெளி 20 : 10ம் வசனம் ஜாக்கிரதையாக விவரிக்கிறது. ஆனால், இது நடப்பது **ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு !** இயேசுவின் ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் ஒரு புதிய ராஜ்ஜீய அதிகாரத்தை **(civil government)** ஸ்தாபிக்கும் முயற்சியில் சாத்தான் ஈடுபடுவான் என்பது வெளி 20 : 7 - 9ல் சொல்லப்படுகிறது.

சாத்தான் என்று அடையாளப்படுத்தப்படும் **இராஜ்ஜீய அதிகாரம்** (சொல்லர்த்தமான பிசாசு, பின்னாக செயல்பட்டு ஆதரவளிக்கும்) ஆயிரம் வருடங்கள் கட்டப்படும். இந்த சிவில் அதிகாரம் மறுமுறை தனது இறுதி தோற்றத்தை வெளிப்படுத்தும் போது, அதைத் தூண்டிய பிசாசுவுடன் நிரந்தரமான முடிவை சந்திக்கும்.

### கட்டப்படுதல்

“சாத்தான் கட்டப்படுதல்” என்பது சாத்தானை சொல்லர்த்தமாகவும், அடையாள உருவகமாகவும் வேதமாணவர்களாகிய நாம் குறிப்பிடுகிறோம். இந்த சொற்றோடரை நாம் குறுகிய முறையிலேயே உபயோகிக்கிறோம். ஆனால், வெளி 20:2,3ம் வசனங்களில் சொல்லப்படும் இந்த “கட்டுப்படுத்தும் நிலை” , ஐந்து பிரிவுகளைக் கொண்ட காலப்பகுதியில் செயல்படுத்தப்படுகிறது.

**வலுசர்ப்பம் :**

முதலாவது : பிடிக்கப்படுகிறது.
இரண்டாவது : கட்டப்படுகிறது.
மூன்றாவது : எறியப்படுகிறது.
நான்காவது : அடைக்கப்படுகிறது.
ஐந்தாவது : முத்திரையிடப்படுகிறது.

ஆயிர வருட அரசாட்சியில் உலகத்தாரின் நியாயத்தீர்ப்புக்கான காலப்பகுதியில், சொல்லர்த்தமான பிசாசையும் அவனுடைய ராஜ்ஜீய அதிகாரங்களின் சூழ்ச்சிகளையும் (வஞ்சகங்களை) **முற்றிலும் வலுவிழக்க** செய்வதையே, அடையாள பாஷையில் "கட்டப்படுதல்" என்று குறிக்கப்படுகிறது. "சாத்தான் கட்டப்படுகிறான்" என்பது, அவனுடைய "ராஜ்ஜீய அதிகாரம்" கட்டப்படுகிறதேயல்லாமல், சொல்லர்த்தமாக "பிசாசு" என நாம் அழைக்கும் சிருஷ்டி கட்டப்படவில்லை.

**வெளி 20 : 1.**

**ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையில் பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன் .**

இங்கு குறிக்கப்படும் "தூதன்" இயேசு என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இது சரி என்று இயேசுவின் உவமை உணர்த்துகிறது. மத் 12 : 29ல் பலவானைக் கட்டுபவர் இயேசு என்பது விளங்குகிறது. "பாதாளம்" என்பது வலுவிழந்த நிலைமையை சுட்டிக் காட்டுகிறது (வெளி 17 : 8ஐ போல); கட்டுப்படுத்தலை செய்யும் கருவி சங்கிலியாகும். பாதாளத்தில் முழுவதுமாக வலுவிழக்கும் தன்மையை அடைவதற்கு முன்னர், இந்த பலவானை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். சாத்தான் இருளின் அதிபதியாக இருப்பதால், "வெளிச்சம்" என்ற கருவியைக் கொண்டு அவனைக் கட்ட வேண்டும். தூதன் கையிலிருக்கும் சங்கிலி எதை அடையாளப்படுத்துகிறது ? "கை" என்பது செயல் அல்லது கிரியைகளைக் குறிக்கும்; பிரசன்னமாகியுள்ள கிறிஸ்துவின் தலையான பணிகளில் "இருளைக் கட்டுப்படுத்துதல்" (கட்டுதல்) ஒன்றாகும்.

மேற்கண்ட பாராவில் சொல்லர்த்தமான பிசாசைப் பற்றி பேசினாலும், இந்த வசனங்களின் குவிமையம் **அவனல்ல.** அவனுடைய ஆயுதமாகிய "இராஜ்ஜீய அதிகாரம்" கட்டப்படுகிறது.

**வெளி 20 : 2, 3.**

**பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான்: அதற்கு பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும் .**

வலுசர்ப்பம் (ராஜ்ஜீய அதிகாரம்) கட்டப்பட்டு, எறியப்படுவதற்கான காரணம் இந்த வசனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, முற்றிலும் வலுவிழந்த நிலையில், மனுஷர் இழந்ததை திரும்ப பெறும் காலத்தில், ஜனங்களை ஏமாற்ற முடியாத சக்தியற்ற நிலைக்குத் தள்ளப்படும். இதைத் தான் ஏசாயா 35 : 9ல் வாக்குரைக்கப்பட்டுள்ளது. "அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்ட மிருகம் அங்கே போவதுமில்லை."

இந்த ஆயிர வருஷங்கள் முடிவுற்ற உடனே, கொஞ்சக் காலத்திற்கு வலுசர்ப்பம் விடுதலையாக்கப்படும் என்ற எச்சரிப்பு தெரிவிக்கப்படுகிறது.

## 2 ம் பகுதி : வெளி 20 : 4 - 10.

வெளி 20 : 4.
**அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்.**

4ம் வசனத்திலிருந்து கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சியைப் பற்றிய வேறொரு முழுமையான பார்வையை நாம் பார்க்க முடிகிறது. இப்பொழுது, புதிதாக ஆட்சி செய்பவர்களைப் பற்றியும், எதிராளி எப்பொழுது விடுதலை செய்யப்படுவான் என்பதும், அவன் எப்பொழுது அழிவை சந்திப்பான் என்பதும் இந்த வசனங்களின் மூலம் நாம் அறிகிறோம்;

'சிங்காசனங்கள்' என்பது ராஜரீக அந்தஸ்தை மட்டுமல்லாமல், நியாயத்தீர்ப்பின் அதிகாரத்தை அடையாளப்படுத்துவதாய் உள்ளது; சில சந்தர்ப்பங்களில் ஆயிர வருஷ அரசாட்சி 'ஒரு' சிங்காசனத்தில் செயல்படுவது போல காட்டப்பட்டிருக்கிறது (20 : 11; மற்றும் 3 : 21ல் இருப்பது போல) ; சில சமயங்களில் (உதாரணமாக, வெளி 20 : 4; மற்றும் மத் 28 லும்) 'பல' சிங்காசனங்கள் இருப்பதைக் காட்டுகிறது. இதன் மையக் கருத்து என்ன ? "ஆளுகை ஒன்று தான்" ; ஆனால், இணக்கமான முறையில் பலர் ஆளுகையில் பங்கு கொள்கின்றனர் யோவான் 17 : 21ம் வசனம் உணர்த்தும் கருத்து இதுவே !

4ம் வசனத்தின் முதற் பகுதியில் மொழி பெயர்ப்பில் சிறிய பிரச்சினை உள்ளது; தமிழ் மொழி பெயர்ப்பு கூறுவது :

**4ம் வசனத்தின் முதற் பகுதி :**
"அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, அடுத்த வாக்கியம் பின் வருமாறு உள்ளது:

**4ம் வசனத்தின் பிற்பகுதி :**
"இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்.

மேற்குறிப்பிட்டுள்ள 4ம் வசனத்தின் முற்பகுதியும், அதன் தொடர்ச்சியான பிற்பகுதியும் இணையும் விதத்தில் கிரேக்க மூலத்தில் உள்ள 'KAI' என்ற பதம், ஆங்கில மொழி பெயர்ப்புகளில் 'AND' என்று தவறாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது; இதனால், சிங்காசனத்தில் உட்கார்ந்தவர்கள் ஒரு பிரிவினராகவும், சிரச்சேதம் பண்ணப்பட்டு இருந்தவர்கள் வேறு ஒரு பிரிவினர் என்று அர்த்தம் கொள்வதாக உள்ளது. உண்மையில், 'KAI' என்பதற்கு 'EVEN' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்; அதாவது, 4ம் வசனத்தின் முற்பகுதியில் உள்ள "அவர்களுக்கு" என்ற பதத்தை விவரிப்பதற்காகவே 4ம் வசனத்தின் பிற்பகுதி உள்ளது. சரியான மொழி பெயர்ப்பு பின்வருமாறு இருக்க வேண்டும் :

"அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்த "அவர்களுக்கு" நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அதிகாரம் அளிக்கப்பட்டது".

மேற்குறிப்பிட்ட மொழி பெயர்ப்பில், சிங்காசனத்தில் உட்கார்ந்து, மற்றவர்களை நியாயந்தீர்க்கும் அதிகாரம் கொண்டவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

**ஆத்துமாக்கள் :**

'ஆத்துமாக்கள்' என்ற சொல் (6 : 9ம் வசனத்தில் உள்ளது போல) மரித்துப் போன பரிசுத்தவான்களின் வாழ்வு பற்றிய ஞாபகங்களை அடையாளப்படுத்தும் விதமாக வெளிப்படுத்தல் ஆகமத்தில் குறிக்கப்பட்டுள்ளது. 4ம் வசனத்தின் பிற்பகுதியை தெளிவுற உணர்ந்து கொள்ள, இந்த அடையாள பாஷை நமக்கு உதவுகிறது .

**சிங்காசனங்கள் :**

கி.பி. 1874 லிருந்து துவங்கிய ஆயிர வருஷ அரசாட்சியில் இந்த சிங்காசனங்கள் இருக்கின்றன; புதிய சிருஷ்டிகள் யாரும் உண்மையில் இந்த சிங்காசனங்களில் உட்காரவில்லை; தேர்வு செய்யப்பட்டு கிரீடம் பெற தயார் நிலையிலுள்ளவர்கள் இந்த சிங்காசனங்களில் உட்காருவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் (ஆத்துமாக்கள்) சிங்காசனங்களில் உட்காருவதற்கும், நியாயாதிபதிகளாக பதவி பெறுவதற்குமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சரியான மொழி பெயர்ப்பு பின்வருமாறு உள்ளது :**

" **............** அதிகாரம் அளிக்கப்பட்டது; அவர்கள் உயிர்த்து, கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."

வெளி 20 : 4ம் வசனம் பரிசுத்தவான்களின் 'முதலாம் உயிர்த்தெழுதல்' பற்றியே முக்கியமாக விவரிக்கின்றது; இந்த பரிசுத்தவான்கள் தங்கள் ஊழியத்தை செவ்வனே முடித்து மரித்ததிலிருந்து, 'பலிபீடத்தின் கீழே' (வெளி 6 : 9) இருந்து வந்தனர். ஆயிர வருஷ அரசாட்சி ஆரம்பமான கி.பி. 1874ல் அவர்கள் மரித்தவர்களாய் இருந்தனர்; அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் அதிகாரங்களாகிய சிங்காசனங்கள் இன்னும் கொடுக்கப்படாமல், இவைகளை அவர்களுக்கு தருவதற்கான ஒதுக்கீடு (நியமனம்) செய்யப்பட்டுள்ளது. கி.பி. 1878ல் அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடன் தாங்களும் ஆட்சியில் இப்பொழுது பங்கு கொள்கிறார்கள். சிங்காசனங்களில் அவர்கள் அமர்ந்து நியாயத்தீர்ப்பின் அதிகாரம் பெற்றவர்களாக இப்பொழுது இருக்கிறார்கள். 20:5ம் வசனம் தொடர்கிறது; (போலி வாக்கியத்தை நீக்கி விடவும்). **"இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்".**

**வெளி 20 : 5.**

**மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை; இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.**

**வெளி 20 : 5ல் உள்ள போலி வாக்கியம் :**

"மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" என்ற வாக்கியம் பழம்பெரும் வேதாகம பிரதிகளில் காணப்படுகிறதில்லை; தற்பொழுது வழக்கில் உள்ள மொழி பெயர்ப்புகளில் லம்சா மொழி பெயர்ப்பில் மட்டும் இந்த போலி வாக்கியம் நீக்கப்பட்டுள்ளது. "அவர்கள் உயிர்த்து - - - - அரசாண்டார்கள்; இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்." என்ற வசனம் எவ்வளவு தெளிவாக உள்ளது. இதற்கு நடுவில் இடைச்சொருகலாக இந்த போலி வாக்கியம் காணப்படுகிறது.

மேலும், சாத்தான் எதற்கு கட்டப்படுகிறான் ? (வெளி 20 : 2).

" - - - - - - ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு - - - -" என்று வெளி 20 : 2ம் வசனம் தெரிவிக்கிறது. இப்பொழுது, திரைக்குப் பின்னால் இருக்கும் பரிசுத்தவான்கள் எல்லோரும் சிங்காசனங்களில் வீற்றிருக்கும் நிலையில், ஆயிரம் வருஷங்கள் வரைக்கும் மரித்த நிலையிலிருந்து மற்றவர்கள் திரும்ப வரவில்லை என்றால், சாத்தான் மோசம் போக்குவதற்கு ஜனங்கள் ஏது ? இந்த நிலையில் சாத்தான் ஏன் கட்டப்பட வேண்டும் ?

**வெளி 20 : 6.**

**முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.**

மரித்த பரிசுத்தவான்களுக்கு சிங்காசனங்கள் ஒதுக்கப்பட்டு, அதில் அமர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டு கிறிஸ்துவுடன் ஆட்சி செய்வதற்காக உயிர்த்து வருகிறார்கள். கிறிஸ்துவுடன் ஆளுகை செய்ய உயிர்த்து வருவது தான் 'முதலாம் உயிர்த்தெழுதல்' ஆகும். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவோருக்கு விசேஷித்த ஆசீர்வாதங்கள் உள்ளன. அவர்கள் அழியாமையை சுதந்தரித்துக் கொள்கிறார்கள். மரண பயம் அவர்களுக்கு இனி இல்லை. இந்த "தனிப்பட்ட" ஆசீர்வாதங்களுக்கு மேலாக, நியாயந்தீர்க்கும் காலம் முழுவதும் ஆசாரியர்களாகவும் (விழுந்து போன மனுக்குலத்துக்கும், பரிசுத்த தேவனுக்கும் இடையே மத்தியஸ்த ஊழியத்தில் பங்கு), ஆட்சியாளர்களாகவும் "பொதுவான" ஆசீர்வாதங்களையும் பெறுகிறார்கள்.

**தனிப்பட்ட ஆசீர்வாதம் :**

முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் என்று ஒருமையில் சொல்லப்படுகிறது. ஒவ்வொருவனும் தனித்தனியே 'அழியாமை'யை பெற்றுக் கொள்கிறான். இது தனிப்பட்டவனுக்கு அளிக்கப்படும் ஆசீர்வாதம் ஆகும்.

**பொதுவான ஆசீர்வாதம் :**

"கிறிஸ்துவுடன் அவர்கள் ஆளுகை செய்வது தான் 'பொதுவான ஆசீர்வாதம்' ஆகும். ஆயிரம் வருஷங்களடங்கிய ஆட்சியைப் பற்றிய முழுமையான அறிவினை விளங்கிக் கொள்ளும்படியாக இந்த பொதுவான ஆசீர்வாதத்தின் மையக் கருத்து உள்ளது". ஒவ்வொரு தனி நபருக்கும் ஆயிரம் வருஷங்கள் அரசாளும்படியாக தனிப்பட்ட உத்திரவாதம் கிடையாது. கிறிஸ்து ஆயிரம் வருஷங்கள் அரசாள உத்திரவாதம் பெற்றிருக்கிறார். ஆயிர வருஷ அரசாட்சி துவங்கிய பிறகு, திரைக்குப் பின்னால் செல்பவர்கள், கிறிஸ்துவோடு கூட ஆயிரம் வருஷங்களில் மீதமுள்ள காலப்பகுதியில் பங்கு பெற ஆரம்பிப்பார்கள். தனிப்பட்டவர்கள் முழு ஆயிர வருஷம் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வதில்லை.

**வெளி 20 : 4ம் வசனம் பற்றிய ஒரு குறிப்புரை :**

**அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது .**

நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அதிகாரம் அளிக்கப்பட்டவர்களைப் பற்றிய விவரிப்பு இரண்டு பாகங்களாக வசனம் 4ல் உள்ளது"

1. அவர்கள் என்ன செய்தார்கள் ?

அவர்கள் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள். கிறிஸ்துவின் தலைமையை ஏற்று, பலியின் ஜீவியம் மேற்கொண்டு அவருக்குள் மரித்தவர்கள். கொலே 1 : 19; அவர்கள் கிறிஸ்துவினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும் இவ்வாறு தங்களை அர்ப்பணித்தார்கள்.

2. அவர்கள் என்ன செய்யவில்லை ?

மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது (போலி கிறிஸ்துவத்தை) வணங்காமலும், அவர்கள் தங்கள் நெற்றியிலும் (ஒளிவு மறைவில்லாத வெளிப்படைத் தன்மையுடைய பண்புகள்), தங்கள் கையிலும் (செய்கைகள்) அதின் முத்திரையை தரித்துக் கொள்ளாமலும் இருந்தார்கள்.

இப்படியாக, புதிய ஆளுகையைப் பற்றியும், ஆளுகையின் தன்மையையும், அதிகாரத்தையும், பணியையும், பரிசுத்தவான்கள் பெறும் மகிமையைப் பற்றியும் வெளி 4 - 6ம் வசனங்கள் விவரிக்கின்றன; 11ம் வசனத்திலிருந்து, இவர்களின் ஆளுகைப் பற்றிய வரலாற்று விவரங்கள் தரப்படுகின்றன.

7 முதல் 10ம் வசனங்கள் இந்த யுகத்தின் முடிவைப் பற்றி மட்டும் சொல்கின்றன.

**வெளி 20 : 7.**

**அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி .**

வெளி 20 : 1ல் குறிக்கப்பட்டுள்ள "பாதாளம்" வலுவிழந்த தன்மையை அடையாளப்படுத்துவதாகப் பார்த்தோம். அந்த நிலைமையை வலுப்படுத்தி, இங்கு "காவல்" என்று சொல்லப்படுகிறது.

**வெளி 20 : 8.**

**பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம் போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்கு கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.**

இங்கு குறிக்கப்பட்டவைகளுக்கு இணையான விவரம் மத் 24 : 31ல் காணப்படுகிறது. இந்த இரண்டு வசனங்களும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தை அடித்தளமாக கொண்டுள்ளன. "ஆபிரகாமின் சந்ததி" என்பது வானத்து நட்சத்திரங்களும், கடற்கரை மணலத்தனையாகவும் இருக்க வேண்டியிருந்தது. மத்தேயுவின் வசனம் நேரிடையாகச் சொல்லாவிட்டாலும், வானத்து நட்சத்திரங்களையே விவரிக்கிறது. **சுவிசேஷ யுகத்தின் அறுவடையைப் பற்றி** மத்தேயு இங்கு குறிப்பிடுகிறார். வெளிப்படுத்தல் ஆகமம் (வெளி 20 : 8) **ஆயிர வருட கால அறுவடையை** விவரிக்கிறது. வானத்து நான்கு திசைகளிலிருந்து இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்ப்பதை மத்தேயு விவரிக்கிறார். வெளிப்படுத்தல் ஆகமம் மோசம் போக்குகிறவர்களை கூட்டிச் சேர்ப்பதை விவரிக்கிறது.

உலகத்தாரை மோசம் போக்காதபடிக்கு சாத்தான் (அவனுடைய ராஜ்ஜீய அதிகாரம்) செயல்பட முடியாமல் ஆயிரம் வருடம் அளவு கட்டப்பட்டிருக்கிறான். இதற்குப் பிறகு, அதே மோசம் போக்குதலை மறுபடியும் செய்ய முற்படுகிறான். 6000 வருடங்களாக அவன் எப்படி உலகத்தாரை மோசம் பண்ணினான் ? பொய்யான மதம் வாயிலாகவும், ராஜ்ஜீய அதிகாரம் வாயிலாகவும் அவன் செய்து வந்தான். பொய் மதம் ஆயிர வருட ஆரம்ப காலப் பகுதியில் (வெளி 19 : 20) தன் அழிவை (முடிவை) தேடிக் கொண்டது. இப்பொழுது மீந்திருக்கும் ஒரே ஏஜென்சி "சிவில் அதிகாரம்" மட்டுமே. வெளி 20ம் அதிகாரத்தின் வலுசர்ப்பம் (12ம் அதிகாரம்) சாத்தானுடைய "ராஜ்ஜீய அதிகாரத்தின் மோசம் போக்கும் இயல்பை" குறிக்கிறது. ஆயிரவருடஆட்சியின் இறுதியில் மீந்திருக்கும் ஒரே ஆயுதம் இதுவே. **முற்பிதாக்கள்** (வெளிப்படையான அரசாங்கம்) மற்றும் **சபை** (காண இயலாத அரசாங்கம்) ---- இவ்விரண்டிற்கும் பெருத்த சவாலாக, "ஜனங்களால்" தூண்டப்படும் புதிய ராஜ்ஜீய அதிகாரம் ஆயிர வருட அரசாட்சியின் முடிவு காலத்தில் ஸ்தாபிக்கப்பட முயற்சிக்கப்படும்.

"கோகு" என்பது "மலை" என்றும், "மாகோகு" என்பது "பெரியமலை" என்றும் சொல்லிலக்கணப்படி பொருள்படும். இந்த இரண்டு பெயர்களும் சுவிசேஷ யுக முடிவில் இஸ்ரவேல் மூலமாக தேவனுடைய புதிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சவாலாக இருப்பதை அடையாளப்படுத்துவது போல, ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் தேவனுடைய புதிய ஒழுங்கு முறை ஸ்தாபிக்கப்படுவதற்கும் இவைகள் சவாலாக இருக்கும். "மலை" என்பது ராஜ்யத்தைக் குறிக்கும்.

வெளி 20 : 9.

**அவர்கள், பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும், வளைந்து கொண்டார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது .**

தனிப்பட்ட தலைவர்கள், மற்றும் அவர்களைப் பின்பற்றுவோரின் திட்டமிட்ட மோசம் போக்கும் முயற்சியை, தேவன் தம்முடைய விரைவான தீர்ப்பினால் முடிவுக்கு கொண்டு வருவார். தனிப்பட்ட மனுஷர்கள் தம் முடிவை சந்திப்பதை வசனம் 9ல் தெளிவாக அறிகிறோம். இவர்களுக்கெல்லாம் பின்னால் செயல்பட்ட சொல்லர்த்தமான பிசாசுவுக்கும் முடிவு வருகிறது.

வெளி 20 : 10.

**மேலும், அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் .**

“வலுசர்ப்பம்” என்று அடையாளப்படுத்தப்பட்ட “ராஜ்ஜீய அதிகாரம்” ஒரு அமைப்பு என்ற முறையில் தன் முடிவைத் தேடிக் கொள்கிறது. ஆயிரம் வருஷங்களுக்கு மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ----இரண்டும் தள்ளப்பட்ட அக்கினிக் கடலில் வலுசர்ப்பமும் (ராஜ்ஜீய அதிகாரமும்) தள்ளப்படுகிறது. (வெளி 19 : 20; 20 : 10). “அக்கினிக் கடல்” என்பது 14ம் வசனத்தில் இரண்டாம் மரணத்தைக் குறிக்கும் அடையாளமாக இருக்கிறது என்று பார்த்தோம். கடலும் அக்கினியும் ஒன்றாக கலவாது; நீரும் நெருப்பும் கலவாது.; ஆனால் இங்கு தண்ணீர் இல்லை. கடல் என்பது முற்றிலும் அமிழ்ந்த (மூழ்கிய) தன்மையைக் குறிப்பதாக இருக்கலாம். இந்த அமைப்புகள் முற்றிலுமாக அழிவில் அமிழ்த்தப்படுகிறது.

தனிப்பட்ட மனுஷர்கள் அமிழ்த்தப்படவில்லை. (வாதிக்கப்படவில்லை). “அமைப்புகள்” (அல்லது அவற்றைப் பற்றிய நினைவுகள்) தாம் அழிவுக்கு உட்படுத்தப்படுகின்றன. இனிமேல் பொய்யான மதம், அவற்றின் பிரிவுகள் மற்றும் ராஜ்ஜீய ( சிவில்) அதிகாரம் எதுவும் நினைவில் வருவதில்லை.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## பகுதி 3 : வெளி 20 : 11 - 15; 21 : 1.

இந்த பகுதி, தனிப்பட்டவர்களின் தீர்ப்பைப் பற்றி இறுதியாக விவரிக்கிறது.

**வெளி 20 : 11.**
**பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின் மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடம் காணப் படவில்லை .**

பழைய ஒழுங்குமுறைகள் கொண்ட அமைப்புக்களின் மேல் (அடையாள பாஷையில் வானமும் பூமியும்) தீர்ப்பு நடைபெறாமல், விழுந்து போன மனுக்குலத்தார் மீது சரியான தீர்ப்பு செலுத்த இயலாது. இதைத் தான் வசனம் 11ல் பழைய ஒழுங்குமுறைகள் முற்றிலும் அகற்றப்பட்டது என்றும், புதிய பணியாகிய "தனிப்பட்டவர்களின் மீதான தீர்ப்பு" எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் துவங்க ஏதுவாகும் என்று தெரிய வருகிறது.

பெரிய : பூமி முழுமையையும் கட்டுப்படுத்தக்கூடிய
வெள்ளை : களங்கம் இல்லாத
சிங்காசனம் : தீர்ப்பின் அதிகாரம்

ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்ப காலப்பகுதியில் நியாயத்தீர்ப்பின் அதிகாரம் ஸ்திரப்படுத்தப்படுகிறது. இந்த அதிகாரம், உலக மக்களை (தனிப்பட்ட ஒவ்வொருவரையும்) நியாயந்தீர்க்க பிரயோகிக்கப் படுவதற்கு முன்னர், பழமையான ஒழுங்கு மரபு கொண்ட அமைப்புக்கள் (வானமும் பூமியும்) முற்றிலும் அகற்றப்பட்டு, மீதம் எதுவும் இருக்கக் கூடாது.

தனிப்பட்டவர்களின் மீதான தீர்ப்பு பற்றி 12ம் வசனம் விவரிக்க ஆரம்பிக்கிறது :

**வெளி 20 : 12 .**
**மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது.அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் .**

இந்த வசனத்தில் "ஆயிரம் வருடங்கள்" என்று குறிப்பிடவில்லை என்பதை கவனிக்க வேண்டும். இந்த பகுதி, தனிப்பட்ட மனுஷர்களின் மீதான தீர்ப்பை மையப்படுத்தி விவரிக்கிறது. மத்தியஸ்தம் பண்ணக்கூடிய இந்த காலப் பகுதியை "ஆயிரம் வருடங்கள்" என்று புரிந்து கொள்ளக்கூடாது.

வானமும் பூமியும் அகன்று போன பிறகு, "நிற்கக் கண்டேன்" என்று யோவான் சொல்லுகிறார். பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாதவர்கள் அனைவரும் "மரித்த" நிலையிலிருப்பவர்கள். உயிர்த்தெழுதல் அடைந்து ஜீவனைப் பெறும் தகுதி பெறும் வரையில் இவர்கள் ஒவ்வொருவரும் ஆதாமில் மரித்தவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களில் யாருக்கும் எந்த முன்னுரிமையும் கொடுக்கப்படாமல், பெரியோர் சிறியோர் அனைவரும் உள்ளனர். இந்த கருத்தை எரேமியா 31 : 33 - 34ல் "அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள்." என்று படிக்கிறோம். இந்த புதிய உடன்படிக்கை, மரித்த இவர்கள் எல்லோரையும் சரிசமமாகவே பாவிக்கிறது.

"புஸ்தகங்கள் (பன்மை) திறக்கப்பட்டன" என்பது, வேதாகம புஸ்தகங்களில் உள்ள சத்தியங்களை அறிந்துணரும்படி ஞானக் கண்கள் திறக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது. பகுத்துணரும் அறிவு இல்லாமல் தீர்ப்பு அளிப்பது நியாயமாகாது. "வேறொரு புஸ்தகம் (ஒருமை) திறக்கப்பட்டது" என்பது உயிர்த்தெழுந்த ஒவ்வொருவரும் பூரணமாகவும், ஜீவனுக்குரிய தகுதியும் பெறும் நிலையை

அடைந்ததற்கான அங்கீகாரத்தை (ஒப்புகை) அடையாளப் படுத்துவதாக அவனவனுடைய பெயர் அந்த புஸ்தகத்தில் எழுதப்படுவதைக் குறிக்கிறது. புஸ்தகங்களில் உள்ள விஷயங்களை அறிந்து, கைக்கொண்டு, புது மனுஷனாக வளருகிறார்கள் என்று மரித்தவர்கள் மேற்கொள்ளும் செயல் முறைகளால் கணிக்கப்படுகிறார்கள். சுவிசேஷ யுகத்தின் நோக்கமும் இதுவே; அவரவர்களின் கிரியைகளுக்குத் தக்கதாக தீர்ப்பளிக்கப்படுகிறார்கள். பழைய நியாயப்பிரமாணத்தைப் போன்றே, புதிய உடன்படிக்கையும் கிரியைகளின் பரிபூரணத்தை எதிர்பார்க்கிறது. இந்த புதிய சட்டம் கற்களில் எழுதப்படாமல், மனுஷர்களின் இருதயங்களில் எழுதப்படுவதால், இந்த பூரண நிலை அமைய இயலும்.

**வெளி 20 : 13.**

**சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும், பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள் .**

"சமுத்திரம்" என்பது ஏன் தனித்து குறிக்கப்பட்டுள்ளது ? இதற்கு முக்கிய காரணம் உள்ளது. வேதாகமத்தில் ஏற்கனவே உரைக்கப்பட்டவைகளில் விடுபட்டு போனவைகளை முழுமைப்படுத்தும் விதத்தில் வெளிப்படுத்தல் ஆகமம் உள்ளது. "சமுதாயம்" என்பது மூன்று பகுதிகளைக் கொண்டதாக வேதாகமத்தில் உருவகப்படுத்தப்படுகிறது :

1) வானம் 2) பூமி 3) சமுத்திரம்.

11ம் வசனத்தில், பழைய வானமும், பூமியும் என்ன விளைவை சந்திக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மீந்திருப்பது, "சமுத்திரம்" மட்டுமே; இதற்கு என்னவாயிற்று ? இது மரித்தோரை ஒப்புவிக்கிறது; எப்படி ? ஏசாயா 60 : 5ல் "கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும்; ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்திற்கு வரும்" என்று படிக்கிறோம். "சமுத்திரம் மரித்தோரை ஒப்புவிக்கிறது" என்பது, "சமுத்திரம்" என்று உருவகப்படுத்தப்பட்ட "அமைதியற்ற, ஒழுங்கு மரபுகளில் அக்கறையில்லாத பிரிவினர்", புதிய பூமிக்குரிய தகுதியை பெறுகிறவர்களாக மாறுகிறார்கள். இதைத் தான் வெளி 21 : 1ம் வசனம் தெரிவிக்கிறது : "நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்" இந்த வசனத்தில் "சமுத்திரம்" குறிப்பிடப் படவில்லை. அதாவது, "சமுத்திரம்" மறைந்து போய் விட்டது. ஏனெனில், இது புதிய பூமியின் அங்கமாகி விட்டது; மனுக்குலத்தை சங்கடப்படுத்திய அமைதியற்ற நிலை மறைந்து விட்டது; இவர்கள் அனைவரும் புதிய பூமியில் வேரூன்றியிருப்பார்கள்.

**மரணமும் நரகமும் :**

இந்த இரண்டு நிலைகளும் வேதாகமத்தில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு நிலைமைகளை கொண்டவர்களின் பின் விளைவுகள் பற்றி வெளி 20 : 13ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மரணம்" என்பது, மரண சாபத்திற்குட்பட்டு இவ்வுலகில் வாழ்கிறவர்கள்; தவிர்க்க இயலாதபடி இவர்கள், உண்மையான மரணத்தை சந்திக்கும் நிலையிலிருப்பவர்கள். "நரகம்" என்பது "வெறுமை" அல்லது "ஒன்றுமில்லாமை"யைக் குறிக்கிறது. இதை "பாதாளம்" என்று அழைக்கிறோம். ஆகவே, தங்கள் வாழ்க்கையில் எந்தெந்த நிலைமைகளில் இருந்தார்களோ, அந்த நிலைமைகளை கைவிட்டு, மனுக்குலம் வெளி வருகிறது. பழைய வானமும், பழைய பூமியும் மறைந்து போன சூழ்நிலையில் (வசனம் 11), சிலர் இவற்றிலிருந்து வெளியே கொண்டு வரப்படுகின்றனர்.

இப்படியாக, பூமியின் மேல் சஞ்சரிப்போர் தங்கள் “மரித்த நிலையிலிருந்து” (வியாதி, பலவீனம் போன்றவைகளிலிருந்து) வெளியே வருகின்றனர்; கல்லறைக்குள் சென்றவர்கள், பாதாளத்தின் “தூக்க நிலையிலிருந்து” விழித்து வெளியே வருகின்றனர். இந்நிலைகளை **மரணம், பாதாளம்** என்று இந்த வசனத்தில் குறிக்கப்படுகிறது; சிலர் தங்களுடைய அமைதியற்று எந்த மரபுகளிலும் பிடிப்பற்றவர்களாய் நங்கூரம் இல்லாமல் தத்தளிக்கும் நிலைமையை விட்டு வெளி வருகின்றனர். **(சமுத்திர வகுப்பார்) .**

இவர்கள் அனைவரும் நியாயத்தீர்ப்பின் பெரும் பாதையில் நடப்பார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கிரியைகளில் வளர்ச்சியையும், இறுதியில் பூரண நிலையை அடையும் விதத்தில் கணிக்கப்படுவார்கள்.

வெளி 20 : 14.

**அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன; இது இரண்டாம் மரணம் .**

பழைய வானமும் பழைய பூமியும் மறைந்து விட்டது போல, மரணமும் நரகமும் அகன்று விட்டன. இவைகள் யாவையும் தம் பிடியில் இனி மேல் வைத்திருக்க இயலாததால், வானமும் பூமியும் அகன்று போகும். அதாவது, மரணமும், நரகமும் அழிவில் மூழ்கடிக்கப்படும். (அக்கினிக் கடலில்). இதுவே இரண்டாம் மரணம் ஆகும். அதாவது, மரணத்திலிருந்து இனி விடுதலை கிடைக்காது. இந்த மரணமானது தன் வசம் பிடித்திருப்பதை எக்காலத்திலும் விடாது. இரண்டாம் மரணம் அழிக்கப்படாத ஒன்று. ஆனால், இது பெரிதாக வளரவும் இயலாது.

வெளி 20 : 15.

**ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்.**

உயிர்த்தெழுதலை அடையாதவன் (மறுபடியும் முழுவதுமாக நிற்க இயலாதவன்) இரண்டாம் மரணத்திற்கு உட்படுத்தப்படுவான்.

வெளி 21 : 1.

**பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின. சமுத்திரமும் இல்லாமற் போயிற்று .**

இந்த வசனத்தின் கரு ஏற்கனவே வெளி 20 : 13ம் வசனத்தில் கையாளப்பட்டுள்ளது. இந்த வசனம் யுகம் அனைத்தின் சாராம்சத்தைத் தெரிவிக்கிறது. அதாவது,

**1)** சமுதாயம் (பூமி) முற்றிலும் மாறும் நிலையை அடைகிறது.
**2)** போலி மத ஆளுகை முற்றிலும் அகன்று விடுகிறது.
**3)** கடந்த காலத்தில் மனுக்குலத்தார் கொண்டிருந்த பயம் காரணமாக அமைதி இழந்த நிலைமை அகன்று விடுகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 21ம் அதிகாரம்

## புதிய ஒழுங்கு முறை அடிப்படையில் அரசாளுகை ; மணவாட்டி - புதிய எருசலேம் :

**வெளி 21 : 2 .**
**யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன் ; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது .**

**பரிசுத்த நகரம் :**
'நகரம்' என்பது 'ஆளும் அரசாங்கத்தை' குறிக்கிறது; வெளி 18 : 21 ல் தள்ளுண்ட ' பாபிலோன் ' நகரத்திற்கு மாற்றாக 'பரிசுத்த நகரம்' உள்ளது.

**புதிய எருசலேம் :**
'எருசலேம்' என்ற வார்த்தை எபிரேய மொழியில் 'பன்மையை' குறிக்கிறது. சாராள் உடன்படிக்கையில் புதிய (மேலான) எருசலேம் உருவானது ; (கலா 4 : 25, 26).

'எருசலேம்' என்ற பெயர் 'சமாதானம்' என்ற அர்த்தத்தை உள்ளடக்கியதாகும் ; இது சமாதான ஸ்தலம் ஆகும். (ஏசாயா 2 : 3).

**பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன் :**
' இறங்கி வருதல் ' என்பது ' மனுஷர்களிடத்தில் தொடர்பு கொள்ள இருப்பதை ' காட்டுகிறது.

**தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு :**
தேவ திட்டம் (ஆணை - மனுஷர் மத்தியில் செயல்படப் போகும் நிலை) இங்கு உணர்த்தப்படுகிறது.

**தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது :**
மணவாட்டி (உடன் சுதந்தரவாளி) என்பது 'திருச்சபையைக்' குறிக்கிறது. திருச்சபை 2000 வருட காலமாய் தேர்ந்தெடுக்கப்பட்டு, புடமிடப்பட்டாலும், தன் கிரியைகளின் பலனாக இல்லாமல் கிறிஸ்துவின் கிரியைகளை (தேவனுக்குகந்த பலி) ஆபரணங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட நிலை இங்கு குறிக்கப்படுகிறது. சங் 45:13,14. இந்த பரிசுத்த எருசலேம் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். இந்த ஆளுகை மணவாட்டியினுடைய ஆளுகை அல்ல; இது கிறிஸ்துவின் ஆளுகை ஆகும்.

**வெளி 21 : 3.**
**மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது, இதோ , மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது.அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார் ; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.**

**பெருஞ்சத்தம் :**
இது பூமியைச் சார்ந்த விஷயங்களில் நிகழப் போகும் மிக முக்கியமான மாற்றங்களை வெளிப்படுத்தும் பறைசாற்றலைக் குறிக்கிறது.

**தேவனுடைய வாசஸ்தலம் :**

இங்கு 'ஆலயம்' என்று சொல்லப்படவில்லை. இவ்வுலகத்திற்கான ஆயிர வருட அரசு, இஸ்ரவேலருக்காக ஏற்படுத்தப்பட்ட ஆசரிப்பு கூடார அமைப்பு முறையைப் போல் உள்ளது.

இந்த இரண்டு அமைப்பு முறைகளிலும், தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தம் பண்ண ஆசாரியர்கள் தேவை. ' கூடாரம் ' என்பது தற்காலிக நிலையை காட்டுகிறது. இந்த ஆயிர வருட அரசின் விஷயத்தில், தேவனிடத்தில் மனுஷர் நிரந்தரமான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் வரையில் தேவனுடன் மத்தியஸ்தர் மூலமாக இருக்கும் உறவு தற்காலிகமாக இருக்கும். அதுவரையிலும் மனுஷர் மத்தியிலே தேவனுடைய வாசஸ்தலம் கூடார நிலையிலே இருக்கும்.

மத்தியஸ்தர் (ஆசாரியத்துவம்) மூலமாக மனுஷர் தேவ பிரசன்னத்தை உணர்ந்த நிலையில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டு, பூரணராகும் நிலையை படிபடியாக அடைவர். மனுஷர்கள் முழுவதும் ஏதேன் தோட்டத்து ஆதாமின் நிலையை அடைந்தவுடன் மத்தியஸ்தர் தேவை இல்லை. "தேவன் தாமே" அவர்களோடிருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

**வெளி 21 : 4.**

**அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை , அலறுதலுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது .**

இவ்வுலகம் பிதாவினிடத்திற்கு திரும்பியவுடன் , மனுஷரின் கண்ணீர் (பாவ உலகின் மிச்ச நியம ஒழுங்குகள்) யாவையும் கடந்து போயிருக்கும். ஆதாமின் மரணத்தை மத்தியஸ்தராகிய கிறிஸ்து ஒழித்த பிறகு , பிதாவினிடத்தில் ஆட்சியை ஒப்படைக்கும் தருணத்தில் 'இனி மரணமும் இல்லை' என்ற நிலை உண்டாயிருக்கும். "அவர்கள் இனி மரிக்கவும் மாட்டார்கள்" லூக் 20 : 36; இந்த தீர்க்கதரிசனம் ஆயிர வருட அரசாட்சி முடிந்தவுடன் 'எட்டாம் நாளுக்கு' உரியது.

துக்கம், அலறுதல், வருத்தம் எல்லாம் படிப்படியாக ஆயிர வருட அரசாட்சியில் நீக்கப்படும். ' எட்டாம் நாள் ' ஆரம்பமாகும் பொழுது எல்லாம் நீங்கியிருக்கும்.

**வெளி 21 : 5.**

**சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் : இதோ , நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர் : இந்த வசனங்கள் சத்தியமும், உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.**

சிங்காசனத்தின் (ஆட்சிப்பொறுப்பு) மேல் வீற்றிருந்தவர் இயேசு; இவர் ஆயிர வருட ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது (கி.பி. 1874 க்கு பிறகு).

"நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்ற வசனத்தை, அப் 3 : 20, 21ல் குறிக்கப்பட்டிருக்கும் வசனத்துடன் ஒத்துப்பார்க்கவும். எல்லாம் திரும்ப கிடைக்கப்பெறும் காலம் **( TIME OF RESTITUTION )** ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. அதன் ஆரம்பம் தான் 'இயேசுவின் வருகை'. ஆட்சிப்பொறுப்பை ஏற்ற இயேசு 'நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் ' என்று உறுதியளித்திருக்கிறார்.

இந்த செய்தி தான் 'சுவிசேஷத்தின் சாராம்சம்'. இந்த நற்செய்தியை "எழுது" என்று (ஏசாயா 52 : 7) மாம்சத்திலிருக்கிற திருச்சபைக் கூட்டத்தாரைப் பார்த்து இயேசு கூறுகிறார். இந்த சுவிசேஷத்தை பிரசித்தப்படுத்தும் சாட்சியாக இப்பொழுது இருக்கிறது. பிறகு "சகலத்தையும் புதிதாக்கும்" பாணியில் இயேசுவுடன் கூட ஆளுகை செய்து அவருடன் செயல்பட இருக்கின்றனர். இந்த சுவிசேஷத்தின் சத்தியத்தையும் உண்மையையும் தற்போதுள்ள லவோதிக்கேயா கால சபையினர் தெளிவாக புரிந்து கொள்வர்.

**வெளி 21 : 6.**

**அன்றியும், அவர் என்னை நோக்கி : ஆயிற்று, நான் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.**

**'ஆயிற்று' :** கிரேக்க வார்த்தை GINOMO . “நிகழ்வு முடிவடைந்தது“ என்று பொருள்படும். அதாவது, “நிகழ்வின் முடிவு நடைமுறைக்கு வர ஆரம்பித்தது“ என அர்த்தம் கொள்ளலாம். “நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்“ என்ற விஷயம் நடைமுறைக்கு வர ஆரம்பித்து முடிவடையும்.

**நான் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் :**

வெளி 1 : 18 ல் இயேசு இவ்விதமே குறிப்பிடுகிறார் .

தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்ட “நிறைவேறும் காலம்“ (இழந்த யாவையும் திரும்ப பெறும் காலம்) துவங்கிவிட்டது. இயேசு ராஜாதி ராஜாவாக, முழு அதிகாரத்தையும் பிதாவிடம் பெற்றுள்ள நிலையில் எல்லா காரியங்களிலும் நியாயாதிபதியாக ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார்.

**தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன் :**

உலகம் முழுவதும் தாகமாய் மத்தியஸ்தரை (தலையும் சரீரமும்) அணுகும் போது ஜீவ ஊற்றாகிய கிறிஸ்துவிடமிருந்து அவர்கள் ஜீவனைப் பெறுவார்கள். இது வருங்காலத்தில் நடக்கும். ஆதாமில் விழுந்த ஜாதிகள் திரும்ப இலவசமாய் ஜீவனைப் பெறும் காலம் இது.

**வெளி 21 : 7.**

**ஜெயங்கொள்கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் : நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.**

திருச்சபையினர் எவ்விதம் ஜெயங்கொள்கிறார்களோ (வெளி 2 : 7, 11, 17), அவ்விதமே, மனுக்குலமும் பாவ உலகத்தின் சீர்கேடுகள், மற்றும் பழைய நியமங்களை அவற்றின் பாதிப்புகளிருந்து தம்மை விடுவித்து ஜெயங் கொள்ள மத்தியஸ்தரின் ஆளுகை உதவிபுரியும்; இவ்விதம் ஜெயங்கொள்ளும் மனுக்குலம், இழந்ததை மீண்டும் திரும்ப பெறுவர். இந்த நிறைவேறுதலின் காலத்தில் இயேசு அவர்களுக்கு தேவனாயிருப்பார். அவர்கள் இயேசுவுக்கு குமாரராயிருப்பார்கள்.

**வெளி 21 : 8.**

**பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார் .**

' திரும்ப பெறுதலை ' தவற விட்டவர்கள் இவர்களே !

| | | |
|---|---|---|
| **பயப்படுகிறவர்கள்** | : | விசுவாச வளர்ச்சியை தடுக்கும் பயம். |
| **அவிசுவாசிகள்** | : | தேவ நம்பிக்கையற்றவர்கள். |
| **அருவருப்பானவர்கள்** | : | கிறிஸ்துவின் பலியின் மேன்மையை உணராதவர்கள்; அநீதியின் பால் நாட்டமுள்ளவர்கள். |
| **கொலைபாதகர்** | : | சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தி , தம்மை மேன்மைபடுத்திக் கொள்பவர்கள். |
| **விபச்சாரக்காரர்** | : | தடைபண்ணப்பட்ட காரியங்களில் ஈடுபடுவோர். |
| **சூனியக்காரர்** | : | உண்மையையும் பொய்யையும் கலந்து மிகைப்படுத்துவோர். வெளி 18:23; கலா 5:20; |
| **விக்கிரகாராதனைக்காரர்** | : | மற்றவர்களுடைய கௌரவம் / மரியாதைகளை தனதாக்குதல் . |
| **பொய்யர்** | : | உண்மைக்கு இடங்கொடுக்காமல் வெளிவேஷம் போடுவோர். |

**வெளி 21 : 9.**
**பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து : நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி .**

ஏழு தூதர்களில் ஒருவன் அறுவடை காலத்தில் யோவான் வகுப்பாருக்கு தேவத் திட்டங்களின் ரகசியங்களை வெளிப்படுத்துகிறான்; ஏற்ற வேளையில் தன் வேலைக் காரருக்குப் போஜனம் கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரன் இந்த ஏழாம் தூதன் ! மத் 24 : 45 - 47; மணவாட்டியையும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், பாபிலோன் வேசியைப் பற்றியும் (17ம் அதிகாரம்) ஏற்ற வேளையிலே அறிமுகப்படுத்தியவர் பாஸ்டர் ரசல் அவர்களே !

**வெளி 21 : 10.**
**பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின் மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்.**

வெளி 17 : 1 - 4; மற்றும் வெளி 21 : 9 - 11; இந்த இரு வசனங்களிலுமுள்ள ஒற்றுமையைப் பார்க்கலாம். அதே தூதன், வேசிக்கு நியாயத்தீர்ப்பையும், கன்னிகைக்கு மேன்மையையும் காண்பிக்கிறான்.

**பெரிதும் உயரமுமான ஒரு பர்வதம் :** எல்லா மகிமையுடன் கூடிய தேவனுடைய ராஜ்யம். ஏசாயா 2 : 2 - 4.

**தேவனுடைய மகிமையை அடைந்த :**
வெளி 4 : 3ம் வசனத்தை ஒத்துப் பார்க்கவும்; வச்சிரக்கல்லின் பிரகாசம் தேவனுடைய குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும் நிழல் ஆகும்; தேவ மகிமையை (தேவ குணலட்சனங்களை) புதிய எருசலேம் (மணவாட்டி) தன்னகத்தே கொண்டு தேவ நோக்கத்தை நிறைவேற்ற பூமிக்கு மனுஷர்களிடத்தில் வருகிறது.

**தேவனிடத்திலிருந்து :** தெய்வீக கட்டளை பெற்று;

**எருசலேமாகிய பரிசுத்த நகரம் :** சமாதானம் விளங்கும் புதிய நீதிக்குரிய அரசாங்கம்.

**பரலோகத்தை விட்டு .. இறங்கிவருகிறதை :**

மனுஷர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள;

**வெளி 21 : 11 .**
**அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது .**

**அதின் பிரகாசம் :**
'பிரகாசம்' என்பது மணவாட்டியின் குணாதிசயங்களின் தெளிவைக் குறிக்கிறது. மற்றவர்கள் மீது தன் பிரகாசத்தை அளிக்கக்கூடிய சக்தியைக் காட்டுகிறது; மணவாட்டியின் குணங்கள் அவளது நெற்றியில் எழுதப்பட்டு பிரதியட்சமாக தெரிகிறது; வெளி 14 : 1; இதற்கு நேர்மாறான குணலட்சனங்கள் பாபிலோன் வேசியின் நெற்றியில் காணப்படுவதை வெளி 17 : 5ல் காண்கிறோம்.

**மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போல :**

பாபிலோன் (வெளி 18 : 21) ' எந்திரக் கல் ' என குறிக்கப்படுகிறது;
தீரு பட்டணம் ' கல் ' என பொருள்படும் .

ஆனால், எருசலேம் ' மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல் ' .

**பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல் :**

இது கலப்பில்லாத உறுதியான கல். தேவனுடைய குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற 1,44,000 பேர்களின் மகிமையை விளக்குகிறது.

**வெளி 21 : 12 .**
**அதற்கு பெரிதும் உயரமுமான மதிலும் கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள்,**
**தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள், ஆகப் பன்னிரண்டு வாசல்கள் இருந்தன.**

இங்கு விவரிக்கப்படும் 'நகரம்' மற்றும் அதன் அம்சங்கள் அனைத்தும் வெளிப்படை பொருளாகக் கொள்ளக்கூடாது;

**பெரிதும் உயரமுமான மதில் :**
மதில் (சுவர்) என்பது , மனுஷர்கள் மிக்க ஆவலுடனும், தாபத்துடனும் வேண்டுகிற பாதுகாப்பு ஆகும்.

**பன்னிரண்டு வாசல்கள் :**
மனுக்குலத்தார் தேவனுடைய ஏற்பாட்டுக்கு செவி கொடுக்கும் நிலை.

**வெளி 21 : 13.**
**வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன.**

**வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள் :**

மேலான உயிர்த்தெழுதல் பெற்று (எபி 11 : 35) பூமியெங்கும் பிரபுக்களாக (சங் 45 : 16) நியமிக்கப்படும் முற்பிதாக்கள் இவர்களே ! இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களின் பிரதிநிதிகள் இவர்களே ! தேவ ஏற்பாட்டில் இஸ்ரவேலர்களின் பங்குகளை அங்கீகரியாதவர்கள் நகரத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சகரியா 14 : 17. கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில் வாசல் காப்போராகிய இஸ்ரவேலர்களின் பங்கு சகரியா 8 : 20 - 23ல் தெளிவாகக் காணப்படுகிறது.

**அந்த வாசல்களின் மேல் ... நாமங்களும் எழுதப்பட்டிருந்தன :**

வெளி 7 :4-8ல் திருச்சபை இந்த 12 கோத்திரங்களுக்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது. 'நாமம்' என்பது குணம் / பண்பு. ஆயிர வருட அரசாட்சியில் மனுக்குலத்தார் 12 கோத்திரங்களின் குணலட்சணங்களைப் பெற்று நகரத்திற்குள் செல்லும் தகுதி பெறுவர்.

**வெளி 21 : 14 .**

**நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக்கற்களிருந்தன; அவைகள் மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன .**

**நகரத்தின் மதில் :**

'நகரம் ' என்பது திருச்சபை. அதின் 'மதில்' என்பது , நகரத்தில் நுழைபவர்களுக்கு திருச்சபை அளிக்கும் பாதுகாப்பு ஆகும்.

**பன்னிரண்டு அஸ்திபாரக்கற்கள் :**

வசனம் 16ல் குறிப்பிட்டுள்ளபடி, இந்த நகரம் ஒரு கன சதுர (CUBE) அமைப்பு கொண்டது. இதற்கு 12 விளிம்புகள் உள்ளன. இவைகள் அஸ்திபாரங்கள் ஆகும். தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்கள் உள்ள நகரம் (புதிய எருசலேம்) இது தான்; எபி 11 : 10; அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் திருச்சபையினர் கட்டப்பட்டவர்கள் என பவுல் எபே 2 : 20ல் குறிப்பிடுகிறார்.

**அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன :**

வாசல்களின் மேல் நாமங்கள் எழுதப்பட்டது போல் அஸ்திபாரங்களின் மேலும் நாமங்கள் எழுதப்பட்டுள்ளன.

குணங்களில் தகுதி பெற்று நகரத்தின் வாசல்களில் பிரவேசிக்கும் மனுக்குலத்தார், கிறிஸ்துவின் வழியாக அப்போஸ்தலரால் உபதேசிக்கப்பட்ட சுவிசேஷ சத்தியங்களின் அடிப்படையில் புதிய நகரத்தின் மனுஷர் செயல்படுவர்.

**வெளி 21 : 15 .**

**என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்.**

| | | |
|---|---|---|
| **பொற்கோல்** | : | இது வேத வாக்கியங்களைக் குறிக்கிறது. |
| **அளத்தல்** | : | தேவத் திட்டங்களை கிரஹித்து , அறிந்துணரும் வல்லமையைக் குறிக்கிறது. |

| | | |
|---|---|---|
| **நகரத்தை அளத்தல்** | : | ஆளுகையின் (ஆட்சி) செயல்பாடுகளைக் கணித்தல். |
| **வாசல்களை அளத்தல்** | : | நகரத்தில் நுழைவதற்கு தேவைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல். |
| **மதில்களை அளத்தல்** | : | நகரத்தின் ஆசீர்வாத அம்சங்களை பாதுகாப்புடன் தக்க வைத்துக் கொள்ளும் முறைகளை அறிந்து கொள்ளுதல். |

**வெளி 21 : 16 .**

**அந்த நகரம் சதுரமாயிருந்தது , அதின் அகலமும், நீளமும் சமமாயிருந்தது; அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான் ; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது. அதின் நீளமும் அகலமும், உயரமும் சமமாயிருந்தது .**

நகரம் 'மூன்று பரிமாணங்கள்' (THREE DIMENTIONS) கொண்டது ஆகும்; அதாவது, நீளம் அகலம், உயரம் சமமாகக் கொண்ட “கன சதுர அமைப்பில்” உள்ளது. இது தேவ திட்டத்தின் சகல அம்சங்களும் ஒன்றுக்கொன்று இசைவான இணக்கத்துடன் (பொருத்தத்துடன்) செயல்படுவதை சுட்டிக்காட்டுகிறது.

**நகரம் பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது :**

'ஸ்தாதி' (STADIUM = பர்லாங்கு) என்பது தூரத்திற்கான அளவு. "விளையாட்டு பந்தயங்கள் நடக்கும் அரங்கம்' (RACE COURSE) என்றும் அர்த்தம். இந்த குறுகிய அரங்கமான 'நெருக்கமான' வாசல் வழியாக பிரவேசித்து , மகிமையடைந்த திருச்சபையாகிய புதிய எருசலேமின் அளவு 12000 ஸ்தாதிகள் ஆகும்.

ஒரு கன சதுரத்தில் 12 விளிம்புகள் உள்ளன. ஒரு விளிம்பின் அளவு 12,000 ஸ்தாதிகள் ஆகும்;

நகரத்தின் மொத்த அளவு = 12 x 12000 = 1,44,000 ஸ்தாதிகள் .

வெளி 7 : 4 - 8ல் ஆவிக்குரிய இஸ்ரவேல் கோத்திரத்தார் எண்ணிக்கை 1,44,000. (ஒவ்வொரு கோத்திரத்தார் 12,000).

நகரத்தின் 12 விளிம்புகள் 12 அப்போஸ்தலர்களாக குறிக்கப்பட்டால் அவர்களின் போதனைகள் புதிய நகரத்தின் அஸ்திபாரங்களாக கட்டமைப்பாக உருவகிக்கலாம். திருச்சபையின் ஒவ்வொருவரும் கட்டமைப்பின் 1,44,000 பேர்களடங்கிய அங்கங்களாகி, முழு நகரத்தையும் சுற்றி வரைந்த வடிவமாக புதிய எருசலேம் காணப்படுகிறது. நகரத்தில் உள்ள மனுமக்கள் அனைவருக்கும் ஆயிர வருடம் முழுமைக்கும் பாதுகாப்பு மதிலாக திருச்சபை இருக்கும்.

## கணித எண்களின் சில ஒற்றுமைகள்

**A .**

ஒரு பர்லாங்கு (ஸ்தாதி) என்பது ஒரு மைலில் எட்டில் ஒரு பங்கு;
அதாவது, 5280 / 8 = 660 அடிகள்.

12,000 பர்லாங்குகள் = 12,000 x 660 = 79,20,000 அடிகள்.

மைல், அடிகளை விட்டு விட்டு, எண்களை மட்டும் கணக்கில் கொண்டால், அளவு 7920 என்று சொல்லலாம். இது பூமியின் விட்டம் 7920 மைல்களைக் குறிக்கிறது;

கன சதுர வடிவான நகரத்தின் ஒரு விளிம்பின் அளவாக பூமியின் விட்டத்தை எடுத்துக் கொண்டால் புதிய எருசலேம் நகரம், நகரத்தில் வசிப்பவர்களுக்கு 1000 வருடமளவும் இரட்சிப்பாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என யூகிக்கலாம்.

**B .**

எசேக் 41 : 8; 40 : 5; 43 : 13ல் கட்டப்படும் நகரத்தின் அளவுகோல் "பெரிய முழம்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது;

ஒரு பெரிய முழம் = கை முழம் + 4 விரற்கடை = 1.76 அடிகள்;

நகரத்தின் ஒவ்வொரு பக்கமும் 4500 பெரிய முழங்கள் கொண்ட சதுர வடிவாகும்; (எசேக் 48 : 16). அதாவது, ஒரு பக்க அளவு = 4500 x 1.76 = 9260 அடிகள்;

இந்த அளவு நாம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் கண்ட புதிய எருசலேமின் அளவுக்கு துல்லியமாக ஒத்திருக்கிறது. ஆனால், எசேக்கியேலுக்கு கொடுக்கப்பட்ட இந்த கணக்கு மாறுபட்ட வேறொரு எண்களின் அடிப்படையில் உண்டானது என்பது குறிப்பிடத்தக்கது.

C.

வெளிப்படுத்தல் ஆகமத்தின் புதிய எருசலேமின் மேற்பரப்பு = 6 x பக்கம் x பக்கம் .

6 x 12000 x 12000 = 86,40,00,000.

இது சூரியனின் ஆயிரம் மடங்கு விட்டத்திற்குச் சமம். அதாவது, சூரியனின் விட்டம் : 8,64,000 மைல்கள்;

மத் 13 : 43ல் குறித்தபடி, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள் என்பதை உணர்த்துகிறது.

**வெளி 21 : 17.**
**அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்று நாற்பத்து நான்கு முழமாயிருந்தது .**

**அவன் அதின் மதிலை அளந்தபோது :**

'மதில்' என்பது 'பாதுகாப்பு' என அர்த்தங்கொள்வதால், 'மதிலை அளத்தல்' என்பது "மதிலுக்குள் இருப்பவர்கள் எவ்வளவு என கணித்தல்" என பொருள் கொள்ளலாம் ; ரட்சிக்கப்படுவோரின் தொகை மிகக் குறைவு என்றும், பெரும்பான்மையோர் அழிவர் என்றும் பாரம்பரிய கிறிஸ்துவர், கூறுகின்றனர். ஆனால் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே !

**நூற்றுநாற்பத்து நான்கு முழமாயிருந்தது :**

ஏற்கனவே , நீளம், அகலம், உயர அளவுகள் கொடுக்கப்பட்டுவிட்டபடியால், இந்த அளவு "அடர்த்தி" அல்லது "கனம்" என்று சொல்லலாம்.

மதில்களின் கன அளவு = 12000 x 12000 x 144 = 20,736,000,000.

[ ஸ்தாதி, முழம் என அலகுகள் இருந்தாலும், எண்களை மட்டுமே எடுத்துக் கொள்வது, தேவத் திட்டத்தின் சில அம்சங்கள் முற்றிலும் வேறான அணுகு முறை வாயிலாக வெளிப்படுகிறது என்றும் கூறலாம் ].

20,736,000,000 = 2073.60 கோடி என்பது பூமியில் பிறந்து, ஆயிர வருட அரசாட்சியில் நகரத்தில் வாசம் பண்ணும் முடிவான ஜனத்தொகையை குறிக்கலாம்.

4500 வருடங்களுக்கு முன்பிருந்து, அதாவது, ஜலப்பிரளயத்திற்கு பின் இருந்த எட்டு பேர்களிலுமிருந்து பெருகிய ஜனத்தொகையை இந்நாள் வரைக்கும் கம்ப்யூட்டர் மாதிரியை வைத்து கணக்கிடும்போது ஏறக்குறைய சரியாக உள்ளது.

திருச்சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரும் 1,44,000 பேருக்கு இழந்த நிலையைத் திருப்பித் தந்தால், 1,44,000 X 1,44,000 = 20,736,000,000 = 2073.6 கோடி பேர்கள் ரட்சிப்படைவார்கள் என அனுமானிக்கலாம்.

**அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே :**

மதிலை அளக்கும் தூதன் ஒரு மனிதன் என்பதை உணர்த்துவதாக இவ்வசனம் உணர்த்துகிறது; வெளி 17 : 1; மற்றும் வெளி 21 : 9ல் குறிப்பிட்டுள்ள இதே தேவதூதன் யோவான் வகுப்பாருக்கு மிக நெருங்கியவன் என்பது புலனாகிறது.

**வெளி 21 : 18.**

**அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டபட்டிருந்தது ; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது .**

| | | |
|---|---|---|
| வச்சிரக்கல் **(DIAMOND)** | : | வச்சிரக்கல்லின் பிரகாசம், பண்பு / சுபாவங்களின் பரிசுத்த கற்பு நிலையை அறிவிக்கிறது. |
| சுத்தப்பொன் | : | தெய்வீக சுபாவத்தைக் குறிக்கிறது. |
| நகரம் | : | தெய்வீக சுபாவத்தைப் பெற்றவர்கள் செய்யும் ஆளுகை : வெள்ளியைப் போலவும் புடமிடப்பட்ட திருச்சபையாரே புதிய நகரம். |

**அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டபட்டிருந்தது :**

"நகரம்" வச்சிரக்கல்லைப் போல் இருந்தது என்று **11**ம் வசனத்தில் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம்; இங்கு **18**ம் வசனத்தில் "மதில்" குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது. இந்த மதில் மறைவான விதத்தில் இல்லாமல், சுபாவ தூய்மையினால் மட்டுமே காவலும், பாதுகாப்பும் கிடைக்கிறது என்பதை அடையாளப்படுத்துகிறது.

**நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது :**

'பொன்' என்பது 'தெய்வீக சுபாவத்தை' குறிக்கிறது. இந்த தெய்வீக சுபாவத்தைப் பெற்றவர்கள் மட்டுமே இருக்கக்கூடிய இடமாக இந்த நகரம் (அரசாங்கம்) இருக்கிறது. பொன் புடமிடப்பட்டு தூய்மையாக மாறுவது போல, பரிசுத்தவான்கள் பல சோதனைகள் வாயிலாக பரிசுத்தம் அடைவது, இந்த நகரத்தின் ஒரு பங்காக மாறுவதை அடையாளப்படுத்துகிறது. (மல்கி 3 : 3).

"பளிங்குக்கொப்பான சுத்தப்பொன்" என்ற சொற்றொடர் சில கேள்விகளை எழுப்புகிறது. 'பொன்' வெளிப்படைத்தன்மை கொண்டதல்ல. ஆனால், **11**ம் வசனத்தில், நகரம் வச்சிரக்கல்லுக்கு (வைரம் --- வெளிப்படைத்தன்மை கொண்டது) ஒப்பாக உள்ளது என்று படிக்கிறோம். 'பொன்' என்பது நகரத்திலிருந்து வெளிப்படும் பிரகாசமான நிலையைக் குறிப்பதாக இருக்கலாம். இந்த உருவகம், "ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போல" என்றும் (தானியேல் 12 : 3), "நீதிமான்கள் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்" (மத் 13 : 43) என்றும் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களுக்கு இணக்கமாய் உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், வச்சிரக்கல்லின் வாயிலாக பிரகாசிக்கும் சூரியனைப் போல நகரத்தில் பிரகாசம் விளங்கும்.

**வெளி 21 : 19, 20.**

**நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திர நீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், :**

**ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே.**

**நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன :**

"நகரம்" வச்சிரக்கல்லைப் போல் இருந்தது என்று **11**ம் வசனத்தில் படிக்கிறோம்; அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டபட்டிருந்தது என்று **18**ம் வசனத்தில் படிக்கிறோம்.

சூழ்நிலை பொருத்தத்தைக் கொண்டு, மதிலின் அஸ்திபாரங்களும் வச்சிரகல்லினால் ஆனவை என்பதும், அவைகள் சகலவித இரத்தினங்களாலும் (12 விதமான கற்களாலும்) "அலங்கரிக்கப்பட்டிருந்தன" என்பதும் உணரப்படுகிறது. மதிலின் 12 அஸ்திபார கற்களும் அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது என்று 14ம் வசனத்தில் வாசிக்கிறோம். இவர்கள் திருச்சபையின் ஒரு பகுதியாக இருந்தாலும், இவர்கள் விசேஷித்ததும் முக்கியமானதுமான செயற்பாடுகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். (மத் 19 : 28). அப்போஸ்தலர்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் விதமாக விலையேறப்பெற்ற தேவ கிருபைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

**முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திர நீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே :**

இங்கு குறிக்கப்படும் கற்கள் (இரத்தினங்கள்) எவற்றை அடையாளப்படுத்தும் விதத்தில் உள்ளது என்பதை கணிப்பது சிரமமான காரியமாகும். இருப்பினும், இந்த இரத்தினங்கள் ஜாக்கிரதையாக வரிசைக்கிரமப்படுத்தப்பட்டுள்ளதையும், ஒவ்வொரு கல்லும் எந்த வரிசையில் குறிக்கப்பட்டுள்ளது என்பதும் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டில் பல்வேறு கிரமத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களில் மூன்று பேர்கள் மட்டும் ஒரே இடத்தில் குறிக்கப்பட்டுள்ளது நமது கவனத்தை ஈர்க்கிறது. லூக்கா 6ம் அதிகாரம், மாற்கு 3ம் அதிகாரம், மத்தேயு 10ம் அதிகாரம், அப்போஸ்தலர் நடபடிகள் 1ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்களின் பெயர்கள் வெவ்வேறு விதமான வரிசைக்கிரமத்தில் இருந்தாலும், பேதுரு 1ம் இடத்திலும், பிலிப்பு 5ம் இடத்திலும், அல்பேயு என்ற யாக்கோபு 9ம் இடத்திலும், யூதாஸ்காரியோத்துவின் இடம் ஒரே மாதிரியாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். அப்போ 1ம் அதிகாரத்தில் யூதாஸ்காரியோத்தின் பெயர் இல்லை. இந்த வரிசைக்கிரமங்களில், '4' என்ற எண் முக்கியத்துவம் பெறுகிறது.

1 + 4 = 5 (பிலிப்பு)
5 + 4 = 9 (யாக்கோபு)
9 + 4 = 13 இந்த '13' என்ற எண் வியப்பான ஒன்றாக இருக்கிறது. ஏனெனில், யூதா ஸ்காரியோத்து மறைந்து போனதால், 13ம் அப்போஸ்தலராக பவுல் எடுத்துக் கொள்ளப்படுவதற்கான மறைவான தீர்க்கதரிசனமாக உள்ளது.

இஸ்ரவேலின் 12 கோத்திரங்களை நியாயந்தீர்க்க 12 சிங்காசனங்களில் உட்காரும்படியாக அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டன. வெளி 7ம் அதிகாரத்தின் "ஆவிக்குரிய" கோத்திரங்களுடன், அப்போஸ்தலர்களை அடையாளப்படுத்தும் 12 அஸ்திபாரங்களோடு சம்பந்தப்படுத்தக் கூடாது.

எண்ணாகமம் 2 : 3 - 31ம் வசனங்களின் "மாம்சீக" கோத்திரங்களோடு ஒப்பிடும்போது, இதில் 'லேவி' பெயர் சேர்க்கப்படவில்லை. ஏனெனில், அவர்களுக்கு நிலப்பங்கீட்டில் எந்த சுதந்தரமும் இல்லை; 'லேவி கோத்திரம்' முழுமையும் 'ஆவிக்குரிய நிலை'யை அடையும் பிரிவினருக்கு அடையாளமாய் இருக்கிறார்கள்.

பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கத்தில் உள்ள கற்கள் ஒவ்வொன்றுடன் ஒவ்வொரு அப்போஸ்தலரை ஷெல்லி என்ற வேத ஆராய்ச்சியாளர் ஒப்பிடுகிறார். வெளி 21 : 19, 20ம் அதிகாரத்திலுள்ள 12 அஸ்திபார கற்களும், மார்ப்பதக்கத்திலுள்ள 12 கற்களும் ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்புள்ளது; இருப்பினும், மொழி பெயர்ப்பு சிரமங்களினால், எந்த கல்லுடன் எதை ஒப்பிடுவது என்பது இயலாமல் உள்ளது. ஆனாலும், பண்புகளின் அடிப்படையில் இந்த ஒப்புமையை கீழ்கண்டவாறு அறிய முடிகிறது.

| இரத்தினக்கல் | எபிரேய பெயர் | கோத்திரம் | அப்போஸ்தலர் | குணலட்சணம் |
|---|---|---|---|---|
| பத்மராகம் | ஓடம் | யூதா | பவுல் | கொள்கைகளில் ஸ்திரம்; இரக்கம்,பரிவு |
| புஷ்பராகம் | பிடேடா | இசக்கார் | அந்திரேயா | உழைப்பு,ஊக்கம், கடமையுணர்வு |
| மாணிக்கம் | நோஃபக் | ரூபன் | பேதுரு | போராடும் குணம்; தைரியம். |
| மரகதம் | தர்ஷீஸ் | தாண் | செபதேயுவின் குமாரன் யாக்கோபு | தூய்மையான உள் உணர்வு, வெளிப்படை தன்மை |
| இந்திர நீலம் | பரேகாத் | செபுலோன் | பிலிப்பு | தேற்றரவாளன், இனிய சுபாவம், உதவும் மனப்பாண்மை |
| வச்சிரம் | யாகலோம் | காத் | அல்பேயுவின் குமாரன் யாக்கோபு | ஒழுங்கு முறை' தீர்க்க முடிவு |
| கெம்பு | சாப்பிர் | சிமியோன் | நாத்தான்வேல் (பர்தொலொமேயு) | தீவிர பக்தி, நேர்மை |
| வைடூரியம் | சேபு | மனாசே | தோமா | ஜாக்கிரதை உணர்வு சுய சிந்தனை |
| சுகந்தி | அக்லமா | பென்யமீன் | யூதா | சத்தியத்தின் மீது அயராத ஆவல்; நன்னெறியாளர். |
| படிகப்பச்சை | லேஷம் | எப்பிராயீம் | யோவான் | அன்பு, உணர்ச்சி பிரவாகம், விசுவாச காப்பாளர் |
| கோமேதகம் | சோஹம் | ஆசேர் | கானானியனாகிய சீமோன் | உற்சாகமிகுதி' தன்னம்பிக்கை. |
| யஸ்பி | யாசபேத் | நப்தலி | மத்தேயு | நல்லெண்ணம் கொண்டவர்; தாக்குப் பிடிக்கும் தன்மையாளர். |

கற்களின் தன்மைகள், அப்போஸ்தலர்களின் வரலாற்று சம்பவங்கள் மற்றும் கோத்திரங்கள் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, மேற் குறிப்பிட்டவாறு 12 கற்களுடன் 12 அப்போஸ்தலர்களை ஒப்புமை செய்வதாக உள்ளது.

**வெளி 21 : 21 .**

**பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது; நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப்பொன்னாயிருந்தது .**

**பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன :**

12, 13ம் வசனங்களில் நாம் பார்த்தது போல, 'வாசல்கள்' நகரத்திற்குள் நுழைவதற்குரிய கருவியாக இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

இந்த வாசல்கள் முத்துக்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். 'முத்து' என்பது மிகுந்த நெருக்கத்தில் வளரும் தன்மை வாய்ந்தது. அதாவது, சோதனைகளும் கஷ்டங்களுமான அனுபவங்களின் வாயிலாக 'முத்து' தன் அழகை பெருக்கிக் கொள்கிறது. இந்த 'வாசல்கள்' அல்லது அவற்றை கண்காணிப்பவர்கள், சோதனைகள் மூலமாக பெற்ற அனுபவங்களால் வளர்ச்சி அடைந்த ஒரு பிரிவு மக்களாகிய இஸ்ரவேலர்களின் 12 கோத்திரங்களுடன் தொடர்புள்ளவர்கள் போல காணப்படுகிறது. ஆனால், இந்த வசனத்தின் அடுத்த சொற்றொடர், இவர்களைக் குறிப்பதாக அடையாளப்படுத்தவில்லை என்பது தெரிகிறது.

**ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது :**

ஒருவன் எந்த வாசல் வழியாக நுழைந்தாலும், அவன் ஒரு முத்துக்குள் மட்டுமே நுழைகிறான் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. மத் 13 : 45, 46ம் வசனங்களில் சொல்லப்படும் உவமை ஞாபகத்துக்கு வருகிறது. ஒருவன் இரட்சிப்பு அடையும் பொருட்டு தன்னை பிரதிஷ்டைக்குள்ளாக்கும் சந்தர்ப்பம் பற்றியதாக இந்த உவமையின் கருத்து உள்ளது. நகரத்தின் 'வாசல்கள்' ஒவ்வொன்றும் எவ்விதம் செயல்படுகிறது என்பதற்கு ஒத்த விதமாக இந்த உவமை உள்ளது. வாசல் வழியாக பிரவேசிக்கும் ஒவ்வொரு தனி மனுஷனும் தன்னிலுள்ள கறைகளையும், தவறுகளையும் களைந்து, தங்களை பிரதிஷ்டைக்கு உள்ளாக்க வேண்டும். அப்பொழுது தான், இறுதியில் 'முத்து' போன்ற பூரண நிலையை அடைய இயலும்.

**நகரத்தின் வீதி :**

"பெரும்பாதையான பரிசுத்த வழி" ஒன்று தான் நகரத்தில் திறக்கப்பட்டிருக்கும் ஒரே வீதி (வழி) ஆகும்.

**தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது :**

இங்கு தெளிவான (வெளிப்படையான - TRANSPARENT) 'பொன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. உண்மையில், பொன் வெளிப்படைத்தன்மை கொண்டதல்ல. ஆகவே, இது போன்று நடைமுறையில் இல்லாத விஷயங்கள் (உதாரணமாக : பல தலைகள் கொண்ட மிருகங்கள் போல) அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளன. "வீதி பொன்னாயிருந்தது" என்பது "தெய்வீக நிலை"யை குறிக்கிறது. "தீட்டுள்ளவன் அங்கே நடந்து வருவதில்லை" என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார்; இந்த வாசல்களில் நுழைபவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தூய்மை நிலையை அடையாவிட்டால், அவர்களுடைய பயணம் முடிவு பெற இயலாது.

மறைவானவை எதுவும் இல்லை என்பதும், எல்லாம் வெளிப்படையானது என்பதை "பொன் தெளிவுள்ளது" என்றும், உராய்வும், துன்புறுத்தல் எதுவும் இருக்காது என்பதை " பொன் பளிங்கு போல உள்ளது" (வழவழப்பானது) என்றும், பரிசுத்தமான சூழ்நிலையை "சுத்தப் பொன்" என்றும் அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளது. விளங்காத முறையில் எதுவும் நிழலோட்டமாக அங்கே எதுவும் இருப்பதில்லை. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை; அங்கே தடுமாற்றம் ஏற்படும் வகையில் எதுவும் கரடு முரடாக இருப்பதில்லை; சுமூகமான சூழ்நிலை நிலவும்.

**வெளி 21 : 22 .**

**அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும், ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்.**

**அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை :**

தேவனிடத்திலிருந்து மனுஷன் பிரிந்த நிலையில், தேவனை சந்திக்க ஒரு பிரத்தியேக ஸ்தலம் தேவைப்பட்டது. ஆனால் , புதிய எருசலேம் நகரத்தில் அதற்கு அவசியமில்லை.

**சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும், ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம் :**

புதிய எருசலேம் ஆறாயிரம் வருட பிரிவு நிலையிலிருந்து தேவனிடத்தில் மத்தியஸ்தர் துணை கொண்டு மனுஷர்களை ஒன்று சேர்க்கும். கிறிஸ்துவின் உடன்படிக்கை வாயிலாக மனுஷர்கள் பிதாவினிடத்தில் சேருவர்.

**தேவன்** : இவருடனான சந்திப்பை (உறவாடலை) மனுஷ சமுதாயம் இழந்தது;

**ஆட்டுக்குட்டியானவர்** : இவர் மூலம் தேவனுடன் சந்திப்பு சாத்தியமானது;

**வெளி 21 : 23.**
**நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசித்தது; ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு .**

நகரத்தில் நுழைபவர்களைப் பற்றிய சில விஷயங்கள் இங்கு தெரிவிக்கப்படுகின்றன :

மறைமுகமான சத்தியங்களும் தீர்ப்புகளுமடங்கிய யூத நியாயப்பிரமாணம் (சந்திரன்), மற்றும் சுவிசேஷ செய்திகள் (சூரியன்) கடந்த காலத்திற்குரியவை ! சமுத்திரம் நீரினால் நிறைந்திருப்பது போல பூமி தேவனை அறியும் அறிவினால் நிறைந்திருக்கும். தேவனைப் பற்றிய அறிவினால் அவரது திட்டமும், நோக்கமும், சுபாவமும் பூரணமாக உணர்ந்து, அறிந்து கொள்ளும்போது நகரின் குடிமக்களுக்கு தனியாக வெளிச்சம் தேவைப்படாது.

வேதமே வெளிச்சம் என்பது கடந்த காலத்திற்குரியது; மத்தியஸ்தர் பணி புதிய எருசலேமில் மேற்கொள்ளப்படும் பொழுது இயேசுவே எல்லா விஷயங்களுக்கும் மூல உற்பத்தி ஸ்தானமாக விளங்குவார். ஆட்டுக்குட்டியானவரே விளக்காயிருப்பார்.

**வெளி 21 : 24.**
**இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள்.**

தேவன் மூலமாக இயேசுவுக்கும், இயேசுவின் மூலமாக திருச்சபைக்கும் அளிக்கப்படும் வெளிச்சத்தில் உலக மக்கள் முன்னேற்ற பாதையில் அடியெடுத்து 'இழந்ததை மீண்டும் பெறும் வகையில்' பூமியின் ராஜாக்கள் (முற்பிதாக்கள்) வழி நடத்தப்படுவார்கள். சங் 45 : 16. மேலான உயிர்த்தெழுதல் பெறும் இந்த முற்பிதாக்கள், தேவ தூதருக்கு சற்று சிறியவரான ஆதாமின் மகிமைக்கு ஒத்தவிதமாக, பரிசுத்த நகரத்தின் பெரும்பாதையில் நடந்து, பரிசுத்த நகரத்திற்கு பெருமை சேர்ப்பார்கள்.

**வெளி 21 : 25.**
**அங்கே இராக்காலம் இல்லாதபடியால் , அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை .**

இராக்காலம் நிச்சயமற்ற தன்மையையும் ஏமாற்றத்தையும் குறிக்கும். ஆயிர வருட அரசாட்சி பகல் வெளிச்சம் போன்றது; ஞான வெளிச்சம் கொண்ட காலப் பகுதியாகும்.

**வெளி 21 : 26.**
**உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.**

தனிதனியாக பூரண நிலை பெற்ற மனுக்குலத்தார் அனைவரும் தாங்கள் அடைந்த மகிமையையும் கனத்தையும் தங்களுக்கு உரித்தாக்காமல் புதிய எருசலேமிற்கு செலுத்துவார்கள்.

**வெளி 21 : 27.**
**தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.**

**தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை :**

இயேசுவின் மேன்மையான பலியை அவமதிக்கும் அருவருப்பாகிய "பூசை பலிக்கு" **(MASS)** நடைமுறைப்படுத்தப்பட்ட பரிசுத்த நகரத்தில் அனுமதி இல்லை. பிராகாரத்திலுள்ள பலிபீடத்தில் செலுத்தப்பட்ட இயேசுவின் பலியின் மேன்மையை உணர்ந்து ஏற்று, பிறகு பரிசுத்த பெரும்பாதையை நோக்கி மனுக்குலத்தார் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

பரிசுத்த நகரத்தில் பொய்க்கு (கபடத்திற்கு) இடமில்லை.

**ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் :**

இது முன் குறிக்கப்பட்டவர்களை குறிக்காது ; அசுத்தங்களை நீக்கி விட்டு நகரத்திற்குள் பிரவேசிப்பவர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படுவார்கள். வெளி 20 : 12 .

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# 22 ம் அதிகாரம்

## நித்திய ஜீவனுக்குரிய ஆகாரம், தண்ணீர் மற்றும் ஒளி

**வெளி 22 : 1 .**
**பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்கு காண்பித்தான்.**

**பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி :**

தேக்கமில்லாமல் தொடர்ச்சியாக பாய்ந்து வரும் சத்தியம் ; இது விரும்பத்தக்க ஜீவனை அருளும் வல்லமை பெற்றது. யோவான் 4 : 14; 7 : 38, 39.

பளிங்கைப் போன்று பிரகாசமாயிருக்கும் சத்தியமாகிய ஜீவத்தண்ணீர் உலக மக்களின் அறியாமையைப் போக்கும்.

**தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது :**

சத்தியத்தின் உற்பத்தி ஸ்தானமாகிய தேவனுடைய அதிகாரம், மத்தியஸ்தரின் வழியாக பாய்ந்து, உலகத்தை சொஸ்தமாக்கும் பணி திருச்சபையினரால் மேற்கொள்ளப்படும்.

**வெளி 22 : 2.**
**நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும் , பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது; அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.**

**நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும் :**

பரிசுத்த பெரும் பாதையின் மத்தியிலேயே இருபுறமும் ஜீவ நதி பிரவாகிக்கும்; பெரும் பாதையின் வழியாக பயணிப்போர் ஜீவத்தண்ணீரை பருக வெகு தூரம் செல்லத் தேவையில்லை.

**ஜீவ விருட்சம் :**

மகிமையடைந்த பரிசுத்தவான்களைக் குறிக்கிறது. ஏசாயா 61 : 3.

**பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும் :**

திருச்சபையினர் எவ்விதமான கனிகளைத் தருவார்கள் ? இழந்ததை மீண்டும் திரும்பப் பெறும் மனுக்குலத்தை உற்பத்தி செய்வார்கள். இது தான் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் ; "உன் சந்ததியில் (தலையும், சரீரமும்) பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்;" இதுவே சுவிசேஷ நற்செய்தி ! பன்னிரண்டு விதமான கனிகள் நிழலாக பன்னிரண்டு கோத்திரத்தாரைக் குறிக்கிறது; ஒவ்வொரு கோத்திரமும் மனித சமுதாய அடிப்படை நற்குணங்களில் ஒன்றைக் குறிக்கும்; பூரணராக்கப்பட்ட மனித சமுதாயம் அனைத்தும் இந்த பன்னிரண்டு கோத்திரங்களில் அடங்குவர்.

**அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும் :**

'ஒரு மாதம்' என்பது ஒரு சந்திர சுழற்சியைக் குறிக்கும் ;

'சந்திரன்' என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும் ;

ஒவ்வொரு மாதமும் கனிகளைத் தருவது, 'புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை' நடைமுறைப்படுத்தப்படும் போது கிடைக்கும் "பலனை" குறிக்கிறது. இந்த 'புதிய நியாயப்பிரமாணம்' கற்களில் எழுதப்படாமல், மனுஷருடைய இருதயங்களில் எழுதப்படும்.

திருச்சபையிலுள்ள ஒவ்வொரு அங்கமும் 1,44,000 மனுஷர்களாகிய பலனை உற்பத்தி செய்வார்கள்; அதாவது, ஆயிரம் வருடங்களில் ஒவ்வொரு மாதமும் 12 கனிகளை உற்பத்தி செய்தால் ( 1000 X 12 X 12X 144000 = 144000 X 144000 = 20736000000 ) , மொத்தம் 2073.6 கோடி மனுஷர்கள் பூரண நிலை எய்துவர்.

**அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் :**

**இலைகள்** என்பது ' பலன் அளிக்கும் ஆரோக்கிய வாழ்வு நிலையை ' குறிக்கிறது;

**மரம்** (விருட்சம்) இலைகளை உற்பவித்தால் மரம் ஆரோக்கியமாக உயிரோடு இருக்கிறது என்று பொருள்படும் ;

முற்பிதாக்களின் வாழ்க்கை அனுபவங்கள் திருச்சபையாருக்கு முன்மாதிரியாகவும், திருச்சபையாரின் வாழ்க்கை உலகத்தாருக்கு முன்மாதிரியாக இருக்கும்;

மனுக்குலத்தின் வியாதிகளை கனிவோடு சொஸ்தமாக்கும் மிகுந்த உருக்கமும் இரக்கமும் கொண்ட ஆட்டுகுட்டியானவரின் மணவாட்டி திருச்சபையார், தம் கனிவான ஆசாரிய ஊழியத்தினால், மனுக்குலத்தார் அனைவரும் சொஸ்தமாக்கப்பட்டு ஆரோக்கியமடைவார்கள்.

**வெளி 22 : 3.**
**இனி ஒரு சாபமுமிராது; தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும் :**

**இனி ஒரு சாபமுமிராது :**

மனுஷருக்கு சாபம் வந்ததை ஆதி 3 : 17 - 19ல் குறிக்கப்படுகிறது; அந்த சாபம் வெளி 22 : 3ல் களையப்படுகிறது; இழந்ததை திரும்பப் பெறுதலே ஆயிர வருட அரசாட்சியின் நோக்கம்; சாபத்தை நீக்குவதே ஆட்சியின் நோக்கம். (அப்போ 3 : 21).

**தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும் :**

சமாதான இராஜ்ஜியத்தின் அதிகாரமும் தீர்ப்பும் செயற்படுத்தப்படும் ஸ்தலமாக புதிய எருசலேம் விளங்கும்; தேவ ஏற்பாட்டில் குறை ஏதுமிருக்காது ; நகரத்தில் வாசம் பண்ணுபவர்களுக்கு இது மிக்க ஆறுதலான விஷயமாகும்; புதிய உடன்படிக்கைக்கு உட்பட்ட மனுக்குலத்தார் தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் சேவிப்பார்கள்.

வெளி 22 : 4.
**அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்;. அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும் .**

**அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள் :**

அவருடைய (பிதாவினுடைய) சமூகத்தை தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்;

**சமூகம் = முகம் = உதவி / ஒத்தாசை :**

பிதாவாகிய தேவன் ஏதேனில் பாவத்தில் விழுந்த மனுஷனுக்கு தம் முகத்தை விலக்கினார்; முதல் மனிதன் தேவப் பிரசன்னத்திலிருந்து தன்னை மறைத்துக் கொண்டான். ஆதி 3 : 8.

இப்பொழுது முதன்முறையாக மனுக்குலம் தேவனிடமிருந்து ஒத்தாசை பெறும் காலம் ஆயிர வருட அரசாட்சியில் தான் !

**அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும் :**

ஆவிக்குரிய நிலையில் திருச்சபையார் எவ்விதம் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமங்களை எழுதப்பெற்றிருந்தார்களோ, அவ்விதமே பரிசுத்த நகரத்தில் வசிக்கும் மனுக்குலம் பூமிக்குரிய நிலையில் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமத்தை தரித்துக் கொள்வார்கள்.

வெளி 22 : 5.
**அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார்; அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் .**

**அங்கே இராக்காலமிராது :**

'இராக்காலம்' என்பது 'தீமைகள் நிலவும் காலத்தைக்' குறிக்கிறது ; பிதாவினிடத்தில் யாதொரு வேற்றுமையின் நிழல் இல்லை . யாக் 1 : 17.

கால்களுக்கு தீபமான தேவப் பிரமாணமே இனி எழுத்தில் இல்லை; இருதயத்தில் எழுதப்படும்; வாக்குத்தத்தம் மெய்யாகும்.

**விளக்கு :**

பழைய ஏற்பாட்டு சத்தியங்கள் (வேதம்) “என் கால்களுக்கு தீபம்” என தாவீது அடையாளப்படுத்துகிறார்; (சங் 119 : 105). தேவனுடைய பிரமாணம் இனி கற்களிலோ அல்லது பிரதிகளிலோ எழுதப்படுவதில்லை; இருதயத்தில் எழுதப்படும்; தேவனுடனும், அவருடைய கிறிஸ்துவுடனும் கூடிய உறவு முறையில் இது வெளிப்படும்.

**சூரியனுடைய வெளிச்சம் :**

“சூரியன்” என்பது “சுவிசேஷத்தை” அடையாளப்படுத்துகிறது; “சுவிசேஷம்” வர இருக்கும் நற்செய்தி ஆகும்; வர இருக்கும் கட்டமைப்பாகிய ‘புதிய எருசலேமில்’, நற்செய்தி ஏற்கனவே வந்திருக்கும் ;

தேவனாகிய கர்த்தர் அவர்கள் மேல் பிரகாசிப்பார்; இதுவே, வாக்குத்தத்தம் மெய்ப்படும் நிலை ஆகும் ;

**அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் :**

ஆதாமுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் இழந்தவைகளை திரும்ப பெற்று அரசாளும் உரிமை பெறுவார்கள். அப்போ 3 : 19 - 21; இயேசுவின் உவமையில் அருளப்பட்ட வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம் இதுவே ! மத் 25 : 34; சங் 8 : 4 - 8; பவுல் அப்போஸ்தலனும் இதே நிறைவேறுதலை எபி 2 : 5 - 8ல் குறிப்பிடுகிறார்; மனிதன் அரசாளத் துவங்கும் நிலை பெற்றவுடன் கிறிஸ்துவின் அரசாட்சி முடிவடையும். அதைத் தொடர்ந்து, மனுஷரின் தீமையின் மூலம் பெற்ற அனுபவங்களின் வாயிலாகவும், இழந்ததை மீண்டும் பெறுவதில் உண்டான முறைகளை உணர்ந்ததன் பலனாகவும் மனுஷனுடைய பூமிக்குரிய ஆளுகை மகிமையுடன் தொடரும்.

வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியை மனுப்புத்திரருக்கு கொடுத்தார். சங் 115 : 16.

********************************

**வெளி 22 : 6 - 21 .**

வெளிப்படுத்தல் ஆகமத்தின் இறுதிப்பகுதியில் இதுவரை நடந்த நிகழ்வு சுருக்கமும், இனி வரும் விளைவுகளும், புத்திமதிகளும் தொகுப்பாக கூறப்பட்டுள்ளன. இந்த விஷயங்கள் இரண்டு பேர்களிடமிருந்து கிடைக்கின்றன:

1) இயேசு
2) தூதன் (ஏழு வாதைகளுடைய தூதர்களில் ஒருவன்) - சகோ. ரசல்.

22ம் அதிகாரத்தின் வசனங்களின் அமைப்பினை கீழ்கண்டவாறு தொகுத்து வடிவமைக்கலாம் :

1) வசனங்கள் 6 - 11. அறுவடை காலத்தில் யோவான் வகுப்பாருக்கு ஏழாம் தூதனால் கொடுக்கப்படும் கடைசி தூது.

2) வசனங்கள் 12 - 17. திரைக்குப் பின்னால் இன்னும் செல்லாமல் இருப்பவர்கள் அனைவருக்கும், மற்றும் உலகத்தாருக்கும், அளிக்கப்படும் தீர்ப்பைக் குறித்தும், எதிர் வர இருக்கும் மகிழ்ச்சியானவைகளைக் குறித்தும் இயேசுவின் குறிப்புரை.

3) வசனங்கள் 18 - 19. பரிசுத்த வேத வசனங்களைக் கையாளும் விதம் குறித்து இயேசுவின் எச்சரிப்பு.

பாஸ்டர் ரசல் அவர்களின் தூதுவின் தொகுப்புடனும், இந்த சிறப்பு மிக்க வெளிபடுத்தல் ஆகமம் முடிவு பெறுவதைக் கவனிக்கும் போது, இந்த திட்டத்தில் பாஸ்டர் அவர்களின் பங்கு பெரிதும் உள்ளது என்பதை தாழ்மையுடன் கவனிக்க வேண்டியதாகும். அறுவடை கால தூதை அறியாதவர்கள், வெளிபடுத்தல் ஆகம சத்தியங்களை புரிந்து கொள்ள முடியாதபடி, இயேசு அவர்கள் மனக் கண்களை பூட்டியிருக்கிறார் என்பதை நாம் உணருகிறோம். இந்த யுக இறுதி காலத்தில் தேவனுடைய காரியங்களை உற்று நோக்க அனுமதிக்கப்பட்டிருக்கும் நாம் எவ்வளவு சிரேஷ்டமானவர்களென்பதை நினைக்கும் போது வியப்படைந்தாலும், அது குறித்து நமக்கு இருக்கும் மாபெரும் கடமைகளை இது உணர்த்துகிறது.

## PART I : அறுவடை கால யோவான் வகுப்பாருக்கு தூதனுடைய இறுதி தூது :

**வெளி 22 : 6 - 11 .**

ஏழாம் தூதனால் அளிக்கப்பட்ட உபதேசங்களை கவனத்தில் ஈர்க்கும் வகையில் இந்த இறுதி வசனங்கள் உள்ளன. இந்த தூதுவின் விளைவுகள் லவோதிக்கேயா சபையைப் பாதிப்பவையாக உள்ளன. இவற்றை நிதானத்துடன் தியானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**வெளி 22 : 6.**
**பின்பு அவர் என்னை நோக்கி :**

இங்கு குறிப்பிட்டுள்ள "அவர்" யார் என்பதை பின்னோக்கி வெளி 21 : 9ல் பார்க்க வேண்டும். இதற்கு அடுத்ததாக வெளி 22 : 1ம் வசனத்திலும் பார்க்கிறோம். "அவர்" என்பது லவோதிக்கேயா சபையின் தூதன் சகோ. ரசல் ஆவார்.

மாம்சீக சரீரத்தில் மீந்திருக்கும் கிறிஸ்துவின் அங்கங்களைப் பற்றி வசனங்கள் தெரிவிக்கின்றன.

**இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள் :**

எந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள் ? எதற்காக அவர் இதைக் கூறுகிறார் ? வெளிப்படுத்தல் ஆகமம் உண்மையும் சத்தியமுமானது என நாம் யூகிக்க முடியாதா ? இந்த சொற்றொடர்களிலிருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலாவதாக, இந்த தூதன் இயேசுவின் வார்த்தைகளையே (வெளி 21 : 5). மேற்கோள் காட்டுகிறார். இயேசு கூறியதை அல்லாமல் வேறெதையும் சொல்ல தூதனுக்கு அதிகாரம் இல்லை. இயேசு கூறியவைகளை நாம் புரிந்து கொள்ள உதவியாகவே தூதனின் பங்கு தேவத்திட்டத்தில் உள்ளது. ஆகவே தான், இயேசு தூதனுக்கு ஏற்ற வேளையிலே போஜனம் கொடுத்திருக்கிறார். மத் 24 : 45 - 47.

வெளி 21 : 5ல் இளைப்பாறுதலின் காலங்கள் ஆரம்பமாகி விட்டதைப் பற்றிய தூது **(நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்)**, சத்தியமும் உண்மையுமுள்ளவைகள் என்று இயேசு நமக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இயேசு தெரிவித்த இந்த வார்த்தைகளை வெளி 21 : 9ம் வசனம் தொடங்கி **விரிவாக** தூதன் சொல்கிறார். இந்த தூதன் மணவாட்டியைப் பற்றியும், புது இராஜ்யத்தையும், அதன் நோக்கம், சட்ட திட்டங்கள், அளவு போன்ற அனைத்தையும் சொல்லியிருக்கிறார். "பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்ற மகத்தான விஷயங்களை உள்ளடக்கிய விதத்தில் சுவிசேஷத்தை விசாலமான பார்வையில் வெளிப்படுத்தியவர் இந்த தூதன். காலத்திற்கு ஏற்ற போஜனத்தை இயேசு நமக்குப் போதித்துள்ளார் என்பதை இந்த தூதன் நமக்கு நினைவூட்டுகிறார். தூதனால் வெளிப்படுத்தப்பட்ட வெளி 21 : 9 லிருந்து 22 : 5ம் வரையிலான வசனங்கள் அனைத்தும் உண்மையும் சத்தியமுமானவைகள்.

"உண்மையும் சத்தியமுமானவைகள்." என்ற சொற்றொடர் லவோதிக்கேயா சபை காலப்பகுதி --- சுவிசேஷ யுக அறுவடை காலப்பகுதி தொடர்பான விஷயங்களில் **மட்டுமே** உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (வெளி 3 : 14; 19 : 11; 21 : 5) ஈடுபலி குறித்த தேவத்திட்டத்தையும், இழந்ததை திரும்ப பெறுவது பற்றியும், கிறிஸ்துவின் பிரசன்னம் பற்றிய தெளிவான சத்தியங்களாகிய அறுவடை காலத் தூதுக்களையும் நாம் பெற்றிருக்கும் இந்த காலத்தில், பரிசுத்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள் என்று உணர்கிறோம்.

**பரிசுத்த தீர்க்கதரிசிகளின் ஆவிகளின் கர்த்தராகிய தேவனானவர் :**

தேவனாகிய **யேகோவா** யுகம் முழுமையிலும் தீர்க்கதரிசனங்களை அறிவித்து வருகிறார். தீர்க்கதரிசிகளின் (புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரிசுத்தவான்கள்) ஆவிகள் (உபதேசங்கள் - 1 யோவான் 4 : 1) வேதாகமத்திற்கு பொருந்தி வந்தால் மட்டுமே சரியாக இருக்கக்கூடும்; ஆகவே, அடுத்த சொற்றொடரில், பரிசுத்தவான்கள் தீர்க்கதரிசனம் உரைப்பது சரி என்று உறுதிப்படுத்தப்படுகிறது.

**தம்முடைய தூதனை அனுப்பினார் :**

இது ஏழாவது தூதனைக் குறிக்கிறது. அறுவடை காலப்பகுதியில் தனக்குரிய ஸ்தானத்தை பற்றி இந்த தூதன் விளக்கமளிக்கிறார். வெளி 1 : 1; மற்றும் 22 : 16ல் குறிக்கப்படும் தூதன் இந்த ஏழாம் தூதன் அல்ல ! **அந்த தூதன்** சபையின் ஏழு காலப்பகுதிகளையும் கண்காணிப்பார். ஆனால், இந்த தூதனின் அறுவடைக் கால தூதுக்கள் ஏழாவது காலப்பகுதியில் மட்டும் கூறப்பட்டு, அவைகள் (22 : 16). "உண்மையும் சத்தியமுமானவைகள்" என்று சொல்லப்படுகிறது..

**தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு :**

இது அறுவடை கால பரிசுத்தவான்களைக் குறிக்கிறது .

**சீக்கிரமாய் சம்பவிக்க வேண்டியவைகளை :**

இதற்காகவே, சகோ. ரசல் அவர்களின் ஊழியம் நமக்குக் கிடைத்தி ருக்கிறது. இனி என்ன நடக்க இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள இவருடைய ஊழியம் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. ஆமோஸ் 3 : 7. ஏற்ற வேளையிலே போஜனம் கொடுப்பதற்கான பொறுப்புரிமை அளிக்கப்பட்டவராக இந்த தூதன் (ரசல்) இருந்தார். (மத் 24 : 45 - 47). இவர் வாயிலாக வெளிப்பட்ட தூது இல்லாமல், தீர்க்கதரிசிகளின் ஆவிகள் (அறுவடைகால பரிசுத்தவான்களின் உபதேசங்கள்), ஒப்புவிக்கப்பட்ட பணியை செயலாற்ற போதுமானதாயிராது.

சீக்கிரம் சம்பவிக்க வேண்டிய பல காரியங்களில், மாம்சீக சரீரத்தில் இன்னும் இருக்கக்கூடிய பரிசுத்தவான்கள் மகிமையடையப் போவது தான் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது, மத் 25 : 10ன் கதவு அடைக்கப்படுவது தான் சீக்கிரம் சம்பவிக்கப் போகிற விஷயம். பிறகு, "திரள் கூட்டத்தார்" மட்டும் பூமியில் மாம்சீகத்தில் இருப்பார்கள். இந்த சமயத்தில் தான் 20 : 7ம் வசனத்தில் இயேசு குறுக்கிட்டு, சீக்கிரமாய் சம்பவிக்கப் போகிற நிகழ்ச்சியைப் பற்றி சொல்கிறார். நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இதுவே மிகவும் இன்றியமையாத தேவையாக இருக்கிறது.

**வெளி 22 : 7.**
**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன் பாக்கியவான் :**

இது இரண்டாம் வருகையைக் குறிக்கவில்லை. தூதன் "ஏற்ற வேளையிலே போஜனம் கொடுப்பதற்கு" முன்பே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடக்கிறது. "நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்ற வாக்குமூலம் எந்த சூழ்நிலையில் சொல்லப்படுகிறது என்பதை அறிவதற்கு, வேதாகமத்தில் இந்த சொற்றொடர் எப்படி பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்று ஆராய்வது தவிர்க்க முடியாது.

1) வெளி 2 : 5ல் "நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று இயேசு கூறுவது, அவருடைய வருகை சீக்கிரமாய் இருக்கும் என்ற அர்த்தத்தில் அவர் எச்சரிப்பு செய்யவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். இதே போன்று தான் வெளி 2 : 16; மற்றும் 3 : 3ம் வசனங்களிலும் அறிகிறோம். வெளி 22 : 7; மற்றும் 22 : 12ம் வசனங்களும் இரண்டாம் வருகையைக் குறிப்பதாக நாம் நினைக்கத் தேவையில்லை.

2) மத் 25ம் அதிகாரத்தில் (புத்தியுள்ள கன்னிகைகள், புத்தியில்லாத கன்னிகைகள் உவமையில்) பிரயோகப்படுத்தியிருக்கும் விதம், வெளி 22ம் அதிகாரத்தை சரியாக புரிந்து கொள்ள துணை புரியும். மத் 25 : 6ல் "மணவாளன் வருகிறார் " என்று கிறிஸ்துவின் 1874ம் ஆண்டின் இரண்டாம் வருகையைக் குறித்துச் சொல்லப்படுகிறது. இருப்பினும், மத் 25 : 10ல் திகைப்படையும்படியாக ஒரு அறிக்கையை வாசிக்கிறோம். "மணவாளன் வந்துவிட்டார்". 6ம் வசனத்தில் "இயேசு வந்தார்" என்றால், 10ம் வசனத்தில் அதே அர்த்தத்தில் அவர் "வந்தார்" என்று சொல்லமுடியாது. அவருடைய பரிசுத்தவான்களை திரைக்குப் பின்னால் எடுத்துக் கொள்ளும் செயலை 10ம் வசனம் உணர்த்துகிறது. ஒரு குறிப்பிட்ட செயலை செய்வதற்கு அடையாள பாஷையில் "அவர் வந்து விட்டார்" என்ற விஷயம் தெரிவிக்கப்படுகிறது. இதைப் போலவே தான், வெளி 2 : 5; 2 : 16; மற்றும் 3 : 3ம் வசனங்கள் உணர்த்துகின்றன. இதே போன்று தான் வெளி 22 : 7ம் வசனமும் உணர்த்துகின்றது.

   வெளி 22 : 6ல், இன்னும் மாம்ச சரீரத்திலிருக்கும் யோவான் வகுப்பாரிடம் (லவோதிக்கேயா சபை பரிசுத்தவான்களுடன்) ஏழாம் தூதன் பேசுகிறார். இது, கிறிஸ்துவின் வருகைக்குப் **பின்** நடக்கிறது. மத் 24 : 45 - 47 ஐப் பார்க்கவும். இயேசுவின் வருகை நடக்கும் வரையில், கர்த்தருடைய "ஆஸ்திகள்" (சத்தியங்கள்) மேல் ஏழாம் தூதனுக்கு விசாரணை பொறுப்பு கொடுக்கப்படவில்லை. இயேசு 6ம் வசனத்தில் வந்தால், வசனம் 10ல் **அதே உணர்வுடன்** வந்திருக்க முடியாது. தம்முடைய பரிசுத்தவான்களை திரைக்குப் பின்னால் எடுத்துக் கொள்ளும் செயலை 10ம் வசனம் சொல்லுகிறது. இங்கு அவருடைய சுய வருகையைப் பற்றி குறிப்பிடவில்லை. இந்த "வருகை" ஒரு குறிப்பிட்ட செயலை செய்வதை அடையாளப்படுத்துவதாக உள்ளது. இதைத் தான் வெளி 2 : 5; 2 : 16; மற்றும் 3 : 3ம் வசனங்களிலும் பார்க்கிறோம். வெளி 22 : 7ம் வசனத்திலும் இதே மாதிரி தான் பொருள்படும்படி உள்ளது. இது தான் (சீக்கிரத்தில் சம்பவிக்கப் போகிறது) அறுவடைகால பரிசுத்தவான்களுக்கு விடுக்கப்படும் அவசரமான தூது ஆகும் ! இந்த நிகழ்வு நடக்கும் தேதியை கண்டு பிடிக்க சகோதரர்கள் பல வருடங்களாக முயற்சித்து வருகிறார்கள். (இந்த முயற்சியில் இன்னும் வெற்றி பெற இயலவில்லை). இப்படியாக, இயேசு 22 : 7ல் குறுக்கிட்டு தம் தூதை மேலும் தொடர்கிறார் :

**"இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" என்றார் :**

"புத்தியுள்ள கன்னிகையாக" இருக்க வேண்டுமாயின், வெளிப்படுத்தல் ஆகமத்தில் காணப்படும் ஞானத்தை கிரகித்து, நம்முடைய நடத்தையிலும், ஊழியத்திலும் ஜாக்கிரதையான விழிப்புணர்வுகளில் வளர வேண்டும். வெளி 19 : 10ம் வசனத்தின் நோக்கமும் இதுவே: "இயேசுவைப் பற்றிய சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது".

இவ்விதமாக இயேசு 22 : 7ல் குறுக்கிட்டு பேசுவதன் மூலம், காலம் சமீபமாயிருக்கிறது என்ற விஷயத்தை கர்த்தரே நமக்கு நினைவூட்டுகிறார். இதனால் நம்முடைய அழைப்பும், தெரிந்து கொள்ளுதலும் பாதுகாப்படைகிறது. மேலும், வாசல் மூடப்படுவதற்கு முன்பாகவே சீக்கிரம் நுழைவதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதில்

துணை செய்வதற்காகவே ஏழாம் தூதன் முக்கியமாக அனுப்பப்பட்டிருக்கிறார். தூதனிடம் நாம் மேலும் தூதை பெறுவதற்காக இயேசு 22 : 7ல் தம் குறுக்கீட்டை நிறுத்திக் கொள்கிறார்.

**வெளி 22 : 8.**

**யோவானாகிய நான் இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன்; நான் கேட்டுக் கண்ட போது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்:**

**யோவானாகிய நான் இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தை எழுதின யோவானுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. இந்த அனுபவம் நமக்கு ஒரு படிப்பினையைத் தருவதாக உள்ளது. இந்த கடைசி நாட்களில் புத்தியுள்ள கன்னிகைகளாக நாம் எண்ணப்படுவதிலிருந்து தடுக்கப்படும் விதமாக, விக்கிரக ஆராதனை என்ற சாவுக்கேதுவான கேட்டில் நாம் விழுந்து விடுவோம் என்பதை உணர்த்தும் விதமாக இந்த நிகழ்ச்சி உள்ளது.

அப்போஸ்தலனாகிய யோவான் எவ்விதம் கேட்டு, பார்த்து, இந்த தரிசனங்களை எழுதினாரோ, அவ்விதமே நாமும் (அடையாளமான யோவான் வகுப்பாரும்) வெளிப்படுத்தல் ஆகம வசனங்களை கேட்டு (அறிந்து கொண்டு), கண்டு (உட்பொருளை புரிந்து கொண்டு) இருக்கிறோம். மற்ற யாவருக்கும் இந்த சலுகை கிடையாது. வெளி 17 : 1 நம்முடன் முதன் முதலாக பேசிய ஏழாம் தூதன் வாயிலாக அன்றி, வேறொருவரும் இந்த புஸ்தகத்தின் அடையாளங்களை புரிந்து உணர முடியாது. இந்த விஷயங்களை கடைசி கால பாத அங்கங்களான யோவான் வகுப்பாராகிய நாம் கேட்டும், கண்டும் இருக்கிறோம்.

**நான் கேட்டுக் கண்ட போது :**

ஏழாம் தூதன் "தற்கால சத்தியத்தை" விவரித்த போது, நாம் அவற்றை கேட்டும், கண்டும் இருந்தோம்; அவர் இந்த காட்சியை விட்டுச் சென்ற போதும், அது வளர்ந்து கொண்டு வருகிறது. ஏனெனில், இந்த தூதன், நம்மைச் சுற்றிலும் இந்தக் காலக் கட்டத்தில் என்ன நிகழ்கின்றன என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக ஒரு "கட்டமைப்பை" அளித்துள்ளார்.

**தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன் :**

"பாதத்தருகே உட்காருதல்" என்பது தாழ்மையான மனோபாவத்துடன் கற்றுக் கொள்வதைக் குறிக்கும். ஆனால், "பாதத்தில் விழுவது" என்ற தொழுது கொள்வதற்குரிய செயல், தேவனுக்கும் அவருடைய குமாரனுக்கு மட்டுமே செய்யக்கூடியது ; இங்கு குறிப்பிடக்கூடிய தூதன் சகோ.ரசல் ஆவார். இவரை வணங்குவது முற்றிலும் தகாத ஒன்றாகும்.

**இவைகளை எனக்குக் காண்பித்த :**

தூதனின் பாதத்தில் யோவான் விழுந்ததற்கு காரணம் இதுவே. இந்த செய்தியின் மகத்துவமும், இந்த தூதை உட்கிரகித்து புரிந்து கொள்ள முடிந்ததும் யோவானுடைய நன்றியுணர்வை பெருக்கச் செய்து, இவ்விதமான பின் விளைவுக்கு அவரை உட்படுத்தியது. யோவானுடைய செயல் புரிந்து கொள்ளும்படியாக இருப்பினும், பரிதவிக்கக்கூடிய நிலையில் உள்ளது. இந்த தகாத செயல் இரண்டாம் முறையாக இங்கு பதிவு செய்யப்படுகிறது. (வெளி 19 : 10ம் வசனத்தைப் பார்க்கவும்). இவ்விதமான மனப்பாங்கு யோவான் வகுப்பாருக்கு அறுவடை காலத்தின் ஆரம்பத்திலும், இறுதி காலத்திலும் இருப்பதை வெளிப்படுத்துகிறது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் இவ்விதம் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இந்த தூதன் தனியாக காட்டப்பட்டிருக்கிறது. இந்த தூதன் அல்லாமல், எந்த முக்கியமான விஷயமும் அறிந்து கொள்ள முடியாது என்பதை வெளிப்படுத்தல் ஆகமம் தெளிவாகக் காட்டுகிறது. ஆனால், அதற்கு மாறாக, "விக்கிரக ஆராதனை" நிலவும் என்கிற எச்சரிப்பையும் இரண்டு தடவை வெளிப்படுத்தல் ஆகமம் குறிப்பிடுகிறது. இதன் மூலம் விக்கிரக ஆராதனை பற்றிய பயம் நமக்கு இருக்க வேண்டும். என்பது வலியுறுத்தி உணர்த்தப்படுகிறது.

**வெளி 22 : 9.**

**அதற்கு அவன் : நீ இப்படி செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும், உன் சகோதரர்களோடும், தீர்க்கதரிசிகளோடும், இந்த புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுது கொள் " என்றான் .**

**அதற்கு அவன் : நீ இப்படி செய்யாதபடிக்குப் பார் :**

தூதன் தம்முடைய எழுத்துக்களின் மூலம் "இவ்விதம் செய்யக் கூடாது" என்று எச்சரிக்கிறார். தேவ தூது கொடுப்பவர்களை நாம் எவ்வளவு மெச்சினாலும், அவர்கள் பேரில் நாம் வெளிப்படுத்தும் மனோபாவங்கள், வேதாகமத்திற்கு இசைந்து நடைமுறைப்படுத்தும் விதத்தில் இருக்க வேண்டும். விக்கிரக ஆராதனையை நற்காரியங்களுக்காக செய்வது, கெட்ட காரியங்களுக்காக விக்கிரக ஆராதனை செய்வதைக் காட்டிலும் எள்ளளவும் மேன்மையானதல்ல. அது நமது வீழ்ச்சிக்கு வித்திடும்.

**நானும் ஒரு ஊழியக்காரன் :**

இந்த தூதன் பரிசுத்தவான்களில் ஒருவர் என்பது தெளிவு; அவர் தகாத வழியில் பெறும் பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அப்படி இருந்திருந்தால், அவர் புத்தியில்லாதவரும், நன்றியில்லாத ஊழியக்காரனுமாகவே இருந்திருப்பார்.

**உன்னோடும், உன் சகோதரர்களோடும், தீர்க்கதரிசிகளோடும், இந்த புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட :**

இந்த தூதன் மறுபடியும் இயேசுவின் வார்த்தைகளை மேற்கோள் காட்டுகிறார். (வெளி 22 : 7). "இந்த புஸ்தகத்தின் வசனங்களை கைக்கொள்ளுகிற வர்களாகிய உன் சகோதரர்களான தீர்க்கதரிசிகளோடும்" என்பது சரியான மொழிபெயர்ப்பாய் இருக்கும். யோவான் வகுப்பார் அனைவருக்கும், அதிலும் முக்கியமாக, தீர்க்கதரிசனம் சொல்பவர்களுக்கு இந்த தூதன் ஊழியம் செய்கிறார் என்பதை குறிப்பிடுவதாக இருக்கலாம். இவ்வாறு இல்லாமல், " 1) உன்னோடும் 2) உன் சகோதரரோடும் 3) இந்த புஸ்தகத்தின் வசனங்களைக் கைகொள்ளுகிறவர்களோடும் " என்று மூன்று வகுப்பாராகப் பிரித்தால், இதில் மூன்றாவது வகுப்பார் மட்டும் இந்த புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்கள் போலவும், யோவானும், அவனுடைய வகுப்பாரும் (சகோதரரும்) இந்த புஸ்தகத்தின் வசனங்களை கைக்கொள்ளாதவர்கள் போலவும் பொருள்படும்படியாக உள்ளது. வார்த்தைகளின் நடுவே "இணையிடைச் சொல்" (AND) விலக்கப்பட்டால், [ கிரேக்க மூலத்திலுள்ள KAI என்ற சொல்லை AND என்பதற்குப் பதிலாக (EVEN) என்றும் மொழி பெயர்க்கலாம் ], வெளி 22 : 9ம் வசனத்தை தெளிவாக பொருள் கொள்ள முடியும்.

**தேவனைத் தொழுது கொள் என்றான் :**

வேதாகமத்தில் காணப்படும் முறையான தொழுகை இது ஒன்று மட்டும் தான்; மற்றவை எல்லாம் வீணற்றதும், விக்கிரக ஆராதனைக்குரியதும், தேவ தூஷணமாகவும், தப்பானதும், சாவுக்கேதுவானதுமாய் இருக்கின்றன. அறுவடை காலத்தில் சொல்லப்படும் பிரதான எச்சரிப்பு இதுவே. இது முக்கியமான விஷயமில்லாவிட்டால், இந்த தூதனின் இறுதி வார்த்தைகளில் இந்த எச்சரிப்பு இடம் பெற்றிருக்காது.

**வெளி 22 : 10.**

**பின்னும் அவர் என்னை நோக்கி : இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்களை முத்திரை போட வேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது .**

**பின்னும் அவர் என்னை நோக்கி** : இந்த சொற்றொடர் தூதன் அளிக்கும் இறுதி தூதில் மூன்று தடவைகள் காணப்படுகிறது. இந்த சொற்றொடரை, 6ம் வசனத்தில்,

அறுவடை கால தூது உண்மையும் சத்தியமுமானவைகள் என்றும், 9ம் வசனத்தில், இந்த தூது குறித்து தூதனைப் பாராட்டக் கூடாது என்றும், 10ம் வசனத்தில் தீர்க்கதரிசிகள் ஜாக்கிரதையாய் ஆராய வேண்டும் என்றும் தூதன் கூறுகிறார். மேற்குறிப்பிட்ட மூன்று தூதுகளும் ஏழாம் தூதனுடைய (ரசல்) ஊழியத்தின் மையக்கருத்தாக இருந்ததை உணரலாம்.

**இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்களை முத்திரை போட வேண்டாம் :**

இது, 7ம் வசன இறுதியில் இயேசு கூறிய வார்த்தைகளை விரிவுபடுத்தும்படியாக உள்ளது. "முத்திரை போடுதல்" என்பது, "பிறகு உபயோகப்படுத்துவதற்காக தள்ளி வைத்தல்" என்று பொருள்படும். ஆனால், இது நாம் இப்பொழுது செய்யக்கூடியது அல்ல ! இது தள்ளிப்போடும் காலம் அல்ல ! கருத்தாய் விழித்திருந்து ஜெபம் பண்ணி தீர்க்கதரிசனங்களை ஆராயும் காலப்பகுதியில் இருக்கிறோம். நமது கர்த்தராகிய கிறிஸ்து என்ன செய்து கொண்டிருக்கிறார், என்ன செய்யப் போகிறார் ? போன்ற விஷயங்களை அறிந்து கொள்வதிலும், தீர்க்கதரிசனங்களை ஆராய்வதிலும் அசிரத்தையாக இருந்தால், அது நாம் கிரீடத்தைப் பெறுவதற்கு தடைக்கல்லாக இருக்கும்; புத்தியில்லாத கன்னிகைகளுக்குரிய குணலட்சனங்களில் இதுவும் ஒன்று.

**காலம் சமீபமாயிருக்கிறது :**

கடைசி கால பரிசுத்தவான்களை எடுத்துக் கொள்வதற்கான "சீக்கிரமாய் வருதலின்" காலம் அருகில் உள்ளது. இந்த நிகழ்வுக்கு தயார்படுத்திக் கொள்ளும்பொருட்டு, இந்த தீர்க்கதரிசன வசனங்களை பொருத்திப் பார்க்கும் காலம் இதுவே !

ஆகவே தான், தூதனின் கடைசி தூது பின்வருமாறு அமைகிறது :

**வெளி 22 : 11.**
**அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.**

இந்த வசனத்தில் சொல்லப்படுபவர்கள் ஒரு பிரிவைச் சார்ந்த ஜனங்கள் அல்ல. இங்கு தவறு செய்பவர்களையும், பரிசுத்தமானவர்களையும் குறித்து சொல்லப்படுகிறது. இதில் நாம் உணரும் கருத்து என்னவெனில், வேத வசனங்களை நாம் சுயமாக கைக்கொண்டு, நம் சுயமான கிரியைகளினாலே உண்மையுள்ளவர்களாக மாற வேண்டும் என்பதே! நன்மையோ, தீமையோ, மற்றவர்களின் இரட்சிப்புக்கு நாம் அவர்கள் சார்பில் செயல்பட முடியாது. இந்த வசனம் மத் 25 : 9ம் வசனத்தின் கருத்துக்கு இணையாக உள்ளது.

கடைசியில் குறிப்பிட்டுள்ள இரண்டு வகுப்பார்கள் [1. நீதி உள்ளவர் 2. பரிசுத்தமுள்ளவர் ] முறையே 1. நீதிமானாக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களையும், 2. ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்களையும் குறிப்பதாக உள்ளது.

முதலில் குறிப்பிட்ட இரண்டு வகுப்பார் [ 1. அநியாயம் செய்பவர்கள்
2. அசுத்தமானவர்கள் ] முறையே 1. தவறான யோசனைகளின் அடிப்படையில் சீர்திருத்த மனோபாவம் கொண்டு, உலகத்தார் மத்தியில் தங்களை மேன்மக்களாக உயர்த்திக் கொள்பவர்;
2. தீய ஒழுக்கங் கொண்டவர்கள்; இவர்கள் தத்தம் வழியில் செல்லட்டும்; நம் கிரியைகளில் நாம் இயங்குவதற்கான குறுகிய காலம் இதுவே .

**PART II : எல்லோருடைய நியாயத்தீர்ப்பு பற்றியும், அதற்கு பின் எதிர்நோக்கும் மகிழ்ச்சி பற்றியும் இயேசுவின் வசனங்கள் :**

**வெளி 22 : 12 - 17.**

இயேசு மறுபடியும் குறுக்கிட்டுப் பேசுகிறார் : தூதனிடமிருந்து நாம் எதையும் கேட்கப் போவதில்லை. நாம் அறிந்து கொள்ள தேவைப்பட்ட அனைத்தையும் தூதன் வெளிப்படுத்திவிட்டார். ஆகவே, இயேசுவின் குறுக்கீடு இச்சமயத்தில் பொருத்தமானதே.

**வெளி 22 : 12 .**

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது .**

"இதோ" என்ற சொல், முக்கியமான சத்தியங்கள் அல்லது மறைவான முத்துக்களை வெளிப்படுத்தப் போவதை உணர்த்தும் விதமாகவே உள்ளது.

**சீக்கிரமாய் வருகிறேன் : (வெளி 22 : 7ம் வசனத்தின் குறிப்புகளைப் பார்க்கவும்) :**

இங்கு இயேசுவின் வருகை குறிப்பிடப்படவில்லை. ஆனால், இது மத் 25 : 10ல் காணப்படும் கருத்துக்கு இணையாக இருக்கிறது. "வருகிறேன்" என்ற இயேசுவின் செயல், கடைசி கால பரிசுத்தவான்களை "ஸ்தலத்திற்கு" எடுத்துக் கொள்ளப் போவதை குறிக்கிறது.

சுவிசேஷ யுகத்தின் பெரும்பாலான காலப்பகுதிகளில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்கு இந்த வசனங்கள் அர்த்தமில்லாதவையாயிருந்திருக்கும் என்பதை நாம் கவனிக்கலாம். அவர்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் இயேசு சீக்கிரமாய் வரவில்லை. அதாவது, அவருடைய வருகையைப் பற்றிய சொல்லர்த்தமான விதத்தில் வரவில்லை. ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி, வெளி 2 : 5; 2 : 16; மற்றும் 3 : 3ம் வசனங்களில் சபையில் தேவைப்பட்ட மாறுதல்களை உருவாக்கும் விதத்தில் அவர் "வந்தார்" என்று சொல்லப்படுகிறது. இங்கு, இரண்டாம் அதிகாரத்தில், விழித்திருக்கும் "புத்தியுள்ள கன்னிகைகளுக்கு" ஒரு விசேஷித்த ஆச்சரியமான உள்ளர்த்தம் இந்த வசனங்களில் உள்ளது.

**அவனவனுடைய கிரியைகளின்படி :**

1 கொரி 3 : 11 - 15ல் குறிப்பிடுவது போன்று, மீந்திருக்கும் கடைசி கால பரிசுத்தவான்கள் தங்களின் கிரியைகளினாலே நிரூபிக்கப்படுகிறார்கள். தேவனுடைய வீட்டில் தீர்ப்பு ஆரம்பமாகும் போது, அதைத் தொடர்ந்து உலக மனுக்குலத்திற்காக மத்தியஸ்தம் நடக்கும். இந்த வசனங்கள், இன்னும் மாம்சீக சரீரத்திலுள்ள ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்களையே முக்கியமாக குறிக்கிறது. இதில் புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் அடங்குவர். நாம் நம்முடைய சுய கிரியைகளை உடையவர்களாயிருக்க வேண்டியதின் எச்சரிப்பை ஏழாம் தூதன் அறிவித்ததைத் தொடர்ந்து, இயேசு அக்கருத்தை மேலும் இங்கு வலியுறுத்துகிறார். இவ்விதமாக, கலியாணத்திற்கு செல்ல ஆயத்தம் பண்ணப்படுகிறோம். இது தான் புத்தியுள்ளவர்களுக்கு கிடைக்கும் பரிசு. மணல் மீதோ, மரத்தினாலோ, வைக்கோலினாலோ வீடு கட்டிய புத்தியில்லாதவர்கள் பரிசுக்குப் பதிலாக குறைவானதையே பெற இயலும். (2 யோவான் 8).

**வெளி 22 : 13.**

**நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்:**

பிதாவிடமிருந்து தாம் பெற்ற இந்த சிறப்பு பெயர் பற்றி இயேசு மூன்றாம் முறையாகவும், கடைசியாகவும் பேசுகிறார்.

இயேசுவினுடைய முதலாம் வருகையின் பாடுகள், மற்றும் சுவிசேஷ யுகம் முழுமையிலும் அவருடைய பணிகளின் நோக்கமாய் திகழும் "வர இருக்கும் இராஜ்யத்தை" (வெளி 1 : 7) எதிர்நோக்கும் சமயத்தில், இந்த சிறப்பு பெயர் வெளி 1 : 8ல் **முதல் முறையாக** காணப்படுகிறது.

இயேசு **திரும்ப வந்து**, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சிங்காசனத்தில் உட்கார்ந்த பிறகு, இன்னும் மாம்சத்தில் இருக்கும் அவருடைய பரிசுத்தவான்களிடத்தில் "திரும்ப பெறுதலின்" காலம் துவங்கியது என்றும், அது குறித்து நம்பிக்கையுடன் பிரசங்கிக்கலாம் என்ற கருத்தில் வெளி 21 : 6ல் **இரண்டாம் முறை** இந்த சிறப்பு பெயர் காணப்படுகிறது.

பழைய யுகத்தை ஒழித்து, மனுக்குலத்திற்கு மத்தியஸ்தம் செய்யும் புதிய யுகத்தை துவக்கும் போது (வசனங்கள் 14 & 15), **மூன்றாம் முறையாக** வெளி 22 : 13ல் இயேசு இந்த சிறப்பு பெயரை உறுதிப்படுத்துகிறார்.

**முந்தினவரும் பிந்தினவரும் :** எல்லா விஷயங்களிலும், முக்கியமாக நியாயத்தீர்ப்பில் முதலும் கடைசியுமான அதிகாரம் உடையவரான "பிதா" (ஏசாயா 44 : 16). ஒருவரே இந்த பட்டத்துக்குரியவர். அவர் தம் குமாரனுக்கு இந்த பெயரைக் கொடுத்திருக்கிறார். இதையே "நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார்" என்று இயேசு யோவான் 5 : 22, 27; மத் 28 : 18ல் கூறுகிறார்.

**ஆதியும் அந்தமும் :** இந்த சொற்றொடர்கள் மூன்றும் (அல்பாவும் ஒமேகாவும், முந்தினவரும் பிந்தினவரும், ஆதியும் அந்தமும்) ஒரே கருத்தையே பிரதிபலிக்கின்றன. வெவ்வேறு வார்த்தைகளை பிரயோகப்படுத்தி ஒன்றுக்கொன்று ஒரே கருத்தை வலுப்படுத்துகின்றன. இவைகள் அதிகாரத்தின் பூரணத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

மத்தியஸ்தம் துவங்கும் சமயத்தில், நியாயாதிபதியின் ஒழுங்குகளில் எவ்வித பேதமும் இராது. (வெளி 4 : 8).

**வெளி 22 : 14.**
**ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் .**

வசனம் 12 : பழைய யுகத்தில் நியாயத்தீர்ப்புக்கு உட்படுபவர்களுக்குரிய தீர்ப்பு முடிவடைகிறது;

வசனம் 13 : மத்தியஸ்தம் பண்ண தயாராக இருக்கிறார் என்று தம்முடைய அதிகாரத்தை மறுபடியும் வலியுறுத்துகிறார் ;

வசனம் 14 : நியாயத்தீர்ப்புக்குட்பட இருக்கும் மனுக்குலத்தின் பல்வேறு பிரிவினரையும் பார்த்து, இயேசு அறிவுரை கூறுகிறார்;

வசனம் 14 & 17ம் வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, ஒரே பிரிவினரைக் குறித்து இங்கு சொல்லப்படுகிறதா ?

14 & 15ம் வசனங்கள் ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்களைக் குறித்து சொல்லப்படுகிறதில்லை; (14ம் வசனத்தை மேலோட்டமாகப் படித்தால், இது "திரள் கூட்டத்தாரை"க் குறிப்பது போலத் தோன்றும்)

14ம் வசனமும், 17ம் வசனமும் உலகத்தாரை பொதுவாகக் குறிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், வித்தியாசமாக இடையிலுள்ள 16ம் வசனம், இந்த இரண்டு வசனங்களிலுள்ள (14 & 17) விவரிப்புகள், இவ்விரண்டு வகுப்பாரும் ஒரே வகுப்பார் அல்ல என்று தெளிவுபடுத்துகிறது.

அப்படியானால், பொதுவான உலகத்தார் நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்துவதற்கு **முன்பாகவே,** ஒரு விசேஷித்த வகுப்பாரைப் பற்றி 14ம் வசனம் தெரிவிப்பதாக அனுமானத்திற்கு வர ஏதுவாகிறது. வெண்மையாக்கப்பட்டவர்களாக ஒரு வகுப்பார் உலகத்தாருக்கு உதவி செய்பவர்களாக தயார் செய்யப்பட வேண்டியதாகிறது. தீர்க்கதரிசனம் மூலம், பொதுவாக உலகத்தாருக்கு நகரம் திறக்கப்படுவதற்கு முன்பாக, இஸ்ரவேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நாடாக உருவாக்கப்பட வேண்டும். வசனம் 14ல் உள்ள விஷயங்கள், "திரள் கூட்டத்தார்" முழுமைப் பெற்றதைத் **தொடர்ந்து,** இஸ்ரவேலர் ஆயத்தம் பண்ணப்படுவதைக் குறிப்பிடுவதாக உள்ளது. ஆனால், பொதுவான உலகத்தாருக்கு புதிய எருசலேம் நகரம் திறக்கப்படுவதற்கு முன்பாக இது நடக்க வேண்டிய காரியமாயிருக்கிறது.

**அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் :**

இந்த வாசகத்திற்குப் பதிலாக, திருத்திய மொழி பெயர்ப்புகளில் "தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று உள்ளது.

இது இஸ்ரவேலைக் குறிப்பதாக உள்ளது. இஸ்ரவேல் வஸ்திரம் அணிந்துள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளது. "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" என்று ஏசாயா 64 : 6ல் படிக்கிறோம். "யோபு" இஸ்ரவேலை அடையாளப்படுத்தலாம் என்ற அடிப்படையில், இஸ்ரவேல் வஸ்திரம் அணிந்திருப்பதாக யோபு 29 : 14ல் படிக்கிறோம்.

இஸ்ரவேலர் தங்கள் நீதிகளை அழுக்காக்கிப் போட்டது போல, வெளி 7 : 14ல் "திரள் கூட்டத்தார்" தங்கள் வஸ்திரங்களாகிய நீதிகளைக் கறைப்படுத்தியவர்கள்" எனக் குறிக்கப்படுகிறார்கள். இயேசுவின் கைகளில் உபயோகமுள்ள ஆயுதங்களாக மாறுவதற்கு முன், தங்கள் வஸ்திரங்களை தோய்க்க வேண்டும். ஏசாயா 25 : 8ம் வசனம், வெளி 7ம் அதிகாரத்திலுள்ள "திரள் கூட்டத்தாரை"க் குறிப்பது போல் இருக்கிறது. ஆனால், ஏசாயா 25 : 6 - 9ம் வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சூழ்நிலையை உற்று நோக்கினால், இஸ்ரவேல் பற்றியே இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதைக் காண்பிக்கிறது. ஏசாயா 25 : 6ல் சொல்லப்படும் விஷயங்கள் உலகத்தாருக்கு மத்தியஸ்தம் பண்ணும் காலத்தையே குறிப்பதை தெளிவாக உணரலாம்.

**ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும்:**

வெளி 22 : 2ல் சபையை ஜீவ விருட்சங்களாகிய தோப்பு என்று அடையாளப்படுத்தப்படுகிறது. இஸ்ரவேல் (உலகத்தாரைப் போலவே) இழந்ததைத் திரும்பபெற வேண்டுமாயின், அவர்கள் நீதிமான்களாக்கப்பட வேண்டும். (பிரதிஷ்டைக்குள்ளாக தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்); அதாவது, தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும். பழைய நியாயப்பிரமாணத்தின் கீழ் இஸ்ரவேலருக்கு ஜீவன் இல்லை. வஸ்திரங்கள் தோய்க்கப்பட்டு புதிய உடன்படிக்கையின் கீழ் வந்தால் மட்டுமே ஜீவனைப் பெற அவர்களுக்கு உரிமை உண்டு. மேசியாவை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருப்பதன் காரணமாகவே, அவர்களின் வஸ்திரங்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் தோய்க்கப்படும் என்று சொல்லுவது பொருத்தமானது தான்.

**வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் :**
(வெளி 21 : 12ன் குறிப்புரைகளைப் பார்க்கவும்).

"வாசல்கள்" என்பது இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களாக இறுதியாக மாறும் நிலையில், நியாயப்பிரமாண யுகத்தின் விசுவாசிகளின் (முற்பிதாக்களின்) மூலமாகவே, ஆசீர்வதிக்கப்பட்ட ஜாதியாக தகுதி பெற்று, இஸ்ரவேலர்கள் நகரத்தில் நுழைவார்கள். அதாவது, நகரத்திற்குள் பிரவேசிக்காத நிலையில் இஸ்வேலர் மற்றவர்களை ஆசீர்வதிப்பவர்களாக மாற இயலாது. அவர்கள் எப்படி நகரத்திற்குள் பிரவேசிப்பார்கள் ? முற்பிதாக்களின் நிர்வாகம் மூலமாக இது நடைபெறும் என வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறாக, முற்பிதாக்கள் இஸ்ரவேலர்கள், மற்றும் உலகத்தாருக்கு வாசல்களாக இருப்பார்கள்.

"வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும்" என்ற சொற்றொடர் "திரள் கூட்டத்தாரை" குறிப்பதில்லை என்று காண்பிப்பதற்கும் உதவுகிறது. திரள் கூட்டத்தார் வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பெரும் பாதை வழியாகவும் நடப்பதில்லை. அவர்கள் "ராஜ அரண்மனைக்குள்" பிரவேசிப்பவர்கள். "நகரத்திற்குள்" அல்ல ! இஸ்ரவேலர்கள் வழியாக இவர்கள் பிரவேசிப்பதுமில்லை.

மேலும், வாசல்களில் பிரவேசிப்பதற்கு முன்பாகவே துணிகள் துவைக்கப்பட வேண்டும் என்பதை கவனிக்க வேண்டும். யூத யுகத்தின் ஆசரிப்பு கூடார நிலைக்கு ஒத்த விதமாகவே இதுவும் உள்ளது. ஆசரிப்பு கூடாரத்திற்குள் நுழைவதற்கு முன்பு கடல் தொட்டியில் கழுவ வேண்டும்.

**வெளி 22 : 15.**
**நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் .**

நகரத்தில் பிரவேசிக்க இயலாதபடி (பரிசுத்த பெரும்பாதையில் செல்ல முடியாதபடி - ஏசாயா 35) செய்யும் குணலட்சணங்கள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

வசனம் 14ல் இஸ்ரவேலர் பாக்கியவான்கள் என அடையாளப் படுத்தப்பட்டு இருப்பதை கவனிக்க வேண்டும். இவர்கள் நகரத்திற்குள் பிரவேசிப்பவர்கள்.

நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு தேவையானவற்றை இன்னும் செய்து முடிக்காத நிலையில், இவ்வுலகத்தாரில் மீந்திருப்பவர்களை 15ம் வசனம் அடையாளப்படுத்துகிறது. இஸ்ரவேலின் சீரமைக்கப்பட்ட இயக்க முறை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, நகரத்திற்குள் பிரவேசிக்க உலகத்தார் அழைக்கப்படுகிறார்கள். (17ம் வசனம்).

**நாய்கள் :** இவை **புற ஜாதிகளை** அடையாளப்படுத்துகிறது; யூத ஜாதிக்கு (மேசியாவை ஏற்றுக்கொண்ட இஸ்ரவேலருக்கு) அந்நியராக புற ஜாதிகள் இருக்கும் நிலையை இது குறிக்கும். இவ்வாறாக, இஸ்ரவேல் நகரத்திற்குள் இருக்கிறது; ஆனால், ஜாதிகள் (புறஜாதிகள்) நகரத்திற்கு புறம்பே இருக்கிறார்கள்; (மத் 15 : 21 - 28). இந்த புறஜாதிகள் தேவத்திட்டத்தில் இஸ்ரவேலர்களின் பங்கை அங்கீகரிக்க வேண்டியதாய் உள்ளது. அப்படிச் செய்யாத வரையில், ஆசீர்வாதங்களுக்குரிய நிலை அவர்களுக்கு மறுக்கப்படும். (சகரியா 14 : 17, 18; 8 : 23).

**சூனியக்காரர் :** "சூனியக்காரர்" என்பதற்கு கிரேக்க மூலம் "ஃபார்மாக்கியா" **(pharmakeia)** என்ற சொல் ஆகும். இது, மற்றவர்களுக்கு போதை மருந்து கொடுக்கும் குணலட்சணத்தை அடையாளப்படுத்துகிறது. அதாவது, அவர்கள் உணர்வு மங்கிய நிலையில் அல்லது மிதமிஞ்சிய நிலைக்குத் தள்ளப்பட்டு, எதையும் சரியாக கிரகிக்கக்கூடிய தன்மையை இழந்து விடுகிறார்கள்.

சத்தியத்தை அரைகுறையாகத் தெரிந்துகொண்டு, ஆசீர்வாதத்தைப் பெற குறிக்கப் பட்டிருக்கும் நீதியின் பாதையில் செல்லாமல், தவறான அபிப்பிராயம் கொண்டு இருப்பார்கள். செமிடிக் இனத்தைச் சேர்ந்தவர்களை எதிர்ப்பதன் மூலம், யூதர்களுடன் செயல் தொடர்பு கொள்ள இயலாதவர்களாய் இருப்பார்கள்.

**விபசாரக்காரர் :** "விபச்சாரம்" என்பது பழைய யுகத்தில் சபையுடன் இராஜ்ஜீயம் கலந்து உறவாடும் பழக்கத்தை அடையாளப்படுத்துவதாக இருந்தது. தேவ ராஜ்யத்தின் புதிய நடைமுறை சட்டங்களுடன் உலகப்பிரகாரமான வாதங்களை கலக்க முயற்சிப்பவர்கள் தாம் இங்கு "விபசாரக்காரர்" என்று அடையாள பாஷையில் குறிக்கப்படுகின்றனர்.

**கொலைபாதகர் :** ஒருவருடைய நடவடிக்கைகளில் மற்றவர்களை அவதூறு செய்வது கொலை பாதக செயலுக்கு ஒப்பானது என்பதை இயேசு முன்னறிவித்துள்ளார். நகரத்திற்குள் பிரவேசிக்கும் முன்பு, ஒவ்வொருவரும் மற்றவர்களை இழித்துரைத்து, தம்மை நல்லவர்களாக தோற்றமளிக்கும் செயலில் ஈடுபடாமல், நம்மை நாமே சீர் தூக்கும் மனநிலையுடையவர்களாய் இருக்க வேண்டும்.

**விக்கிரகாராதனைக்காரர்கள்** : தகுதியுள்ள காரியங்களைத் தவிர மற்ற எதற்கும் மதிப்பு கொடுப்பவர்களையும், பெறுபவர்களையும் இது அடையாளப்படுத்துகிறது. நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக, ஒவ்வொருவரும் இயேசுவின் பலியின் மேல் நன்மதிப்பும், நன்றியறிதலும் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

**பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் :**

உலகத்தின் எல்லா கஷ்டங்களும் பொய்யை அடிப்படையாகக் கொண்டு வர ஆரம்பித்தன. (ஆதி 3 : 4). வாசல்களைத் தாண்டி உள்ளே செல்ல பொய்களுக்கு அனுமதி கிடையாது என்ற செய்தியை வேதாகமம் இறுதியாகத் தெரிவிக்கிறது. இனிவரும் காலம் பொய் இல்லாமல் துவங்குகிறது.

**வெளி 22 : 16 .** இந்த வசனம் "இடைப்பட்ட பகுதியாக" (parenthesis) உள்ளது. இந்த வசனம் தொடர்பில்லாதபடி உள்ளது. இது "இஸ்ரவேலர்" நகரத்திற்குள் பிரவேசிப்பது பற்றிய விரிவுரைக்கும், "உலகத்தார்" நகரத்திற்குள் பிரவேசிப்பது பற்றிய விரிவுரைக்கும் இடையே பிரிவு செய்வதாக, இந்த 16ம் வசனம் உள்ளது. உலகத்துக்குரிய ஆசீர்வாதங்கள் பற்றிய விஷயங்களின் விவரிப்புக்கு மத்தியில் இயேசு குறுக்கிட்டு, "ஆவிக்குரிய விஷயங்களில் நல்லறிவுரையாக வெளிப்படுத்தல் ஆகமத்தின் சகல சத்தியங்களும் சபையாகிய உங்களுக்கு அருளப்பட்டிருக்கின்றன" என்று சபைக்குத் தெரிவிக்கிறார். மேலும், "நான் தாவீதின் வேரும் சந்ததியுமாயிருக்கிறேன்" என்று இயேசு தம்மை வெளிப்படுத்தி, தம்மை மேசியாவாக அங்கீகரிக்காத வரையிலும் இஸ்ரவேல் உலகத்தாரை ஆசீர்வதிக்க இயலாது என்பதை உணர்த்துகிறார்;

வெளி 22 : 16.

**சபைகளில் இவைகளை உங்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமு மாயிருக்கிறேன் என்றார் .**

வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதும் இயேசுவைப் பற்றி எழுதப்பட்ட புஸ்தகம்; இதிலுள்ள சங்கதிகளை தூதன் மூலம் யோவானுக்கு இயேசு வெளிப்படுத்தினார்; இவைகள் சபையின் ஏழு காலப்பகுதிகளில் உள்ள பரிசுத்தவான்களுடைய நன்மைக்காக எழுதப்பட்டன.

**நான் தாவீதின் வேரும் சந்ததியும் :** (மத் 22 : 42 - 45; ஏசாயா 11 : 1, 10)

இந்த அறிக்கை பல விஷயங்களை உணர்த்துவதாக உள்ளது; ஒருவன் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், இயேசுவை மேசியா என்று அங்கீகரிக்க வேண்டும். வரலாறு, தீர்க்கதரிசனங்கள் மற்றும் வம்சாவளியின் வாயிலாக அவர் பெற்றிருக்கிற உரிமையை இது எடுத்துரைக்கிறது. மேலும், மனுக்குலத்தின் புதிய தகப்பனான இரண்டாம் ஆதாமின் வழியாக இழந்ததைத் திரும்ப பெறுதலை இது உணர்த்துகிறது. (1 கொரி 15 : 45; ஏசாயா 9 : 6; சங்கீதம் 45 : 6). ஜாதிகளை சுதந்தரமாகப் பெற்றிருக்கும் உரிமையை சுட்டிக் காட்டுகிறார். சங்கீதம் 2 : 8; "தாவீதின் வேர்---தாவீதின் சந்ததி" என்று தம்மைப் பற்றி கூறுவதன் மூலம், பழைய யுகத்திலிருந்து (அதாவது, அவர் இன்னும் தாவீதின் சந்ததியாக இருக்கும் பொழுது), புதிய யுகத்திற்கு மாறும் இயக்க மையமாயிருக்கிறார். புதிய யுகத்தில் தாவீதின் ஆண்டவராயிருக்கிறார்.

**பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார் :**

காலைப்பொழுதை வரவழைக்கும் முன்னோடியாக இயேசு இருக்கிறார். இந்த காலை நேரத்துக்குத் தான் சர்வ சிருஷ்டியும் புலம்புகிறது. இந்த விடியற்காலத்து வெளிச்சம் பழைய யுகத்திலிருந்து புதிய யுகம் மாறுவதைச் சுட்டி காட்டுகிறது. இவ்விதம் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய இயேசு, 17ம் வசனத்தில், இந்த காலைப் பொழுதின் நேர்த்தியைப் பற்றி தொடர்ந்து கூறுகிறார் .

வெளி 22 : 17.

**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் .**

"ஆவி" என்பது பிதாவிடமிருந்தும், குமாரனிடமிருந்தும் வரும் வல்லமையாகும். இந்த பரிசுத்த ஆவி பிரதானமாக ஆட்டுக்குட்டியானவரின் வழியாகவே செயல்படுகிறதை வெளிப்படுத்தல் ஆகமத்தில் கண்டுணரலாம். (வெளி 5 : 6). ஆகவே தான், இந்த சொல் "மணவாளன்" என்ற சொல்லுக்கு ஒத்த விதமாகவே பொருள்படும் விதத்தில் உள்ளது. தெய்வீக வல்லமையைப் பெறும் முகவர்களான பரிசுத்த ஆவியும், மணவாட்டியும் மனுக்குலத்தை ஜீவனுக்குட்படுத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். மாம்சமான யாவர் மேலும் ஆவி ஊற்றப்படும் காலம் இதுவே. (யோவேல் 2 : 28). ஆகவே, "ஆவி வா" என்று சொல்லும் போது **அனைவரும் செவி கொடுக்கும் வண்ணம்** அந்த அழைப்பினை கேட்க தவற மாட்டார்கள்.

**மணவாட்டி** : "ஆவி" எல்லார் மேலும் ஊற்றப்படும் பொழுது, அந்த அழைப்பு விரிவானதும், தவிர்க்க முடியாததுமாக இருக்கும் நிலையில், இந்த ஆவி"யுடன், "மணவாட்டி"யும் ஏன் அழைப்பு விடுவிக்க வேண்டும் ? ஏனெனில், மணவாட்டி முன்பு மனுஷர்களாகவும், சோதனைகளில் ஜெயங்கொண்டவர்களாகவும், மனுக்குலத்துடன் தொடர்புடையவர்களாய் இருந்ததால், மனுக்குலம் மீதான இரக்கமும் அக்கறையும் காரணமாக இருக்கலாம். மனுக்குலம் நம்பிக்கையுறுவதற்கு மணவாட்டியின் அறிமுகம் தேவைப்படுகிறது.

**"வா" என்கிறார்கள் :** இது ஒரு "அழைப்பு" ஆகும். இது "பலவந்தம்" அல்ல. சுய விருப்பத்துடன் மனுஷர்கள் நகரத்திற்குள் நுழைய வேண்டும். இந்த அழைப்பிற்கு செவி கொடுத்து, தம் மனோபாவம் மாறி நகரத்திற்குச் செல்ல சில ஜனங்களுக்கு சிறிது காலம் தேவைப்படலாம்.

**கேட்கிறவனும் வா என்பானாக** : ஒவ்வொரு மனுஷனும் விரும்பிய இலக்கை அடைவதற்கு சுய விருப்பத்துடன் இயங்க, மற்ற சிருஷ்டிகளும் ஒன்றாக செயல்பட்டு அவனை அனுமதிக்க வேண்டும். ஒவ்வொருவனும் வலுக்கட்டாயப்படுத்தப்பட்டு வரக் கூடாது. அதே சமயம், அவன் வர தடையாயிராமல் அனுமதிக்க வேண்டும். இந்த செயல் முறையில் மனுப்புத்திரர்கள் பெருமளவில் விரைவாக வரவழைக்கப்படுவார்கள்

கேட்கிறவன் "வருவதற்கு" மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது, அவர்கள் கேட்கிறார்கள்; இரண்டாவதாக, அந்த அழைப்பின் செய்தியில் ஈர்க்கப்படுகிறார்கள்; மூன்றாவதாக, அந்த அழைப்பிற்கு அவர்கள் மன நிலை பதிலளிக்கிறது.

இவ்வாறு, கேட்டு வர நினைக்கிறவர்கள், ஆவி மற்றும் மணவாட்டி இடும் சத்தங்களோடு இணைந்து, மற்றவர்களையும் வருமாறு அழைக்கிறார்கள். இந்த அழைப்பு ஒரு பெரும் கூட்டம் இடும் சத்தத்திற்கு ஒத்திருக்கும்.

**தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் :** இரண்டவதாக வரக்கூடிய இந்த பிரிவினர், சத்திய தூதை கேட்டு, அதன் காரணமாக ஈர்க்கப்பட்டு வருவதில்லை; தங்களின் வாழ்வுக்கடுத்த அடக்க முடியாத நீடித்த ஆசை காரணமாகவும், சபலம் மற்றும் வறட்சி காரணமாக சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் மனப்பாண்மையில் வருகிறார்கள். முதலில் நாம் பார்த்த பிரிவினருக்கும், இவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், இவர்கள் மற்றவர்களை அழைக்கும் நிலையில் இருக்காமல், பட்டினியாயிருப்பவன் ரொட்டித்துண்டுக்கு ஏங்குவது போல, தங்கள் சுற்றுப்புற சூழ்நிலையை கவனத்தில் கொள்ளாமல், தங்கள் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில், அழைப்பைக் கேட்டு "வருபவர்களாய்" இருக்கிறார்கள்.

**விருப்பமுள்ளவன் :** இந்த மூன்றாம் பிரிவினர் மனுக்குலத்தின் மீதமுள்ளவர்கள் ஆவர்; இவர்கள் ஆதாமின் சாபத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நாச அழிவுகளில் பெருமளவில் கஷ்டப்படாதவர்கள். "தாங்கள் தாகமாயிருக்கிறோம்" என்ற உணர்வு இல்லாமல், அழைப்பின் குரலுக்கு துவக்கத்தில் செவி கொடாமல் இருந்து, பிறகு இந்த அழைப்பில் ஏற்படும் பலன்களைப் பார்த்து, அழைப்பில் பங்கு கொள்ள நினைக்கிறவர்கள்.

**ஜீவத்தண்ணீரை :** மேலே குறிப்பிட்ட மூன்று பிரிவினரும் ஜீவத்தண்ணீரைப் பெறுகிறார்கள். "தண்ணீர்"" என்பது சத்தியத்தை அடையாளப்படுத்துகிறது. இதை சரியான விதத்தில் கையாண்டால் ஜீவனுக்கு வழி வகுக்கும். இவ்விதமாக, ஜீவனுக்குப் போகும் பெரும் பாதையில் இந்த மூன்று பிரிவினரும் பிரவேசிக்கிறார்கள்.

**இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் :** இந்த சொற்றொடர் வெளி 21 : 6ம் வசனத்தைப் பிரதிபலிக்கிறது. இதற்கு எவ்வித கிரயமும் செலுத்தாமல், ஜீவனை அளிக்கக் கூடிய சத்தியங்களில் பங்கேற்கலாம் என்பதை இந்த சொற்றொடர் உணர்த்துகிறது. இதனால் எவ்வித பக்க விளைவுகளோ, ஆபத்துக்களோ ஏற்படுவதில்லை.

இத்துடன் தூது முழுமையடைகிறது. ஆனால், இவற்றை யாரும் களங்கப்படுத்த வேண்டாம் என இயேசு 18 & 19 ம் வசனங்களில் எச்சரிக்கிறார்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## PART III : வேத வசனங்களை கையாளுபவர்களுக்கு இயேசுவின் எச்சரிப்பு
வெளி 22 : 18, 19.

**வெளி 22 : 18.**

**இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால்,இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார் .**

நியாயாதிபதியாகிய கிறிஸ்து இங்கு சாட்சியிடுகிறார். எல்லா விஷயங்களிலும் முதலும் கடைசியுமாய் இருக்கிறவரின் சாட்சி இது. இந்த புஸ்தகத்தை படிப்பதோடு மட்டுமல்லாமல், அதிலுள்ள வசனங்களைக் கேட்பதோடு மட்டுமல்லாமல், அப்புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிறவர்களாயிருக்க வேண்டும் என்பதை கவனிக்கவும். வெளிப்படுத்தல் ஆகமத்துடன் பரிச்சயம் கொண்டு, அப்புஸ்தகத்திலுள்ளவைகளை "கேட்டிருக்கிறேன்" என்று சொல்பவர்களை இது குறிக்கிறது.

இப்புஸ்தகத்திலுள்ளவற்றை மேலோட்டமாக எடுத்துக் கொள்ளாமல் சரிவர புரிந்து கொள்பவர்களுக்கு விடுவிக்கப்பட்ட எச்சரிப்பாக இது இருக்கிறது.

**ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் :**

வெளிப்படுத்தல் ஆகமத்திலுள்ள சத்தியங்களை, மற்றவர்களை வலுக்கட்டாயமாகத் தம் வசப்படுத்த முயல்வோருக்கு இது கொடுக்கப்படும் எச்சரிப்பாகும். தாம் சொல்ல நினைக்கும் விதமாக சத்தியங்களைப் புரட்டுவோருக்கு இந்த எச்சரிப்பு விடுவிக்கப்படுகிறது.

**இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார் :**

கொடுக்கப்பட்ட சத்தியங்களை வேண்டுமென்றே கூட்டுபவர்களை மகாபாபிலோனிய அந்திக்கிறிஸ்து அமைப்பைச் சார்ந்தவர்களாக அடையாளங் காணப்படுவார்கள். அந்த அமைப்பு அனுபவிக்கும் வாதைகளை இவர்கள் அனுபவிப்பார்கள். எழுதப்பட்ட வார்த்தைகளுடன் கூட்டும் பாபிலோனின் வழக்கத்தை இந்த வசனம் பெரிதும் உணர்த்துவதாக உள்ளது.

வெளிப்படுத்தல் ஆகமத்தின் கடைசி அதிகாரம் லவோதிக்கேயா சபையின் ஏழாம் காலப்பகுதியை மையப்படுத்தியே உள்ளது என்பதை மேற்குறிப்பிட்ட எச்சரிப்பு உணர்த்துகிறது.

**வெளி 22 : 19.**

**ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார் .**

இல்லாதவற்றை கூடுதலாக சேர்ப்பது ஒருவகை செயல்; இருக்கிறவற்றை நீக்கிப் போடுவது (மறுப்பது) ஒருவகை செயல். நல்ல கருத்துக்களை அழித்து, அதற்குப் பதிலாக நல்லவையல்லாதவற்றை சேர்ப்பது சாத்தானுக்குரிய செயலாக இருக்கிறது. இதற்கான தெய்வீகத் தீர்ப்பைக் கவனிக்கவும். கூட்டுகிறவனுக்கு சில காரியங்கள் (வாதைகள்) கூடுதலாக கொடுக்கப்படுகின்றன. நீக்கிப் போடுகிறவனுக்கு சில காரியங்கள் (ஜீவன்) எடுத்துப் போடப்படுகின்றன.

**ஜீவ புஸ்தகத்திலிருந்து :**

திருத்திய மொழி பெயர்ப்பில் (ஜீவ விருட்சத்திலிருந்தும்) என்று காணப்படுகிறது ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய ஒரு பகுதியாக உள்ள ஆசீர்வாதத்தில், அவனுக்குரிய பங்கு நீக்கப்பட்டுவிடும் என்பதை இது உணர்த்துகிறது.

**பரிசுத்த நகரத்திலிருந்தும் :**

புதிய நகரமாகிய புதிய எருசலேமில் (வெளி 21 : 2) வாழும் பங்கை இழப்பதைக் குறிக்கிறது.

**இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்து :**

"வாதைகள்", "ஜீவ விருட்சம்", "பரிசுத்த நகரம்" போன்றவை இந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஜீவனையும் (ஜீவ விருட்சத்தையும்), கிறிஸ்தவ புதிய ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தையும் (பரிசுத்த நகரம்) தகுதியானவர்களுக்கு தேவன் அளிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். தகுதியில்லாதவர்களுக்கு வாதைகள் கூட்டப்படும்.

நமக்கு இயேசுவினால் கொடுக்கப்பட்ட இந்த தூது இத்துடன் முடிவடைகிறது. இது ஒரு எச்சரிப்புடன் முடிவடைகிறது. பழைய ஏற்பாட்டு சத்தியங்களும் இதே போன்று தான் எச்சரிப்புடன் முடிவடைந்தன. (மல்கியா 4 : 6).

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

**PART IV : யோவானுடைய பிரியா விடை.**

**வெளி 22 : 20, 21.**

**வெளி 22 : 20.**
**இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.; ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.**

**இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் :**

இந்த சாட்சி "இயேசு" என்பதை இந்த வசனத்தின் பிற்பகுதி தெளிவாகத் தெரிவிக்கிறது. வெளி 22 : 18, 19ம் வசனங்களும் இயேசுவினால் சொல்லப்பட்டவை என்பதை நாம் அறிவோம். இது யோவானால் அறிவிக்கப்பட்டவைகள் அல்ல.

**மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் :**

இந்த வார்த்தைகள், வசனத்துடன் கூட்டுகிறவர்களுக்கும், நீக்கிப் போடுகிறவர்களுக்கும் மனவுளைச்சலை கொடுக்கக்கூடியவை ஆகும். ஆனால், இது பரிசுத்தவான்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தி ஆகும். இந்த வார்த்தைகள், குறிப்பாக 22ம் அதிகாரத்திலுள்ளவைகள் பெரிதும் பொருந்துவதாக உள்ளது; மேலும், 22 : 7, 12ல் சொல்லப்படுவது போல, இந்த 22 : 20ம் வசனம் இயேசுவின் வருகையை அதாவது, 1874ன் பிரசன்னத்தைக் குறிப்பதில்லை. முழுமை பெற்ற மணவாட்டியை அவர் ஏற்றுக் கொள்வதையே குறிக்கிறதாயிருக்கிறது. (மத் 25 : 10). இயேசுவின் இந்த செய்திக்கு, யோவான் உற்சாகமாக பதிலளிக்கிறார் .

**ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் :**

இயேசுவின் இரண்டாம் வருகையின் சில அம்சங்களைப் பற்றி தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தவைகளுக்கு பிரதியுத்தரம் செய்யும் விதமாக "அப்படியே ஆகும், ஆமென்" (வெளி 1 : 7) என்று சொன்ன யோவான், இப்பொழுது இயேசு கூறும் செய்திகளுக்கு "ஆமென்" என்று மறுமொழி பகர்கிறார். இந்த யுக முழுவதிலும் உள்ள யோவான் வகுப்பார் இந்த விருப்பத்தை முன்னிட்டு (கர்த்தரின் வருகையையும், அது தொடர்பானவைகளையும்) ஒன்றாகின்றனர். பாபிலோன் மார்க்கத்தினர் இந்த நிகழ்ச்சியைக் குறித்து பயம் கொள்கின்றனர். பயத்தினால் ஒருங்கிணைகின்றனர். உண்மையான பரிசுத்தவான்கள் மகிழ்ச்சியுடன் இதையே எதிர்பார்த்தனர்.

"சீக்கிரமாய்" என்பது லவோதிக்கேயா சபையினருக்கு முக்கியமான தொன்றாகும். மற்றவர்களுக்கு இது அதிகமாய் பொருந்துவதில்லை. கி.பி. 1870ம் ஆண்டுகளுக்குப் பிறகு, இறுதி காலக்கட்டத்திலிருக்கும் நமக்கு, நமது வாழ்நாட்களிலேயே இந்த நிகழ்ச்சிகள் **"விரைவாக"** உச்சக் கட்டத்தை அடையும் என்று நம்புகிறோம். இவைகளுக்கு மிக அருகாமையில் நாம் இன்று இருக்கிறோம் ! இருப்பினும், வெளி 14 : 12ன் பொறுமை நமக்குத் தேவை.

"பிரியமான அப்போஸ்தலரான" யோவான் இந்த வெளிப்படுத்தல் ஆகமம் முழுவதிலும் நமக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். அவர் கீழ்கண்ட வார்த்தைகளுடன் நம்மிடமிருந்து விடை பெறுகிறார்:

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக, ஆமென் :**

**கிருபை :** "கிருபை" என்ற சொல் எபிரேய மொழியில் "தாழ்ந்தவர்களுக்கு உதவி செய்ய குனிந்த நிலை" என்று பொருள்படும். நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து :**

இவரே நமக்கு உதவுபவர்; அன்பான வாக்குத்தத்தங்களின் உடன்சுதந்திரவாளிகளாக அவருடன் இணையப் போகிறோம்.

**உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக :**

"பரிசுத்தவான்களோடு இருப்பதாக" என்பது சரியான மொழி பெயர்ப்பாக இருக்கலாம் . "உங்கள் அனைவரோடும் கூட" என்று வாசித்தால், "எல்லா பரிசுத்தவான்களையும்" இது குறிப்பதாகக் கொள்ளலாம்." இந்த கிருபையானது, குறித்த காலத்தில் (வெகு சீக்கிரம்) எல்லோருக்கும் நீடிக்கப்படும் என்ற மகிழ்ச்சிக்குரிய விஷயத்தை நாம் நன்கு அறிவோம்.

**ஆமென் :** அப்படியே ஆகட்டும்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# பின் இணைப்புகள்
# APPENDICES

# பின் இணைப்புகள் : அட்டவணை


| அனுபந்தம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| I | ஏழு சபைகள் — வரலாற்று பின்னனிகள் | 339 |
| II | ஏழு சபைகளின் தூதுகள் யாருக்கு எழுதப்பட்டன ? | 343 |
| III | ஏழு தூதர்களில் ஒருவராயிருப்பதற்கான தகுதிகள் | 345 |
| IV | ஏழு சபைகள், ஏழு முத்திரைகள் மற்றும் ஏழு எக்காளங்கள் தொடர்பான காலக்கணக்கு | 347 |
| V | ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள் | 352 |
| VI | ஏழு சபைகளும், ஏழு தூதர்களும் | 353 |
| VII | ஏழு தூதர்கள்,ஏழு சபைகள், ஏழு முத்திரைகள்,ஏழு உவமைகள் ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள். | 354 |
| VIII | ஏழு ஆவிகள் | 356 |
| IX | நான்கு ஜீவன்கள் (நான்கு தேவ சுபாவங்கள்) | 358 |
| X | இருபத்து நான்கு மூப்பர்கள் | 360 |
| XI | வானம் | 366 |
| XII | பூமியில் குடியிருக்கிறவர்கள் | 369 |
| XIII | ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள் | 372 |
| XIV | சமுத்திரம் | 374 |
| XV | கண்ணாடிக் கடல் | 379 |
| XVI | மரங்கள் (விருட்சங்கள்) | 381 |
| XVII | வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்" | 386 |
| XVIII | நிக்கொலாய மதஸ்தர் (வெளி 2 : 6,15.) | 388 |
| XIX | அந்திப்பா (வெளி 2 : 13.) | 389 |
| XX | மிருகங்கள், தலைகள், கொம்புகள் | 390 |
| XXI | மிருகமும் அதின் சொரூபமும் | 397 |
| XXII | கிரீடங்கள் | 400 |
| XXIII | முடிகள் | 401 |
| XXIV | சிங்காசனங்கள் | 402 |
| XXV | நேரம் | 404 |
| XXVI | வெளிப்படுத்தல் ஆகமத்தின் முக்கிய அடையாள சொற்கள் | 407 |
| XXVII | லிவியாதானும் பிகெமோத்தும் | 413 |
| XXVIII | மூன்று அடையாளங்கள்:அவற்றின் செயல்பாடுகளில் மாறுதல்கள் | 414 |

| | | |
|---|---|---|
| **XXIX** | 12 முதல் 20ம் அதிகாரங்களுக்கு இடையிலுள்ள தொடர்புகள் | 417 |
| **XXX** | ராஜாக்கள் | 421 |
| **XXXI** | ஆறாம் சபை நிகழ்வுகளுக்கும் ஏழாம் சபை நிகழ்வுகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு : | 423 |
| **XXXII** | அருஞ்சொல் விளக்க அகராதி | 425 |

# ஏழு சபைகள் — வரலாற்று பின்னணிகள்

## எபேசு சபை (வெளி 2 : 1 - 7)

"எபேசு" என்பது ஆசியா மைனரின் மேற்கு கடற்கரையின் மத்தியில் உள்ள பட்டணம் ஆகும். புதிய ஏற்பாட்டில் "ஆசியா" என்று சொல்லப்படுவது, தீபகற்பத்தின் மேற்கு பகுதியைக் குறிக்கிறது. "எபேசு" பட்டணம் ஆசியாவின் தலைநகரமாக விளங்கியது. இது ரோம ராஜ்யத்தின் மாபெரும் வர்த்தக ஸ்தலமாகவும், உலகின் பலதரப்பட்ட மக்களுடன் தொடர்பு கொள்ளும் விதத்தில் அமைந்த இடமாக இருந்தது. ஜாதிப் பகையும், மதக் கலவரமும் மிகுந்து, மூட நம்பிக்கைகளும் ஒழுக்கக் கேடு நிறைந்த இடமாகவும் விளங்கியது. எபேசுவில் தெமெத்திரியு என்னும் பேர் கொண்ட தட்டான், தியானாளின் கோயிலைப் போல வெள்ளியினால் சிறிய கோவில்களை செய்து வந்தான் எனவும், பவுல் அப்போஸ்தலனின் பிரசங்கம் தெமெத்திரியுவின் தொழிலை பாதித்தது குறித்து அப்போஸ்தலர் 19 ம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

"எபேசு" பட்டணம் மகா அலெக்ஸாண்டருக்குப் பிறகு, அவருடைய நான்கு தளபதிகளில் ஒருவரான லிசிமாகுஸ் என்பவரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இது ஆசியாவின் தலைநகரமாக இருந்தது. இங்கு தான், யோவான் அப்போஸ்தலனும் தம் சுவிசேஷத்தையும், நிரூபங்களையும் எழுதினார் என்று யூகிக்கப்படுகிறது. ஆசியா மைனரிலிருந்த முதல் கிறிஸ்தவ சபை எபேசு சபையாக இருந்தது. ஆசியா மைனரின் திறந்த வாசலாக எபேசு பட்டணத்தை பவுல் அப்போஸ்தலன் நினைத்திருந்தார். ஆசியா நாட்டில் தாம் செய்த ஊழியத்தைப் பற்றி எபேசு சபை மூப்பர்களிடம் விவரித்து, விடை பெற்றதை அப் 20ம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

### சிமிர்னா சபை – வெளி 2 : 8 - 11.

"சிமிர்னா" பட்டணம் மேற்கு ஆசியா மைனரில் இருக்கிறது. இதற்கு இப்பொழுது வழக்கில் உள்ள பெயர் "இஸ்மீர்" ( **ISMIR** ) . இந்த பட்டணம் எபேசுவுக்கு கிழக்கே **50** மைல்கள் தூரத்தில் இருக்கிறது. சிமிர்னா" பட்டணம் மகா அலெக்ஸாண்டரால் வடிவமைக்கப்பட்டு, அவருக்கு பின் ஆட்சி செய்த அன்டிகனுஸ் மற்றும் லிசிமகுஸ் என்பவர்களால் கட்டப்பட்டது. இதன் பாழடைந்த பகுதிகளை இன்றும் காணலாம்.

ரோம பேரரசர்களான நீரோ மன்னன் முதல் டயக்ளிஷியன் வரைக்கும், (கான்ஸ்டண்டைன் கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவு தந்த வரையிலும் (கி.பி. 325) ரோம புறமதஸ்தரால் கிறிஸ்தவர்கள் பெரும் உபத்திரவத்திற்குள்ளானார்கள். "சிமிர்னா" என்றால் "கசப்பு" ( **MYRRH** ) என்று பொருள்படும். இந்த கிரேக்க வார்த்தையும், யாத் 15 : 23ல் குறிப்பிடப்படும் "மாரா" என்ற சொல்லும் ஒரே இனத்தை சேர்ந்தது. சிமிர்னா" பட்டணத்தில் கிறிஸ்தவர்கள் கசப்பான அனுபவத்திற்கு உள்ளானார்கள். "நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாட்கள் உபத்திரப்படுவீர்கள்" என்ற தீர்க்கதரிசனத்தின்படி, டயக்ளிஷியன் ஆட்சியில் கி.பி. 303 முதல் 313 வரையிலும் கிறிஸ்தவர்கள் ரோம புறமதஸ்தரால், பெரும் அடக்குமுறைக்கு ஆளானார்கள். ரோம பேரரசனை தொழுது கொள்ளாமல் மறுப்பவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்கள் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்க ப்பட்டார்கள். ரோம பேரரசனுக்கு பலியிடும் விதத்தில், அக்கினியில் தூபவர்க்க துகள்களை எறிந்து விடுபவர்கள் சித்திரவதைக்குத் தப்புவிக்கப்பட்டார்கள். இதைச் செய்யாமல் மறுத்தவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள்.

"சிமிர்னா" என்ற வார்த்தைக்கு "சுகந்த வாசனை" என்ற அர்த்தமும் உண்டு. ரோம புறமத பேரரசர்களால் சபைக்கு முதன் முதலாக ஏற்பட்ட அடக்குமுறைகளை "சுகந்த வாசனை" அடையாளப்படுத்துகிறது.

### **பெர்கமு சபை வெளி** (2 : 12 - 17).

ஆசியா மைனரின் மிசியா மாநிலத்தில் பழங்காலத்திய பட்டணமாக "பெர்கமு" இருந்தது. இந்த பட்டணத்திலுள்ள கூம்பு வடிவத்திலுள்ள மலைக்கு இந்த பெயர் தான் முதலில் இருந்தது. இந்த மலையின் உச்சியில் தான் பெர்கமு ஒரு கோட்டையாக இருந்தது. இயற்கையாகவே அமைந்த பாதுகாப்பு காரணமாக, லிசிமகுஸ் இந்த இடத்தை தன் பொக்கிஷங்களைப் பாதுகாக்க தேர்ந்தெடுத்தான். துருக்கியில் இப்பட்டணம் இப்பொழுது "பெர்கமா" என்று அழைக்கப்படுகிறது. இந்த பட்டணத்தின் தெய்வமாக அங்கலாபியஸ் கருதப்பட்டது. இது மருத்துவக் கடவுளாக எண்ணப்பட்டு, உயிருள்ள பாம்பு வடிவத்தில் வணங்கப்பட்டு வந்தது. கோவிலில் உயிருள்ள பாம்பு பராமரிக்கப்பட்டு, அபூர்வ சக்தி வாய்ந்ததாக கருதப்பட்டு, வியாதிகள் சொஸ்தமாவதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கோவிலுக்கு வந்தனர். நாணயங்களில் ஒரு கோலில் பாம்பு சுற்றியுள்ளவாறு வடிவமைக்கப்பட்டு பொறிக்கப்பட்டது. சர்ப்பத்தை தொழுது கொள்வதைக் குறிக்கும் வகையில், வெளி 2 : 13ல் "சாத்தானுடைய சிங்காசனம்" என்று சொல்லப் படுகிறது. வெளி 12 : 9ல் பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

"பெர்கமு" பட்டணம் தோல் பதனிடும் மையமாக திகழ்ந்தது. இரண்டு லட்சம் புத்தகங்கள் உள்ளடக்கிய ஒரு நூலகம் இங்கு நிறுவப்பட்டது. பிறகு, இந்த புத்தகங்கள் அலெக்ஸாண்டரியா நகர நூலகத்திற்கு அனுப்பப்பட்டது. ரோம பேரரசன் கான்ஸ்டண்டைன் ஆட்சியில் வேதாகமத்தின் முதல் நகல்கள் இங்கு உருவாக்கப்பட்டன.

### **தியத்தீரா (வெளி** 2 : 18 - 29).

தியத்தீரா பட்டணம் ஆசியா மைனரில் சிமிர்னா பட்டணத்திற்கு வட கிழக்கே 56 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இது தற்போது "அக்-ஹிஸ்ஸார்" (AG-HISSAR) என்று அழைக்கப்படுகிறது. பெர்சிய சாம்ராஜ்யத்தை தோற்கடித்த மகா அலெக்ஸாண்டருக்குப் பின் ஆட்சிக்கு வந்த செலுக்கஸ் என்ற கிரேக்க அரசனால் தியத்தீரா பட்டணம் கி.மு. 3ம் .நூற்றாண்டில் மக்கதோனியர்களின் காலனியாக நிறுவப்பட்டது. இப்பட்டணத்தில் நெசவாளர்களும், கம்பளி மற்றும் பட்டு ஜவுளி ஆடைகளுக்கு சாயம் பூசுபவர்களும், தோல் பதனிடுபவர்களும், குயவர்களும், உலோக தொழிலாளிகளும் நிறைந்த பெருமைக்குரிய ஸ்தலமாக விளங்கியது. இந்த பட்டணத்தைச் சேர்ந்த லீதியாள் என்ற பெண் பிலிப்பி பட்டணத்தில் ஜவுளி வியாபாரியாக இருந்தாள் என்பது அப்போ 16 : 14ல் அறிகிறோம். ஐரோப்பாவில் பவுல் அப்போஸ்தனால் கிறிஸ்தவளாக மாற்றப்பட்ட முதல் பெண் இவள் .

"தியத்தீரா" என்றால் "பலியின் சுகந்த வாசனை" என்று பொருள்படும். தியத்தீரா சபையின் காலப்பகுதியில் தான், அந்திக்கிறிஸ்து தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து இருப்பவனை, அவனுடைய ஏவலர்கள் தேவன் போல் பாவித்தனர். (2தெச 2 : 4). இக்காலப்பகுதியில் தான் ரோமைச் சபையின் தலைமையான போப்புக்கள் இருப்புக்கோல் கொண்டு ராஜ்யங்களை ஆண்டு, தங்களுடைய அதிகாரத்தை அங்கீகரிக்காதவர்களை குயவனுடைய மண்பாண்டங்கள் போன்று நொறுக்கிப் போட்டனர். இந்த போலிச் சபையினால் மெய்சபையினர் வனாந்திர நிலைமைக்குள்ளாயினர். தியத்தீரா சபையின் காலக்கட்டத்தில் கர்த்தருடைய ஊழியத்தை சபை பரிசுத்தவான்கள் விசுவாசத்துடன் மேற்கொண்டனர்.

### சர்தை சபை (வெளி 3 : 1 - 6).

ஆசியா மைனரில் லீதியா ராஜ்யத்தின் தலைநகராக "சர்தை" பட்டணம் திகழ்ந்தது. இந்த பட்டணம் கி.மு. 283ல் செலுக்கஸ் என்ற கிரேக்க அரசன் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கி.பி. 14 - 37ல் ஏற்பட்ட பூகம்பத்தினால் அழிந்த இந்த பட்டணத்தை ரோம பேரரசன் திபேரியு திரும்பக் கட்டினான். கி.பி. 11ம் நூற்றாண்டில் இது துருக்கியரால் கட்டப்பட்டது. இந்த பட்டணத்தில் ஜவுளிகள் தயாரிப்பும், தங்க நகைகள் தயாரிக்கும் தொழிலும் பிரபலமாயிருந்தது. சர்தை பட்டணத்து குடிமக்கள் மிக்க செல்வந்தர்களாகவும், மாயையான வழிபாட்டு முறைகளில் மிகுந்த ஈடுபாடும் கொண்டிருந்தனர். இங்கு நிறுவப்பட்ட கிறிஸ்தவ சபை நாளடைவில் தேய்வடைந்து, பெரும்பாலோர் புறமத வழிபாட்டுக்குத் திரும்பும் நிலை ஏற்பட்டது.

"சர்தை" என்பது "மீதம் இருப்பவை" என்று பொருள்படும். வெளி 3 : 1ல் "நீ உயிருள்ளவன் என்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாய் இருக்கிறாய்" என்று குறிப்பிட்டவிதமாக சர்தை சபை பெயரளவுக்கு கிறிஸ்தவ சபை என்று இருந்தாலும், உண்மையில் ஜீவன் இல்லாமல், நற்பண்புகள் முற்றிலும் இழந்துள்ளது.

சர்தை சபையின் காலம், மறுமலர்ச்சிக்கு முற்பட்ட ஒரு சிறிய காலப்பகுதி ஆகும்.

### பிலதெல்பியா (வெளி 3 : 7 - 13).

ஆசியா மைனரிலுள்ள பிலதெல்பியா பட்டணம், சர்தை பட்டணத்தின் தென் கிழக்கே 26 மைல்களுக்கு அப்பால் உள்ளது. பெர்கமுவின் ராஜாவான 'அட்டலஸ் பிலதெல்பஸ்' என்பவரால் பிலதெல்பியா பட்டணம் நிறுவப்பட்டது. கி.பி. 17ல் இப்பட்டணம் பூகம்பத்தினால் முழுவதுமாக அழிந்தது. இதன் தற்போதைய பெயர் "அல்லா சஹர்" (ALLAH SHEHR) ஆகும். அதாவது, இதற்கு "கடவுளின் நகரம்" என்று அர்த்தம் ஆகும். தற்பொழுது இங்கு 15,000 பேர் குடியிருக்கிறார்கள். பழங்காலத்திய பாழடைந்த கோவில்களை இன்றும் பார்க்கலாம்.

பிலதெல்பியா பட்டணம் சுற்றிலும் எரிமலைப் பகுதிகளைக் கொண்டது. இது நான்கு அல்லது ஐந்து மலைகளின் மேல் கட்டப்பட்டது. தலை செதுக்கப்பட்ட பிரமீடுகளைப் போன்ற உருவமுள்ள மலைகளின் மேல் இந்த பட்டணம் கட்டப்பட்டது. இந்த பகுதியில் இன்றும் திராட்ச செடிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த பட்டணத்தில் தனியாக இருக்கும் ஒரு பழங்காலத்திய உயர்ந்த தூண் ஒன்றைப் பார்ப்பவர்களுக்கு, பிலதெல்பியா சபைக்குக் கொடுக்கப்பட்ட தூது (வெளி 3 : 12) கண்டிப்பாக ஞாபகத்துக்கு வரும். "அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்".

"பிலதெல்பியா" என்றால் "சகோதர அன்பு" என்று பொருள்படும். இந்த சபையின் காலப்பகுதி மறுமலர்ச்சி தொடங்கிய காலத்தைச் சேர்ந்ததாகும்.

### லவோதிக்கேயா (வெளி 3 : 14 - 22).

லவோதிக்கேயா பட்டணம் ஆசியா மைனரில் லைகஸ் நதிக்கரையில் உள்ளது. இது கொலேசே, ஹிரபோலிஸ் பட்டணங்களுக்கு அருகாமையில் தென் திசையில் உள்ளது. இதன் பழைய பெயர் "டயஸ்போலிஸ்" (DIOSPOLIS- ஜூபிடரின் நகரம்) என்றும், அதன் பிறகு "ரோவாஸ்" என்றும் அழைக்கப்பட்டது.

அந்தியோகஸ் I என்ற அரசனால் இந்த பட்டணம் விரிவாக்கப்பட்டு, அவருடைய மனைவி லவோதிக்கேயாவின் பெயரில் அழைக்கப்பட்டது. கொலேசே, ஹிரோபோலிஸ் பட்டணங்களைப் போலவே, லவோதிக்கேயாவும் பூகம்பத்தினால் கி.பி. 64ல் அழிக்கப்பட்டது. பிறகு, ரோம பேரரசன் மார்கஸ் அரேலியஸ் என்பவரால் திரும்பக் கட்டப்பட்டது. இதன் பாழடைந்த பகுதிகளை இன்றும் காணலாம். இன்று "எஸ்கி-ஹிஸ்ஸார்" **(ESKI-HISSER)** என்று இப்பட்டணம் அழைக்கப்படுகிறது.

லவோதிக்கேயாவில் செம்மறியாடுகளின் ரோமத்தினாலான கறுப்பு நிற கம்பளிகளுக்கும் (வெளி 3 : 18), சரிகை வேலைப்பாடுள்ள ஆடைகள், "பிரைஜியன் மருந்து பொடி" (கண் மருந்து) போன்றவைகளுக்கு பிரபலமாயிருந்தது. (வெளி 3 : 18ம் வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும்). இப்பட்டணத்து வர்த்தகர்கள் சாம்ராஜ்யம் முழுவதும் இயங்கி வந்தனர். ("நான் ஐசுவரியவானென்றும் ---- " என்ற 3 : 17ம் வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும்).

லவோதிக்கேயாவில் (நிம்பாவின் வீட்டில்) (கொலோ 4 : 15) கிறிஸ்தவ சபை இருந்தது. "லவோதிக்கேயா" என்றால் "சோதனைக்கு அல்லது தீர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஜனங்கள்" என்று பொருள்படும். இது, லவோதிக்கேயா சபையில் சோதிக்கப்பட்டு, குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

II

# ஏழு சபைகளின் தூதுகள் யாருக்கு எழுதப்பட்டன ?

அறிவிக்கப்பட்ட தூதுகள் ‘சபைகளுக்கு’ என்பதில் சந்தேகமில்லை ! ஆனால், அந்த தூதுகள் பேர்ச்சபைகளுக்கு மட்டுமோ, அல்லது உண்மையான சபைக்கு மட்டுமோ, அல்லது இரண்டு சபைகளுக்குமோ என்ற கேள்வி எழுகிறது.

முதல் ஆறு சபைகளுக்குரிய தூதுகள் இரண்டு விதமான சபைகளுக்கும் (போலிச்சபைகளுக்கும், உண்மை சபைக்கும்) உரியதாக தெரிகிறது. அதில் ஒரு பகுதி "உனக்கு" என்றும், அதின் மறுபகுதி “அவர்களைப்” பற்றியதாகவும் காணப்படுகிறது. "உனக்கு" என்பது பிரதிஷ்டைக்குட்பட்ட பரிசுத்தவான்களைக் குறிக்கிறதாகவும், "அவர்கள்" என்பது போலிச் சபை அல்லது பேர்ச்சபைகளைக் குறிப்பதாகவும் உள்ளது. சர்தை சபையில் மட்டும் இந்த பிரிவு வெளிப்படையாகத் தெரியவில்லை. (வெளி 3 : 4). ஆனால், "வெண்வஸ்திரம் தரித்தவர்கள்" உண்மையான சபையாகவும், மற்றவர்கள் போலியானவர்கள் என்றும் அனுமானிக்க முடிகிறது. ஆனால், ஏழாவது காலப்பகுதியைச் சேர்ந்த லவோதிக்கேயா சபைக்குரிய தூதுகளில் இந்த பிரிவு காணப்படவில்லை. ஆகவே, மற்ற ஆறு சபைகளின் தூதுகளும் யாருக்கு எழுதப்பட்டன என்ற சந்தேகம் எழுகிறது. அது குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு அமைகிறது :

ஏழு காலப்பகுதிகளைச் சேர்ந்த சபைகள் எல்லாவற்றின் தூதுகளிலும் “பொதுவான கூற்று” காணப்படுகிறது :

1) ".........சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்" என்ற வாக்குமூலம் ஏழு சபைகளுக்குரிய தூதுகள் எல்லாவற்றிலும் காணப்படுகிறது. தூதுகளைப் பெற்ற இந்த தூதர்கள் யாருக்கு தூதுகளை அளிக்க நோக்கமாயிருக்கிறார்கள் ? ஆவியில் ஜநிப்பிக்கப்பட்ட பரிசுத்தவான்களை வழி நடத்துதல் தான், இந்த தூதர்களின் முதல் செயலாயிருந்திருக்கும். பாஸ்டர் ரசல் அவர்கள் இக்கட்டான பல தூதுகளை கிறிஸ்தவர்களுக்கு பொதுவாக பிரகடனப்படுத்தினாலும், அவருடைய முதன்மையான பணி, பரிசுத்தவான்களின் மேம்பாட்டிற்காக அறிவுறுத்தும் உபதேசங்களை பிரசங்கிப்பதையே மையமாகக் கொண்டிருந்தது. அவர் பாபிலோனின் வருந்தத்தக்க நிலைமையை கண்டனம் செய்தாலும், "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்று அறிவுறுத்துவதையே பிரதானமாக கொண்டிருந்தார்.

2) "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு ..........." என்ற கூற்று எல்லா சபைக்குரிய தூதுகளிலும் காணப்படுகிறது. "ஜெயங்கொள்ளுகிறவர்கள்" என்பவர்கள் ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்களே! இவ்விதமாக, லவோதிக்கேயா சபையிலும் கூட, அதன் தூதில் ஒரு பகுதி பேர்சபைக்குரியதல்ல என்றும், மெய் சபைக்கு உரியது என்றும் நாம் எளிதாக முடிவுக்கு வரலாம். கோதுமையும் , களைகளும் பிரித்தெடுக்கப்பட வேண்டிய காலப் பகுதி இது "அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்பது கோதுமையும், களைகளும் பிரித்தெடுக்கப்படுவதையே உணர்த்துகிறது. லவோதிக்கேயா சபைக்குரிய முழு தூதும் களைகளுக்கு மட்டும் என்று நாம் சொல்ல முடியாது.

3. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது" என்ற வாசகம் எல்லா சபைகளுக்கும் பொதுவாக உள்ளது. காதுள்ளவர்கள் நமது கர்த்தருடையவர்களாக இருக்க முடியாமலிருப்பார்களா ? இது சாத்தியமில்லை எனத் தோன்றுகிறது. இவ்விதமாக, "சபைகள்" என்று இந்த வாசகங்களில் குறிக்கப்படுபவை “உண்மையான” சபைகளே .

மேற்குறிப்பிட்டவாறு, ஏழு சபைகளுக்குரிய தூதுகள் "உண்மை சபைக்கு" உரியது என்று அறிந்த நிலையில், லவோதிக்கேயா சபையின் தூது பேர்ச்சபைக்கு உரியது என்று ரசல் கூறியதைக் குறித்துப் பார்ப்போம் :

ஏழாம் சபை ஒரு வித்தியாசமானது என்பது வெளிப்படை. வரலாற்றில் முதன் முறையாக, நமது கர்த்தர் போலிகளிலிருந்து, உண்மையைப் பிரித்தெடுப்பதைப் பற்றி அறிவுறுத்துகிறார். இதைப் போன்ற ஒரு சூழ்நிலை முதலாம் சபை காலத்தில் நடந்தது. புதிய கிறிஸ்தவ மத ஒழுங்குகளின் கீழ் வாழ முயன்ற போது, யூத மரபுகளுக்கும், புதிய கிறிஸ்தவத்திற்கும் உள்ள வித்தியாசம், அவர்களுக்கு புலப்படாத நிலைமை இருந்தது. அறுவடை கால தூதனான ரசல், கோதுமையின் அறுவடையைக் குறித்தும், களைகளைக் கட்டுவது பற்றிய தூதுகளையும் கொடுத்து வந்தார். வெளி 3 : 15 - 17ல் உள்ள தூதுகள் அனைத்தும் அவருடைய காலத்தில் இருந்த சபைகளை கண்டனம் பண்ணுவதாகவே இருந்தன. இதில் கவனிக்கத் தக்க ஒரு விஷயம் உண்டு. பிலதெல்பியா சபையில் கெட்டது ஒன்றும் இல்லை. லவோதிக்கேயா சபையில் நல்லது ஒன்றுமில்லை. இருப்பினும், இந்த இரண்டு சபைகளின் காலப்பகுதிகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தன. கி.பி. 1874 வரையிலும் பிலதெல்பியா சபை நல்லதாகவும், அதற்கு பிறகு திடீரென்று மோசமானதாக லவோதிக்கேயா சபை மாறியதா ? பாபிலோன் கி.பி. 1878ல் புறம்பாக்கப்பட்டது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# ஏழு தூதர்களில் ஒருவராயிருப்பதற்கான தகுதிகள்

ஏழு சபைகளுடைய ஏழு தூதர்களின் பெயர்களை அடையாளங் காணுவதில் வேத மாணவர்களில் பெரும்பாலோர் ஒருமித்தக் கருத்துள்ளவர்களாகவே உள்ளனர். இருப்பினும், சில பெயர்களுக்குப் பதிலாக மற்ற பெயர்களை சிலர் குறிப்பது உண்டு. தூதர்களாக இருக்க வேண்டுமாயின் அதற்குரிய அளவு கோல் எது என்பதை பின்வருமாறு பார்க்கலாம் :

(a) ஒவ்வொரு சபைக்குரிய தூது துவங்கும் முன்பாக, " .....சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்......." என்று படிக்கிறோம். அதாவது, சபைக்குரிய தூதை தூதன் பெற்றிருக்கிறான் என்பது வெளிப்படையான உண்மையாகும். அந்த நபர் தம் வாழ்நாளில் பிரசங்கித்த உபதேசங்களின் விசேஷித்த அம்சம், அவர் பெற்ற தூதின் மையக்கருத்தாக இருத்தல் வேண்டும். சபைக்குரிய தூது தூதனுக்கு மட்டும் எழுதப்படுகிறது. சபைக்கு நேரடியாக தூது கொடுக்கப்படவில்லை. அந்த தூதன் போதுமான அளவிற்கு எல்லோருக்கும் அறிமுகமானவராகவும் அல்லது பிரபலமானவராக இருப்பதால், அந்த காலப்பகுதியின் விசுவாசிகள் அந்த தூதை அவரிடமிருந்து பெற இயல்கிறது.

(b) சபையின் ஆரம்ப காலப்பகுதியில் தூதன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதுவது இயல்பான ஒன்றாகும். இது தேவை இல்லை என்றால், அதற்கு வேதாகமத்தில் ஏதாவது குறிப்பு இருக்க வேண்டும். வெளி 2 : 19ல், "உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமை யையும், நீ “முன்புசெய்த” கிரியைகளிலும் பின்பு செய்தகிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" என்று வாசிக்கிறோம். இந்த தூது சொல்லப்படும் சமயத்தில், தூதுக்குரிய காலத்தில் ஒரு பகுதி ஏற்கனவே கழிந்து விட்டது உணரப்படுகிறது. இந்த கருத்து, வெளி 2 : 4ம் வசனத்தின்படியும் எனத் தெரியவருகிறது. ("நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டாய்"); பவுல் அப்போஸ்தலன் ( முதலாம் சபையின் தூதர் என்று பெரிதும் அனுமானிக்கப்படுபவர் ) எபேசு சபை துவங்கிய பொழுது, அவர் அப்போஸ்தலனாகவோ அல்லது கிறிஸ்தவனாகவோ இருக்கவில்லை. அவருடைய தூதுகள் (அவர் எழுதிய புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான நிரூபங்கள்) எபேசு சபை காலப்பகுதியைச் சார்ந்திருந்தன. அதைப் போன்றே, யோவான் சிமிர்னா சபையின் தூதர் என்றும், எல்லா அப்போஸ்தலர்களும் மரித்த பிறகு (மத் 13 : 25 சொல்வது போல) சிமிர்னா சபை துவங்குகிறது என்று அனுமானித்தால், சிமிர்னா சபையின் காலப்பகுதியில் யோவான் உயிரோடு இல்லை என்பதும், அவர் எழுதிய எழுத்துக்கள் மட்டுமே இருந்தது என்பதும் தெளிவாகிறது. ஆகவே, சரியான காரணம் இருந்தால், சபைக்குரிய காலப்பகுதி துவங்கும் சமயத்தில், சபைக்குரிய தூதர் உயிரோடில்லாமலோ, இயங்காமலோ இருக்கலாம்.

(c) வரலாற்றின் காலப்பகுதியில் குறிப்பிடும்படியான சில சிக்கல்கள் இருப்பின், அந்த காலப்பகுதியின் தூதருடைய எழுத்துக்களின் வாயிலாக அந்த சிக்கல்கள் களைவதற்கு உதவுவதாக இருக்க வேண்டும். நாஸ்டிசிசம் ( GNOSTICISM ) கொள்கை சிமிர்னா சபையில் பெரிதாக வியாபித்திருந்தது.

இந்த கொள்கை பேதங்களை எதிர்த்து களைவதற்கு தூண்டுதலாக, இயேசுவின் பல ,நிலைகளை (மனுஷனாவதற்கு முந்தைய நிலை, மனுஷ நிலை, மனுஷனுக்குப் பின்னான நிலை) வெளிப்படுத்தும் விதமாக யோவானின் தூது இருந்தது. . இந்த கொள்கை பேதம் சிமிர்னா சபையின் தூதில் குறிப்பிட்டு அடையாளங் காண முடியாவிடினும், சரித்திரத்தில் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். மற்ற பிரச்சினைகளோடு இதுவும் சுருக்கமாக வெளி 2 : 9ல் சொல்லப் பட்டிருக்கலாம்.

(d) எல்லா தூதர்களும் முழுமையாக சத்தியத்தில் தெளிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கில்லை. முதல் இரண்டு சபைகளின் தூதர்களான பவுலும் யோவானும் ஆவியில் ஏவப்பட்ட அப்போஸ்தலர் என்ற முறையில் சரியான கொள்கையுடையவர்களாயிருந்தனர். "மறைவான இரகசியம் வெளிப்படும் காலத்தில் வாழும் சகோ. ரசல், இந்த யுகத்தின் இறுதி கால தூது பற்றி அறிவு பெற்றவராக இருக்கிறார். மீதமுள்ள நான்கு தூதர்களும் சத்தியத்தை அறிந்து கொள்ளுதலில் பூரணமாக தெளிவு பெற்றவர்களாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அவர்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் தீர்க்கதரிசனங்களின்படி சத்தியங்கள் முழுமையாகவோ, தெளிவாகவோ அறியப்படவில்லை. இவர்களின் சில கொள்கை தவறுகள் அதிர்ச்சியளிப்பவையாகவும் இருந்தன ! ஆனால், தேவ சித்தத்தின்படி, இவர்கள் வாழ்ந்த காலத்தில் சத்தியம் முழுமையாக வெளீப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு வேத வெளிச்சம் சில விஷயங்களில் போதுமானதாயிராத காரணத்தால், அவர்கள் தூதர்கள் இல்லை என தள்ளி விட முடியாது.

(e) இந்த தூதர்கள் தங்கள் சுபாவத்தின்படி முற்போக்கானவர்களாயும், தீவிர ஆர்வமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அசாத்திய தைரியமுள்ளவர்களாகவும், உபதேசம் பண்ணுவதில் தேறினவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஏழு தூதர்களாகக் குறிக்கப்படும் இவர்கள் வேதாகமத்துடன் தொடர்புள்ளவர்களாய் இருப்பதைப் பார்க்கிறோம். பவுலும் யோவானும் வேதாகம எழுத்துக்களை எழுதினார்கள்; தேவ ஆவியில் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகங்களை ஒருங்கிணைத்த பிறகு, அதன் உட்பொருள் மாறாத விதமாக இருக்க ஏரியஸ் பெருமுயற்சி மேற்கொண்டார். வால்டோ, விக்ளிஃப், லூத்தர் அனைவரும் முறையே பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்த்தனர். ரசல் சகோதரர் இசைவாக (அப்போஸ்தலருக்குப் பிறகு இதுவரை யாரும் முயற்சிக்காத அளவிற்கு) பல சத்தியங்களை தெளிவான முறையில் வெளிப்படுத்தினார்.

மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கருத்தில் கொள்ளும் போது, ஏழு தூதர்களுடைய தேர்வின் தகுதியினை உணரலாம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## ஏழு சபைகள், ஏழு முத்திரைகள் மற்றும் ஏழு எக்காளங்கள் தொடர்பான காலக்கணக்கு :

முதலாம் சபை, முதலாம் முத்திரை மற்றும் முதலாம் எக்காளம் அனைத்தும் சம காலத்தைச் சார்ந்தவை என்பதும், அதைப் போன்றே வரிசைக்கிரமத்தின்படியே ஏழாம் சபை வரையிலுமான ஒவ்வொரு சபையும் அதைச் சார்ந்த முத்திரையும், எக்காளமும் சம காலத்தை சேர்ந்தவையே ஆகும் என்ற அனுமானத்தில் இந்த ஏழு சபைகள், முத்திரைகள், எக்காளங்களைப் பற்றி ஆராய முற்படுகிறோம் :

இந்த ஏழு காலப்பகுதிகளில் ஒவ்வொன்றின் தொடக்கமும், முடிவும் பற்றிய காலக்கணக்கு குறித்த பல அபிப்பிராய பேதங்கள் வேத மாணவர்கள் மத்தியில் நிலவுகின்றன. இருப்பினும், சபை, முத்திரை, எக்காளம் பற்றி வெளிப்படுத்தல் ஆகமத்தில் காணப்படும் விபரங்கள் மூலம் கிடைக்கப் பெறும் ‘தடயங்கள்‘ (வரலாறு, காலக்கணக்குகளை அடிப்படையாகக் கொண்டுள்ள) வாயிலாக நம் அனுமானம் உறுதி பெறுகின்றது. கீழ்காணும் ஒவ்வொரு காலப்பகுதியும் தடயங்களையும், சில சமயங்களில் வெளிப்படையான உண்மைகளையும் கொண்டுள்ளதை உணரலாம் :

### முதலாம் சபை : எபேசு சபை

சபையின் தொடக்கம் ‘பெந்தகோஸ்தே நாள்’ என்பது வெளிப்படை. எபேசு சபையின் முடிவு காலப்பகுதியை சிமிர்னா சபையின் ஆரம்பம் தொடர்பான தடயங்களை கருத்திற் கொண்டு தீர்மானிக்கலாம்.

### இரண்டாம் சபை : சிமிர்னா

‘சிமிர்னா’ என்ற பதம் ‘கசப்பு‘ என பொருள்படும். ஆகவே இந்த சபையின் தொடக்கமும், முடிவும், ரோம புறமதத்தினரின் அடக்குமுறைகளின் ஆரம்பத்தையும், அவர்களுடைய அடக்கு முறைகளின் முடிவுறுதலையும் குறிப்பனவாக உள்ளன. மத் 13 : 25ம் வசனம் அப்போஸ்தலர்களின் மரணத்தைக் குறிப்பதாகவும், மத்தேயு 13ம் அதிகாரத்தின் ஏழு உவமைகளும் சபையின் ஏழு காலபகுதிகளைக் குறிப்பதாகவும் எடுத்துக் கொண்டால், யோவான் அப்போஸ்தலன் மரணம் நிகழ்ந்த நாள், சிமிர்னா சபையின் காலப்பகுதியின் தொடக்கமாக கொள்ளலாம். இருந்தாலும், ரோம புறமதத்தினரின் அடக்குமுறை கொடுமைகள் கி.பி. 100ம் ஆண்டுக்கு முன்பாகவே ஆரம்பத்து விட்டதால், நீரோ மன்னனால் சங்கரிக்கப்பட்ட பவுல் அப்போஸ்தலனின் மரண நாள் (கி.பி. 67) சிமிர்னா சபையின் ஆரம்பமாகக் குறிப்பிட ஏதுவாகிறது.

சிமிர்னா சபையின் துவக்க காலப்பகுதியில் யோவான் அப்போஸ்தலன் உயிரோடு இருப்பதாகக் கொள்வதால், அவர் சிமிர்னா சபையின் தூதர் எனக் குறிப்பிட வசதியாகிறது. ஆகவே, எருசலேமின் விழுகையை (கி.பி. 70ல்) சிமிர்னா சபையின் தொடக்கமாகக் கொள்வது பொருத்தம் எனலாம்.

வெளி 2 : 10ம் வசனத்தில் சொல்லப்பட்ட 'பத்து நாட்கள்' என்பது, சபை சந்தித்த கொடுமையான அடக்கு குறைகள் (கி.பி. 303 முதல் கி.பி. 313ம் ஆண்டு வரை) சிமிர்னா சபையின் முடிவு காலப்பகுதியை முன்னறிவிக்கிறது. கி.பி. 313ம் ஆண்டில் "மிலன் சாசனம்" மூலம் ரோமர்களின் அடக்கு முறை முடிவுக்கு வந்தது. இதுவே 'கசப்பான' சிமிர்னா சபையின் ' முடிவு காலப்பகுதியாகும்.

**மூன்றாம் சபை : பெர்கமு**

'பெர்கமு' என்றால் 'பூலோக உயர்வு' என பொருள்படும்.

2 தெசலோ 2 : 6, 7ல் பவுல் அப்போஸ்தலன் முன்னறிவித்தபடி, அக்கிரமத்தின் இரகசியம் **எழுச்சி** பெறுவதை ரோம புறமதம் முதல் மூன்று நூற்றாண்டுகளில் தடை பண்ணியது. ரோம பேரரசனின் கீழ் ரோம புறமதம், ரோமக் கிறிஸ்தவத்திற்கு வழி வகுத்தவுடன், பவுல் அப்போஸ்தலனால் அடையாளங் கண்ட அந்த தடை நீங்கியது. மிகுந்த வைராக்கிய வெறியுடன் பேர்க்கிறிஸ்தவ சபை உலகப்பிரகாரமான உயர்வு பெறத் தொடங்கியது. தடயங்களை ஆராயும் பொழுது இவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். இப்படியாக, பெர்கமு சபை கி.பி. 313 ல் துவக்கம் பெற்றது.

கி.பி. 539ல் 'அருவருப்பு' ஸ்தாபிக்கப்பட்டதை வரலாறு தெரிவிக்கிறது. இதைப் பற்றி தானியேல் 12 : 7; மற்றும் 7 : 25ம் வசனங்கள் குறிப்பிடுகின்றன.

கி.பி. 754ல் போப்பு இராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. இது, போப்பு மார்க்கம் அரசியல் அதிகாரம் பெற்று எழுச்சி பெறுவதற்கு மற்றுமொரு படிக்கல்லாக இருந்தது. இந்த ராஜ்யங்கள் கி.பி. 1870 வரை நீடித்தது.

கி.பி. 800ல் 'சார்ல்மேகன்' பேரரசனை போப்பு முடி சூட்டி, அரசியல் அதிகாரத்திற்கு மேற்பட்டவராக தன்னை உயர்த்திக் கொண்டது மற்றுமொரு எழுச்சியாகும்.

'சார்ல்மேகன்' பேரரசனை போப்பு முடி சூட்டிய விசேஷித்த சடங்கு, சபையும் இராஜ்யமும் இணைந்து செயல்படுவதை வெளிப்படையாக்கியது. வெளி 2 : 21ல் இது குறிப்பாக உணர்த்தப்படுகிறது. பின்னாளில் வரக்கூடிய தியத்தீரா சபையைக் குறித்த சில விஷயங்களின் ஒரு பகுதியை இந்த வசனம் வெளிப்படுத்தினாலும், இது நடந்து முடிந்த தோரணையில் எழுதப்பட்டிருப்பதை காணலாம். அதாவது, தியத்தீரா சபையின் காலப்பகுதி சீக்கிரமே ஆரம்பத்திருக்க வேண்டியிருந்தாலும், ராஜ்யத்துடன் சம்பந்தம் கலக்கும் வேசியான யேசபேலுக்கு திருந்துவதற்கான ஒரு தவணை (1 காலம் = 360 வருடங்கள்) கொடுக்கப்படுகிறது. ஆனால் அவள் மனந்திரும்பவில்லை. 360 வருடங்களுக்குப் பிறகு, கி.பி. 1160ல் பீட்டர் வால்டோவும் , அவரைப் பின்பற்றியவர்களும் தியத்தீரா சபையைத் துவக்கினர். வெளி 2 : 21ல் சொல்லப்பட்டு இருக்கும் கடந்த காலச் சம்பவம் (ராஜ்யத்துடன் இணைந்த வேசி மார்க்கம்), அதைத் தொடர்ந்த 360 வருடங்கள் உறுதிப்படுத்துகிறது.

கி.பி. 962ல் புனித ரோம சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ராஜ்யம் கடைசி பேரரசன் கி.பி. 1806ல் பதவி இழந்த வரைக்கும் தொடர்ந்தது.

மறுபடியும் போப்பு மார்க்கம் எழுச்சி பெறத்தொடங்கியது. கி.பி. 1054ல் கிழக்கத்திய சபை (The Eastern Church) மேற்கத்திய சபையிலிருந்து பிரிந்து போனது, போப்பு மார்க்கத்தின் உயர்வுக்கு தடைக்கல்லாக இருந்தது போல மேலோட்டமாகத் தெரிந்தாலும் உண்மை நிலை அதுவல்ல ! சுதந்திர மனப்பாண்மையும், கல்வியறிவும் கொண்ட கிழக்கத்திய சபை பிரிந்து போனதால், ஐரோப்பாவில் போப்பு மார்க்கம் உண்மையில் அதிகார பலம் பெறத்தொடங்கியது. இருண்ட காலத்திற்கு பயமுறுத்தலாக இருந்த கிழக்கத்திய சபையை போப்பு மார்க்கம் எதிர்த்துப் போராட தேவைப்படவில்லை.

## நான்காம் சபை : தியத்தீரா

வெளி 2 : 21ம் வசனத்தில் கூறப்பட்ட சம்பவம் பெர்கமு சபையைச் சார்ந்தது என்பதை உறுதியாக்கும் தடயமாக காலக்கணக்கு உள்ளது. இது தியத்தீரா சபைக்கு உரியது அல்ல. கி.பி. 800ல் ரோம பேரரசன் சார்ல்மேகனுக்கு போப்பு முடி சூட்டி ராஜ்யத்துடன் சம்பந்தங் கலந்ததைத் தொடர்ந்து, ரோமச்சபை தன் வேசித்தனத்தை வெளிப்படையாக ஒத்துகொண்டது. இதைத் தொடந்து 360 வருடங்கள் போப்பு மார்க்கம் தன் வேசித்தனத்தை விட்டு மனந்திரும்ப வில்லை. தவணை காலம் முடிந்து (கி.பி. 800 + 360), கி.பி. 1160ல் கர்த்தர், பீட்டர் வால்டோ என்ற தூதனை அனுப்பினார். கி.பி. 1160ல் தான், ரோம மதப் பேரவை வால்டோவை பின்பற்றியவர்களை பதிதர்கள் (சமய பேதமுள்ளவர்கள்) என கண்டனம் பண்ணியது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்து மன்னர் ஹென்றி II வால்டனேஷியர்களை தடை பண்ணினார். வால்டோவின் வரலாற்றில் கி.பி. 1160 ம் ஆண்டு ஒரு முக்கியமானதாக இருந்தது.

வெளி 2 : 23ல் ஐரோப்பாவின் மூன்றில் இரண்டு பங்கு ஜனத் தொகையினரை சாகடித்த கொள்ளை நோய் (Black Death) பற்றிக் கூறப்பட்டிருப்பதை உணரலாம். மனித வரலற்றில் நடந்த மிகப் பெரும் நிகழ்வுகளில் இது ஒன்றாகும். கி.பி. 1334 முதல் 1354 வரை 20 வருட காலம் இந்த கொள்ளை நோய் ஐரோப்பிய சமுதாயத்தை பெருமளவில் பாதித்தது. மேற்குறிப்பிட்ட வேத வசனத்தை வரலாற்றுத் தடயங்களின் பின்னணியில் பார்க்கும் பொழுது, தியத்தீரா சபையின் காலப்பகுதியின் துவக்கம் கி.பி. 1160ல் ஆரம்பித்து ஜான் விக்ளிஃப் நாட்கள் (கி.பி. 1371) வரை தொடர்ந்தது.

## ஐந்தாம் சபை : சர்தை

வால்டோவின் வரலாற்றில் கி.பி. 1160ம் ஆண்டு எப்படி முக்கியமானதோ, அதே மாதிரி கி.பி. 1371ம் ஆண்டு ஜான் விக்ளிஃப்பின் வாழ்க்கையில் முக்கியமானதாகும். கி.பி. 1371 ம் வருடத்தின் இறுதியில் விக்ளிஃப்பை பணிய வைக்க போப்புவின் சாசனம் (PAPAL BULL) வெளிப்பட்டது. ஆனால் விக்ளிஃப் அதை அசட்டை செய்து, போப்புவை எதிர்த்து பிரசுரம் வெளியிட்டார். இந்த சமயத்தில் (கி.பி. 1371ல்) போப்புவுக்கு கப்பம் செலுத்தும் பண விவகாரத்தில் தகராறு பண்ணிய இங்கிலாந்து மன்னனின் ஆதரவு ஜான் விக்ளிஃப்பிற்கு கிடைத்தது. வேத சத்தியங்களைப் பரப்பும் பணியில் கி.பி. 1371ம் வருடம் விக்ளிஃப்பின் வாழ்வில் முக்கியத்துவமும், திருப்பு முனையானதுமான காலப்பகுதியாக அமைந்தது.

வெளி 9 : 5 & 10ல் குறிப்பிட்டுள்ள 'ஐந்து மாதங்கள்' (150 வருடங்கள்) கி.பி. 1371ம் வருடத்துடன் கூட்டினால், கி.பி. 1521 வரும். இந்த வருடத்தில் தான் மார்டின் லூத்தர் போப்புவினால் மத பகிஷ்காரம் செய்யப்பட்டார்.

இப்படியாக, பீட்டர் வால்டோ, ஜான் விக்ளிஃப், மார்டின் லூத்தர் ஆகிய மூன்று பேர்களின் வாழ்வில் நடந்த மிக முக்கிய சம்பவங்கள், அவர்கள் கால சபைகளின் துவக்கமாக அமைந்துள்ளதை வியப்புடன் நாம் பார்க்கிறோம்.

ஐந்தாம் முத்திரையைப்பற்றிய வெளி 6 : 11ம் வசனம் , சர்தை சபையின் கால அளவைக் குறிப்பிடும் தடயமாக இருக்கிறது. சர்தை சபையின் காலப்பகுதியை ஆராய, சிறிது கடந்த காலத்திற்கு பின்னோக்கிச் செல்வோம் :

வெளி 6 : 11ல் தேவ வசனத்தின் நிமித்தம் கொல்லப்பட்ட பரிசுத்தவான்கள் தாங்கள் சிந்திய இரத்தத்தைக் குறித்து பூமியின் மேல் குடியிருப்பவர்களிடத்தில் எது வரைக்கும் பழி வாங்காமல் இருப்பீர் என சத்தமிட்டுக் கூப்பிட்டனர் என்று வாசிக்கிறோம். " பூமியின் மேல் குடியிருப்பவர்கள் " என்பது, போப்பு மார்க்கத்தையும் அதனுடைய இராஜ்ஜீய அதிகார வர்க்கத்தையும் குறிக்கும் அடையாள பாஷை ஆகும். பரிசுத்தவான்களின் கூக்குரல் எப்பொழுது நடைபெற்றதாக வசனத்தில் குறிப்பிடப்படுகிறது ? ஐந்தாம் முத்திரை காலப்பகுதியில் என்று தெரிகிறது. ஆகவே இதைக்கொண்டு சர்தை சபையின் காலப்பகுதியைக் கணக்கிடலாம் :

(a) பரிசுத்தவான்கள் "கொஞ்சக் காலம் " இன்னும் இளைப்பாற (நித்திரையில்) வேண்டும். "கொஞ்சக் காலம்" என்பது எவ்வளவு ? 'காலம்" என்பது 360 வருடங்களைக் குறிக்கிறது. "கொஞ்சக் காலம்" என்பதும் இதையே குறிப்பதாகக் கொள்ளளாம்.

(b) பாபிலோன் புறம்பே தள்ளப்படுவது கி.பி. 1878ல் என்பது நமக்குத் தெரியும். அப்படியானால், பாபிலோன் புறம்பே தள்ளப்பட்ட வருடமும், நித்திரையிலிருந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் துவங்கிய காலமும் கி.பி. 1878 என எடுத்துக் கொண்டால், 360 வருடங்கள் (காலம்) பின்னோக்கி அளந்தால், கி.பி. 1518ம் வருடத்தை அடையும். சபையின் வரலாற்றில் கி.பி. 1518ம் வருடம் மிக முக்கியமானது ஆகும். இது மார்டின் லூத்தர் அவர்கள் "விட்டன்பர்க்" ஆலயக் கதவில் ரோமச் சபைக்கு எதிராக ஆட்சேபனைகளைப் பதித்த வருடம் ஆகும். கி.பி. 1518ம் வருடம் சர்தை சபையின் முடிவும், பிலதெல்பியா சபையின் துவக்கமும் ஆகும். பரிசுத்தவான்களின் கேள்வி, ஐந்தாம் முத்திரை காலப் பகுதியில் வினவப்பட்டதால், பிலதெல்பியா சபை இன்னும் துவக்கம் பெறவில்லை என்பது உறுதியாகிறது. அதாவது, கி.பி. 1521ல் மார்டின் லூத்தர் போப்புவினால் மத பகிஷ்காரம் செய்யப்பட்டதிலிருந்து பிலதெல்பியா சபை துவக்கம் பெறுகிறது. அதாவது, ஜான் விக்ளிஃப்பிலிருந்து 150 வருடங்களும் (கி.பி. 1371 + 150 = 1521), பீட்டர் வால்டோவிலிருந்து 360 வருடங்களும் (கி.பி. 1161 + 360 = 1521) ஆனப் பிறகு, கி.பி. 1521ல் 6ம் சபை (பிலதெல்பியா சபை) துவங்கியது.

பரிசுத்தவான்களின் கேள்விக்குப் பதிலுரைக்கும் விதமாக, 360 வருடங்களைக் குறிக்கும் காலப் பகுதியை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் தொனியில் "கொஞ்சக் காலம்" என்று நித்திரையிலிருப்பவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

## ஆறாம் சபை : பிலதெல்பியா

சர்தை சபையில் மேலே விவரித்தபடி, மார்டின் லூத்தர் புறக்கணிக்கப்பட்ட கி.பி. 1521ம் ஆண்டிலிருந்து, ஆறாம் சபை துவங்குகிறது. வெளி 6 : 12; 11 : 13ல் குறிப்பிடப்படும் அடையாள பாஷையான " பூமியதிர்ச்சி " கி.பி. 1789 - 1799ல் நடந்த பிரெஞ்சு புரட்சியைக் குறிக்கிறது.

வெளி 10 : 6; மற்றும் 11 : 2, 3ல் குறிக்கப்பட்ட காலம் கி.பி. 1799ஐ அடையாளப்படுத்துகிறது. இந்த வருடம் தானியேலின் 1260 வருட தீர்க்கதரிசனத்திற்கு ஒத்துள்ளது. அதாவது, கி.பி. 539 - 1799 = 1260 வருடங்கள்.

வெளி 10 : 9, 10ம் வசனங்கள் மூலம் மில்லர் இயக்கம் (கி.பி. 1829 - 1844). பிலதெல்பியா சபையின் காலத்தின் ஒரு பகுதியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

பிலதெல்பியா சபை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடந்த கி.பி. 1874ல் முடிவடைகிறது. இதைப் பற்றிய விவரங்கள் லவோதிக்கேயா சபையைப் பற்றி ஆராயும் போது பார்க்கலாம்.

## ஏழாம் சபை : லவோதிக்கேயா

கர்த்தராகிய கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்திலிருந்து (parousia) லவோதிக்கேயா சபை ஆரம்பமானது. யூபிலி காலக் கணக்கு, தானியேல் 12 : 12ல் (1335 நாட்கள்) உறுதியாக்கப்பட்ட காலக்கணக்கு, மற்றும் யூத இணை யுகங்கள் வாயிலாக தெரியவரும் காலப் பகுதி ஆகிய அனைத்தும் கி.பி. 1874 ஐ குறிக்கின்றன.

கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம், லவோதிக்கேயா சபையின் துவக்கம் - இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பினை வெளி 3 : 20; 11 : 15; வசனங்களில் காணலாம். கிறிஸ்துவின் வருகை, "தேவ எக்காளத்துடன்" பிரகடனம் பண்ணப்படுவதை 1 தெசலோ 4 : 15, 16ம் வசனங்களில் படிக்கிறோம். இதுவே ஏழு எக்காளங்களில் **கடைசி எக்காளம்** என 1 கொரி 15ம் அதிகாரத்தில் படிக்கிறோம். லவோதிக்கேயா சபை கி.பி. 1878ல் ஆரம்பமானது என்று சொல்வது சரியில்லை. லவோதிக்கேயா சபையின் முடிவுப் பற்றி வரையறுக்க முடியவில்லை. சங் 46 : 10ல் குறிப்பிடப்படுவது போல், "நீங்கள் அமர்ந்திருந்து , நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்ற பிரகடனம் வெளிப்படும் போது லவோதிக்கேயா சபை காலப்பகுதி முடிவு பெறும்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

V

# ஏழு சபைகளும் ஏழு தூதர்களும்

| எண் | சபை | தூதன் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 1 | எபேசு | பவுல் | கி.பி. 33 முதல் 70 |
| 2 | சிமிர்னா | யோவான் | கி.பி. 70 முதல் 313 |
| 3 | பெர்கமு | ஏரியஸ் | கி.பி. 313 முதல் 1160 |
| 4 | தியத்தீரா | வால்டோ | கி.பி. 1160 முதல் 1371 |
| 5 | சர்தை | விக்ளீப் | கி.பி. 1371 முதல் 1521 |
| 6 | பிலதெல்பியா | லூத்தர் | கி.பி. 1521 முதல் 1874 |
| 7 | லவோதிக்கேயா | ரசல் | கி.பி. 1874 முதல் ? |

VI

# ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள்

| எண் | சபை | வசனம் | முத்திரை | வசனம் | எக்காளம் |
|---|---|---|---|---|---|
| 1 | எபேசு | வெளி 2 : 1 | வெள்ளை குதிரை | வெளி 6 : 1 | வெளி 8 : 7 |
| 2 | சிமிர்னா | வெளி 2 : 8 | சிவப்பு குதிரை | வெளி 6 : 3 | வெளி 8 : 8 |
| 3 | பெர்கமு | வெளி 2:12 | கறுப்பு குதிரை | வெளி 6 : 5 | வெளி 8:10 |
| 4 | தியத்தீரா | வெளி 2:18 | மங்கலான குதிரை | வெளி 6 : 7 | வெளி 8:12 |
| 5 | சர்தை | வெளி 3 : 1 | பலிபீடத்தின் கீழ் ஆத்துமாக்கள் | வெளி 6 : 9 | வெளி 9 : 1 |
| 6 | பிலதெல் பியா | வெளி 3 : 7 | பூமியதிர்ச்சி | வெளி 6 : 12 | வெளி 9:13 |
| 7 | லவோதிக் கேயா | வெளி 3:14 | அமைதி | வெளி 8 : 1 | வெளி 11:15 |

# ஏழு தூதர்கள், ஏழு சபைகள், ஏழு முத்திரைகள், ஏழு உவமைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள்

| எண் | தூதர் | சபை | முத்திரை | உவமை | எக்காளம் | வாதை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பவுல் கி.பி. 30 - 70<br><br>ஆதிச்சபை | எபேசு<br><br>அப்போஸ்தலர் வாழ்ந்த காலம் | ஜெயங்கொள்ளுதல்<br><br>வெள்ளை குதிரை | விதைப் பவன் | பூமி | பூமி |
| 2 | யோவான் கி.பி. 70 - 313<br><br>ரோம புறமத அடக்குமுறை | சிமிர்னா<br><br>கள்ள யூதர்கள் / துன்புறுத்தல் | பட்டயத்தினால் பூமியிலிருந்து சமாதானம் எடுத்துப் போடுதல் சிவப்பு குதிரை | களைகள் | சமுத்திரம் | சமுத்திரம் |
| 3 | ஏரியஸ் கி.பி. 313 - 1160<br><br>போப்பு மார்க்க கொள்கைகளால் கிளர்ச்சி | பெர்கமு<br><br>விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசித்தல் / மறைவான மன்னாவை புசிக்க கொடுத்தல் | பஞ்சம்<br><br>கறுப்பு குதிரை | விருட்சம் வளருகிறது | ஆறுகளும் ஊற்றுகளும் | ஆறுகளும் ஊற்றுகளும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | வால்டோ<br>கி.பி. 1160 - 1371<br><br>யேசபேல் கட்டில் கிடையாக்கப்படுதல் | தியத்தீரா<br><br>யேசபேல் மயக்குதல் /<br><br>அவள் பிள்ளைகள் கொல்லப் படுதல் | மரணம்<br><br>கொள்ளை நோய்<br><br>மங்கிய நிறமுள்ள குதிரை | புளித்த மாவு | சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் | சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் |
| 5 | விக்ளிப்<br>கி.பி. 1371 - 1521<br><br>மறுமலர்ச்சி / சீர்திருத்தம் | சர்தை<br><br>மனந் திரும்பு / தகுதியுள்ளவன் வெண் வஸ்திரம் தரித்தல் | பலிபீடத்தின் கீழ் ஆத்துமாக்கள்<br><br>வெண் வஸ்திரம் | பொக்கிஷம் | சூரியன் கறுப்பாகுதல்<br><br>வெட்டுக்கிளி<br><br>ஐயோ - 1 | இருள்<br><br>மிருகத்தின் ஆசனம் |
| 6 | லூத்தர்<br>கி.பி. 1521-1874<br><br>அங்கீகரிப்பதற்கான வாக்குத்தத்தம் | பிலதெல்பியா<br><br>கதவு திறத்தல் | பிரெஞ்சு புரட்சி<br><br>சாத்தான் கூட்டம் வலுவிழந்தது | முத்து | ஐபிராத்து நதி<br><br>நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப் படுதல்<br>ஐயோ - 2 | ஐபிராத்து நதி<br><br>வற்றிப் போகுதல் / தவளைகளைப் போன்ற 3 ஆவிகள் |
| 7 | ரசல்<br>கி.பி. 1874<br><br>கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் | லவோதிக்கேயா<br><br>கண்களுக்கு கலிக்கம் / கர்த்தருடன் போஜனம் / சிங்காசனம் | நெற்றியில் முத்திரையிடுதல் முடிவடைதல் | மீன் வலை (அறுவடை) | மணவாட்டி இராஜ்யத்தைப் பெறுதல்/ ஏழாம் வாதை<br>ஐயோ - 3 | அர்மகெதோன்<br><br>கோபத்தின் உக்கிரம் |

# VIII

# ஏழு ஆவிகள்

"ஏழு ஆவிகள்" என்ற பதம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் நான்கு தடவைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. இவைகள் எதை அடையாளப் படுத்துகின்றன என்பதை பின்வருமாறு பார்க்கலாம் :

**<u>வெளி 1 : 4.</u>** "சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகள்" என்பது தேவனுக்கு முன்பாக ஊழியஞ் செய்யும் நிலையிலிருப்பதை உணர்த்துகிறது.

**<u>வெளி 3 : 1.</u>** "தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர்" என்று இயேசுவைப் பற்றி சொல்லப்படுகிறது. வெளி 1 : 4ல் குறிக்கப்படும் "ஏழு ஆவிகள்" தேவனைச் சார்ந்தது என்பது இந்த வசனத்தில் மேலும் உறுதியாகிறது.

**<u>வெளி 4 : 5.</u>** "தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன".
இந்த ஏழு ஆவிகள், புதிய அடையாளமாக ஏழு அக்கினித் தீபங்களுக்கு ஒப்பிட்டுச் சொல்லப்படுகின்றன. (இந்த தீபங்களும் சிங்காசனத்திற்கு முன்பாகவே இருக்கின்றன.). தீபத்திற்கு மூல ஆதாரம் வெளிச்சம் ஆகும். " உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது ". (சங் 119 : 105). தீபம் எதைக் குறிக்கிறது என்பதை இந்த வசனம் உணர்த்துகிறது. "ஏழு" என்ற சொல் தேவனுடைய சத்தியத்தின் “ முழுமையைக் ” காண்பிக்கிறது. இந்த சத்தியங்கள் அக்கினித் தீபங்களாய், தவறுகளை எரித்து விடுகின்றன.

**<u>வெளி 5 : 6.</u>** "அது (ஆட்டுக்குட்டி) ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்".
இந்த வசனத்தில் ஏழு ஆவிகள், மறுபடியும் மற்றுமொரு அடையாளத்திற்கு, அதாவது, ஆட்டுக்குட்டியின் ஏழு கண்களுக்கு (அல்லது, ஏழு கண்கள், ஏழு கொம்புகளுக்கு) ஒப்பிடப்படுகின்றன. இந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகின்றன என்பது 2 நாளா 16 : 9 & சகரியா 4 : 10ம் வசனங்களை (பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்கள்) நமக்கு ஞாபகமூட்டுகின்றன. 2 நாளா 16 : 9ல் இந்த கண்கள் பூமியைச் சுற்றி உலாவிக் கொண்டிருப்பதற்கான காரணம் சொல்லப்படுகிறது. தேவனுடைய பரிசுத்தவான்களுக்காக தம்முடைய வல்லமையைக் காண்பிக்கிறதற்காக இந்த கண்கள் இருக்கின்றன என்று பார்க்கிறோம். "ஏழு கொம்புகள்" என்பது பூரணமான தெய்வீக வல்லமையையும், "ஏழு கண்கள்" என்பது பூரணமான தெய்வீக ஞானமும் ஒன்றாக கலந்து திருச்சபைக்காக செயல்படுகின்றன.

**<u>ஏழு ஆவிகள் :</u>** "ஏழு ஆவிகள்" என்பதின் கருப்பொருள் "பரிசுத்த ஆவி" ஆகும். இதையே, வெளி 1 : 4, 5ன் வாழ்த்துதலில், தேவன், பரிசுத்த ஆவி, இயேசு என்று குறிக்கப்படுகிறது.

"ஏழு" என்ற எண் தெய்வீக பூரணத்துவத்தை அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய ஆற்றலாகிய பரிசுத்த ஆவி, பூமிக்குரிய காரியங்கள் அனைத்தையும், அவருடைய பரிசுத்தவான்களாகிய சபையின் காரியங்கள் அனைத்தையும் முழு வல்லமையுடன் இயக்கக் கூடியதாய் இருக்கிறது. இதை தான், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் என்று யோவான் 14 : 26; & 16 : 7ல் இயேசு கூறுகிறார். ஏழு ஆவிகளால் அடையாளப்படுத்தப்படும் இந்த பரிசுத்த ஆவியானது சுவிசேஷ யுகத்தில் செயல்படுகிறது.

ஏழு ஆவிகளால் உருவகப்படுத்தப்படும் பரிசுத்த ஆவி பல்வேறு செயல்பாடுகளை செய்ய வல்லது. சுவிசேஷ யுகத்தில் சபையின் ஒவ்வொரு காலப்பகுதியிலும், சபையின் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு சபையிலும் இந்த ஆவிகள் இயங்குகின்றன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# நான்கு ஜீவன்கள் (நான்கு தேவ சுபாவங்கள்)

"நான்கு ஜீவன்கள்" என்பது தேவனுடைய நான்கு சுபாவங்களைக் குறிக்கிறது என்பது வேத மாணவர்கள் அறிந்த ஒன்றாகும். இந்த கருத்து எந்த ஆதாரத்தில் உருப்பெற்றது ? கி.பி. 1883ல் "மேன்" (W.I. MANN) என்ற சகோதரர் முதன் முதலாக இந்த கருத்திற்கான விளக்கத்தை வெளிப்படுத்தினார். இதைக் குறித்து கீழ் கண்டவாறு பார்க்கலாம்:

வெளிப்படுத்தல் ஆகமத்தின் "நான்கு ஜீவன்கள்", வேதாகமத்தில் வேறொரு இடத்தில் "கேருபீன்கள்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஆதி 3 : 24ல் ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியை காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே தேவன் கேருபீன்களை வைத்ததாகப் பார்க்கிறோம். இந்த "கேருபீன்" ஒரு கற்பனை உருவம் அல்ல. (ஸ்ட்ராங்கின் மொழி அகராதியில் "கேருபீன்" என்ற சொல்லுக்கு மூல ஆதாரம் எதுவும் இல்லை என்றும், அது கற்பனையான உருவம் என்று சொல்லப்பட்டுள்ளது. கேருபீன் கற்பனை உருவம் என்று சொல்வது சரியானது அல்ல). ஏனெனில், பிதாவாகிய தேவன் "லூசிபர்" பற்றி விவரிக்கும் போது, "கேருபீன்" என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். (எசேக் 28 : 14). இதை கற்பனையாக தேவன் கருதவில்லை. இருப்பினும், இதை தேவன் ‘‘அடையாளமாகவும்’’ பயன்படுத்துகிறார். லூசிபரை ஒரு கேரூப் என்று குறிப்பது, மனுஷர்கள் பார்வையில் வெளிப்படும்விதமாக, தேவனால் அனுமதிக்கப்பட்டு, குறிக்கப்படும் ஒரே பரலோக சிருஷ்டி இந்த கேருபீன்கள் மட்டுமே என்ற அடிப்படையில் இருக்கலாம் லூசிபரின் தன்மையைப் பற்றி நமது கவனத்தை. ஈர்க்கும்படியாக "கேரூப்" என்று அடையாளப்படுத்தியிருக்கலாம். லூசிபர் ஒரு "மூடிக்கொண்டிருக்கும் கேரூப்" என்று எசேக் 28 : 13ல் வருணிக்கப்படுகிறான். "பத்மராகம், புஷ்பராகம் போன்ற இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது" என்று படிக்கிறோம். இதைப் போன்ற "மூடிக் கொண்டிருக்கும் கேரூப்" ஆசரிப்பு கூடாரத்தில் கிருபாசனத்தை மூடிக்கொண்டிருப்பதைப் பார்க்கி றோம்.

"கேருபீன்" பற்றி யாத் 25ம் அதிகாரத்திலும், அதைத் தொடர்ந்து மற்ற வசனங்களிலும் படிக்கிறோம். இந்த கேருபீன்கள் உடன்படிக்கை பெட்டியின் கிருபாசனத்தின் ஒரு பகுதியாக காட்சியளிப்பதைப் பார்க்கிறோம். இவைகளுக்குப் பதிலாக, சாலமோன் ஆலயத்தில் பெரிய அளவிலான கேருபீன்கள் இருப்பதைப் பார்க்கிறோம். (1 ராஜா 6 : 23). எசேக்கியேல் தீர்க்கதரிசியும் கேருபீனைப் பற்றி 1ம் அதிகாரத்திலும், 10ம் அதிகாரத்திலும் விவரிக்கிறார். 1ம் அதிகாரத்தில் இவற்றை "கேருபீன்கள்" என்று அழைக்கவில்லை. ஆனால், 10ம் அதிகாரத்தில் "கேருபீன்கள்" என்று அழைப்பதோடு, 1ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டவை இந்த கேருபீன்கள் தாம் என்று ஊர்ஜிதப்படுத்துகிறார். எசேக் 10 : 20 - 22; இந்த கேருபீன்களுக்கும், வெளிப்படுத்தல் 4ம் அதிகாரத்தில் உள்ள நான்கு ஜீவன்களுக்கும் உள்ள தொடர்பை நாம் பார்க்கிறோம். (எசேக் 1ம் அதிகாரத்தில் அதே போன்று குறிக்கப்படுகிறது.).

கேருபீன்களைப் பற்றி வேதத்தில் குறிப்பிடும் பொழுதெல்லாம், தேவனுடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தும் வகையிலும், உணரும் வகையிலும் இருக்கிறது. ஆதியாகமம் 4 : 3, 16ம் வசனங்களை ஒத்துப்பார்க்கும் பொழுது, ஏதேன் தோட்டத்து காவலில் (விழுகைக்குப் பிறகு கூட) தேவனுடைய பிரசன்னம் இருப்பதை கேருபீன்களால் அடையாளப்படுத்தப்படுகிறது.

ஆசரிப்பு கூடாரத்திலும், ஆலயத்திலும் கேருபீன்களுக்கு மத்தியில் தேவனுடைய பிரசன்னம் இருந்தது நாம் அறிந்ததே. "கேருபீன்களுக்கு நடுவில் இருப்பவர்" என்று யாத் 25 : 22; சங் 18 : 10ல் அறிகிறோம். எசேக்கியேல் 10 : 4ல் "கர்த்தருடைய மகிமை கேருபீன்களின் மேலிருந்து எழும்புகிறது" என்று படிக்கிறோம்.

எசேக்கியேல் புத்தகத்தில் விவரிக்கப்படும் நான்கு ஜீவன்களைப் பற்றிய பொருள் விளக்கத்தை நாம் உணர்ந்து கொண்டு, வெளிப்படுத்தல் 4ம் அதிகாரத்தில் உள்ள நான்கு ஜீவன்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, "நான்கு ஜீவன்கள்" எதை அடையாளப்படுத்துகின்றன என்பதை நாம் தெளிவாக அறிய முடிகிறது. 1. கழுகு என்பது "ஞானம்" 2. மனுஷ முகம் என்பது "அன்பு" (தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 1யோவான் 4 : 9). 3. கன்று என்பது நீதி; (ஆசரிப்பு கூடாரத்தில் பலியிடப்பட்டு, நீதி நிலை நாட்டப்படுவது). 4. சிங்கம் என்பது வல்லமை; இயேசு, சாத்தான் என்ற இரண்டு வல்லமைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை).

ஆசரிப்பு கூடார கேருபீனுக்கும், தேவாலய கேருபீனுக்கும் உள்ள மாற்றம், சில உண்மைகளை வெளிப்படுத்தும் விதமாக இருக்கிறது. வேதாகமத்தின்படி, "நீதி" கிருபாசனத்தின் மேல் திருப்திப்படுத்தப்படுகிறது. தேவன் தம் ஞானத்தின் மூலம், கிருபாசனத்தின் மேல் "ஒளி"யாக அடையாளப்படுத்தப்படுகிறார். நீதி செலுத்தப்பட்ட உடனேயே, கிருபாசனத்தின் மேல் உள்ள அன்பு, மற்றும் வல்லமை என்ற தன்மைகளால் அடையாளப்படுத்தப்படும் இரண்டு கேருபீன்கள் "மனிதனுக்கு உதவும்படி காத்திருக்கின்றன". ஆகவே தான், ஆலயத்தில் (ஆயிர வருட அரசாட்சிக்கு முன்னடையாளமாக இருக்கும்) கேருபீன்கள் தங்கள் இறக்கைகளை "இப்பொழுது விரித்து, மனுக்குலத்துக்கு உதவி புரிய பறக்கும் நிலையில் உள்ளன."

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# இருபத்து நான்கு மூப்பர்கள்

வெளிப்படுத்தல் ஆகமத்திலுள்ள 24 மூப்பர்கள் திருச்சபையைக் குறிப்பதாக சொல்லுவதற்கு வாய்ப்பு உண்டு. ஏனெனில் 24 மூப்பர்கள் தங்கள் சிரசுகளில் பொன் கிரீடங்கள் அணிந்தவர்களாய் சிங்காசனத்தில் உட்கார்ந்திருப்பதாக தரிசனக் காட்சியில் பார்க்கிறோம். இந்த கருத்துக்கு ஒத்தவிதமாக, மூப்பர்கள் வெளி 5 : 9, 10ல் "எங்களை" தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே ஆசாரியருமாக்கினீர்; "நாங்கள்" பூமியிலே அரசாளுவோம் என்ற புதிய பாட்டைப் பாடினார்கள்" என்று காணப்படுவதால், இவர்கள் திருச்சபையினர் என்று நினைக்க ஏதுவுண்டு. ஆனால், திருத்திய மொழி பெயர்ப்பு மற்றும் பல மொழி பெயர்ப்புகளில், இந்த வசனங்களில் "எங்களை" என்ற பதம் "அவர்களை" என்றும், "நாங்கள்" என்பது "அவர்கள்" என்று உள்ளது. அலெக்ஸாண்டரியா பிரதியில் "நாங்கள்" என்ற பதம் காணப்படுகிறதில்லை; சினாய்டிக் பிரதியில் "எங்களை" "நாங்கள்" என்ற பதங்களுக்குப் பதிலாக, "அவர்களை", "அவர்கள்" என்று காணப்படுகின்றன.

யோவான் கண்ட தரிசனத்தில், பரலோகத்தில் 24 மூப்பர்கள், கிரீடங்கள், சிங்காசனங்கள் என்று குறிக்கப்படுவது அனைத்தும் அடையாளங்கள் ஆகும்.

**24 மூப்பர்கள் திருச்சபையை அடையாளப்படுத்துகிறார்களா ?**

தேவனுடைய கரத்திலிருந்து புஸ்தகச் சுருளை இயேசு வாங்கிய தருணத்தில் 24 மூப்பர்கள் பரலோகத்தில் இருந்தார்கள்; இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் தான் புஸ்தகச் சுருளை பிதாவிடமிருந்து வாங்கிய சம்பவம் நடந்தது; அதாவது, தம் பலியின் மேன்மையை இயேசு பிதாவிடம் ஒப்படைத்த பிறகு இது நடந்தது. ஆகவே, கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்ன காலத்தைச் சேர்ந்த எந்த நிகழ்வுகளிலும் 24 மூப்பர்களை அடையாளப்படுத்த முடியாது.

மேலும், இயேசுவின் இரண்டாம் வருகை நடப்பதற்கு முன்பாக, திருச்சபை உயிர்த்தெழவில்லை என்பதை 1தெச 4 : 16ல் படிக்கிறோம். ஆகவே, இதற்கு முன் காலப்பகுதியில் திருச்சபை பரலோகத்தில் இருக்கவில்லை.

வெளி 5 : 5ல் மூப்பர்களில் ஒருவன் யோவானைப் பார்த்து, " நீ அழ வேண்டாம்; யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்;" என்று கூறுகிறார். இச்சம்பவம் நடந்த சமயத்தில் திருச்சபை பூமியிலோ அல்லது பரலோகத்திலோ இல்லை; இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தகோஸ்தே நாளில் கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட பிறகு, புது சிருஷ்டிகளாக திருச்சபை உருவெடுக்கிறது. ஆகவே, புஸ்தகத்தை பிதாவிடமிருந்து கிறிஸ்து வாங்கிய சமயத்தில் பரலோகத்தில் இருந்த 24 மூப்பர்களை திருச்சபையாக அடையாளப்படுத்த முடியாது

மேலும், வெளி 14 : 3ல் சபையாகிய 1,44,000 பேர் சிங்காசனத்திற்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதிய பாட்டை பாடினார்கள் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தின் மூலம், மூப்பர்கள் திருச்சபையைக் குறிக்கவில்லை என்பது தெளிவாகிறது .

**24 மூப்பர்கள் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களை (தீர்க்கதரிசிகளை) அடையாளப் படுத்துகின்றனரா ?**

"மூப்பர்கள்" என்பது வயதானவர்களைக் குறிக்கும் என்ற கருத்தில், பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களுக்கு அடையாளமாய் இருக்கிறார்கள் என்று சிலர் நினைக்கலாம். கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக, முற்பிதாக்களுடைய உயிர்த்தெழுதல் நடக்க முடியாது. கிறிஸ்து மறுபடியும் இரண்டாம் வருகையின் காலத்தில் தான், திருச்சபை, முற்பிதாக்கள், உலகத்தார் அனைவருக்குமான இரட்சிப்பு வழங்கப்பட வேண்டும். (எபி 9 : 24, 28; வெளி 11 : 18). ஆகவே, மூப்பர்கள் முற்பிதாக்களாகவோ அல்லது தீர்க்கதரிசிகளாகவோ அடையாளப்படுத்தப்படவில்லை.

**பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் :**

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் "இரண்டு சாட்சிகள்" என்று வெளி 11ம் அதிகாரத்தில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது; இந்த இரண்டு சாட்சிகளும் உயிருள்ள ஜீவன்கள் போல கால்களில் நிற்பதாகவும், தங்கள் வாய்களால் தீர்க்கதரிசனம் உரைப்பதாகவும், வானத்திற்கு ஏறிப் போவதாகவும் காட்டப்பட்டிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டிலுள்ள தேவனுடைய வார்த்தைகளாகிய தீர்க்கதரிசனங்கள், வெளிப்படுத்தல் ஆகமத்தில் "மூப்பர்கள்" என அடையாள பாஷையில் குறிக்கப்பட்டுள்ளன. மூப்பர்கள் வயதானவர்களைப் போல, இந்த தீர்க்கதரிசனங்கள் பழமையானதும், ஆட்டுக்குட்டியானவர் ஜெயங் கொள்ளுவதற்கு முன்பாகவும் எழுதப்பட்டுவிட்டதாகவும் உள்ளன. (வெளி 5 : 4, 5). இரண்டு சாட்சிகள் எவ்விதம் தேவனுடைய வார்த்தையை அடையாளப் படுத்துகிறதோ, அதைப் போலவே, 24 மூப்பர்களும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை அடையாளப்படுத்துகின்றனர்.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் மூப்பர்கள் உரைத்த வார்த்தைகள் மூலம், அவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை அடையாளப் படுத்துகிறார்கள் என்பதை அறியலாம்.

1) மூப்பர்கள் முதலாவதாக பேசிய வார்த்தைகள் வெளி 4 : 11ல் படிக்கிறோம். "கர்த்தாவே! தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்கு பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்; உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" என்றார்கள். இது பழைய ஏற்பாட்டின் முதல் பாடமாக இருக்கிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார்." ஆதி 1 : 1; 2 : 4; கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். சங் 100 : 1 - 3; என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள் ? எனக்கு யாரை நிகராக்குவீர்கள் ? என்று பரிசுத்தர் சொல்கிறார். உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் ; அவைகளை சிருஷ்டித்தவர் யார் ? "ஏசா 40 : 25, 26;" பூமியின் கடையாந்திரங்களைச் சிருஷ்டித்த அநாதி தேவன் சோர்ந்து போவதில்லை. ஏசாயா 40 : 28.

2. மூப்பர்களில் ஒருவன் யோவானிடம், "யூதாகோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்" என்று சொன்னான். வெளி 5 : 5. இந்த மூப்பர் யாக்கோபின் தீர்க்கதரிசனத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். ஆதி 49 : 9, 10. இந்த தீர்க்கதரிசனம் மேசியா ஜெயங்கொள்கிறதை முன்னறிவிக்கிறது. மூப்பர் ஏசாயா தீர்க்கதரிசனத்தையும் மேற்கோள் காட்டுகிறார். "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும்." ஏசாயா 11 : 1; புஸ்தகச் சுருள் திறப்பதைப் பற்றி தானியேல் 12 : 4, 9ம் வசனத்தை மூப்பர் நினைவூட்டுகிறார்.

3. மூப்பர்களில் ஒருவன் யோவானை நோக்கி, "வெள்ளை அங்கிகளைத்தரித்திருக்கிற இவர்கள் யார் ? எங்கிருந்து வந்தார்கள் ?" என கேட்டான். அதற்கு நான்: "ஆண்டவனே, அது உமக்கே தெரியும்" என்றேன்; அப்பொழுது அவன் "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்; ......அவர்களை ஜீவத்தண்ணீருள்ள நீரூற்றண்டைக்கு வழி நடத்துவார்." என்றான். வெளி 7 : 13 - 17. இங்கு மூப்பரால் சொல்லப்படும் வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கங்களாகிய யோவான் வகுப்பாரைப் பார்த்து, உபத்திரவத்திலிருந்து வரும் வேறொரு வகுப்பாரைப் பற்றி சொல்லுகிறார்; இந்த வகுப்பாரைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி 66 : 8ல் "சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது." என்று சொல்கிறார். இந்த உபத்திரவம் குறித்து தானியேல் தீர்க்கதரிசி 12 : 1ல் சொல்கிறார்.

வஸ்திரங்களை இரத்தத்திலே தோய்க்கும் விஷயத்தில் "திராட்ச ரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்ச பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்" என்ற யாக்கோபின் தீர்க்கதரிசனத்தை மூப்பர் குறிப்பிடுகிறார்.

24 மூப்பர்கள் வெளி 11 : 17, 18ம் வசனங்களில் பேசுவதை வாசிக்கிறோம். இங்கு இந்த மூப்பர்கள், தேவனுடைய ஊழியக்காரர் களாகவோ, பழைய ஏற்பாட்டு கால தீர்க்கதரிசிகளாகவோ, சுவிசேஷ யுக பரிசுத்தவான்களாகவோ அல்லது தேவனுடைய நாமத்தின் மேல் பயபக்தியாயிருப்பவர்களாகவோ அடையாளப்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

**நான்கு ஜீவன்கள்** : வெளிப்படுத்தல் ஆகமத்தில் ஒவ்வொரு இடங்களிலும்___நான்கு ஜீவன்களுடனும் மூப்பர்கள் இருப்பதை தவறாமல் பார்க்கலாம். வெளி 4 : 9, 10; 5 : 6, 8, 11, 14; 7 : 11; 14 : 3; 19 : 4; நான்கு ஜீவன்கள், நீதி, வல்லமை, அன்பு, ஞானம் என்ற தெய்வீக சுபாவங்களை அடையாளப்படுத்துகின்றன.

மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் ஒன்றாக குறிப்பிடப்படுவதற்கு காரணம் என்னவெனில், தேவனுடைய கட்டளைகளும் தீர்க்கதரிசன சாட்சியங்களும் தேவனுடைய சுபாவங்களுக்கு ஏற்றவையாகவும், இசைவாகவும் இருக்கின்றன. தேவனுடைய தீர்க்கதரிசனங்களும், கட்டளைகளும் அவருடைய தன்மையைப் பிரதிபலிக்கக்கூடியவையாக இருக்கின்றன.

உயிரோடிருக்கும் நான்கு ஜீவன்கள் தேவனைக் குறிக்காமல், அவருடைய சுபாவங்களை அடையாளப்படுத்துகிறது போல, உயிரோடிருக்கும் 24 மூப்பர்கள் தீர்க்கதரிசிகளை அடையாளப்படுத்தாமல், அவர்களுடைய தீர்க்கதரிசனங்களை, அதாவது, தேவனுடைய கட்டளைகளையும், முன்னறிவிக்கும் தேவத்திட்டங்களையும் அடையாளப்படுத்துகின்றனர். இப்படியாக, "24 மூப்பர்கள்" என்பது, 24 புஸ்தகங்கள் (தீர்க்க்தரிசனங்கள்) அடங்கிய எபிரேய வேதத்தைக் குறிக்கிறது.

"பொன் கிரீடம்" தேவ வார்த்தையின் தெய்வீக அதிகாரத்தைக் குறிக்கிறது. "சிங்காசனம்" என்பது தீர்ப்பின் அதிகாரத்தையும், தவறாத தன்மையும் குறிக்கிறது. "வெண் வஸ்திரம்" பரிசுத்த வேதாகமத்தைக் குறிக்கிறது. அது போல, "மூப்பர்கள்" என்பது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைக் குறிக்காமல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைக் குறிப்பதாக இருக்கிறது.

இயேசுவின் முதல் வருகை மட்டும் புதிய ஏற்பாடு இல்லை. 24 மூப்பர்களால் அடையாளப்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்' "இராஜ்யம்" பற்றிய திரளான சாட்சியங்களாக விளங்குகின்றன. இந்த சாட்சியங்கள் நிறைவேறும் காலத்தில், இவ்வுலக இராஜ்ஜியங்கள் தேவனுக்கும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்குமாக மாறும். 24 மூப்பர்கள் தேவனையும் கிறிஸ்துவையும் வணக்கமாய் விழுந்து தொழுது கொள்வது, தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலையே அடையாளப்படுத்துகின்றன.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் சொல்லப்படும் 24 மூப்பர்கள் எபிரேய வேதாகம புத்தகங்களை (பழைய ஏற்பாட்டின் 24 புத்தகத் தொகுப்புக்களை) அடையாளப்படுத்துவதாக வேதமாணவர்களில் பெரும்பாலோர் கணிக்கின்றனர். எபிரேய வேதாகம புத்தகங்கள் அனைத்தையும் யூதர்கள் 24 புத்தகத் தொகுப்புகளாகவும், நான்கு பிரிவுகளாகவும் பிரித்தனர்.

| எண் | பிரிவு | புத்தகங்கள் எண்ணிக்கை | புத்தகங்கள் விபரம் |
|---|---|---|---|
| I | நியாயப்பிரமாணத் தொகுப்பு | 1 | ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். |
| II | தீர்க்கதரிசிகள் தொகுப்பு | 9 | யோசுவா, நியாயாதிபதிகள், 1 சாமுவேல் 2 சாமுவேல், 1 இராஜா, 2 இராஜா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல். |
| III | பன்னிரெண்டு- சிறிய தீர்க்கதரிசிகள் தொகுப்பு | 1 | ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா. |
| IV | பரிசுத்த எழுத்துக்கள் தொகுப்பு | 13<br>———<br>24 | சங்கீதம், நீதிமொழிகள், யோபு, உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, எஸ்தர், தானியேல், எஸ்றா, நெகேமியா, 1 நாளாகமம், 2 நாளாகமம். |

24 மூப்பர்கள் பழைய ஏற்பாட்டின் பரிசுத்த எழுத்துக்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்பதை, அவர்களின் பண்புகள், அந்தஸ்து, செயல்கள் போன்றவற்றை வெளிப்படுத்தல் ஆகமத்தில் கீழ் கண்ட வசனங்கள் மூலம் அறியலாம்:

**வெளி 4 : 4.** 24 மூப்பர்கள் "சிங்காசனங்களின் மேல்" உட்கார்ந்திருக்கிறார்கள். "சிங்காசனம்" என்பது தீர்ப்பின் மேன்மையைக் குறிக்கிறது. நியாயப்பிரமாணத் தீர்ப்பின் அளவு கோலாக தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் இருக்கின்றன. இவர்களுடைய சிங்காசனங்கள் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் இருப்பது, தேவனுடைய நியாயத்தீர்ப்பின் தொடர்ச்சியாக இவர்கள் விளங்குகிறார்கள். அவர்கள் வெண் வஸ்திரம் தரித்திருப்பது, பரிசுத்தத்தை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் சிரசுகளில் பொன்முடி சூடியிருப்பது, தேவனுடைய அதிகாரத்தினால் அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் தெய்வீக சுபாவங்களடங்கிய எண்ணங்களைக் குறிக்கிறது..

**வெளி 4 : 10.** 24 மூப்பர்கள் வணக்கமாய் விழுந்து தொழுது கொள்கிறார்கள். வேத வாக்கியங்களின் சாட்சியங்கள் அனைத்தும், ஒட்டு மொத்தமாகப் பிதாவை மகிமைப்படுத்தி புகழ்வதாகவே உள்ளன. அவர்கள் தங்கள் கிரீடங்களை சிங்காசனத்திற்கு முன்பாக வைக்கிறார்கள். அவர்களின் இந்த செயல், தங்கள் கிரீடங்களை வேண்டாமென்று அகற்றிப் போடும் நோக்கத்தில் இல்லை.

தங்களுக்கு அளிக்கப்பட்ட இந்த தெய்வீக அதிகாரங்களின் நோக்கமே, தேவனை மகிமைப்படுத்துவதற்குத் தான் என்பதை 24 மூப்பர்களும் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதையே, இவர்கள் தங்கள் கிரீடங்களை பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக வைப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. வெளி 12, 13ம் அதிகாரங்களில் காணப்படும் மிருகங்களுக்கு கிரீடங்கள் இருந்தாலும், அவைகள் பொன்னால் ஆனவைகள் அல்ல ! மேலும் இந்த கிரீடங்களை இந்த மிருகங்கள் கழற்றி வைக்கவும் இல்லை.

**<u>வெளி 5 : 5</u>**. மூப்பர்களில் ஒருவன் யோவானை நோக்கி, "நீ அழ வேண்டாம்" என்கிறான். மாம்சத்திலுள்ள சபையை யோவான் அடையாளப்படுத்துவதால், பழைய ஏற்பாட்டு வேத எழுத்துக்கள் சபைக்கு போதனையாக இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்த எழுத்துக்கள் மூலம், யோவானுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக மேசியாவை அடையாளம் காட்டுகின்றன. இயேசுவே மேசியா என்பதை சபையினர் அறிந்துள்ளனர். ஏனெனில், பரிசுத்த வேத எழுத்துக்களை அவர் முற்றிலும் நிறைவேற்றிக் காட்டினார்.

**<u>வெளி 5 : 6.</u>** மூப்பர்களுக்கு மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்கிறது. அதாவது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களால் இயேசு அடையாளங் காணப்பட்டிருந்தார் என்பதை இந்த காட்சி உணர்த்துகிறது. அந்த பரிசுத்த எழுத்துக்களை அவர் அறிந்திருந்தார்; அதன்படியே வாழ்ந்தும் காட்டினார்.

**<u>வெளி 5 : 8.</u>** "ஒவ்வொரு மூப்பரும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களைப் பிடித்திருந்தனர்." "சுரமண்டலம்" என்பது "இசைவான சத்திய உபதேசங்களைக்" குறிக்கிறது. ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் தன்னில் தானும், மற்ற தீர்க்கதரிசனங்களுடனும் ஒத்திருந்து, இசைவாய் இருக்கின்றன.

"ஒவ்வொரு மூப்பரும் தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களைப் பிடித்திருக்கின்றனர்". "பொற்கலசம்" என்பது, "தெய்வீக சுபாவங்கள் அடங்கிய நிலையைக்" குறிக்கிறது. "தூபவர்க்கம்" என்பது "துதி"யைக் குறிக்கிறது. இவை பரிசுத்தவான்களின் ஜெபங்கள் என்று சொல்லப்படுகின்றன. இந்த பரிசுத்தவான்களின் ஜெபங்கள், தங்கள் சுயவிருப்பத்தையோ, சுய தேவையையோ அடிப்படையாகக் கொண்டிராமல், பரிசுத்த எழுத்துக்களின் வாயிலாகப் பெறப்படும் ஆவியின் எழுப்புதலையும், வாக்குத்தத்தங்களையும் கொண்டுள்ளன.

**<u>வெளி 5 : 9</u>**. நான்கு ஜீவன்களுடன் (தேவனுடைய நான்கு சுபாவங்களுடன்) **24** மூப்பர்கள் புதிய பாட்டை பாடினார்கள். ஆட்டுக்குட்டியானவர் யார் என்பதும், அவர் என்ன செய்திருக்கிறார் என்பது பற்றியும் இந்த பாடல் அறிவிக்கிறது. **24** மூப்பர்களும் தங்களைப் பற்றி இங்கு எதுவும் பேசவில்லை. ராஜாக்களும், ஆசாரியர்களாக இருக்கும் "சபையைக்" குறித்தே இங்கு சாட்சியிடுகிறார்கள். ஆனால், சில மொழி பெயர்ப்புகளில், "எங்களை" மீட்டுக் கொண்டு, "எங்களை" ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்; "நாங்கள்" பூமியிலே அரசாளுவோம்" என்று **24** மூப்பர்கள் தங்களைப் பற்றி சொல்வது போல் தவறாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "அவர்களை" மீட்டுக் கொண்டு, "அவர்களை" ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்; அவர்கள் பூமியிலே அரசாளுவார்கள்" என்பது சரியான மொழி பெயர்ப்பாகும். 24 மூப்பர்களால் அடையாளப்படுத்தப்படும் பழைய ஏற்பாட்டு சத்தியங்கள், திருச்சபையினரான பரிசுத்தவான்களைக் குறித்து சாட்சி பகர்கின்றன.

**<u>வெளி 5 : 12</u>**. பரலோகத்தில் **24** மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவரின் தகுதியினை மற்றவர்களுடன் சேர்ந்து சாட்சியிடுகிறார்கள்.

**<u>வெளி 5 : 14.</u>** ஆட்டுக்குட்டியானவர் தகுதியும், உரிமையும் பெற்றிருக்கிறார் என்ற கருத்தை தேவனுடைய நான்கு சுபாவங்களும் (**4** ஜீவன்களும்) ஆமோதிப்பதைக் கண்ட **24** மூப்பர்கள், அதைப் பாராட்டி புகழும் விதத்தில் வணக்கமாய் விழுந்து தொழுது கொள்கிறார்கள். அதாவது, பழைய ஏற்பாட்டு சத்தியங்கள் கிறிஸ்துவின் மேன்மையையும், உரிமையையும் சாட்சி பகரும் விதமாக **24** மூப்பர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன.

**வெளி** 7 : 11. நான்,கு ஜீவன்கள் மற்றும் 24 மூப்பர்கள் மத்தியில் தூதர்கள் தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும் தொழுது கொள்கிறார்கள்.

**வெளி** 7 : 13 - 17. வெளி 7 : 9ல் **1,44,000** பேர்களை அல்லாமல், வெள்ளை அங்கிகள் தரித்திருந்த வேறொரு கூட்டத்தினரையும் யோவான் பார்க்கிறார். மூப்பர்களில் ஒருவன், "இவர்கள் யார் ?" என வினவுகிறான். இந்த வகுப்பினரைப் பற்றி யோவான் அறிந்திருக்கிறாரா என்ற முறையில் உண்மையாகவே இந்த கேள்வி வினவப்படுகிறது. பழைய ஏற்பாட்டு சத்தியங்களில் இந்த "திரள் கூட்டத்தார்" பற்றிய விஷயங்கள் நிழலாகவும், அடையாள பாஷைகளிலும் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. மேலோட்டமாகப் பார்த்தால், பழைய ஏற்பாடு தனக்கு இந்த கூட்டம் பற்றி எதுவும் தெரியாத நிலையில் இருப்பதாகத் தோன்றும். ஆனால், யோவான் வகுப்பார் இதற்கு மறுப்பு தெரிவித்து, பழைய ஏற்பாட்டில் இது சம்பந்தமான விஷயங்கள் உள்ளடக்கியிருக்கும் என்று தெரிவித்தவுடனே, பழைய ஏற்பாட்டில் ஒளிந்திருக்கும் "திரள் கூட்டம்" பற்றிய உண்மைகளை மூப்பனால் அடையாளப்படுத்தப்படும் பழைய ஏற்பாடு ஆராய முற்படுகிறது. இதனால், "திரள் கூட்டம்" பற்றிய சத்தியங்களால் யோவான் வகுப்பார் தெளிவடைகின்றனர்.

**வெளி** 11 : 6. வெளி 11 : 15ல் "இராஜ்யம்" பற்றிய பிரகடனம் வெளியானவுடன், "தீர்க்கதரிசனங்கள்" (24 மூப்பர்கள்) பிரகடனத்தை முழுவதுமாக ஆமோதித்து, அந்த இராஜ்யத்தின் அம்சங்களையும், மேன்மைகளையும் விவரிக்கின்றன. பழைய ஏற்பாட்டு சத்தியங்களின் முழு கவனமும் இராஜ்யத்தைக் குறித்தே இருந்து வந்துள்ளது. இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலே, தேவனை மகிமைப்படுத்தி, அவரைத் தொழுது கொள்ளுதலுக்கு அடையாளமாய் இருக்கின்றன.

**வெளி** 14 : 3. புதிய பாடலை பாடுவது யார் என்பது தெளிவாகக் குறிக்கப்படவில்லை. **14 : 2**ல் சுரமண்டலக்காரர்களைப் பற்றி சொல்லும் போது, மூப்பர்களை குறிப்பது போலத் தெரிகிறது. (வெளி **5 : 8** ஐப் பார்க்கவும்). ஆனால், வெளி **14 : 3**ல், இந்த மூப்பர்கள் நான்கு ஜீவன்களுடன் சேர்ந்து பாடலைக் கேட்கின்றனர். ஆகவே, இந்த பாடலை பாடுபவர்கள் 1,44,000 பேர்களாக இருக்கலாம். ஏனெனில் இந்த பாடலை இவர்கள் மட்டும் கற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இருந்தது. அப்படியானால், "வெளியாக்கப்பட்ட இரகசியம்" பற்றிய முழுமையான விஷயங்களை மணவாட்டி சபை மட்டுமே பாடலாக பாடுகிறது. இந்த இரகசியத்தை சபையினர் தேவனிடமிருந்தும் (சிங்காசனம்), தேவ சுபாவங்கள் (**4** ஜீவன்கள்) வாயிலாகவும், தீர்க்கதரிசனங்கள் (24 மூப்பர்கள்) மூலமாகவும் கற்றுக் கொள்கின்றனர். அதை மெச்சிப் பாராட்டும் விதமாகவே சபையினரின் பாடல் அமைகிறது.

**வெளி** 19 : 4. முப்பர்கள் நான்கு ஜீவன்களுடன் தேவனை தொழுது கொள்ளுகிறார்கள். இது, தேவத் திட்டத்தில் தீர்க்கதரிசன நிறைவேறுதல்களை அடையாளப்படுத்துகின்றன. 24 மூப்பர்களைப் பற்றிய கடைசி குறிப்பு வெளி 19 : 4ல் காணப்படுகிறது. அறுவடை காலப் பகுதியைச் சார்ந்த வசனம் இது. இதற்கு அடுத்த 20 - 22ம் அதிகாரங்கள் மகிமையடைந்த சபையைக் குறித்து விவரிக்கின்றன. சிலர் குறிப்பிடுவது போல், 24 முப்பர்கள் "சபையின் ஆசாரிய ஊழியத்தை" அடையாளப்படுத்துவதாக இருந்தால், இந்த 20 முதல் 22ம் அதிகாரங்களில் 24 மூப்பர்களைப் பற்றிய குறிப்பு கண்டிப்பாக பதிவாயிருக்கும்.

இவ்வாறாக, மேற்கண்ட வசனங்களின் சாட்சியங்கள் அனைத்தும் "24 முப்பர்கள்" என்பது "பழைய ஏற்பாட்டு சத்தியங்களை" அடையாளப்படுத்துவதாகவே உள்ளன என்பதை உணரலாம். யூதர்களைப் பொறுத்த வரையில், "24" என்பது அவர்களுக்கு "எபிரேய வேதாகமம்" (பழைய ஏற்பாடு) ஞாபகத்துக்கு வருவதாக உள்ளது.

*@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@*

# வானம்

வெளிப்படுத்தல் ஆகமத்தில் "வானம்" என்ற சொல் பெரும்பாலும் மத உலகத்தை (உண்மையான மதம் அல்லது போலி மதத்தை) அடையாளப் படுத்துகிறது. சில சந்தர்ப்பங்களில், தேவன் பிரசன்னமாயிருக்கும் (ஆவிக்குரிய) நிலையை அல்லது இடத்தை குறிப்பதாக இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில், தேவனுடைய பிரசன்னம் விளங்கும் இடத்திலிருந்து வெளிப்படும் தேவ கட்டளையை அடையாளப்படுத்துவதாயும் உள்ளது.

சில வசனங்களில் "பரலோகத்திலிருந்து சத்தங்கள்" என்றும், "வானத்தில் சத்தங்கள்" என்றும் வித்தியாசப்படுத்தி உள்ளதைப் பார்க்கிறோம். "வானத்தில் சத்தங்கள்" என்பது மத உலகத்தை அடையாளப்படுத்துகிறது. "பரலோகத்திலிருந்து சத்தங்கள்" என்பது தேவனிடத்திலிருந்து தூது வருவதை அடையாளப்படுத்துகிறது.

**சொல்லர்த்தமாக "வானம்" என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வசனங்கள் :**

**வெளி 4 : 2.** "வானத்தில் சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது".
இது தேவனுடைய அதிகாரத்தைக் குறிக்கிறது.
**வெளி 5 : 3.** வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புஸ்தகத்தை திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.
சிருஷ்டிகள் எந்த நிலையில் இருந்தாலும் தகுதியாக இருக்கவில்லை என்பது இங்கு உணர்த்தப்படுகிறது.
**வெளி** 5 : 13. "வானத்திலும், பூமியிலும் .........சிருஷ்டிகள் ....".
இது எல்லா இடங்களிலும் உள்ள சிருஷ்டிகளைக் குறிக்கிறது.
**வெளி 10 : 5.** "தூதன் தன் கையை வானத்துக்கு நேராக உயர்த்தி..".
இது திசையைக் குறிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.
**வெளி 10 : 7.** "வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவை களையும்.....".
இது எல்லா இடங்களிலும் உள்ள சிருஷ்டிகளைக் குறிக்கிறது
**வெளி14:7.** "வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்".
இது சிருஷ்டிப்பின் ஒரு பகுதியைக் குறிக்கிறது.
**வெளி 18 : 5.** "அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது".
"மிக உயரத்தில் உள்ளது" என்பதைக் குறிக்கும் வழக்குச் சொல்.

**வானத்திலிருந்து உண்டான சத்தங்கள்" என்பது சொல்லர்த்தமாக "தேவனிடத்திலிருந்து வெளிப்படும் கட்டளைகளைக் குறிக்கிறது :**

**வெளி 4 : 1.** "பரலோகத்தில் திறக்கபட்டிருந்த வாசலைக் கண்டேன்; முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது ......".
இது பரலோகத்திலிருந்து வரும் செய்தியைக் குறிக்கிறது. (வெளி 1:10ல் சத்தம் பின்னாக வந்தது.
**வெளி 10 : 4, 8.** தூரத்திலிருந்து வரும் செய்தி.
**வெளி 11 : 12.** தேவ கட்டளையைக் குறிக்கிறது.
**வெளி 14 : 2.** தூரத்திலிருந்து வரும் செய்தி.
**வெளி 14 : 13.** "பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கண்டேன்".
இது தேவ செய்தியைக் குறிக்கிறது.
**வெளி 18 : 4.** இது தேவ கட்டளையைக் குறிக்கிறது.

**"பரலோகத்திலிருந்து (வானத்திலிருந்து) இறங்கி வருகிற" என்பது சொல்லர்த்தமாக "தேவ கட்டளைக்கு இணங்க, ஆவிக்குரிய ஸ்தலத்திலிருந்து இறங்கி வரக்கூடியதை" குறிக்கிறது :**

**<u>வெளி 3 : 12.</u>** பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் இறங்கி வருகிறது.
**<u>வெளி 10 : 1.</u>** " பலமுள்ள தூதன் வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன்".
தேவ கட்டளையின்படி தூதன் (காபிரியேல் ? ) இறங்கி வருகிறான்.
**<u>வெளி 16 : 21</u>**. "....... பெரிய கல் மழையும் வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது".
இது தீர்ப்பாக இருக்கலாம்.
**<u>வெளி 18 : 1.</u>** " வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன்".
**<u>வெளி 20:1</u>**. தூதன் திறவு கோலையும், பெரிய சங்கிலியையும் பிடித்துக் கொண்டு வானத்திலிருந்து இறங்கி வருகிறான்.
**<u>வெளி 20 : 9.</u>** தேவனால் <u>வானத்திலிருந்து</u> அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது.
**<u>வெளி 21 : 2, 10</u>**. புதிய எருசலேம் பரலோகத்தை விட்டு இறங்கி வருகிறது.

**<u>வெளி 13 : 13.</u>** **இது** ஒரு வித்தியாசமானது. இந்த ஒரு வசனத்தின் மூலம், "வானத்திலிருந்து இறங்கி வருவது" என்பது <u>போலி</u> <u>மத</u> <u>உலகமான</u> வானத்திலிருந்து வருவதாகக் காண்கிறோம். வெளி 16 : 21; மற்றும் 20 : 9ல் தேவனிடத்திலிருந்து இறங்கி வரும் தீர்ப்புக்களைப் பார்க்கிறோம். தேவனுடைய வல்லமையைப் போலவே, உரிமை கொண்டாடி, இரண்டு கொம்புகளுள்ள மிருகம் தானும் அவ்வாறு அழிவுக்குரிய தீர்ப்புக்களை இறங்கி வரப்பண்ணமுடியும் என்று காண்பிக்கிறது.

**அடையாள பாஷையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வசனங்கள் :**

**"வானத்தில் உண்டான சத்தங்கள்" :**

மத உலகத்தில் (மெய் அல்லது போலி மதங்களில்) உண்டான பிரகடனங்களை அடையாளப்படுத்துகின்றது .

<u>வெளி 11 : 15.</u> இது லவோதிக்கேயா சபையின் ஆரம்பத்தில் "ராஜ்யம்" ஆரம்பமாவதைக் குறித்த பிரகடனம் ஆகும்.

<u>வெளி 12 : 10.</u> "ராஜ்யம்" பூமியில் ஆரம்பமாகி உள்ளது என பிரகடனப்படுத்தி உரிமை கொண்டாடுகிறது.

**"வானத்தின் மத்தியில் உண்டான சத்தம்" :**

"வானத்தில் மத்தியில்" என்ற பதம் மாம்சீகத்திலிருக்கும் கிறிஸ்தவத்தின் எந்த பிரிவினரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தூதுகள் அனைத்தும் எந்த ஒரு பிரிவினருக்கும் விசேஷித்துச் சொல்லாமல் பொதுவாக உள்ளது.

<u>வெளி 8:13.</u> <u>வானத்தின் மத்தியில்</u> பறந்து வந்த தூதன், மூன்று ஆபத்துக்களை பிரகடனப்படுத்துகிறான்.

<u>வெளி 14 : 6.</u> <u>வானத்தின் மத்தியில்</u> பறந்து வந்த அறுவடை கால தூதன் நித்திய சுவிசேஷத்தை கிறிஸ்தவ உலகத்திற்கு பிரகடனப்படுத்துகிறான்.

<u>வெளி 19 : 17.</u> கிறிஸ்துவத்தின் (வானத்தின்) மத்தியிலிருக்கிற பறவைகள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றன.

**மத உலகத்தை அடையாளப்படுத்தும் வசனங்கள் :**

பின்வரும் வசனங்களில் சில வசனங்கள் போலி மத அமைப்பையும், சில வசனங்கள் மெய்ச்சபையையும் அடையாளப் படுத்துகின்றன.

வெளி 6:13. வானத்தின் நட்சத்திரங்கள் பூமியில் விழுந்தன.
8:1 பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதல் உண்டாயிற்று.
8:10 பெரிய நட்சத்திரம் வானத்திலிருந்து விழுந்தது.
9:1 வானத்திலிருந்து பூமியின் மேல் ஒரு நட்சத்திரம் விழுந்தது.
11:6 வானத்தை மழை பெய்யாதபடிக்கு அடைக்கும் அதிகாரமுள்ள இரண்டு சாட்சிகள்.
11:12 வேதாகம சத்தியங்கள் வானத்துக்கு ஏறிப் போயின.
11:13. பரலோகத்தின் தேவன் மகிமைப்படுவது. (போப்பு).
11:19. பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்படுவது.
12:1 வானத்திலே பெரிய அடையாளம். (ஸ்திரீ).
12:3 வேறொரு அடையாளம் (சிவப்பான வலுசர்ப்பம்).
12:4. வானத்தின் நட்சத்திரங்கள் பூமியில் விழுந்தன.
12:7. வானத்தில் யுத்தம்.
12:8. வானத்தில் வலுசர்ப்பத்திற்கு இடமில்லை.
12:12. பரலோகங்கள் களிகூருகின்றன.
13:13 வானத்திலிருந்து அக்கினி இறங்கியது.
14:17. பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து தூதன் புறப்பட்டு வந்தான்.
. 15:1. வானத்திலே அடையாளம்: வாதைகளையுடைய தூதர்கள்.
15:5. பரலோகத்திலே ஆலயம் திறக்கப்பட்டது.
16:11. பரலோகத்தின் தேவன் தூஷிக்கப்படுதல் (போப்பு).
18:20 பரலோகம் களிகூருகின்றது.
19:11. பரலோகம் திறந்திருக்கிறது.
20:11. வானமும் பூமியும் அகன்று போயின.
21:1 புதிய வானம். புதிய பூமி. முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின.

**போலியாக உபயோகப்படுத்தப்பட்ட வசனங்கள் :**

வெளி 16 : 17. ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை <u>ஆகாயத்தில்</u> ஊற்றினான்.

வெளி 21 : 3. <u>பரலோகத்திலிருந்து</u> உண்டான ஒரு பெரும் சத்தத்தைக் கேட்டேன்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# பூமியில் குடியிருக்கிறவர்கள்

"பூமி" என்பது "நிலை பெற்ற சமுதாயத்தை" அடையாளப்படுத்துவதாக வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது. தற்கால ஒழுங்கு, அமைப்பு, மரபுகளில் வேரூன்றி திருப்தியுடன் வாழும் சமுதாயம் "பூமியின் குடிகள்" , "பூமியில் குடியிருக்கிறவர்கள்", "பூமியின் மேல் குடியிருக்கிறவர்கள்" என்ற அடையாள பாஷைகளில் குறிக்கப்படுகிறார்கள். இந்த சமுதாயத்தினர் நிகழ்கால மரபுகளுக்கும், காரியங்களுக்கும் மாற்றம் ஏற்படும் வகையில் அச்சுறுத்தலான எதையும் (மாற்றங்கள் நன்மை விளைவிக்கும் தன்மை உடையதாயிருந்தாலும்) பார்க்கவோ அல்லது அனுமதிக்கவோ இயலாத மன நிலையில் இருப்பவர்கள்.

இந்த சொற்றொடர் வெளிப்படுத்தல் ஆகமத்தில் எவ்விதம் கையாளப்பட்டுள்ளது என்பதை பின்வரும் வசனங்களில் பார்ப்போம் :

**<u>வெளி 3 : 10:</u>** இந்த தூது சொல்லப்பட்ட பிலதெல்பியா சபை காலத்தில் தான், மறுமலர்ச்சி (REFORMATION) ஏற்பட்டது. ரோமச் சபையிலிருந்து மத சுதந்திரத்திற்கான கதவு மார்டின் லூத்தர் அவர்களால் திறக்கப்பட்டது. சுவிசேஷ சத்தியங்களைக் குறித்து பல்வேறு பார்வைகளில் கருத்துக்கள் பெருக ஆரம்பித்தன. இந்த மாற்ற அலைகளில் பரிசுத்தவான்கள் சிக்காமல் தனிமைப்படுத்தப்படுவதாக இயேசு வாக்குத்தத்தம் செய்கிறார். இதற்கு அடுத்த லவோதிக்கேயா சபையின் காலத்தில் "சத்தியங்கள்" தெளிவு பெற ஆரம்பித்தன.

தானியேல் கூறும் விதமாக, சத்தியத்தை அங்கும் இங்கும் ஓடி ஆராயும் நிலையும் ஏற்படுகிறது. மேலும், வாழ்வின் பல்வேறு அம்சங்களில் –பொருளாதார, அரசியல், தத்துவ, விஞ்ஞன ரீதியாக பலதரப்பட்ட மாற்றங்கள் தொடர்கின்றன. இப்படிப்பட்ட "சோதனைக் காலம்" குறிப்பாக "பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு" மட்டுமே உரியதாயிருக்கிறது. அதாவது, இவ்வுலக காரியங்களில் நம்பிக்கை வைத்து, அதன் மரபுகளிலும், வெறுமையான மாயையிலும் வேரூன்றியிருப்பவர்கள் மட்டுமே இச்சோதனையில் பாதிக்கப்படுவார்கள்.

**<u>வெளி 6 : 10.</u>** மறுமலர்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னான ஐந்தாம் சபையின் (5ம் முத்திரை, 5ம் எக்காளம்) காலப்பகுதியை இந்த வசனம் குறிக்கிறது. மறுமலர்ச்சிக்கான வித்துக்கள் விதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த காலக்கட்டத்திலும், போப்புவின் அதிகாரம் உச்ச நிலையிலேயே இருந்தது. வெளி 12ம் அதிகாரத்தில் நாம் கற்றுக் கொண்டபடி, "மிகாவேலும் அவனுடைய தூதர்களும்" வலுசர்ப்பத்தை (சிவில் அதிகாரத்தை) தம் ஆயுதமாகப் பயன்படுத்தி சபையினரைத் துன்பப்படுத்தினர். இதனாலேயே, வெளி 6 : 10ல் பரிசுத்தவான்கள் செய்யும் மன்றாட்டில், **பூமியின் மேல் குடியிருக்கிறவர்களின்** காரணமாகவே தங்கள் இரத்தம் சிந்தப்பட்டதை உணருகிறார்கள். இந்த பிரிவினர் தாம், தற்கால மரபுகளிலும் ஒழுங்குகளிலும் வேரூன்றியவர்கள். வலுசர்ப்பமும், மிகாவேலைப் பின்பற்றுகிறவர்களும் சமய-ராஜ்ஜீய உறவை எதிர்ப்பவர்களை துன்புறுத்துகிறார்கள். இந்த பிரிவினர் மீது பழி வாங்கும் காலத்தை பரிசுத்தவான்கள் கவனிப்புடன் உற்று நோக்குகிறார்கள்.

**<u>வெளி 8 : 3.</u>** " <u>பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு</u> ஐயோ, ஐயோ, ஐயோ ".

இந்த வசனம், நான்காம் எக்காளம் முடிந்தவுடன் இறுதியான மூன்று எக்காளங்களின் விளைவினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு நிகழப்போவதை வன்மையாகத் தெரிவிக்கிறது. விக்ளிஃப்பின் காலத்திலேயே சத்தியங்கள் பெருக ஆரம்பித்து, சமுதாயத்தையும் அதன் நடவடிக்கைகளையும் பாதிக்கும் வல்லமை பெற்றதாயிருந்தது. விக்ளிஃப் அவர்களின் காலத்திற்கு பின்னர், ஜனங்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் கொண்டு வரும்படியான சவால்கள் ஏதுமில்லை. அந்திக்கிறிஸ்துவின் அமைப்பு மிக்க வலிமை பெற்றிருந்ததால், அதற்கு எதிரான எல்லா சவால்களும் முறியடிக்கப்பட்டன. ஆனால், விக்ளிஃப்பின் காலத்திலிருந்து, பூமியின் குடிகளுக்கு ஆபத்து வரத் தொடங்கியது.

**<u>வெளி 11 : 10.</u>** "அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் <u>பூமியின் குடிகளை</u> வேதனைப்படுத்தினபடியால்....". இது ஆறாம் எக்காள காலப்பகுதியில் நடக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால், 1260 ஆண்டுகள் முடிவுறும் நிலையில் நடந்தவை. அதாவது, பிரெஞ்சு புரட்சி நடந்த காலப்பகுதி ஆகும். பிரெஞ்சு அரசாங்கம் மதத்தை 3 1/2 வருடங்களுக்கு தடை பண்ணியது. இரண்டு சாட்சிகளான ஒலிவ மரங்களும் (எபிரேய வேதாகம சத்தியங்களும்), குத்து விளக்குகளும் (கிரேக்க வேதாகம சத்தியங்களும்), அடக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. (7ம் வசனம்). இதன் காரணமாக, பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டார்கள். ஏனெனில், வேதாகமம் அவர்களுக்கு பகைமையாகவே இருந்துள்ளது. இருந்தாலும், நம்முடைய கர்த்தர் தம் பரிசுத்த வார்த்தைகளை அழிந்து போக அனுமதிக்கவில்லை என்பதை வெளி 11 : 11ல் தெளிவாகப் பார்க்கிறோம்.

**<u>வெளி 13 : 8.</u>** புரோட்டஸ்டண்டுகளல்லாத இரண்டு பெரும் போலி கிறிஸ்தவ சபைகளைப் பற்றிய வரலாற்றை 13ம் அதிகாரம் விவரிக்கிறது. போப்பு மார்க்கம் (10 கொம்புகள்), ஆங்கிலிகன் சபை (இரண்டு கொம்புகள்); இந்த இரண்டு போலிச் சபைகளையும் விசுவாசமாகப் பின்பற்றுபவர்களை "பூமியின் குடிகளாக" 8ம் வசனத்தில் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு போலிச் சபைகள் தேவையான ஒத்துழைப்பை நல்கி, அவர்களின் வாழ்க்கை முறைகளை மாற்ற விடாமல், பழைய மரபுகளில் வேரூன்றியிருக்கச் செய்யும்.

**<u>வெளி 13:12.</u>** "முந்தின மிருகத்தைப் <u>பூமியும் அதன் குடிகளும்</u> வணங்கும்படி செய்தது." இவ்வுலக அரங்கில் போப்பு மார்க்கத்தின் கொள்கைகளுக்கோ அல்லது நடைமுறைகளுக்கு சவாலாக ஆங்கிலிகன் சபை இருந்ததில்லை. இந்த சபை உண்மையில் ரோமச் சபையின் நகல் வடிவமாகவே இருக்கிறது. இவ்விதமாக, ஆங்கிலிகன் சபை, பத்து கொம்புகளுள்ள மிருகத்தை தொடர்ந்து வணங்குவதற்காக பூமியின் குடிகளை உற்சாகப்படுத்தியது. இச்சபை புதிதாக உருவெடுத்துள்ள புரோட்டஸ்டாண்டு சபை அமைப்புகளுக்கு துணை போக வில்லை.

**<u>வெளி 13:14.</u>** "<u>பூமியின் குடிகளை</u> மோசம் போக்கி ----- மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று."

பூமியின் குடிகள் மோசம் போகிறதை இந்த வசனம் காண்பிக்கிறது. உண்மையான பரிசுத்தவான்கள் மிருகத்தினாலோ அல்லது சொரூபத்தினாலோ மோசம் போகிறதில்லை.

**<u>வெளி 14 : 6.</u>** "<u>பூமியில்</u> <u>வாசம்</u> <u>பண்ணுகிற</u> சகல ஜாதிகளுக்கும் ------- அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து ----"

அறுவடை கால தூதுகளை 14ம் அதிகாரம் விவரிக்கிறது. இயேசு தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்க்க, நித்திய சுவிசேஷத்தை பூமியில் அனுப்பும் போது, "வானத்தின் ஒரு முனை முதற் கொண்டு மறுமுனை வரைக்கும் எவ்வித தடையும் இல்லாமல் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. (மத் 24:31.). இங்கு "வானம்" என்று குறிக்கப்படுவது, போலி மத அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும். இவ்விதமாக, சத்தியம் "பூமியில் வாசம் பண்ணுகிறவர்களுக்கும்" மற்றவர்களுக்கும் சென்றடைகிறது.

**<u>வெளி 17:1.</u>** "அவளுடைய வேசித்தனமான மதுவால் <u>பூமியின் குடிகளும்</u> வெறி கொண்டிருந்தார்களே".

போலிச் சபையினால் மதி மயக்கமடைந்த பூமியின் குடிகளுடைய உணர்வுகள் மங்கிப் போய்விடுகின்றன. ஆனால், உண்மையான பரிசுத்தவான்கள் அவ்விதம் ஏமாற்றப்படவில்லை.

**<u>வெளி 17 : 8.</u>** ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத <u>பூமியின் குடிகள்</u> ------ மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

இந்த மிருகத்தைப் பார்த்து பூமியின் குடிகள் (பரிசுத்தவான்கள் அல்ல) ஆச்சரியப்படுகிறார்கள். (குழப்பமுற்று ஏமாற்றமடைவார்கள்.).

மேற்குறிப்பிட்ட வசனங்களிலுள்ள "பூமியின் குடிகள்" என்ற சொற்றொடர் மூலம் நாம் அறியும் பாடம் என்னவெனில் :

ஜெயங்கொள்ளுகிறவர்கள் இந்த சமுதாயத்தில் வேரூன்றி இருக்க மாட்டார்கள்; இப்பூமிக்குரிய நடை முறை வழக்கங்களில் நமக்கு ஈர்ப்பு ஏதுமில்லை; இப்பூமியைச் சார்ந்த அரசியல், மத, பொருளாதார, சமுதாய சீர்திருத்தங்களில் நமக்கு நம்பிக்கை எதுவும் இல்லை; இந்த பூமியில் நாம் வாசம் பண்ணுகிறதில்லை; இதில் தற்காலிகமாக பயணிக்கிறவர்களாகவே இருக்கிறோம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்

இந்த நான்கு சொற்கள் அடங்கிய சொற்றொடர், "பூமியில் குடியிருக்கிறவர்கள்' என்ற சொற்றொடரிலிருந்து மாறுபட்ட விதமாக இருக்கிறது. "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்று குறிக்கப்படும் இந்த மனுக்குலத்தார், நடைமுறை ஒழுங்குகள், மரபுகள் எவற்றிலும் வேரூன்றியிராதவர்கள் ஆவர்; இவர்கள் திருப்தி அடையாதவர்கள் என்றோ, அல்லது புரட்சியாளர்கள் என்றோ வரையறுக்கப்படுகிறவர்கள் அல்ல! தம் வாழ்க்கையைத் தொடருவதில் எந்த முறைகள் ஒத்து வருகிறதோ அதைப் பற்றிக் கொள்ளுபவர்கள். இவர்களுக்கு ஒழுங்குகள், மரபுகள் பற்றி எவ்வித அக்கறையும் ஈடுபாடும் கிடையாது. ஆகவே, இவர்கள் எதையும் பெரிதாக இழப்பதாக எண்ணம் கொண்டவர்கள் அல்ல. அவ்வப்பொழுது இயங்கும் நிலைமைகளுக்குத் தக்கதாக தங்களை மாற்றிக் கொள்ளும் இயல்புடையவர்கள். இப்படிபட்டவர்கள் இவ்வுலகத்தில் ஒரு பெருங்கூட்டமாக இருக்கிறார்கள்.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் . "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்ற சொற்றொடரை கீழ்கண்ட வசனங்களில் பிரயோகப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்கலாம் :

**<u>வெளி 17 : 15.</u>** "திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசி" என்று வெளி 17 : 1ம் வசனத்தில் படிக்கிறோம்; மகா வேசி (போலிச் சபை) உட்கார்ந்திருக்கும் "தண்ணீர்" என்பது "ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரரும்" என்று வெளி 17 : 15ல் தெளிவாகிறது. இந்த வகுப்பாருக்கும், "சமுத்திரம்" என்ற அடையாள பாஷையில் சில வசனங்களில் குறிக்கப்பட்டிருக்கும் வகுப்பாருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வெளி 17 : 15 ம் வசனம் நமக்கு உதவுகிறது.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் கீழ் கண்ட வசனங்களில் "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்ற சொற்றொடர் எந்த சூழ்நிலையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பார்ப்போம் :

**<u>வெளி 5 : 9.</u>** இந்த வசனம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; சபை (மணவாட்டி இந்த வகுப்பினரிடமிருந்து தான் வருகிறார்கள்; இது இயல்பான ஒன்று தான்.) "<u>பூமியில் குடியிருக்கிறவர்கள்</u> நம்முடைய கர்த்தரைச் சார்ந்த விஷயங்களில் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில், பூமிக்கடுத்த விஷயங்களிலும் மரபுகளிலுமே இவர்கள் வேரூன்றியிருக்கிறார்கள்.

**<u>வெளி 7 : 9.</u>** "திரள் கூட்டத்தாரும்" இந்த வகுப்பாரிடமிருந்து தான் வருகிறார்கள் என்பதை இந்த வசனம் தெரிவிக்கிறது. ஏனெனில், சபையாகிய சரீரத்தின் அங்கங்களாக ஆவதற்கான இலக்கை நோக்கியே திரள் கூட்டத்தார் நடவடிக்கைகள் ஆரம்பமாகிறது. ஆகவே, மேற்குறிப்பிட்ட வகுப்பாரிடமிருந்தே திரள் கூட்டத்தார் வருவது இயல்பான ஒன்றாகும்.

**<u>வெளி 10:11.</u>** இங்கு இந்த சொற்றொடர் <u>வித்தியாசமாக</u> உள்ளது. "ஜனங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள், <u>ராஜாக்கள்</u>" என்று இந்த வசனத்தில் குறிக்கப் படுகிறது.

1260 நாட்களுக்குப் பிறகு யோவான் வகுப்பார் (சபை) சிறு புஸ்தகத்தை புசிக்கிறார்கள். (இது முடிவு காலமாகையால், திறக்கப்பட்டிருக்கிற புஸ்தகத்தை ஆராய்ந்து கிரகிக்க முயல்கிறார்கள்) மில்லர் இயக்க காலத்தில் ஏற்பட்ட பெரும் ஏமாற்றத்தின் விளைவாக சபைக்கு கசப்பான உணர்வினைத் தந்தது. (வசனம் 10) . ஆனால், சபைக்கு வாக்குத்தத்தம்

கொடுக்கப்படுகிறது. இன்னும் நாட்கள் இருக்கிறதை உணர்ந்தும் விதமாக, யோவான் வகுப்பார் தீர்க்கதரிசனம் உரைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். வெளி 14 : 6ம் வசனத்தைப் பார்க்கும் பொழுது, இதில் அறுவடை கால தூதாக "நித்திய சுவிசேஷம்" வானத்தின் ஒரு முனை முதற் கொண்டு மறு முனை வரைக்கும் சென்றடைகிறது. பூமியில் வாசம் பண்ணுகிறவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடைகிறது. இங்கு "மற்றவர்கள்" என்பது "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்று குறிக்கப்படுகிறார்கள்.

இங்கு வெளி 10 : 11ல், அறுவடை தீர்க்கதரிசனத்தின் கருப்பொருளைப் பார்க்கிறோம். இந்த தூது, "தண்ணீர்கள்" என்று அடையாளப்படுத்தப்படும் "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்ற வகுப்பாருக்கு மட்டுமல்லாமல், பூமியில் வாசம் பண்ணும் **ராஜாக்களுக்கும்** அறிவிக்கப் படுகிறது. இந்த சொற்றொடரில் இருக்கும் மாற்றத்திற்கு விளக்கம் இதுவே.

**வெளி 11 : 9.** இந்த வசனத்திற்கான சூழ்நிலை, பிரெஞ்சு புரட்சி நடந்த காலமாகும். அச்சமயத்தில் மதமும் வேதாகமும் தடைபண்ணப்பட்ட போது, பூமியில் குடியிருக்கிற வகுப்பார் (மரபுகளில் வேரூன்றியிருப்பவர்கள்) சந்தோஷமடைந்தனர். "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்ற வகுப்பார் வேதாகமம் முற்றிலும் மறைந்துவிட அனுமதிக்கமாட்டார்கள் என்பதை 9ம் வசனம் தெரிவிக்கிறது. இந்த வகுப்பாருக்கு வேதாகமத்தின் கருத்துக்கள், குறிக்கோள்கள் மீது ஈர்ப்பு இருக்கிறது.

**வெளி 13 : 7.** "பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர் மேலும், ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது".

வெளி 13 : 8ம் வசனத்தில் பூமியின் குடிகள் போலிச் சபையை (சிறுத்தையை) வணங்குகிறார்கள் என்று அறிகிறோம். இருந்தாலும், "தண்ணீர்கள்" வகுப்பார் மீதும் இந்த மிருகத்தின் கட்டுப்பாடு மேலோங்கியிருந்ததை 7ம் வசனத்தின் மூலம் அறிகிறோம். பூமியின் குடிகள் போலிச் சபையையும், அதைச் சார்ந்த சிவில் அமைப்புகளை விரும்புவதற்கு காரணம், இவைகள் மரபு ஒழுங்குகளை எவ்வித மாற்றங்களுக்கு உட்படுத்தாமல் நிலையான தன்மையை தக்க வைக்கும் என்பதே. இந்த மிருகம் இப்படிப்பட்ட அதிகாரத்தையும் வல்லமையையும் கொண்டுள்ளதாயிருக்கிறது என்று 7ம் வசனம் தெரிவிக்கிறது. ஏனெனில், மனுக்குலத்தார் அதனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார்கள்.

**வெளி 17 :15.** இந்த வசனம் வெளி 13 : 7ம் வசனத்திற்கு இணையாக உள்ளது, வேசி தண்ணீர்களின் மேல் (ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர் மீது) உட்கார்ந்து, இந்த வகுப்பாரை கட்டுப்பாடு செய்கிறாள்.

"பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்ற வகுப்பாரிலிருந்து அல்ல, "தண்ணீர்கள்" என்று அடையாளப்படுத்தப்படும் வகுப்பாரிடமிருந்து தான், தேவனால் அழைக்கப்பட்டிருக்கும் நாம் வந்துள்ளோம். இந்த யுக முடிவின் குழப்பங்களில் "சமுத்திரம்" வகுப்பாரை ஆதரிக்கும் மனோபாவம் நமக்கு இருக்கலாம். "தண்ணீர்கள்" வகுப்பாரிலிருந்து நாம் வந்தாலும், அதில் நாம் நிலைத்திருப்பதில்லை. கர்த்தராகிய கிறிஸ்துவில் புதிய வேர்களாய் வளர்ச்சி பெற வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் எக்காலத்திலும் பூமியின் குடிகளாக இருக்கவில்லை. "சமுத்திரமாய்" இருந்தோம்; ஆனால் இப்பொழுது இல்லை. கர்த்தர் பூமியை மாற்றமடையச் செய்யும் போது, சமுத்திரம் மறைந்து போகும். ஏனெனில் அமைதியின்மையை கிறிஸ்து விரும்புகிறதில்லை.

*@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@*

# சமுத்திரம்

"சமுத்திரம்" என்ற வார்த்தையை வெளிப்படுத்தல் ஆகமம் கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்துகிறது :

**வெளி 4 : 6.** இந்த சிங்காசன காட்சியில் சுவிசேஷ யுக ஆரம்பத்தில் நாம் நிற்கிறோம்; இங்கு ஏழு ஆவிகளும், நான்கு ஜீவன்களும், 24 மூப்பர்களும் தேவனுக்கு முன்பாக நிற்கின்றன. அத்துடன், கண்ணாடிக் கடலும் இருந்ததாக வாசிக்கிறோம். "கடல்" என்பது அமைதி இழந்த மனுஷ சமுதாயத்தை அடையாளப்படுத்துகிறது. "கண்ணாடிக் கடல்" தேவனுக்கு முன்பாக இருக்கிறதாக காட்டப்படுவது ஏன் ? தேவனுக்கு முன்பாக நிற்கக்கூடிய ஆவிகள், ஜீவன்கள், மூப்பர்கள் போன்றவைகளை தேவன் தம்முடைய கருவிகளாக, வரும் யுகத்தில் பயன்படுத்தப் போகிறார் என்பதை அடையாளப்படுத்தலாம். அப்படியானால், இந்த கருவிகளில் "அமைதியற்ற ஜன சமுதாயம்" இடம் பெறுவது விளங்காத விஷயமாக உள்ளது ! உண்மையில், தேவன் உபயோகப்படுத்தும் கருவிகளில் இதுவும் பிரதானமான ஒன்றாகும். "கண்ணாடிக் கடல்" என்பது, இயேசுவின் முதலாம் வருகையில் (சுவிசேஷ யுக ஆரம்பத்தில்) மனுக்குலம் இருந்த அமைதியான சூழ்நிலையை உணர்த்துவதாக இருக்கிறது. இக்காலப்பகுதி தான், 200 வருடங்கள் அடங்கிய "ரோம சாம்ராஜ்யத்தின் அமைதி" (PAX ROMANO) என வரலாற்றில் வருணிக்கப் படுகிறது. (வெளி 4 : 6ம் வசனத்தின் விளக்கவுரையைப் பார்க்கவும்) .

**வெளி 5 : 13.** சுவிசேஷ யுக முழுமையிலும் ஆற்றும் பணியின் விளைவு பற்றிய விவரங்கள் தான் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. சுவிசேஷ யுகத்தின் துவக்க காலத்தில் இந்த வசனத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு விளக்கம் அளிக்க இயலாது. ஏனென்றால், ஆட்டுக்குட்டியானவருடைய ஆளுகை பற்றிய உரிமையையும், அதிகாரத்தையும் அந்த காலக்கட்டத்தில் வானத்திலும், பூமியிலும், சமுத்திரத்திலும் உள்ள சிருஷ்டிகள் யாவும் அங்கீகரிக்கவில்லை.

இந்த வசனத்தில் "சமுத்திரம்" என்பது அடையாள பாஷையாக எடுத்துக் கொண்டால், மரபு ஒழுங்குகளில் வேரூன்றாத வகுப்பினர் புதிய ராஜாவை அங்கீகரிப்பார்கள் என்று சொல்லலாம். ஆனால், இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் வானம், பூமி, சமுத்திரம் எல்லாவற்றையும் சொல்லர்த்தமாக எடுத்துக் கொண்டால், தேவனுடைய சிருஷ்டிகள் யாவும் புதிய ராஜாவையும், அவருடைய ஏற்பாடுகளையும் (சிலர் ஞானமாகவும், சிலர் உள்ளுணர்வுடனும்) அங்கீகரித்து, கீழ்படிதலுக்கு உள்ளாவார்கள் என்று சொல்லலாம்.

**வெளி 7 : 1, 2, 3.** இது பிரெஞ்சு புரட்சி நடக்கும் காலப்பகுதி; ஆறாம் சபையின் 6ம் முத்திரை (6ம் எக்காளம்) உடைக்கப்படும் காலப்பகுதியாகும். (வெளி 6 : 12). முடிவின் காலம். காற்றுகள் அவிழ்த்து விடப்பட்டதால், நகரத்தில் பத்திலொரு பங்கு இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து, உலகத்தின் மீதமுள்ள பகுதிகளுக்கு இந்த நிலைமை பரவி, தானியேல் முன்னுரைத்த மகா உபத்திரவ நாள் சீக்கிரமாய் வர இருக்கிறது. திருச்சபையின் இலக்கம் (1,44,000 பேர்கள் முத்திரிக்கப்படுபவர்கள்) நிறைவேறும் வரையிலும், இந்த அழிக்கும் வல்லமையை தேவன் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். இறுதியாக, பூமியும், சமுத்திரமும், மரங்களும் சேதப்படப் போகிறதினால், 9/10 பங்கினர் விழப் போகின்றனர்.

**வெளி 8 : 8, 9.** இந்த இரண்டாம் எக்காள காலப்பகுதியில் (கி.பி. 70 லிருந்து 313 வரை) ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரம், குடிமக்களின் பல்வேறு கோரிக்கைகளினால் பாதிப்பு ஏற்பட்டு, ரோம புற மதத்தின் வல்லமை குன்றி விட்டது. கான்ஸ்டண்டைன் பேரரசன் கிறிஸ்தவ மதத்தை தழுவியதின் காரணமாக, ரோம புறமத சாம்ராஜ்யம் அழிவு பெற்றதை ஊர்ஜிதப்படுத்துகிறது.

ரோம சாம்ராஜ்யம் மூன்று வித மதப் பிரிவினர்களைக் கொண்டிருந்தது:

1. கிறிஸ்தவர்கள் 2. யூதர்கள் 3. ரோம புறமதத்தினர்.

ரோம பேரரசன் கிறிஸ்தவனாக மாறியவுடன், மூன்றாவது பிரிவினராகிய ரோம புறமதம் அழிவடைந்தது. சமுத்திரத்தின் இந்த பிரிவு இரத்தமானது; (அழிந்து போனது). இந்த புற மதத்தினரின் மத வாழ்க்கை இதற்கு முன் பேரரசனின் ஆதரவுடனும், பேரரசனை தெய்வமாகத் தொழும் விதத்திலும் இருந்தது. ஆனால், புற மதம் ஒழிந்த நிலையில், இம்மதத்தினால் விளைந்த பலன்களும் (சமுத்திரத்தில் மூன்றில் ஒரு பகுதியான கப்பல்களும் ஆதாயங்களும்) நின்று போயின.

**<u>வெளி</u>** <u>10 : 2, 5, 8.</u> ஆறாம் எக்காளத்தின் ஒரு பகுதியை இந்த அதிகாரம் விவரிக்கிறது. 1260 வருடங்கள் முடிவு பெறும் காலப்பகுதியை கவனப்படுத்துகிறது. இந்த அதிகாரம், தானியேல் 12ம் அதிகாரத்துடன் தொடர்புள்ளதாக இருப்பதை நாம் கவனிக்கலாம். ஆற்றின் தண்ணீர்கள் மேல் நிற்கும் புருஷன் முடிவு காலத்துக்குரிய தரிசனத்தை பிரகடனப்படுத்துகிறான். ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும் செல்லும் என்று தன் கரத்தை வானத்துக்கு ஏறெடுத்து என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிட்டான். தானியேல் எழுதிய இந்த வார்த்தைகள் முடிவு காலம் மட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும், முத்திரிக்கப்பட்டும் இருக்கும் என்று அந்த தூதன் சொல்லுகிறான். வெளி 10ம் அதிகாரத்தில் அதே தூதன் தன் கையில் சிறு புஸ்தகத்தை (தானியேலின் புஸ்தகத்தை) வைத்துக் கொண்டு மறுபடியும் காணப்படுகிறான். இந்த புஸ்தகம் <u>இப்பொழுது திறக்கப்பட்டு இருக்கிறது.</u> ஏனெனில் காலம் நிறைவேறியுள்ளது. (6ம் வசனம்). தானியேலின் தரிசனத்தில் செய்த விதமாகவே, அந்த தூதன் தன் கையை வானத்துக்கு நேராக உயர்த்தி, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவர் மேல் ஆணையிட்டான். தானியேலின் 12ம் அதிகார தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த தூதன், தன் வலது பாதத்தை சமுத்திரத்தின் மேலும் (ஆதரவுக்கான அடையாளம்), தன் இடது பாதத்தை பூமியின் மேலும் (ஆதரவு இல்லாமைக்கான அடையாளம்) வைத்தான். இது, "பூமியில் குடியிருக்கிறவர்கள்" எவ்விதம் ( "ஜனங்கள், கோத்திரங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்" என்ற வகுப்பாரிடமிருந்து வித்தியாசப்படுகிறார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது. தேவன் இந்த சமுத்திர வகுப்பாரை ) உபயோகப்படுத்தி, அதிலிருந்து அவருடைய பரிசுத்தவான்களை தேர்ந்தெடுக்கிறார். ஆனால், மரபுகளிலும், தற்போதைய பழக்கங்களிலும் ஊறிப் போய், வேரூன்றி நிலைத்திருக்கும் "பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்று அடையாளப்படுத்தப்படும் வகுப்பாரை தேவன் உபயோகப்படுத்துவதில்லை.

**<u>வெளி</u>** <u>12 : 12.</u> உயர்த்தப்பட்ட மிகாவேலின் (போலிச் சபையின்) பொய்யான வாக்குமூலங்களை இந்த வசனம் தெரிவிக்கிறது.

வானத்திலிருந்து (ரோம புறமத உலகத்திலிருந்து) வலுசர்ப்பத்தை (சிவில் அதிகாரத்தை) கீழே தள்ளிய புதிய மத உலகத்தின் (ரோம போலிச் சபையின்) கட்டுப்பாட்டுக்குள் இப்பொழுது பூமி வகுப்பாரும் (மரபு சார்ந்த சமுதாயமும்), சமுத்திர வகுப்பாரும் (எதிலும் வேரூன்றாத ஜனங்களும்) வந்துள்ளனர். இந்த புதிய மத அமைப்பை தன்வயப்படுத்தாவிட்டால், தன் ஆட்சி காலம் முடிவுக்கு வரும் என்ற அச்சத்தில், சிவில் அதிகாரம் ரோமச் சபையுடன் உறவு கலந்தது. இவ்வாறாக, மதமும் சபையும் இணைந்த நிலையில், உலகத்தினருக்கு "ஐயோ" என்ற ஆபத்து வருகிறது. இந்த உலகத்தார் இரண்டு பிரிவாக இருக்கிறார்கள். (1) மரபு சார்ந்த பழைய வழக்கங்களில் நிலை கொண்டுள்ள சமுதாயம். (2) எதிலும் அக்கறையில்லாததும், மரபுகளில் வேரூன்றாத ஜனக்கூட்டம்.

**வெளி 13 : 1.** "சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்".

இந்த வசனம் "புனித ரோம சாம்ராஜ்யம்" ஆரம்பமாவதை தெரிவிக்கிறது. இது சமுத்திரத்திலிருந்து வெளியே வருகிறது. வெளி 8 : 8ல் உள்ளபடி, ரோம சாம்ராஜ்யம் தன் புறமதத்தை இழந்த சமயத்தில் ஏற்பட்ட அமைதியற்ற காலப்பகுதியில் ரோமச் சபை பிறந்தது. வெளி 8 : 8ன் பெரிய மலை சமுத்திரத்திலே போடப்பட்டது. அதற்கு பதிலாக, 10 கொம்புகளுள்ள மிருகம் சமுத்திரத்திலிருந்து வெளியே வந்தது.

**வெளி 14:7.** "வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுக்களையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்".

தூதனுடைய நித்திய சுவிசேஷம் இதுவே. மதச்சக்திகளையும், சமுதாய அமைப்புகளையும், ஜனங்கள் மற்றும் மத சம்பந்தமான பூலோகத்துக்குரிய காரியங்கள் எதையும் தொழ வேண்டாம். தேவனையே தொழுது கொள்ளுங்கள். சிருஷ்டிகளைத் தொழுவதை கண்டிக்கும் தூதன், சிருஷ்டிகரை தொழுமாறு சொல்கிறான். வானம், பூமி, சமுத்திரம், நீரூற்றுகள் என்பவைகளை அடையாள பாஷையாகவோ அல்லது சொல்லர்த்தமாகவோ எப்படி எடுத்துக் கொண்டாலும், தூதன் அறிவுறுத்தும் பாடம், 'சிருஷ்டிகரை தொழ வேண்டும்' என்பதே.

**வெளி 15 : 2.** "அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும், அதின் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு, அந்த கண்ணாடிக் கடல் அருகே நிற்கிறதைக் கண்டேன்".

இது தேவாலய கடல் தொட்டியைக் (LAVER) குறிக்கவில்லை. அறுவடையின் ஆரம்ப காலப்பகுதியை இந்த வசனம் குறிப்பிடுகிறது. "கடல்" இன்னும் அமைதியாக இருக்கிறது. வர இருக்கும் கொந்தளிப்புகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. ஆனால், இந்த கடலுக்குள் இருக்கும் கூறுகள் வெகு விரைவில் பொங்கி எழுந்து சூறாவளியாகப் போகிறது. இதைத் தான் இயேசு லூக்கா 21 : 25ல் முன்னறிவித்தார். இந்த கடலுக்குள் பல நூற்றாண்டுகளாக மனுஷ சமுதாயத்தை டார்வீனிசம், கம்யூனிசம், இருப்பியல் வாதம், மேல்நிலை வாதம் போன்ற பலதரப்பட்ட "அக்கினிக் கூறுகள்" (தத்துவங்கள்) ஒரு பிடிப்புக்குள் வைத்திருந்த நிலை மாறி, பெரும் சிதைவு அடையப் போகிறது. ஆனால், திருச்சபை அங்கங்கள் தேவனுடைய திட்டங்களின் இசைவினை (சுரமண்டலங்கள்) அறிந்துள்ளதால், ஜனத்திரளுக்கு அடியில் தேங்கியிருக்கும் கூறுகளின் பாதிப்பு இவர்களை அணுகாத நிலையில் நிற்கிறார்கள்.

**வெளி 16 : 3.** "இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான். அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டு போயின.".

"சமுத்திரம்" என்று அடையாளப்படுத்தப்படும் வகுப்பாரை இந்த இரண்டாம் வாதை பாதிக்கிறது. "சமுத்திர" வகுப்பாரிலுள்ள தனி மனுஷர்களின் கிறிஸ்தவ ஊழியம் அழிக்கப்படுவதை இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. ரோம பேரரசன் கான்ஸ்டன்டைனின் மத மாற்றத்தால் (வெளி 8 : 9), ரோம புறமத சமுத்திரத்தில் புறமத ஊழியம் நசுக்கப்பட்டது போல, கம்யூனிச புரட்சி கிழக்கு ஐரோப்பாவை கட்டுப்படுத்தியதால், ஒரு பெரும் சக்தியாக இருந்த கிறிஸ்தவம் இரண்டாம் வாதையில் இழப்பை சந்தித்தது.

**<u>வெளி</u>** <u>18 : 17 - 19.</u> " --- சமுத்திரத்திலே தொழில் செய்கிற யாவரும் தூரத்திலே நின்று, அவள் வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து, ---".

20ம் நூற்றாண்டில் பாபிலோனுக்கும் (ரோமைச் சபைக்கும்) , அவளை ஆதரிப்பவர்களுக்கும் (அரசு அதிகாரங்கள், வர்த்தகர்கள்) இடையிலான ஒற்றுமை படிப்படியாக சிதைய ஆரம்பித்ததை 18ம் அதிகாரம் விவரிக்கிறது. இந்த அமைப்பினால் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்த கப்பலாட்களும் (லாபம் ஈட்டுவோரும்) மாலுமிகளும் யாத்திரை பண்ணுகிறவர்களாகிய இவர்கள் (அமைப்பு இயங்க சேவை செய்வோர் அனைவரும், சமுத்திரமாகிய ஏழை ஜனத்திரளை ஏமாற்றி பிழைப்பு நடத்தியவர்கள் ஆவர். இவர்கள், பழைய அமைப்பு முறைகள் அழிந்து போவதைக் கண்டு அழுது துக்கிக்கிறார்கள்.

**<u>வெளி</u>** <u>18 : 21.</u> "பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்து சமுத்திரத்திலே எறிந்து, ---".

ஏமாற்றப்பட்ட ஜனத்திரள் (சமுத்திரம்) தன்னுடைய பழைய எஜமானரை (பாபிலோனிய அமைப்பை) விழுங்கி விடுகிறது. இது ரோம புற மதத்தை போலிச் சபை விழுங்கியதற்கு ஒத்திருந்தாலும், இந்த அழிவு பெரும் வன்மையுடன் நடக்கிறது.

**<u>வெளி</u>** <u>20:13.</u> "<u>சமுத்திரம்</u> தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன ".

இந்த வசனத்தை மேலோட்டமாகப் பார்த்தால், ஏதோ தவறாக இருப்பது போல தோன்றும் ! "மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன" என்று மட்டும் சொல்லியிருந்தால் போதுமானதாயிராதா ? மரித்தோர் வேறு எங்கு இருப்பார்கள் ? இந்த வசனம், " பூமி மரித்தோரை ஒப்புவிக்கிறது " என்று ஏன் கூறவில்லை ? " சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது " என்று வசனம் ஏன் கூறுகிறது ? சிறிது கூர்ந்து கவனிக்கலாம். வானமும் பூமியும் மரித்தோரை ஒப்புவிக்க இயலாது ! ஏனெனில் அவைகள் <u>ஏற்கனவே அகன்று போய்விட்டன.</u> வெளி 20 : 11. இராஜ்யம் தீவிரமாக இயக்கம் பெறும் காலக்கட்டத்தில் , மத உலகில் (வானம்) அதிகாரத்தில் இருந்தவர்களும், சிவில் அதிகாரங்களில் (பூமி) ஆளுமை செய்தவர்களும் தங்கள் மேன்மையை இழந்து விடுகின்றனர். அனால், "சமுத்திரம்" இன்னும் அப்படியே இருக்கிறது. எந்த கோட்பாடுகளிலும் வேரூன்றாமலும், அக்கறையுமில்லாமலும் இருக்கிற இவர்கள் இன்னும் <u>மரித்தவர்களாகவே</u> இருக்கிறார்கள். புதிய சமுதாயத்தில் வேரூன்றி, நிலையான இடம் தேடி, அதைப் பெறுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஜீவனைப் பெற இவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். <u>இவர்களை</u> <u>மனமாற்றமடையச்</u> <u>செய்து</u>, சமுத்திரம் (ஜனத்திரள்) மரித்தோரை ஒப்புவித்தது. (ஏசாயா 60:5ம் வசனத்தைப் பார்க்கவும்).

இவ்வாறாக, வானம், பூமி, சமுத்திரம் (வெளி 20 : 11, 13). என்ற மூன்று அமைப்புகள் அடையாள பாஷையில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். இதில், "சமுத்திரம்" வகுப்பாரில் ஆரம்பத்திலிருந்தே தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள் உள்ளனர் என்பதை வெளி 4 : 6ன் மூலம் உணருகிறோம். "கண்ணாடிக் கடல்" தேவாலய கடல் தொட்டியைக் குறிக்கவில்லை.

**வெளி 21 : 1.** "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று ".

இந்த சமுத்திர வகுப்பாரை கருவியாக உபயோகித்து, பாபிலோனும் ரோம புற மதமும் விழுங்கப்படுகின்றன, இந்த வகுப்பார் மீது கிறிஸ்து தற்காலிகமாக பரிவு கொள்வதை அடையாளப்பூர்வமாக தமது வலது பாதத்தை சமுத்திரத்தின் மேல் வைப்பதாகக் காட்டுகிறார். ஆனால், இப்பொழுது புதிய பூமியின் அங்கங்களாக இந்த வகுப்பார் மாறப் போகிறார்கள். கிறிஸ்து சமுத்திரத்தை இல்லாமல் செய்துவிடுகிறார். இறுதியாக, எல்லாம் சம நிலை அடைகின்றன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# XV

## கண்ணாடிக் கடல்

"கண்ணாடிக் கடல்" என்ற வார்த்தை வெளிப்படுத்தல் ஆகமத்தில் இரண்டு முறை காணப்படுகிறது. இது "சமுத்திரம்" என்ற வார்த்தைக்கு ஒத்த விதமாக இருப்பதை பார்த்தோம். இது வேறு பொருள் கொள்வதாக அபிப்பிராயப்படுவோரும் உண்டு. அதைப் பற்றி இப்பொழுது பார்ப்போம் :

சாலமோன் தேவாலயத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு பெரும் தொட்டி "கடல் தொட்டி" என்று அழைக்கப்பட்டதை 1 இராஜா 7 : 23; 2 நாளா 4 : 2ம் வசனங்களில் படிக்கிறோம். வெளி 4 : 6ன் தரிசனக் காட்சியில், தேவனைச் சூழ்ந்திருந்த விஷயங்களைப் பற்றி சொல்லப்படுவதால், அமைதியற்ற மனுஷ திரளை இது குறிப்பதாக எடுத்துக் கொள்வதை விட, சாலமோனின் கடல் தொட்டியைக் குறிப்பதாக கொள்வதே சரியாகத் தோன்றுகிறது. இந்த வார்த்தை மறுபடியும் வெளி 15 : 2ல் காணப்படுகிறது.

"கடல் தொட்டி" என்பது, கிறிஸ்தவ அழைப்புக்குட்படும் சமயத்தில், பிரதிஷ்டைக்கு முன் தன்னை <u>சுத்திகரிக்கும்</u> அனுபவத்தை அடையாளங் காட்டுகிறது. தொட்டியிலுள்ள தண்ணீர் "தேவனுடைய வார்த்தை" அதாவது "சத்தியத்தை" அடையாளப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே, வெளி 4ம் அதிகாரத்தில் தேவனுக்கு முன்பாக அவருக்கு ஊழியஞ் செய்யும் பல பிரிவுகளில், பெருமளவு தண்ணீரை உள்ளடக்கிய தொட்டியாகிய "கண்ணாடிக் கடல்" என்று அடையாளப்படுத்தப்படும் "தேவனுடைய வார்த்தை"யும் சேர்க்கப்பட்டுள்ளது.

"கண்ணாடி" என்பது "வெளிப்படையானது" என பொருள்படும் இந்த வெளிப்படைத் தன்மையை (TRANSPARENCY) வெளி 4 : 6ல் "பளிங்குக்கு ஒப்பான" கண்ணாடி" என வர்ணிக்கப்படுகிறது; வெளி 15 : 2ல் 'பளிங்கு' என்ற சொல் இல்லை. வெளி 21 : 18, 21ம் வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, புதிய எருசலேமின் மதில்களும், வீதிகளும் "தெளிந்த பளிங்கு போல" சுத்த பொன்னாயிருந்தது என்று வாசிக்கிறோம்; "தெளிந்த பளிங்கு போல" என்பது "வெளிப்படைத் தன்மை" என்று அர்த்தங்கொண்டால், பொன் வெளிப்படைத் தன்மை கொண்டதல்ல என்று அறிவோம்;

ஆகவே, 'பளிங்கு' என்பதற்கு 'வழவழப்பாக' (SMOOTH) என்று அர்த்தங்கொள்ளலாம்; "பளிங்குக்கு ஒப்பான கண்ணாடி" என்பது 'மாசற்ற தூய்மையான நிலையை' (கண்ணாடிக் கடல்) அடையாளப்படுத்துகிறது என்பதே இதன் மையக்கருத்து ஆகும்; இதை வெளி 21:1ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி, "பளிங்கைப் போல தெளிவாக இருந்தது" என்று படிக்கிறோம்; இந்த ஜீவத்தண்ணீருள்ள <u>**நதியும்**</u>, <u>**கடல் தொட்டியும்**</u> (பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடல்) களங்கமில்லாத தெளிவான தண்ணீரை (சத்தியங்கள்) உள்ளடக்கியதாக஼ உணருகிறோம்.

மேற்குறிப்பிட்ட விளக்கத்துடன், வெளி 15 : 2ம் வசனத்தை ஆராய்வோம் :

1. சுத்தமான கடல் 'அக்கினியுடன்' எவ்வாறு கலக்கிறது ?

1பேதுரு 1:7ல் இதற்கு விளக்கம் உள்ளது. "அதிக விலையேறப்பெற்ற விசுவாசம் அக்கினியினாலே (சோதனைகளினாலே) .சோதிக்கப்படுகிறது ;

2. வாதைகளை அறிமுகம் செய்வதற்கு முன்பு, கண்ணாடிக் கடல் பற்றி ஏன் சொல்லப்படுகிறது ?

விசுவாச சோதனைகளின் மிகவும் கஷ்டமான காலப்பகுதியாக வாதைகளின் காலம் இருப்பதாக இருக்கலாம்;

3. பரிசுத்தவான்கள் கடலின் மேல் ஏன் நிற்கிறார்கள் ?

சத்தியங்களைத் தீர்ப்புகளாக பாபிலோன் மீது செலுத்தும் அதிகாரத்தை மகிமையடைந்த பரிசுத்தவான்கள் பெறுகிறார்கள்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# மரங்கள் (விருட்சங்கள்)

வெளிப்படுத்தல் ஆகமத்தில் உள்ள அடையாளங்களில் ஒன்று "மரங்கள்" ஆகும். இதன் பொருள் விளக்கத்தை சரிவர புரிந்து கொள்ள, பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு புஸ்தகங்களில் எவ்விதம் "மரங்கள்" பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி மாதிரி வசனங்கள் சிலவற்றை பின்வருமாறு பார்க்கலாம் :

**ஏசாயா 61 : 3.** இவ்வசனத்தில் பரிசுத்தவான்கள் தேவன் தம்முடைய மகிமைக்காக நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.

**சங் 1 : 1 - 3.** தேவனுடைய மனுஷன் தன் காலத்தில் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்.

**சங் 37 : 35, 36.** துன்மார்க்கன் பச்சை மரத்தைப் போல தழைத்தவனாயிருந்தாலும் ஒழிந்து போகிறான். பார்வைக்கு செம்மையாகத் தோற்றமளித்தாலும், நடிப்பு வெளிப்படும்.

**சங் 92 : 12.** நீதிமான் பனையைப் போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான் ". இந்த வசனம் மரங்களின் உறுதித்தன்மையும், அதனால் அவைகள் செழிப்பாக வளருவதையும் காட்டுகிறது. நீதிமானுடைய இயல்பும் இதுவே.

**நீதி 3 : 18.** "ஞானம்" என்பது ஜீவ விருட்சத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

நீதி 8 : 22 - 31ல் ஞானத்தை இயேசுவுக்கு உருவகப்படுத்தி சாலமோன் கூறுகிறார். 1கொரி 1 : 30ல் இயேசு ஞானமாக உருவகப்படுத்தப்படுகிறார். ஆகவே, "ஞானம்" என்ற இயேசுவை "ஜீவ விருட்சம்" என்று குறிக்கலாம்.

எசேக் 17 : 22 - 24. "உயர்ந்த விருட்சத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த விருட்சத்தை உயர்த்தினேன்". இந்த உவமை, "மரங்கள்" எவற்றை அடையாளப் படுத்துகின்றன என்று சொல்லாவிட்டாலும், அதே மாதிரியான சொல்லமைப்பு எசேக் 21: 26ல் "தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனை தாழ்த்துவேன்" என்று சொல்லப்படுகிறது. உயர்ந்த ஸ்தானத்திலிருந்த சாலமோன் குடும்பம் சிங்காசனத்திற்குரிய உரிமை இழந்து, நாத்தான் குடும்பம் வழியாக வந்த இயேசு உரிமையை சுதந்தரித்துக் கொள்கிறார். இவ்வாறாக, இங்கு "முக்கிய நபர்கள்" "குடும்பங்கள்" "இராஜாக்கள்" போன்றவற்றை "மரங்கள்" குறிக்கிறதாக இருக்கிறது.

**தானி 4 : 20 - 22.** இங்கு "விருட்சம்" ராஜாவை அடையாளப்படுத்துகிறது. இது வளர்ந்து, பலத்து, தேசத்தின் எல்லைபரியந்தம் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டியது" என்று வாசிக்கிறோம். இதில், "விருட்சம்" என்பது எல்லோரும் காணக்கூடிய நிலையையும், செல்வாக்கையும் உணர்த்துவதாக இருக்கிறது. இது ராஜாவின் கீர்த்தியையும், செல்வாக்கையும் அடையாளப்படுத்துகிறது.

**மத் 3 : 10.** பரிசேயர்களையும், சதுசேயர்களையும் கனி கொடாத மரங்கள் என்றும், வேரோடே வெட்டப்படும் என்று யோவான் ஸ்நானகன் கூறுகிறார். (லூக் 3 : 9).

**மத் 7:17-19.** யோவான் ஸ்நானகன் அடையாளப்படுத்திய மரங்களை இயேசு கள்ளத்தீர்க்கதரிசிகளாக உருவகப்படுத்துகிறார்.

**மத் 12 : 33.** நல்ல கனி கொடாத மரங்களுக்கு பரிசேயர்களை இயேசு அடையாளப்படுத்துகிறார்.

**மத் 13 : 32.** கடுகு சகல விதைகளிலும் சிறிதாயிருந்தாலும், வளரும் போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்து பறவைகள் அதின் கிளைகளீல் வந்து அடையத்தக்க மரமாகும் என இயேசு கூறிய உவமையில், சுவிசேஷ யுக வரலாற்றை இங்கு ஒப்பிடுகிறார். விசுவாச வித்துக்கள் விதைக்கப்பட்டு, அது மிகப் பெரிய அமைப்பாக (பாபிலோன்) வளர்ந்து, அழைக்கப்படாத விருந்தாளிகளின் வீடாகி, அவர்களைப் போஷிப்பிக்கிறது. மத் 13 : 22ன் உவமையும், அதைப் போன்று லூக் 17 : 6ன் உவமையும், வெளி 18ம் அதிகாரத்தின் அசுத்தமும் அருவருப்புமுள்ள பறவைகள் தங்கும் இடத்தைக் குறிக்கின்றன. வெளி 18 : 2ல் அசுத்த பறவைகள் தங்கும் இடமாக பாபிலோன் மாறிவிட்டது. லூக்கா 17 : 6ல் குறிப்பிட்ட மரம் போல, வெளி 18 : 21ல் பாபிலோன் (எந்திரக்கல் போல) சமுத்திரத்திலே எறியப்படுகிறது. ஆகவே, மத்தேயு, லூக்கா உவமைகளில் "மரம்" என்பது "அமைப்பு" என்று அடையாளப்படுத்தப்படுகிறது.

**மத் 21 : 18 - 21.** ஒரு மரத்தை சபிக்கக்கூடிய தன்மை படைத்தவர் இயேசு அல்ல ! எரேமியா 24ம் அதிகாரத்தில் அத்திப்பழங்கள் இஸ்ரவேலுக்கு அடையாளப்படுத்தப்படுகிறது. விரும்பிய கனிகளைத் தராத இஸ்ரவேலர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களிலிருந்து முதலாம் வருகையில் புறம்பாக்கப்பட்டனர்.

**மத் 24 : 32 - 34.** எரேமியா தீர்க்கதரிசனத்தின் உதவியால், இந்த உவமையின் பொருள் விளக்கம் எளிதில் காண முடிகிறது. இரண்டாம் வருகையின் காலத்தில், அத்திமரமாகிய இஸ்ரவேல் துளிர்விட்ட பொழுது (உயிர் பெற்றது 1948), வசந்த காலம் (இராஜ்யம்) சமீபமாயிருக்கிறது என்று அறிகிறோம். இதற்கு இணையான லூக் 21 : 29 - 32ல் "மற்ற மரங்கள்" என்று கூடுதலாக சொல்லப்படுகிறது. இது எதை குறிக்கிறது ? இஸ்ரவேல் புதிய நாடாக பிறந்தவுடன் (இரண்டாம் உலகப் போருக்குப் பின்), மற்ற புதிய நாடுகளும் பெருமளவில் உதயமாகத் தொடங்கின. இது வரலாற்று உண்மை. இவ்விதமாக, "மரங்கள்" என்பது, புதிய அல்லது சிறிய நாடுகளைக் குறிக்கிறது.

**மாற்கு 8 : 24.** அப்பங்களும் மீன்களும் பற்றிய அற்புதம் முடியும் சமயத்தில் (மாற்கு 8 : 21), இயேசு, "அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி ?" என்று கேட்டார். இந்த கேள்வியை, குருடனை சொஸ்தமாக்கிய அற்புதத்தோடு இணைத்துப் பார்க்கலாம். மீதியான துணிக்கைகளைக் கொண்ட ஏழு கூடைகள், சபைக்கு ஏழு தூதர்களால் கொடுக்கப்பட்ட முழுமையான தூதை அடையாளப்படுத்துகிறது. இவ்விதமாக, சுவிசேஷ யுக முடிவில் சீஷர்கள் இதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த புரிந்து கொள்ளுதலுக்கான விடையை (திரும்ப பெறுதலுக்கான சத்தியம்), குருடனை சொஸ்தமாக்கிய அற்புதம் வாயிலாக அறியலாம். குருடனை கிராமத்துக்கு வெளியே (பாபிலோனுக்கு வெளியே) அழைத்துக் கொண்டு வரப்படுகிறான். இயேசுவின் வாயிலிருந்து வந்த சத்தியத்தினால் (எச்சில் – தண்ணீர்) குருடன் அபிஷேகம் பண்ணப்படுகிறான். மனுஷர்களைப் பார்ப்பதிலிருந்து அவனது "பார்வை" (புரிந்து கொள்ளுதல்) ஆரம்பமாகிறது. நடக்கிற மனுஷரைப் பார்க்கும் பொழுது, மரங்கள் போல அவனுக்குத் தெரிகிறது. மரங்கள் நடப்பதில்லை. ஆனால், இங்கு மனுஷர்கள் போன்று உருவகப்படுத்தப்பட்ட மரங்கள் நடக்கின்றன. மரங்கள் விழுகின்றன. என்று பிரசங்கி 11 : 3ல் படிக்கிறோம். ஆனால், இங்கு மரங்கள் நிமிர்ந்த நிலையில் உள்ளன. இது, விழுந்து போன மனுக்குலத்தின் விழிப்புணர்வும், திரும்ப பெறுதலின் அடையாளமாகவும் உள்ளது. குருடன் சொஸ்தமான அற்புதத்தில், எல்லா சத்தியங்களும் தெளிவுற புரிந்து கொள்ளும்போது, குருட்டு நிலையிலிருந்த ஜனங்கள் எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளுகின்றனர்.

**லூக் 6 : 43 - 45.** இங்கு ஜனங்கள் மரங்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.
**லூக் 13 : 6, 7.** இங்கு அத்திமரம் இஸ்ரவேலைக் குறிக்கிறது.

ரோமர் 11ம் அதிகாரம்: இங்கு ஒலிவ மரம் ஆபிரகாமை அல்லது ஆபிரகாமின் உடன்படிக்கையைக் குறிக்கிறது. இதனுடைய சுபாவக் கிளைகள் யூதர்களையும், ஒட்டப்பட்டவைகள் புறஜாதிகளையும் குறிக்கின்றன.

**யூதா 12.** "இலையுதிர்ந்து கையற்று இரண்டு தரஞ் செத்து வேரற்றுப் போன மரங்களும் ---". இங்கு போலிக் கிறிஸ்தவர்கள் அல்லது அவிசுவாசக் கிறிஸ்தவர்கள் மரங்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். இலையுதிர் காலத்தில் (கனி தரும் பருவத்தில்) கனி தராதவர்கள் வேரோடே பிடுங்கப்படுவார்கள். – இரண்டு முறை சாகிறவர்கள் - இரண்டாம் மரணம்.

மேற்குறிப்பிட்ட வசனங்களிலிருந்து, "மரங்கள்" என்பது "அமைப்புகள்" அல்லது "நாடுகளில் பிரபலமாயிருக்கும் மனிதர்களைக்" குறிக்கிறது. இவர்கள் மற்ற பாமரர்களை விட (புல் - ஏசாயா 40 : 6). செல்வாக்கு அல்லது குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றவர்களாக தனித்துக் காணப்படுபவர்கள் ஆவர்.

**மரங்களின் தன்மைகள்:**

தண்ணீர் தேவைப்படுகிறது : "மரங்கள்" என்று உருவகப்படுத்தப்படும் "மனுஷர்கள்" ஜீவன் பெற சத்தியம் (தண்ணீர்) தேவைப்படுகிறது.

கனி கொடுக்கிறது : கனி கொடுக்காத மரம் (மற்றவர்களுக்கு உபயோகமாயிராதவன்) ஒன்றுக்கும் தகுதி இல்லை என்று இயேசுவின் உவமைகளில் தெரிகிறது.

நிழல் கொடுக்கிறது : மத் 13 : 31 - 32ன் உவமை மூலம், வளர்ந்த மரங்களிடத்தில் இளைப்பாற, மற்றவைகள் ஈர்க்கப்படுகின்றன.

வேரூன்றுகின்ற சுபாவம் : காற்றில் அலைபடுகிற உபதேசங்களால் இழுப்புண்டு போகாமல், கிறிஸ்தவன் சத்தியத்தில் நிலை நிற்க வேண்டும் எல்லா மரங்களும் (மன முதிர்ச்சி பெற்றவர்கள்) நிலையானத் தன்மை கொண்டவையாகும். மரங்கள் எவ்வளவு நாட்கள் வாழும் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. நோய்கள் தொற்றுவதாலோ, தண்ணீர் இல்லாமல் போவதாலோ, வெட்டப்பட்டாலோ அல்லது வேரோடே பிடுங்கப்பட்டாலோ மரம் செத்துவிடும் என்று சொல்லலாம். ஆகவே, ஏசாயா 65 : 22ல் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தம் குறிப்பிடும் விதத்தில் உள்ளது. "விருட்சத்தின் நாட்களைப் போல் என் ஜனங்களின் நாட்கள் இருக்கும்".

## வெளிப்படுத்தல் ஆகமத்தில் மரங்கள்

"மரங்கள்" என்ற சொல்லுக்கு வெளிப்படுத்தல் ஆகமத்தில் நான்கு கிரேக்க வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில், ஒலிவ மரம், அத்தி மரம் என்ற இரண்டு மரங்களுக்கு மட்டும் குறிப்பிட்டு சொல்லும்படியான கிரேக்க வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

தனிப்பட்ட மனுஷர்கள், அமைப்புகள், அல்லது சிறிய நாடுகளைக் குறிக்கும் விதமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள "மரங்கள்" :

**வெளி 6 : 13.** "அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும் போது, அதின் காய்கள் உதிருகிறது போல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது". இது ஆறாம் முத்திரை உடைக்கப்படும் பிலதெல்பியா சபையின் காலப்பகுதியின் மத்தியில் நடைபெறுகிறது.

பூமியதிர்ச்சியாகிய பிரெஞ்சு புரட்சியைப் பற்றி 12ம் வசனம் குறிப்பிடுகிறது. "அத்தி மரம்" இஸ்ரவேலைக் குறிக்கிறது. யூதர்களுக்கு சொந்த நாடாக புனித பூமியை நிர்மாணிக்க நெப்போலியன் விரும்பினான். ஆனால், நெல்சனால் நெப்போலியனின் திட்டங்கள் நிறைவேறாமல் போய்விட்டன. கி.பி. 1878ல் இஸ்ரவேலரை திரும்பச் சேர்க்கும் முயற்சிக்கான தீர்க்கதரிசனம், தேவத்திட்டத்தின்படி நிறைவேற இன்னும் கால அவகாசம் இருந்தபடியினால், கி.பி. 1799ல் அத்திப்பழங்கள் (இஸ்ரவேலர்கள்) இன்னும் முதிர்ச்சி அடையாத நிலையில், புனித பூமிக்கான நெப்போலியனின் திட்டங்கள் யுத்தம் என்னும் பெருங்காற்றினால் அசைக்கப்பட்டன.

**<u>வெளி 7 : 1 - 3.</u>** யுத்தம் என்னும் பெருங்காற்று மகா உபத்திரவ நாளுக்கு தீவிரித்திருக்க முடிந்திருக்கும்; ஆனால், இதுவும் தேவத் திட்டத்தில் இன்னும் முதிர்வு பெறாத காலக்கட்டமாகும். இப்படியாக, பூமியின் நான்கு திசைகளின் காற்றுகள் வீசி, இறுதி சூறாவளியை உண்டு பண்ணுவதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் தான், சமுதாயமும் (பூமியும்), வேரூன்றி யில்லாத ஜனக்கூட்டமும் (சமுத்திரமும்), பிரபலமான தலைவர்களும் (மரங்களும்) இன்னும் அழிக்கப்படாமல் இருக்கிறார்கள். இந்த குழப்பம் வருமுன், 1,44,000 பேர்களின் தொகை முழுமையாயிருத்தல் அவசியமாகிறது.

**<u>வெளி 8 : 7.</u>** "மரங்களில் மூன்றிலொரு பங்கு வெந்து போயிற்று ". மூன்றிலொரு பங்கு" எதைக் குறிக்கிறது ? இது முதலாம் சபையின் காலப்பகுதியைச் சார்ந்த விஷயமாகும்; (கி.பி. 33 - 100). யூத நாட்டின் மீது வந்த உபத்திரவத்தையே இந்த அழிவு அடையாளப்படுத்துகிறது. "மரங்கள்" என்பது ஜனங்களில் முக்கியமான தலைவர்களைக் குறிக்கிறது என்பது தெளிவு. இக்காலக்கட்டத்திலிருந்த மூன்று பிரிவினராகிய யூதர், ரோமர், கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியான யூதர்களின் முக்கியமான தலைமை பொறுப்பிலிருந்த தலைவர்கள் அழிந்ததைக் குறிப்பிடலாம்.

**<u>வெளி 9 : 4.</u>** "பூமியின் புல்லையும், பசுமையான எந்த பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல் ----":
இது விக்ளிஃப் வாழ்ந்த ஐந்தாம் எக்காளம் ஊதப்பட்ட காலப்பகுதியைச் சார்ந்த தூது ஆகும். விக்ளிஃப், ஹஸ் போன்றவர்களின் வாயிலாக பெருகி வந்த சத்தியங்களின் கொடுக்குகள் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்ததும் அக்காலத்திய சபையில் பெரும் எரிச்சலைத் தூண்டுவதாக அமைந்தது. பெருகி வந்த சத்திய வெளிச்சம் (மறுமலர்ச்சியின் விடியற்காலத்து நட்சத்திரம்---விக்ளிஃப்) மக்களையோ (புல்) அல்லது மரங்களையோ (மெய்சபையினரையோ) சேதப்படுத்தாமல், போலிக் கிறிஸ்தவர்களை மட்டும் ((முத்திரையை தரித்திராதவர்களை) பாதித்தது.

**<u>வெளி 11 : 4.</u>** "பூலோகத்தில் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவ மரங்களும், இரண்டு விளக்குத் தண்டுகளும் இவர்களே ".

இவ்வசனம் மரங்களை தனிப்பட்ட மனுஷர்களாகவோ, அமைப்புகளாகவோ அல்லது சிறிய நாடுகளாகவோ குறிக்கிறதில்லை. இங்கு மரங்களும் குத்து விளக்குகளும் <u>சாட்சிகளாக</u> உருவகப்படுத்தப்படுகின்றன. "ஒலிவ மரம்" என்பது பரிசுத்த ஆவியின் விசேஷித்த செயல்பாட்டைக் குறிக்கிறது. இங்கு இரண்டு சாட்சிகளாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு சத்தியங்கள், போப்புவின் ஆளுகையில் 1260 வருடங்கள் இரட்டு வஸ்திரங்கள் (துக்கம் அனுசரித்தல்) உடுத்தியிருந்தனர்.

கீழ்கண்ட வசனங்களில் இரண்டு கிரேக்க வார்த்தைகள் மரத்தின் தன்மையை விவரிக்கும் விதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

**<u>மரத்தின் திசுக்கள்: (WOOD)</u>** வெளி 9 : 20; வெளி 18 : 12; இந்த இரண்டு வசனங்களிலும் "மரம்" என்பது அடையாள பாஷையில் உபயோகப்படுத்தப் படவில்லை.

**ஜீவ விருட்சம்** : வெளி 2 : 7; வெளி 22 : 2, 14.

வெளி 2 : 7ல் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்யப்படுகிறது. அதாவது, இவர்களுக்கு ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்விதமாக, அதை அணுக எந்த தடையுமிராது. "புசித்தல்" என்பது, கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கு கொள்வதை அடையாளப்படுத்தும் விதமாக, ஜீவ விருட்சத்தின் பகுதியாகவே இவர்கள் மாறுகிறார்கள்.

வெளி 22 : 2ல் "விருட்சங்கள்" மகிமை அடைந்த சபையாகச் சொல்லப்படுகிறது.

வெளி 22 : 14ல் மகிமை அடைந்த சபை உலகத்தாருக்கு கனிகளைத் தருவதாகச் சொல்லப்படுகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# வெளிப்படுத்தல் ஆகமத்தில் "யூதர்கள்"

வெளிப்படுத்தல் ஆகமம் அடையாள பாஷைகள் அடங்கிய புத்தகம் ஆகும்; இப்புத்தகத்தில் "யூதர்கள்" என்று குறிக்கப்படுபவர்கள் யூதர்கள் அல்லர். இவர்கள் "கிறிஸ்தவர்கள்" ஆவார்கள் "யூதர்கள்" என்று காணப்படும் வசனங்களைப் பற்றி கீழ் கண்டவாறு விளக்கமாகப் பார்க்கலாம் :

**வெளி 2 : 9.** இந்த வசனம் சிமிர்னா சபைக்குச் சொல்லப்படும் தூதின் ஒரு பகுதி ஆகும். இந்தக் காலக்கட்டத்தில், புதிதாக வளர்ந்து வரும் கிறிஸ்தவ சபைக்கு யூதர்கள் ஒரு மிரட்டலாக இருந்த நிலை மறைந்து விட்டது. ஆனால், சபைக்கு உண்மையில் மிரட்டலாக இருந்த விஷயம், பவுல் அப்போஸ்தலனால் எச்சரிக்கப்பட்ட "அந்திக்கிறிஸ்து" என்ற அம்சம் ஆகும். அவருடைய காலத்திலேயே இந்த அம்சம் வழக்கத்தில் இருந்து வந்ததை அவரே குறிப்பிடுகிறார். சிமிர்னா சபை "அந்திக்கிறிஸ்து" என்ற கூறுவின் மிரட்டலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது. "போலிக் கிறிஸ்தவர்கள்" தங்களை "கிறிஸ்தவர்கள்" என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் அப்படி அல்ல! சாத்தானுடைய கூட்டமாயிருக்கும் இவர்கள் பொய்யான தொழுகை செய்யும் ஸ்தலத்தின் பங்காகவும், புதிதாக உருவாகும் பாபிலோனிய மார்க்கத்தின் பங்காகவும் இருந்தார்கள்.

**வெளி 2 : 14, 15.** இந்த வசனம் மூன்றாம் காலப்பகுதியைச் சேர்ந்த சபையின் தூதை தெரிவிக்கிறது. இந்த காலக்கட்டம் கி.பி. 313 ஐ தாண்டி உள்ளது. இப்பொழுது சாத்தானுடைய கூட்டத்தாருக்கு சிங்காசனம் உள்ளது. (13ம் வசனம்).

வெளி 2 : 14ல் "இஸ்ரவேலின் புத்திரர்கள்" என்று குறிப்பிட்டுள்ளதை நாம் பார்க்கிறோம். இங்கு குறிக்கப்படுவது சொல்லர்த்தமான விஷயமாகும். ஏனெனில், இந்த வசனத்தில், வரலாற்றில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றியே குறிப்பிடப்படுகிறது. (இஸ்ரவேல் புத்திரருக்கு பீலேயாம் செய்த இடர்ப்பாடு). இது ஒரு அடையாள பாஷை அல்ல. ஆனால், இதற்கு அடுத்த வசனத்தில், பீலேயாம் வேறோரு புதிய ரூபத்தில் "நிக்கொலாயர்கள்" என்று உருவகப்படுத்தப்படுகிறான். இதிலிருந்து நாம் என்ன உணருகிறோம்? புதிதாக ஏமாற்றுபவன் கையில் தடுமாறக்கூடியவர்களாக இந்த புதிய "இஸ்ரவேல் புத்திரர்கள்" பெர்கமு சபையில் உள்ளார்கள் என்பது தெரிகிறது.

**வெளி 3 : 9.** இந்த வசனம் சபையின் ஆறாம் காலப்பகுதியைச் சார்ந்தது. இந்த காலக்கட்டத்தில் தான், மறுமலர்ச்சியின் விளைவாக போலிச்சபையின் பிடியிலிருந்து சகோதரர்களை விடுவித்தது. இந்த காலத்தில் தான், வனாந்தரத்தில் 1260 வருடங்கள் இருந்த பரிசுத்தவான்களை மேலும் தன் கட்டுப்பாட்டுக்குள் தக்க வைக்க சாத்தானுடைய கூட்டத்தால் இயலவில்லை.

ரோமைச் சபை இன்னும் தன்னை "யூதர்கள்" (கிறிஸ்தவர்கள்) என்று உரிமை கொண்டாடுகிறது. அவர்கள் அப்படியல்ல என்று தீர்க்கதரிசனம் தெளிவாக உரைக்கிறது. ஆனால், ரோமைச் சபையினர் பொய் சொல்கின்றனர். துன்புறுத்தும் வல்லமையில் பெரும்பகுதியை இழந்த நிலையில், போலிச் சபை மற்ற கிறிஸ்தவர்களை அங்கீகரிக்கும் விதமாக தங்களைத் தாழ்த்துகின்றனர்.

**வெளி 6:13.** இங்கு **உண்மையான** இஸ்ரவேலர்கள் அத்திக் காய்களாக உருவகப்படுத்தப்பட்டுள்ளார்கள். இன்னும் முதிர்ச்சி பெறாத (பழுக்காத) நிலையில் இருக்கிறார்கள். பிரெஞ்சு ஜனநாயக ஆட்சிக் காலத்தில், இஸ்ரவேலர்களுக்கு தாய் நாட்டை உருவாக்கும் முயற்சியில் நெப்போலியன் ஈடுபட்ட போது, தேவன் அதை விரும்பவில்லை. நெப்போலியன் தன் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தடையாக, இங்கிலாந்துடன் அவன் யுத்தம் (காற்று) மேற்கொள்ள வேண்டியிருந்தது.

**<u>வெளி 7 : 4.</u>** <u>தேவனுடைய ஊழியக்காரர்களைப்</u> பற்றி 3ம் வசனம் தெரிவிக்கிறது. வெளி 1 : 1ல் குறிப்பிட்டுள்ளபடி, வெளிப்படுத்தல் ஆகமம் இவர்களுக்காகவே எழுதப்பட்டது. இந்த தீர்க்கதரிசனத்தில் நெற்றியில் முத்திரைப் போடப்படுகிறவர்கள் இவர்களே ! "இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலுமிருந்து" இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று தீர்க்கதரிசனம் தெரிவிக்கிறது. இந்த அடையாள பாஷை ஒரே மாதிரி இருக்கிறது. யூதர்கள் = கிறிஸ்தவர்கள்.

**<u>வெளி 21:13.</u>** இங்கே மறுபடியும் பரிசுத்தவான்கள் 12 கோத்திரங்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். புதிய எருசலேமின் 12 வாசல்களின் மேல் அடையாளப்பூர்வமாக கோத்திரங்களின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. (மற்றுமொரு விளக்கத்திற்கு வெளி 21 : 12ன் குறிப்புரையைப் பார்க்கவும்).

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# நிக்கொலாய மதஸ்தர் (வெளி 2 : 6, 15)

"பீலேயாம்" என்ற எபிரேய வார்த்தைக்கு உரிய அதே அர்த்தம் தான், "நிக்கொலஸ்" என்ற கிரேக்க வார்த்தைக்கும் உள்ளது. "நிக்கொலஸ்" என்றால் "எஜமானன்" என்று பொருள்படும். "கடவுளுடைய சுதந்திரத்தின் மீது ஆளுகை செலுத்த விரும்புகிறவர்கள்" என்று நிக்கொலாயர்களைச் சொல்லலாம். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தான், பேதுரு அப்போஸ்தலன் "பீலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்" என்று குறிப்பிடுகிறார். 2 பேதுரு 2 : 15).

இரேனியஸ் என்ற வேதாகம வரலாற்று ஆசிரியர் நிக்கொலாயர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, எருசலேமில் ஆதிச்சபையில் (அப்போஸ் 6 : 5). இருந்த சபை உதவியாளர் ஏழு பேர்களில் "நிக்கொலஸ்" என்பவர் ஒருவர் என்றும், நிக்கொலாய மதப் பிரிவினரை ஸ்தாபித்தவர் இவர் என்றும் சொல்கிறார்.

கடவுளுடைய சுதந்திரத்தின் மீது ஆளுகை செய்ய விருப்பம் கொள்ளும் மனப்பாங்கை தேவன் வெறுக்கிறார். இந்த நிக்கொலாயர்கள் சபைக்குத் தலைவர்களாயிருந்து, சபையினரை ஆளுகை செய்வதைக் கொள்கையாக கொண்டிருந்தவர்கள் என தோன்றுகிறது. இராஜ்யத்தில் யார் பெரியவன் என்பது ஆதிச்சபையில் இருந்த சர்ச்சைகளில் ஒன்றாகும்; (வெளி 2 : 6). சபைகளின் பிரபலமான மூப்பர்களில் யார் பெரியவர் என்ற பகைமை உணர்வு வியாபித்திருந்தது. இவ்வுலகப் பிரகாரமான தலைமைப் பதவிக்கும் கனத்துக்கும் ஆசைப்பட்டு, மேலாண்மை நிலையை அடைய கசப்பான பகைமை போராட்டம் நிகழ்ந்தது. எருசலேம், அந்தியோகியா, பைசன்டியம் (பிற்காலத்தில் கான்ஸ்டன்டிநோபிள்), ரோமாபுரி போன்ற சபைகளின் முற்பிதாக்கள் ஆதிச்சபைகளில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாயிருந்தனர். எருசலேம், மற்றும் அந்தியோகியா சபைகள் நாளடைவில் இந்த போட்டியிலிருந்து பின்வாங்கின. ஆனால், ரோமைச் சபைக்கும், கான்ஸ்டான்டி நோபிள் சபைக்கும் இடையே இந்த போட்டி மனப்பான்மை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்தது. இதன் விளைவாக கிறிஸ்தவ அமைப்பு இரண்டாக பிரிந்தது. கிழக்கத்திய சபை (கிரேக்க சபை), பைசன்டியம் சபையின் முற்பிதாவை சபைக்குத் தலைவராக நியமித்தது. மேற்கத்திய சபை (போப்பு சபை), ரோமை பிஷப்பை தலைமையாளராக (போப்பு = அப்பா) நியமித்தது. நமது இரட்சகரின் கட்டளைக்கு விரோதமாக (மத் 23 : 7) செயல்படுகிறவர்களை எதிர்ப்பவர்கள் துன்புறுத்தலுக்கும், மரணத்திற்கும் உட்படுத்தப்பட்டனர்.

பூமிக்குரிய மேன்மைக்கு விருப்பமாயிராமல் இருந்த சபை பரிசுத்தவான்களே "அந்திப்பா" வகுப்பினர்; சபையில் ஆதிக்கம் செலுத்தும் மனப்போக்கு வளர்ச்சியடைந்து வருவதை எபேசு சபைக்கு அளிக்கப்பட்ட தூதின் மூலம் தெரிய வருகிறது. அந்தக் காலக்கட்டத்திலிருந்தே சபைக்கு இது ஒரு பெரும் சுமையாகவே இருந்து வந்துள்ளது. ரோமைச் சபையில், பாமர மக்கள் எல்லோரும் மதப்பிரகாரமாகவும், உலகப்பிரகாரமாகவும் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் போப்புவின் கீழ் செயல்படும் பிரஜைகளாகவே கருதப்படுகின்றனர். இத்தகைய விபரீத நடைமுறைகள், "ஒரே கர்த்தர்; ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே பிதா, எல்லோரும் சகோதரர்கள்" என்ற கிறிஸ்துவின் வெளிப்படையான கட்டளைக்கு விரோதமாக உள்ளன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# அந்திப்பா (வெளி 2 : 13)

'அந்திப்பா" என்பதற்கு "போப்புவுக்கு எதிரானவர்" என்று அர்த்தமாகும். **(ANTI = AGAINST; PAPAS = FATHER OR POPE ).**

"அந்திப்பா" என்பவர் இயேசுவின் சீஷர்களில் ஒருவர் என்றும், அவர் பெர்கமு சபையின் பிஷப்பாக (கி.பி. 100) இருந்து, இரத்த சாட்சியாக மரித்தார் என்று சொல்லப்படுகிறது. (வெளி 2 : 13). ரோமப் பேரரசன் டொமிஷியன் காலத்தில், வெண்கல காளையில் கட்டப்பட்டு, அந்திப்பா எரிக்கப்பட்டார் என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது. கிரேக்க மருத்துவத்திற்கு தெய்வமாக விளங்கிய அஸ்கலாபியஸ் (ACSCULAPIUS) பெயரில் பெர்கமு பட்டணத்தில் பிரபலமான கோயில் இருந்தது என்றும், அந்த தெய்வத்தின் ஆசாரியர்களுடன் ஏற்பட்ட கிளர்ச்சியின் விளைவாக, பெர்கமு சபையின் பிஷப் அந்திப்பா கொல்லப்பட்டார் என்று வரலாறு மூலம் அறிகிறோம்.

"பூமியில் ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்" என்ற இயேசுவின் நேரடி கட்டளைக்குக் கீழ்படியாதவர்களை எதிர்த்து பகிரங்கமாக கண்டனம் செய்கிறவர்கள் "அந்திப்பா" என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது, "அப்பாவுக்கு எதிரானவர்கள்" "போப்புவுக்கு விரோதமானவர்கள்" என்று அர்த்தமாகிறது.

கிறிஸ்துவுக்கு எதிரானவர்களை "அந்திக்கிறிஸ்து" என்று அழைப்பது போல், போப்புவுக்கு எதிரானவர்கள் "அந்திப்பா" என்று அழைக்கப்படுகிறார்கள். சபைக்குள் சீர்கேடு நுழைவதை எதிர்த்து போராடும் இயல்பினை "அந்திப்பா" என்ற பெயர் உணர்த்துகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# மிருகங்கள், தலைகள், கொம்புகள்

தானியேல் 7ம் அதிகாரத்திலும், வெளிப்படுத்தல் ஆகமம் 12, 13, 17 அதிகாரங்களிலும் பலவித மிருகங்களைப் பற்றி படிக்கிறோம்.

| | | |
|---|---|---|
| தானியேல் | 7 : 7. | கெடியும் பயங்கரமுமான மிருகம்; |
| வெளி | 12 : 3. | சிவப்பான பெரிய வலுசர்ப்பம்; |
| வெளி | 13 : 2 | சிறுத்தை |
| வெளி | 17 : 3. | சிவப்பு நிறமுள்ள மிருகம். |

இந்த மிருகங்களும் அதன் பாகங்களும் எவற்றை அடையாளப் படுத்துகின்றன என்று வேத மாணவர்கள் வரலாற்று நிகழ்வுகளுடன் ஒத்துப் பார்த்து கண்டுபிடிக்க முயற்சித்துள்ளனர். பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் சில விவரங்களைப் பார்ப்போம் :

இந்த மிருகங்கள் அனைத்தும் ரோம சாம்ராஜ்யத்துடன் சம்பந்தப்பட்டு வெளி வந்த வடிவங்களைக் குறிப்பதாக உள்ளன. அதாவது, ரோம புறமதம், சிவில் அதிகாரம், மத அதிகாரம், சபை-ராஜ்ஜீய உறவு போன்ற பல வடிவங்கள் வெளிப்படுத்தல் ஆகமத்தில் அடையாள பாஷையில் பல்வேறு மிருகங்களாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன. சபையினுடைய வரலாற்றின் மையமாக ரோம சாம்ராஜ்யமும், அதனுடைய அரசியல் மற்றும் மத வம்சாவளிகளுமே இருந்துள்ளன. வெளிப்படுத்தல் ஆகமத்தை நாம் புரிந்து கொள்ள இவைகள் நமக்கு துல்லியமாகவும் சரியானதாகவும் இருக்கின்றன.

ரோமாபுரி நகரம் ஏழு மலைகளின் மேல் அமைந்துள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். வெளிப்படுத்தல் ஆகம ஆசிரியர் தம்முடைய செய்தியில் நாம் புரிந்து கொள்ளுவதற்கு ஏதுவாக ரோமாபுரியைக் குறிப்பிடுகிறார். வெளி 17 : 9ல் "அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்" என்று வாசிக்கிறோம். (வெளி 17 : 9ஐ வெளி 2 : 13ம் வசனத்துடன் ஒத்துப் பார்க்கவும்). ஆனால், தானியேல் 7ம் அதிகாரத்தில் "ஏழு" என்ற அடையாள பாஷை உபயோகப்படுத்தப்படவில்லை. தானியேலின் நான்கு மிருகங்களில் நான்காவது "கெடிதும் பயங்கரமுமான மிருகத்தை" வரலாற்றில் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

## <u>லிவியாதான் மற்றும் பிகெமோத்</u>

யோபு புத்தகத்தில் லிவியாதான், பிகெமோத் என்ற இரண்டு மிருகங்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. "லிவியாதான்" என்பது சிவில் அதிகாரத்தை அடையாளப்படுத்தும் மிருகமாகவும், "பிகெமோத்" என்பது மத அமைப்பை அடையாளப்படுத்துவதாகவும் உள்ளன. இந்த இரண்டுமே ஜனங்களுக்கும், மெய்யான சபைக்கும் எதிரிகள் ஆவர். இந்த "சிவில் அமைப்பு" (லிவியாதான்), சர்ப்பத்தின் "வித்து" என்பதும், இந்த வித்து, ஸ்திரீயின் வித்தின் குதிங்காலை "நசுக்கும்" என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. ஆதி 3 : 15. போலிக் கிறிஸ்தவத்தைக் குறிக்கும் மத அமைப்பை மட்டுமே (பிகெமோத்) நமது எதிரி என்ற முறையில் வேத மாணவர்களாகிய நாம் தீர்க்கதரிசனங்களை உற்று நோக்குகிறோம். ஆனால், "சிவில் அமைப்புகளை" (அரசாங்கங்களை) அடையாளப்படுத்தும் மிருகத்தைப் பற்றி (லிவியாதான்) கவனத்தில் அதிகம் கொள்வதில்லை. பரிசுத்தவான்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்கள் இதன் மூலம் வருகிறது.

# தானியேல் மற்றும் வெளிபடுத்தல் ஆகம மிருகங்கள்

**<u>பெரிதும் பயங்கரமுமான மிருகம் :</u>** தானியேல் 7 ம் அதிகாரம் :

இந்த உருவம் ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது. அதாவது, ரோம சாம்ராஜ்யத்தின் முழு சரித்திரத்திலும் வெளி வந்த சகல பரிமாணங்களையும் இது உள்ளடக்கியதாகும். போப்பு மார்க்கம் உருவாவதற்கு முன்பாக இருந்த ரோம சாம்ராஜ்யம் தானியேல் 7 : 7ல் குறிக்கப்படுகிறது. தானியேல் 7 : 8ல், போப்பு மார்க்கத்தால் மாறுதல் அடையும் ரோம சாம்ராஜ்யத்தைப் பார்க்கிறோம்; தானியேல் 7 : 11ல், ரோம--போப்பு ராஜ்யத்தின் மீதங்களைப் பார்க்கிறோம்]. இந்த மிருகத்திற்கு <u>ஒரு தலை மட்டுமே</u> உள்ளது. (தானி 7 : 20). ஏனெனில், ரோம வரலாற்றில் ஆட்சி செய்த அரசாங்கங்களின் பல்வேறு வடிவங்கள் பற்றிய விஷயங்கள் நமக்கு முக்கியமில்லை. இது தொடர்பான நிகழ்ச்சிகள், சுவிசேஷ யுக தீர்க்கதரிசனங்களை அறிந்துணர தேவைப் படவில்லை. ஆனால், இந்த மிருகத்திற்கு 10 + 1 கொம்புகள் இருக்கும் விவரங்கள் நமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன. ஏனெனில், இந்த மிருகத்தின் <u>சிறிய கொம்பு</u> எப்படி வல்லமை பெற்றது என்பதை வரலாற்றில் அறிய கொம்புகள் பற்றிய விவரங்கள் தேவைப்படுகின்றன.

**<u>சிவப்பான வலுசர்ப்பம் :</u>** வெளி 12 ம் அதிகாரம் :

இந்த உருவம் ரோம புறமத சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது. இது தான், ரோம சிவில் அதிகாரமாக மாற்றம் பெறுகிறது. போலிக் கிறிஸ்தவர்களின் மத வல்லமை (ஆண் பிள்ளை) பெருமளவில் வளர்ச்சி பெறுவதைக் கண்டு எரிச்சல் அடைகிறது. (வெளி 12 : 3, 4). இந்த ஆண் பிள்ளையிடம் தன்னுடைய மத செல்வாக்கை ரோம புறமத சாம்ராஜ்யம் (வலுசர்ப்பம்) இழந்து விடுகிறது. (வெளி 12 : 7 - 9). இந்த சமயத்திலிருந்து தான், இந்த வலுசர்ப்பம் ரோம புறமத சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்தாமல், ரோம சிவில் அதிகாரத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த "புதிய ரோம சிவில் அதிகாரம்" நான்கு சொற்களாலான பெயரால் குறிக்கப்படுகிறது : "வலுசர்ப்பம், பாம்பு, பிசாசு, சாத்தான் ". (வெளி 12 : 9). இந்த உருவம் வெளி 20 : 2ல் மறுபடியும் காணப்படுகிறது.

**<u>சிறுத்தை போன்ற மிருகம் :</u>** வெளி 13 ம் அதிகாரம் :

ரோம சிவில் அதிகாரம் எவ்விதம் சபை அமைப்பாக மாறியது என்பதை ஆண் பிள்ளையின் பார்வையில் சிறுத்தை போன்ற உருவம் அடையாளப்படுத்துகிறது. சிவப்பான வலுசர்ப்பம் (வெளி 12ம் அதிகாரத்தில்) அரசியல் பார்வையில் அடையாளப்படுத்தப்பட்டது. அந்த வலுசர்ப்பம், இந்த மிருகத்திற்கு (சிறுத்தைக்கு) தன் அதிகாரத்தை வழங்கியது. (வெளி 13 : 2). அதாவது, இவை இரண்டும் இங்கு தனித்தனி உருவங்களாகக் காட்டப்படுகிறது.

**<u>சிவப்பான மிருகம் :</u>** வெளி 17 ம் அதிகாரம் :

இந்த உருவம் சபைக்கும் சிவில் அமைப்புக்கும் இடையே உள்ள உறவு முறையை அடையாளப்படுத்துகிறது. ஆகவே தான், ஒரு <u>ஸ்திரீ</u> தலைகளின் மேல் உட்கார்ந்திருக்கும் விதமாகத் தேவைப்படுகிறது. இவ்விதமாக, இவ்விரண்டு அமைப்புகளும் எவ்விதம் தொடர்புடையதாக உள்ளன; எவ்விதம் தொடர்பு இல்லாமலிருக்கின்றன; எவ்விதம் ஒன்றுக்கொன்று இணையாயிருக்கின்றன போன்றவைகளை நாம் பார்க்க முடிகிறது. 17ம் அதிகாரத்தில், இந்த உருவத்தின் தலைகளை நாம் அடையாளம் காணுவது அவசியமாகிறது. ஏனெனில், இந்த தலைகளைப் பற்றிய காலக் கணக்கு மூலம் வசனங்களைத் தெளிவுடன் அறிந்து கொள்ள ஏதுவாகும். (வெளி 17 : 8, 9, 10).

## <u>தலைகள்</u>

ஒரு உருவத்தில் "தலை" என்பது சரீரத்தின் மற்ற அங்கங்களை வழி நடத்தும் சக்தியுடையது. சிவப்பு வலுசர்ப்பம், சிறுத்தை, சிவப்பான மிருகம் <u>அனைத்தும் 7 தலைகள்</u> உடையதாயிருக்கின்றன. ஆனால், தானியேலின் கெடிதும் பயங்கரமுமான மிருகம் ஒரு தலை மட்டும் கொண்டதாயிருந்தது. (தானி 7 : 20). ரோம சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்தும் இந்த பயங்கரமான மிருகத்தைப் பற்றிய விசேஷித்த ஆர்வம் நமக்கு இல்லை என்பதை இயேசு உணர்த்துவது போல் உள்ளது. கிறிஸ்தவம் வரலாற்றில் உருவாவதற்கு முன்பு இருந்த ரோம சாம்ராஜ்யத்தின் பல்வேறு தலைமைகளைப் பற்றிய சரித்திரத்தை ஆராய்வது நமக்கு உபயோகமானதாக இல்லை. ஏனெனில், போலிச் சபையின் வல்லமை வெளிப்படும் சமயத்தில் (சிறிய கொம்பு வெளிப்பட்டவுடன்), ரோம ராஜ்யத்தின் விவரங்களை கவனத்தில் இருத்திக் கொள்ள வேண்டி, தானியேல் கொம்புகளைப் பற்றி கவனத்துடன் விவரிக்கிறார். ஆகவே தான், <u>மற்ற மூன்று</u> மிருகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏழு தலைகளைப் பற்றிய நமது கவனத்தை வெளிப்படுத்தல் ஆகம ஆசிரியர் ஈர்க்கிறார். கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்றவுடனே, ரோம சாம்ராஜ்யத்தின் பல்வேறு தலைமைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி ஆராய்வதில் நாம் ஆர்வத்திற்குள்ளாகிறோம். இந்த பின்னணியில், போலிக் கிறிஸ்தவம் உருவாவதற்கு முன்பு, ரோம ராஜ்யத்தின் தலைமைகளைக் குறிக்கும்விதமாக நிறைய தலைகள் இருக்கவில்லை என்பது உணரப்படுகிறது.

### <u>கொம்புகள், கிரீடங்கள், தேவ தூஷணம்</u>

தானியேல் புத்தகத்திலும், வெளிப்படுத்தல் ஆகமத்திலும் மேற் குறிப்பிட்ட நான்கு மிருகங்களுக்கும் பத்து கொம்புகள் உள்ளன. "கொம்புகள்" என்பது வல்லமையைக் குறிக்கின்றன.

இந்த கொம்புகள் (முடிகளுடன்) வேதாகமத்தில் பல சந்தர்ப்பங்களில் அடையாளபாஷையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

1. எல்லா மிருகங்களிலும் ஒரே மாதிரியாக பிரயோகிக்கப்பட்டுள்ள இந்த "கொம்புகள்" ஒரு பெரிதான காட்சியின் பல்வேறு பிரிவுகளாக கையாளப்பட்டுள்ளன.
2. தானியேலின் "சிறிய கொம்பினால்" பிடுங்கப்படும் மூன்று கொம்புகள், பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்த காலக் கணக்கை வரலாற்றில் நாம் அடையாளம் கண்டு கொள்ள உதவுகிறது.
3. வெளி 12ம் அதிகாரத்தில் சிவப்பு வலுசர்ப்பத்தின் (ரோம புறமத சாம்ராஜ்யத்தின்) தலைகளின் மேல் முடிகள் இருப்பதைப் பார்க்கிறோம். இது எதைக் குறிக்கிறது ? ரோம சாம்ராஜ்யத்தின் அரசியல் கட்டமைப்பின் தலைமையிடத்திலே எல்லா அதிகாரங்களும் குவிந்திருந்தன. மாகாணங்களுக்கு இதில் பங்கு இல்லை. ஆனால், "சிறுத்தை" போன்ற மிருகத்தின் <u>கொம்புகளுக்கு மேல் முடிகள்</u> இருப்பதைக் கவனிக்கலாம். ஏனெனில், ரோமச் சபை தன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் சிவில் அதிகார ஆட்சியாளர்களுக்கு முடி சூட்டியது. இந்த ஆட்சியாளர்கள் சிவில் அதிகாரம் மட்டும் உடையவர்களாயிருக்கிறார்கள்.

   இவ்விதமாக, வலுசர்ப்பம், சிறுத்தை உருவங்கள் இரண்டிலும், சிவில் ஆட்சியாளர்கள் முடிகளை அணிந்திருக்கிறார்கள். இருப்பினும், சிறுத்தையின் தலைகளின் மேல் தூஷணமான நாமம் இருந்தன. இது எதைக் குறிக்கிறது ? சபையும் ராஜ்ஜீய அதிகாரமும் ஒன்றாக கலந்து, ராஜ்ஜீயத்தின் ஒவ்வொரு பரிமாண காலக் கட்டங்களிலும் இணைபிரியாது இருக்கும் நிலையை அடையாளப்படுத்துகிறது. சபையும் ராஜ்ஜீயமும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பது கர்த்தரின் பார்வையில் தேவ தூஷணமாக இருக்கிறது.

4. சிவப்பான மிருகம் : (வெளி 17ம் அதிகாரம்). இந்த மிருகத்தின் தலைகளின் மேல் அல்லது கொம்புகளின் மேல் "முடிகள்" இல்லை. ஏனெனில், இந்த காட்சியில், ஸ்திரீ முழு கட்டமைப்புக்கும் சர்வ அதிகாரம் கொண்டவளாக தன்னை மேன்மைபடுத்திக் கொள்கிறாள். அவள் முடி தரித்தவளாக தரிசனத்தில் காணப்படவில்லை என்ற போதிலும், வெளி 17 : 4ம் வசனத்தில் அவளுடைய ராஜரீக மனோபாவம் தெளிவாகத் தெரிகிறது. வெளி 18 : 7ல் அவள் தன்னை ராஜஸ்திரீயாக பாவிக்கும் மனநிலை புலப்படுகிறது. இந்த சிவப்பு மிருகத்தின் மேல் தூஷணமான நாமங்கள் காணப்படுவதாக வெளி 17 : 3ல் படிக்கிறோம். ஸ்திரீயிடமிருந்து பெறப்பட்ட தெய்வீக உரிமையினால், புனித ரோம சாம்ராஜ்யம் தன் ஆட்சிகாலம் முழுமையிலும் ஆளுகை செய்வதாக பறைசாற்றிக் கொள்கிறது.

## இரண்டு பெரிய மிருகங்கள்

தானியேலின் கெடிதும் பயங்கரமான மிருகம், வெளிப்படுத்தல் ஆகமத்தின் சிவப்பு வலுசர்ப்பம், சிறுத்தை, சிவப்பான மிருகம், இரண்டு கொம்புகளுள்ள மிருகம், மிருகத்தின் சொரூபம் என்று பல்வேறு உருவங்களைப் பற்றி மிக நுணுக்கமான முறையில் நாம் தெரிந்து கொண்டாலும், இந்த எல்லா மிருகங்களையும் இரண்டாக சுருக்கி, அவற்றின் பண்புகளின் அடிப்படையில் இரண்டு பெரும் மிருகங்களாக வகைப்படுத்தலாம். யோபுவின் தீர்க்கதரிசனத்தின் நோக்கம் இதுவே ! யோபுவின் புஸ்தகத்தில் 1. லிவியாதான் 2. பிகெமோத் என்ற இரண்டு உருவங்கள் அறிமுகமாகின்றன.

அரசியல் (சிவில்) மற்றும் போலிச் சபை அமைப்புகள் மூலமாக, சாத்தான் மனுக்குலத்தையும் மெய்யான சபையையும் பாதித்து வருகிறான். சில சமயங்களில் இந்த இரண்டு அமைப்புகளும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுமாறும், சாத்தான் சாத்தானுக்கு விரோதமாக இருக்குமாறும், பிறகு அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் விதத்திலும் ஞானமாய் செயல்படவும் செய்கிறான். பரிசுத்தவான்களின் எதிரிகளாக உள்ள இந்த இரண்டு வல்லமைகளைக் குறித்து ஜாக்கிரதையாயிருந்து, தீர்க்கதரிசனங்களை தெளிவுற பொருள் விளக்கம் கொள்ளவும், சோதனைகளில் ஜெயங்கொள்ள ஆயத்தம் பண்ணிக்கொள்ளவும் உதவுகிறது.

இவ்விதமாக, இந்த மிருகங்கள் எல்லாம் ஏதாவது ஒரு வடிவத்தில் சிவில் அமைப்பு அல்லது மத அமைப்பு மூலமான எதிரிகளாக, மெய்சபைக்கு சவாலாக செயல்படுகின்றன.

## லிவியாதான் :

இது சாத்தானுடைய சிவில் அதிகாரமாக “சிவப்பான வலுசர்ப்பம்” என வெளி 12ம் அதிகாரத்தில் விரிவாக வருணிக்கப்படுகிறது. இதற்கு “வலுசர்ப்பம், பாம்பு, பிசாசு, சாத்தான்” என்ற நான்கு சொற்கள் அடங்கிய பெயர் (வெளி 12 : 9) கொடுக்கப்படுகிறது. இந்த உருவத்தை நாம் மறுபடியும் வெளி 16 : 13ல் ஆறாம் வாதையில் மத அமைப்போடு இணைந்து பழைய மரபுகளை தக்க வைத்துக் கொள்வதைப் பார்க்கிறோம். வெளி 20ம் அதிகாரத்தில் அவன் கட்டப்படுவதையும், (வெளி 20 : 1 - 3), மறுபடியும் அவன் மற்றவர்களிடம் ஏமாற்றும் முயற்சியில் ஈடுபடுவதையும் (வெளி 20 : 7, 8), கடைசியாக அவன் முற்றிலும் அழிக்கப்படுவதையும் (வெளி 20 : 10) படிக்கிறோம்.

லிவியாதான் தனியாக செயல்படும் தன்மை வாய்ந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்; இது மத அமைப்புடன் இணைந்து செயல்பட்டாலும், அதனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஆயிரம் வருடங்கள் நீடித்திருக்கத் தக்கவிதமாக இருக்கிறது. ஆயிர வருட ஆரம்ப காலப்பகுதியில் போலி மதம் அழிக்கப்படுகிறது. (வெளி 19 : 20). ஆனால், சிவில் மிருகம் (வலுசர்ப்பம், பாம்பு, பிசாசு, சாத்தான்) அக்கினிக் கடலிலே போலி மதத்துடன் இணையவில்லை. ஆயிரம் வருடங்கள் முடிவு பெறும்போதே சிவில் மிருகம் அக்கினிக் கடலில் இணைகிறது. (வெளி 20 : 10). "எதிரி அரசாங்கம்" ஒன்றை நிர்மாணிக்க சிவில் மிருகத்தால் மேற்கொள்ளப்படும் இறுதி முயற்சி, ஆயிர வருட அரசாட்சியின் கடைசியில் முற்பிதாக்களுக்கு ஒரு சவாலாக இருந்து, இந்த சிவில் மிருகம் அக்கினிக் கடலில் அழிக்கப்படும்.

## பிகெமோத்

இது சாத்தானுடைய மத வல்லமைக்கு அடையாளமாக இருக்கிறது. சிவில் அதிகாரத்தின் துணை இல்லாமல், தனித்து செவ்வனே இயங்காத நிலையில் உள்ளது. இந்த உருவம் முதன் முதலாக வெளி 13 : 1, 2ல் விரிவாக சொல்லப்படும் பொழுது, இது ரோம சிவில் மிருகத்தைப் போலவே இருக்கிறது. இந்த உருவம், தானியேல் 7ம் அதிகாரத்தில் விவரிக்கப்படும் முதல் சிவில் மூன்று மிருகங்களின் பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இந்த மிருகம் வெளி 16 : 13ல் வலுசர்ப்பத்துடன் இணைந்து செயல்படுவதைப் பார்க்கிறோம். வெளி 19 : 20ல் இது முழுவதுமாக அழிக்கப்படுகிறது. இதனுடன் ஆயிர வருட முடிவில் லிவியாதான் சிவில் மிருகமும் அக்கினிக் கடலில் இணைகிறது.

## ஏழு தலைகள்

வெளிப்படுத்தல் ஆகமத்தின் 12, 13, மற்றும் 17ம் அதிகாரங்களில் உள்ள மூன்று மிருகங்கள் ஒவ்வொன்றிற்கும் **ஏழு தலைகள்** உள்ளன. எல்லா மிருகங்களுக்கும் பொதுவாகக் காணப்படும் "ஏழு தலைகள்", ரோம ராஜ்யத்தின் அரசியல் அமைப்பு படிவங்களை அடையாளப்படுத்துவதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். "ஏழு தலைகள்" எவற்றை அடையாளப் படுத்துகிறது என்று பட்டியலிடுவதற்கு முன், பின்வரும் கருத்துக்களை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் :

1. ரோம பேரரசன் ஜஸ்டினியன் "மத ஆளுநர்" பதவியை போப்புவிற்கு விட்டுக் கொடுக்கும் வரையில் (கி.பி. 533 - 539), மிருகத்தின் மேல் ஸ்திரீ உட்காரவில்லை.
2. "சிறிய கொம்புவினால்" பிடுங்கப்பட்ட மூன்று கொம்புகளை "தலைகள்" என்று சொல்ல இயலாது. அதை போலவே, "சிறிய கொம்பு" தலை இல்லை. இவைகள் கொம்புகளாகவே இருக்கின்றன.
3. வெளிப்படுத்தல் ஆகமத்தின் 13, 16, 17, 19 & 20 ம் அதிகாரங்களில் உள்ள மிருகங்கள் அனைத்தும், ரோம சாம்ராஜ்யத்தையோ, புனித ரோம சாம்ராஜ்யத்தையோ அல்லது அரசியல்-மத அமைப்பு கொண்ட ரோம ராஜ்யத்தையோ குறிப்பனவாக இருக்கின்றன. இவைகளுக்குத் தான் தலைகள் உள்ளன. இந்த தலைகள் மேற்குறிப்பிட்ட ராஜ்யங்களின் அல்லது அவற்றின் மீதங்களின் பகுதிகளாகவே அடையாளங் காணப்படுகின்றன.
4. இந்த தலைகள் ஒவ்வொன்றின் மீதும் தன்னுடைய மத அதிகாரத்தைச் செலுத்தும் அமைப்பாக, ஸ்திரீ வரலாற்றில் காணப்படுகிறாள்.

மேற்குறிப்பிட்ட விஷயங்களை மனதிற் கொண்டால், ஏழு தலைகளை அடையாளம் காணும் பட்டியல் கீழ் கண்டவாறு அமையலாம் :

1. "மத ஆளுநர்" (PONTIFEX MAXIMUS) என்ற பதவியை போப்புவிற்கு கொடுத்த பேரரசன் ஜஸ்டினியனின் ரோம சாம்ராஜ்யம்.

2. பேரரசனுக்கு முடி சூட்டுவதற்கு போப்பு மார்க்கத்தை அனுமதித்த சார்ல்மேகன் சாம்ராஜ்யம்.

3. கி.பி. 962ல் ஓட்டோ (OTTO THE GREAT) ஸ்தாபித்த "புனித ரோமசாம்ராஜ்யம்". இது கி.பி. 1806ம் வருடம் வரையில் ஏதோ ஒரு விதத்தில் தொடர்ந்தது.

4. "புனித ரோம சாம்ராஜ்யம்": இது மறுமலர்ச்சி காலத்தில் துவக்கம் பெற்றது. புனித ரோம சாம்ராஜ்யத்தில் மறுமலர்ச்சியினால் பெரும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. சில சக்திகள் (கொம்புகள்) புரோட்டஸ்டான்டுகளிடம் இழந்தன. போப்புவின் அதிகாரம் மூலமான தெய்வீக உரிமையைக் குறித்த சர்ச்சை ஏற்பட்டது. ரோம சாம்ராஜ்யத்தில் மாற்றங்கள் சார்லஸ் V ஆட்சியில் துவங்கி, பெர்டினாண்டு III ன் ஆட்சிகாலம் வரை நீடித்து, "வெஸ்ஃபாலியா சமாதானம்" (PEACE OF WESPHALIA) உருவானது. வரலாற்று ஆசிரியர்கள் இதை "சாம்ராஜ்யத்தின் உண்மையான சிதைவு" என்று கூறுகின்றனர். இதனால், சாம்ராஜ்யத்தின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லா நாடுகளின் அரசுரிமையை அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டது. இந்த புதிய சாம்ராஜ்யம், பழைய புனித ரோம சாம்ராஜ்யத்தின் பெயரை தக்க வைத்துக் கொண்டது. கி.பி. 1648ல் "வெஸ்ஃபாலியா சமாதானம்" ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த புதிய ஏற்பாட்டிற்கு முதல் பேரரசனாக லியோபோல்டு I என்பவர் பதவி ஏற்றார்.

5. நெப்போலியனின் பிரான்ஸ்.

6. விக்டர் இம்மானுவேலின் அரச பரம்பரை( விக்டர் இம்மானுவேல் II) .

7. நாசி-பாஸிச சாம்ராஜ்யம்.

************************************************************************************

## ஆறாவது தலை

ஆறாவது தலையை அடையாளம் காணுவதில் சில சிரமங்கள் உள்ளது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் நெருக்கடியான சூழ்நிலையில் இத்தாலியை ஆட்சி செய்த இம்மானுவேல் அரசு பரம்பரைக்கும், ரோமச் சபைக்கும் மோசமான உறவு இருந்து வந்தது. சபையும் சிவில் அதிகாரமும் ஒன்றுக்கொன்று முரணாக இருந்த நிலையில், விக்டர் இம்மானுவேல் II என்ற தலையின் மேல் ஸ்திரீ எவ்விதம் சவாரி செய்வதாக நாம் சொல்ல முடியும் ? இது குறித்த வரலாற்று பின்னணியைப் பார்ப்போம்:

மறுமலர்ச்சியினால் சாவுக்கேதுவாக காயப்பட்ட மிருகம் சொஸ்தமாக்கப்பட்டு, "புதிய புனித ரோம சாம்ராஜ்யம்" என புத்துயிர் பெற்றது தான் நான்காவது தலை ஆகும். இது மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முன்னாலிருந்த பழைய புனித ரோம சாம்ராஜ்யத்திலிருந்து வெகுவாக மாறுதல் அடைந்தது ஆகும். ஆனாலும், இராஜ்ஜிய – சபை உறவுடன் கூடிய இந்த அமைப்பின் மீது தான் ஸ்திரீ சவாரி செய்தாள். இந்த கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருந்த பிரான்ஸ் கலகம் செய்தது. இதனுடைய ஜனங்கள் (மிருகத்தின் உடல்) இந்த சபை - இராஜ்ஜீய கூட்டமைப்பின் செல்வாக்கை அழிப்பதில் வெற்றி பெற்றனர். இது தான் நகரத்தில் பத்தில் ஒரு பங்கு அழிவாகும். ஆனால், மிச்சமுள்ள பத்தில் ஒன்பது பங்கு "புனித ரோம சாம்ராஜ்யத்தின்" கட்டுப்பாட்டுக்குள் தான் இருந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த "புனித ரோம சாம்ராஜ்யத்திற்கு" நெப்போலியன் முடிவு கட்டினான். இந்த ரோம சாம்ராஜ்யத்தின் இறுதி பேரரசன் கி.பி.1806ல் அரசுரிமையை இழந்தான். இப்படியாக, மிருகத்தின் நான்காவது தலை மறைந்தது. நெப்போலியனின் பிரான்ஸ், போப்புவுடன் உடன்படிக்கை ஏற்படுத்தி, ஐந்தாவது வடிவமாக (5ம் தலையாக), ராஜ்ஜிய - சபை கூட்டமைப்பு உருவானது. நெப்போலியனின் இந்த நடவடிக்கை, கி.பி. 1870 களில் பிஸ்மார்க்கின் கீழ் ஜெர்மானிய நாடுகள் ஒன்றாக இணைவதற்கு வழி வகுத்தது. 19ம் நூற்றண்டின் இறுதிப் பகுதியில், ஐரோப்பாவின் மறு சீரமைப்புக்கு இது வித்திடப்பட்டது. கி.பி. 1870 - 71ல் இரண்டு புதிய நாடுகள் உருவானது. அதில் ஒன்று தான் ஜெர்மனி. இந்த ராஜ்யம் தான் "இரண்டாவது ரெயிச்" (SECOND REICH) என்றழைக்கப்பட்டது. இது ஜெர்மனியை மையமாகக் கொண்டிருந்த பழைய "புனித ரோம சாம்ராஜ்யத்திற்கு" பதிலாக (பிரதியீடாக) அமைந்தது. இந்த ஜெர்மனி பின்பு மறைந்து போய், அதற்கு பதிலாக நாஜி ஜெர்மனி (மூன்றாம் ரெயிச் — THIRD REICH) உருவானது.

பிஸ்மார்க்கின் புதிய ஜெர்மனி (இரண்டாம் ரெயிச்) உருவான சமயத்தில், இத்தாலியில் விக்டர் இம்மானுவேல் II ன் ஆட்சி மலர்ந்தது. கி.பி. 1870க்கு முன்னர், "இத்தாலி" என்ற நாடு இருந்ததில்லை. இது பழங்காலமாக புவியியலில் இடத்தை குறிக்கும் பெயராகவே இருந்து வந்தது. இத்தாலி, ஆஸ்திரியாவின் ஒரு பகுதியாகவும், போப்பு மார்க்க கட்டுப்பாட்டில் ஒரு பகுதியுமாக இருந்து வந்தது. ஆனால், இத்தாலி கி.பி.1870ல் ஒரு நாடாக ஆன பிறகு, பிரெஞ்சு படைகளின் பாதுகாப்பை போப்பு இழந்தார். இத்துடன் நெப்போலியனின் 5ம் தலை முடிவுக்கு வந்தது.

**<u>நெப்போலியனின் பிரான்ஸை அடையாளப்படுத்தும் ஐந்தாம் தலைக்குப் பதிலாக வந்த ஆறாம் தலை எது ?</u>**

நெப்போலியனின் ஐரோப்பாவிற்கு (5ம் தலைக்கு) பிறகு வந்த "இரண்டாம் ரெயிச்" தான் 6ம் தலை என முடிவு செய்வதில் சில சிரமங்கள் உள்ளன. பிஸ்மார்க் ஒரு ப்ருஷ்யன். ப்ருஷ்யா முழுவதுமாக ஒரு லுத்தரன் நாடு ஆகும். ஜெர்மனி உருவான போது, அதின் ஒரு பகுதி லுத்தரனாகவும், ஒரு பகுதி கத்தோலிக்காகவும் இருந்தது. இது ராஜ்ஜீய-சபை உறவைக் கொண்ட கட்டமைப்பாக இருக்கவில்லை. மேலும், பிஸ்மார்க் போப்பு மார்க்கத்திற்கு எதிரி ஆவார். போப்பு தவறா தன்மை கொண்டவராக உரிமை கொண்டாடுதலை எதிர்த்து, "கலாச்சார யுத்தம்" (KULTURKAMPF) என்ற புத்தகத்தை பிஸ்மார்க் வெளியிட்டார். புதிய ஜெர்மனி ராஜ்யத்தில் (SECOND REICH) போப்பு சதி பண்ணுவார் என்ற பயம் பிஸ்மார்க்குக்கு இருந்தது. கம்னியூஸ்டுகளின் செல்வாக்கைப் பார்த்து பயந்து, இவர் போப்புவுடன் அரசியல் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டார். இதனால், கி.பி. 1878 லிருந்து, போப்புவின் ஆதிக்கம் ஜெர்மனியில் பரவ ஆரம்பித்தது. இருந்தாலும், இது ராஜ்ஜீய-சபை உறவை மையமாகக் கொண்டதல்ல. மேலும், "மூன்று நேச நாடுகள்" (TRIPLE ALLAIANCE) என்ற அரசியல் கட்டமைப்பை (ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலியா) உருவாக்கினார். இதில் மூன்றில் இரு பங்கினர் கத்தோலிக்கர்கள் ஆவர்.

இத்தாலியில் பெரும்பங்கு நிலப்பகுதிகளை சொந்தமாக கொண்டிருந்த போப்பு நாடுகளை விக்டர் இம்மானுவேல் ஆக்கிரமித்துக் கொண்டார். ரோமைச் சபையுடன் சமரசமாகும் விதத்தில் 1871ல் போப்புவுக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் சட்டம் இயற்றி, சபைக்கு உதவித் தொகை, குருமார்களுக்கு சம்பளம், பள்ளிக்கூடங்களில் கத்தோலிக்க சமய பாடங்கள் போன்ற சலுகைகளை நடை முறைப்படுத்தினார். ஆனால், போப்பு இந்த நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளாமல், தம்மை வாடிகனின் கைதி என்ற நினைப்புடன் கி.பி. 1870 லிருந்து 1929 வரை இருந்தார். ஏனெனில், இந்த சமரசம், இத்தாலிய ராஜ்யத்துடனான சமய-ராஜ்ஜீய உறவு அடிப்படையில் இல்லாமல், ஒருதலை பட்சமாக இருந்தது. இருப்பினும், <u>கத்தோலிக்க மதம் "ராஜ்ஜீய மதமாக" இருந்தது</u> இவ்விதமாக, மிருகத்தின் தலையாக விக்டர் இம்மானுவேல் தலைமை இருந்தது என்பது தான் "ஆறாம் தலை"க்கான சரியான விளக்கமாக இருக்கிறது. இந்த காலக்கட்டத்தில், ஸ்திரீ அசௌகரியமான நிலையில் இருந்தாலும், மிருகத்தின் மேல் சவாரி செய்வது மறுக்க முடியாத ஒன்றாகும். இந்த ஆறாவது தலையின் காலப்பகுதியில், மிருகம் பரிதாபகரமாக சிறுமையடைந்து சுருங்கி விட்டது. ஆகவே தான், இந்த சூழ்நிலையில் ஸ்திரீ தன்னை கைம் பெண் அல்ல என்று பிரகடனப்படுத்துவதோடு, தான் தவறுவதில்லை என்றும் கூறுகிறாள். ஹிட்லருடனும் முசோலினியுடனும் கி.பி. 1929ம் ஆண்டிலும், அதற்கு பிறகும் உடன்படிக்கை செய்து கொண்டதில் போப்புவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. இதைத் தொடர்ந்து, மிருகம் வளர ஆரம்பித்தது. இது தான் ஏழாம் தலை ஆகும்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# மிருகமும் அதின் சொரூபமும்

வெளிப்படுத்தல் ஆகமம் 13ம் அதிகாரத்தில் சொல்லப்படும் சொரூபம் உயிரடையும் வரையில் வாதைகள் நடைபெற வாய்ப்பு இல்லை என சில சகோதரர்கள் அபிப்பிராயங்கொண்டு அதற்கு ஆதாரமாக வெளி 15 : 2ம் வசனத்தைக் குறிப்பிடுகிறார்கள். அறுவடை காலப்பகுதியில் வாதைகள் படிப்படியாக நடக்கும் என்ற கருத்தை ஆட்சேபிக்கும் முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று. வெளி 15 : 2ம் வசனத்தின் உட்பொருள் என்ன என்பதை விளக்கி, இந்த ஆட்சேபனைக்கு உரிய பதிலை கீழ் கண்டவாறு பார்ப்போம்:

மிருகம், அதின் சொரூபம், அவற்றின் முத்திரைக்கு உள்ளாகாமல், எல்லா பரிசுத்தவான்களும் **(1,44,000** பேர்களும்**)** அவற்றை தொழுது கொள்ளாமலிருக்கிறார்கள் என்ற உண்மையை "மிருகம்" பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் வேத வசனங்களிலிருந்து தெரிந்து கொள்கிறோம். "மிருகத்தையோ, அதின் சொரூபத்தையோ வணங்காமல், அதன் முத்திரையைத் தரிக்காமல் இருக்கும் நிலை" எதைக் குறிக்கிறது ? மிருகமோ, அதின் சொரூபமோ அதிகாரப்பூர்வமாக வெளிப்படும் நிலைக்கு **முன்னதாகவே** , "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது" (2 தெச 2 : 7) என்று பவுல் அப்போஸ்தலன் கூறும்விதமாக, சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே இந்த முத்திரை தரிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருந்தது என்று தெரிய வருகிறது. சுவிசேஷ யுகத்தின் எந்த காலப்பகுதியிலும் போலிக் கிறிஸ்தவத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டிருக்கும் நிலையை முத்திரையைத் தரிக்காமல் இருப்பது அடையாளப்படுத்துகிறது.

இந்த பொருள் குறித்து 13ம் அதிகாரத்தைச் சுட்டிக் காட்டி, அறுவடை கால பரிசுத்தவான்களை மட்டுமே அடையாளப்படுத்துகிறது என சிலர் நினைக்கின்றனர். வெளிப்படுத்தல் ஆகம பாடங்கள் ஒரு குறுகிய கண்ணோட்டத்தில் சொல்லப்படவில்லை.

வெளிப்படுத்தல் ஆகம 13ம் அதிகாரத்தின் தொடர்ச்சியான 14 : 1 - 5ம் வசனங்கள், வெளி 20 : 4ன் சாட்சியத்திற்கு பொருந்தும் வகையில் உள்ளது. வெளி 13ம் அதிகாரம், மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குபவர்களைப் பற்றியும், அதின் முத்திரையைத் தரிப்பவர்களைப் பற்றியும் காண்பிக்கிறது. ஆனால், வெளி 14 : 1ல் இவர்களுக்கு நேர் எதிரான வகுப்பினரை தெள்ளந்தெளிவாகக் காண்பிக்கிறது. இயேசுவின் நாமத்தையும், பிதாவின் நாமத்தையும் தங்கள் நெற்றிகளில் தரித்திருப்பதே இவர்களுடைய முத்திரை ஆகும். இவர்கள் எத்தனை பேர்கள் ? 1,44,000 பேர்கள். மிருகத்தின் முத்திரையைப் பெறாத முழுமையான சபை அங்கங்கள் இவர்கள்.

ஒத்துழைக்காதவர்களை கொலை செய்வதற்கான மிருகம், மற்றும் அதின் சொரூபத்தின் வல்லமை பற்றி நாம் அதிகமாக குறிப்பிடுகிறோம். ஆனால், இந்த வல்லமை வெளி 13 : 15 க்கு புதியது அல்ல. வெளி 6 : 8ல் போப்பு மார்க்கம் பூமியின் துஷ்ட மிருகங்களை உபயோகப்படுத்தி "கொல்வதை" பார்க்கிறோம். இது நான்காம் முத்திரை உடைபடும் காலப்பகுதியைச் சேர்ந்ததாகும். வெளி 11 : 7ல் மிருகத்தின் உடல் (பிரெஞ்சு ஜனநாயக ஆளுகை) மதத் தொழுகையைக் "கொன்றது".

இவ்விதமாக, யுகம் முழுமையிலும் நடக்கும் கொலை செய்யும் வல்லமையின் தொடர்ச்சியாகவே வெளி 13 : 15ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

போலிக் கிறிஸ்தவம் வணங்கப்படுவது, எபேசு சபையின் காலத்திலிருந்து நடைபெறுகிறது. (வெளி 2 : 6). 1,44,000 பேர்கள் மீதான துன்புறுத்தலை மிருகம் தொடருகிறது. வெளி 13 : 1ம் வசனத்தில், ரோமச் சமுத்திரத்திலிருந்து (கான்ஸ்டண்டைன் காலத்தில்) மிருகம் வெளி வருகிறதைக் காண்பிக்கிறது. 13 : 3ம் வசனம் மறுமலர்ச்சி வரலாற்றைக் காண்பிக்கிறது. வெளி 14 : 9 - 12ம் வசனங்கள், மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குதலை (கி.பி. 1878 லிருந்து) காண்பிக்கிறது. வெளி 17 : 3ம் வசனம் 1260 வருட காலப்பகுதி முழுமையையும் காண்பிக்கிறது. இந்த முழு காலத்திலும் மிருகத்தை வணங்கவோ அல்லது எதிர்க்கவோ முடியும். வெளி 17 : 7ம் வசனம் ஏழு தலைகளாகிய காலப்பகுதிகளில் மிருகத்தின் செயல்பாட்டைத் தெரிவிக்கிறது. இந்த ஏழு தலைகளின் காலப்பகுதிகளில் மிருகத்தை வணங்கவோ அல்லது எதிர்க்கவோ முடிந்திருக்கும்.

மேற்குறிப்பிட்டவாறு, வெளி 15 : 2ல் சொல்லப்பட்டிருப்பவர்கள், உயிர்த் தெழுந்த பரிசுத்தவான்கள் (ஸ்தேவான் காலந் தொடங்கி) அனைவரும் ஆவார். இவர்கள் அனைவரும் மிருகத்தின் மீதோ, அதின் சொரூபத்தின் மீதோ அல்லது அதின் நாமத்தின் மீதோ ஜெயங்கொள்ளுகிறவர்கள். இரண்டு கொம்புகளுள்ள மிருகம் உயிரோடு வந்த பிறகு வாழ்ந்த பரிசுத்தவான்களை மட்டும் வெளி 15 : 2ம் வசனம் சுட்டிக்காட்டுகிறது என்று சொல்வது சரி அல்ல.

**மிருகம் மற்றும் சொரூபம் பற்றிய வசனங்கள்:**

வெளி 6:8. போப்பு மார்க்கம் மிருகங்களை உபயோகப்படுத்தி "கொல்லுகிறது". (இந்த மிருகங்கள் மீது சவாரி செய்கிறது).
வெளி 11:7. மிருகத்தின் உடலான பிரெஞ்சு ஜனநாயக ஆளுகை.

வெளி 13:1. பத்து கொம்புகளுள்ள மிருகம் கான்ஸ்டண்டைன் காலத்திலிருந்து உள்ளது.
வெளி 13:2. வலுசர்ப்பத்துடன் உறவு.
வெளி 13:3 மறு மலர்ச்சி காலத்தில் மிருகம் காயப்பட்டது
வெளி 13:4. வலுசர்ப்பத்துடன் இணை பிரியாத உறவு.
வெளி 13:17. பத்து கொம்புகளுள்ள மிருகத்தின் முத்திரையை தரித்தவர்கள் மட்டுமே வாங்கவும், விற்கவும் முடிகிறது
வெளி 13:18. பத்து கொம்புகளுள்ள மிருகத்தின் இலக்கம் தெரிகிறது.
வெளி 14:1-5. 1,44,000 பேர்கள் வேறுவிதமான முத்திரைகளைத் தரிப்பது.
வெளி 14:9,11,12. மிருகமும் அதின் சொரூபமும் வணங்கப்படுதல்.
வெளி 15:2. மிருகம், அதின் சொரூபம், அதின் முத்திரையைத் தரித்திராதவர்கள் ---- எபேசு சபையின் காலத்திலிருந்து யுக முழுமையிலுமுள்ள பரிசுத்தவான்கள் பற்றிய விவரிப்பு.

வெளி 16:2. முதலாம் கலசம் ஊற்றப்படும் போது சொரூபம் உள்ளது. "கள்ளத்தீர்க்கதரிசி" என்று அது இன்னும் அழைக்கப்படவில்லை. "வணங்கியவர்களும், முத்திரையைத் தரித்தவர்கள்" என்பது மேற்கத்திய கிறிஸ்தவ உலகம்.

வெளி 16:10. மிருகத்தால் உரிமை கொண்டாடப்பட்ட தீர்ப்பின் அதிகாரத்தின் மீது ஊற்றப்படும் வாதை.

வெளி 16:13. ஆறாம் வாதைக்கு முன்பு "கள்ளத்தீர்க்கதரிசி" என்று குறிப்பிடப் படவில்லை. இப்பொழுது சொரூபம் மறைந்து விட்டது.

வெளி 17:7. ஏழு தலைகளின் காலங்களிலும் மிருகம் இருக்கிறது. ஆகவே, இந்த யுக முழுவதும் ஜெயங்கொள்கிறவர்கள் உண்டு.

வெளி 19:19. அறுவடையின் போது கர்த்தருக்கு விரோதமாக மிருகம் எழும்புகிறது.

வெளி 19:20. அறுவடையின் முடிவில் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அழிகின்றன.

வெளி 20:4. மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் மேற்கொண்ட எல்லா பரிசுத்தவான்கள் (1,44,000 பேர்கள்) இங்கு குறிக்கப்படுகின்றனர்.

வெளி 20:10. சிவில் அதிகாரம் (வலுசர்ப்பம்) ஆயிர வருடங்களுக்கு பிறகு, மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினிக் கடலில் தள்ளப்படுகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# கிரீடங்கள்

"கிரீடம்" என்ற வார்த்தைக்கு கிரேக்க வார்த்தையில் "ஸ்டீஃபனோஸ்" (STEPHANOS) என்றும், "டயடிமா" (DIADEMA) என்றும் இரண்டு சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. "ஸ்டீஃபனோஸ்" என்ற சொல், வெற்றிக்கு கொடுக்கப்படும் பரிசாக அணிவதை உணர்த்துகிறது. "வெற்றி" என்பதின் விளைவு "அதிகாரம்" ஆகும். "டயடிமா" என்ற சொல், ஒரு அரசன் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் தலையை சுற்றிலுமிருக்குமாறு உள்ள "முடி"யைக் குறிக்கும்

<u>"ஸ்டீஃபனோஸ்" என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வசனங்கள்:</u>

**<u>கிரீடம்:</u>**

**<u>வெளி</u>** <u>2:10.</u> பரிசுத்தவான்கள் ஜீவ கிரீடத்தை பரிசாகப் பெறுகிறார்கள்; இது, அழியாமையை பரிசாக பெறுவதற்கு அடையாளமாயிருக்கிறது.

**<u>வெளி</u>** <u>3:11.</u> "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு, உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு".

**<u>வெளி</u>** <u>6:2.</u> குதிரையின் மேல் ஏறியிருந்தவர் மகிமையடைந்த இயேசுவாக இருக்கலாம்; இந்த வசனத்தில், பரிசுத்த கொள்கைகளை பரப்பும் அதிகாரத்தை கொண்டவராக இயேசு இருக்கிறார். இயேசு ஜெயங்கொண்டதற்கான பரிசாக கிரீடம் குறிக்கப்படுகிறது.

**<u>வெளி</u>** <u>12: 1.</u> அவள் சிரசின் மேல் பன்னிரெண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. சாராள் உடன்படிக்கையால் குறிக்கப்படும் ஆதிச்சபை, பன்னிரெண்டு அப்போஸ்தலர்களிடமிருந்து வெளிப்படும் எண்ணங்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

**<u>வெளி</u>** <u>14:14.</u> இயேசு பொற்கிரீடம் அணிந்தவராய் (தெய்வீக அதிகாரம் கொண்டவராய்) அறுப்புக்கு தயாராகிறார்.

**<u>கிரீடங்கள்:</u>**

**<u>வெளி</u>** <u>4:4:</u> " – இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்." இருபத்து நான்கு தீர்க்கதரிசனங்கள் (பழைய ஏற்பாட்டு புத்தகங்கள்) தேவனுடைய அதிகாரத்தைப் பெற்றிருப்பதை இந்த வசனம் உணர்த்துகிறது.

**<u>வெளி</u>** <u>4:10</u>. "இருபத்து நான்கு மூப்பர்கள் ------- தங்கள் கிரீடங்களை சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து" :
இருபத்து நான்கு தீர்க்கதரிசனங்களும் தேவனுக்கு முன்பாக தங்கள் கிரீடங்களை (தங்கள் அதிகாரங்களுக்கு மூல காரணமாயிருப்பவரை அறிக்கையிடுதல்) வைத்து, தேவனை துதி செய்கின்றனர்.

**<u>வெளி</u>** <u>9:7.</u> "வெட்டுக்கிளிகளின் தலைகளின் மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகளிருந்தன." :
தங்கள் பணியை நிறைவேற்ற, இந்த அழிக்கும் சக்தியாகிய தெய்வீக அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# "முடிகள்" ( DIADEMA)

**<u>வெளி 12 : 3.</u>** சிவப்பான பெரிய வலுசர்ப்பத்திற்கு ஏழு தலைகளில் ஏழு **<u>"முடிகள்"</u>** இருக்கின்றன. இந்த தலைகள் அதிகாரத்திற்காக உரிமை கொண்டாடுகின்றன என்பது வெளிப்படையாகும்; வெளிப்படுத்தல் ஆகமத்தில் "<u>முடிகள்</u>" என்பது, "தனக்கே உரித்தாக்கிக் கொள்ளும் அதிகாரத்தை" அடையாளப்படுத்துவதாக தோன்றுகிறது. எசேக்கியேல் 21 : 26 ல், <u>"முடி"</u> என்பது 'சட்டப்படியான' ராஜாவின் அதிகாரத்தைக் குறிப்பதாக இருக்கிறது. ஆனால், அது தேவனால் அங்கீகரிக்கப்பட வேண்டும். மற்றதெல்லாம், அதிகாரத்தை தகுதி இல்லாமல் தனக்கே உரித்தாக்கி கொள்ளும் "போலி" ஆகும்.

**<u>வெளி 13 : 1.</u>** ""---அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன".

இந்த மிருகத்தின் பத்து கொம்புகளின் மேல் பத்து முடிகள் இருந்தன. இங்கும், அதிகாரம் தனக்கே உரித்தாக்கிக் கொள்ளப்படுகிறது.

**<u>வெளி 19 : 12.</u>** "அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் (DIADEMS) இருந்தன".

தகுதியில்லாத மிருகத்திடமிருந்து (7 தலைகள், 10 கொம்புகள் உள்ள) "முடிகள்" அகற்றப்பட்டு, அதிகாரங்களை இயேசு தமக்கு <u>உரித்தாக்கிக் கொள்ளுவதை</u> அடையாளப்படுத்துவதாக இருக்கலாம்.

உண்மையான அரசாளும் உரிமை இஸ்ரவேலர்களின் ராஜாவை விட்டு விலக்கப்பட்டு, உரிமைக்காரரான இயேசு வருமளவும் அது யாருக்கும் சொந்தமில்லை என்று எசேக் 21 : 26ல் வாசிக்கிறோம்.

"முடி" (DIADEM) என்பது, <u>இயேசு ஒருவருக்கு மட்டுமே</u> அணியத் தகுதி பெற்றதாக வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது; மற்றவர்கள் "முடிகள்" அணிந்திருப்பது, தகாத முறையில் தானே உரிமை கொண்டாடும் வகையில் உள்ளன. பொய்யான ராஜாக்கள் போலித்தனமாக முடிகளை அணிகின்றனர். அவர்களுடைய ஆளுகை தகுதிக்குரியதல்ல. இது தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்திக் கொள்ளும் விதத்தில் இருக்கிறது.

ஆனால், "கிரீடம்" (CROWNS) என்பது, ஒருவர் ஜெயங்கொள்வதினால் அவருக்கு பரிசாக கிடைக்கும் தகுதியுள்ள அதிகார சலுகைகளை அடையாளப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே, ஒருவர் கிரீடம் அணிந்திருப்பது நல்லவிதமாகவே வேதாகமத்தில் கையாளப்பட்டுள்ளது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

**XXIV**

# சிங்காசனங்கள்

"சிங்காசனம்" என்ற சொல் நியாயத்தீர்ப்பின் அதிகாரம் நிலை நாட்டப்படுவதை உணர்த்துகிறது. ஆனால், "கிரீடம்" என்பது வெறும் அதிகாரத்தை மட்டும் அடையாளப்படுத்துகிறது. ஆனால், அந்த அதிகாரத்தின் தன்மையை அது குறிப்பதில்லை. "முடி" (DIADEM) என்ற சொல் ராஜாவினுடைய சிவில் அதிகாரத்தைக் குறிப்பதாக உள்ளது.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் "சிங்காசனம்" என்ற சொல் வரும் வசனங்களைப் பார்ப்போம் :

**<u>வெளி 3 : 21.</u>** இயேசு தம் பிதாவினுடைய சிங்காசனத்தில் உட்கார்ந்தது போல, சபையும் தம்முடைய சிங்காசனத்திலே உட்காருவதற்கான வாக்குத்தத்தம் இயேசுவினால் சபைக்கு அருளப்படுகிறது. இயேசு எந்த சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார் ? ஒரே ஒரு சிங்காசனம் மட்டும் தான் உண்மையில் இருக்கிறது என்பது இங்கு குறிப்பாக உணர்த்தப்படுகிறது. ஆனால், அது பகிர்ந்து கொள்ளக்கூடிய சிங்காசனம் ஆகும். தேவன் நியாயத்தீர்ப்பின் முழு அதிகாரத்தையும் உடையவராயிருக்கிறர். ஆனால், அவர் நியாயத்தீர்ப்பின் அதிகாரத்தை தம் குமாரனுக்கு அளித்தார். குமாரன் அந்த அதிகாரத்தை தம் பரிசுத்தவான்களுக்கு அளிக்கிறார்.

**<u>வெளி 4 : 4.</u>** 24 மூப்பர்களுக்கு 24 சிங்காசனங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், நியாயத்தீர்ப்பின் அளவு கோல், தீர்க்கதரிசிகளின் மூலமாக தேவனால் அளிக்கப்பட்ட பரிசுத்த வார்த்தைகள் ஆகும்.

**<u>வெளி 7:9 & 7:15.</u>** "திரள் கூட்டத்தார்" <u>சிங்காசனத்திற்கு முன்பாக</u> நிற்கிறார்கள். இவர்கள் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கவில்லை. இது ஊழியம் செய்யும் நிலையை உணர்த்துவதாக உள்ளது. (வெளி 14 : 3ன் விளக்கவுரையைப் பார்க்கவும்).

**<u>வெளி 8 : 3.</u>** "சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்ததவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது".

இந்த வசனம் வெளி 5 : 8ம் வசனத்தைக் குறிப்பிடுவது போல் உள்ளது. வெளி 5ம் அதிகாரம் ஏழு முத்திரைகளை உடைப்பதற்கு முன்னோடியாக இருக்கிறது போல, வெளி 8 : 3ம் வசனம், எக்காளங்கள் ஊதப்படுவதற்கு முன்னோடியாக இருக்கிறது. முத்திரைகள் உடைக்கப்படும் அதே காலப்பகுதிகளில் தான் எக்காளங்களும் ஊதப்படுகின்றன என்ற கருத்தினை கூடுதலாக இது வலுப்படுத்துகிறது. இவ்வாறாக, முத்திரைகள் உடைக்கப்படுவதற்கு முன்னிருந்த அதே ஆரம்ப காலக்கட்டத்திற்கு, அதாவது, 5ம் அதிகாரத்துக்கு திரும்ப பின்னாகப் போகிறோம். இவ்விதமாக, சுவிசேஷ யுகம் ஆரம்பிக்கும் போது தேவனுடைய சிங்காசனம் பற்றி வெளி 8 : 3ல் விவரிக்கப்படுகிறது. ஆசரிப்பு கூடாரத்தின் பொற்பீடத்தையும், ஆசரிப்பு கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தைப் போல சிங்காசனத்தையும் குறிப்பிடும் வகையில் வெளி 8 : 3ல் விவரிக்கப்படுகிறது. இது யுக முழுமைக்குமுள்ள பரிசுத்தவான்களின் நீதி குறித்து அடையாளப்படுத்துகிறது.

ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் முன்பே, நீதி என்கிற தூபவர்க்க வாசனை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் முன்னரே சிங்காசனத்திற்கு முன்பாக (மகாபரிசுத்த ஸ்தலத்தில்) வியாபிக்க வேண்டும். (இது தான் யுக முழுமையிலுமுள்ள பரிசுத்தவான்களின் நீதி ஆகும்). அப்படியிராவிட்டால் ஆசாரியன் சபிக்கப்படுவான்.

**<u>வெளி 11 : 16.</u>** இங்கு மறுபடியும் மூப்பர்களின் 24 சிங்காசனங்களைப் பற்றி குறிக்கப்படுகிறது.

**<u>வெளி 12 : 5.</u>** ஆண் பிள்ளை (பாவ மனுஷன் - போப்பு மார்க்கம்) தேவனுடைய சிங்காசனத்தை (தீர்ப்பின் அதிகாரத்தை) தகாத வழியில் கைப்பற்றிக் கொள்ள தன்னை உயர்த்திக் கொள்வது இங்கு உணரப்படுகிறது.

**<u>வெளி 13 : 2.</u>** இங்கு வெளி 12 :5ல் உள்ள கருத்தையே பார்க்கிறோம். <u>சிவப்பு வலுசர்ப்பத்திடமிருந்து</u> பத்து கொம்புகளுள்ள மிருகம் தீர்ப்பு செலுத்தும் அதிகாரத்தை (சிங்காசனத்தை) பெறுகிறது. ரோம சிவில் அதிகாரம் தன்னுடைய மத தீர்ப்பு அதிகாரத்தை, ஜஸ்டினியன் பேரரசனாக இருக்கும் சமயத்தில் ரோமை பிஷப்பிற்கு கொடுத்தது

**<u>வெளி 14 : 3.</u>** இங்கு யார் பாடுகிறார்கள் ? <u>இது சிங்காசனத்திற்கு முன்பாக</u> இருந்தாலும், சபையைக் குறிப்பதாகவே உள்ளது. (இது சம்பந்தமாக 14 : 1 - 3ன் குறிப்புரையைப் பார்க்கவும்).

**<u>வெளி 16 : 10.</u>** "ஐந்தான் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான்".

இது வெளி 13 : 2ம் வசனத்தைக் குறிப்பிடுவதாகவே உள்ளது. தீர்ப்பளிக்கும் அதிகாரமுடையவராக தோற்றமளிக்கும் போப்புவை எச்சரித்து, இந்த வாதை ரோமச் சபையின் உள்ளேயே பெரும் முரண்பாடுகளை ஏற்படுத்துகிறது.

**<u>வெளி 20 : 4.</u>** பரிசுத்தவான்களுக்கு சிங்காசனங்கள் கொடுக்கப்படுகின்றன. வெளிப்படுத்தல் ஆகமத்தில் இந்த ஒரு வசனத்தில் மட்டும் தான் "சிங்காசனங்கள்" என பன்மையில் குறிக்கப்பட்டுள்ளது. (மூப்பர்களின் 24 சிங்காசனங்களைத் தவிர). வெளி 3 : 21; மற்றும் மத் 19 : 28ம் வசனங்களோடு வெளி 20 : 4ம் வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும். <u>சகல அதிகாரங்களையும் உடைய தேவனிடமிருந்து</u> கிறிஸ்துவுக்கும், சபைக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப் படுகிறது

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# நேரம்

"நேரம்" (HOUR) என்ற சொல் வெளிப்படுத்தல் ஆகமத்தில் வேளை, நாழிகை, காலம் என பல வசனங்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்த "நேரம்" என்ற வார்த்தை ஒரு குறுகிய காலப்பகுதியைக் குறிப்பதாக நினைக்கலாம். ஆனால், "நேரம்" என்ற சொல் எவ்விதம் வெளிப்படுத்தல் ஆகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கீழ்கண்ட வசனங்கள் மூலம் கண்டறியலாம்:

வெளிப்படுத்தல் ஆகமத்தில் நேரம்" என்ற சொல் இரண்டு விதமாக" உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

(a) "ஒரு" என்பது சேர்க்கப்பட்டு, "ஒருமணி நேரம்" என்று உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

(b) கூடுதல் எண் எதுவும் இல்லாமல், வெறும் "நேரம்" என்று உபயோகப்படுத்தப் பட்டுள்ளது.

**<u>ஒன்று :</u>** "ஒன்று" என்ற வார்த்தை "நேரம்" என்ற சொல்லுடன் சேர்க்கப்படும் பொழுது, அது முக்கியமான அர்த்தத்தை விளக்கக் கூடியதாய் இருக்கிறது. பல்வேறு காரியங்களில் "ஒன்றை" மட்டும் குறிப்பாகச் சொல்லும் போது, "ஒன்று" என்ற சொல் உபயோகப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, வெளி 6 : 1ல், "ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் <u>ஒன்றை</u> உடைக்கக் கண்டேன்" என்ற வசனத்தில், பல முத்திரைகளில் ஒன்று மட்டும் உடைக்கப்படுவதைக் குறிக்க, "நேரம்" என்ற சொல் உபயோகப்படுத்தப்படுகிறது. இதைப் போன்று உள்ள வசனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

வெளி 9:12. <u>முதலாம்</u> ஆபத்து கடந்து போயிற்று.
வெளி 13:3. அதின் தலைகளில் <u>ஒன்று</u> சாவுக்கேதுவாய் காயப்பட்டிருக்கக் கண்டேன்.
வெளி 17:12. இவர்கள் மிருகத்துடனே <u>ஒரு</u> மணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்கிறார்கள்.
வெளி 18:8. அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும், துக்கமும், பஞ்சமும் <u>ஒரே</u> நாளிலே வரும்.
வெளி 18:10. <u>ஒரே</u> நாழிகையிலே உனக்கு ஆக்கினை வந்ததே !
வெளி 18:16. <u>ஒரு</u> நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே!
வெளி 18:19. <u>ஒரு</u> நாழிகையில் இவள் பாழாய்ப் போனாளே!

**<u>நேரம் :</u>** "நேரம்" (கிரேக்க வார்த்தை HORA) என்ற சொல் வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக மொழி பெயர்க்கப்படவில்லை.

2 கொரி 7 : 8ல் பவுல் அப்போஸ்தலன் "நேரம்" என்ற வார்த்தைக்கு "கொஞ்சப் பொழுது" என்று உபயோகப்படுத்துகிறார். கொரிந்து சபையினர் <u>துக்கமடைந்திருந்த</u> <u>காலப்பகுதியைக்</u> குறிக்க "நேரம்" என்ற சொல்லை பயன்படுத்துகிறார்.

1தெச 2 : 17ல் பவுல் அப்போஸ்தலன், தாம் தெசலோனிக்கேய சபை சகோதரர்களை நேரில் பார்க்க முடியாத காலப்பகுதியை குறிக்க "கொஞ்சக் காலம்" என்று "நேரம்" என்ற சொல்லை உபயோகப்படுத்துகிறார்.

1யோவான் 2 :18ல், "<u>ஆதிமுதலிருக்கிறவரை</u>" நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" என்று யோவான் சொல்லும் போது, "நேரம்" என்ற வார்த்தை "சுவிசேஷ யுகத்தை" உணர்த்துவது போல் இருக்கிறது.

வெளிப்படுத்தல் ஆகமத்தில் 11 வசனங்களில் "நேரம்" (HORA) என்ற சொல் உள்ளது:

வெளி 3:3. "யாரும் எதிர்பார்க்காத சமயத்தை" குறிப்பதற்காக "நேரம்" என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தூங்கிக் கொண்டிருக்கும் சர்தை சபையினருக்கு "உன் மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" என்று இயேசு கூறுகிறார்.

"பிலதெல்பியா சபையின் சகோதரர்கள் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்கு தப்பும்படி நானும் உன்னை காப்பேன்" என்று வெளி 3 : 10ம் வசனம் தெரிவிக்கிறது. இந்த சோதனைக்காலம் (நேரம்) அறுவடை காலப்பகுதி முழுமையையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

வெளி 8 : 1. இங்கு "நேரம்" என்ற சொல்லுடன் "அரை" (HALF) என்ற வார்த்தை முன்னாக குறிக்கப்பட்டுள்ளது; இதற்கான விளக்கம் வெளி 8:1ம் வசன விளக்கவுரையைப் பார்க்கவும் ;

வெளி 11 : 13. " அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது "

இது பிரெஞ்சு புரட்சி நடந்த காலத்தைக் குறிக்கிறது. (பத்து வருடங்கள்).

வெளி 14 : 7. "அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது".

இந்த காலப்பகுதி பாபிலோன் மீதான நியாயத்தீர்ப்பு பற்றியதாகும். இது சுவிசேஷ யுகத்தின் அறுவடை காலம் ஆகும்.

வெளி 14 : 15. "பூமியின் பயிர் முதிர்ந்தது; அறுக்கிறதற்கு காலம் வந்தது".

இதுவும் அறுவடை காலப்பகுதி முழுமையையும் குறிக்கிறது.

வெளி 17 : 12. " இவர்கள் மிருகத்துடனே ஒருமணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக்கொள்கிறார்கள் ".

இங்கு ஒரு என்பது வரலாற்றில் ஒரு காலப்பகுதியைக் குறிப்பதாக உள்ளது.

வெளி 18 : 10. "ஒரே நாழிகையிலே உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்".

இவ்வசனம், பாபிலோன் மீது சடுதியாக (குறுகிய காலத்தில்) வரும் இறுதி தீர்ப்பைக் குறிப்பதாக எல்லோராலும் மேற்கோள் காட்டப்படுகிறது. இது உண்மையாகவும் இருக்கலாம்.

இவ்வசனத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் "ஒரு" மற்றும் "நேரம்" என்ற சொற்கள், பாபிலோன் மீது இயேசு செலுத்தும் தீர்ப்பின் காலப்பகுதி வரலாற்றில் வித்தியாசமாகவும், ஆச்சரியமாகவும் இருக்கும் என்பதை உணர்த்துவதாக உள்ளது என்று கூறலாம். 18ம் அதிகாரத்தில் இந்த வசனம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையைக் கவனிக்கும் போது மேற்குறிப்பிட்ட விளக்கம் உறுதியாகிறது.

வெளி 18 : 16. இது வெளி 18 : 10ம் வசனம் போலவே உள்ளது.

வெளி 18 : 19. "ஒரே நாழிகையிலே இவள் பாழாய்ப் போனாளே".

பாபிலோன் பாழாய் போய்க் கொண்டிருக்கும் காலப்பகுதி பல பத்து ஆண்டுகளைக் கொண்டது என்பதும், இந்த சரிவு இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதும் வரலாற்று நிகழ்வுகளில் தெரிய வருகிறது.

மேற்குறிப்பிட்ட வசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது :

"நேரம்" என்ற சொல் கால அளவை குறிப்பிட்டுச் சொல்ல இயலாதவாறு, பல அளவுகளைக் கொண்டுள்ளது. இந்த கால அளவுகள், அதன் குறிப்பிட்ட தன்மைகளுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

"நேரம்" என்ற சொல்லுடன், "ஒரு" என்ற வார்த்தை முன்னாக சேர்க்கப்பட்டால், அந்த காலப்பகுதியின் விசேஷத்தன்மையை உணர்த்த பயன்பட்டிருப்பது தெரிய வருகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# XXVI

# வெளிப்படுத்தல் ஆகமத்தின் முக்கிய அடையாள சொற்கள்

## IMPORTANT SYMBOLS IN THE BOOK OF REVELATION

வெளிப்படுத்தல் ஆகமத்தில் தூதர்கள், நபர்கள், மிருகங்கள், நாமங்கள், எண்கள், நகரங்கள், நாடுகள், பூமி, வானம், சமுத்திரம், தண்ணீர் போன்றவை குறிக்கப்பட்டுள்ளன; இவற்றுள் சில முக்கியமானவைகள் எவற்றை அடையாளப்படுத்துகின்றன என பார்ப்போம் :

**நான்கு ஜீவன்கள் :** நீதி, வல்லமை, அன்பு, ஞானம் என்ற நான்கு தெய்வீக பண்புகள்.

**24 மூப்பர்கள் :** பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்கள்.

**ஏழு ஆவிகள் :** பரிசுத்த ஆவி; இது சுவிசேஷ யுக சபையின் ஏழு காலப்பகுதிகளிலும் சபையின் தேவையை கருத்திற் கொண்டு செயல்படுவது ;

**மிகாவேல் :** (வெளி 12 : 7) இது பிரதான தூதனாகிய மிகாவேலைக் குறிக்கவில்லை. இங்கு குறிக்கப்படுவது, மிகாவேலின் போலி ஆகும். பாவ மனுஷனாகிய போப்பு மார்க்கத்தை அடையாளப்படுத்துகிறது. (2தெச 2 : 3, 4 ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்).

"தேவன்" என சொல்லப்படுவது கூட, எப்பொழுதும் தேவனைக் குறிப்பதில்லை. வெளி 16 : 11ல் "பரலோகத்தின் தேவன்" என்று குறிப்பிடப்படுவது "போப்பு மார்க்கத்தைக் குறிக்கலாம் ;

**வலுசர்ப்பம் :** இது எப்பொழுதும் சிவில் அதிகாரத்தைக் குறிப்பதாக இருக்கிறது .இது சில சமயங்களில் "வலுசர்ப்பம்" என்ற பெயர் "பாம்பு" எனவும், "பிசாசு" எனவும் மாறுகிறது. (வெளி 12 : 15ம் வசனத்தையும், வெளி 12 : 16ம் வசனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்). சில சமயங்களில் " சாத்தான் " என்றும் பெயர் மாறுகிறது. (வெளி 20 : 7). ஆனால், இந்த பெயர் மாற்றங்கள் அனைத்தும் வெளி 12 : 9; மற்றும் 20 : 2ல் உள்ளடக்கி, நான்கு பேர்களாக குறிக்கப்படுகிறது. இது, சிவில் அதிகாரத்தை அடையாளப்படுத்துவதற்காகவே எப்பொழுதும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஸ்திரீகள் :** ஸ்திரி என்பவள் "கன்னிகை"யாக இருந்தால், ஆவியில் ஜநிப்பிக்கப்பட்ட பரிசுத்தவான்களை குறிக்கிறது. இதைத் தான் கிறிஸ்துவின் சபை என்கிறோம்.
ஸ்திரி வேசியாக இருந்தால், போலிச் சபையைக் குறிக்கிறது.
ஸ்திரி நல்லவளாகவும், குழந்தைகளோடும் இருந்தால், அவள் "உடன்படிக்கையை" அடையாளப்படுத்துகிறாள்.
போலிச் சபையின் அங்கமாக ஆண் பாலில் சொல்லப்பட்டால், அது போலிச் சபையின் (போப்பு மார்க்கத்தின்) தலைமையைக் குறிப்பதாக இருக்கிறது. இது தலையாகிய கிறிஸ்துவுக்கு போலியாக செயல்படுவதைக் குறிக்கிறது.

**மிருகங்கள் :**

வெளிப்படுத்தல் ஆகமத்தில் பலவிதமான மிருகங்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளன. "மிருகம்" என்பது அசுத்தமான பண்புகளைக் கொண்டுள்ள ஒரு பெருங்கூட்டமான ஜனத்தாரை (அமைப்புக்கள் அல்லது அரசாங்கங்களை) பொதுவாகக் குறிக்கிறது.

வெளிப்படுத்தல் ஆகமத்தின் 12ம் அதிகாரத்தில் "வலுசர்ப்பம்" என்றும், 13ம் அதிகாரத்தில் "சிறுத்தை" போன்ற மிருகத்தையும், 17ம் அதிகாரத்தில் "சிவப்பு நிறமுள்ள" மிருகத்தையும் பார்க்கிறோம். இந்த மூன்று மிருகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரே மாதிரி எண்ணிக்கையிலான ஏழு தலைகளும் 10 கொம்புகளும் இருக்கின்றன. இதன் மூலம், இவை மூன்றும் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளதாக தெரிந்தாலும், அவைகள் மூன்றும் ஒரே மாதிரி அல்ல !

12ம் அதிகார வலுசர்ப்பம் ரோம புறமத சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது. பிறகு "சபையும் இராஜ்யமும்" கலந்த "புனித ரோம சாம்ராஜ்யமாக வளர்ந்தது . 12ம் அதிகாரத்தில் இந்த ரோமச் சபை (மிகாவேல் என்ற போப்பு தலைமையின் கீழ்) <u>தனித்து</u> இயங்கியது. இங்கு சபைக்கும், சிவில் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பின் தன்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

<u>**13ம் அதிகார மிருகம் :**</u> இந்த அதிகாரத்தில் பத்து கொம்புகள் உள்ள மிருகம், சபையும் ராஜ்ஜியமும் இந்த ஒரு பகுதியாகத் தெரிகிறது. அதாவது 12ம் அதிகார "மிகாவேல்" & "வலுசர்ப்பம்" இரண்டும் இணைந்த விதமாக உள்ளது போலிச் சபைகள் எவ்விதம் தோற்றமளிக்கும் என்பதை ."புனித ரோம சாம்ராஜ்யம்" வரலாற்றில் எப்படி இயங்கும் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளும்படியாக 13ம் அதிகாரம் இருக்கிறது .

<u>**17ம் அதிகார மிருகம் :**</u> பத்து கொம்புகள் உள்ள சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் வேசிக்கு அளிக்கப்படும் <u>**தீர்ப்பு**</u> பற்றி 19ம் அதிகாரத்தில் தரிசனம் காட்டப்படுகிறது. இந்த தரிசனம் இன்னும் புனித ரோம சாம்ராஜ்யத்தை (அதன் முன்னிலைமை, பின்னிலைமை உட்பட) குறித்தே பேசுகிறது. ஆனால், இந்த அமைப்பின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும், அதாவது, தலைகள், கொம்புகள், உடல், சவாரி செய்பவர் போன்ற ஒவ்வொன்றிற்கும் என்ன நிகழ்கிறது என்பது பற்றி இந்த அதிகாரத்தில் <u>குறிப்பிட்டு சொல்லப்படுகிறது</u>. ஆனால், இங்கு வித்தியாசமாக ஒரு நிகழ்வு நடக்கிறது. இந்த மிருகம், தன் மேல் சவாரி செய்பவருக்கு எதிராக எழும்பி, அவளை (சொந்த மத அமைப்பையே) விழுங்கி விடுகிறதைப் பார்க்கிறோம். (வெளி 17 : 16).

இவ்வாறாக, 12, 13, 17ம் அதிகாரங்களின் முக்கியமான மூன்று மிருகங்களும் ஒன்று தான் என்பதும், மூன்றுவித கோணங்களில், மூன்று விதமான அம்சங்களை வெளிப்படுத்தும் விதத்தில் தரிசனங்களில் காட்டப்பட்டுள்ளன.

<u>**இரண்டு கொம்புகளுள்ள மிருகம் :**</u> இது பற்றி 13ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது பத்து கொம்புகளுள்ள பழைய மிருகத்திற்கு ஒரு <u>**சவாலாக**</u> உள்ளது. ஆங்கிலிகன்-ஐரிஷ் சபை - ராஜ்ஜீய அமைப்பை இந்த இரண்டு கொம்புகளுள்ள மிருகம் அடையாளப்படுத்துகிறது.

<u>**மிருகத்தின் சொரூபம் :**</u> இது பற்றி 13ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது.
இங்கிலாந்து சபை ரோமச் சபைக்கு சவாலாக இருந்த நிலைமை, புரோட்டஸ்டாண்டு சபைகள் உருவாகத் தூண்டுதலாக அமைந்தது. 13ம் அதிகாரத்தை கவனமாய் படித்து, அத்துடன் வெளி 19 : 20; 20 : 10; 16 : 12, 13; ஆகிய வசனங்களை தொடர்புபடுத்தினால், இந்த சொரூபம் இரண்டு கொம்புகள் உள்ள மிருகத்தில் அமிழ்வுற்று "கள்ளதீர்க்கதரிசி" என்ற அமைப்பாக உருவெடுக் கிறது.

<u>**மிருகங்களின் பாகங்கள் :**</u>

<u>**தலைகள் :**</u> தலைகள் என்பது யோசிக்கும் தன்மையை, அதாவது, எண்ணங்கள், கோட்பாடுகளை அடையாளப்படுத்துகின்றன. ஒரு அரசாங்கம் (சிவில் அதிகார அமைப்பு) தன் செயல்பாடுகளில் மாற்றம் கொள்ளும் போது தலைகள் மாறுகின்றது என்பதை அடையாளப்படுத்துகின்றது.

**கொம்புகள் :** மிருகங்களின் தலைகளின் செயல்பாடுகளை இயக்கும் கருவியாக கொம்புகள் உள்ளன. "கொம்புகள்" என்பது "வல்லமையை" குறிக்கிறது. "தலைகள்" என்பது பெரும் அரசாங்கங்கள் / சிவில் அதிகார அமைப்புக்களைக் குறிப்பதால், இவற்றை ஆதரித்து, இவற்றின் விருப்பங்களை நிறைவேற்றும் சிறிய மாகாண அதிகாரங்களை "கொம்புகள்" குறிக்கின்றன.

**உடல்கள் :** இவை எவற்றை அடையாளப்படுத்துகின்றன ? உடல் என்பது தலையின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளதாகும். பெரிய அரசாங்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற **ஜனங்களை** உடல்கள் அடையாளப் படுத்துகின்றன. இதை வெளி 17 : 1, 3ம் வசனங்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. ஸ்திரீ மிருகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறாள்; இவள் தண்ணீர்களின் (ஜனங்களின்) மேலும் உட்கார்ந்திருக்கிறாள்; இந்த வேசி உட்கார்ந்திருக்கிற "தண்ணீர்கள்", ஜனங்கள் என்று 15ம் வசனம் விவரிக்கிறது. இதிலிருந்து நாம் என்ன உணர்ந்து கொள்ளுகிறோம் ? மிருகத்தின் தலை, கொம்பு, உடல் அனைத்தையும் பற்றிய தீர்க்கதரிசனம் 17ம் அதிகாரத்தில் சொல்லப்படுகிறது. வெளி 17 : 16ல் பத்து கொம்புகளும், மிருகமும் அந்த வேசியைப் பகைத்து சுட்டெரிப்பதாகப் படிக்கிறோம். இங்கு முழுமையான மிருகம் குறிப்பிடப் படவில்லை. வெறும் மிருகத்தின் உடல் மட்டுமே குறிக்கப்படுகிறது. இவ்விதமாக, பாபிலோனின் அழிவிற்கு பெரும் காரணமாக **ஜனங்கள்** (சமுத்திரம் – மிருகத்தின் உடல்) இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். இதற்கு வெளி 18:21ம் வசனமும் உதாரணமாக இருக்கிறது.

**வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி :**

வெளி 16 : 13ல் யுக முடிவில் ஒருமித்து சதி செய்யும் மூன்று உருவங்களைப் பார்க்கிறோம். 1. வலுசர்ப்பம் 2. மிருகம் 3. கள்ளத்தீர்க்கதரிசி; இம்மூன்றில், மத அமைப்புக்களை அடையாளப்படுத்தும் இரண்டு பேர்கள் (மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி) அழிவதை வெளி 19 : 20ல் படிக்கிறோம். ஆனால், மூன்றாவது உருவமான வலுசர்ப்பம், பின்னால் 20ம் அதிகாரத்தில் (20 : 10) முடிவுக்கு வருகிறது.

கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மத எதிரிகளான இரண்டு பேர் (மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி) முன்னதாக அழிகின்றனர்; ஆனால், சிவில் எதிரியான வலுசர்ப்பம் பிடிக்கப்பட்டு, கட்டப்பட்டு, செயல் இழக்கச் செய்து, ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு அழிக்கப்படுகிறது. வெளி 16ல் ஏற்கனவே சொல்லப்பட்ட மற்ற இருவர்களுடன், "அக்கினிக் கடலில்" வலுசர்ப்பமும் அழிகிறது.

**மகாநகரம் :**

வெளி 11 : 8ம் வசனத்தில் "மகாநகரம்" (பாபிலோன்) என்பது, சோதோம் என்றும், எகிப்து என்றும் அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு தான் கிறிஸ்துவும் சிலுவையிலே அறையப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது.இது சொல்லர்த்தமாக சொல்லப்படவில்லை என்பது நமக்கு நன்றாக விளங்குகிறது. "பாபிலோன்" என்பது சொல்லர்த்தமாக சோதோமையோ அல்லது எகிப்தையோ குறிக்கவில்லை; இந்த இரண்டு இடங்கள் எதிலும் கிறிஸ்து சிலுவையில் அறையப்படவில்லை.

இவ்விதமாக, வெளிப்படுத்தல் ஆகமத்தில் சொல்லப்படும் அடையாளங்கள், வேறு சில அடையாளங்களுக்கு **சமமாக** குறிக்கப்படுகின்றன;

**<u>தண்ணீர்கள் :</u>**

வெளி 17 : 1ம் வசனத்தில் "தண்ணீர்கள்" என்ற அடையாளத்திற்கு 17 : 15ம் வசனத்தில் "ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்று வேறொரு அடையாளத்தை சமமாக்கிச் சொல்லப்படுகின்றது. "ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" என்ற அடையாளம், எதிலும் அக்கறையில்லாத மனுஷர்களை (சமுத்திர வகுப்பாரை) வெளிப்படுத்தல் ஆகமம் குறிப்பிடுகிறது. இவ்விதமாக, 17 : 15ம் வசனத்தில் சொல்லப்படும் பொருள் விளக்கம் சொல்லர்த்தமாக இல்லை; "ஸ்திரீ "தண்ணீர்களின் " மேல் (17 : 1) உட்கார்ந்திருப்பதும், "மிருகத்தின்" (17 : 3) மேல்) ; உட்கார்ந்திருப்பதும் "ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்கள்" (17 : 15) மேல் உட்கார்ந்திருப்பது என்ற எல்லா அடையாளங்களும் "அமைதி இழந்த மனுஷ சமுதாயத்தையே" குறிப்பதாக உள்ளன.

**<u>வலுசர்ப்பம், பழைய பாம்பு, பிசாசு, சாத்தான் :</u>**

இந்த நான்கு சொற்கள் அடங்கிய உருவத்தை வெளி 12 : 9; மற்றும் 20 : 2ல் பார்க்கும் போது, இந்த நான்கு பெயர்கள் "சொல்லர்த்தமான பிசாசை" குறிப்பதாக சில சகோதரர்கள் தவறுதலாக நினைக்க ஏதுவுண்டு; இங்கு "வலுசர்ப்பம்" என்ற ஒரு அடையாளம், மற்ற அடையாளங்களுக்கு சமமாகச் சொல்லப்படுகின்றன. அதாவது, வலுசர்ப்பம், பழைய பாம்பு, பிசாசு, சாத்தான் என்ற எல்லா அடையாளங்களும் "சிவில் அதிகாரத்தைக்" குறிப்பதாகவே உள்ளன.

**<u>ஏழு என்ற எண் :</u>**

"எண்கள்" என்ற பதம் அடையாள அர்த்தம் கொண்டவையாக வேதாகமத்தில் உள்ளன. "ஏழு" என்ற எண் ஆவிக்குரிய நிலையில் பூரணமான எண்ணாக இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் "ஏழு" சொல்லர்த்தமாகவும், அத்துடன் அடையாள பாஷையிலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. "ஏழு சபைகள்" **<u>ஆவியில் முழுமை அடைந்த ஒரே சபையைக்</u>** குறிக்கிறது. ஆனால், "ஏழு" என்பது, சபை வளர்ச்சி பெறும் **<u>ஏழு காலப்பகுதிகளையும்</u>** குறிப்பதாக உள்ளது. இவ்விதமாக, 'எண்' என்பது சொல்லர்த்தமாகவும், அடையாளமாகவும் இருக்கின்றன.

**<u>42 மாதங்கள் :</u>** வெளி 13 : 5; 12 : 13, 14.

"எண்கள்" வார்த்தையோடு சொல்லப்பட்டிருந்தால், வார்த்தை அடையாளமாக குறிக்கப்படுவதாக இருக்கிறது. இங்கு "42" என்ற எண் சொல்லர்த்தமாகவும், "மாதங்கள்" என்பது அடையாள பாஷையிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. 42 மாதங்கள் = 1260 வருடங்கள்; (42 x 30 நாட்கள் = 1260) "ஒரு நாள்" என்பது "ஒரு வருடத்தை" அடையாளப்படுத்துகிறது.

**<u>ஆயிரம் வருடங்கள் :</u>** வெளி 20 : 4. இது சொல்லர்த்தமாகவே உள்ளது.

**<u>நிக்கொலாய் :</u>** வெளி 2 : 6; 2 : 15;

"நிக்கொலாய்" என்பது "மற்றவர்கள் மேல் மேலாண்மை ஆட்சி செய்வது" என்று பொருள்படும். எபேசு சபையில் வெறுக்கப்பட்ட விஷயம் இதுவே. பெர்கமு சபையில் தடுக்கப்பட முடியாமல் இருந்த விஷயமும் இதுவே. பிஷப்புகள் தகாத விதமாய் அதிகாரத்தை கைப்பற்றியதற்கு துணை போன சபையின் சகோதரர்களால், போலிக் கிறிஸ்தவம் விரைவாக பெரும் வளர்ச்சி பெற்றது.

"நிக்கொலாய்" என்ற கிரேக்கப் பெயருக்கு சமமான பெயராக "பிலேயாம்" என்ற எபிரேய பெயர் இருக்கிறது. (வெளி 2 : 14).

**<u>யோவான் :</u>**

சுவிசேஷ யுகத்திலும், அதன் அறுவடையிலும் மாம்சத்திலிருக்கும் சபைக்கு யோவான் அடையாளமாயிருக்கிறார். உதாரணமாக, வெளி 10 : 8 - 10ல் சொல்லப்படும் தீர்க்கதரிசனத்தில், சிறு புஸ்தகமாகிய தானியேல் புஸ்தகத்தை புரிந்து கொள்ளும் ஆரம்ப நிலையில், மில்லர் இயக்கம் இருந்த காலத்தைச் சேர்ந்த சகோதரர்களை யோவான் அடையாளப்படுத்துகிறார். தீர்க்கதரிசனத்தை சரிவர புரிந்து கொள்ளாமல், புஸ்தகத்தை சாப்பிட்ட வயிறு அஜீரணமான நிலையில் (காலக் கணக்கு தவறியதில்), யோவான் (அறுவடை கால சபை அங்கங்கள்) மறுபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கிறதாகப் படிக்கிறோம். இம்முறை சரியான பதில்கள் வெளிப்படுகின்றன.

**<u>தூதர்கள் :</u>**

"தூதர்கள்" என்ற பதம், மனுஷர்கள், நிகழ்வுகள், உண்மையான தூதர்கள் ஆகியோரை (சில சந்தர்ப்பங்களில் இயேசுவையுங்கூட) அடையாளப்படுத்துவதாக உள்ளது. சில உதாரணங்களைப் பார்க்கலாம் :

வெளி 8 : 3; 20 : 1ம் வசனங்களில் உள்ள "தூதன்" இயேசு ஆவார்.

வெளி 2, 3ம் அதிகாரங்களில் (வெளி 2 : 1, 8, ....) மனுஷர்களாகவும், வெளி 15 : 6; 16 : 1 - 4, 8, 10, 12, 17; 17 : 1ம் வசனங்களில் மகிமையடைந்த பரிசுத்தவான்களாகவும் அடையாளப் படுத்தப் படுகிறார்கள்.

வெளி 12 : 7ல் "தூதர்கள்" என்பது உலக மனுஷர்களைக் குறிக்கிறது. மிகாவேலுடன் (அந்திக்கிறிஸ்துவுடன்) இருந்த தூதர்கள் பேர்க் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. வலுசர்ப்பத்துடன் இருந்த தூதர்கள், ரோம புறமத சாம்ராஜ்யத்தை (சிவில் அதிகாரத்தை) ஆதரித்த ரோம புற மதத்தினரை அடையாளப்படுத்துகின்றனர். "தூதர்கள்" என்பது "தூது கொடுப்பவர்கள்" என்று பொருள்படும்; இங்கு குறிக்கப்படுபவர்கள் தவறான தூதர்கள்.

வெளி 17 : 1, 7; 19 : 9, 10; 21 : 9; 22 : 8; போன்ற வசனங்களில் உள்ள "தூதன்" யோவானிடம் நேரிடையாகப் பேசுகிறான்; இந்த ஏழாம் தூதன் ரசல் ஆவார்.

**<u>பலமுள்ள தூதன் :</u>**

வெளி 5 : 2; 10 : 1; மற்றும் 18 : 21; என்ற மூன்று இடங்களில் "பலமுள்ள தூதன்" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "புரட்சிகரமானதும், உபத்திரவங்களுமான காலங்களைப் பற்றி" தூது கொடுப்பவர்களாக "பலமுள்ள தூதன்" என்ற சொல் அடையாளப்படுத்துகிறது.

முதலாவது, யூத யுகம் முடிவடையும் சமயத்தில் இருந்த உபத்திரவ காலத்தையும், இரண்டாவது, 'முடிவின் காலத்தைக்' குறிக்கும் பிரெஞ்சுப் புரட்சி நடந்த காலத்தையும், மூன்றாவதாக, அறுவடையின் முடிவில் நடக்கும் இறுதியானதும், ஆலையில் மிதிக்கப்படுவதுமான உபத்திரவங்கள் அடங்கிய அர்மெகெதோன் யுத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றன.

**<u>14 ம் அதிகாரத்திலுள்ள தூதர்கள்:</u>**

6 ம் வசனம் : அறுவடை தூது.
8 ம் வசனம் : நியாயத்தீர்ப்பின் தூது.
9 ம் வசனம் : எச்சரிப்பின் தூது. (வாதை ஊற்றும் தூதன்).
15 ம் வசனம் : காலக் கணக்கு பற்றிய தூது.
17 ம் வசனம் : சபை முழுமை பெற்றவுடன், இன்னும் மாம்சத்திலிருக்கும் திரள் கூட்டத்தார்" என்ற பிரிவினர்.
18 ம் வசனம் : மகிமையடைந்த சபை.

"தூதன்" என்பது சூழ்நிலையைப் பொறுத்து பொருள் விளக்கம் கொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

**எக்காளங்கள் :**

"எக்காளம்" என்பது சத்தியத்தூது பிரகடனப்படுத்தப்படுவதை அடையாளப்படுத்துகிறது. ஏழு தூதர்கள், சுவிசேஷ யுகத்தின் ஏழு காலப் பகுதிகளிலும் சத்தியத் தூதுகளை பிரகடனம் பண்ணுகிறார்கள்;

**வாதைகள் :**

முன்பு எக்காளம் ஊதப்பட்ட அதே அமைப்புகளின் மேல், இப்பொழுது யுக முடிவின் காலத்தில் சத்தியத் தூதுகள் வலிமையாகத் திணிக்கப் படுகின்றன. சுவிசேஷ யுகம் முழுமையிலும் இவ்வுலகத்தாருக்கு அளிக்கப்பட்ட தூதுகள் குறிப்பிடும்படியான பலன் தராத நிலையில், யுக முடிவில் இந்த சத்தியத் தூதுகள் உலகத்தாரின் கவனத்திற்கு அழுத்தமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த வாதைகள் தாம் 19ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை கிறிஸ்தவ உலகத்தை படிப்படியாக சரிவடையச் செய்கின்றன. இதன் விளைவாக, பாபிலோன் வரப்போகும் அழிவிலிருந்து தப்பப் போவதில்லை.

**எக்காளங்கள் --- வாதைகள் ஒற்றுமை :**

எக்காளங்களை ஊதிய "தூதர்கள்" ஏழு மனிதர்கள் ஆவர்; இவர்கள் ஏழு சபைகளுக்கும் தூது கொடுக்கும் தூதர்கள்; வாதைகளை ஊற்றும் இந்த தூதர்கள், "மகிமையடைந்தவர்களாக" வெளி 15 :5,6ம் வசனங்களிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். எக்காளம் ஊதிய அதே ஏழு நபர்கள் தாம், இப்பொழுது மகிமை அடைந்தவர்களாக ஏழு வாதைகளை ஊற்றுகிறார்கள் என்பது சரியானதாகவே தோன்றுகிறது. தாம் மாம்சீக நிலையிலிருந்த போது நிறைவேற்ற முடியாதவற்றை, இந்த பரிசுத்தவான்கள் பணியை நடைமுறைப் படுத்துவதை தேவன் இப்பொழுது அனுமதிக்கிறார்.

இந்த அனுமானம் வெளி 17 : 1ம் வசனம் மூலம் உறுதிப்படுகிறது. வெளி 17 : 1ம் வசனத்திலுள்ள தூதன் யாரென்று நாம் அடையாளங்கண்டு விட்டால், வாதைகளை வைத்திருக்கும் மற்ற தூதர்களையும் அடையாளம் காண முடியும்; 17 : 1ம் வசனத்திலுள்ள தூதன், யோவான் வகுப்பாருடன் 17 : 1ம் வசனம் முதல் 22ம் அதிகாரம் வரை பல விஷயங்களை விளக்குகிறார். இந்த தூதன் ஒரு மனுஷன்; (வெளி 19 : 10; 21 : 17; 21 : 9). இவர் ரசல் ஆவார்; வாதைகளை ஊற்றும் தூதர்களில் ஒருவராக ஏழாம் சபையின் தூதன் இருக்கிறார் என்றால், மற்ற ஆறு பேரும் சபையின் மற்ற ஆறு காலப் பகுதிகளுக்குரிய சபைகளின் தூதர்களாக இருக்கின்றனர் என்பது விளங்குகிறது. ஆனால், இப்பொழுது இந்த ஏழு பேரும் மகிமை அடைந்தவர்களாயிருக்கிறார்கள்.

*@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@*

## XXVII

# லிவியாதானும் பிகெமோத்தும்

**லிவியாதான் :**

யோபு 41ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள லிவியாதான், எதை அடையாளப்படுத்துகிறது என்பதற்கு இரண்டு தடையங்கள் உள்ளன :

1. யோபு 41:34ல் லிவியாதானைப் பற்றிய விவரங்களின் தொகுப்பு காணப்படுகிறது. "அது மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது; அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாக இருக்கிறது" என்று வாசிக்கிறோம். இது சாத்தானைக் குறித்துச் சொல்லப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது; ஏசாயா 14 : 13, 14 ஐப் பார்க்கவும்).
2. ஏசாயா 27 : 1ல் லிவியாதானைப் பற்றி மேலும் விவரிக்கப்பட்டுள்ளது; "அக்காலத்திலே, கர்த்தர் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்று போடுவார் ". இங்கு லிவியாதான் என்ற உருவம், "சர்ப்பம்", "வலுசர்ப்பம்" என இரட்டையாக அடையாளப்படுத்துகிறது. இவை சாத்தானைக் குறிக்கிறது என்றும், குறிப்பாக வலுசர்ப்பம் என்ற முறையில் உலக சிவில் அதிகாரங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அடையாளமாய் இருக்கிறது. லிவியாதான் வல்லமை படைத்த தாயிருந்தாலும், யோபு 41 : 10 - 12ல் தேவன் அதை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, அதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று உணர்த்துகிறார்.

**பிகெமோத் :**

இந்த மிருகம் பற்றி யோபு 40 : 15 - 24ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மிருகத்தை அடையாளங்காணும் விதத்தில் எந்த விபரமும் தெரியாத நிலையில், தானியேல் புத்தகத்தில் 7:7ம் வசனத்தில் உள்ள நாலாவது மிருகத்தோடு இதை அடையாளப்படுத்த முடிகிறது. "அது கெடியும் பயங்கரமும், மகா பலத்ததுமாயிருந்தது; அதற்கு பெரிய இருப்புப் பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதை தன் கால்களால் மிதித்துப் போட்டது. அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது. அதற்கு பத்து கொம்புகள் இருந்தது." என்று வாசிக்கிறோம்.

தானியேலின் இந்த நாலாவது மிருகம் ( குறிப்பாக இதன் சிறிய கொம்பு எழும்பி, மற்ற மூன்று கொம்புகளை அகற்றிப் போட்டதற்குப் பிறகு ) "புனித ரோம சாம்ராஜ்யம்" என்றழைக்கப்பட்ட போப்பு மார்க்க அரசியல் அரசாட்சியை அடையாளப்படுத்துகிறது.

*@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@*

## XXVIII

## மூன்று அடையாளங்கள் : அவற்றின் செயல்பாடுகளில் மாறுதல்கள்

வெளிப்படுத்தல் ஆகமத்தில் அறுவடையைப் பற்றி விளக்கும் 14 முதல் 19ம் அதிகாரங்களை உன்னிப்பாக கவனித்தால் ( கடைசி ஏழு வாதைகளை விவரிக்கும் 15, 16ம் அதிகாரங்களைத் தவிர ), அறுவடையின் துவக்கம் முதல் முதல் இறுதி வரையிலான சம்பவங்கள் கோர்வையாக நான்கு கோணங்களில் (14, 17, 18, 19ம் அதிகாரங்கள் மதம், அரசியல்,பொருளாதாரம், கிறிஸ்து பார்வைகளில்) விவரிக்கப்பட்டிருப்பதை உணரலாம். கடைசி ஏழு வாதைகள் மட்டும் அறுவடை காலப்பகுதியின் துவக்கம் முதல் இறுதி வரை ஒன்றன்பின் ஒன்றாக நடக்காமல், அறுவடையின் முடிவு கட்டத்தில் ஒரு சேர நடப்பதாக இருந்தால் வெளிப்படுத்தல் ஆகமத்தின் கட்டமைப்பில் இது பொருந்தாத இசைவற்ற நிலையை ஏற்படுத்துவது போல தோன்றுகிறது. இது பற்றி கீழ்கண்டவாறு பார்க்கலாம் :

யுக முடிவில் பழைய ஒழுங்குகளின் அழிவைப் பற்றி சொல்லும் போது, வெளிப்படுத்தல் ஆகமத்தில் மூன்று அடையாளங்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன. இந்த மூன்று அடையாளங்களும் சுவிசேஷ யுகம் நடக்கும் காலப்பகுதியில் ஒரு செயல்பாட்டை (கட்டமைப்பு பணியை) செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால், இவைகள் சுவிசேஷ யுக இறுதியில், வேறொரு செயல்பாட்டை (தீர்ப்பை) செய்ய ,உபயோகப் படுத்தப்படுகின்றன. சபை முழுமை பெற்ற உடனேயே, தீர்ப்பின் செயல்பாடுகள் உடனே நடைபெற்றுவிடும் என்று சிலர் நினைக்கின்றனர். கி.பி. 1914ம் வருடம் முதல் தீர்ப்புகள் தொடங்கி விட்டன என்று ஒரு நூற்றாண்டுக்கு மேலாக வேத மாணவர்கள் சொல்லி வருகின்றனர். மகா உபத்திரவத்தின் இறுதியில் பயங்கரமும், திரளாகவும் கடைசி தீர்ப்பு வரும் என்பது உண்மையே. ஆனால், இது "வாதை" என்று எங்கும் குறிப்பிடவில்லை. "புறஜாதிகளின் காலங்கள்" முடிவுக்கு வந்ததிலிருந்து (கி.பி. 1914 முதல்), கீழ்கண்ட மூன்று அடையாளங்கள் ஒவ்வொன்றும் எவ்விதம் செயல் படுகின்றன என்பதைப் பார்ப்போம் :

(a) தூப கலசம் [ வெளி 8 : 2 - 6 ].

(b) கண்ணாடிக் கடல் [ வெளி 4 : 6; 15 : 2 - 4 ].

(c) எக்காளங்களாக ஊதப்பட்ட சத்தியங்களாகிய வாதைகள்;
(வெளி 8 லிருந்து 11 ம் அதிகாரங்கள்)
அதன் பிறகு, ஊற்றப்பட்ட அந்த வாதைகள்.
[ வெளி 15, 16ம் அதிகாரங்கள் ].

மேற்குறிப்பிட்ட மூன்று அடையாளங்களில், மூன்றாவது அடையாளத்தைப் பற்றி சில உண்மைகள் கவனத்தில் கொள்ள வேண்டும்

வெளிப்படுத்தல் ஆகமத்தில் எக்காளங்கள் என்றும், வாதைகள் என்றும் குறிப்பிடும் போது, வரிசைக்கிரமமான அடிப்படையில் இவ்விரண்டும் ஒரே மாதிரியான பாதிப்பை உண்டு பண்ணுவதைக் காண்கிறோம். முதலாவது பூமியின் மேலும், இரண்டாவது சமுத்திரத்தின் மேலும், மூன்றாவது நீரூற்றுகள் மீதும் .......என்று வாசிக்கிறோம்.

வெளி 8 : 1 - 6ல் எக்காளங்கள் ஊதப்படுவதற்கு முன்பான அறிமுகப்பகுதியில் உள்ள அடையாளமான தூப கலசம், எக்காளங்களுக்கும் வாதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகப் பார்க்கிறோம். ( 50 - 53ம் பக்கங்களைப் பார்க்கவும்).

வெளி 16ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள வாதைகளை ஊற்றும் ஏழு தூதர்கள், ஊற்றுவதற்காக கலசங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே, அந்த ஏழு தூதர்களும் வாதைகளை தம் வசம் வைத்திருந்தனர் என்று 15 : 1ன் மூலம் அறிகிறோம். இந்த வாதைகள் சத்தியங்களே. இந்த ஏழு தூதர்கள் தாங்கள் மாம்சத்திலிருந்த காலத்தில், சத்தியங்களை எக்காளங்களாக ஊதிப் பிரகடனப்படுத்தி வந்தனர். ஆனால், அறுவடை காலத்தில், இந்த சத்தியங்கள் விசேஷித்த தீர்ப்பாக உபயோகப்படுத்தும்படி, கலசங்களிலிருந்து (கருவிகளாக) ஊற்றப்படும் புதிய செயலைச் செய்கின்றன.

இவ்விதமாக, இந்த வாதைகள் (சத்தியங்கள்) சுவிசேஷ யுக காலப்பகுதியில் ஒரு விதமாகவும் (எக்காளங்கள் ஊதப்பட்டும்), யுக முடிவில் வேறு விதமாகவும் (கலசங்களிலிருந்து ஊற்றப்பட்டும்) செயல்படுகின்றன.

## அடையாளம் : தூப கலசம்

| சுவிசேஷ யுக காலத்தில் | 1914ம் வருடத்திலிருந்து |
|---|---|
| பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் தேவனுக்கு முன்பாக சென்று அடைவதற்கு உபயோகப்படுகிறது. வெளி 8 : 3, 4. | பழைய ஒழுங்குகள் மற்றும் மரபுகளை அழிக்க உதவுகிறது. வெளி 8 : 5; (எசேக் 10:2ம் வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும். |

## அடையாளம் : கண்ணாடிக் கடல்

| சுவிசேஷ யுக காலத்தில் | 1914ம் வருடத்திலிருந்து |
|---|---|
| பரிசுத்தவான்களை பரிசுத்தப்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் சத்தியமாகிய தண்ணீரை தேக்கி வைக்க ஆலயத்தில் உள்ள கடல் தொட்டியை இது அடையாளப்படுத்துகிறது | குறைபாடற்ற தன்மையைத் தக்க வைத்திருக்கும் நிலையை கண்ணாடிக் கடல் (வெளி 15 : 2) காட்டுகிறது. இப்பொழுது, உலகத்தார் தீர்ப்பின் உணர்வோடு இந்த கண்ணாடியை உற்று நோக்கும் விதத்தில் இருக்கிறது. (தானியேல் 5 : 27 போல). இப்பொழுது, தீர்ப்பு மற்றும் அழிவு (அக்கினி) என்ற கூறுகளின் கலவையாக கடல் இருக்கிறது. மகிமையடைந்தவர்கள் (வெளி 14 : 13), இந்த சத்தியங்களின் (தண்ணீர்) மேல் ஒரு புதிய செயலை செய்ய, கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளவர்களாக இப்பொழுது நிற்கிறார்கள். |

| | |
|---|---|
| | இப்படியாக, ஏழு தூதர்கள் மட்டுமே கலசங்களிலிருந்து ஊற்றும் பொழுது, மகிமையடைந்த பரிசுத்தவான்கள் பங்கு பெறுகிறார்கள். பழைய ஒழுங்குகளை அழிக்கும் பணியில் இந்த அக்கினி கலந்த தண்ணீர் அமைப்புகள் மீது ஊற்றப்படுகிறது. மாம்சத்தில் இன்னும் இருக்கும் பரிசுத்த வான்கள், கடைசி கால தூதைப் பரப்பி, ராஜாக்களையும், பிரபுக்களையும் கட்டுவிக்க உதவுகிறார்கள். சங் 149 & வெளி 20 : 1. |

## <u>அடையாளம் : வாதைகள்</u>

| சுவிசேஷ யுக காலத்தில் | 1914ம் வருடத்திலிருந்து |
|---|---|
| சுவிசேஷ யுகத்தில் ஏழு தூதர்களும் தங்கள் வசம் வைத்திருந்த சத்தியங்களை (வாதைகளை) எக்காளம் ஊதி பிரகடனப் படுத்தினார்கள். (வெளி 8 - 11ம் அதிகாரங்கள்). தூதர்களின் இந்த பிரகடனங்கள் (எக்காளங்கள்) உலகத்தாரால் அருவருக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் இருந்த நிலையில், தூதர்களின் தூதுகள் பரிசுத்தவான்களை சென்றடைந்தது. உலகத்தார் இந்த சத்தியங்களைப் புறக்கணித்ததால், இதே சத்தியங்கள் மிகுந்த வலிமையோடு அறுவடை காலத்தில் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இப்படியாக, <u>சுவிசேஷ யுகத்தில்</u> இந்த சத்தியங்களின் செயல்முறைகள் (பிற் காலத்தில் ஊற்றப்படும் வாதைகளாக மாறுபவை)) சபையைக் கட்டமைப்பதே யாகும். | சுவிசேஷ யுகத்தில் இந்த தூதர்கள் <u>வைத்திருந்த</u> அதே சத்தியங்கள் (வாதைகள்), இப்பொழுது வரலாற்றில் புண்பட்ட பேரதிர்ச்சிகளாக (கலசங்கள்) சமுதாயத்தின் ஒவ்வொரு வகுப்பார் மீதும் வலிமையாக திணிக்கப் படுகின்றன. இந்த தூதர்கள் இப்பொழுது மகிமை அடைந்தவர் களாகவும், சுவிசேஷ யுக காலப் பகுதிகளில் எக்காளங்கள் மூலம் போதுமான அளவுக்கு சாதிக்க முடியாதிருந்த நிலை மாறி, உலகத்தார் செவி சாய்க்கத் தக்க வழி வகைகளை (கருவிகள்— கலசங்கள்) பெற்றிருக்கிறார்கள். |

*@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@*

# 12 முதல் 20ம் அதிகாரங்களுக்கு இடையிலுள்ள தொடர்புகள்

சுவிசேஷ யுக இறுதி காலக் கட்டத்தில் நடக்கும் விஷயங்களை **12** முதல் **20**ம் அதிகாரங்கள் வெளிப்படுத்துகின்றன. அறுவடை நடக்கும் காலப்பகுதி பலவித சிக்கல்களை உள்ளடக்கியதாகும். தேவனுடைய திட்டத்திலுள்ள பல அம்சங்களின் வரலாறுகள் இங்கு பொதிந்து கிடக்கின்றன. இந்த அம்சங்களில் ஒன்று அல்லது அதிகமானவைகள் ஒவ்வொரு அதிகாரத்திலும் குவிமையமாக உள்ளது என்பதை நாம் கவனிக்கும் பொழுது, வெளிப்படுத்தல் ஆகமத்தின் அமைப்பினை தெளிவாக அறிய முடிகிறது.

**<u>12ம் அதிகாரம் : அதிகார அடக்குமுறை :</u>**

சிவில் மற்றும் மத அதிகாரங்களுக்கு இடையே உள்ள உறவை முக்கியப்படுத்தியும், அதன் விளைவாக மெய்சபை எவ்விதம் பாதிக்கப்படுகிறது என்பதை மேலோட்டமாக இந்த அதிகாரம் வெளிப்படுத்துகிறது. வெளி 12 : 17ம் வசனம், பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னால் நடக்கும் நிகழ்வுகளையும், அறுவடையையும் குறிக்கிறது.

**<u>அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :</u>**

வெளி 12 : 17ம் வசனத்தின்படி, சிவில் அதிகாரத்திற்கு "உண்மை சபையின்" (ஸ்திரீயின்) மீது எவ்வித அன்பும் இல்லை என்பதும், சந்தர்ப்பம் வரும்பொழுது அவளுடன் யுத்தம் பண்ணும் என்பதையும் அறிகிறோம். வெளி **13 : 1**ல், "முடிவு காலம்" வரையிலும் இந்த சிவில் அதிகாரம், உலக மக்களை எவ்விதம் அடக்கி ஆளும் (நிற்கிறது) என்பதையும் பார்க்கிறோம். இது வெளி **17 : 8, 11ம்** வசனங்களின் நிறைவேறுதலை உணர்த்துவதாக உள்ளது.

**<u>13 ம் அதிகாரம் : மத அமைப்பின் அடக்குமுறை :</u>**

யுகம் முழுமையிலும் நடக்கும் சம்பவங்களை இந்த அதிகாரம் விவரிக்கிறது. சபையும் சிவில் அதிகாரமும் ஒன்றாக இணைந்து பரிசுத்தவான்கள் மீது அடக்குமுறையை கையாளுகின்றன என்பதைக் குறித்து 13 ம் அதிகாரம் விவரிக்கின்றது. இந்த அதிகாரத்தில் "மத அதிகாரத்தைப்" பற்றி அழுத்தமாகச் சொல்லப்படுகிறது. 12 ம் அதிகாரத்தில் மதம் அவ்வாறு இல்லை. வெளி 13 : 15 - 17ம் வசனங்கள், அறுவடையைப் பற்றி சொல்ல ஆரம்பிக்கின்றன.

**<u>அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :</u>**

உலகளாவிய மத அமைப்புகளின் ஒத்துழைப்பைக் குறித்து **13**ம் அதிகாரத்தில் நம் கவனம் ஈர்க்கப்படுகிறது. சபைகளின் கூட்டமைப்புகளின் கவர்ச்சிகளில் ஈர்க்கப்படாமல், தைரியமாக செயல்படும் பரிசுத்த விசுவாசிகளைப் பற்றி வெளி **14 : 1 - 5**ம் வசனங்களில் படிக்கிறோம். இந்த வசனங்கள் **13**ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகவே உள்ளன.

**<u>13 ம் அதிகாரம்: தீர்ப்புக்கும் அறுவடைக்கும்</u>** <u>இடையிலான</u> **<u>தொடர்பு :</u>**

பெருகி வரும் சத்தியங்களினால் பெரும் பாதிப்புக்குள்ளாகும் போலிக் கிறிஸ்தவத்தின் விழுகை ஆரம்பமாகிறதை வெளி **14 : 6**ம் வசனத்திலிருந்து படிக்கிறோம். 13ம் அதிகாரம் போலிச் சபையின் வல்லமையை மையப்படுத்தி விவரிக்கிறது. ஆனால், 14ம் அதிகாரம், போலிச் சபைக்குரிய தீர்ப்பை அழுத்தமாகச் சொல்லுகிறது. ஆனால், இந்த இரண்டும் ஒரே நேரத்தில் நிகழக்கூடியவை ஆகும்.

**அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :**

பாபிலோனிய ஆதிக்கத்தின் பாதிப்பிலிருந்து, நாம் தனித்திருந்து தளர்ச்சியடையாமல், அதனுடைய முழுமையான அழிவிற்குக் காத்திருப்பதே நமது முக்கியமான கடமையாகும் என்பதை **14**ம் அதிகார வசனங்களின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

இந்த அதிகாரத்தின் கடைசி பகுதியில் அறுவடையின் வரிசைக் கிரமத்தைப் பார்க்கிறோம். உண்மையான சபை முழுமை பெறும். (வெளி **14 : 6**). அதற்கு பிறகு, போலிச்சபையின் அறுவடை நடக்கும். அதாவது, களைகள் எரிக்கப்படுவதும், திராட்சைப் பழங்கள் மிதிக்கப்படுவதும் நடக்கும். இந்த வசனங்களில் அறுவடையைப் பற்றிய வரிசைக் கிரமத்தை நாம் கூர்ந்து கவனிக்கத் தவறினால், அறுவடை கால பணிகளில் நாம் தவறான பாதைக்கு நாம் வழி நடத்தப்படுவோம்.

**15 & 16ம் அதிகாரங்கள் : வரலாற்று கண்ணோட்டம்.**

இந்த அதிகாரங்களில் உலக வரலாறு முன்னதாகவே எழுதப்பட்டு விட்டன. இப்பொழுது, இந்த 20 & 21ம் நூற்றாண்டுகளில் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் வாயிலாகப் காண்கிறோம். பழைய மரபுகள் படிப்படியாக சின்னாபின்னமாவதை இந்த 15 & 16ம் அதிகாரங்கள் விவரிக்கின்றன. இவற்றைக் குறித்து வெளி 14 : 6 - 12ல் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து, 15 & 16ம் அதிகாரங்களில் நுணுக்கமான சங்கதிகளுடன் விவரிக்கப்பட்டுள்ளது. மகிமை அடைந்த ஏழு தூதர்கள் இந்த பேரழிவை நடைமுறைப்படுத்துவதையும், மகிமையடைந்த பரிசுத்தவான்கள் இதில் பங்கு பெறுகிறதையும் 15ம் அதிகாரம் வெளிப்படுத்துகின்றது. இந்த வாதையுடன் தேவனுடைய கோபாக்கினை முடிவு பெறுகிறது என்ற விஷயத்தையும் சொல்லி, நம்மை பொறுமையுடன் காத்திருக்கச் சொல்கிறது. ஏழு வாதைகளும் முழுவதுமாக ஊற்றி முடியும் நாளுக்காக, அந்த மகிமையின் நாள் காத்திருக்கிறது என்று வெளி 15 : 8ன் மூலம் தெரிய வருகிறது. இது, வெளி 14 : 2ல் சொல்லப்படுவதற்கு ஏற்றதாயிருக்கிறது. பிறகு, 16ம் அதிகாரம், நாம் வாழும் நூற்றாண்டுக்கு அழைத்து செல்கிறது.

**அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :**

15 & 16ம் அதிகார வசனங்கள் தற்காலத்தில் என்ன நிகழ்கின்றன என்பதையும், இனி என்ன நிகழப் போகிறது என்பதையும் நமக்கு தெரிய வைக்கின்றன. இது ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையை நமக்கு அளிக்கிறது. சீக்கிரத்தில் சம்பவிக்கப் போகிறவைகளின் (வெளி 1 : 1) நிறைவேறுதலை காண்பிக்கிறது. ஆறாம் வாதைகளைப் பற்றிய எச்சரிப்பு நமக்கு முக்கியமானவையாகத் தெரிகின்றன. 12 & 13ம் அதிகாரங்களை இணைக்கக் கூடிய வகையில் 15 & 16ம் அதிகாரங்கள் உள்ளன. (வெளி 16 : 13 - 16).

**17 ம் அதிகாரம் : அரசியல் பார்வை.**

அழிவைப் பற்றி "வாதைகள்" மூலம் அறிந்தவுடன், சபை-ராஜ்ஜீய உறவு முறை எவ்விதம் திடீரென்று முடிவுக்கு வரும் என்பது பற்றிய நுணுக்கமான விவரங்கள் 17ம் அதிகாரத்தில் சொல்லப்படுகின்றன. மேலும், அரசியல் (தலைகள், கொம்புகள்), சமுதாயம் (ஜனங்கள்) குறித்த காரியங்களையும் பார்க்கிறோம்.

**அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :**

இந்த 17ம் அதிகாரத்தில் காணப்படும் அரசியல் விவரங்கள், 16ம் அதிகாரத்தின் மூலம் நாம் அறிந்த கால விவரத்துடன் ஒத்துப் பார்க்க உதவுகிறது. 12 - 18ம் வசனங்கள் மூலம், இந்த வரலாறு இன்னும் முடிவு பெறவில்லை என்று அறிகிறோம். மதம் அடக்கு முறைக்கு ஆளாவது இன்னும் நடைபெறவில்லை. பிரெஞ்சு புரட்சியின் போது மதம்

துன்புறுத்தப்பட்டது போன்ற நிலை இன்னும் உருவாகவில்லை. இந்த தீர்க்கதரிசனங்கள் வாயிலாக, பாபிலோனின் முடிவு எப்படியிருக்கும் என்று அறிய முடிகிறது. ஜனங்களே அவளை விழுங்கி விடுவதைப் பார்க்கிறோம்.

**<u>18ம் அதிகாரம் :</u>** <u>பொருளாதார **பார்வை.**</u>

இது பாபிலோனின் விழுகையைப் பற்றிய இறுதியான, மிகவும் விஸ்தாரமான விவரிப்பு ஆகும். பாபிலோனின் சிதைவிற்கு பொருளாதாரமும் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது என்பதை 18ம் அதிகாரம் உரைக்கிறது. இந்த நூற்றாண்டில் பாபிலோனின் அரசியல் நலிவு காரணமாக, பொருளாதார அடிப்படையிலான விஷயங்கள் ஸ்திரத்தன்மை இழப்பதைப் பார்க்கிறோம். சடுதியான (வெளி 18 : 21) இவளுடைய அழிவு, வெளி 17 : 16; வெளி 16 : 18 - 21; மற்றும் வெளி 14 : 19, 20ல் காணும் விவரங்களுக்கு இணையாக இருப்பதைப் பார்க்கிறோம்.

<u>அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :</u>

செல்வம், நிதி சம்பந்தமான விஷயங்களில் நேரத்தையும், கவனத்தையும், பணத்தையும் செலவிடும் மடமையைப் பற்றி இந்த அதிகாரத்தில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. வெளி 18 : 4 - 8ம் வசனங்களில், பாபிலோனிடமிருந்து நம்மை தனிமைப்படுத்தி கொள்வது பற்றியும், அவளுடைய தீர்ப்பை துரிதப்படுத்தும் வகையில், சத்தியங்களைப் பரப்பும் பணியில் ஈடுபடுவது பற்றியும் நமக்கு அறிவுரைகள் வழங்கப்படுவதைப் படிக்கிறோம்.

**<u>19ம் அதிகாரம் :</u>** **<u>ஆவியில் பிறந்தவர்கள் மற்றும் ஆவியில் ஜநிப்பிக்கப்பட்டவர்கள் பற்றிய பார்வை.</u>**

பாபிலோனின் அழிவிற்குப் பிறகு நடக்கும் சந்தோஷங்களைக் குறித்து வெளி 19 : 1 - 10ம் வசனங்கள் தெரிவிக்கின்றன. இது 18ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்பட வேண்டியதாகும்.

19ம் அதிகாரத்தின் 11 - 21ம் வசனங்களில் பாபிலோனின் அழிவைப் பற்றிய இறுதியான விவரிப்பு காணப்படுகிறது. இந்த அழிவு பற்றி வரலாறு, காலக்கணக்கு, அரசியல், பொருளாதார, சமுதாய பார்வைகளில் முன் அத்தியாயங்களில் ஏற்கனவே பார்த்த விதமாக அல்லாமல், நமது ராஜாவாகிய கிறிஸ்து ஜெயங்கொள்ளும் பார்வையில் விவரிக்கப்படுகிறது.

<u>அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :</u>

"<u>சத்தியம்</u>" என்பது பிரதானமான ஆயுதம். இதை நாம் பிரயோகிக்க வேண்டும். இதில் "திரள் கூட்டத்தார்" முக்கிய பங்கு வகிப்பார்கள் என்பது நிச்சயம். (வெளி 19 : 17 - 18). "திரள் கூட்டத்தார்" இந்த பணியினை செய்வதற்குத் தேவையான சத்தியங்களைப் பற்றிய தெளிவை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை ஆயத்தப்படுத்துவதில் நாம் உதவிபுரிய வேண்டியிருக்கிறது. உயிரோடே இருக்கும் இந்த மிருகம், மற்றும் கள்ளத்தீர்க்கதரிசியின் வஞ்சனைகளுக்கு ஆளாகாமல் இருக்க நாமும் (திரள் கூட்டமும் கூட) ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**<u>20 ம் அதிகாரம் :</u>** **<u>சிவில் அதிகாரத்தின் அழிவு.</u>**

மிருகம், மற்றும் கள்ளத்தீக்கதரிசியின் அழிவை 19ம் அதிகாரம் விவரித்தது. வெளி 12 : 3; மற்றும் வெளி 16 : 13ல் நாம் ஏற்கனவே பார்த்த "<u>வலுசர்ப்பம்</u>" இன்னும் அழிக்கப்படவில்லை. இதைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொள்ள, வெளி 20 : 13; 20 : 7 - 10ம் வசனங்கள் தேவைப்படுகின்றன.

அறுவடை பற்றி இங்கு குறிப்பாக உணர்த்தப்படுவது :

வெளி 12 : 17; மற்றும் 16 : 13ம் வசனங்களில், நமது பெரும் எதிரிகளில் வலுசர்ப்பமும் ஒன்று என எச்சரிக்கப்படுகிறோம். திரும்பி வரும் கிறிஸ்து (வெளி 20 : 1), தம் வருகையைத் தொடர்ந்து இந்த வலுசர்ப்பத்தின் (சிவில் அதிகாரத்தின்) செல்வாக்கைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கிறார். இந்த கட்டுப்படுத்தும் பணியைச் செய்வது சத்தியம் தான். இந்தக் காலக்கட்டத்தில் வலுசர்ப்பம் சிறிதும் ஒத்துழையாமல் இருக்கும் பொழுது, இதைக் கட்டுப்படுத்துவது, ஐந்து பாகங்கள் கொண்ட நீண்ட செயற்பாங்கு ஆகும். இந்தக் காலக்கட்டத்தில், சிவில் அதிகாரங்கள் துன்புறுத்த முயற்சி செய்வது எதிர்பார்க்கும் ஒன்றே ! வெளி 20 : 3ம் வசனத்தை உற்று கவனித்தால், ஜனங்களை மோசம் போக்காத விதமாக சிவில் அதிகாரம் கட்டுப் படுத்தப்படுகிறது. மத்தியஸ்தம் பண்ணப்படும் ஆட்சி துவங்கும் வரையில் வலுசர்ப்பம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறதில்லை. மத்தியஸ்தம் ஆரம்பிக்கும் வரையில் அவனைக் கட்டுப்படுத்தும் செயல் முடிவடையவில்லை என்பது தெளிவாகிறது. அவனைக் கட்டுப்படுத்தும் செயலில், ஆயிர வருஷங்களின் ஆரம்ப காலப்பகுதியில் பரிசுத்தவான்களையும் அவன் மோசம் பண்ண முடியும்.

**அறுவடை கால சத்தியங்கள் :**

பாபிலோனின் விழுகை பற்றிய பல்வேறு கோணங்களில் பார்க்கும் விதத்தில், அறுவடையின் சிக்கலான நுணுக்கங்களை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது :

1) சிவில் அதிகாரம்- எதிரி (12ம் அதிகாரம்).
2) மத எதிரி – இது சிவில் அதிகாரத்தின் துணையில்லாமல் இயங்க முடியாது. (13ம் அதிகாரம்).
3) தீர்ப்புக்கும் அறுவடைக்கும் உள்ள தொடர்பு (14ம் அதிகாரம்).
4) தற்காலத்திய நிகழ்வுகள் (15 & 16ம் அதிகார்ங்கள்).
5) தீர்ப்பில் அரசியல் மற்றும் சமுதாயத்தின் பங்கு (17ம் அதிகாரம்).
6) தீர்ப்பில் பொருளாதாரத்தின் பங்கு (18ம் அதிகாரம்).
7) ஜெயங்கொள்ளக்கூடிய அதிகாரங்களும், வெளியேறும் அதிகாரங்களும் (19ம் அதிகாரம்).
8) மத அதிகாரங்களின் அழிவு (19ம் அதிகாரம்).
9) சிவில் அதிகாரத்தின் அழிவு (20ம் அதிகாரம்).

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

# பூமியின் ராஜாக்கள்

"பூமியின் ராஜாக்கள்" என்ற சொற்றொடர் வெளிப்படுத்தல் ஆகமத்தில் **8** தடவைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இதை அல்லாமல், ஒரு வசனத்தில் "பூலோகமெங்குமுள்ள ராஜாக்கள்" (வெளி 16:14) என்றும் காணப்படுகிறது. இந்த சொற்றொடர் பற்றிய பொருள் விளக்கம் குறித்து பார்ப்போம் :

"பூமியின் ராஜாக்கள்" என்பதை ஒரு பங்கு மட்டும் சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த சொற்றொடர் "சமுதாயத்தின் அதிகாரமுள்ள தலைவர்கள் அனைவரையும்" அடையாளப்படுத்துவதாகவும் இருக்கிறது. அதிலும், குறிப்பாக கிறிஸ்தவ சமுதாயத்தைக் குறிக்கிறது. உண்மையான ராஜாக்களை மட்டும் குறிக்காமல், சமுதாயத்தில் அதிகாரமுள்ள தலைவர்களையும் உள்ளடக்கியதாகவே இந்த சொற்றொடர் கையாளப் படுகிறது.

"பூமியின் ராஜாக்கள்" என்று குறிக்கப்படும் வசனங்களை ஒவ்வொன்றாக கீழ் கண்டவாறு பார்ப்போம். இந்த வசனங்கள் அனைத்திலும் (வெளி 1 : 5 தவிர) இதன் அர்த்தத்திற்கான தடயம் வெளிப்படையாகவே தெரிகிறது.

**வெளி 17 : 1.** இந்த ராஜாக்களுடன் ஸ்திரீ வேசித்தனம் பண்ணுகிறாள்; வரலாற்றை உற்று நோக்கும் போது, ஐரோப்பாவின் முடி சூட்டப்பட்ட உண்மையான ராஜாக்களுடனும், அவளுடைய விருப்பத்திற்கு துணை போகும்படியாக பெரும் அதிகாரத்தைக் கொண்ட துஷ்ட தலைவர்களுடனும் சில சந்தர்ப்பங்களில் ஸ்திரீ ( ரோமச் சபை ) வேசித்தனம் பண்ணியதை அடையாளங் காணுகிறோம். இவ்விதமாக, சபையும் ராஜ்ஜியமும் உறவாடுவது மட்டும் வேசித்தனம் இல்லை; உலக அதிகாரங்கள் எதனுடனும் உறவு கொண்டாடுவதும் வேசித்தனம் ஆகும்.

**வெளி 17 : 18.** இந்த பூமியின் ராஜாக்கள் மீது பாபிலோன் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். வெளி 17 : 1ன் விளக்கம் இதற்கு பொருந்தும்.

**வெளி 18 : 3.** பாபிலோன் இந்த ராஜாக்களுடன் வேசித்தனம் பண்ணுகிறாள். வெளி 17 : 1ன் விளக்கம் இதற்கு பொருந்தும்.

**வெளி 18 : 9.** வெளி 17 : 1ன் விளக்கம் இந்த வசனத்திற்கும் பொருந்தும்.

**வெளி 19:19.** மிருகமும், இந்த ராஜாக்களும் ஆட்டுக்குட்டியானவரோடு யுத்தம் பண்ணுகிறார்கள்; வரலாற்றில் இந்த சம்பவம் இன்னும் முடிவு பெறவில்லை. "அரசியல் தலைவர்கள்" இங்கு அடையாளப்படுத்தப்படுகிறார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லலாம். வெளி 19 : 21ல் "மற்றவர்கள்" என்பது இந்த ராஜாக்களையும் அவர்களுடைய சேனைகளையும் குறிக்கிறது. சத்திய வெளிச்சம் பெருகியதன் காரணமாக, ராஜாக்களாக அவர்கள் கொல்லப்பட்டு, அவர்களுடைய "மகிமை" வேறொருவருக்கு (புதிய எருசலேமுக்கு) மாற்றப்படுகிறது.

**வெளி 1 : 5.** யுக ஆரம்பத்திலிருந்து பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாக இயேசு இருக்கிறார் என்று வசனம் தெரிவிக்கிறது. இந்த சொற்றொடருக்கு வித்தியாசமான விளக்கம் கொள்ளத் தேவையில்லை. மற்ற வசனங்களில் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதற்கு ஒத்த விதமாகவே இதுவும் இருக்கிறது.

**<u>வெளி 6:15.</u>** இந்த வசனத்தில் பிரெஞ்சு புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடப்படுகிறது. பூமியின் ராஜாக்கள் பர்வதங்களையும், கன்மலைகளையும் தங்கள் மேல் விழச் சொல்கிறார்கள் ஒரு வகையில் பார்த்தால், இந்த ராஜாக்களே பர்வதங்களாக இருக்கிறார்கள்.இவர்களின் வேண்டுகோள் வித்தியாசமாக இருக்கிறது.! அகில உலக ஒத்துழைப்பை நாடி (புனித உடன்படிக்கை – HOLY ALLIANCE), ஐரோப்பாவின் அரச பரம்பரைகள் எடுக்கும் முயற்சியை, ஒரு வேளை இந்த வசனம் சொல்வதாக இருக்கலாம்.

வெளி 1 : 5ல் முதன் முறையாக "பூமியின் ராஜாக்கள்" என்ற சொற்றொடர் காணப்படுகிறது. யுக ஆரம்ப காலத்திலிருந்து "முடிவின் காலம்" வரைக்கும், இந்த ராஜாக்கள் எவ்வித இடர்ப்பாடுகளும் இல்லாமல் பாதுகாப்பாக செயல்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் போப்பு மார்க்கத்துடன் உறவாடுவது பற்றிய வரலாறு வெளி 17, 18ம் அதிகாரங்களில் விவரிக்கப்படுகிறது. ஆனால், கி.பி. 1799ல் அவர்களின் உண்மையான வேதனை (TRAUMA) ஆரம்பமானது.

### <u>பூலோகமெங்குமுள்ள ராஜாக்கள் வெளி 16 : 14.</u>

"பூலோகமெங்குமுள்ள ராஜாக்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையும், "பூமி" என்ற வார்த்தையும் வெவ்வேறானவை ஆகும். இதே வார்த்தை, "பூச்சக்கரத்தின் மேலெங்கும்" என்று வெளி 3 : 10ம் வசனத்திலும், "உலகமனைத்தும்" என்று வெளி 12 : 9ம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு "மக்களால் நிரம்பிய பூமி" என்று அர்த்தம் ஆகும்; அதாவது, "பூலோகம் முழுவதும்" என்று சொல்லலாம். இது கிறிஸ்தவ உலகத்தை மட்டும் குறிக்காமல், உலகமனைத்தையும் குறிப்பதாக இருக்கிறது. இதே வார்த்தை "உலகம்" என்று எபிரேயர் 1 : 6; 2 : 5ம் வசனங்களில் காணப்படுகிறது.

ஆகவே, "பூலோகமெங்குமுள்ள ராஜாக்கள்" என்பது கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆட்சியாளர்களை மட்டும் குறிக்காமல், உலகம் முழுவதுமான குடியிருப்பை உணர்த்துகிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

**XXXI**

## ஆறாம் சபை நிகழ்வுகளுக்கும் ஏழாம் சபை நிகழ்வுகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு :

ஆறாம் சபை காலத்திய நிகழ்வுகளுக்கும், ஏழாம் சபை காலத்திய நிகழ்வுகளுக்கும் இடையிலுள்ள தொடர்பு தனித்தன்மை வாய்ந்ததாகும்; ஆறாம் சபை, முத்திரை, எக்காளங்கள் பற்றி விவரிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்திலும், சம்பவங்கள் கடைசி சபையாகிய ஏழாம் சபையை நோக்கியே நகரும் விதமாக இருப்பதை அறியலாம். இதற்கு காரணம் என்னவென்றால், ஆறாம் சபையின் காலத்தில் 'முடிவின் காலம்' ஆரம்பமாகி, ஏழாம் சபை காலத்தில் தொடர்கிறது. ஏழாம் சபை காலத்தில் பல புதிய விஷயங்கள் அறிமுகம் செய்யப்பட்டாலும், ஆறாம் சபை காலத்தில் ஆரம்ப நிலையில் இருந்த நிகழ்வுகள் தாம் ஏழாம் சபையில் உச்சக் கட்ட நிலையை அடைந்து, முழு நிறைவு பெறுகிறது. இதை நாம் மனதில் இருத்திக் கொண்டால், ஆறாம் சபை,ஆறாம் முத்திரை, ஆறாம் எக்காளம் பற்றிய பல தீர்க்கதரிசனங்களை சரிவர அறிந்து, பொருள் விளக்கம் கொள்ள இயலும்.

<u>எடுத்துக்காட்டாக உள்ள வசனங்கள் :</u>

<u>வெளி 3 : 10.</u> "சோதனை காலம்" பற்றி (ஏழாம் சபை காலத்திய நிகழ்வு பற்றி) ஆறாம் சபையில் சொல்லப்படுகிறது. "இனி வரப் போகிற" என்று ஆறாம் சபையில் தெரிவிக்கப்படுகிறது.

<u>வெளி 3 : 11.</u> "சீக்கிரத்தில் வருகிறேன்" என்று இந்த வசனத்தில் இயேசு எச்சரிக்கிறார்; ஆறாம் சபையில் நடைபெறும் சம்பவங்கள் சீக்கிரமே நிலை மாற்றம் அடையப்போவதை கவனிக்கத் தவற வேண்டாம் என்று இயேசு எச்சரிக்கிறார்.

<u>வெளி 7 : 3.</u> "வர இருக்கும் சேதங்கள்" (நான்கு காற்றுகளினால்) குறித்து ஆறாம் சபையில் எச்சரிக்கப்பட்டாலும், "முத்திரை போடுதல்" முடிவு பெறும் வரையில் இந்த சேதங்கள் வராது என்று தெரிவிக்கப்படுகிறது. வர இருக்கும் சேதங்கள் பற்றிச் சொல்லிய பிறகு, எத்தனை பேர் முத்திரை போடப்படுவார்கள் என்பது பற்றியும் விளக்கப்படுகிறது. (இது ஏழாம் சபை காலப் பகுதியில் நடக்க இருப்பது ஆகும்). இதைத் தொடர்ந்து, அதற்குப் பின் நடைபெறப் போகும் திரள் கூட்டத்தார் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும் ஆறாம் சபை காலப்பகுதியில் சொல்லப்படுகிறது.

வெளி 10 : 6. தானியேல் 12ம் அதிகாரத்தில் 1260 நாட்கள் பற்றிய தீர்க்கதரிசனம் உரைத்த அதே தூதன், தீர்க்கதரிசிகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டவைகள் நிறைவேறும் விதமாக, "இனி காலம் செல்லாது" என்று ஆறாம் சபையில் சொல்லுகிறான். இதைத் தொடர்ந்து பல நிகழ்வுகள் ஏழாம் தூதன் எக்காளம் ஊதும் போது வெளிப்படும் என்று இங்கு தெரிவிக்கப்படுகிறது.

வெளி 10 : 11. ஆறாம் சபை காலப்பகுதியில் இரண்டாம் வருகை பற்றிய விஷயத்தில் ஏமாற்றம் ஏற்பட்ட பிறகு (10ம் வசனம்), ஏழாம் சபை காலத்தில் தீர்க்கதரிசனங்கள் மேலும் உரைக்கப்படுகின்றன.

வெளி 11 : 13. ஆறாம் சபை காலத்தில், நகரத்தில் பத்தில் ஒரு பங்கு இடிந்து விழுந்தது; மீதம் **9/10** பங்கு அழிவு எப்பொழுது நடக்கும் ? இது ஏழாம் சபை காலத்தில் நடக்க இருப்பது ஆகும் !

வெளி 6 : 14 - 17. ஏழாம் சபை காலத்திற்கு முன்னர், ஆறாம் சபை காலத்தில் நகரத்தில் பத்தில் ஒரு பங்கு விழுந்தது. பிரெஞ்சு பரட்சியின் போது நடந்த சம்பவங்களை இந்த வசனங்கள் குறிக்கின்றன. இங்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள் , ஏழாம் சபை காலத்தில் நடப்பதற்காக முன்குறிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனங்கள் ஆகும். இவற்றுள் குறிப்பிடத்தக்க வசனங்களாக யோவேல் 2 : 10ம் வசனமும், ஏசாயா 34ம் அதிகாரத்தையும் சொல்லலாம். முடிவு காலத்துக்குரிய இந்த வசனங்கள் ஆறாம் சபை காலத்தில் துவங்கி, ஏழாம் சபை காலத்தில் முடிவடைகிறது.

மேற்குறிக்கப்பட்ட இணக்கமான வசனங்களோடு, தானியேல் 12ல் தீர்க்கதரிசனமாக முதலில் சொல்லப்பட்ட 1260 நாட்கள் (முடிவின் காலம்) , 1335 நாட்கள் வரைக்கும் காத்திருக்கும் நிலைக்கு நம்மை ஏழாம் சபை காலத்திற்கு இட்டுச் செல்கிறது.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

## அருஞ்சொல் விளக்க அகராதி

| | |
|---|---|
| அமருதல் அல்லது வீற்றிருத்தல் | கட்டுப்பாடுடன் அல்லது ஆதிக்கம் செலுத்தும் நிலைமை. |
| அத்தி /அத்திமரம் | இஸ்ரவேல். |
| அக்கினி | அழிவு / நீதியின் தீர்ப்பு. |
| அசுத்த பறவை | 1) பேய்<br>2) சுயநலமடைவோர்<br>3) தம் தனிப்பட்ட கொள்கைகளை முன்னிறுத்துவோர்<br>4) பாபிலோனை வசிப்பிடமாகக் கொள்வோர் |
| அறுவடை | சுவிசேஷ யுகத்தின் இறுதி காலம் ;<br>மேசியாவின் அரசாட்சியின் ஆரம்பம். |
| அக்கினி கடல் | இரண்டாம் மரணம். நிரந்தர அழிவு. |
| அரிவாள் | பிரிக்கும் வேலையை (அறுவடை) செய்யும் சக்தியங்கள். |
| ஆலை | கள்ள மார்க்க களைகளை நசுக்கி அழிக்கும் அறுவடை நாளின் கடைசி உபத்திரவம். |
| ஆத்துமாக்கள் | உயிர்த்தெழ காத்திருக்கும் மரித்த பரிசுத்தவான்கள். |
| ஆவிகள் | 1) திருச்சபை சரித்திரத்தின் ஏழு படிகள் அனைத்திலும் பரிசுத்த ஆவியின் நடவடிக்கைகள் 2) போதனைகள் |
| ஆடைகள் | 1) நீதி 2) அந்தஸ்தைக் குறிக்கும் அடையாளம். |
| ஆண் பிள்ளை | போப்பு மார்க்கம் (பாவ மனுஷன்). |
| ஆட்டுக்குட்டியானவர் | இயேசு. |
| ஆசரிப்பு கூடாரம் | தற்காலிக இருப்பிடம் -<br>தேவனுடைய பிரசன்னம் விளங்குமிடம்.<br>தேவ திட்டம் ஒரு இருப்பிடம் வாயிலாக வெளிப்படும் நிழல் தன்மை. |
| இரண்டு குத்து விளக்குகள் | ஒளி அளிப்பவர்கள். அதாவது<br>பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துகள். |
| இரண்டு ஒலிவ மரங்கள் | பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளில் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துகள். |
| இரண்டு சாட்சிகள் | தேவனுடைய நோக்கங்களை (திட்டங்களை) முன்கூட்டியே சாட்சி பகரும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துகள். |
| இரண்டாம் மரணம் | மீட்பு இல்லாத நிரந்தர அழிவு. |
| இருட்டு | தவறான மற்றும் மூட நம்பிக்கை போதனைகள். |
| இரும்பு | வலிமை. |
| இஸ்ரவேல் | உண்மை சபை (தேவனுடைய ஜனங்கள்). |
| இடைக்கச்சை | ஊழியம் / சேவை செய்வதின் பிரதிநிதித்துவம். |
| இஸ்ரவேல் கோத்திரங்கள் | மகிமையடைந்த திருச்சபை பிரிவினர். |
| இரட்டு | துக்கம் அல்லது அவமானம். |
| உஷ்ணம் (வெப்பம்) | சத்திய வெளிச்சத்தினால் நிகழும் பாதக விளைவுகள். |
| உயிருள்ள ஆத்துமா | ஆவியில் ஜநிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவன். |
| எகிப்து | மேற்கத்திய கிறிஸ்தவ உலகம். |
| எருசலேம் | மகிமையுறும் திருச்சபையின் தெய்வீக ஆயிர வருட அரசாட்சி. |
| எண்ணெய் | பரிசுத்த ஆவி. |

| | |
|---|---|
| எட்டி | ஏரியஸ் என்ற கி.பி. 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த நீதிமான் - அசத்திய மதக் கோட்பாடுகளுக்கும் நச்சு போன்றவர்; அவர்கள் பார்வையில் அவர் கசப்பாய் இருந்தார். |
| எக்காளம் | காலத்துக்கு ஏற்ற வகையில் உரியவர்களுக்கு அருளப்படும் முக்கியமான தூது. |
| கந்தகம் | கொடிய விஷம். தப்பிக்கவே வழி இல்லாத நிலையை உணர்த்தவே 'அக்கினி ' சின்னமாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| கசப்பு | கடினத் தன்மை / வலி. |
| கறுப்பு | சத்திய ஒளி இல்லாத. |
| கன்றுக்குட்டி | நீதி<br>(நீதியைச் சரிக்கட்டும்விதமாக கன்றுக்குட்டி பலியிடப்பட்டது). |
| கிரீடங்கள் (diadema) | அதிகாரம். |
| கூடு | மறைவிடங்கள். |
| கோப்பை (cup) | அனுபவங்கள். |
| கொல்லப்பட்ட, சங்கரிக்கப்பட்ட. | தேவ சித்தத்திற்கு ஏற்ப தம் விருப்புகளை / இச்சைகளை தியாகம் செய்தவர்கள். |
| கண்கள் | ஞானம், தீர்க்கதரிசனம். (foresight) முகம். |
| கள்ள தீர்க்கதரிசி | ஆங்கிலிகன் சபையுடன் புரோட்டஸ்டாண்டுகளின் ஒருங்கிணைந்த அமைப்பு. |
| கண்ணாடி | பரிசுத்தம், வெளிப்படை, அமைதி. |
| கடவுள் | சர்வ வல்லமை பொருந்திய நிலை. அல்லது அதன் போலி நிலை. |
| கோகு &மாகோகு | தேவ அதிகாரத்தை எதிர்த்து சவால் செய்யும் இவ்வுலக ராஜ்ஜீய அதிகாரங்கள். |
| கொம்புகள் | தலைகளாகிய பேரரசுகளைவிட குறைவான எல்லை மாகாணங்கள் / அவற்றின் குறைந்த அதிகாரங்கள். |
| குதிரை | கொள்கை<br>ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மனிதர்களை நகர்த்த வல்ல யோசனை. |
| குதிரை வீரர்கள் | கொள்கைகளை பிரசித்தம் பண்ணுவோர் / பின்பற்றுவோர். |
| கை | கிரியை, ஒத்துழைப்பு, பொறுப்பு. |
| கல் மழை | கடுமையான சத்தியங்கள். |
| கொலைகாரர்கள் | மனுஷரின் பண்புகளை அவமாக்கும் நிலைமை. |
| கிழக்கிலிருந்து ராஜாக்கள் | 1) சூரியனைப் போல் பிரகாசிக்கும் திருச்சபையினர்<br>2) இஸ்லாமிய மார்க்கத்தைக் குறிக்கலாம் |
| கன்மலைகள் | நிலையான அமைப்புகள் / நிறுவனங்கள். |
| குருத்தோலை | 1) ரட்சிப்பின் சின்னம்<br>2) திரள் கூட்டத்தாரின் ரட்சிப்பின் அடையாளம் |
| கர்த்தரின் நாள் | ஆயிர வருட அரசாட்சி. |
| கொல்லப்படுதல் | முன்னிருந்த நம்பிக்கை அல்லது முன் நிலையை இழந்து விடுதல் ;<br>முந்தைய செல்வாக்கு / தாக்கம் இழந்து விடுதல். |
| கலசங்கள் | கோபாக்கினையை உணர்த்தும் சத்தியங்களை வெளிக்கொணரும் வழி முறைகள் (கருவிகள்). |
| கலியாணம் | ஆவிக்குரிய நிலையில் கிறிஸ்துவும் அவருடைய திருச்சபையும் ஒருங்கிணையும் நிலை (தலையும் சரீரமும் ஒருமைப்படும் நிலை). |
| கோல் | தீர்ப்பின் அளவு முறை அல்லது<br>சத்தியத்தை அறிந்து கொள்ளும் தன்மை. |
| கன்னிகைகள் | உண்மை திருச்சபையார் அல்லது திரள் கூட்டத்தார். இவ்வுலகத்துடனும் அதன் வழிகளிலும் கள்ள உறவு |

| | |
|---|---|
| | கொள்ளாமலும், தீட்டுப்படாமலும் இருப்பவர்கள். |
| கோதுமை | ஆழமான ஆவிக்குரிய சத்தியங்கள் வாற்கோதுமைக்கு எதிரான நிலைமை. |
| கண்ணாடி கடல் | சுத்திகரிப்பு முன்னிட்டு தேவனுடைய சத்தியங்களுக்கு ஒப்பான பரிசுத்ததண்ணீர்.<br>தண்ணீர் தொட்டி (கடல் தொட்டி). |
| காற்று | யுத்தம் அல்லது பெரும் இடையூறு. |
| காற்றுகள் | பிசாசின் கட்டுப்பாட்டு அதிகாரங்கள். |
| கப்பல்கள் | வணிகம். |
| காலம் | 1) சில பண்புகள் (அம்சங்கள்) அடங்கிய குறிப்பிட்ட காலப்பகுதி<br>2) 360 வருடங்கள் |
| கடற்கரை மணல் | பூமிக்குரிய ராஜ்யத்தைச் சார்ந்த மக்கள். |
| கப்பலாட்கள் | வேலையாட்கள் (ஊழியம் செய்வோர்). |
| கடல் | சமூக அல்லது சமய ஒழுங்குகள் குறித்து அக்கறை இல்லாத (வலுவான உறவுகள் இல்லாத) அமைதி இழந்த மனித சமுதாயம். |
| கதவு | வாய்ப்பு / அருகாமை. |
| கூடு | மறைவிடங்கள். |
| சாத்தான் | பிசாசின் செல்வாக்கின் கீழ் இயங்கும் சிவில் அதிகாரம். |
| சாப்பிட | உள் வாங்கி கொள்ளுதல்; இணக்கமான நிலைக்கு வருதல். |
| சிரசு (தலை) | 1) ராஜ்ஜியம், பேரரசின் வடிவங்கள்<br>2) கருத்துக்களின் தலைமை |
| சுவிசேஷம் | தீர்ப்பு செய்திகள் உட்பட்ட தேவனுடைய வார்த்தைகளின் முழுமை. |
| சந்திரன் | யூத நியாயப்பிரமாணம் - பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள். |
| சூளை | நிரூபிக்கும் / சுத்திகரிப்புக்கான சூடான அனுபவங்கள். |
| சிங்கம் | வல்லமை (இயேசு). |
| சிவப்பு | பாவம். |
| சிங்காசனம் | தீர்ப்பு உட்பட ஆளுகை செய்யும் நிலைமை. |
| சாவிகள் | அணுக முடியாதபடி கட்டுப்படுத்தும் / தடைபண்ணும் ஆற்றல். |
| சிறு புத்தகம் | தானியேல். |
| சொரூபம் | புரோட்டஸ்டாண்டு கூட்டமைப்பு. |
| சோதோம் | பாபிலோன் வகையைச் சேர்ந்த ஒழுக்கமில்லாத பாவ நிலை. |
| சிறை | கட்டுப்பாடு. |
| தேள்கள் | உபத்திரவங்கள். |
| திராட்சை பழங்கள் | தீய பலன்கள். |
| திரள் கூட்டத்தார் | கிறிஸ்துவின் அங்கமான 1,44,000 பேரடங்கிய திருச்சபையில் இடம் பெறாத மற்றுமொரு கூட்டம். |
| தூபம் | தியாகங்கள் , ஜெபங்களினால் கிடைக்கும் மேலான தகுதி. |
| தீவு | சிறிய நாடு அல்லது குடியரசு. |
| தண்ணீர்கள் | 1) மக்கள் கூட்டம்<br>2) சத்தியங்கள் |
| தாகம் | ஜீவனுக்கடுத்த சத்தியங்களை நாடும் (தேடும்) ஏக்க நிலை. |
| தவளைகள் | அசுத்தமான / தற்பெருமை பேசும் தன்மையுடைய. |
| தேவாலயம் | 1) திருச்சபை உள்ளடக்கிய தேவத்திட்டம்<br>2) ஆசரிப்பு கூடார மகா பரிசுத்த ஸ்தலம் |
| நாள் | 1) ஒரு வருடம்<br>2) சில பண்புகள் கொண்ட காலம் (வரையறுத்துச் சொல்லப்படாத) |
| நீரூற்றுக்கள் | மத சம்பந்தமான சத்தியங்களின் ஆதாரமாயுள்ள சபை. |

| | |
|---|---|
| | (உண்மை அல்லது பேர்சபை). |
| நெற்றி | ஒட்டுமொத்த பண்புகளைப் பிரதிபலிக்கும் நிலை. |
| நிக்கொலாய் மதஸ்தர் | அதிகாரப் பிரியராய், தம்மை பின்பற்றும் கூட்டத்தாரை வசப்படுத்துவோராய், மற்றவர்களை ஆளுமை செய்யும் குணம் படைத்தவர்கள். |
| நாமம் | பண்புகளின் இணக்கம் ;<br>நற்பெயர். |
| நாய்கள் | புற ஜாதியார். |
| நரகம் | மனிதன் இறந்தவுடன் ஏற்படும் மறதி நிலை; ஆனாலும் அந்நிலையிலிருந்து<br>வெளிப்படும் தன்மை உடையது. |
| நிர்வாணம் | நீதிக்குட்படாத நிலைமை;<br>சமரசம் பண்ணப்பட்ட போலி நீதி. |
| நான்கு | பாகங்கள். பொதுமை. |
| பூமியதிர்ச்சி | புரட்சி. |
| பூமியின் ராஜாக்கள் | செல்வாக்கு பெற்ற மனுஷர்கள். |
| பட்டயம் | வேதாகமம்; தீர்க்கமான தூது. |
| பஞ்சம் | சத்தியம் இயலாமை. |
| பறவைகள் | அதிருப்திகள். |
| பேய் | சிவில் அதிகாரம். |
| பாபிலோன் | முதன்மையாக 'ரோமச் சபையைக் '. குறிக்கிறது.<br>'குமாரத்திகள் ' புரோட்டஸ்டாண்டு பிரிவுகளை குறிக்கிறது.<br>குழப்பமான நிலைக் குறிக்கிறது. |
| பசி | ஆவிக்குரிய உணவு பற்றாக்குறை. முன்பு கிடைக்கப்பெற்றதை, திரும்பவும் பெற்றுக்கொள்ளும் ஏக்கம். |
| பாதாள குழி | சக்தியற்ற அல்லது செயலற்ற நிலைமை. |
| புழுதி | துக்கம். |
| பூமி | சமூகம் / சமூக ஒழுங்கு.<br>ஏற்கனவே நடமுறையில் செயலாக்கப்பட்ட ஒழுங்கு முறையுடைய சமூக அமைப்பு. |
| புல் | பொதுவாக, மனிதத்துவத்தைக் குறிக்கிறது.<br>புல் பச்சையாக இருப்பதாகக் குறிப்பிட்டால், நல் இருதயமுள்ள அல்லது நீதிக்குரிய தன்மையைக் குறிக்கும். |
| பொன் | தெய்வீக தன்மைகள் அல்லது அவற்றின் போலித் தன்மைகள். |
| பத்து (10) | பூமிக்கடுத்த அல்லது சமுதாயத்துக்கடுத்த காரியங்களைக் குறிக்கும் ஒரு முழுமை எண். |
| பலி பீடம் | முழுமை அடைந்த பலி. |
| பட்டணம் | மத அல்லது மதசார்பற்ற அரசாங்கம். |
| பிரகாரம் | பிரதிஷ்டைக்கு உட்படாதவர்களிடமிருந்து, நீதிமானாக்கப்படும் நிலை. |
| புகை | பழமை நினைவுகள்<br>குழப்ப நிலை; தெளிவற்ற இருள் சூழ்நிலை. |
| பாடல் | இணக்கமான சத்தியங்கள் வழி வெளிப்படும் பாராட்டுகள். |
| பத்மூஸ் | தனிமை ( பிரிவு ) சின்னம். |
| புண் | நிலைத்த அச்சுறுத்தும் சிக்கல். |
| பரதீசு | ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தத்தின் இரு சுபாவங்களின் பலனளிப்பு. |
| புதிய எருசலேம் | 1) கிறிஸ்துவின் மகிமையடைந்த திருச்சபை<br>2) சமாதான இராஜ்யத்தின் ஆவிக்குரிய அரசாங்கம் |

| | |
|---|---|
| புஸ்தகம் | தகவல்கள் குறிக்கப்பட்ட ஒரு திட்டம். |
| மிகாவேல் | தேவனைப் போன்றவர் யார் ? (போப்பு மார்க்கம்). |
| மிருகம் | பரிசுத்தமில்லாத பண்புகள் கொண்ட அமைப்பு அல்லது அரசாங்கம்.<br>அதன் ஆதிக்கத்தில் கீழ் உள்ள ஜனங்களையும் உள்ளடக்கியது அதன் அமைப்பு. |
| மாலுமிகள் | தொழிலதிபர்கள். |
| முதற்பலன்கள் | சுவிசேஷ யுகத்தின் பலன்கள் -<br>திருச்சபை மற்றும் திரள் கூட்டத்தார். |
| மூப்பர்கள் | பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள். |
| மனுஷர் | கிறிஸ்தவர்கள் ( உண்மை அல்லது பேர்கிறிஸ்தவர்கள்). |
| முத்துக்கள் | சோதனைகள் மூலம் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள். |
| மழை | சத்திய ஆசீர்வாதங்கள். |
| மாதம் | 30 வருடங்கள். |
| மன்னா | அழியாமை. |
| மனிதன் (முகம்) | அகூத். |
| மார்க்கவசம் | நீதி / விசுவாசம். |
| மணவாட்டி | கிறிஸ்துவின் சபை 1,44,000 பேர்கள். |
| மணவாளன் | இயேசு. |
| மின்னல்கள் | சத்தியம் பிரகாசமாக வெளிப்படும் நிலை. |
| மெல்லிய வஸ்திரம் | பரிசுத்தவான்களின் நீதி. |
| மேகங்கள் | உபத்திரவங்கள், தெளிவின்மை. |
| முத்திரை | குறித்த காலத்திற்கு முன்பே தெளிவு நிலை ஏற்பட வாய்ப்பில்லாமல் தடுக்கும் நிலை. |
| முகம் | சூழ்நிலை ஆதாரங்கள் பொறுத்து ஆதரவாக / அல்லது அதிருப்தியை வெளிப்படுத்துவது. |
| யோவான் | யுக முழுமையிலும் மாம்சீக சரீரத்திலிருக்கும் திருச்சபை கூட்டத்தார். |
| யேசபேல் | இவ்வுலக ராஜ்ஜீய அதிகாரங்களுடன் கூட்டாக இருக்கும் ரோமச் சபை. |
| யூப்ரடீஸ் | பாபிலோன் ஆதரவு மக்கள். |
| யூதர் | கிறிஸ்தவர்கள். |
| ரதங்கள் | ஒழுங்கு முறை கொண்ட முயற்சிகள். |
| ரத்தம் | 1) 'ஜீவன் 'அல்லது அதன் மதிப்பு<br>2) 'சிந்திய ரத்தம் 'மரணத்தைக் குறிக்கும்<br>3) 'சிந்திய ரத்தம் 'அருவருப்பைக் குறிக்கும் விதத்திலும் கொள்ளலாம் |
| வாசனை | ஜெபங்கள்; பிரார்த்தனைகள். |
| விடியற்காலத்து நட்சத்திரம் | இயேசு. |
| வானவில் | உடன்படிக்கை. |
| வெண்மை | பரிசுத்தம் / நீதியுள்ள நிலை. |
| வனாந்தரம் | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் / வழிமுறைகளிலிருந்து பிரிந்த மனம் / சுபாவ நிலைமை.<br>1260 வருடங்களடங்கிய காலப்பகுதியில் திருச்சபையாரின் அனுபவ நிலை. |
| வால் | கடைப் பகுதி. |
| வேசி | அரசியல் மற்றும் உலக ஈடுபாடுகளில் தன்னை சமரசம் செய்து கொண்ட சபை. |
| வானம் | மத உலகம் / அதன் தலைமை. |
| வலது | ஆதரவான நிலை. |
| வஸ்திரம் | நீதி. |

| | |
|---|---|
| வாதைகள் | பொய் கிறிஸ்துவத்தை வலுவிழக்க மேற்கொள்ளப்படும் ( திணிக்கப்படும் ) சத்தியங்கள். |
| வலுசர்ப்பம் | புற மத ரோம ராஜ்யத்தின் அரசியல் அதிகாரம். |
| வலுசர்ப்பம், பாம்பு பிசாசு, சாத்தான் | பிசாசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சிவில் அதிகாரங்கள். |
| விழுங்க | உள் வாங்கிக்கொள்ளுதல். |
| விபச்சாரம் | மணவாளனுடன் ( இயேசுவுடன் ) மணம்புரிய நியமிக்கப்பட்டு, இவ்வுலக விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்தி துரோகம் இழைத்த கிறிஸ்தவர்களின் அவிசுவாசத் தன்மை. |
| வாற்கோதுமை | அனைத்து கிறிஸ்துவத்திற்கும் பொதுவான அடிப்படை கிறிஸ்தவ சத்தியங்கள். |
| வயிறு | செய்திகளை உட்கிரகித்து தன்மயமாக்கியதில் ஏற்பட்ட விளைவுகள். |
| வெட்டுக்கிளிகள் | பொய்க் கிறிஸ்துவத்தை விழுங்கிடும் வல்லமை. |
| வெதுவெதுப்பான | நீதியின் பால் மந்தமான நிலைமை ;<br>அநீதியின் பால் தீவிரமான வெறுப்பு இல்லாமை. |
| விருட்சங்கள் | முக்கிய நபர்கள் அல்லது<br>சிறு நாடுகள் / அமைப்புகள். |
| ஜீவ விருட்சம் | எந்த ஒரு சுபாவத்திலும் தொடர்ச்சியான ஜீவனை நல்கும் உறுதி நிலை. |
| ஜீவ புஸ்தகம் | ஜீவனுக்கேதுவான தகவலடங்கிய குறிப்பேடு (சுவிசேஷ யுகத்தில் அல்லது ஆயிர வருட அரசாட்சியில்). |
| ஜீவன் (life) | நீதிக்குட்படுதல்<br>ஆவிக்குரிய சரீரம். |
| ஜலம் | சத்தியம். |
| ஜீவன்கள் 4 | பிதாவின் நான்கு சுபாவங்கள்<br>1) நீதி 2) வல்லமை 3) அன்பு 4) ஞானம் |
| ஸ்திரீ | 1) சபை ( திருச்சபை அல்லது பெயர்சபை )<br>2) உடன்படிக்கை |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

